

Members of the All India Music Conference, Baroda, present at the Group Photo (20th March 1916.)
The names are given in the next page.

The names of Members who were in the Group Photo.

1. .....
2. Mr. C. R. Srinivasa Iyengar.
3. Mr. Prathapa Ramasamy Baghavather.
4. Mr. Ganapathi Iyer.
5. Mr. Fredlis.
6. K. Srinivasa Iyengar.
7. N. P. Subramaniya Aiyer.
8. .....

9 Prof. S. L. Joshi of Baroda College, Baroda.
10. Apa Saheb Sharangapani, Retired High Court Judge, Camp Baroda.
11. Miss. Engineer. M. A. Lady Superintendent, Baroda. Female Training College.
12. Kanakavalli Ammal Navamoney.
13. Maragathavalli Ammal Duraipandian.
14. Pakiam Ammal, Abraham Pandither.
15. Thakur Saheb M. Nawab Ali Khan, Court View Castle, Lucknow.
16. The Dewan Saheb V. P. Madhava Rao. C.I.E., Baroda.
17. Rao Saheb M. Abraham Pandither, Tanjore.
18. Begum Fyzee Rahimi. Baroda.
19. V. N. Bhatkande Esq., B.A., L.L.B., Santaram House, Malabar Hill, Bombay.
20. Mr. E. Clements, I.C.S., Dharwar.
21. Mr. T. Ramakrishna Ayer, Retired First Class Sub-judge, Palghat, West-coast.
22. Mr. K. B. Deval, Retired Deputy Collector, Sangli, Southern Mahratta Country.
23. Mr. M. S. Ramaswamy Ayer B. A. B.L. Pleader. Madura.
24. Mr. Samuel Rahimi, Baroda.
25. Prof. Jakrudin Khan. State Musician, Udaipur, Mewar.
26. Mr. P. A. Sundaram Iyer. Madras.
27. Mr. Srikrishna Narayan Ratanjankar, c/o. Narayan Govind Ratanjankar, camp Satara.
28. N. N. Banerji Esq.
29. Mr. H. P. Krishna Row. Mysore.
30. Sirdar Jugmohan Lal, Ulwar State, Ulwar.
31. Mr. A. Sundarapandian, Tanjore.
32. Prof. Premballabh Joshi, B. Sc. Government College, Ajmir. Rajputana.
33. Bhalchandra S. Sukthankar M.A., L.L.B., Santaram House, Malabar Hill. Bombay.
34. Mr. D. K. Joshi, Sanskrit Teacher. Nutan Marathi Shala, Poona City.
35. Mr. A. P. Ganasiyer. Mylapore Madras.
36. Mr. R B. Diwatia, Bar-at Law. Ahmedabad.
37. Mr. Seshu Baghavather.
38. Mr. Chitty Baboo Naidu.

Mr. Damb B. A.

Mr. Narayan Govind Ratanjankar, Camp Satara.

Mr. Wadilal Shivram, Pandit Malhar Wadi, Dadi Selt Agiary Lane, Chotalal's House

Khan Saheb Goolam Hoosinkkan, Musician, Tork Rajputana.

Mr. Laxmidoss Aditaram. Goppina Lane, Ahemedabad.

Mr. N. B. Divatia, Retired Deputy Collector. Blue Banglow, Bandra, Dt. Thana.

Mr. Mangeshrad R. Telang, Pensioner, Karwar, North Karwar.

Mr. Shanter Ras N. Karnad. High Court Pleader, Memon Lodge, Bandara, Dt. Thana.

Mr. Dhairyashil Rao Music Teacher, American Mission School, Byculla, Bombay.

Mr. Gungaram Achrakar, Music Teacher, Poona Training College. Poona City.

Mr. N. V. Chatre B. A. L. C. E. Retired Deputy Educational Inspector, Poona City.

Mr. Ganesha Sakharam Khare, Retired Asst. Engineer. Poona City.

Mr. Venkata Ramana Doss Samasthana Vidwan Vijianagaram.

4. தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கி வரும் சுருதிகளும் பரோடாவில் ஹிஸ் ஹைனஸ் மகாராஜா அவர்கள் நடத்திய All India Music கான்பரென்ஸும்.

1913-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியில் தஞ்சையில் நடந்த காலாவது சங்கீத வித்யா மகாஜன சங்கத்திற்குப் பிரசிடென்டாயிருக்கும்படி கான் Devan Sahib V. P. மாதவராவ் அவர்களை நேரில் கேட்டுக் கொண்ட பொழுது அவர்களும் சந்தோஷமாய் ஒப்புக் கொண்டு அக்கிராசனம் வகித்து சபையை மிக நன்றாக நடத்தினார்கள். அதன் பின் சங்கீத விஷயமாக இப்படி ஒரு சபையை நம் இந்தியாவிலுள்ள Native இராஜாக்களில் ஒருவர் நடத்தினால் மிகப் பிரயோஜனமாயிருக்கும். நம் இந்திய தேச சங்கீதம் சீர்திருத்தமடையும். அப்படி ஒரு கான்பரன்ஸ் நடைபெறுமானால் தாங்களும் வந்திருந்து முக்கியமான காரியங்களில் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதன்பிறகு அப்படியே ஹிஸ் ஹைனஸ் பரோடா மகாராஜா அவர்களுக்கும் அபிப்பிராய மிருப்பதாகவும் 1915-ம் வருஷம் டிசம்பர் மாதம் கான்பரென்ஸ் நடத்தப்போகிறதாகவும் அதற்கு நீங்களும் வரவேண்டும் என்றும் எனக்கு நேரில் சொன்னார்கள். அதிகக்குளிராயிருப்பதினால் டெப்ரவரி கடைசி அல்லது மார்சுமாதத்தில் வைத்துக்கொண்டால் நான் வருகிறதற்கு அனுகூலமாயிருக்குமென்று கேட்டுக் கொண்டேன். அதற்கிணங்கி மகாராஜா அவர்களுக்கும் மற்றும் அவர்கள் பிரஜைகளுக்கும் அனுகூலமான காமன் பண்டிகை நடக்கும் தினங்களில் மார்ச்சு மாதம் 20-ம் தேதிமுதல் 25-ம் தேதி வரையும் மியூசிக் கான்பரென்ஸ் நடத்தப்பட்டது.

இந்தியாவின் பல பாகங்களில் சுருதிபைப்பற்றியும் சங்கீதத்தின் மற்றும் விஷயங்களைப் பற்றியும் விசாரித்துக் கொண்டிருக்கும் அறிவாளிகளில் 23 பேர்கள் மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டதோடு மற்றும் பல இடங்களிலிருந்தும் இந்துஸ்தானி சங்கீதம் கர்நாடக சங்கீதங்களில் தேர்ந்த பேர்பெற்ற பல வித்வான்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். சங்கீதத்தில் தேர்ச்சியும் விருப்பமுமுள்ள பல சிற்றரசர்களும் பிரபுக்களும் வந்திருந்தார்கள். எவ்விதமான குறைவுமின்றி எல்லோரும் சந்தோஷங் கொண்டாடக்கூடிய விதமாய்த் தங்குவதற்கும் போஜனத்திற்கும் ஏற்ற வசதிகளும் வெகு விமரிசையாக ஏற்பட்டிருந்தன. அந்நாட்கள் இராஜாங்கத்திற்குரிய பண்டிகை நாள் ஆனதால் வருடந்தோறும் இயல்பாய் நடக்கும் உற்சவச் சிறப்பும் சங்கீத கச்சேரிகளும் இராஜாபிறந்த நாள் கொண்டாட்டமும் மியூசிக் கான்பரென்ஸ் நடக்கும் சபையும் ஒன்றுசேர்ந்து இரவு பகல் இன்னென்று தெரியாமல் நாள் முழுவதும் கொண்டாடப்பட்டது.

பரோடா திவான் சாகிப் His Excellency V. P. மாதவராவ் அவர்கள் இவைகள் யாவற்றையும் மேற்பார்த்துச் சபையை நடத்தி வந்தார்கள். திங்கட்கிழமை காலை எட்டு மணிக்கு மியூசிக் கான்பரென்ஸ் சபை ஆரம்பித்தது. சரியான நேரத்தில் மகாராஜா அவர்களும் மகாராணி அவர்களும் அவர்கள் புத்திரரும் வர சபையோர் எல்லாரும் மிகவும் சந்தோஷத்துடன் வணக்கம் செய்தார்கள்.

His Excellency V. P. மாதவராவ் அவர்கள் மகாராஜா அவர்களின் விருப்பத்தின்படி சபைகூட்டிவைத்து விஷயங்கள் யாவும் ஒழுங்குபடுத்தியிருக்கிறேன். சபையை ஆரம்பிக்கவேண்டுமென்று மகாராஜாவைக் கேட்டுக்கொண்டார்கள். மகாராஜா அவர்களும்

அதற்கு சந்தோஷப்பட்டு வந்திருக்கும் சபையோருக்குத் தம் கல் விருப்பத்தைச் சொல்லி Thakur M. Nawab Ali அவர்களைப் பிரசிடென்டாக இருந்து சபையை நடத்திவரும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள்.

Thakur, M. Nawab Ali சாயபு அவர்களும் தம்முடைய கல்விருப்பத்தைச் சபையோருக்குச் சொன்னார்கள். His Excllency V. P. மாதவராவ் அவர்கள் ஆரம்பப் பேச்சும், His Highness Gaekwar Maharaja அவர்கள் பேச்சும் பிரசிடென்ட் Thakur M. Nawab Ali அவர்கள் பேச்சும் மற்றும் சபையோர் பேசிய முக்கியமான பேச்சுகளும், வியாசங்களும் Bombay Chronicle, Madras Mail முதலிய பேப்பர்களில் சொல்லப்பட்டிருப்பதினால் நான் இங்கு அதிகம் சொல்லவில்லை. சப்கமிட்டியாரால் ஏற்படுத்திய கால அட்டவணையின் (Programme)படி ஒவ்வொருநாளும் மீற்றிங்கு நடைபெற்றது. கால அட்டவணையை அடியிற்காண்க.

Under the patronage of H. H. the Maharaja Gaekwar.

The All-India Music Conference, Baroda.

20th March 1916 to 24th March 1916.

PROGRAMME.

Opening of the Conference.

As soon as His Highness the Maharaja Saheb alights, the President, Secretary and Members of the Committee will receive him at the steps of the College Hall and conduct the Royal Party to their seats. After they are seated, the Misses Abraham Pandither will recite the verses composed in praise of God from the platform. A group of school-children will then recite verses in praise of His Highness the Maharaja Saheb.

The Chairman of the Managing Committee will then address His Highness explaining the aims and objects of the Conference, the circumstances under which it was constituted and request His Highness to open the Conference. His Highness will then declare the Conference open.

The Committee will then elect a President for the Conference. The Chairman of the Committee will propose the name of Thakur Nawab Ali of Akbarpur as President of the Conference and Mr. Masani, the Minister of Education will second the proposal. After the President is dule elected, he will take his seat on the dais and the proceedings will then begin as shown below :—

8 a. m. to 8-30 a. m.	PRELIMINARIES.
8-30 a. m. to 9-30 a. m.	Mr. V. N. BHATKHANDE.

"A short historical survey of the Hindusthani Music, its present condition, and the means to improve it and place it on a scientific foundation, with a view to make its study as easy as possible."

9-30 a. m. to 10-30 a. m. — Mr. ABDUL HALIM SHARAR.
"The Persian Influence on the Music of Hindusthan."

(At the close of the first day's morning sessions the Conference will proceed to appoint a Subjects-Committee for drawing up resolutions to be passed at the Conference.)

5 p. m. to 6-30 p. m. — Mr. E. CLEMENTS I. C. S.
"The Intonation of Indian Music."

6-30 p. m. to 7-30 p. m. — Rao Bahadur KRISHNAJI BALLAL DEVAL.
"The theory of Indian Music as expounded by Somanatha."

Tuesday, 21st March 1916.

8 a. m. to 8-30 a. m. — Mr. DATTATRAYA K. JOSHI.
"A disquisition on the Shrutis and Swaras of Indian Music."

8-30 a. m. to 9 a. m. — Mr. S. N. KARNAD.
"The Renaissance in Hindusthani Music."

9 a. m. to 9-30 a. m. — Rao Bahadur Dr. P. B. BHANDARKAR of Indore.
"The relative pitch of notes in Indian Music from ancient times to the 17th century."

9-45 a. m. to 10-15 a. m. — Mr. VISHNU WASUDEO PHADKE.
"The ancient Hindu scale of twenty-two shrutis"

10-15 a. m. to 10-45 a. m. — Mr. J. NELSON FRASER.
"The teaching of Music in Indian Schools."

5 p. m. to 5-30 p. m. — ATIYABEGUM FYZEE RAHIMIN.
"The present condition of Indian Music and a proposal for the founding of an Academy of Music.

5-30 p. m. to 6 p. m. — Mr. MANGESHRAO TELANG.
"The development of North India Music."

6 p. m. to 6-30 p. m. — Rao Saheb NILKANTH V. CHHATRE.
"Sounds and Musical notes."

6-30 p. m. to 7 p. m. — Mr. G. S. KHARE.
"Sarana Chatushtaya."

7 p. m. to 7-30 p. m. — DEBATE.

Wednesday, 22nd March 1916.

8 a. m, to 11 a. m. — **Rao Saheb ABRAHAM PANDITHER.**
"On Shrutis."

11 a. m. to 11-15 a. m. — **MARAGATHAVALLI AMMAL.**
"Notation in Indian Music."

5 p. m. to 5-30 p. m. — Mr. VISHNU D. PALUSKAR.
"The Notation system."

5-30 p. m. to 6-30 p. m. — Mr. CLEMENTS I. C. S.
"The staff Notation adapted to Indian Music."

6-30 p. m. te 7-15 p. m. — Mr. T. A. RAMAKRISHNA AIYAR.
"The Gamut system of East and West, a comparison from the stand-point of modern Physicists."
"Indian Music, its place and foundation in the fine arts."

Thursday, 23rd March 1916.

8 a. m. to 9 a. m. — Rao Saheb N. B. DIVATIA.
"The missing Shruti and connected questions."

9 a. m. to 9-45 a. m. — Mr. PRATAP RAMASWAMI BHAGAVATAR.
"Some aspects of the difference between Hindusthani and Karnatic Music."

9-45 a. m. to 10-30 a. m. — Mr. HARI NAGABUSHANAM.
"The place of Music in human culture and appreciation."

10-30 a. m. to 11 a. m. — Mr. M. S. RAMASWAMIER.
"The present state of South Indian Music, and its need for reform."

5 p. m. to 5-30 p. m. — Mr. P. H. I. B. JOSH.
"The educational value of music, and what methods should be adopted for introducing it into schools."

5-30 p. m. to 6-15 p. m. — Mr. H. P. KRISHNA RAO.
"The psycho-physiological aspect of Music."

6-15 p. m. to 7-30 p. m. — Resolutions as to the future meetings of the Conference, and other general topics relating to the future of Indian Music.

Friday, 24th March 1916.

8 a. m. to 11 a. m. — These three hours will be devoted to ascertaining from the practical artists who are going to be present at the Conference the practice as to the notes used in certain Ragas to be determined by the theoretical experts who will take part in the deliberations of the Conference.

5 p. m. to 7-30 p. m. — These hours will be devoted to practical performance by the South Indian experts on the Violin or other instruments in that part of the country.

The All-India Music Conference, Baroda.

THAKUR M. NAWAB ALI OF AKBARPUR,—*President.*
V. N. BHATKHANDE,—*Secretary.*

Members of the Conference.

1. Prince Faluknaz Md. Bakar Ali Bahadur.
2. Rao Saheb Abraham Panditer.
3. Thakur M. Nawap Ali of Akbarpur.
4. V. N. Bhatkhande Esqr.
5. S. N. Karnad Esqr.
6. Rao Bahadur K. B. Dewal Esqr.
7. E. Clements Esqr. I. C. S.
8. N. V. Chatre Esqr.
9. D. K. Joshi Esqr.
10. N. B. Divatia Esqr.
11. K. B. Divatia Esqr.
13. G. S. Khare Esqr.
14. H. P. Krishna Rao Esqr.
15. Lakshimidas Aditram Esqr.
16. Pratap Rama Swami Bhagavatar Esqr.
17. Hari Nagabhushanam Esqr.
18. Vishnu Digambar Paluskar Esqr.
19. M. S. Ramaswamy Iyer of Madras.
20. T. A. Ramakrishna Iyer Esqr.
21. Venkat Ramanadoss Esqr.
22. Mangesh Rao R. Telang Esqr.
23. Abdul Halim Sharar Esqr.

பரோடாவில் கூடிய ஆல் இந்திய சங்கித கான்பரென்ஸில் நடந்தவைகளைப் பற்றிச் சில பத்திரிகைகளில் எழுதப்பட்டிருந்த அபிப்பிராயங்கள்.

1

The Bombay Chronicle, 22nd March 1916.

The All-India Music Conference met this morning in the College Hall which was tastefully decorated for the occasion. Their Highness the Maharaja and Maharani Gaekwar, the Princes, Princesses, the Maharaja of Kollengode and family, the heads of all the departments and a large number of ladies and gentlemen, many of whom had specially come from distant parts of India.

The members of the Conference included Prince Faluknaz Mahomed Baker Alli Bahadur, Rao Saheb M. Abraham Pandither and daughters. Thakur Nawab Ali Khan of Akbarpur, Atya Begum Fyzee Rahmin, Mr. V. N. Bhatkhande, Rao Bahadur K. B. Dewal, Mr. E. Clements. Messrs. N. B. and K. B. Divatra, Mr. Lakhsmidass Aditram, Mr. M. S. Ramaswamy Iyer, Mr. T. A. Ramakrishna Iyer, Mr. Mangesh Rao, R. Telang and others.

The proceedings opened with the daughters of Mr. Abraham Pandither reciting "kirtans". A group of school children especially trained by Miss Engineer, Principal of the Female Training College, then recited verses in praise of his Highness the Gaekwar.

BARODA'S LEAD.

Mr. V. P. Madhava Rao, Chairman of the Managing Committee, in requesting his Highness the Maharaja Gaekwar to open the Conference, explained the aims and objects of the Conference, the circumstances under which it was constituted, and said:—

"The idea of systematising Indian music and placing it on a scientific basis with a view to improving it and making it a better expression of the emotions, has been uppermost in Your Highness's mind for many years. Baroda had the distinction of having patronised the famous musician Moula Bux, who, if I am not mistaken, was among the first in attempting to reduce Indian music to notation. Latterly, the necessity of notation has been pressed on Your Highness's attention by music being made one of the subjects of study in the schools of the State, and since the introduction of mass education in regard to which Baroda has the distinction of taking the lead a further emphasis has been laid on this need for notation.

I well remember how interested Your Highness was whenever you hear of Conference for improving Indian music being held during your recent tour in South India. The Conference which Your Highness is going to open is no ordinary event in the annals of the State. Ever since the disappearance of Hindu and Mahomedan kingdoms in India, the science and art of music have fallen into a decadent condition and only those that have read the letters from the various correspondents in different parts of India can realise the enthusiasm that prevails everywhere regarding the Conference and how it is looked upon as an epoch-making event in the history of India.

Many of those who have honoured us with their presence at this Conference have devoted their whole life time and almost all their resources to research work and their joy is unbounded to see that through the enlightened liberality and munificence of Your Highness they have been afforded an opportunity of bringing their labours to be tested and valued by such a competent body of experts.

I shall not take up Your Highness's time by dwelling on the merits of the members who have responded to our call, but it may be permissible for me to point out the valuable acquisition we have in the person of Thakur Nawab Ali of Akbarpur, Mr. Clements, I. C. S., of Dharwar, Rao Saheb Abraham Pandither, and his accomplished daughters from Tanjore and last, but not least, Mr. Bhatkande.

I may also mention that the Durbars of Udaipur, Alwar, Jaipur, Bhavnagar, Indore, Kolhapur, Gwalior, Rampur, Hyderabad, Bikanir and Mysore have shown a profound interest and appreciation of our labour and some of them have also deputed their best artists to the Conference. With these words I request Your Highness to declare the Conference open."

H. H. the Gaekwar in declaring the Conference open said :—

"Music like other sciences and arts exercises a potent influence on the social and intellectual development of a nation. The revival of Indian music is sure to yield good results. Music is a useful acquisition to the rich and the poor, the rulers and the ruled. I thank all those who have come here from various parts of the country and wish hearty success to the work undertaken by them."

The Dewan, as Chairman of the Committee, proposed in suitable words that Thakur Nawab Ali Khan Akbarpur be elected President of the Conference. Mr. A. M. Masani, the Minister of Education, seconded the proposal.

THE PRESIDENT'S SPEECH.

Thakur Nawab Ali Khan of Akbarpur having been elected President of the Conference addressed the assembly.

After thanking the Managing Committee of the Conference for the great honour they had done by electing him President of the Conference, and referring to the enlightened liberality and profound culture of H. H. the Gaekwar, which made it possible for all votaries of the art to come together in his capital, to deliberate upon a subject which is so dear to their hearts, the President said :—

"We must look at such a Conference from the point of view of Indian unity. Men from North and South and East and West have come to compare their experiences together and to contribute materially to the success of the Conference and in the midst of a Babel of languages, we can still mingle freely with the aid of the common language of music. Secondly, no one will deny that the music of the country is at present in the hands of an ignorant and illiterate class and that it is essential to rescue it from the possibility of complete destruction and place it on a scientific basis.

In the little pamphlet sent to me by your energetic Secretary Professor Joshi, I notice that he refers to music as a potent instrument in expressing the soul of a nation. I shall not take up your time in dealing with the spiritual side of music nor stand long between yourself and the great experts who are here to give us the benefit of their advice. I must, however, utter a word of caution. It is of the greatest importance that the deliberations of the Conference should be conducted in a friendly spirit in order that a definite step forward may be taken and the cause of Indian music substantially advanced.

There will, doubtless, be differences of opinion even on fundamental questions connected with Indian music and there is therefore likely to result a friendly clash of arms between the advocates of different theories, but I would earnestly request the members who are about to take part in the discussions not to lose sight of the central object of our work. It is, of course, open to the members of the Conference to suggest various lines of action which seem necessary in order to give a permanent form and continuity to this important movement for the emancipation of Indian music.

The President then called upon Mr. V. N. Bhatknande to read his Paper on "A historical survey of Hindustani music, its present condition, and the means to improve it and place it on a scientific foundation, with a view to make its study as easy as possible."

In the evening sessions of the Conference papers were read by Mr. E. Clements on "The intonation of Indian Music," and by Rao Bahadur K. B. Deval on "The theory of Indian music as expounded by Somanatha."

His Highness was pleased to instruct Prof. S. L. Joshi, the Secretary to invite the members of the Conference and others to the Palace Hall at 9 p. m. to attend the demonstration of Indian music by the great masters who have been specially sent to Baroda from other States for this purpose.

1

பம்பாய் கிரானிக்கிள் 22 மார்ச்சு 1916.

ஆல் இந்திய சங்கீத கான்பரென்சானது இன்று காலே காலேஜ் ஆலில் நடந்தேறியது. அந்தச் சமயத்திற்கென்று அந்த ஹால் விசேஷமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. Their Highnesses கெய்க்வார் மகா ராஜாவும் மகா ராணியும், இளவரசர்களும், இளவரசிகளும், கொல்லங்கோடு மகா ராஜாவும் அவர்கள் குடும் பத்தாரும், எல்லா டிபார்ட்டுமெண்டுகளின் தலேவர்களும் வந்திருந்ததுமல்லாமல் இந்தியாவின் தூர இடங்களி லிருந்தும் அநேக சீமான்களும் சீமாட்டிகளும் விஜயம் செய்திருந்தார்கள்.

கான்பரென்சின் அங்கத்தினர்களில் அங்கு வந்தவர்கள் யாரென்றால் Prince பஹாக்னஸ் மகமத் பக்கர் ஆலிபாதர் அவர்கள், ராவ் சாயப் M. ஆபிரகாம் பண்டிதரவர்களும் அவர்கள் குமாரத்திகளும், அக்பர்பூர் தக்கூர் நவாப் ஆலிகான் அவர்கள், ஆத்யபீகம் பைசீராமீன் அம்மாளவர்கள், V. N. பாத் கண்டியவர்கள், ராவ் பாகதூர் K. B. தேவள் அவர்கள், Mr. E. கிளமண்ட்ஸ் துரையவர்கள். N. B. திவாத்ரா அவர்கள், K. B. திவாத்ரா அவர்கள், லக்ஷ்மிதாஸ் ஆடிற்றாம் அவர்கள், M. S. இராமசாமி ஐயர் அவர்கள், T. A. இராமகிருஷ்ண ஐயர் அவர்கள், மங்கேஷராவ் அவர்கள், R. திலாங் அவர்கள், இன்னும் பலர்.

புரோசீடிங்ஸ் ஆரம்பத்தில் Mr. பண்டிதரவர்களுடைய குமாரத்திகள் சில கீர்த்தனங்களைப் பாடினர்கள். Female Training College Principal ஆகிய Miss Engineer அம்மாளால், தயார் செய்யப்பட்ட பள்ளிக்கூடப் பெண்கள் மகா ராஜா அவர்களுக்கு ஸ்தோத்திர கீதம் பாடினர்கள்.

பரோடாவின் தலைமை.

மானேஜிங் கமிட்டி சேர்மனாகிய மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் அவர்கள், மகா ராஜா கெய்க்வார் அவர்களை இந்தக் கான்பரென்சைத் துவக்கும்படி கேட்டுக்கொண்டபோது இந்தக் கான்பரென்சின் நோக்கமும் வேலையும் எதுவென்பதைப்பற்றியும் அது கூடின காரணம் இன்னதென்பதைப்பற்றியும் பின் வருமாறு பேசினர்கள்.

"இந்திய சங்கீதத்தை ஒரு ஒழுங்கான முறைக்குக்கொண்டுவந்து அதைத் தகுந்த சாஸ்திரமாக்கினால் தான் அது விர்த்தியாகும் மனதின் எண்ணங்களைத் தெரிவிப்பதற்குத் தகுந்த எதுவாகும் என்பது வெகு காளாய் மகா ராஜா அவர்களின் எண்ணம். இந்திய சங்கீதத்தை சுரப் படுத்துவதற்கு முதல் முதல் முயற்சி செய்த Moula Bux என்னும் வித்வானை ஆதரித்தது இந்த சமஸ்தானந்தான் என்று நாம் பெருமையாய்ச் சொல்லலாம். சமஸ்தானப் பள்ளிக்கூடங்களில் சிறிது காலத்திற்கு முன் சங்கீதமானது ஒரு பாடமாக ஏற்பட்டுவிட்டபடியால் அதைச் சுரப் படுத்துவது அத்தியாவசியம் என்று மகா ராஜா அவர்கள் மனதில் பட்டதுமல்லாமல் சாதாரண ஜனங்களுக்குப் படிப்புக் கட்டாயம் சொல்லிக்கொடுக்கப்படவேண்டும் என்று தீர்மானமானது முதல் சங்கீதத்தைச் சுரப் படுத்தவேண்டும் என்ற அவசியமும் அவர்களுக்குத் தோன்றிற்று. இது விஷயத்தில் இந்த பரோடா சமஸ்தானமானது மற்ற சமஸ்தானங்களுக்கு முன் மாதிரியாயிருப்பது மெச்சத்தக்க விஷயம். மகா ராஜா அவர்கள் சிறிது காலத்திற்கு முன் தென்னிந்திய நாடுகளைச் சுற்றி வந்தபோது இந்திய சங்கீத அபிவிர்த்தி சங்கங்கள் எங்கெங்கே ஏற்பட்டதாக மகா ராஜா அவர்களின் காதுகளில் விழுந்ததோ, அப்போது அவர்களுக்கு அதில் இருந்த பிரியமும் உற்சாகமும் இவ்வளவென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். மகா ராஜா அவர்கள் இப்போது ஆரம்பிக்கப்போகிற இந்த கான்பரென்சானது, சமஸ்தானத்தில் சீர்திருத்த விஷயமாய் நடக்கும் அநேக முயற்சிகளில் அதி முக்கியமானது. இந்தியாவின் இந்து மகம்மதிய ராஜ்யங்கள் சீர்குலைந்தபின் சங்கீத சாஸ்திரமும் ஒளிமழுங்க ஆரம்பித்துவிட்டது. இந்தியாவின் பல இடங்களிலுமிருந்து இந்தக் கான்பரென்சைப்பற்றி எனக்கு வந்திருக்கும் கடிதங்களைப் பார்ப்பீர்களானால், இதைப்பற்றிப் பல இடங்களிலும் இருக்கும் உற்சாகம் இன்னதென்றும். இந்தக் கான்பரென்சானது இந்தியா தேசச் சரித்திரத்தில் ஒரு முக்கியமான விசேஷம் நடந்த காலமாக எண்ணப்படும் என்றும் அவர்கள் நினைப்பதும் வெளியாகும். இங்கு விஜயம் செய்து எங்களைக் கனப்படுத்தினதில் அநேகர் சங்கீத ஆராய்ச்சி செய்வதில் தங்கள் முழு ஜீவியத்தையும் திரவியத்தையும் செலவழித்திருப்பதால், தங்களுடைய வேலை சரியா தப்பா என்று ஒரு முடிவுக்குக் கொண்டுவர விசேஷித்த பிரபல வித்துவான்களை ஒன்று கூடும்படி செய்த மகா ராஜா அவர்களுடைய தாராள சிந்தையையும் பொருட்செலவையும் நினைத்து அவர்கள் அதிக சந்தோஷப்படுவார்கள் என்பதற்குச் சந்தேகமேயில்லை. நாம் அழைத்ததற்கு உத்தரமாக இங்கு வந்து கூடியிருக்கிற வித்வான்களை நான் பேர்பேராகச் சொன்னால் காலதாமதமாகும். ஆனால் அக்பர்பூர் கக்கூர் நவாப் ஆலி அவர்கள், Mr Clements துரையவர்கள் I. C. S., தஞ்சாவூர் ராவ் சாயப் M. Araham பண்டிதரவர்களும் வித்தைகளில் சிறந்த அவர்கள் குமாரத்திகளும், கடைசியாகச் சொன்னபோதிலும் இவர்களைப்போல் கலைகளில் சிறந்து விளங்கும் Mr. பரத்கண்டே அவர்களும் இது விஷயத்தில் நமக்கு அரிய உதவி செய்வார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. மேலும் உதையப்பூர், ஆல்வார், ஜெய்ப்பூர், பாவுகர், இந்தூர், கோலாப்பூர், தாங்க், குவாலியர், ராம்பூர், ஐதராபாத், பிக்கனிர், மைசூர் முதலிய சமஸ்தானங்களும் நாம் செய்ய ஆரம்பித்திருக்கும் வேலையில் பிரியமும் அனுதாபமும் காட்டி தங்கள் சமஸ்தான வித்வான்களில் சிறந்தவர்களை இந்தக் கான்பரென்சுக்கு வரும்படி அனுப்பினது மிகவும் உற்சாகத்தைக் கொடுக்கிறது. இப்போது மகா ராஜா அவர்கள் கான்பரென்சை ஆரம்பிக்கும்படி வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்."

His Highness Gaekwar மகா ராஜா அவர்கள் கான்பரென்சைத் துவக்குமுன் பின்வருமாறு பேசினர்கள்:— "ஒரு ஜாதியானது ஒருவர்க்கொருவர் நடந்துகொள்ளவேண்டிய விஷயத்திலாவது கல்வி விஷயத்திலாவது முன்னுக்கு வரவேண்டிய விஷயத்தில் சங்கீதமானது, மற்ற சாஸ்திரங்களைப்போலவே அதிக

பிரயோசனமுள்ளதாயிருக்கிறது. இந்திய சங்கீதத்தைத் திரும்ப எடுத்து நிறுத்தினால் அதிக பிரயோஜனமாயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. சங்கீதமானது வலியவருக்கும் எளியவருக்கும் அரசருக்கும் பிரஜைகளுக்கும் பிரயோசனமானது. இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்து இங்கே கூடிவந்திருக்கிறவர்களுக்கு காம் வந்தனம் சொல்லுவதுமல்லாமல் அவர்கள் செய்யப்போகும் வேலை பூரணசித்திபெறவேண்டுமென்றும் அதிக விருப்பமுடையவராயிருக்கிறோம்."

Dewan Saheb அவர்கள் கமிற்றியின் சேர்மனாக இருந்ததால் அக்பர்பூர் Thakur Nawab Ali Khan அவர்கள் அக்கிராசனம் வகிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். Mr. A. M. Masani, Minister of Education இதை ஆமோதித்தார்கள்.

பிரசிடண்டவர்கள் பேசியது.

முதலில் தன்னை அக்கிராசனம் வகிக்கும்படி கேட்டதில் Managing Committee யார் தனக்குச் செய்த பெரிய கௌரவத்திற்காக அவர்களுக்கு முதலில் வந்தனம் சொல்லி, மகாராஜா அவர்களின் தயாள குணத்தினாலும் கல்வி அபிவிர்த்திக்காக அவர்கள் கொண்டிருக்கும் ஆசையினாலும் இப்பேர்ப்பட்ட கான்பரென்சு ஒன்றுகூடியதாகவும் தங்களுக்கு அதி பிரியமான இந்த விஷயத்தைப் பற்றி பல இடங்களிலும் உள்ள வித்வான்கள் கூடி ஆலோசிப்பதற்கு இது ஏற்றசமயமாயிருக்கிற தென்பதையும் எடுத்துச் சொல்லியபின் பின்வருமாறு பேசினார்கள் :—

இப்பேர்ப்பட்ட கான்பரென்சானது இந்தியர்களை ஒருமைப்பாடுள்ளவர்களாக்குகிறது என்ற விஷயமாய் அதைப் பார்க்கவேண்டும். கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் வடக்கிலுமிருந்து வந்த வித்வான்கள் தங்கள் அனுபோகத்தை ஒத்துப்பார்த்துக்கொள்ளவும் கான்பரென்சானது சித்திபெறுவதற்கு வேண்டிய காரியங்களைத் தெரிவிக்கவும் கூடியிருக்கிறார்கள். அவர்கள் பேசும் பாஷைகள் வெவ்வேறுயிருந்தபோதிலும் எல்லாருக்கும் பொதுவான பாஷையாகிய சங்கீதத்தின் மூலமாய் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள இடமிருக்கிறது. இரண்டாவதாக சங்கீதமானது தற்சமயம் அறியாமை குடிகொண்டிருக்கும் ஜனங்கள் கைவசத்திலிருப்பதால் அது அழிந்துபோகாதபடி அதைச் சீர்தூக்கிச் சாஸ்திர விதியுள்ளதாகச் செய்யவேண்டியது நமது கடமையென்று எல்லாரும் ஒப்புக்கொள்வார்கள். உங்கள் அதிமுயற்சியுள்ள செக்கிரட்டரி Mr. Joshi அவர்கள் எனக்கு அனுப்பிய அந்த சிறு புஸ்தகத்தில் சங்கீதமானது ஒரு ஜாதியாரின் இருதயத்தில் இருப்பதை வெளிப்படுத்துதற்கு முக்கிய ஆதாரமாயிருக்கிறது என்கிறார். சங்கீதத்தின் ஆத்மலாபகரமான விஷயத்தைப் பற்றிப் பேசி நம்முடைய காலத்தை வீண்போக்காமல் இங்கு வந்திருக்கும் சங்கீத வித்வான்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் ஒரு காரியத்தைப்பற்றி எச்சரிக்கிறேன். சங்கீத சாஸ்திரம் முன்னுக்கு வரவும் ஸ்திரமான விஷயங்கள் ஸ்தாபிக்கப்படவும் இங்கு நடக்கப்போகிற விஷயங்கள் சச்சரவு இல்லாமல் ஒழுங்காகவும் சிநேக மேரையாகவும் நடத்தப்படவேண்டும். இந்திய சங்கீதத்தைப் பற்றிய ஆதாரமான விஷயங்களிலும் கூட பல அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆகையால் பல வித்வான்கள் பல விதமான கொள்கைகளைச் சொல்லுவதில் சச்சரவு நேரிட்டாலும்கூட நம்முடைய கான்பரென்சின் முக்கிய நோக்கத்தை மறந்துவிடக்கூடாதென்று வித்வான்கள் யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். சங்கீதம் விர்த்தியடைவதற்கென்று பல வித்வான்களும் பல மார்க்கங்களை எடுத்துக் காண்பிப்பதில் யாதொரு குற்றமுமில்லை.

பிரசிடண்டவர்கள் இதன்பின் " இந்துஸ்தானி சங்கீதத்தின் சரித்திரமும், அதன் தற்கால நிலைமையும், அதைச் சுலபமாய்க் கற்றுக்கொள்ளும்படி எப்படிச் சீர்திருத்திச் சாஸ்திரமாக்கலாம்" என்பதைப்பற்றிய உபந்நியாசத்தைப்படிக்க Mr. V. N. பாத்கண்டே அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

மீற்றிங் சாயந்திரம் கூடியபோது "Intonation of Indian music" என்பதைப் பற்றி Mr. E. Clements துரையவர்களும், "The Theory of Indian music as expounded by Somanath" என்பதைப்பற்றி Rao Bahadur K. B. தேவர் அவர்களும் உபந்நியாசம் வாசித்தார்கள்.

செக்ரட்டரி மகா-ரா-ரா-ஸ்ரீ Prof Joshi அவர்கள் மூலமாய் கான்பரென்சின் மெம்பர்களும் மற்றவர்களும் அரண்மனை ஆலுக்கு இரவு 9 மணிக்கு வந்து மற்ற சமஸ்தானங்களிலிருந்து வந்த வித்வான்கள் பாடும் சங்கீதத்தைக்கேட்க வேண்டுமென்று தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

2

The Bombay Chronicle, March 23, 1916.

"The All-India Music Conference to-day held sessions both in the morning and evening under the presidency of Thakur Nawab Ali Khan of Akbarpur. Great interest was evinced in the proceedings of the Conference, the spacious hall being again full. The presence of many ladies of all communities whom the Conference attracted from every presidency had its inspiring and encouraging effects.

Several papers were read. Mr. Clements in his paper on "Intonation in Indian Music" laid down the places of the notes used in Kafi, Yaman, Bilawal, Khamaj, Bhervi, and Deshkar. With reference to this there was a special meeting this afternoon of the delegates at which several of the leading artistes of India such as Jakrudin Khan of Udaipur, Kalan Khan of Jaipur, Mushtaf Khan of Alwar, Imdad Khan of Indore, Ali Husain Khan of Jeypore and several others were present. The different scales mentioned by Mr. Clements were then tested. Mr. Clements playing on the 22 Srutis harmonium during the test. After about two hours' trial and discussion the Conference came to the conclusion that the scales laid down for the above mentioned "ragas" by Mr. Clements did not tally with those of the practical artistes. The practical artistes unanimously proved that in the Kafi scale the notes "ri" and "dha" were of 270 figures and 405 vibrations respectively and "ga" and "ni" of 288 and 432 vibrations respectively.

At night there was a practical demonstration by the artistes whose display of the last night had elicited warm congratulations."

2

பம்பாய் கிரானிக்கிள் 23 மார்ச்சு 1916.

இந்தியா முழுமையும் இருந்து வந்துகூடிய சங்கீத கான்பரென்சானது காலையிலும் மாலையிலும் நடத்தப்பட்டது. அக்பர்பூரிலிருந்து வந்த Thakur Nawab Ali Khan அவர்கள் அக்கிராசனாதிபதியாய் இருந்தார்கள். கூடினஇடம் மெம்பர்களால் முழுதும் நிறைந்திருந்தபடியால் கான்பரென்சில் நடந்தவைகள் எல்லாருக்கும் மனச்சந்தோஷத்தை உண்டுபண்ணினது என்று சொல்லலாம். அநேக ராஜதானிகளிலிருந்தும் அநேக கூட்டமான ஸ்திரீகள் வந்திருந்தபடியால் யாவருக்கும் ஒருவித உற்சாகம் உண்டாயிருந்தது.

அநேக உபந்நியாஸங்கள் படிக்கப்பட்டன. Mr. Clements துரையவர்கள் "Intonation in Indian Music" என்ற உபந்நியாசத்தை வாசித்து, காப்பி, யாமன், பிலவால், கமாசு, பர்வி, தேஷ்காப் முதலிய ராகங்களின் சுரஸ்தானங்களைக் குறிப்பிட்டுக்காட்டினார். இது விஷயமாய் இன்று பிற்பகலில் ஒரு விசேஷித்த மீற்றிங்நடந்தது. அதில் பிரபல சங்கீத வித்வான்களாகிய உதயப்பூர் சக்ருடின் சாயப், ஜெயப்பூர் கலான் கான் சாயப், ஆள்வார் முஸ்தாப்கான் சாயப் முதலியவர்கள் ஆஜராயிருந்தார்கள். கிளமென்ஸ் துரையவர்களால் சொல்லப்பட்ட பல ஆரோகண அவரோகணங்களைப் பரீட்சை செய்தார்கள். அப்போது தன்னுடைய சுருதி ஆர்மோனியத்தில் துரையவர்கள் சுரங்களை வாசித்துக் காண்பித்தார்கள். இரண்டுமணி நேரமாய்ப்பரிட்சையும் தர்க்கமும் நடந்து முடிவில் முன்சொன்ன இராகங்களின் ஆரோகண அவரோகணங்களின் சுரங்கள் சாதாரணமாய் வித்வான்கள் உபயோகிக்கும் சுரங்களோடு பொருந்தவில்லை என்று நிர்மானிக்கப்பட்டது. அங்கு வந்திருந்த வித்வான்கள் ஒருவர் தவறுமல், காப்பிராகத்தில் வரும் ரிஷப தைவதங்கள் 270, 405 வைபிரேஷன்களுள்ளதாகவும், காந்தார நிஷாதங்கள் 288, 432 வைபிரேஷன்களுள்ளதாகவும் இருக்கவேண்டும் என்று ரூபித்தார்கள்.

அன்றிரவில் வித்வான்கள் அநேக வாத்தியங்களில் வாசித்தும் பாடியும் காட்டினார்கள். அன்றிரவில் நடந்த சங்கீதக்கச்சேரியானது எல்லாராலும் மிகவும் கொண்டாடப்பட்டது.

3

Hindu, 23rd March, 1916.

In response to an invitation by the Baroda State, a large number of votaries of Indian music from all parts of India including many ladies came to Baroda to attend the All-India Music Conference which was opened by His Highness the Maharaja on Monday last. The object of the Conference is to disclose the scientific foundations of Indian music with a view to improving it and reducing it to a form of common notation for making it easy for instruction and assimilation. Thakur Nawabali Khan of Akbarpur was elected as President of the Conference who in the course of his speech referred to the unifying influence of music which had brought together the best talents from every presidency and Native States in India for rescuing the science which was at present in the hands of an ignorant and illiterate class of men in this country and to place it on a scientific basis. Several interesting papers were read, covering a wide range of subjects. Notable among them were a "historical survey of Hindustani music" by Mr. V. N. Bhatkhande, the "Intonation of Indian music" by Mr. E. Clements, the "Persian influence on the Indian music" by Mr. Abdul Halin Sharar and the "Present condition of Indian music and proposal for forming an academy of music" by Mrs. Atya Fyzee Rahiman. Practical demonstrations by artists are being given every night.

3

இந்து 23 மார்ச்சுமீ 1916.

போன திங்கட்கிழமை His Highness மகா-ரா-ரா-ஸ்ரீ பரோடா மகாராஜா அவர்களின்வேண்டு கோளின்பேரில் இந்தியாவின் பல இடங்களிலுமிருந்து ஆல் இந்திய சங்கீத கான்பரென்சுக்கு அநேகம் வித்வான்களும் ஸ்திரீகளுங்கூட வந்திருந்தார்கள். கான்பரென்சின் முக்கிய நோக்கம் என்னவென்றால் இந்திய சங்கீதத்தின் சாஸ்திராதாரங்களை வெளிப்படுத்தவும், அதைச் சீர்திருத்தவும்,எவரும் அதைச்சுலபமாய்க் கற்கவும் கற்பிக்கவும் வேண்டியதற்குரிய ஸ்வர முறையை ஸ்தாபிக்கவுமே. அதற்கு அக்கிராசனதிபதியாயிருந்த Akbarpur Thakur Nawab Ali Khan அவர்கள் எப்படி சங்கீதம் யாவரையும் ஒருமைப்பாடுள்ளவர்களாக்குகிறது என்பதைப்பற்றியும், இதனால்தான் ஒவ்வொரு ராஜதானியிலும் சமஸ்தானத்திலுமிருந்த பிரபல வித்வான்கள் இங்கே கூடினார்களென்றும், தற்சமயம் சங்கீதமானது அறியாமையுள்ள ஜனங்கள் வசத்திலிருப்பதால் அதை அவர்கள் கையிலிருந்து மீட்டுச் சீர்தூக்கிச் சாஸ்திரவிதியுள்ளதாகச் செய்யவேண்டியது எல்லாருடைய கடமை என்பதைப்பற்றியும் பேசினார்கள். பலவித விசேஷித்த உபந்நியாசங்கள் பல பேரால் படிக்கப்பட்டன. அவைகளில் முக்கியமானவை எவை யென்றால்

இந்துஸ்தானி சங்கீத சரித்திரம்—Mr. V. N. பாத்சண்டே

இந்திய சங்கீத ஆரோகணங்கள்—Mr. E. Clements

இந்திய சங்கீதம் எப்படி பார்சீக சங்கீதத்தால் முன்னுக்கு வந்திருக்கிறது—Abdul Halim Sharar.

சங்கீத அக்காடமி ஒன்று ஸ்தாபிப்பதும் இந்திய சங்கீதத்தின் தற்கால நிலையும்—Mrs. Atya Fyzee Rahiman. ... ...

ஒவ்வொரு இரவிலும் வித்வான்கள் பாட்டும் வாத்திய வாசிப்பும் நடந்து வந்தன. ... ...

4

The Bombay Chronicle, March, 24th 1916.

"The All-India Music Conference met again this morning, Thakur Nawab Ali Khan of Akbarpur presiding. The work of the day commenced with the reading of the paper entitled "An article on Shrutis" by Rao Sahib M. Abraham Pandither. It was a learned disquisition on the much disputed question of the *Shrutis* or quarter-tones, which are used in the singing of Indian

Ragas, embodying the results of researches that the octave should be divided into twenty-four sub-divisions instead of twenty-two as prescribed by the ancient Sanskrit texts. The lecture was highly technical in character, and full of mathematical calculations and logarithms, but they were enlivened by the excellent discoursive style in which the lecture was delivered and by the interludes of songs of prayer sung in the very finely cultivated and musical voices of the two daughters of Mr. Pandither, who it is understood, are proficient in Indian as well as European music. The most interesting portion of the lecture was the demonstration given by the daughters of Mr. Pandither of the micro-tones used in certain of the South Indian *Ragas*, by singing to the accompaniment of the *Veena*. The ordinary frets of the *Veena* were supplemented by movable ivory frets placed on the board of the *Veena* at different places in order to produce the micro-tones exhibited, and in this way Mr. Pandither explained what notes were now in use in some of the Southern *Ragas*. The correctness of the notes sung with those produced on the instrument was vouched for by so distinguished a musician as Mr. Zakr-ud-Din of Udeypore.

The paper of Mr. Pandither was the only item arranged for the morning, but as Mr. Mushraff Khan of Alwar expressed a desire to address a few words to the meeting, he was allowed to speak for some time after which Messrs. Mushraff Khan and Zakr-ud-Din Khan sang to the gathering.

At the evening sessions Mr. N. N. Banerjea read a paper on the "Phœnix of Indian Music" in which he advocated the adoption of the English staff notation for Indian Music. Mr. Vishnu D. Palushkar followed with a paper on the "Notation System," putting before the Conference his own notation for approval. After him came Mrs. Maragathavalli Ammal with a paper on notation in Indian Music. She favoured the adoption of the English staff notation but with certain more signs added. Next a paper on the "Staff notation adapted to Indian Music" was read by Mr. E. Clements.

The last paper read in the evening was on "The Gamut System of East and West - a comparison from the standpoint of Modern Physicists" by Mr. T. A. Ramakrishna Aiyar. He gave it as his opinion that the *gandharva* of the Hindu scale was not of 300 comparative vibrations supposing the *shadja* to be of 240 comparative vibrations and that this *gandharva*, namely of 300 vibrations, was the *gandharva* of the European scale."

4

பம்பாய் கிராணிக்கிள் 24 மார்ச்சு 1916.

இந்தியா முழுவதிலும் இருந்து வந்து கூடிய கான்பரென்ஸ் இன்று காலை மறுபடியும் கூடினது. Thakur Nawab Ali Khan சாயப் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். இன்று காலை முதல் முதல் சுருதிகளின்பேரில் ராவ் சாயப் M. Abraham Pandither அவர்கள் ஒரு உபந்நியாசம் வாசித்தார்கள். இந்திய ராகங்களில் வரும் நுட்பமான சுருதிகள் அல்லது கால் சுரங்களைப்பற்றித் தன் சங்கீதக் கல்வித் திறமையைக் காட்டும்படியான விதமாய்ப் பண்டிதரவர்கள் சொன்னார்கள். சுருதிகள் பல அபிப்பிராயம் ஏற்கக்கூடியவையென்று யாவருமறிந்த விஷயமே. பண்டிதரவர்கள் அநேக வருஷங்களாய் இது விஷயத்தில் பல ஆராய்ச்சிகள் செய்ததின் பலனுய் ஒரு ஸ்தாயியை சமஸ்கிருத நூல்களில் சொல்லப்பட்ட பிரகாரம் 22 சுருதிகள் என்றிராமல் 24 சம சுருதிகளாகப் பிரிக்கவேண்டும் என்று எடுத்துக்காண்பித்தார்கள். இந்த வியாசமானது சங்கீத சாஸ்திர விஷயமான மிக நுட்பமான விஷயங்களையும், கணக்குகளையும், திருவ எண்களையும் பற்றிச் சொன்னதினால் கருதலாயிருந்தபோதிலும் அது சொல்லப்பட்ட போங்கானது ஒருவரிடம் பேசுவதுபோலத் தெளிவுள்ளதாயிருந்ததினாலும் ஐரோப்பிய சங்கீதத்திலும் இந்திய சங்கீதத்திலும் மிகத் தேர்ச்சிபெற்ற அவர்களுடைய இரண்டு குமாரத்திகளும் தங்களுடைய மிக இனிமையான சாரீரத்தோடு இடைக்கிடையே பக்திரஸமான கீர்த்தனங்களைப்பாடியதாலும், நேரம்போனது ஒருவருக்கும் தெரியவில்லை.

இந்த வியாசத்தில் வெகு முக்கியமாய்க் கவனிக்கப்படத்தக்க விஷயம் யாதென்றால், தென்னிந்திய இராகங்களில் சிலவற்றில் வழங்கும் அதிக நுட்பமான சுரங்களைப் பண்டிதரவர்கள் குமாரத்திகள் யாவருக்கும் விளங்கும் படியாய் வீணையுடன் பாடிக்காட்டியதுதான். வீணையில் சாதாரணமாயுள்ள மெட்டுகளே யல்லாமல் அங்குமிங்கும் சமயத்திற்கேற்ற விதமாய்த்தள்ளிவைக்கக்கூடிய தந்த மெட்டுகளை வைத்து அதிக நுட்பமான சுரங்களைப் பாடிக்காட்டி இவ்விதமாய்த் தென்னிந்தியா இராகங்களில் வழங்கும் சுரங்களைப் பண்டிதரவர்கள் எடுத்துக் காட்டினார்கள். பாடிய சுரங்களும் வீணையில் வாசித்த சுரங்களும் ஒற்றுமையுள்ளவைதான் என்று மிகப் பிரபல வித்வானுகிய உதையப்பூர் சக்ருடன் சாயப் அவர்களால் நற்சாட்சி பெற்றார்கள்.

காலையில் வாசிக்கப்படும்படி குறிக்கப்பட்டது இந்த ஒரே விஷயமாய் இருந்தபோதிலும், ஆள்வார் Mushraff Khan சாயப் அவர்கள் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்பியதால் அவர்களுக்கும் பேச அனுமதி கொடுக்கப்பட்டது. இது முடிந்தவுடன் Mushraff Khan சாயப் அவர்களும் Takruddin Khan சாயப் அவர்களும் சபையில் சில பாடல்களைப் பாடினார்கள்.

சாயந்தர மீற்றிங்கில் Mr. N. N. Banerjia என்பவர்கள் "Phoenix of Indian Music" ("இந்திய சங்கீதத்தின் மறுபிறப்பு)" என்ற விஷயத்தைப்பற்றி உபந்நியாசம் செய்ததில், இந்திய சங்கீதத்திற்கு கோடுகளின்மேல் இங்கிலீஷ் சுரங்களை அடுக்கும் முறை தகுதியானது என்று அபிப்பிராயப் பட்டார்கள். இதன்பின் Vishnu D. Palushkar என்பவர் "Notation system" என்ற விஷயத்தைப்பற்றித் தன் அபிப்பிராயம் சரி என்று ருசுப்படுத்தப் பிரயாசைப்பட்டார். அதற்குப் பின் இங்கிலீஷ் Staff notation ஐ இந்திய சங்கீத சுரங்களுக்கு எளிதில் உபயோகிக்கலாம் என்றும், ஆனால் அதி நுட்ப சுரங்களுக்குத் தகுந்த விதமாய் வேறு அடையாளங்கள் போட்டுக்கொள்ளவேண்டுமென்றும் Mrs. மரகதவல்லியம்மாளால் ஒரு உபந்நியாசம் படிக்கப்பட்டது. இதன்பின் "Staff notation adapted to Indian Music" என்னும் விஷயமாய் Mr. Clements துரையவர்கள் ஒரு உபந்நியாசம் வாசித்தார்கள்.

கடைசியாக Mr. Ramakrishna Iyer Avl., "கீழ்த்தேசத்து மேல்தேசத்து ஆரோகண அவரோகண முறைகள் இரண்டையும் தற்கால சாஸ்திரிகள் எப்படி ஒத்துப் பார்க்கிறார்கள்" என்பதைப்பற்றி உபந்நியாசம் படித்தார்கள். ஷட்ஜமம் 240 ஒசை அலகுளுள்ளதென்று வைத்துக்கொண்டால் இந்திய காந்தாரம் 300 அலகுளுள்ளதாய் இருக்கமுடியாதென்றும், 300 அலகுளுள்ள காந்தாரம் ஐரோப்பிய ஸ்கேலில் வழங்கும் காந்தாரம் என்றும் எடுத்துக் காண்பித்தார்.

5

Hindu, 25th March 1916.

The All-India Music Conference closed its sittings to-day. Madras played its part well. Rao Saheb Abraham Pandithar's paper on Srutis according to Tamil authorities was a valuable contribution. His speech though in Tamil was ably rendered into English by Mr. Shrinivas Ayangar. Pratab Ramsami Bhagavatar read an erudite paper in Sanskrit on the Karnatic music. Mr. Nagbhusanam's paper on the place of music in human culture was interesting and Mr. Ramakrishnaier, Retired Judge from Malabar, spoke on the Gamut systems of Eastern and Western music. The last speaker was cheered throughout and when he sat, the State Bandmaster (a Russian) observed that he was a wonderful man humorous and at the same time serious. The audience was taken through dry, serious mathematical figures by his spicy remarks.

5

இந்து 25 மார்ச்சுமீ 1916.

ஆல் இந்திய சங்கீத கான்பரென்சு இன்று முடிவடைந்தது. சென்னை ராஜதானியைச்சேர்ந்த வித்வான்கள் செய்தவேலை மிகவும் நன்றாயிருந்தது. சுருதிகளைப்பற்றித் தமிழ் நூல்களிலிருந்து Rao Sahib Abraham Pandither அவர்களால் வாசிக்கப்பட்ட உபந்நியாசம் சங்கீதத்திற்கு அதிக உதவி

யானதாயிருந்தது. அவர்கள் தமிழில் பேசினபோதிலும் Mr. சீனிவாச ஐயங்காரவர்கள் பேசினதை வெகு சாமர்த்தியமாக இங்கிலீஷில் மொழி பெயர்த்தார்கள். கர்நாடக சங்கீதத்தைப்பற்றிப் பிரதாப ராமஸ்வாமி பாகவதரவர்கள் சமஸ்கிருதத்தில் ஓர் உபந்நியாசம் வாசித்தார்கள். "மனித கல்வி அபிவிர்த்தியில் சங்கீதம் செய்யும் வேலை" என்பதைப்பற்றி Mr. நாகபூஷணம் ஐயரும், "கீழ் நாட்டு மேல் நாட்டு ஆரோகண அவரோகணங்கள்" என்பதைப்பற்றி மலபார் Retired Sub-judge இராமகிருஷ்ண ஐயரவர்களும் உபந்நியாசம் படித்தார்கள். இந்த இராமகிருஷ்ண ஐயரவர்கள் வாசித்துக் கொண்டிருக்கும்போது சபையார் அடிக்கடி கரகோஷம் செய்தார்கள். அவர் உட்கார்ந்தபோது சமஸ்தான பியாண்டு மாஸ்டராகிய ருஷ்ய தூரை யொருவர் ஐயரவர்களின் சாமர்த்தியத்தைப் பற்றியும் களினமாயும் அதே சமயத்தில் விநயத்துடனும் பேசினதைப் பற்றியும் புகழ்ந்தார். கணித விஷயங்கள் அதிகமாய் இன்பத்தைத் தராதவைகளான போதிலும் களினமாய்ப் பேசி யாவரையும் திருப்தி செய்தார்கள்.

⊖

Hindu, 27th March 1916.

The first All India Music Conference closed at Baroda after five days sessions. Various subjects came up for discussion and resolutions were passed with a view (1) to securing a scientific system of ragas in Hindustani music, (2) to settle a uniform and easily workable system of notation f r the whole of India. (3) to compose a properly graded series of text books on the subject of music for introducing in educatioual institutions, and (4) to start an Academy of Indian Music as the highest authority in all musical matters and for bringing out magazines on music and the conferring of degrees or certificates on musical talents. Twenty-four interesting papers were submitted before the Conference. The technical papers dealt with the question of shrutis and the general ones expatiated on the value of musical education, its position in fine arts and in human culture. The most interesting in the latter class was that of Mr. H. P. Krishna Rao, which dealt with the paychological aspect of music. The proceedings terminated with an evening party given by the Managing Committee of the Conference to the members.

⊖

இந்து 27 மார்ச்சுமீ 1916.

ஐந்து நாளாய் முதலாவது ஆல்-இந்திய சங்கீத கான்பரென்ஸ் கடை பெற்று இன்று முடிவுக்கு வந்தது. அநேக விஷயங்கள் பேசப்பட்டு அநேக தீர்மானங்கள் கடந்தேறின. எதற்காக வென்றால் (1) இந்துஸ்தானி சங்கீதத்தில் சாஸ்திர முறையுடன் இராகங்களை உண்டுபண்ணுவதற்கென்றும் (2) இந்தியா முழுமையும் பொதுவாயும் லேசாயுமுள்ள ஸ்வர முறையை ஏற்படுத்துவதற்கென்றும் (3) பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் படிப்பதற்கென்றும் பல வகுப்புகளுக்கும் அடியிலிருந்து உச்சம் வரைக்கும் படிப்படியாய்ப் போகக்கூடிய சங்கீத வாசக புஸ்தகங்களை ஏற்படுத்துவதற்கென்றும் (4) சங்கீத விஷயங்களுக்கு ஒரு அதிகாரசாலையாயும் சங்கீத விஷயமாய்ப் பேப்பர்கள் முதலியன விளம்பரம் செய்யும் ஒரு இடமாகவும், சங்கீதத் திறமையுள்ளவர்களுக்குப் பட்டம் சர்ட்டிபிக்கெட் முதலியன கொடுப்பதற்கென்று ஒரு சங்கமாகவும் ஏற்படக்கூடிய ஒரு அக்காடெமியை ஸ்தாபிப்பதற்காகவுமே. கான்பரென்ஸில் பல அரிய விஷயங்களைப்பற்றி 24 உபந்நியாசங்கள் படிக்கப்பட்டன. சாஸ்திர விதியாயுள்ள உபந்நியாஸங்கள் சுருதிகளைப்பற்றியும் மற்றப் பொது விஷயமாயுள்ளவைகள் கல்வி கற்பிப்பதில் சங்கீதம் எவ்வளவு தூரம் உபயோகப்படும், சாஸ்திரங்களிலும் பொதுத் தேர்ச்சியை உண்டு பண்ணுவதிலும் அது எவ்வளவு தூரம் பிரயோஜனப்படும் என்பதைப்பற்றியும் பேசின. பிந்தின வகுப்பைச் சேர்ந்தவைகளில் அதிக அருமையானது எதென்றால் "psychological aspect of music." என்பதைப் பற்றி Mr. H. P. கிருஷ்ணராவ் அவர்கள் செய்த உபந்நியாசமே.

7

Hindu 29th March 1916.

(By a Guest at Baroda.)

The All India Music Conference has come to a close. It is a matter for congratulation that it has passed off without a hitch. The audience seemed to enjoy the proceedings and nobody had any fault to find. The Chairman Mr. Thakur M. Nawab Ali of Akbarpur was the right man in the right place and the marvellous success that attended the conference was greatly due to his tact and genius.

There was occasionally a friendly clash of arms. The votaries of Hindustani mnsic had no hesitation in saying that theirs was the finest music. Those versed in Karnatic music held that their musical system was as old as twelve thousand years, and that Hindustani music was of recent origin and, in many respects, had its inspiration from the Karnatic Music. There were also men who were acquainted with both these systems, such as Mr. Bhatkande of Bombay. In their opinion each of the two systems of music has its own virtues and a fusion of the two would be very advantageous.

Much of the wrangling was due to a misconception on the part of the speakers as to the aims and objects of the conference. We had to blanch at the sight of many closely-written manuscripts, which seemed somewhat out of place in a conference of musicians, called for the purpose of determining the number of srutis in an octave, and settling all contentious theories in regard to our musical systems, and constructing a notation such as will facilitate singing of Indian songs and ragams everywhere in the world. The defects and forms of our musicians and the exuberance of technical details in which some of them are involved, are more calculated to dissipate the *ennui* caused by the heat in Baroda. Indeed, it is no place for much talk. No amount of talk will settle the quarrels among musicians. What the audience were prepared to appreciate, from their own point of view and from the point of view of the conference, was a practical demonstration of the theory each expert had to unfold as the result of his original research. Most of the speakers broke down when they were required to do so, and this opened their eyes to the defects of their theories and researches.

The theory of Twenty-four srutis in an octave instead of the time-honored number, twenty-two, expounded by Rao Sahib M. Abraham Pandither of Tanjore, made a profound impression on the audience and the practical demonstration of that theory by his daughter Mrs. Maragathavalli Ammal, was extremely delightful. Nobody had any fault to find. Everyone enjoyed the ingenious tunes and the charming voice.

H. H. The Maharajah of Gaekwar invited Mr. Abraham Pandithar, and his daughters to the palace and listened to Mr. Pandither's explanation of his theory and admired the superior insight of Mr. Pandither in this matter, as also his daughter Maragathavalli Ammal's performances on the Veenai in twenty-four srutis. H.H. The Maha Rani and other important members of the Royal family were present as also the Dewan Mr. V. P. Madhava Row. There was, besides them, only a select audience consisting of Mr. E. Clements I. C. S., Mr. Bhatkhande, Mr. Thakur M. Nawab Ali Khan, the President of the conference, and Mr. N. P. Subramania Iyer, Mr. Sundara Pandian Abraham, and Mrs. Abraham Pandither. Every one who listened to the practical performance felt that there was much wisdom in Mr. Pandither's insistence on the theory that the octave should be twenty-four srutis and not twenty-two. Those accustomed to the twenty-two became convinced, and were ready to admit that the musical and scientific advantages of the theory of twenty-four far outweighed these which the doctrine of twenty-two possessed for all practical purposes.

The main object of the conference is, as I understand it, to make Indian Musical performance thoroughly scientific as it was in days of yore, and so, universally understandable. It should no more be the work purely of the Indian singer's instinct.

7

இந்து 29 மார்ச்சு 1916.

(கான்பரென்சில் ஆஜராயிருந்த ஒருவர் எழுதியது.)

ஆல்- இந்திய சங்கீத கான்பரென்ஸ் முடிந்துவிட்டது. சண்டை சச்சரவில்லாமல் அது நடந்தானது நிரம்பவும் சந்தோஷமான காரியம். வந்திருந்த சபையோர்கள் எல்லாவற்றையும் கேட்டு ஆனந்தித்தார்கள். குற்றம் சொல்வதற்கிடமில்லாதிருந்தது. அக்கிராசனம் வகித்த Mr. Thakur M. Navab Ali அவர்கள் அந்த ஸ்தானத்துக்குத்தகுந்த மனுஷராய் விளங்கினார்கள். கான்பரென்சானது அற்புதமான விதமாய்ச் சித்தியடைந்ததற்குக் காரணம் அவர்களுடைய சாமர்த்தியமும் கல்வித்திறமையுமே.

இடைக்கிடையில் சிறு சச்சரவுகள் உண்டாயின. இந்துஸ்தானி சங்கீதமே விசேஷம் என்று கொண்டவர்கள் தங்களுடைய சங்கீதத்திற்கு மேலானதொன்றுமில்லை என்றார்கள். கர்நாடக சங்கீத வித்வான்கள் தங்கள் முறை பன்னீராயிரம் வருஷகாலமாய் உள்ளதென்றும், ஆனால் இந்துஸ்தானி சங்கீதம் சில வருஷங்களுக்கு முன் தோன்றினதாகையில் கர்நாடக சங்கீத அம்சங்கள் அதில் அநேகம் இருக்கின்றனவென்றும் சொன்னார்கள். பம்பாய் Mr. பாத்கண்டேயைப்போல் இரண்டு முறையையும் அறிந்தவர்களும் அங்கு இருந்தார்கள். அவர்கள் அபிப்பிராயம் என்னவென்றால் இரண்டு முறைகளிலும் அதிசிரேஷ்டமான அம்சங்கள் இருக்கின்றனவென்றும் இரண்டையும் கலப்பது அதிக உசிதமாகுமென்றும் சொன்னார்கள்.

கான்பரென்சின் நோக்கம் இன்னதென்று அறியாததால் இப்பேர்ப்பட்ட வாகுவாதங்களுக்கு இடமுண்டாயிற்று. கான்பரென்சானது ஸ்தாயியில் எத்தனை சுருதிகள் என்று கண்டுபிடிப்பதற்கும் இந்திய சங்கீத விஷயமான அபிப்பிராயங்களை ஒன்று படுத்துவதற்கும். இந்திய இராகங்களை யாவரும் படிப்பதற்கேற்ற ஒரு சுர முறையை ஏற்படுத்துவதற்கும் உண்டாக்கப்பட்டிருந்தபடியால் சிலர் கொண்டுவந்திருந்த நுணுக்கமாய் எழுதப்பட்டிருந்த கைப்பிரதிகளைக் கண்டபோது எல்லாருக்கும் முகம் வெளுத்துவிட்டது அப்பேர்ப்பட்ட பிரதிகள் அங்கே கொண்டுவரப்பட அவசியமேயில்லை. சில வித்வான்களுடைய குறைவுகளும், அவர்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்வதில் காணப்பட்ட நுட்பமான technical விஷயமான விசேஷங்களும் பரோடாவின் உஷ்ணத்தைத் தணிக்கும்படியான எதுக்களாயிருந்ததேயொழிய வேறு பிரயோசனமுள்ளதாகக் காணப்படவில்லை. அதிகமாய்ப் பேசுவதற்கு பரோடா ஏற்ற இடமல்ல. வீண்பேச்சானது வித்வான்களுக்குள்ள அபிப்பிராயபேதத்தை ஒரு நாளும் சரிப்படுத்தப்போகிறதில்லை. சபையோர் எதன்மேல் அத்தியந்த பிரியம் காண்பித்தார்களென்றால், எவராவது தான் புதிதாய் ஆராய்ச்சியின் மூலமாய்க் கண்டுபிடித்த அபிப்பிராயத்தை வாத்தியங்களின் மூலமாயாவது பாட்டின் மூலமாயாவது ருசுப்படுத்திக் காண்பிப்பதைத்தான். கான்பரென்சின் முக்கிய நோக்கமும் இதுவே. இவ்விதமாய் ருசுப்படுத்தக் கேட்டபோது அநேகர் ஒன்றும் சொல்லத்தெரியாமல் விழித்தார்கள். தங்களுடைய அபிப்பிராயங்களும் ஆராய்ச்சிகளும் பிசகென்று அப்போதுதான் சிலர் அறிந்தார்கள்.

ஒரு ஸ்தாயியில் வெகுகாலமாய் வழங்கிவரும் 22 சுரஸ்தானங்களுக்குப் பதிலாய் 24 சுரஸ்தானங்கள் இருக்கின்றனவென்று ராவ் சாயேப் ஆபிரகாம் பண்டிதரவர்கள் சொல்லி ரூபகாரப் படுத்தினதானது எல்லாருடைய மனதிலும் ஒருவிதக் கிளர்ச்சியை உண்டு பண்ணிற்று. அந்த சுருதிஸ்தானங்களை வீணையின் மூலமாயும் வாய்ப்பாட்டின் மூலமாயும் அவர்கள் குமாரத்தி மரகதவல்லியம்மாள் ருசுப்படுத்தினதானது எல்லாருக்கும் பரம சந்தோஷத்தை உண்டு பண்ணிற்று. அதில் ஒருவராவது குற்றம் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒவ்வொருவரும் அந்த ஸ்வரஸ்தானங்களைக் கேட்டு மகிழ்ந்ததுமல்லாமல் அந்த அம்மாளின் சாரீரத்தையும் கேட்டு ஆனந்தித்தார்கள்.

மகாராஜா அவர்கள் பண்டிதரவர்களையும் அவர்கள் குமாரத்திகளையும் தங்களுடைய அபிப்பிராயத்தை ருசுப்படுத்தும் படியாகத் தன் அரண்மனைக்கு வரவழைத்து அதைக் கேட்டபோது பண்டிதரவர்களின் மேலான

சங்கீத வித்தையைப் புகழ்ந்ததுமல்லாமல் அவர்கள் குமாரத்தி மரகதவல்லியம்மாள் வீணையில் 24 சுருதிகளை வாசித்ததைக் கேட்டும் ஆனந்தித்தார்கள். இதுசமயத்தில் மகாராணியவர்களும், இளவரசர் அரசிகளும், திவான் சாயப் மாதவராவ் அவர்களும் இருந்தார்கள். அவர்களையல்லாமல், கிளமெண்டஸ் துரையும், Mr. பாத்கண்டேயும், தக்கூர் நவாப் ஆலிகான் சாயப் அவர்களும், Mr. N. P. சுப்பிரமணிய ஐயரும் Mr. சுந்தர பாண்டியன் அவர்களும் Mrs. ஆபிரகாம் பண்டிதரவர்களும் இருந்தார்கள். இவர்களுடைய சங்கீதத்தைக் கேட்டயாவரும், ஸ்தாயியில் 22 அல்ல 24 சுருதிகள் இருக்க வேண்டுமென்று பண்டிதரவர்கள் வற்புறுத்தியதானது சரியென்று தங்களில் உணர்ந்தார்கள். 22 சுருதிகளுக்கு வழக்கப்பட்டவர்களுங்கூட, 24 என்று வைத்துக்கொள்ளுதல் எல்லாக் காரியங்களுக்கும் அதிக அனுகூலமாயிருக்கிறதென்பதை அறிந்ததுமல்லாமல் அதை ஒப்புக்கொள்ளத் தயாராயுமிருந்தார்கள்.

எனக்குத் தெரிந்தவரையில் கான்பரென்சின் முக்கிய நோக்க மென்னவென்றால் இந்திய சங்கீத வித்வான்கள் தாங்கள் நினைத்தபடி பாடுகிறதும் சொல்லுவதும் போய், அதை சாஸ்திர முறையுள்ளதாக்குவதும் அதினால் யாவரும் அதைச்சுலபமாய் அறிந்து கொள்ளச் செய்வதுமே.

8

The Madras Mail, 30th March 1916.

The All-India Music Conference at Baroda has come and gone; there may be many opinions as to what precisely have been the results achieved, but none as to the wisdom of H. H. the Gaekwar in convening it. The aim of the Conference was stated in the opening proceedings to be the systematising of Indian music, with a view to its being taught scientifically in schools and being preserved and communicated by means of an adequate notation.

H. H. the Gaekwar, provided every evening, at the Luxmi Vilas Palace, a wonderful feast of song and dance in truly appropriate surroundings. None who attended the Conference is likely to forget these concerts which revealed all that the human voice is capable of in the form of trills and gameks and the wonderful dexterity of the *binkar*, who can produce a whole section of exquisitely tender melody from the vibrations set up in a wire by one stroke of the finger. He treats the frets as mere *points d'appui*, and after each stroke of the right hand stretches the wire in varying degrees to one side obtaining an almost incredible delicacy of sound. The Gaekwar's efforts aroused profound interest in the Durbars of Udaipur, Alwar, Jaipur, Bhownagar, Indore, Kolhapur, Tonk, Gwalior, Rampur, Hyderabad, Bikanir and Mysore, some of whom sent their best musicians to the Conference. Among the famous Hindustani musicians assembled at Baroda were Jakroddin, of Udaipur; Imdad Khan, of Alwar; Fayaz Mahomed, Dasadduk Hussein, and Jamal-ud-din, of Baroda, Abbas Khan, of Jeypore; and last, but not least, the renowned *binkar*, Mushraf Khan, of Alwar. There were also several distinguished exponents of the Karnatic School.

The important papers read at the Conference related to either the history of Indian music or the subject of intonation. On the first head a most valuable paper was contributed by Mr. Abdul Halim Sharar, and Mr. V. N. Bhatkhande gave a short historical survey of Hindustani music, in which he dealt with all the chief Sanskrit *granthas* giving their approximate date and detailing what is known of their authors. Mr. Abdul Halim Sharar's paper demands more attention, as it throws light on an aspect of the question which has never been adequately treated. It is often lightey assumed that the soft *atikomal re ga* and *dha* of Indian music were introduced by the Mahomedans. We know from the works of Ptolemy that such tones were in use in ancient Greece. Did the Aryans who invaded India share this knowledge with the Greeks, or did the Arabs bring it into India? Mr. Abdul Halim Sharar's paper is useful as drawing attention to the fact that Arabian music assimilated a good deal from the music of surrounding nations, such as the Persians, Greeks and Egyptians. He relates the story of the slave, Said Ibn Musajah, who in

the seventh century obtained his freedom owing to the beauty of his voice, and after many wanderings in search of musical knowledge founded a school of singing. In the days of the Caliph Haroun-al-Rashid, Arabian music enriched from Greek, Persian and perhaps Hindu sources, resounded from Sind in the east to Spain in the west. Mr. Abdul Halim Sharar draws attention to the *Aghani*, a work on music by Abdul Faraj, of Ispahan, and points out that it is worth the while of Indian scholars to attempt to unravel its mysteries. Mr. Abdul Halim Sharar's paper is valuable in another way. Writers upon Indian music are prone to regard the Mahomedan conquest as a calamity. It seems possible to hold the other view, that it enriched Indian music and gave a trend to its future development.

DIVERSITY OF VIEWS.

To pass from history to science, one outstanding fact which emerges from the Conference is the extraordinary diversity of views entertained regarding the constitution of the Indian scales. This was so much in evidence that one could not hope for immediate practical results. The members who spoke on this subject could be divided into three distinct schools. The first might be termed the "Rule Britannia" School, as their contention, supported with great earnestness and eloquence and a wealth of vocal illustration, is that Indian music never shall be enslaved. They assert that Indian Music when properly sung is too fluid to be reduced to scales and written in notation. This school of thought has its roots deep down in the Indian mind, and has its adherents in the south as well as in the north. It regards the musical art, not as a definite section of the infinite, but as Infinity itself. The other more practical schools would reply that, however much you blur the outlines of your melody by *miud* and *ghasit* and other graces, the outline is still there and can be perceived. Similarly although the expert *binkar* regards his fixed frets chiefly as *points d'appui* for excursions in the realm of *miud* the frets are there and serve to give the hard outline of great number of *ragas*. Notational systems have their limits, but they perform a great service if they give the hard outline with as much detailed instruction as to grace as is humanly possible; the rest may be left to the taste of the performer. Moreover, no one would wish to teach the young to attempt to reproduce the Infinite. For them scales are a necessity and notation greatly to be desired.

When we come to close grips with the subject of intonation we are confronted with the necessity of ascertaining the scales of the *ragas*. Here we discover the antagonism subsisting between the *a priori* school, who wish to derive all their conclusions from Sanskrit books of the eighteenth century and earlier, and are reluctant to admit the test of modern science, and the experimental school, who base their conclusions upon actual measurement of intervals as sung nowadays, and seek for what corroboration there may be in the ancient *granthas*. The former school assume that the distinctions between *gramas* are no longer in existence, and speak of "the Indian scale" as though all Indian music was founded upon one scale. They do not seem to realise the importance of studying the functions of notes. For instance, in a very learned disquisition upon the Indian system of allotting different hours of the day to different types of melody, Mr. V. N. Bhatkhande pointed out that of the two well-known Hindustani *ragas*, *Bhupali* and *Deshkar* (founded on the scale C. D, E, G, A, C), the former takes *ga* (or E) as its "predominant" note, and the latter *dha* (or A). Now, there are two possible forms of *dha*, one a major tone above *pancham* or G, and the other a minor tone above that note. The former gives a bright cheerful impression when used as a kind of satellite or auxiliary to *pa* (G), but it is not in concord with fundamental note *sa* (C). The latter forms the sweet concord of the major sixth with *sa*. If *Deshkar*, as we believe, is a pleasing harmonious *raga*, then it must choose the latter note as its

"predominant" and not the former. Considerations such as these impel us to the conclusion that a detailed study of the *raga* and melodic construction of *ragas* is a necessary preliminary to the discussion of Indian intonation.

Mr. Bhatkhande's detailed descriptions of the *ragas* in his works will, no doubt, be of the greatest help to the investigator who wishes to convince the majority of experts that the Indian scales are and must necessarily be many and varied. The working members of the Pilharmonic Society of Western India (Deval, Clements, G. S. Khare, N. V. Chatre and others) have for some time past been engaged in this kind of enquiry with the aid of the best practical tests they can command. Their methods may in course of time, be superseded by others more accurate, for towards the end of the Conference, Mr. P. B. Joshi, a Professor of Science from Ajmere, outlined an electrical method for ascertaining the intervals used by musicians. This method will require a preliminary study of the sympathetic vibration of strings to ascertain the margin of error at different distances from the singer. The principle adopted is to arrange a wire so that when set in vibration sympathetically by the singer's voice it will complete an electrical circuit and so ring a bell. Such a wire when placed close to the singer will vibrate to a great range of notes; as it is placed further and further away, the range will diminish until it is so small as to be negligible. For the sake of illustration let us take the *raga* above mentioned—*Deshkar*. Having attuned the wire to the harmonic sixth we test the *dha* of the singer by placing the instrument at the appropriate distance. We cannot expect a singer to get his note absolutely correct every time; we therefore, allow a small margin of error, let us say, $\frac{1}{1200}$th part of an octave. Let us imagine that during a performance of *raga Deshkar* the bell rings over and over again. Then let us set the instrument to the high (or Pythagorean) *dha*. The bell does not ring once. Such a test would, we think, be conclusive as to the nature of the interval employed. There is a further point to be emphasised. We find that, like the performers of the west, some Indian singers, and more especially the least intelligent ones, have a tendency to "sharpen their sharps and flatten their flats." By this we mean that anything in the shape of a leading note leading upwards as *tivra ni* to *sa*, or downwards as *komal re* to *sa*, tends to get nearer to the note with which it is so intimately related. Thus in the *raga Bhairavi* some singers feel impelled to make *re komal* flatter than it should be, and in *raga Kalyan*, to make *ni tivra* sharper than it should be.

This general account of the proceedings would be incomplete without a special mention of Rao Sahib Abraham Pandither, of Tanjore, and his accomplished family. They make part singing in the European style and Karnatic music their special study, and seek to bring them both under the same rules. Mr. Abraham Pandither rejects the ancient theories of the *Sangit Ratnakar* and Bharata's *Natya Shastra*, and pins his faith to equal temperament. He has constructed a *vina* which divides the octave into forty-eight exactly equal parts, and written an elaborate mathematical work on Indian music. It seems to us that he does not understand the *raison d' etre* of temperament and its justification. Temperament is necessitated by a system of transposition scales and is intended as the nearest practicable approximation to just concord. It is justified by harmony in the modern sense, and by that alone. Indian music has no transposition scales, and therefore has not the same need for an equal division of the octave. It is not an harmonic system, and therefore, has nothing wherewith to cover up the defects of tempered intervals. It requires the real thing in the way of concord, and has no need to put up with an inferior substitute. No Indian musician ever dreamt of tuning *sa* and *pa* by a tempered fifth or singing other consonant intervals purposely a little out of tune.

The majority of the Conference recorded their opinion that twelve notes to the octave were sufficient for the commoner Indian scales. In view of the fact that many of them favoured the tempered scale, and many others the Pythagorean, which to those who know it seems utterly

unsuited to form the foundation of any system of music, whether based on pure melody or on the use of chords, this opinion can carry very little weight. There was considerable discussion as to the scale used in *kafi*, some contending that the *ga* and *ni* were those of *Bhairavi*, while others contended that they were lower notes. It appeared that the higher notes were favoured by the Karnatic singers and by Jakroddin Khan, and that they we are used by *binkars*. treat the *kafi* scale as the same as the old *Shadj grama*. Mushraf Khan *binkar* supports me in asserting that the *Sangit Ratnakar* is based upon *Thaivat* tuning and that the *shuddh* scale in *Thaivat* tuning is that of *kafi*. Even if the majority nowadays favour different intervals for this *raga*, the subject is not exhausted as there are many other *ragas* of *kafi* type which undoubtedly begin with a minor tone and take the low *ga* and *ni*. Perhaps, it would be more accurate to take *Bhimpalas* as the modern representative of the *shuddh* scale of the *Sangit Ratnakar*.

PAPERS READ.

The following is a list of papers read :—

Those bearing principally on intonation.

Mr. E. Clements, I.C.S. —The Intonation of Indian Music.

Rao Saheb K. B. Deval.—The Theory of Indian Music as Expounded by Somnath.

Mr. D. K. Joshi.—A Disquisition on the Srutis and Svaras of Indian Music.

Mr. S. N. Karnad.—The Renaissance in Hindustani Music.

Mr. Mangeshrao Telang.—The Development of North India Music.

Rao Saheb N. V. Chhatre.—Sound and Musical Notes.

Mr. G. S. Khare.—"Sarana Chatushtaya."

Rao Sahib Abraham Pandither.—An Article on Srutis.

Rao Saheb N. B. Divatia.—The Missing Sruti and Connected Questions.

Mr. P. R. Bhagavater.—Some Aspects of the difference between Hindustani and Karnatic Music.

Mr. T. A. Ramakrishna Iyer.—The Gamut System of East and West.

Those bearing on notation.—

Mrs. Maragathavalliammal.—Notation in Indian Music.

Mr. V. D. Paluskar.—The Notation System.

Mr. E. Clements.—The Staff Notation adapted to Indian Music.

Historical papers :—

Mr. V. N. Bhatkhande—A Short Historical Survey of Hindustani Music.

Mr. Abdul Halim Sharar.—The Persian influence on the Music of Hindusthan.

Miscellaneous.—

Ateyabegum Fyzee Rahimin.—The present condition of Indian Music and a proposal for the founding of an Academy.

Mr. K. B. Divatia.—Indian Music, its place and functions in the Fine Arts.

Mr. Hari Nagabhushanam.—The Place of Music in Human Culture and Appreciation.

Mr. H. P. Krishna Rao.—The psycho-physiological aspect of Music.

Mr. J. Nelson Fraser.—The Teaching of Music in Schools.

On the last day of the Conference a Standing Committee was appointed; (a) to devise a suitable notation for the whole of India; (b) to fix the Hindustani system of ragas; (c) to obtain with the help of the Durbars copies of MSS. works on music. The Conference also resolved that a Musical Magazine and a Musical Academy were objects to be desired.

8

மதிராஸ் மேயில் 30 மார்ச்சு 1916.

ஆல்-இந்திய சங்கீத கான்பரென்சானது துவங்கி முடிவடைந்தது அதனால் என்ன பலன் அடைந்தோம் என்பதைப்பற்றி பல அபிப்பிராயங்கள் இருந்தபோதிலும், அதைக் கூட்டிவைத்த மகாராஜா கைக்வார் அவர்களின் ஞானத்தைப்பற்றி ஒரு அபிப்பிராயந்தான் உண்டு. கான்பரென்சின் நோக்கங்கள் எவையென்று முதல் நாள் நடந்த விஷயங்களில் எடுத்துச் சொல்லப்பட்டது. இந்திய சங்கீதத்தை ஒரு முறைக்குக் கொண்டுவரவும், அதைப்பள்ளிக்கூடங்களில் சொல்லிக்கொடுக்கவும் எழுதிவைக்கவும் மற்றவர் அறிந்துகொள்ளவும் ஏதுவான ஒரு சுர முறையையும் உண்டாக்கவேண்டும் என்பதுதான் நோக்கம்.

பிரதினமும் சாயங்திரங்களில் லக்ஷ்மிவிலாஸ் அரண்மனையில் அதிரமணியமான சங்கீதத்தை யாவரும் கேட்டு ஆனந்திக்கும்படி மகாராஜா அவர்கள் ஏழுங்கு செய்திருந்ததுமல்லாமல் அந்த சங்கீத மாலையும் சங்கீதத்துக்குப் பொருந்தியிருக்கும்படி அலங்கரித்து வைத்திருந்தார்கள். கான்பரென்சில் வந்திருந்த யாவரும், மனித சாரீரம் எந்தெந்த விதமான கமகம் ரவை ஜார்தி உருட்டல் முதலியவற்றைச் செய்யமுடியுமோ அவ்வளவையும், பிங்கார் என்ற வாத்தியத்தை வாசித்த ஒருவர் தந்தியின் ஒரே மீட்டில் எவ்வளவு அழகான இராகங்களை வாசித்துக் காட்டமுடியுமோ அவ்வளவையும் காட்டினதை லேசில் மறக்கமாட்டார்கள். அவர் வாசித்தபோது வீணையின் மெட்டுகளை சிறு ஆதாரங்களாகமாத்திரம் வைத்துக்கொண்டு வலதுகையின் ஒவ்வொரு மீட்டுக்கும் தந்தியைப் பல அளவுகளாக இழுத்து அதிக நுட்பமான சிறு சுரங்களை வாசித்ததானது அதிசயிக்கப் படத்தக்கதாயிருந்தது. மகா ராஜா அவர்களின் முயற்சியினால் உதையப்பூர், ஆல்வார், ஜெய்ப்பூர், பாவநகர், இந்தூர், கோலாப்பூர் தாங்க், குவாலியர், ராமபூர், ஐதராபாத்.பிக்கனீர், மைசூர் முதலிய சமஸ்தானங்களில் உள்ள பேர்போன வித்வான்களும் ஆஜராயிருந்தார்கள். பிரபல இந்துஸ்தானி வித்வான்கள் யாரென்றால், உதையப்பூர் சக்ருடின் சாயப்; ஆல்வார் இம்தாத்கான் ; பரோடா பியாஸ்மகமது, தசதக் உசேன், ஹாலுதின்; ஜெய்ப்பூர் அப்பாஸ்கான்; கடைசியாகச்சொன்னபோதிலும் இவர்கள் எல்லாரைப்போலவும் சிறந்த பிங்கார் வித்வானாகிய ஆல்வார் முஸாபர் கான் முதலியவர்கள். கர்நாடக சங்கீத வித்வான்களும் அநேகர் வந்திருந்தார்கள்.

கான்பரென்சில் முக்கியமாய் இந்த சங்கீத சரித்திரத்தைப்பற்றியும் சுருதிகளைப்பற்றியும் வியாசங்கள் படிக்கப்பட்டன. முதல் விஷயத்தைப்பற்றி அப்தல் ஆலிம் ஷாரார் என்பவர் அதிக அருமையான வியாசம் வாசித்தார். Mr. V. N. பாத்கண்டே என்பவர் இந்துஸ்தானி சங்கீதத்தின் சரித்திரத்தைப்பற்றிச் சொன்னதில் முக்கியமான சமஸ்கிருத நூல் ஆதாரங்களையும் அவைகளின் காலத்தையும் அந்த கிரந்த கர்த்தாக்களைப்பற்றிய விஷயங்களையும் எடுத்துப்பேசினார். Mr. அப்தல் ஆலிம் ஷாரார் என்பவருடைய வியாசமானது மிகவும் கவனிக்கப்படத்தக்கது. ஏனென்றால் இது வரையும் ஒருவரும் எடுத்துச்சொல்லாத ஒரு விஷயத்தைப்பற்றி அவர் பேசினார். இந்திய சங்கீதத்தில் வழங்கும் அதிகோமள ரி, க, த என்னும் சுரங்கள் மகம்மதியரிடமிருந்து வாங்கினது என்ற சாதாரணமாகச் சொல்லப்படுகிறது. Ptolemy என்பவர் எழுதிய நூல்களிலிருந்து இந்த சுரங்கள் ஆதி கிரேக்கருக்குள் வழக்கத்திலிருந்ததாக அறிகிறோம். இந்தியாவின்மேல் படையெடுத்துவந்த ஆரியரும் கிரேக்கரைப்போல் இதை அறிந்திருந்தார்களா? அல்லது அரபியரால் அது இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டதா என்பது ஒரு கேள்வி. Mr. சாரர் என்பவரின் வியாசத்தில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது என்னவென்றால் அரபிய சங்கீதமானது அவர்கள் பக்கத்திலுள்ள பார்சிகர், கிரேக்கர் எகிப்தியர் முதலியவர்களுடைய சங்கீதத்தினின்று அநேக காரியங்களைக் கிரகித்துத் தெரிந்துகொண்டது என்பதுதான். ஒரு அடிமை Said Ibu Musajah ஏழாம் நூற்றாண்டில் அழகான சாரீரத்தை யுடையவராயிருந்ததால் சுவாதினத்தைப் பெற்று அநேக காலம் பல இடங்களிலும் சங்கீத ஆராய்ச்சிக்காக அலைந்து திரிந்து கடைசியில் சங்கீத சாலையொன்று ஏற்படுத்தினதாக அவர் சொல்லுகிறார். Caliph Haroun-al- Raschid என்பவர் காலத்தில் அரபிய சங்கீதமானது, கிரேக்க, பார்சிக, இந்திய சங்கீதங்களால் தேர்ச்சியடைந்து, கிழக்கே இந்து முதல் மேற்கே ஸ்பானியாதேசம் வரையில் வெகு பிரபலமாயிருந்தது. Mr. Sharan என்பவர் இஸ்பகானில் உள்ள அப்தல் பராஜ் என்பவரால் எழுதப்பட்ட Aghani என்ற சங்கீத நூலைப்பற்றிப் பேசும்போது, இந்திய வித்வான்கள் அந்த நூலின் இரகசியத்தை ஆராய்வார்களானால் அதிக பிரயோஜனமா

யிருக்கும் என்கிறார். இன்னொரு விஷயமாயும் இந்த வியாஸம் கவனிக்கப்படத்தக்கது. அதென்னவென்றால், இந்திய சங்கீதத்தைப்பற்றி எழுதுகிறவர்கள் அந்த சங்கீதமானது மகமதியர் இந்தியாவுக்கு வந்ததினால் சீர் குலைந்து போயிற்று என்று சொல்லுவது வழக்கம். ஆனால் இவர் சொல்வதைக் கவனித்தால் இந்திய சங்கீதம் இதனால் தேர்ச்சியடைந்து முன்னுக்கு வருவதற்குக் காரணமாயிருந்ததென்றே நிர்மானிக்கலாம்.

பலவிதமான அபிப்பிராயங்கள்.

சரித்திரத்தை நிறுத்தி சாஸ்திரத்தைச் சொல்ல முயலும்போது முக்கியமாய்க் கவனிக்கப்படத்தக்கது என்னவென்றால் இந்திய சங்கீத ஆரோகண அவரோகணங்களைப்பற்றிக் கான்பரென்சில் ஏற்பட்ட ஆச்சரியமான பலவித அபிப்பிராயங்கள் தான். அபிப்பிரர்ய பேதம் இவ்வளவு அதிகமாய் இருந்ததால் இதினால் தற்காலத்தில் யாதாமொருபிரயோசனம் இருக்கும் என்று தெரியவில்லை. இதைப்பற்றிப்பேசினவர்களை மூன்று வகுப்பாக்கலாம். முதல் வகுப்பாரை "Rule Britannia" வகுப்பென்று சொல்லலாம். இந்த கீதத்தில் "பிரிட்டிஷ்காரர் ஒரு காலத்திலும் அடிமைப்படமாட்டார்கள்" என்று சொல்லியிருப்பதுபோலத் தங்கள் சங்கீதமும் ஒருக்காலும் மற்றவருக்கு அடிமையாகமாட்டது என்று வெகு ஆத்திரத்தோடும் வைராக்கியத்தோடும் வாய்ப்பாட்டினாலும் எடுத்துக் காண்பித்தார்கள். இந்திய சங்கீதத்தைச் சரிவரப் பாடினால் அது ஆரோகண அவரோகணங்களுக்காவது சுரப்படுத்துவதற்காவது அடங்காது அது அவ்வளவு மெல்லிதான தன்மையுடையது. பெரும் பாலான இந்தியர் இந்தக் கொள்கையை மனதில் ஸ்திரமாய்க் கொண்டவர்களாய் இருப்பதால் வடதேசத்திலும் தென்தேசத்திலும் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் அனந்தம் பேர். இவர்கள் சங்கீதத்தை தெய்வத்தின் ஓர் அம்சம் என்று மாத்திரம் கொள்ளாமல் அதைத் தெய்வமென்றே நினைக்கிறார்கள். மற்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், ஒரு இராகத்தின் ஆரோகண அவரோகணத்தைக் கமகம் முதலிய அழகுகளினால் எவ்வளவு தூரம் வித்தியாசப்படும்படி செய்தபோதிலும் ஆரோகணம் அவரோகணம் தனியே வேறுயிருக்கிறதுமல்லாமல் அது யாவருக்கும் நன்றாயும் புலப்படுகிறது என்கிறார்கள். அதுபோலவே வீணை வாத்தியம் வாசிக்கும் ஒருவன் வீணையின் மெட்டுகள் ஸ்தாபகமான இடங்களென்றும் அவைகளிலிருந்து அவன் முன்னும் பின்னுமாக எத்தனை விதமான கமகங்கள் வாசித்தபோதிலும் மெட்டுகளின் ஸ்தானமானது அநேக இராகங்களின் ஆரோகண அவரோகணத்தைக் குறிக்கிற எல்லைக் கற்கள்போல் இருக்கின்றன என்று அவன் அறிகிறான். சுரங்களைக் குறித்துக்கொள்ளும் முறை முற்றிலும் அதிக பிரயோசனமில்லாவிட்டாலும் சுரங்களின் ஸ்தானத்தையும் அழகான விதமாய் மனிதர் அதை வாசிப்பதற்கேற்ற அடையாளங்களையும் அது ஸ்திரமாய்க் காண்பிக்குமானால் அதுவே போதும். மற்றதெல்லாம் வாசிக்கிறவனுடைய திறமையிலும் அழகிலும் இருக்கிறது. மேலும், தெய்வ சொரூபத்தையே சங்கீத மூலமாய் எடுத்துக் காட்டும்படி ஒருவரும் சிறுவருக்குக் கற்பிக்க விரும்பமாட்டார்கள். அப்பேர்ப்பட்ட ஸ்கேல்களும் சுர முறையும் கட்டாயம் அவசியம்.

Intonation என்ற விஷயத்தைப்பற்றிப் பேசும்போது கட்டாயம் இராகங்களின் ஆரோகண அவரோகணங்களைப்பற்றிப் பேசுவது அவசியமாயிருக்கிறது. இங்கே இரண்டு வகுப்பாருக்கு ஏற்படும் வாக்குவாதத்தைக் கவனிக்கலாம். அவைகளில் ஒரு வகுப்பார் (A priori School) 18-ம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னும் உள்ள சமஸ்கிருத நூல்களைத் தங்களுக்கு ஆதாரமாக அவைகளை ஒத்துப்பார்க்கப் பிரியமில்லாதவர்களாயிருக்கிறார்கள். மற்ற வகுப்பார் (Experimental School) தற்காலம் பாடப்படும் சுர ஸ்தான இடைவெளிகளைக் கணக்கினால் அளந்து பரிசோதித்துப் பார்ப்பதுமல்லாமல் இவைகளுக்கு ஆதி கிரந்தங்களில் ஏதாவது ருசுவுண்டா என்று அறியவும் பிரயாசப்படுகிறார்கள். முந்தின வகுப்பார் ஆதியில் கிராமங்களுக்கு ஏற்பட்ட வித்தியாசம் இப்போது கிடையாதென்றும், எல்லா இந்திய சங்கீதமும் ஒரே ஸ்கேலிலிருந்து உண்டானதுபோல் "இந்திய ஸ்கேல்" என்று ஒன்று இருப்பதுபோல் சொல்லுகிறார்கள். சுரங்களின் முக்கிய வேலையை அவர்கள் கவனியாதபடியால் அப்படிப் பேசுகிறார்கள். உதாரணமாக, பல நேரங்களுக்கும் காலங்களுக்கும் தகுந்தபடி இந்திய இராகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லவந்தவிடத்தில், Mr. பாத்கண்டே என்பவர் வெகு கல்வித் திறமையோடு சொன்ன வியாசத்தில் பூபாளம், தேஷ்கார் என்ற இரண்டு இந்துஸ்தானி இராகங்களிலும் (ச, ரி, க, ப, த, ச) முந்தினதில் காந்தாரமும் (E) பிந்தினதில் தைவதமும் (A) ஜீவ சுரங்களாக வருவதாகச் சொன்னார். இப்போது இரண்டு தைவதங்கள் இருப்பது எல்லாருக்கும் தெரிந்த

விஷயம். பஞ்சமத்துக்கு மேல் முழுடோன் உள்ள தைவதம் ஒன்று, அரைடோன் உள்ள தைவதம் ஒன்று. முந்தின தைவதமானது பஞ்சமத்தை ஒட்டிப் பாடப்படும்போது சந்தோஷத்தைக் காட்டக்கூடிய அழகுள்ள தாயிருக்கிறது. ஆனால் அந்த சுரத்துக்கும் ஆதார சட்ஜத்திற்கும் பொருத்தமில்லை. ஆனால் பிந்தினதோ ஆதார சட்ஜத்தோடு அழகாய்ப் பொருந்தின சுரம். இப்போது தேஷ்காரி இராகம் அழகாய்ப் பொருந்தினதாய்ப் பாடப்படவேண்டுமானால் பிந்தின தைவதத்தை ஜீவ சுரமாக உபயோகிக்கவேண்டும். இதனால் இராகங்களின் சுரங்களை நன்றாய் ஆராய்ந்தறியவேண்டும் என்றும் இராகங்களைப் படிப்பதற்கு முன் அவற்றின் சுருதிகளை நிச்சயப் படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் விளங்குகிறதல்லவா ?

இந்திய ஸ்கேல்கள் அனந்தம் என்றும் அவைகள் அப்படித்தான் இருப்பது அவசியம் என்றும் வித்வான்களுக்கு எடுத்துக்காட்ட முயலும் ஒருவனுக்கு Mr. பாத்கண்டேயவர்களின் புஸ்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் இராக விஸ்தாரம் அதிக பிரயோஜனமாயிருக்கும். Western India Philharmonic Society யைச் சேர்ந்த மெம்பர்களாகிய தேவால், கிளமண்ட்ஸ், G. S. கேரி, N. V. சத்ரேயும் மற்றவர்களும் சில காலமாய் இந்தவித ஆராய்ச்சியில் வேலை செய்து வருகிறார்கள். அவர்களுடைய முறைகள் நாளாவிர்த்தியில் அவைகளைவிடத் திறமான மற்ற முறைகள் ஏற்படும்போது அதிக பிரயோசன மற்றவைகளாய் விடலாம். உதாரணமாக, கான்பரென்சின் கடைசியில் ஆஜ்மீர் நகரிலுள்ள Science Professor ஆகிய Mr. P. B. Joshi என்பவர் சங்கீதத்தில் வரும் சுரங்களின் இடைவெளிகளைக் கண்டுபிடிப்பதற்கு எப்படி மின்சாரத்தை உபயோகிக்கலாம் என்பதைப்பற்றிச் சொன்னார். இந்த முறையை அறியவேண்டுமானால் பாடுகிறவனுக்கும் தந்திக்கும் உள்ள தூரத்திற்குத் தகுந்த விதமாய் அதில் காணப்படும் பிசகு இருக்கும் என்பதை ஸ்தாபிப்பதற்குத் தந்திகள் ஒன்றோடொன்று சேர்ந்து ஒலிக்கும் பிரமாணத்தை அறிவது அவசியம். அந்த முறை என்னவென்றால் ஒரு தந்தியை எடுத்துக்கொள்ளுகிறது. ஒருவன் பாடும்போது அவனுடைய சத்தம் அந்தத் தந்தியின் மேல் பட்டு அது ஒலிக்குமானால் அந்த ஒலியானது ஒரு முறை மின்சாரசக்தியினால் சுற்றி வந்து ஒரு மணியை சப்திக்கச் செய்யும். அந்தத் தந்தியானது பாடுபவன் சமீபத்தில் இருக்கும்போது அநேக ஸ்தாயி சுரங்களைச் சப்திக்கச் செய்யும். ஆனால் அந்தத் தந்தியை தூரக்கொண்டு போகப் போக சுரங்கள் ஒவ்வொன்றாய்க் குறைந்து கடைசியில் ஒன்றுமில்லாமல் போகும். இதற்கு உதாரணமாக, முன் சொன்ன தேஷ்காரி இராகத்தை எடுத்துக்கொள்ளோம். வீணையின் தந்தியும் அதனுடன் பொருந்தும் ஆறுவது சுரமாகிய கீழ் தைவதமும் பொருந்தும்படி சுருதி சேர்த்து இந்த மின்சாரக் கருவியைப்பாடுகிறவனுக்குச் சரியான தூரத்தில் வைப்போம். பாடுகிறவன் ஒவ்வொரு தரமும் சரியான சுரத்தைப் பாடுவது கூடாத காரியம். ஆகையால் ஒரு ஸ்தாயியில் $\frac{1}{1200}$ பங்கு அவன் பிசகாய்ச் சுரம் சொல்லுவான் என்று வைத்துக் கொள்வோம். இப்போது தேஷ்காரி இராகம் பாடும்போது அந்த மணியானது அடிக்கடி சப்திக்கிறது என்று நினைத்துக் கொள்வோம். இப்போது கீழ்தைவதத்துக்குப் பதிலாய் மேல் தைவதம் அல்லது Pythagoras இன் தைவதத்தைச் சுருதி சேர்த்துக்கொள்வோம். இப்போது மணியானது ஒருதரம் கூட அடிக்கிறதில்லை. இப்படிச் சோதிப்பதில் சரியான இடைவெளி நமக்கு அகப்படும் என்பதில் சந்தேகமேயில்லை. இன்னொரு காரியமும் நான் முக்கியமாய் எடுத்துச் சொல்லவேண்டும். அதென்ன வென்றால் மேற்றிசை சங்கீத வித்வான்களைப்போலச்சில கீழ்த்திறமான இந்திய சங்கீத வித்வான்களும் தீவிர சுரங்களை அதி தீவிரமாகவும் கோமள சுரங்களை அதி கோமளமாகவும் பாடுவது வழக்கம். எப்படி யென்றால் நி யிலிருந்து ச வுக்கு மேல் போகையில் நீ யைத் தீவிரமாகவும் ரி யிலிருந்து ச வுக்குக் கீழே வரும்போது ரி யைக் கோமளமாகவும் செய்கிறார்கள். உதாரணமாக பைரவி இராகத்தில் வரும் கோமள ரிஷபத்தைக் கொஞ்சம் குறைத்தும், கலியாணி இராகத்தில் வரும் நிஷாதத்தைக் கொஞ்சம் கூட்டியுமே சொல்லுகிறார்கள்.

கான்பரென்சின் விசேஷங்களைச் சொல்லும் நான் தஞ்சை ஆபிரகாம் பண்டிதரவர்களைப் பற்றியும் அவர்களுடைய கல்வியிற்சிறந்த குமாரத்திகளைப்பற்றியும் விசேஷமாய்ச்சொல்லாமல்விடுதல் குற்றமாகும். ஐரோப்பிய சங்கீதம் பாடுவதையும் கர்நாடக சங்கீதம் பாடுவதையும் அவர்கள் விசேஷமாய் விர்த்திசெய்திருப்பதால் இரண்டையும் ஒரே முறைக்குக் கொண்டுவரும்படி பிரயாசப்படுகிறார்கள். பண்டிதரவர்கள் சங்கீத ரத்னாகரர் பரதர் முதலியவர்களுடைய ஆதிக் கொள்கைகளைத்தள்ளி Equal Temperament முறையின் மேல் அதிக நம்பிக்கை வைக்கிறார்கள். ஸ்தாயியை 48 சரிபாகமாய்ப் பிரித்துக்காட்டிய ஒரு வீணையைத் தயார் செய்திருக்கிறது

மல்லாமல் இந்திய சங்கீதத்தைப்பற்றி அதிக துட்பமான கணக்குகளும் செய்திருக்கிறார்கள். Equal Temperament முறை உண்டான காரணமும் அதன் பிரயோசனமும் இன்னதென்று பண்டிதரவர்கள் அறியாமலிருக்கிறார்கள். ஒரு Keyல் இருந்து மற்றொரு Keyக்குத் தாராளமாய்ப் போகும்படிக்கு அந்த முறை உண்டாக்கப்பட்டதென்றும் அந்த முறையானது சரிப்பொருத்த முறைக்கு அநேகமாய்ச் சரியாய் வைக்கப் பட்டிருக்கிறதென்றும் அவர்களுக்குத் தெரியாது போலும். Harmonyக்காகவே இந்த முறை உண்டுபண்ணப் பட்டது. வேறெந்தக்காரணத்திற்காகவுமல்ல. இந்திய சங்கீதத்தில் ஒரு ஸ்கேலிலிருந்து மற்றொரு ஸ்கே லுக்குப் போகிற வழக்கமில்லாத படியால் ஸ்தாயியை சமபாகங்களாகப் பிரிக்கவேண்டிய அவசியமில்லை. இந்திய சங்கீதம் Harmony முறையில் உண்டாக்கப்படவில்லையாகையால் tempered scale ல் உள்ள குறைகளை அது நிவிர்த்தி செய்யவேண்டிய அவசியமில்லையே. சரிபொருத்தமான சுரங்கள் அதற்கு அவசியமே யொழிய கேவலம் Tempered scale அதற்கு அவசியமில்லை. எந்த இந்திய சங்கீதக்காரனாவது ச வையும் ப வையும் சுருதி சேர்க்கும் போது அதைச் சற்றுக் குறைத்து வைத்துக் கொள்ளவாவது, பொருத்த சுரங்களை வேணு மென்று குறைத்துப்பாடவாவது செய்கிறதில்லையே.

கான்பரென்சின் மிச்சமான மெம்பர்கள் சாதாரணமாய் வழங்கும் இந்திய ஸ்கேல்களுக்கு ஸ்தாயி யின் 12 சுரங்களுமே போதுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். அநேகர் Tempered scaleஐயும் இன்னும் சிலர் Pythagoras இன் ஸ்கேலையும் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் சங்கீதம் தெரிந்தவர்களுக்கு இந்த முறை கொஞ்சமாவது பிரயோசனப்படாது என்றும், melody க்காவது harmony க்காவது அதில் பிரயோ சனமில்லையென்றும் தெரிந்திருக்கிறபடியால் அப்படிச் சொன்னவர்களின் வார்த்தைகளில் அதிக பிரயோசன மில்லையென்றே சொல்லலாம். காப்பி இராகத்தில் வரும் சுரங்களைப்பற்றிச் சிலர் அதில் வரும் காந்தார நிஷா தங்கள் பைரவியில் வரும் சுரங்கள் என்று வாதித்தார்கள். மற்றவர்கள் அவைகள் குறைந்து வரவேண்டியதென்று சொன்னார்கள். கூடுதலான காந்தார நிஷாதங்கள் சரியென்று கர்நாடக வித்வான்களும் சாக்ருஹ் சாயபும் வீணை வித்வான்களும் வாதித்தார்கள். ஆனால் காப்பி ராகமும் பழைய சட்ஜ கிராமமும் ஒன்று என்பதே என் கொள்கை. சங்கீத ரத்னகரமே தைவதத்தைச் சுருதி சேர்ப்பதில் அடங்கியிருக்கிறதென்றும், அதைச் சுருதி சேர்ப்பதில் சுத்த ஆரோகண அவரோகணத்தை உபயோகித்தால் அது காப்பி ராகமாகும் என்றும் நான் சொல்வது மாத்திரமல்ல Mushraf Khan என்னும் binkar வித்வானும் நான் சொல்வது சரியென்கிறார். இந்த இராகத்தின் சுரங்களைப்பற்றிப் பெரும் பான்மையோர் பல அபிப்பிராயங்களுள்ளவர்களாயிருந்தபோதிலும் காப்பியைப்போன்ற அநேக இராகங்கள் குறைந்த காந்தார நிஷாதங்களில் வருவதால் இந்த விஷயம் இன்னும் சரியாய்த் தீர்மானமான முடிவுக்கு வரவில்லையென்றே சொல்லலாம். சங்கீத ரத்னகரர் சொல்லும் சுத்த scale க்கு பீம்பர்லாஸ் என்னும் தற்கால இராகத்தை ஒரு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாமென்று சொல் வது சரியாயிருக்கும்.

வாசிக்கப்பட்ட வியாசங்கள்
முக்கியமாய் சுருதி சுரங்களைப்பற்றி

Mr. கிளமண்ட்ஸ் I.C.S.:— இந்திய சங்கீத சுரங்கள் உண்டாவதைப்பற்றி.

Rao Sahib K. B. தேவால்:— இந்திய சங்கீத சாஸ்திரம் சோமனுத் என்பவரால் எப்படி விஸ்த ரிக்கப் பட்டிருக்கிறது என்பதைப்பற்றி.

Mr. D. K. ஜோஷி:— இந்திய சங்கீத சுரம் சுருதிகளைப்பற்றி.

Mr. S. N. கர்நாட்:— இந்துஸ்தானி சங்கீதம் திரும்ப எப்படி உயிர் பெற்றது என்பதைப்பற்றி.

Mr. மங்கேஷராவ் திலாங்:— வடஇந்திய சங்கீதம் தேர்ச்சியடைந்தது எப்படி என்பதைப்பற்றி.

Rao Sahib V. N. சத்ரே:— நாதங்களும் சங்கீதசுரங்களும் என்பதைப்பற்றி

Mr. G. S. கோர்:— "சாரண சதுஷ்டயம்" என்பதைப்பற்றி.

Rao Sahib ஆபிரகாம் பண்டிதர்:— சுருதிகளைப்பற்றி.

Rao Sahib N. B. திவாத்யா:— காணமற்போன சுருதியும் அதைச்சேர்ந்த விஷயங்களும் என்பதைப்பற்றி.

Mr. P. R. பாகவதர்:— இந்துஸ்தானி சங்கீதத்திற்கும் கர்நாடக சங்கீதத்திற்குமுள்ள சில வித்தியாசங்களைப்பற்றி.

Mr. T. A. இராமகிருஷ்ணையர்:— மேற்றிசை கீழ்த்திசை சங்கீதங்களின் ஆரோகண அவரோகணங்கள்.

சுரப்படுத்தும் விஷயத்தைப்பற்றி

Mrs. மரகதவல்லியம்மாள்:— இந்திய சங்கீதமும் Staff notation உம் என்பதைப்பற்றி.

Mr. V. D. பலுங்கார்:— சுரப்படுத்தும் விஷயத்தைப்பற்றி.

Mr. E. இளமண்ட்ஸ்:— Staff notation ஐ இந்தியசங்கீதத்திற்கு எப்படி உபயோகப்படுத்தலாம் என்பதைப்பற்றி.

சரித்திர விஷயங்களைப் பற்றி.

Mr. V. N. பாத்கண்டே:— இந்துஸ்தானி சங்கீத சரித்திரச் சுருக்கத்தைப் பற்றி.

Mr. அப்தல் அலிம் ஷாரார்:— இந்துஸ்தானத்தின் சங்கீதம் பாரசீக சங்கீதத்தால் எப்படி உருமாறியது என்பதைப்பற்றி.

பொது விஷயங்களைப் பற்றி.

அத்திய பீகம் பைஸ்ரஹிமின்:— இந்திய சங்கீதத்தின் தற்கால நிலைமையைப்பற்றியும் சங்கீத கலாசாலை ஒன்று ஸ்தாபிக்க வேண்டும் என்பதைப்பற்றியும்.

Mr. K. B. திவாத்யா:— இந்திய சங்கீதம் முக்கிய சாஸ்திரங்களில் எவ்வளவு தூரம் பிரயோசனப்படுகிறது என்பதைப்பற்றி.

Mr. ஹரி நாகபூஷணமையர்:— மனிதரின் கல்வித்திறமையையும் நல்ல காரியங்களை ஒப்புக்கொள்ளும் சக்தியையும் உண்டாக்குவதில் சங்கீதம் எவ்வளவு தூரம் உதவி செய்யும் என்பதைப்பற்றி.

Mr. நெல்சன் பிரேசர்:— சங்கீதம் பள்ளிக்கூடங்களில் எப்படி சொல்லிக்கொடுக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி.

கான்பரென்சின் கடைசி தினத்தில் (1) இந்தியா முழுவதும் உதவக்கூடிய ஒரு சுர முறையை ஸ்தாபிக்கவும் (2) இந்துஸ்தானி இராக முறைகளை ஒழுங்கு படுத்தவும் (3) பல சமஸ்தானங்களின் உதவியைக் கொண்டு சங்கீத கைப்பிரதிகளை ஒன்று சேர்க்கவும் (4) சங்கீத Magazine ஒன்று சங்கீத Academy ஒன்று ஸ்தாபிக்கவும் ஒரு Standing Committee ஏற்படுத்தப்பட்டது.

ஒ

Madras Mail, 4th April, 1916.

Sir,—The account of the Baroda Music Conference given by the able Civil Servant, Mr. Clements, I. C. S. in your issue of the 30th March will be read with great interest by all lovers of Indian music. Mr. Clements has made a life study of Indian music and has written a work called "Introduction to the Study of Indian Music." So his words naturally carry great weight. In this account he makes special mention of the article on Srutis read by Rao Sahib M. Abraham Pandither, of Tanjore. He says there that he "rejects the ancient theories of the *Sanjit Ratnakar*, and Bharata's *Natya Shastra* and pins his faith to equal temperament." Here Mr. Clements seems to have slightly misunderstood Mr. Pandither's position. Students of English musical history know that the tempered scale of the western musicians was introducted as recently as the commencement of the nineteenth century for the purposes of harmony and modulation. But Mr. Pandither proves by quotations from Tamil literature, especially from Silappadikaram, that the division of the octave into 24 equal parts had existed among the

Tamilians from very ancient times. His position is that these 24 equal parts of an octave are the natural series and not an artifical one like the tempered scale of the westeners. Mr. Pandither also supports his statements by elaborate mathematical calculations.

Again, Mr. Clements says that "temperament is necessitated by a system of transposition scales," and that "Indian music has no transposition scales." This is an error. For there has been such a thing as singing *grahaswarams* or singing the same melody in different scales, among the ancients. Such *grahaswarams* are possible only if the octave consisted of equal intervals. Again, he says, "that no Indian musician ever dreamt of tuning *sa* and *pa* by a tempered fifth." But this is what every Indian musician is doing consciously or unconsciously every day, for the 12 *swaraams* of the *veena* correspond exactly to the 12 notes of the tempered scale on the piano.

Mr. Pandither does not at all prentend to copy the tempered scale of the west, which is only about a century old, but bases his theory upon the solid foundation of the standard literature of the ancient Tamil country which treats about the ancient South Indian music.

TANJORE. A. G. PICHAIMUTHU.

ஒ

மதராஸ் மெயில் 4 ஏப்பிரல் 1916.

ஐயா, பேர்போன சிவில் உத்தியோகஸ்தராகிய Clements துரையவர்கள் பரோடாவில் நடந்த சங்கீத கான்பரென்சைப்பற்றி மார்ச்சு மீ 30உ யில் இந்தப் பேப்பரில் எழுதியதானது இந்திய சங்கீதத்தில் பிரியப்பட்டயாவராலும் வெகு பிரியமாய் வாசிக்கப்பட்டிருக்கும். துரையவர்கள் வெகு வருஷங்களாய் இந்திய சங்கீத ஆராய்ச்சி செய்து, "Introduction to the study of Indian Music" என்ற ஒரு நூலையும் எழுதியிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு அதிக மதிப்புண்டு. அவர்கள் எழுதியதில் தஞ்சை ராவ் சாயப் ஆபிரகாம் பண்டிதரவர்களால் சுருதி விஷயமாய் வாசித்த வியாசத்தைப்பற்றிச் சொல்லுமிடத்தில் பண்டிதரவர்கள் ரத்னகரம் பரதம் முதலிய சங்கீத சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதைத் தள்ளிவிட்டு Equal Temperament முறையில் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறதாகச் சொல்லுகிறார். இந்த விடத்தில் பண்டிதரவர்கள் கொள்கை யின்னதென்று சரியாய் அறியவில்லைபோல் தோன்றுகிறது. மேற்றிசையாரின் Equal Temperament முறையானது போன நூற்றாண்டின் துவக்கத்தில் harmony ஒற்றுமைக்காகவும் ஒரு Key இல் இருந்து மற்ற அனுசுரமாய் வரும் ஸ்கேல்களுக்குச் சுலபமாய்ப் போகும்படியாகவும் ஏற்படுத்தப்பட்டதென்று இங்கிலீஷ் சங்கீத சரித்திரம் படித்த யாவருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் பண்டிதரவர்கள் ஒரு ஸ்தாயியை 24 சம பாகங்களாகப் பிரிக்கும் முறையானது தமிழ் மக்களிடம் ஆதிதொட்டு வழக்கத்தில் இருந்ததென்று சிலப்பதிகாரம் முதலிய பழமையான நூல்களின் மூலமாய் ஸ்தாபிக்கிறார்கள். மேலும் இந்த 24 சரிபாகமான சுர ஸ்தானங்களும் இங்கிலீஷ் சங்கீதம் சொல்வதுபோல் ஒரு காரணத்திற்கென்று நாமாய் வைத்துக்கொண்டதல்ல. இயற்கையிலேயே உள்ளது என்கிறார்கள். தான் சொல்வதை மிக நுட்பமான கணக்குகள் மூலமாயும் ஸ்தாபிக்கிறார்கள்.

மேலும், துரையவர்கள், "ஒரு ஸ்கேலிலிருந்து மற்றொரு ஸ்கேலுக்குப் போவதற்காகவே equal Temperament அவசியம். ஆனால் அந்த முறையானது இந்திய சங்கீதத்தில் இல்லையே" என்கிறார்கள். இது தப்பு. ஆதித் தமிழருக்குள் கிரக சுரம் பாடுதல் அல்லது சுரங்களைத் தள்ளிக்கொண்டு போகப் போக வெவ்வேறு இராகங்களைப் பிறப்பித்தல் என்ற முறை இருந்திருக்கிறது. சம இடைவெளிகள் இராவிட்டால் அப்படிக் கிரக சுரம் பாடுதல் கூடாததாகும்.

மேலும் அவர் ஒரு சங்கீத வித்வானுவது ச வையும் ப வையும் சுருதி சேர்க்கும்போது சற்றுக் குறைத்து வைக்கிற வழக்கமில்லையே என்கிறார். ஆனால் தெரிந்தோ தெரியாமலோ ஒவ்வொரு சங்கீத வித்வானும்செய்வது இதுவே. அதற்கு ரூபகாரமாக வீணையின் 12 சுரங்களையும் பியானுவின் 12 சுரங்களையும் ஒத்துப்பார்த்தால் அவைகள் அணுப்பிசகில்லாமல் ஒன்றுயிருக்கும்.

பண்டிதரவர்கள் மேற்திசையாரின் Tempered scale ஐப் பின்பற்றவேயில்லை. அது நூறு வருஷங்களுக்கு முன் உண்டானதுதான். ஆனல் தென்னிந்திய சங்கீதத்தைப் பற்றிச்சொல்லும் ஆதித் தமிழ் நூல்களின் ஸ்திரமான ஆதாரத்தைக் கொண்டு தன்னுடைய முறையை ஸ்தாபிக்கிறார்கள் என்று அறிய வேண்டும்.

A. G. பிச்சைமுத்து.

10

Christian Patriot 8th April 1916.

What strikes us most in this connection is the Gaekwar's catholicity, and breadth of view as exemplified by his generous invitation sent to the different delegates irrespective of creed, colour, wealth or social position. Among the Madras delegates are to be found Rao Sahib Abraham Pandither and his two accomplished daughters who have played their part so successfully that the Gaekwar and other experts have lavished their sincere laudation upon them. It is peculiarly interesting to note that the Pandither's daughters have sung well to the accompaniment of Veena as also true to the notation prescribed by the Pandither himself in his learned dissertation on Shrutis. In other words the father's musical precept has been keenly and scrupulously followed by the gifted daughters in their performance whose correctness has been vouched for by one of the most consummate musical experts present on the occasion.

A very noteworthy feature in the Pandither's lecture on Shrutis was the originality clearly displayed by him in the way of dividing the Shrutis into twenty four sub-divisions instead of twenty two according to the ancient Sanskrit musical science. From this it would appear that as other branches of science, musical science is also capable of improvement, and be it stated to the credit of the Pandither that he is one of the rare Indians given to enjoy the privilage of having a hand in thus improving upon Indian Musical Science.

This musical conference, besides being a memorable event associated with the name of the Gaekwar as testifying to his lively interest in the promotion of India's cause in every conceivable manner, will doubtless stand out for all time to come as an undying monument of human achievements in any art or science irrespective of clan, creed or colour provided the requisite ordeal is enthusiastically passed through. We as Indians should congratulate the Gaekwar on the success of the enterprise inasmuch as we believe that a new day has been made to dawn upon the musical regeneration of India, and we as Indian Christians should congratulate Rao Sahib Pandither who has already established a provincial reputation for his ayurvedic and agricultural enterprises, on his success in acquiring an all India fame through his and his daughter's musical erudition. True it is that the Pandither's daughters are proficient in Indian and European Music alike but it is equally true that it is their Indian Musical proficiency which must have helped in extorting the unequivocal admiration of all concerned. It therefore behoves the members of the Christian Community at large both male and female to take lessons from this unique event and to take to the study of Indian music with at least as much enthusiasm with which they learn European music, for we regard among other things, a good knowledge in Indian Music as of vital importance in the way of effectively presenting the Gospel message to music-loving India from prince on the charming throne to beggar in the smoky town.

A. P.,
Palamcottah.

10

கிறிஸ்தியன் பாற்றியட் 8 ஏப்பிரல் 1916.

இதுவிஷயமாய் முக்கியமாய் நமது மனதில் படுவது என்னவென்றால், கெய்க்வார் மகாராஜா அவர்கள், ஜாதி, மதம், ஐஸ்வரியம், வறுமை முதலிய யாதொரு வித்தியாசமும் பாராட்டாமல் தாராளமாய் ஒரு பொது நன்மையைக் கருதி யாவரையும் இந்தக் கான்பரென்சுக்கு வரும்படி அழைத்ததுதான். சென்னை இராஜதானியினின்று அங்குப் போனவர்களில் முக்கியமாக ராவ்சாயப் ஆபிரகாம் பண்டிதரவர்களும், பலகலைகளிலும் சிறந்து விளங்கும் அவர்களுடைய குமாரத்திகளும் மகாராஜாவுக்கும் மற்றவர்களுக்கும் முன்பாகப் பெரும் பேரெடுத்ததுமல்லாமல் எல்லாராலேயும் வெகு விசேஷமாகவும் கொண்டாடப்பட்டது தகுதியே. பண்டிதரவர்கள் குமாரத்திகள் வீணையுடன் வெகு ரம்மியமாகப் பாடினதுமாத்திரமல்ல, சுருதி விசாரணையில் தங்கள் தகப்பனாரால் அதிக நுட்பமாய்ச் சொல்லப்பட்ட சுரங்களுக்குப் பொருந்தின விதமாயும் பாடினதானது மிகவும் முக்கியமாய் மெச்சிக்கொள்ளப் படத்தக்கது. வேறு விதமாய்ச் சொல்லவேண்டுமானால், தகப்பனாருடைய சங்கீத வித்தையைக் குமாரத்திகள் அதிக நுட்பமாயும் கிரமமாயும் பின்பற்றினதினால் அவர்களுடைய சங்கீதத் திறமையும் கிரமமும் அந்தசமயத்தில் அங்கு வந்திருந்த மகாபிரபல வித்துவான்களில் ஒருவரால் அருமையாய் மெச்சிக்கொள்ளப்பட்டது.

பண்டிதரவர்களுடைய சுருதி விசாரணை உபந்நியாசத்தில் முக்கியமாய் கவனிக்கப்படத்தக்க விஷயம் என்னவென்றால், ஒருஸ்தாயியிலுள்ளசுரங்கள் பழையசமஸ்கிருதகிரந்தங்களில் சொல்லியிருக்கிறபடி 22 அல்லவென்றும், அவைகள் 24ஆய் இருக்கின்றனவென்றும் அவர்கள் புதிதாய்ச் சொன்ன விஷயந்தான். இதனால் புலப்படுகிறதென்னவென்றால், மற்ற சாஸ்திரங்கள் இப்போது விருத்தியடைந்து வருகிறது போலவே, சங்கீத சாஸ்திரமும் விருத்தியடையக்கூடியது என்பதே. இப்படி இந்திய சங்கீதசாஸ்திரத்தை விருத்திக்குக் கொண்டு வருவதில் உதவி செய்த இந்திய மகான்களில் பண்டிதரவர்கள் ஒருவர் என்று நிச்சயமாய்ச் சொல்லலாமே.

இந்தச்சங்கீத கான்பரென்ஸ் ஆனது, இந்திய சாஸ்திர விஷயங்கள் முன்னுக்கு வருவதில் கெய்க்வார் மகாராஜா அவர்கள் எடுத்துக்கொண்ட சிரத்தையைக் காட்டும் விஷயங்களில் முக்கியமானதாகக் காணப்படுவதுமல்லாமல், முயற்சி எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் எந்தக்கலையும் சாஸ்திரமும் ஜாதி மதவித்தியாசமில்லாமல் தழைத்தோங்கக்கூடும் என்று காட்டுவதற்கு இது என்றும் அழியக்கூடாத ஒரு ஞாபகச் சின்னமாகவும் இருக்கிறது. நாம் இந்தியர்களாயிருப்பதினால், இந்திய சங்கீதத்தைத் திரும்பஎடுத்து நிறுத்துவதற்கு ஒரு புதிய காலம் ஆரம்பித்திருப்பதால் மகாராஜா அவர்களுக்கு நாம் சந்தோஷ வந்தனம் சொல்லுகிறோம். நாம் இந்திய கிறிஸ்தவர்களாயிருப்பதால், தன்னுடைய மருந்துகளினாலும் விவசாய முயற்சிகளினாலும் ஏற்கனவே தென்னிந்தியா முழுவதும் பெரும் பெயர் வாங்கி, இப்போது தன் குமாரத்திகளின் சங்கீதத்திறமையினாலும் தன் சொந்த சங்கீதவித்தையினாலும் இந்தியா முழுதும் பேர்வாங்கின ராவ்சாயப் பண்டிதரவர்களுக்கும் நாம் சந்தோஷ வந்தனம் சொல்லி அவர்கள் பெருமையைக் கொண்டாடுகிறோம். பண்டிதரவர்கள் குமாரத்திகள் இந்திய சங்கீதத்திலும் ஐரோப்பிய சங்கீதத்திலும் தேர்ச்சியடைந்திருப்பது வாஸ்தவமானாலும், அவர்களுடைய இந்து சங்கீதத்தேர்ச்சியினாலேயே எல்லாராலும் கொண்டாடப்பட்டார்கள் என்று உறுதியாய்ச் சொல்லலாம். இதனால் இந்திய கிறிஸ்தவ ஆண்களும் பெண்களும் ஐரோப்பிய சங்கீதத்தை எவ்வளவு முயற்சியாய்ப் பயிலுகிறார்களோ அதேவிதமாய் இந்திய சங்கீதத்தையும் பயிற்சி செய்யவேண்டுமென்று இந்த Baroda conferenceஇல் நடந்த இந்த விஷயத்தால் கற்றுக்கொள்ளுகிறோம். ஏனென்றால் நம் முடைய கிறிஸ்த மதத்தின் சுவிசேஷத்தை மனதில் படும்படி பிரசங்கிக்கும் விஷயத்தில் மற்ற விஷயங்களோடு இந்திய சங்கீத ஞானமும் இன்றியமையாதது. மேலும், அரசன்முதல் தெருவில் யாசிக்கும் பிச்சைக்காரன் உள்பட சங்கீதத்தை அதிகமாய் விரும்புகிறார்களென்று அறிவோம்.

A. P.

பாளையங்கோட்டை.

11

Madras Mail, 12th April 1916.

"I shall thank you very much to be so good as to permit me to add a few lines to the graphic account of the All-India Music Conference at Baroda, contributed by Mr. E. Clements I. C. S., to the *Madras Mail* of the 30th March, as I had the advantage of being present at the Conference as one of the guests. In a large Indian assembly of first-rate musicians who had come from different parts of the country, Mr. Clements was, perhaps, the most attractive to all eyes, for the simple reason that he was an Englishman very much interested in Indian music. Of the general review of the proceedings of the Conference, as given by Mr. Clements-I have nothing to say. But his special reference to the part taken by Rao Saheb M. Abraham Pandither, of Tanjore, is imperfect, if not misleading. How Mr. Pandither's theory of dividing the octave into twenty-four *srutis*, instead of twenty-two, as at present, was misunderstood by Mr. Clements is explained by Mr. Pichaimuthoo, in the *Madras Mail* of the 4th instant. Mr. Pandither's essay on "Srutis" was a subject upon which much thought and attention were bestowed by the audience, for, any possible reform of Indian Music depends upon the settlement of this contentious matter—the number of *srutis* in an octave. A whole morning session of four hours was exclusively devoted to the subject, and the practical demonstration of 24 *srutis* in the octave made a profound impression upon the audience, and, I was sure, upon Mr. Clements himself. This demonstration by the daughters of Mr. Pandither of the micro-tones used in the South Indian Ragas by singing to the accompaniment of the *veena* was the most striking, and, withal, the most interesting portion of the lecture, on the much disputed question of the *srutis* or quartertones. The discoursive style of the lecture embodying the result of researches, namely, that the octave should be divided into twenty-four sub-divisions, instead of twenty-two, and the interludes of songs in demonstration of the same were thoroughly enjoyed by the audience, and the correctness of the notes sung was vouched for by that distinguished musician, Mr. Zakruddin Khan, of Udaipure. Later Mr. Clements himself spoke of the practical demonstration of the theory in terms of praise and had no fault to find. The fundamental principles upon which Mr. Pandither relied for his theory were, as I understood them, (1) that the *swarams* of an octave should proceed with a uniform interval, and (2) that the octaves as they proceed should have the vibrations of their *srutis* in geometrical progression. Those principles were clearly explained to the audience as also the mathematical calculations and measurements showing how the various writers who determined the *srutis* had failed to grasp the principle laid down by Sarng Dev in regard to the *srutis*. After an exhaustive explanation of all these, there was a chorus of satisfaction, and nobody came forward to question the correctness of the principles, though criticism was called for. It was noteworthy that, while almost all the speakers confined their attention to a discussion of theories, in regard to which no two of them agreed, Mr. Pandither was the only one with a definite theory to unfold, to explain, to demonstrate. No theory can be regarded as sound unless it be capable of being used in practice on the *veena* or in vocal music. That the demonstration of Mr. Pandither's theory of twenty-four *srutis* in an octave was quite successful and warmly appreciated by the audience was announced by the frequent cheering. Those that had the privilege of following Mr. Pandither's labours during the last decade know also that he arrived at the theory of twenty-four after considerable research and labour, and that the ancient Tamil works of twelve thousand years ago, quoted by him so freely, were subsequently found to fortify his position. Any account of the proceedings at Baroda without a mention of the foregoing details would be a minimisation of the very important part played by one of the greatest experts in Karnatic music at the All-India Music Conference, so wisely convened by H. H. the Gaekwar.

I must not forget to mention the performance by the daughters of Mr. Pandither in the presence of Their Highness the Maharajah and the Maharani of Baroda, by special desire of the royal family in the Palace, where Mr. Clements and I were present to listen to and admire the notes sung to the accompaniment of the fiddle, in twenty-four *srutis*.

N. P. S. AYER.

11

மதராஸ் மெயில் 12 ஏப்பிரல் 1916.

பரோடாவில முழு இந்தியாவிலுமிருந்து வந்து கூடிய சங்கீத கான்பரென்சைப்பற்றி Mr. E. Clements துரையவர்கள் I. C. S. மார்ச்சு மீ 30உ யில் எழுதியிருந்த வெகு விசித்திரமான வியாசத்தைப் பார்வையிட்டேன். அதோடுகூட நானும் அந்தச்சமயத்தில் அங்கு வந்த விருந்தினரில் ஒருவன் ஆனதால் அதைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவைகளையும் மதராஸ் மெயிலில் பிரசுரிக்கும் படி கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தியாவின் பலபாகங்களிலுமிருந்து வந்து கூடிய பிரபலமான பலவித்வான் கள் சேர்ந்த கூட்டத்தில் Mr. Clements துரையவர்கள் இந்திய சங்கீதத்தில் விருப்பமுற்ற இங்கிலீஷ்கார ரானதால் எல்லாராலும் மிகவும் கவனிக்கப்படத்தக்கவராயிருந்தார். கான்பரென்சில் நடந்த நடவடிக்கைகளைப் பற்றி Mr. Clements பொதுவாய்ச் சொன்ன விஷயத்தில் நான் மாறுப் ஒன்றும் சொல்லுகிறதில்லை. ஆனால் ராவ்சாயேப் M. ஆபிரகாம் பண்டிதரவர்களுடைய விஷயத்தைப்பற்றி அவர் சொல்லுவது பூரணமாயில்லை. மேலும் அதைப்படித்தவர்கள் தப்பான அபிப்பிராயப்படுகிறவர்களாயும் இருப்பார்கள். ஸ்தாயியில் 22 சுருதி களுக்குப்பதிலாக Mr. பண்டிதரவர்கள் 24 என்று சொன்னதை Mr. Clements சரியானபடி அறிந்து கொள்ளவில்லை யென்பதற்குக் காரணமென்ன வென்று 4ம் தேதியில் பிரசுரமான மெயில் பத்திரிகையில் Mr. Pitchaimuthu எழுதியிருக்கிறார். ஸ்தாயியில் வரும் சுருதிகள் இத்தனையென்று முடிவுக்கு வருவது இந்திய சங்கீதம் சீர்திருத்தமுறுவதற்கு முக்கியமான விஷயமானதால் Mr. பண்டிதரவர்கள் சுருதியைப்பற்றி வாசித்த வியாசமானது வெகு கவனத்தோடும் சிரத்தையோடும் எல்லாராலும் கேட்கப்பட்டது. ஒரு காலையில் 4 மணிநேரம் இந்த வியாசத்திற்கென்றே செலவழிக்கப்பட்டதுமல்லாமல் 24 சுருதிகள்தான் உண்டென்று பரிஷ்காரமாய்ப் பாடியும் வீணையில் வாசித்தும் காட்டப்பட்டபோது சபையில் இருந்தவர்களுக்கு உண்டான வியப்பும் மனக்களிப்பும் கொஞ்சமல்ல. இப்படி வியப்படைந்தவர்களில் Mr. Clements ஒருவர் என்பதற்குச் சந்தேகமில்லை. தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கும் அதிகநுட்பமான சுரங்களைப் பண்டிதரவர்கள் குமாரத்தி கள் சபையின் முன்பாகப்பாடியும் வீணையில் வாசித்தும் காட்டியதானது மீற்றிங்கில் சுருதிகளைப்பற்றி நடந்த விஷயங்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்ததென்று யாவராலும் கொண்டாடப்பட்ட விசேஷமே. வெகு கால ஆராய்ச்சியின் பலனாக ஸ்தாயியில் 24 சுருதிகள்தான் உண்டென்றும் 22 சுருதிகள் அல்லவென்றும் எளிதில் கேட்போருக்குப் புலப்படக்கூடிய நடையில் வாசிக்கப்பட்ட வியாசமும் அதற்கு ரூபகாரமாக வீணை யில் இடைக்கிடையே வாசித்துக்காட்டப்பட்ட சங்கீதமும் எல்லாராலும் மிகவும் புகழப்பட்டதுமல்லாமல், சொன்ன சுரங்களுக்கும் வாய்ப்பாட்டின் சுரங்களுக்கும் வீணையின் சுரங்களுக்கும் அதி ஒற்றுமையிருக்கிற தென்றும் மிகவும் பேர்போன சங்கீதவித்வானாகிய உதயப்பூர் சாக்ருடின் சாயப் அவர்கள் நற்சாட்சி கொடுத் தார்கள். பிற்பாடு Mr. Clements துரையவர்களுங்கூட ரூபகாரமாகப்பாடியும் வாசித்தும் காட்டப்பட்ட வைகளில் யாதொரு பிசகும் இல்லை யென்று புகழ்ந்தார்கள். எனக்குப்புலப்பட்டவரையில் Mr. பண்டிதரவர் களுடைய கருத்தின் ஆதார விஷயங்கள் எவையென்றால் (1) ஒரு ஸ்தாயியின் சுரவரிசை ஏகஅளவுள்ள ஸ்தானங்களுள்ளவையாயிருக்கவேண்டும் (2) உயர்ந்து போகும் சுருதிகளின் ஓசைஅலைகள் Geometrical Progression கணக்கின்படி மேலே போய்க்கொண்டிருக்கவேண்டும். இதுவிஷயங்கள் சபையோருக்கு நன்றாய் விளங்கும்படி கணிதநுட்பத்துடனும் அளவுகளுடனும் சொல்லப்பட்டது மல்லாமல், சாரங்கதேவரால் சொல்லப்பட்ட இந்த விஷயம் அவருடைய சிஷ்யர் ஒருவராலும் சரியானபடி தெரிந்துகொள்ளப்படவில்லை யென்றும் காட்டப்பட்டது. இவையெல்லாம் சொல்லப்பட்டபோது சபையார் ஏகோபித்து ஒப்புக்கொண்டது மல்லால் அதற்கு ஆக்ஷேபனை சொல்லுகிறவர்கள் சொல்லலாம் என்று கேட்டபோதும் ஒருவரும் முன்னுக்கு வரவில்லை. இன்னொரு கவனிக்கப்படத்தக்க விஷயம் என்ன வென்றால் உபந்நியாசம் வாசித்த மற்றவர் களெல்லாம் தங்கள் தங்கள் கொள்கையை வாயினால் சொல்லிக்கொண்டார்களே யொழிய ருசுப்படுத்துவாரில்லை.

ஒருவருடைய கொள்கை அதே விஷயத்தைப்பற்றிய மற்றவருடைய கொள்கையோடு பொருந்தவுமில்லை. ஆனால் தன் கொள்கையைச் சொல்லி அதை விவரித்து ருசுப்படுத்தினது Mr. பண்டிதரவர்கள் ஒருவர் தான். பாடியாவது வீணையில் வாசித்தாவது ருசுப்படுத்தப்படக்கூடாத எந்தக்கொள்கையும் சரியன்று. Mr. பண்டிதரவர்களுடைய கொள்கையும் ருசுவும் எல்லாராலும் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டதென்ப தற்குக் குறிப்பாக சபையார் அடிக்கடி கரகோஷம் செய்தார்கள். சென்ற பத்து வருஷங்களாக இது விஷய மாய் Mr. பண்டிதர் அவர்கள் செய்து வந்த ஆராய்ச்சிகளைக் கூட இருந்தவர்கள் மாத்திரம் தான் எவ்வளவு பிரயாசத்தோடும் கருத்தோடும் அவைகள் செய்யப்பட்டன என்று அறிவார்கள். ஸ்தாயியில் 24 சுருதிகள் தான் வரலாம் என்னும் கொள்கையானது சுமார் 12000 வருஷங்களுக்கு முன்னுள்ள தமிழ் நூல்களில் சொல்லப்பட்டவைகளால் சரியென்று ருசுப்படுத்தப்படுகிறது. கைக்வார் மகாராஜாவால் கூட்டப்பட்ட இந்த பரோடா கான்பரென்ஸில் நடந்த சங்கதிகளைச் சொல்வதில் மகா-ரா-ராஶ்ரீ பண்டிதரவர்களால் சொல்லப்பட்ட முன் சொன்ன விஷயங்களை விட்டுவிடுவது அங்கு நடந்த கர்நாடக சங்கீத முக்கிய வித்வானுடைய சங்கதிகளை முற்றிலும் விட்டுவிட்டது போலாகும்.

Mr. பண்டிதரவர்களுடைய குமாரத்திகள் மகாராஜா அவர்களுடைய வேண்டுகோளின்பேரில் அரண்மனையில் போய் மகாராஜா மகாராணி இவர்களுக்கு முன்பாகவும் மற்றும் கனவான்களுக்கு முன்பாகவும் பாடிய சங்கீதத்தைப்பற்றிச் சொல்ல நான் மறக்கக்கூடாது. கிளெமென்ஸ் துரையவர்களும் நானும் மற்றவர் களும் 24 சுருதிகளில் பாடப்பட்ட அவர்களுடைய சங்கீதத்தையும் பிடில் வாசிப்பையும் கேட்டு ஆனந்தித் தோம்.

N. P. S. AYER.

12

Madras Mail 14th April 1916.

Sir,—I hope you will publish the following in justice to me, as regards my views on *srutis* in Indian music, which have been criticised by Mr. Clements, I. C. S. I saw the article of Mr. Clements, as well as that of Mr. Subramania Sastrial, of Tanjore, who upholds the criticisms of the former, and finds fault with Mr. Pichaimuthu's elucidation of my opinions. I am very glad to find that they have paid so much regard for works of antiquity, and support the writings of Bharata and Sarnga Dev. But the opinions of Mr. Clements and Mr. Subramania Sastrial, which have been published, will clearly prove that they have misunderstood Sarnga Dev. A *sruti* harmonium, according to Sarnga Dev's views, was placed before the All Indian Music Conference by Mr. Clements for approval; while demonstration were being made in the harmonium noting, the swarams of *ragas* in use in modern days, it was noticed that Mr Clements' harmonium failed to satisfy the audience, as regards the swarams of the *ragam*. So it was resolved by the musicians present there that the harmonium was defective and it should be given up. This matter is well known to such eminent men as Thakur Nawab Ali Khan, the President of the Conference, Dewan Sahib V. P. Madhava Rao and other well-known members of the Conference who were present there. The whole subject of *srutis* was exhaustively discussed in my essay read and demonstrated at the Conference, treating about *srutis* of Sarnga Dev and those in use at the present day. It will be of no use to the world unless the theory is proved and demonstrated on practical instruments according to Sarnga Dev, as Mr. Clements did at the Conference I think I need not dwell upon the subject any further.

M. A. PANDITHER.

12

மதராஸ் மெயில் 14 ஏப்பிரல் 1916.

ஐயா, இந்திய சங்கீத சுருதிகளைப்பற்றி நான் சொன்ன அபிப்பிராயத்தை Mr. E. Clements துரையவர்கள் தப்பென்று இந்தப் பேப்பரில் எழுதியிருந்தபடியால் நான் அதற்குச் சொல்லப்போகிற மறுப்பைத் தாங்கள் பிரசுரிப்பது நியாயம். கிளமெண்ட்ஸ் துரையவர்களுடைய அபிப்பிராயத்தையும், என் அபிப்பிராயத்தை நன்றாய் விளக்கி மெயிலில் Mr. பிச்சைமுத்து எழுதினதற்கு விரோதமாய் எழுதிய தஞ்சை சுப்பிரமணிய சாஸ்திரிகளுடைய கொள்கையையும் பார்வையிட்டேன். இவரும் துரையவர்கள் எழுதினது சரியென்று ஒப்புக்கொண்டே எழுதியிருக்கிறார். ஆனால் அவர்கள் எழுதினதில் ஆதி நூல்களில் சொல்லியிருப்பவைகளைப்பெரிதாக நினைக்கவேண்டுமென்றும், பரதர் சங்கீதரத்னகரர் முதலிய பூர்வ நூலாசிரியர் எழுதியிருப்பவைகளை நன்கு மதிக்கவேண்டும் என்றும் சொல்லியிருப்பது எனக்கு அதிக சந்தோஷம். ஆனால் துரையவர்களுடைய அபிப்பிராயத்தையும் பார்த்தால் அவர்கள் சாரங்கதேவர் சொன்னதை நன்றாய் அறியவில்லை என்று விளங்கும். சாரங்கதேவருடைய முறைப்படி செய்யப்பட்ட ஒரு சுருதி ஆர்மோனியம் துரை அவர்களால் சபைக்கு முன் கொண்டுவரப்பட்டது. தற்கால இராகங்களில் வழங்கும் சுரங்கள் அதில் சரியாய் வருகின்றனவா என்று சோதித்துப்பார்த்தபோது, அந்த சுரங்கள் சரியாயில்லையென்று சபையால் தீர்மானிக்கப்பட்டு அந்த ஆர்மோனியமும் தள்ளப்பட்டது. இது விஷயம் அங்கு வந்திருந்த சபையார் பிரசிடெண்டார் தாகூர் சவாப் ஆலிகான் சாயப் அவர்களுக்கும் கிவான் சாயேப் மாதவராவ் அவர்களுக்கும் மற்றும் மெம்பர்களுக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயம். சுருதி விஷயம் முழுவதையும் பற்றியும் சாரங்கதேவருடைய முறையைப்பற்றியும் மற்றும் தற்காலத்தில் உபயோகத்தில் இருப்பவைகளைப்பற்றியும் நான் கான்பரென்சில் வாசித்த உபந்நியாசத்தில் சொல்லியிருப்பதுமல்லாமல் வாத்தியம் வாய்ப்பாட்டு மூலமாய் ருசுப்படுத்தியுமிருக்கிறேன். எந்த அபிப்பிராயமும் வாத்தியத்தின் மூலமாய் ருசுப்படுத்தப்பட்டாலொழிய வெறும் வார்த்தைகளில் பிரயோசனமில்லை. நான் இதைப்பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை.

M. A. Pandither.

13

THE ALL-INDIA MUSIC CONFERENCE.

Baroda, 20th March, 1916.

I have read the account of the above conference held on the 20th of March 1916 and the succeeding days at Baroda, from the pen of Mr. Clements I. C. S. This seems to be an account of what Mr. Clements thought about what happened there. It is but natural that accounts of a scientific conference should vary according to the different stand-points from which the proceedings are viewed by different artists. The two most important subjects discussed at the conference (1) the Srutis in use in Indian music and (2) how for the Staff notation could be made use of by all for noting down Indian Ragas. I desire to make a few remarks on the above subjects.

One of the most noteworthy figures in the conference was that of Mr. Clements who practically demonstrated his views as regards Srutis and their calculation based upon those of Sarnga Dev by means of Harmonium specially constructed for the purpose. The concord between Swarams was determined by arithmetical calculations and the pitch thereof was at the same time sounded on the Harmonium. He was

warmly supported by Mr. Deval who had brought a number of books and an instrument known as the Bhin for demonstration thereon. Besides the time that had been allotted for them at the several meetings they were given free permission to controvert views that were opposed to them at all times. As their views on Srutis were against these of Mr. Bhatkandi and others, there was a pleasant war of words between them almost every five minutes. The musical experts present there were closely watching those altercations with as much zest as that of people who had staked their all on a favourite race horse! Such a fight was of course necessary for arriving at truth which might be of use to all musicians. This question of Srutis was discussed off and on almost every day.

Besides this on the 22nd of March, I read my essay the whole morning session ($3\frac{3}{4}$ hours) as regards the Srutis of Indian music and practically demonstrated the same on the Veena. It was there pointed out that the disciples of Sarnga Dev, while professing to follow his measurements, really followed the Sa-Pa ($\frac{2}{3}$) and Sa-Ma ($\frac{3}{4}$) system of Pythagoras, that this was against the system of Sarnga Dev, that the 13 Srutis, for Sa-Pa and the 9 Srutis for Sa-Ma of Sarnga Dev could never be obtained if Sa-Pa was taken to be equal to $\frac{2}{3}$ and Sa-Ma to $\frac{3}{4}$. It was also clearly demonstrated that the Sruti system of Sarnga Dev as well as of those who followed $\frac{2}{3}$ and $\frac{3}{4}$ rule would never be scientific nor would they agree with Srutis that have been in use from time immemorial amongst the Tamilians handed down for generations. This was the subject of my first essay.

The second essay dealt with the musical efficiency of the ancient Tamilians as it was found in Silappadikaram, written about 1850 years ago by Ilankovadigal, and Tholkaupiam, placed at the Sangam before Athankote Asan who lived in South Madura (or destroyed Lemuria) about 8000 years ago during the reign of Nilantharutheruvil Pandyan, the Conqueror. It was pointed out there how the ancient Tamilians derived 12 Swarams by the Sa-Pa and the Sa-Ma series and used them in their Yal and how they derived 12000 different ragas by the change of Grahaswarams. Again, it was shown how by the help of the cycle of 12 rasis, the 12 Swarams were obtained at the seventh places proceeding by Sa-Pa series towards the right, and how the same Swarams were obtained at the fifth places proceeding by the Sa-Ma series towards the left. It was shown how each of the rasis was subdivided into two Alagus and ganam was made in the 22 Alagus, only omitting an Alagu each in Vilari and Kaikilai. The four kinds of Yal setting forth the Swarams to be omitted in the ganam and the four sub-divisions of Jathis in each of the Yals were also explained. It was pointed out that these rules had become obsolete when Bharata in the V Century and Sarnga Dev in the XIII Century wrote their works on music. Their 22 Srutis in the Octave became a stumbling block to all, and this, along with the $\frac{2}{3}$ and $\frac{3}{4}$ system of Pythagoras, made matters worse.

This over, it was shown how ganam was made in Ayapalai with 12 Alagus, in Vattapalai with 24 Alagus, in Thirikonapalai with 48 half or two for each of the 24 Alagus and in Chathurapalai with 96 quarter Alagus or 2 for each of the 48. A table showing the 67 Ragas derived from the above four Palais, and the table showing the fractions

according to Geometrical Progression, number of vibrations, length of wire and cents for the 12 half Swarams, 24 quarter-Swarams, 48 one-eighth Swarams and 96 one-sixteenth Swarams were given. Practical demonstrations of ragas given in the four Palais were given according to the wishes of the members. It was listened to with rapt attention by the Karnatic as well as the Hindustani musicians assembled there. Sackruddin Saheb, the court musician of Oodaipur, himself joined in the demonstration of the 24 Srutis with Veena and appreciated and admitted the System. When my daughters Maragathavalli Ammal (Mrs. Duraipandian) and Kanagavalli Ammal (Mrs. Navamoney) sang the 24 Srutis without the help of the Veena the whole assembly was in raptures and clapped their hands saying that a new musical era had dawned upon the world, that there was no longer any necessity for investigating the question of Srutis, and that the systems of Srutis of such and such people had been sent to the bottomless pit for ever! Atiya Fyzee Rahimin Begum, the accomplished and enlightened lady, was so delighted with the performance that she invited Mr. Clements and Mr. Bhatkandi to a very close examination of the Veena and to bestow all thought upon the demonstration. A number of Keertanams were also sung by my daughters to demonstrate the use of very minute Swarams. When the demonstration was over, I threw out a challenge asking musicians to come forward and state their objections, if any, before the learned audience. None came forward with any objection. Many remarked that the 22 Sruti System should be given up for ever and that there was no need for any further investigation.

His Highness the Gaekwar and Her Highness the Maharani expressed a desire to hear the same themselves. So before a select audience consisting of the Royal family including their Highnesses, His excellency Dewan V. P. Madava Row President the Nawab Ali Khan, Mr. Clements, Mr. Bhatkandi, and Mrs. Atya Begum and a few other select people, my daughters and myself were asked to repeat the demonstration of the previous day. So the same thing was gone through once more. Mr. Panchapakesa Bagavatar, Mr. N. P. Subramania Iyer, Mr. Fyzee Rahimin, Mr. Sundra Pandian, and Mrs. Pakiam Abraham were also present. I then pointed out how this conference organised by His Highness came just in time, to set the minds of musicians at ease, as the whole Sruti system of Indian music had been in a state of doubt owing to the disappearance of the ancient eminent music of the Tamilians and the appearance of the 22 Sruti system of Sarnga Dev, made worse by the $\frac{2}{3}$ and $\frac{3}{4}$ System of Pythagoras, and finished with a prayer for blessings on His Highness for having given orders to translate that ancient Tamil work Tholkaupiam into the English language.

I then demonstrated to those assembled, within ten minutes, how the Srutis derived by proceeding by $\frac{2}{3}$ and $\frac{3}{4}$ and the 22 Srutis had never been in use in music and how they could never be used in the future.

It was also explained clearly how the calculations of Sarnga Dev given in his sutras could be correctly obtained by Geometrical progression.

This was followed for 45 minutes by a few Karnatic and other Keertanams where the 24 Srutis of the Octave and more minute Srutis occurred.

His Highness the Maharaja and her Highness the Maharani were much delighted and expressed their grateful thanks.

I had already written to Mr. V.N. Bhatkandi that those who read essays on Srutis must practically demonstrate their theories, and that theories without a demonstration should be discarded. The same was emphasised by me on the 22nd and I demanded practical demonstration for the benefit of the audience. Again, on the 23rd when Mr. Clements read his essay on Srutis I requested him to demonstrate whether the 22 Srutis of his special Harmonium constructed after the System of Sarnga Dev agreed with the Srutis in practical use. It was decided by the members as well as the President, Mr. Thakur Nawab Ali Khan, that the swarams of the Harmonium of Mr. Clements were rather flat when compared with the swarams of the Ragam Kapi as sung by Sackruddin Saheb of Oodaypur and other Vidwans. In addition to this it was also argued that the interpretation of Sanskrit Sootras was inaccurate; and then some of the Sanskrit experts came forward and gave the right interpretation which ended all controversy.

In spite of repeated demonstrations, Mr. Clements had to acknowledge that the Swarams of his Harmonium were really flatter and thus the controversy as regards the usefulness of his instrument practically ended here. I consider this to be one of the most definite results arrived at by the conference, as it consumed the greater part of their time, as it was a question which was very freely discussed, as it was based upon the system of Sarnga Dev and as some of the members took objection to it. The truth of this is well known to Mr. Nawab Ali Khan the President, to Dewan Saheb V. P. Madava Row Avergal who managed the affairs of the conference and to the other members. It would have been some good if Mr. Clements had made mention of this.

The next morning at the conference Mr. Clements said that I followed the System of Equal Temperament of the westerners which was unsuited to Indian melody and argued that Indian ganam should be according to 22 Srutis. Then with the permission of the President I made the following observations for $\frac{3}{4}$ of an hour :—

(1) That the term 22 Srutis in the Octave is due to Sarnga Dev's misconception of the 24 Alagus Sruti system of the ancient Tamilians.

(2) That the system 22 Srutis is wrong because, calculating the series by the Sa-Pa system instead of getting 13 Srutis for each of the steps we get 12 for Pa, Ri and 11 for Dha, Gha.

(3) That the 13th Sruti of Sarnga Dev, or Pa gets 709 cents according to him while according to the adherents of the $\frac{2}{3}$ system it gets 702 cents and that, neither of these coincides with the exact Pa which is in practical use.

(4) That the calculations $\frac{2}{3}$ or $\frac{3}{4}$ never completely finish the Octave.

It was further pointed out to Mr. Clements that, according to Sarnga Dev, the Srutis of an Octave should be a gradually ascending series without admitting any other possible sound between, that when two Srutis of Sa change their graham the Ga and Ni obtain the places of Ri and Dha, that again quoting from his own book according to

Sarnga Dev when three Srutis change their graham, Ri and Dha with 3 Srutis obtain the places of Sa and Pa. In spite of all these statements he (Mr. Clements) gives Srutis with unequal measurements. Srutis whose cents are as varied as 71, 41, 22, 90 and 49. Swarams with such unequal intervals will never suit the process of singing Graha-Swarams. They are entirely unsuited to music Professor Owen and Mr. Waterhouse mention that even the apes of Java sang the chromatic scale without a flaw! The Western musicians mention that, in tuning a piano by fifths, one should not be rigid but must have the fifths slightly flatter. Equal temperament was used by Mozart and Beethoven only 120 years ago, whereas the Tamilians have been using the system very commonly for the past 2000 years and more. The same system continues even to day. They were demonstrated yesterday on the Veena. I fully believe that this system alone has come to say. I shall be pleased if Mr. Clements could refute my system. Criticisms and remarks were called for and none came forward with any and the meeting terminated.

In the afternoon an essay was read by my daughter Maragathavalli Ammal (Mrs. Duraipandian) in which she stated that the English staff notation as understood by many could form the basis for noting the Indian Srutis, that minuter Srutis could be marked by numbers pertaining to particular Alagus of the Srutis and that Indian Ragas and Keertanams could be divided into bars according to the time in which they are written. To illustrate this practically she had reduced to Staff notation the Pallavis of four Keertanams in Ayapalai, Vattapalai, Thirikonapalai and Chathurapalai and these were sung before the audience. A Keertanam in the Ragam Kakanakuthoogalam was sung which so attracted the attention of Mr. Fredilis, the Band master of Baroda, that he expressed a desire that it should be reduced to Staff notation. It was accordingly done by my daughter and it was reproduced by Mr. Fredilis in the flute who expressed to the audienee the advantage of Staff-notation for Indian music. It would have been very gratifying if Mr. Clements had included these facts in his account.

Mr. Clements who was present throughout the conference, seeing that I am acquainted with English musical notations says that I am reading English Music into Indian music by adopting Equal temperament and that I reject the theories of Bharata and Sarnga Dev. It is true that I reject Sarnga Dev so far as he says there are 22 Srutis in the Octave which will never suit modern music, and it is equally true that the 12 tempered notes of the westerners exactly correspond to the 12 Swarams used by the ancient Tamilians thousands of years. Mr. Clements does not subscribe to the above two statements, and hence his criticism.

To ask a few plain questions, who rejected the Harmonium of Mr. Clements constructed by him to suit the 22 Srutis of Sarnga Dev? Was it I alone or the President and members of the All India Music canference? Are not the 12 Swarams of a harmonium, the 12 Swarams of a Veena and the 12 main Swarams sung by all Indian vocalists one and the same? Are these not after equal Temperament? Did not the conference in a body resolve to make the use of the Staff notation in these 12 Swarams for Hindustani Ragams for beginners? Was I the only supporter of these 12 Swarams; Were not the adherents of Sarnga Dev and the advocates of the 22 Srutis

present there? Why were they not bold enough to stand up and refute these? Am I to blame because I made use of Geometrical Progression for the calculations of the 12 Swarams the 24 Srutis and the minuter ones?

Again, which is prior, whether the system which is found in Silappadikaram written in the first century by Ilankovadigal or that of Mozart and Beethoven dating from the beginning of the 19th century?

Many writers on Srutis say that Sa-Pa=$\frac{2}{3}$ and give 702 cents for Pa. But it has 701·955 cents. If 701·955 were added on to this and if the result was substracted from 1200, the cents for the Octave, we get 203·910 or the cents for Ri. This is the process by which each of the other Sthanams is obtained. The Octave must exactly finish at 1200. But it does not really finish so, as Sa-Pa, taken to be $\frac{2}{3}$, is incorrect. By the principle of $\frac{2}{3}$, the 22 Srutis finish at 1043 cents, thus falling short of 157 cents. But if we proceed 24 steps by the Sa-Pa series we get 1247 cents. As it is nearer 1200 than the result of the other it is clear that the system of 24 Srutis is better than Sa-Pa $\frac{2}{3}$ system or 702 cents for Pa. It is also clear that Ri and Dha with 3 Srutis each should in reality have four Srutis. This system of 3 Alagus Srutis for Ri and Dha is found in the system of Neythal Yal of the ancient Tamilians where one Alagu for Ri and Dha was purposely left out.

Are the 12 Swarams of an octave which stand in the relation of Inai and Kilai, with 24 Alagus in practical use, in Karnatic music, at the present day the correct ones or the system of Sarnga Dev with 22 Srutis which was rejected the other day at the Conference, as the Harmonium constructed for that special purpose was found to be deficient in the Swarams pertaining to the Karaharapirya or Kapi Ragas? We know that $\frac{2}{3}$ can never divide itself completely nor can it multiply itself completely it is a recurring decimal. This spectre which has been dominating Western music for 2500 years has also begun its devilish work in India. The right Swarams in vogue can never be obtained by this method. I hope that musicians will never hereafter use this measurement for determiniug the fractions and vibrations of Srutis. It is found that these 12 Swarams with equal measurements were used by the ancient Tamilians, that by the change of graham of these Swarams many ragas were generated, that even milk women, the simplest among the ancient Tamilians, sang their Aychiarkuravi with the help of grahaswarams. that when the book treating about them gradually fell into disuse many new theories were put forward, and that the westerners in the course of their researches adopted these swarams with Equal Temperament. It is not a theory of my own. Any one anxious to locate the Swarams one is daily using in a stringed instrument will find that they are same used by the ancient Tamilians for years.

I asked the other day a Bhagavather who considers himself well versed in Music as well as in the theory of Sarnga Dev. if he could compose a Ragam with the help of the 22nd Srutis of Sarnga Dev, with a given Lakshanam of the same author. He replied that he would be able to do the same after two months! When pressed to give his opinion as regards the system by which he had become proficient in music he only

blinked! The Dwavimsati srutis had never been in practical use at any time in India. To introduce them here will be derogatory to the ancient and dignified music of South India!

To write of the proceedings of a conference in Baroda, without having attended it, can be of very little use to any. I am reluctant to enter into a controversy with people who venture to write without a personal knowledge of what transpired. It would be well, if gentlemen, such as the President of the conference, and other responsible people, write on the subject.

I read the account of Mr. Clements as well as that of Mr. Subramania Shastrial in the Madras Mail. I am at a loss to know why Mr. Clements is writing to Mr. Shastrial in private instead of openly ventilating his theories in the papers! He does not evidently like the idea of being criticised.

Members of the All Indian music Conference! In as much as the editors of the "Madras Mail", "Swadesa Mitran", "Hindu" and "New India" declined to publish this on account of its lengthiness, I had to print it myself and distribute it to you. If either the President or the Secretary had written an account at the time it would have been fairer. I had to write this as Mr. Clements had omitted a few vital points. If my readers who are members of the conference would write about the truth or the otherwise of my statements and their own ideas as to my theory and the practical demonstration thereon I shall be pleased to print and circulate them to all the members.

13

பரோடாவில் நடந்த ஆல்-இந்திய சங்கீத கான்பரென்ஸ் அங்கத்தினர்களுக்கு.

1916-ம் வருடம் மார்ச்சுமாதம் 30-ம் தேதியில் Indian Music என்ற தலைப்பின்கீழ் 'பரோடா கான்பரேன்ஸ்" என்ற தலைப்புடன் Mr. E. Clements, I. C. S., துரையவர்கள் Madras Mailல் எழுதிய வியாசத்தைப் பார்வையிட்டேன். இதில் "All India Music Conference" ல் நடந்தவைகளைக் குறித்துச் சொல்வதாகத் தெரிகிறது. சாஸ்திர விஷயமாக நடக்கும் ஒரு பெரிய சபையின் சாராம்சத்தை தங்கள் தங்கள் அறிவுக்கு எட்டிய விதம் பலர் பல விதமாய் எழுதுவது வழக்கமென்று நாம் அறிவோம். சபையில் நடந்த விஷயங்களில் இந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுரங்கள் சுருதிகள் இன்னவையென்பதும் அவைகளை எல்லோரும் வழங்கக்கூடிய விதமாய் Staff notation-ல் குறிப்பது எப்படி என்பதுமே முக்கியமானவை. இவ்விஷயத்தைப்பற்றிச் சில குறிப்புகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்திய சங்கீதத்தில் இன்னின்ன சுருதிகள் வழங்கவேண்டுமென்பதைப் பற்றியும் அவற்றின் கணக்குகளைப் பற்றியும் சாரங்கர் முறைப்படி Mr. Clements அவர்கள் தாம் புதிதாகச் செய்த ஆர்மோனியம் வாசித்து மிக விரிவாக வியாக்கியானம் பண்ணினார்கள். சுரங்களுக்குள்ள ஒற்றுமையைக் கணித மூலமாகவும் அதன் ஓசையை ஆர்மோனியம் மூலமாகவும் எடுத்துக் காட்டினார்கள்.

Mr. Deval அவர்கள் Mr. Clements அவர்களுடைய அபிப்பிராயத்தை விளக்கிக் காட்டுவதற்குப் பல புஸ்தகங்களும் பின் முதலிய வாத்தியக் கருவிகளும் கொண்டு வந்து வாசித்துக் காட்டினார்கள்.

இவர்களுக்குப் புரோகிராமில் குறித்த நேரம்போக மற்றும் மீற்றிங் நடந்த ஒவ்வொரு நாள் காலை மாலைகளிலும் தங்கள் அபிப்பிராயத்திற்கு மாறுபட்டு வரும்போதெல்லாம் பேசுகிறதற்கு இடம் தாராளமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவர்கள் சுருதியைப்பற்றிச் சொல்லும் அபிப்பிராயங்களை Mr. Bhatkandi முதலிய சிலர் ஒப்புக்கொள்ளாமையினால் நிமிஷத்திற்கு நிமிஷம் ஆட்சேபனைகள் தோன்றிக் கேட்பவர்களுக்கு இன்பமாகச் சம்பாஷணை நடந்து வந்தது. பந்தயத்தில் ஓடும் குதிரைகளில் எது ஜெயிக்கு மென்று பந்தய வட்டத்தைச் சுற்றி அநேகர் ஆவலாய் வேடிக்கைப் பார்ப்பது போலவே சங்கீத சாஸ்திரத்தில் முக்கியமான சுருதிகளைப்பற்றி எப்படி முடிவு அடையுமென்று பல கனவான்களும் சங்கீத வித்வான்களும் ஆவலாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட வாதங்களுண்டாகாமற் போனால் சாஸ்திர விஷயமாக ஜனங்கள் யாவரும் பொதுவாய் அனுபவிக்கக்கூடிய ஒரு நல்ல முடிவு கிடைக்கமாட்டா தென்று நாம் அறிவோம். கான்பரென்ஸ் கூடிய பல நாள்களில் பல சமயங்களிலும் இவ்விஷயம் அடித்தடுத்துப்பேசப்பட்டது.

இதைத்தவிர இந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகளைப்பற்றி என்னால் 22-ம் தேதி முற்பகலில் சுமார் $3\frac{3}{4}$ மணி நேரம் வரைக்கும் வியாசம் படித்தும் அனுபவ பூர்வமாக வீணையில் வாசித்தும் வாயினால் பாடியும் காட்டப்பட்டது. முதலில் சங்கீத ரத்னாகரர் முறைப்படிச் செய்திருக்கிறோமென்று சொன்ன பலர் அவர் சொல்லிய முறைப்படிச் செய்யாமல் ச-ப $\frac{3}{3}$, ச-ம $\frac{3}{4}$ என்று பைதாகோரஸ் சொல்லிய பின்னக் கணக்கின் முறைப்படிச் சுருதி கண்டு பிடிப்பது சரியான முறையல்ல வென்றும் சங்கீத ரத்னாகரர் பரதர் இப்படிச் சொல்லவில்லை என்றும் சங்கீத ரத்னாகரர் முறைப்படி ச-ப 13, ச-ம 9 சுருதிகளையுடையதாய் வரும் பொழுது $\frac{3}{3}$, $\frac{3}{4}$ என்ற அளவுப்படி வரவில்லை என்றும் கணக்குகளும் மேற்கோள்களும் சொல்லிச் சங்கீத ரத்னாகரருடைய துவாவிம்சதி சுருதி முறையும் $\frac{3}{3}$, $\frac{3}{4}$ என்ற முறையின்படி மற்றவர்கள் கண்டுபிடிக்கும் சுருதி முறையும் சங்கீத சாஸ்திரத்திற்கும் நம் அனுபோகத்திலிருக்கும் வாய்ப்பாட்டிற்கும் ஒருக்காலும் ஒத்துவராதென்று யாவரும் அறியும்படி வியாசம் வாசித்து விளக்கப்பட்டது.

இரண்டாவதாக இற்றைக்கு 1850 வருடங்களுக்கு முன் அதாவது முதல் நூற்றாண்டிலிருந்த இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தின் உதவியைக் கொண்டும் இற்றைக்குச் சுமார் 8000 வருடங்களுக்கு முன் முதல் ஊழியின் கடைசியில் தென் மதுரையில் (அழிந்து போன லெமூரியாவில்) ஆண்டு கொண்டிருந்த சயமாகீர்த்தியனுடைய நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையத்து அதங்கோட்டாசான் முன்னிலையில் முதற் சங்கத்தின் கடைசியில் அரங்கேற்றப்பட்ட தொல்காப்பியத்தின் உதவியினாலும் பூர்வ தமிழ் மக்களின் இசைத்தமிழ்ப் பயிற்சியில் அவர்கள் கண்டு அமைத்திருந்த அரிய விஷயங்கள் சில சொல்லப்பட்டன. அதில் அவர்கள் ஒருஸ்தாயியில் ச-ப, ச-ம முறையாய் 12 சுரங்கள் கண்டு பிடித்து யாழில் அமைத்துக் கானம் செய்து வந்தார்களென்றும் கிரக சுரம் மாற்றும் பொழுது வெவ்வேறு விதமான 12000 இராகங்கள் உண்டாக்கி யிருந்தார்களென்றும் சொல்லப்பட்டது. இரண்டாவது பன்னிரண்டு சுரங்களையும் பன்னிரண்டான இராசி வட்டத்தில் ச-ப முறையாய் வல வோட்டாக ஏழாவது ஏழாவது இராசியாகப் பன்னிரண்டு சுரங்கள் பொருந்தி வரும் முறையையும் அப்படியே இட வோட்

டாக ஐந்தாவது ஐந்தாவது இராசியாக 12 சுரங்கள் பொருந்தி வரும் முறையையும் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு இராசியும் இரண்டு இரண்டு அலகாகப் பிரிக்கப்பட்டு அதில் விளரி கைக்கிளையில் ஒவ்வொரு அலகு குறைத்து 22 சுருதியில் கானம் செய்தார்கள். இன்னின்ன சுரங்கள் குறைத்துக் கானம் பண்ணப்படுவது என்பதற்கு நான்கு விதமாய் முறைகளும் அவைகள் ஒவ்வொன்றில் நாலு ஜாதி வகைகளும் சொன்னார்கள்.

இம்முறை வழக்கத்திலில்லாமற் போன காலத்தில் 5-ம் நூற்றாண்டிலிருந்த பரதரும் 13-ம் நூற்றாண்டிலிருந்த சங்கீத ரத்னகரரும் சங்கீத நூல்கள் எழுதினார்கள். ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் வருகின்றன வென்று இவர்கள் சொன்னதானது மிகவும் மயங்கக் கூடிய ஓர் இடறு கல்லாயிற்று. இதோடு பைதாகோரஸ் ச-ப $\frac{2}{3}$, ச-ம $\frac{3}{4}$ என்று சொன்ன அளவும் சேர்ந்து தற்காலத்திலுண்டாகும் விபரீதத்திற்குக் காரணமாயிற்று என்று விளக்கிச் சொல்லப்பட்டது. மூன்றுவது ஒவ்வொரு அலகையும் $\frac{1}{3}$ அலகாய்ப் பிரித்து திரிகோணப்பாலை என்றும் $\frac{1}{2}$ அலகைக் கால் அலகாகப் பிரித்துச் சதுரப்பாலை என்றும் நால் விதபாலைகளில் பூர்வ காலத்து இராகங்கள் பாடப்பட்டு வந்தன என்னும் விஷயம் விவரித்துக்காட்டப்பட்டது. காலவது ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை, சதுரப்பாலை என்னும் நாலு பாலைகளில் பாடப்பட்டுவரும் இராகங்களில் 67 இராகங்களுக்கு அட்டவணையும் சுரஸ்தானங்களும் உதாரணமாகக்கொடுக்கப்பட்டன. இதோடு 12 அரைச் சுரங்களுக்கும் 24 ஆன கால் சுரங்களுக்கும் 48 ஆன அரைக்கால் சுரங்களுக்கும் 96 ஆன வீசம் சுரங்களுக்கும் Geometrical Progression படி பின்ன எண்களும் வைபரேஷன் கணக்கும் தந்திநாதத்தின்கணக்கும் செண்ட்ஸ்கணக்கும் கொடுக்கப்பட்டுவிளக்கிக்காட்டப்பட்டது.

நாலு விதமான பாலைகளில் கொடுக்கப்பட்ட அட்டவணைகளிலுள்ள இராகங்களில் சபையோர் விரும்பிய இராகங்கள் பாடிக் காட்டப்பட்டன. அங்கே கூடியிருந்த கர்நாடக சங்கீதத்தில் பாண்டித்தியமுள்ள வித்வான்களும் வடநாட்டில் பல இடங்களிலிருந்து வந்த பல இந்துஸ்தானி வித்வான்களும் மிக அமைதலாய் வெகு சந்தோஷத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். உதயப்பூர் சங்கீத வித்வானை சாக்ரூடன் சாயப் என்பவர் ஒரு ஸ்தாயியில் 24 சுருதிகளை வீணையில் வாசிக்கும் பொழுது வீணையோடு கூடவே தானும் பாடி மிகுந்த பிரியத்துடன் ஒப்புக் கொண்டார். வீணையின் உதவியில்லாமல் ஒரு ஸ்தாயியில் வரும் 24 சுருதிகளையும் எனது குமாரத்திகள் மரகதவல்லி அம்மாளும் (Mrs. Duraipandian) கனகவல்லி அம்மாளும் (Mrs. Navamoney) பாடிக் காட்டியபோது சங்கீதத்திற்கே புதிய உலகம் தோன்றியிருக்கிறதென்றும் சுருதியைப்பற்றி விசாரிக்கவேண்டிய கவலை இன்றோடு ஒழிந்தது என்றும் இனிமேல் சுருதிகளைப் பற்றிப் பேசுவது அவசியமில்லை என்றும் இன்னின்னவர்களின் சுருதிமுறை இன்றோடு பாதாளத்தில் தள்ளப்பட்டதென்றும் இப்படிப் பலவிதமாய்க் கொண்டாடிக் கைகளைக்கொட்டி ஆரவாரித்தார்கள். சங்கீதத்தில் அதிகத் தேர்ச்சியும் நுட்ப அறிவுமுடைய Atiya Begam Fyzee Rahimin அம்மாளும் இவ்விஷயத்தை நன்றாய்க் கவனிக்கும்படியாக Mr. கிளமெண்ட்ஸையும், Mr. பட்கண்டி அவர்களையும் வீணைக்குச் சமீபத்திலிருக்கும்படியாகச் செய்தார்கள். நுட்பமான சுருதிகளில் வரும் பல கீர்த்தனங்கள் பாடி முடிந்தவுடன் இதில் ஏதாவது ஆக்ஷேபனை யிருக்குமானால் சொல்லக் கூடியவர்கள் சொல்ல வேண்டுமென்று எல்லோரும் அறியும்படிக் கேட்கப்பட்டது. எவரும் எவ்விதமான ஆக்ஷேபனையும் சொல்லவில்லை. துவாவிம்சதி சுருதியின் ஆட்சேபம் இதோடு ஒழிந்து விட்டதென்றும் சுருதிகளைப் பற்றி இவைகள் போது மென்றும் சுருதிகளைப் பற்றி இனிமேல் விசாரிக்க வேண்டியதில்லை என்றும் பலர் பலமுகமாய்ச் சொல்லக் கூட்டம் முடிந்தது.

இதன்பின் 23-ம் தேதியில் இவைகள் யாவும் கேள்விப்பட்ட His Highness the Maharaja அவர்கள் திரும்ப இவைகளைப்பற்றித் தாமும் மகாராணி அவர்களும் கேட்கப் பிரியப்பட்டவர்களாய் Mr. Clements, Mr. Bhatkandi, President Nawab Ali Khan, His Excellency V. P. Madhava Rao, Mr. Fyzee Rahimin, Mr. Sundra Pandian, Mrs. Atya Begum Fyzee Rahimin, Mrs. Abraham Pandither, மகா-ள-ள-ஸ்ரீ பஞ்சாபகேசபாகவதர் அவர்கள், மகா-ள-ள-ஸ்ரீ N. P. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் ஆகிய இவர்கள் மாத்திரம் கூடிய சபையுன் என்னையும் என் குழந்தைகளையும் வரவழைத்து முந்தின காளில் நடந்தவைகளைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லியும் பாடியும் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

அப்போது பூர்வ தமிழின் சிறப்பும் தமிழ் மக்களின் சங்கீதத்தின் உயர்வும் அவர்கள் நட்பமான சுரங்களில் கானம் செய்து வந்த முறையும் மறைபட்டுத் துவாவிம்சதி சுருதி என்ற முறையினாலும் $\frac{2}{3}$, $\frac{3}{4}$ என்ற முறையினாலும் கலக்கங்கொண்ட இக்காலத்தில் மகாராஜா அவர்கள் ஏற்படுத்திய இந்தக் கான்பரென்ஸ் மிகுந்த பிரயோஜனத்தைத் தரும் என்றும் தொல்காப்பியமாகிய பூர்வ தமிழ் நூலை இங்கிலீஷில் மொழி பெயர்க்கச் செய்திருக்கிற மகாராஜா அவர்கள் நீடுழி வாழ்ந்திருக்கவேண்டுமென்றும் பிரார்த்திக்கப்பட்டது.

$\frac{2}{3}$, $\frac{3}{4}$ என்று பெருக்கிப் போகும் அளவில் வரும் சுரங்களும் ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் என்று சொல்லும் சுரங்களும் ஒரு காலும் நம்முடைய சங்கீதத்தில் வழங்கி வந்ததில்லை யென்றும் இனிமேலும் வழங்கி வரக்கூடியவைகள் அல்லவென்றும் பூர்வ தமிழ் நூல் அபிப்பிராயப்படியும் சங்கீத ரத்னகர் அபிப்பிராயப்படியும் Geometrical Progression என்ற வழியாய்க் கணிக்கும் கணக்கே சங்கீதத்தில் வரும் சுருதிகளையும் கணக்குகளையும் கண்டுபிடிப்பதற்கு அனுகூலமாயிருக்குமென்றும் சுருக்கமாயும் தெளிவாயும் பத்து நிமிஷத்திற்குள்ளாகச் சொல்லப்பட்டது.

அதன் பின் கர்நாடக ராகங்களில் சில கீர்த்தனங்களும் ஒரு ஸ்தாயியில் வரும் 24 சுருதிகளும் நட்பமான சுருதிகளுமுள்ள கீர்த்தனங்களும் சுமார் $\frac{3}{4}$ மணிநேரம் பாடிக் காட்டப்பட்டன. மகாராஜா அவர்களும் மகாராணி அவர்களும் மிகுந்த சந்தோஷப்பட்டுத் தங்கள் நன்றியறிதலைச் சொன்னார்கள்.

இதோடு சுரம் சுருதிகளைப்பற்றி வியாசம் வாசிப்போர் அனுபவத்தில் பாடி ருசுப்படுத்திக்காட்ட வேண்டுமென்றும் அப்படி ருசுப்படுத்தாத வியாசங்கள் பிரயோஜன மற்றவையாகும் என்றும் கான்பரென்ஸ் கூடப்போவதற்கு முன்னாலேயே Mr. V. N. Bhatkandi அவர்களுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். அதில் 22ம் தேதி சுருதிகளை ருசுப்படுத்திக்காட்டும் பொழுது பாடிக்காட்டாமல் சுருதிகளைப்பற்றிச் சொல்லும் வார்த்தைகள் பிரயோஜனமற்றவையாகும் இனிமேல் சுருதி சுரங்களைப்பற்றிச் சொல்லும் பொழுது பாடி அனுபவத்திற்குக் காட்டினால் சபையோருக்குப் பிரயோஜனமாயிருக்கும் என்று சொல்லியிருக்கிறேன். இதுபோலவே 23ம் தேதி பிற்பகலில் Mr. Clements சுருதிகளைப்பற்றிச் சொல்லும்பொழுது சங்கீத ரத்னகர் துவாவிம்சதி சுருதி முறைப்படிச் செய்துகொண்டு வந்த ஹார்மோனியத்தில் வரும் சுரங்கள் அனுபோகத்தில் பாடிக்கொண்டிருக்கும் சுரங்களுக்குச் சரியாயிருக்கின்றனவா என்று ஆராய்ச்சி செய்யப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. உதயப்பூர் சாக்ஸுடன் சாயபும் மற்றும் சமஸ்தான வித்வான்களும் பாடிக்காட்டிய கரகரப்பிரியா அல்லது காபி முதலிய ராக

கங்களின் சுரங்களுக்கு Mr. கிளமெண்ட்ஸ் துரையவர்கள் கொண்டுவந்த ஹார்மோனியத்தின் சுரங்கள் மிகக் குறைந்திருக்கிறதாக அங்கு வந்திருந்த Music Conference மெம்பர்களாலும் பிரசிடெண்ட் Mr. Thakur Nawab Ali Khan அவர்களாலும் தீர்மானிக்கப்பட்டது. இதோடு சுருதிகளைப்பற்றிச் சொல்லும் சூத்திரங்களின் அர்த்தங்கள் சரியாயில்லை என்று வாதம் நடந்து தேர்ச்சிபெற்ற சமஸ்கிருத வித்வான்களால் சரியான அர்த்தம் சொல்லப்பட்டுச் சந்தேகமும் தீர்க்கப்பட்டது.

பல முறை வாசித்துக் காட்டியும் கடைசியில் தாம் கொண்டு வந்திருந்த ஹார்மோனியத்தின் சுரங்கள் குறைந்திருக்கிறதைக் கண்டு Mr. Clements அதை ஒப்புக்கொண்டார். அதோடு அவருடைய சுருதி ஹார்மோனியத்தின் விவகாரம் ஒருவாறு முடிந்தது. இது கான்பரென்ஸ் கூடிய நாட்களில் அதிக நேரத்தையும் அநேகம் பெயருடைய ஆக்ஷேபனை சமாதானங்களையு முடையதாயிருந்ததினலும் சங்கீத ரத்னகரரின் துவாவிம்சதி சுருதி முறைப்படிச் செய்யப்பட்டிருந்ததினலும் இதை ஆக்ஷேபிக்கிறவர்கள் சிலர் இருந்ததினலும் சங்கீத சாஸ்திரத்தை விசாரிக்கும் சபையில் இது முக்கியமானதென்று நான் நினைக்கிறேன். இதை உள்ளது உள்ளபடி கான்பரென்ஸின் பிரசிடெண்டு Nawab Ali Khan அவர்களும் கான்பரென்ஸின் எல்லாக் காரியங்களையும் நடத்தி வந்த His Excellency V. P. Madhava Rao அவர்களும் மற்றும் Musical Conferenceன் மெம்பர்கள் யாவரும் அறிவார்கள். இவ்விஷயத்தைப்பற்றி Mr. Clements சொல்லியிருப்பாரானல் மிக நன்றாயிருக்கும்.

இதோடு நுட்பமான சுருதிகளை வீணையில் வாசித்துக் காட்டியதற்கு மறுநாள் Mr. Clements அவர்கள், "Equal Temperament முறைப்படி பண்டிதர் சொல்லுகிறார். நம் இந்திய சங்கீதத்தில் மேற்றிசையாரின் Equal Temperament முறையை அனுசரிப்பது இந்திய ராகங்களைக் காட்டுவதற்குக் கூடியதாயுமிருக்குமென்று நான் நினைக்கவில்லை. 22 சுருதி முறைப்படியே நம்முடைய கானமிருக்கவேண்டு" மென்று சொன்னார்கள்.

அச்சமயத்தில் President Nawab Ali Khan அவர்களையும் சபையோர்களையும் உத்திரவு கேட்டுக்கொண்டு பூர்வ தமிழ் நூல்களில் ஒரு ஸ்தாயியில் 24 சுருதிகள் உண்டென்று சொல்லியிருப்பதால் அலகு முறையில் சிறிது சந்தேகம் கொண்டு சங்கீத ரத்னகரர் 22 சுருதி உண்டென்று சொல்லுகிறார் என்றும் 22 சுருதி முறையின்படி ச-ப 13 ஆக வரவேண்டியதற்குப் பதில் ப-ரி 12ம் த-க 11 மாக வருவதினால் அவர் முறை தவறுதலென்றும் சங்கீதரத்னகார் முறைப்படி 13 வது சுருதிக்கு 709 செண்ட்ஸ்கள் வருகின்றனவென்றும் ரி ஆன மற்றவர்கள் முறைப்படி 702 செண்ட்ஸ்கள் வருகின்றனவென்றும் இவைகள் சற்காலத்தில் வழக்கத்திலிருக்கும் சுரங்களுக்கு ஒத்தவையல்லவென்றும் $\frac{2}{3}$ ஆலும் $\frac{3}{4}$ ஆலும் பெருக்கிச் செல்லும் பொழுது ஒரு நாளும் ஒரு ஸ்தாயி மிச்சமில்லாமல் முடிவடைகிறதில்லை யென்றும் தெளிவாக சுமார் $\frac{3}{4}$ மணி நேரம் பல முகமாய் எடுத்துச் சொல்லப்பட்டது.

சங்கீத ரத்னகரர் சுருதி சேர்க்கும் முறையை வெகு தெளிவாக அர்த்தம் செய்திருக்கும் தாங்கள் அவர் ஸ்தாயி முறைக்குச் சொன்ன கணக்கையும் ஒரு ஸ்தாயியில் படிப்படியாய் ஒன்றற்கொன்று தீவிரமாய் நடுவில் வேறு நாதமுண்டாகாமல் சுருதிகள் வருகின்றனவென்று சொல்லுவதையும் கிராமம் மாற்றும் பொழுது இரண்டு சுருதி மாற்றிக் கொண்டு போக காந்தார நிஷாதங்கள் ரிஷபதைவதங்களில் இலயத்தை அடைகின்றன. மூன்று சுருதி மாற்றிக்கொண்டுபோக மூன்று சுருதியுள்ள ரிஷபதைவதங்கள் ஷட்ஜம பஞ்சமங்களில் இலயத்தை

யடைகின்றனவெனச் சங்கீதரத்னகர் சொல்லுகிறார் என்று தங்கள் புஸ்தகத்திலேயே சொல்லி யிருந்தும் ஓலசையில் ஒவ்வொரு சுரமும் ஒரே அளவாயிருக்கவேண்டுமென்ற சங்கீத ரத்னகரின் கருத்தைக் கண்டுகொள்ளாமல் 78, 41, 22, 90, 49 சென்ட்ஸ்களாகச் சுருதிகள் வருகின்றனவென்று ஒழுங்கினமான முறையைச் சொல்லுகிறீர்கள். இவ்வளவு வித்தியாசமான சுரங்கள் கிரகசுரம் பாடுவதற்கு அனுகூலமாயிருக்கமாட்டா. இவை முற்றிலும் சங்கீதத்திற்குப் பொருத்தமானவையல்ல.

சுமாத்திரா, ஜாவாவிலுள்ள வாலில்லாக் குரங்குகளும் Chromatic Scale ஐ வரிசையாய்ப் பாடுகின்றனவென்று Waterhouse, Professor Owen என்ற சாஸ்திரிகள் கண்டிருக்கிறார்கள்.

ச-ப $\frac{2}{3}$ ஆக வைக்கும் பொழுது நாம் சாதாரணமாய்ப் பாடும் சுரங்களுக்குக் கொஞ்சம் கூடுதலாய்ப் போவதினால் சற்றுக் குறைத்து வைக்கவேண்டுமென்று மேற்றிசை வித்வான்கள் சொல்லுகிறார்கள். இம்முறை Mozart, Beethoven என்ற வித்வான்களால் 120 வருடங்களுக்கு முன் தான் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால் தமிழ்மக்களோ என்றால், இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னும் அதற்குப் பல்லாயிர வருடங்களுக்கு முன்னும் தமிழ்நாட்டில் மிகச் சாதாரணமாய் வழங்கி வந்திருக்கிறார்கள். அம்முறைகளை தமிழ் நாட்டில் காலது வரையும் நிலைத்திருக்கின்றன. அவைகளை மேற்று வீணையில் பாடிக் காட்டியுமிருக்கிறேன். அம்முறையே இனி உலகத்தில் நிலைத்திருக்கத் தகுந்த ஆதாரமுடையதென்று எனக்குத் தோன்றுகிறது. தாங்கள் இதற்கு ஆக்ஷேபனை சொல்லவேண்டியிருக்குமானால் அதற்குப் பதில் சொல்ல மிகச் சந்தோஷமுடையவனாயிருக்கிறேன் என்று சொல்லி சில நேரம் தாமதித்தும் எவ்விதமான ஆக்ஷேபனையும் சொல்லப்படவில்லை. சபை முடிந்தது.

சாயங்காலத்தில் இந்திய சங்கீதத்திற்கு Staff notation எப்படியிருக்க வேண்டுமென்ற விஷயத்தில் இப்போது ஒருவாறு பல தேசங்களிலும் வழக்கத்திலிருக்கும் இங்கிலீஷ் மியூசிக்கின் Staff notation எப்படி நாம் தெரிந்து கொள்ளக் கூடியதென்றும் அதோடு நம் ராகங்களில் வரும் துட்பமான சுரங்களை அதற்கு ஆதாரமான சுருதியின் மேல் இத்தனையாவது சுருதி யென்று குறித்துக் கொள்வது கல்லதென்றும் தாளங்களுக்கேற்றபடி பிரித்து அடையாளம் போடுவது அவசிய மென்றும் எனது குமாரத்தி மரகதவல்லி அம்மாளால் (Mrs. Durai-pandian) ஒரு வியாசம் வாசிக்கப்பட்டது. வாசித்த வியாசத்திற் கிணங்க ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை, சதுரப்பாலை என்ற நாலு வித சுரங்கள் உபயோகிக்கும் ராகங்களுக்கு நாலு கீர்த்தனங்களின் பல்லவி Staff notation இல் குறித்துக் காட்டப்பட்டு அதன்படி பாடியும் காட்டப்பட்டது. மீற்றிங்கில் ககனகுதூகலம் என்ற கீர்த்தனம் பாடப்பட்ட பொழுது பரோடா சமஸ்தானம் Band Master Mr. Fredilis அவர்கள் அதை Staff notation இல் குறித்துக் கொடுக்கும்படிக் கேட்டார்கள். உடனே எழுதிக் கொடுக்கப்பட்டுத் தமது Flute ல் வாசித்துக் காட்டி Staff notation பிரயோஜனத்தைச் சபையோர் அறியும்படி செய்தார்கள். சபையோர் யாவரும் மிகவும் சந்தோஷமடைந்தார்கள். இவைகள் யாவையும் கூடவேயிருந்து கண்டிருந்த Mr.Clements துரையவர்கள் நான்பதர் சங்கீதரத்னகர்களுடைய அபிப்பிராயங்களைத் தள்ளிவிட்டு மேற்றிசையாரின் சங்கீதத்தைத் தெரிந்திருப்பதினால் Equal Temperament க்கு இணக்கிறேன் என்று சொல்லுகிறார்.

பரதர், சங்கீத ரத்னகரர் ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் உண்டென்று சொல்லுகிறதினால் அவை தற்கால கானத்திற்கு முற்றிலும் ஒத்துவரா தென்று நான் தள்ளுவது உண்மையே: அதோடு தற்காலத்தில் Equal Temperament என்று மேற்றிசையார் வழங்கும் ஒரு ஸ்தாயியின் பன்னிரு சுரங்களுக்குப் பூர்வ தமிழ் மக்கள் பல்லாயிர வருடங்களுக்கு முன் பாடி வந்த சுரங்கள் சரியாயிருக்கின்றனவென்று நான் சொல்லுவதும் உண்மையே. ஆனால் இவ்விரண்டு அபிப்பிராயமும் சரியானவையல்ல வென்று நினைத்து இப்படி எழுதுகிறார்.

சங்கீத ரத்னகரர் முறைப்படித் தாம் தயார் செய்துகொண்டு வந்த ஹார்மோனியத்தைச் சரியான சுரம் கொடுக்கவில்லை என்று All-India Music Conference மெம்பர்களும், பிரசிடெண்டும், சபையோரும் தள்ளினார்களா? நான் மாத்திரம் உதவாதென்று தள்ளினேனா?

தற்காலம் ஹார்மோனியத்தில் காணப்படும் பன்னிரு சுரங்களும் வீணையில் காணப்படும் பன்னிரு சுரங்களும், வாய்ப்பாட்டில் காணப்படும் பன்னிரு சுரங்களும் ஒன்றற்கொன்று சரியாயிருக்க வில்லையா? இதில் இத்தனி ராகங்களுக்கு Staff notation குறித்து உபயோகப் படுத்த வேண்டுமென்று All-India Music சபையார் தீர்மானித்தார்களா? நான் மாத்திரம் அதைச் சொல்லுகிறேனா?

அந்தச் சமயத்தில் சங்கீத ரத்னகரர் முறைப்படி ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் உண்டென்று சொல்லும் இவரும் இவரைச் சேர்ந்தவர்களும் எங்கே போனார்கள்?

Mr. Clements, Mr. Deval இவர்களுக்கு ஒரு ஸ்தாயியில் வரும் 12 சுரங்களுக்கும் 24 சுருதிகளுக்கும் அவற்றின் மேல் வரும் நுட்பமான சுருதிகளுக்கும் Geometrical Progression படி நான் கணக்குச் சொன்னது என் மேல் தப்பிதமா?

முதல் நூற்றாண்டில் இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தின் கருத்து முற்றினதோ? Mozart, Beethoven 120 வருடங்களுக்கு முன் எழுதிய கருத்து முற்றினதோ?

ஒரு ஸ்தாயியில் இணை கிளையாய்ச் சுருதிகளைப்பற்றி எழுதும் யாவரும் ச-ப $\frac{3}{2}$ என்றும் அது 702 சென்ட்ஸ்களுடைத்தாயிருக்கிற தென்றும் சொல்லுகிறார்கள். உள்ளபடி அது 701.955 ஆக வருகிறது. இம் முறையில் ச-ப 701.955 இதோடு 701.955 ஐக் கூட்டி ஒரு ஸ்தாயிக்குரிய 1200 சென்ட்ஸில் கழிக்க 223.910 என்று ரியின் ஸ்தானம் கிடைக்கும். இது போலவே ச-ப வுக்குரிய 701.955 ஐக் கூட்டி 1200 ல் கழித்துக் கொண்டுபோக ஒவ்வொரு ஸ்தானமும் கிடைக்கும். இதில் 1200 சென்ட்ஸ்களுள்ள ஒரு ஸ்தாயி பூரணமாய் முடிய வேண்டும். எடுத்துக்கொண்ட $\frac{3}{2}$ சரியான அளவாயில்லாததினால் ஒரு ஸ்தாயிக்குக் கொஞ்சம் கூடிதலாக வருகிறது. இந்த $\frac{3}{2}$ முறைப்படி 22 சுருதிகளுக்கு 1043 சென்ட்ஸில் ஸ்தாயி முடிகிறது. இது 157 சென்ட்ஸ் ஸ்தாயிக்குக் குறைவாயிருக்கிறது. ச-ப முறைப்படி இருபத்து நாலு தடவை போவோமானால் 1247 சென்ட்ஸ்களோடு முடிகிறது. 1200 சென்ட்ஸ்களுக்கு இது சமீபமாயிருப்பதினால் ச-ப $\frac{3}{2}$ என்ற முறையிலும் ச-ப 702 சென்ட்ஸ்களிருக்கவேண்டு மென்ற முறையிலும் 24 சுருதிகளை ஒரு ஸ்தாயியில் வருமென்று தெளிவாகக் காணப்படுகிறது. இதனால் மூன்று சுருதியுள்ள ரி-த என்னும் சுரங்கள் நாலு நாலு சுருதியாக வரவேண்டுமென்பது தெளிவாகிறது. இது பூர்வ தமிழ் மக்கள் கானத்தில் கெய்தல் யாழ் அலகு முறையில் 4, 3, 2, 4, 4, 3, 2 என்று ரி-த வில் ஒவ்வொரு அலகு குறைத்து 22 சுருதியில் கானம் செய்து வழங்கி வந்த முறையாம். ஒரு ஸ்தாயியில் 24 சுருதியில் இரண்டு அலகு குறைத்துக் கானம் பண்ணிய பூர்வ தமிழ் மக்களின் கருத்தறியாமல் ஒரு ஸ்தாயியை 22 ஆக சங்கீத ரத்னகரர் பிரித்திருக்கிறார்.

ஒரு ஸ்தாயியில் ச-ப முறையில் 12 சுரங்களாய் அமைத்து 24 அலகுகளாய் நாளது வரையும் கர்நாடக சங்கீதத்தில் அனுபோகத்திலிருக்கும் சுரங்கள் சரியானவைகளோ? அல்லது ஒரு ஸ்தாயியியை 22 ஆகப் பிரித்து அதின்படி தாம் செய்த ஆர்மோனியத்தில் காகரப் பிரியா, (காபிக்குரிய) சுரங்களுக்குக் குறைத்துபோய் சபையோரால் தள்ளப்பட்ட சங்கீத ரத்னகரர் முறை சரியானதோ?

ஒரு முறையாய் ஒரு தொகையை வகுக்க உலகம் முடிந்தாலும் முடியாதென்று புள்ளி போட்டுக்கொண்டும் ஒரு முறையாய்ப் பெருக்க உலகம் முடிந்தாலும் ஒரு நாளும் ஒரு ஸ்தாயி முடிவடைகிறதில்லை என்று சடைவிரித்தும் ஆடுகின்ற இந்தப் பொல்லாதபேய் மேற்றிசையை 2500 வருடங்களாக ஆட்டிவைத்தது போதாமல் இந்தியாவையும் ஆட்ட ஆரம்பித்திருக்கிறது. இந்த அளவினுல் சங்கீதத்திற்குரிய சுரங்களைக் கண்டுபிடிப்பது கூடிய காரியமல்ல. இவ் வளவை எடுத்துகொண்டு பெருக்கி வரும் பின்னங்களையும் வைபரேஷன்களையும் விவேகிகள் இனி ஒருக்காலும் உபயோகிக்கமாட்டார்களென்று நான் நம்புகிறேன்.

ஒரு ஸ்தாயியில் ஒரே அளவான 12 சுரங்களையே பூர்வ தமிழ் மக்கள் வழங்கி வந்தார் களென்றும் அவைகளைக் கிரக மாற்றி அநேக இராகங்கள் உண்டாக்கினர்களென்றும் இந்தியா வின் குடிகளில் மிகப் பேதைகள் என்று எண்ணப்படும் இடைச்சியருங்கூட கிரக சுரம் பிடித்துக் குரவை பாடினர்களென்றும் இச்சுரங்களைப்பற்றிச் சொல்லும் தமிழ் நூல்கள் மறைந்த காலத்தில் பலர் பல விதமாய்ச் சொல்ல கேரிட்டதென்றும் பல நாள் விசாரணையின் பேரில் மேற்றிசையார் இதைக் கண்டு Equal Temperament என்று பெயர் வைத்தார்களென்றும் சொல்ல வந்ததேயொழிய நூதனமாக நான் ஒன்றும் சொல்ல வரவில்லை. தான் பாடிக்கொண் டிருக்கும் சுரத்தை ஒரு தந்தி வாத்தியத்தில் வைத்துப் பார்க்கவேண்டுமென்ற விருப்பமுடைய எவரும் பூர்வ தமிழ் மக்கள் பாடிக்கொண்டிருந்த சுரங்களே நாளது வரையும் நிலைத்திருக்கின்ற வென்று அறிவார்கள்.

சங்கீதத்திலும் சங்கீத ரத்னகரர் நூலிலும் அதிகத் தேர்ச்சியுடையவராகத் தமமை எண்ணும் ஒரு பாகவதரைச் சங்கீத ரத்னகரர் முறைப்படி ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் வைத்து அவர் சொல்லுகிற லக்ஷணப்படி ஒரு இராகம் பாடுங்கள் என்று கேட்கும்பொழுது இன்னும் இரண்டு மாதத்தில் பழகிச் சொல்லுகிறேன் என்று சொல்லுகிறார். இப்போது பழகியிருக்கும் சங்கீதம் எம்முறைப்படி என்று கேட்டால் பதில் சொல்ல வகைதெரி யாமல் விழிக்கிறார். எந்தக் காலத்திலாவது அனுபோகத்திற்கில்லாத துவாவிம்சதி சுருதி முறையை நூதனமாக இந்தியாவிற்குச்சொல்வது இந்தியாவின் பூர்வீக கானத்தின் அழகிற்கும் உயர்விற்கும் கெடுதி செய்வதாகுமென்று எண்ணுகிறேன். Music Conference-ல் நடந்த விஷயங்கள் இன்னவையென்று தெரியாமல் பலவிதமாக எழுதுவது எவருக்கும் நல்லதல்ல. அதற் குப் பதில்எழுதுவதும் எனக்குத் தகுதியாகத் தோற்றவில்லை. இதை கேரில் பார்த்துக்கொண் டிருந்த Music Conference மெம்பர்களாவது மற்றும் கனவான்களாவது President ஆவது எழுதுவது நல்லதென்று நினைக்கிறேன்.

மகா-ரா-ரா-ஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகளும் Mr. கிளமெண்ட்ஸ் துரையவர்களும் மெயில் பேப்பரில் எழுதியுள்ளதைப் பார்வையிட்டேன். கிளமெண்டஸ் துரையவர்கள் தம்முடைய அபிப்பிராயங்களை யெல்லாம் மெயில் பேப்பரில் பிரசுரஞ்செய்து ஜனங்களுக்கு விளக்கிக் காட்டு

வதை விட்டுவிட்டு சாஸ்திரிகளுக்கு எழுதிக்கொண்டிருப்பது யாதகாரணத்தினலோ அறிகிலேன். தன்னுடைய அபிப்பிராயங்களே மற்றவர்கள் மறுக்கக்கூடாதென்கிற நோக்கத்துடன் இப்படிச் செய்கிறார் போலும்.

இவ்வியாசத்தை வாசிக்கும் All-India Music Conference மெம்பர்களான கனவான்களே! இவ்வியாசம் அதிக நீளமாயிருக்கிறதென்று மெயில் பேப்பர் Editor திருப்பி அனுப்பிவிட்டார். அப்படியே சுதேச மித்திரன், ஹிண்டு, முதலிய பேப்பர்களின் Editor களும் திருப்பி அனுப்பிவிட்டார்கள். ஆகையால் இதைத் தனியாய் அச்சடித்து தங்கள் பார்வைக்கு அனுப்பலானேன். கான்பரென்ஸ் கடந்த காலத்தில் நடந்தவைகளைச் சபையின் President ஆவது Secretary ஆவது பேப்பருக்கு எழுதி அனுப்பியிருந்தால் நன்றாயிருக்கும். ஆனல் Mr. Clements கடந்தவைகளில் சிலவற்றைவிட்டு எழுதியிருப்பதால் நான் பதிலெழுதும்படி நேரிட்டது. இப்பதிலில் கண்டபடி நடந்ததோ இல்லையோ என்றும் நான் சொல்லுவது சரி அல்லது பிசகென்றும் தெரிவிப்பதோடு என்னுடைய சுருதிமுறைப் பிரசங்கத்திலும் நான் பார்த்தக்காட்டியவைகளிலும் தங்களுக்கு உண்டான அபிப்பிராயத்தையும் தாங்கள் எழுதி அனுப்பினல் அவையாவும் All-India Music Conference மெம்பர்கள் யாவருக்கும் அச்சிட்டு அனுப்புவேன்.

14

V. N. BHATKANDE Esq., B. A., L.L.B.,
Santaram House, Malabar Hill, Bombay.

My Dear Rao Saheb Pandither,

It is a practically long time since we separated at Baroda and I think I ought to take up my correspondence with you once more in my own interest. I may sincerely tell you that your great labours and scholarship very nearly stunned me. I shall be always proud of having the privilege of calling you my friend. I may or may not agree with all your views but that will never prevent me from always bearing in mind the fact that you are a great Music scholar. I am so thankful to Dewan Saheb that he brought us together. I shall certainly not fail to derive considerable benefit from your labours. I have to thank you most sincerely for coming to my help in hitting that mischievous sruti harmonium movement on the head in time. It had very nearly turned the heads of several of our workers here. Mr. Deval had almost persuaded the educational authorities of this presidency to introduce the Harmonium as a compulsory accompaniment in our schools. But for you I should not have been able to make my poor voice heard. You disposed of Deval's Sharangdev's srutis like a miracle.

Your exposition has however brought to light one fact and that is likely to disappoint all the present music enthusiasts here. I am referring to that part of your book where you say or rather point out— that with the exception of the sa and its octave, none of the intermediate notes will exactly correspond with any of our modern notes. You go on to say again that all attempts at reviving Sarangadev's music is bound to be a failure. This conclusion of yours seems to be of tremendous importance. * * * *

Yours Sincerely,
(Sd.) V. N. BHATKANDE.

எனது பிரியமுள்ள ராவ் சாஹேப் பண்டிதராவரீகளுக்கு,

காம் பரோடாவில் ஒருவரை யொருவர் விட்டுப்பிரிந்து வெகுகாலமாகிவிட்டபடியால் என்னுடைய சுயகாரியத்திற்காகவே நான் திரும்ப தங்களுக்கு எழுதுவது அவசியமாய்த் தோன்றுகிறது. சங்கீதத்திற் காகத் தாங்கள் செய்த வேலையும் தங்கள் கல்வித் திறமையும் எனக்கு அதிபிரமிப்பை உண்டுபண்ணின. தங் களே எப்போதும் என் சிநேகிதரென்று அழைக்கும் சிலாக்கியமானது எனக்கு அதிக பெருமை. சங்கீதவிஷய மாய்த் தாங்கள் சொல்லும் அபிப்பிராயங்களே நான் சரியென்று ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டா லும் தாங்கள் சங்கீதத்தில் வித்வான் என்கிற சங்கதியானது எப்போதும் என்மனதில் இருக்கும். நம்மிருவரு டைய சிநேகத்திற்கும் காரணராயிருந்த Dewan Saheb அவர்களுக்கு வந்தனம் சொல்லுகிறேன். தங்களு டைய வேலையின் பலனிலிருந்து நான் அதிக பயன் அடைவேன் என்பதற்குச் சந்தேகமில்லை. தக்க சமயம் பார்த்துத் தாங்கள் எனக்கு உதவிடாப் வந்து அநேக கெடுதிகள் செய்து வந்த சுருதி ஆர்மோனியக் கொள்கை யின் தலையை உடைத்ததற்காக அதிக நன்றியறிதலுள்ளவனாயிருக்கிறேன். சங்கீத விஷயத்தில் இங்கு உழைக் கும் அநேகருடைய இருதயத்தை இந்த சுருதி ஆர்மோனியம் கொள்ளைகொண்டு போய்விட்டது. Mr. தேவால் அவர்கள் இந்த ராஜதானியிலுள்ள பள்ளிக்கூடங்களில் இந்த சுருதி ஆர்மோனியத்தைக் கட்டாயமாய் உப யோகப்படுத்தும்படி கலாசாலை அதிபதிகளை ஏறக்குறைய சம்மதிக்கப் பண்ணிவிட்டார்கள். தாங்கள் என் உதவிக்கு வராதிருந்தால் என்னுடைய சத்தம் வனந்தரத்தில் தனியாய்க் கிடந்து கத்துகிறவனுடைய சத்தம் போலாயிருக்குமே. Mr. தேவால் அவர்களுடைய சாரங்கதேவ சுருதிகளைத் தாங்கள் அற்புதமானவிதமாய் மாய்த்து விட்டீர்கள்.

ஆனால், தாங்கள் சொல்லும் அபிப்பிராயத்தில் ஒரு விசேஷமானது இங்கிருக்கும் சங்கீத வித்வான்களுக்கு மிகவும் அதைரியத்தை உண்டாக்குகிறது. அதென்னவென்றால், சாரங்கதேவர் முறைப்படி ஒரு ஸ்தாயியில் ஷட்ஜமத்தையும் அதின் எட்டாவது சுரமாகிய ஷட்ஜமத்தையும் தவிர நடுவில் வரும் எந்த சுரமாவது தற்காலத் தில் வழங்கும் சுரங்களுக்கு ஒத்துவராது என்று சொல்லுவதுதான். சாரங்கதேவருடைய சங்கீதத்தைத் திரும்ப எடுத்து நிறுத்துவது கூடாதகாரியமென்றும் தாங்கள் சொல்லுகிறீர்கள். இந்த முடிவான வார்த்தை யானது அதிக விசேஷமான ஒரு சங்கதி. * * * * *

தங்களின் உண்மையுள்ள,

(Sd) V. N. BHATKANDE.

15

LAKSHMIPURAM,

Mysore, 10-8-1916.

DEAR SIR,

In your Tamil letter of invitation, I was glad to find that you are going again to settle the question of Srutis. I heartily support your contention that Sharanga Dev was inaccurate in many respects, and that your exposition was most convincing. I appreciate only 3 or 4 papers that were presented in that Baroda Conference and yours was the most interesting to me of all. Those of Messrs. Clements and Deval were also learned, but the theories did not agree with their practical demonstrations.

I agree to your division of the octave into 24 srutis and their demonstration through the help of your accomplished daughters. I am sure that the different notes used for the Ragas as expounded by you are correct. Only I am not yet prepared to admit the accuracy of their number of Vibration. It is my desire to call in the aid of a practical scientist in physics and

get the Vibrations of notes tested. I have expressed this idea before V. P. Madhava Rao Esq. who has approved of the proposal and if the Baroda Conference meets again I will induce the audience to have recourse to this arrangement. Can you not take up this suggestion?

If any thing was striking to me in the Baroda Conference, it was your paper and I have made a short reference to it in my book "The Psychology of Music" which will be out in a week or so.

Wishing success to your earnest attempts.

Yours truly.
(Sd.) H. P. KRISHNA RAO.

லக்ஷ்மி புரம்
மைசூர். 10-8-1916.

பிரியமுள்ள ஐயா,

தாங்கள் என்னைக் கான்பரென்ஸுக்கு அழைத்த(தமிழில் எழுதப்பட்டிருந்த) கடிதத்தில் கண்டபிர காரம் சுருதிவிஷயத்தைப் பற்றித்திரும்ப விசாரிக்கப்போகிறோம் என்று எழுதியிருந்தது எனக்கு மெத்த சந்தோஷம். சாரங்கதேவர் பல விஷயங்களில் பிசகிப்போயிருக்கிறார் என்று தாங்கள் சொல்வதை நான் மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளுகிறேன். தாங்கள் சங்கீத விஷயத்தை விஸ்தரித்ததானது எல்லாருடைய மனதிலும் நன்றுய்ப்பட்டது. பரோடா கான்பரென்சில் வாசிக்கப்பட்ட உபந்நியாசங்களில் மூன்று அல்லது நாலு வியாசங்கள் தான் எனக்கு அதிக விசேஷமானவைகளாக என் மனதில் பட்டது. அவைகளில் தங்க ளுடையது தான் எல்லாவற்றிலும் மேலாக எனக்குத்திருப்திகரத்தை உண்டாக்குகிறது. Mr. இளமண்ட்ஸ் தேவால் முதலியவர்களுடைய உபந்நியாசங்கள் அதிகக்கல்வித்திறமையைக் காட்டின போதிலும் அவர்களு டையமுறைகள் வாத்தியங்களின் ருசுவோடு ஒத்திருக்கவில்லை.

ஒரு ஸ்தாயியை தாங்கள் 24 சம பாகங்களாகப் பிரித்த முறையையும் தங்களுடைய சிறப்புவாய்ந்த கல்வித்திறமையுள்ள குமாரத்திகளின் உதவியால் தாங்கள் அதை ருசுப்படுத்தியதையும் சரியென்று ஒப்புக் கொள்ளுகிறேன். பல இராகங்களில் வருவதாகத் தாங்கள் காண்பித்த சுரங்கள் சரியென்பதற்குச் சந்தேக மில்லை. ஆனால் அந்தச் சுரங்களின் ஓசை அலகளைப்பற்றி மாத்திரம் எனக்குக் கொஞ்சம் சந்தேகமுண்டு. இயற்கை சாஸ்திரத்தில் தேறிய ஒரு நிபுணரின் உதவியால் அந்தச் சுரங்களின் ஓசை அலகளைச் சோதித்துப் பார்க்கவேண்டுமென்ற ஆசை எனக்குண்டு. நான் இது விஷயத்தைப்பற்றி மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் அவர்களிடத்தில் பிரஸ்தாபித்திருக்கிறேன். அவர்கள் அதை அங்கீகரித்ததுமல்லாமல், இன்னொரு பரோடா கான்பரென்ஸ் கூடும் பட்சத்தில் இந்தவித ஆராய்ச்சி செய்வதற்கு வித்வான்களுடன் முழுங்கு செய்வதாகவும் வாக்களித்தார்கள். தாங்கள் இதுவிஷயத்தைப் பற்றிச் சிரமம் எடுத்துக் கொள்ளக்கூடாதா?

பரோடா கான்பரென்ஸில் என் மனதில் அதிகமாய்ப் பட்டது தங்கள் உபந்நியாசந்தான். நான் எழுதியிருக்கும் "Psychology of Music" என்ற புத்தகத்தில் இதைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லி யிருக்கிறேன். இந்தப் புஸ்தகம் ஒரு வாரத்துக்குள் அநேகமாய் வெளியாகும்.

தங்களுடைய முயற்சிகளில் கடவுள் கூட இருந்து அவைகளைச் சித்திபெறச் செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

தங்களின் உண்மையுள்ள,
(Sd.) H. P. KRISHNA RAO.

16

பரோடாவில் நடந்த ஆல்-இந்தியா சங்கீத கான்பரென்ஸ்.

இவ்வியாசம் தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கத்தின் ஏழாவது கான்பரென்ஸில் மகா-ள-ள-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர் அவர்களால் படிக்கப்பட்டது.

மேற்படி தலைப்பெயர் பூண்ட சங்கமொன்றைக் கூட்டி பரோடா ராஜதானியில் ஹிஸ் ஹைனஸ் மகாராஜா காய்க்கவார் அவர்கள் ஆதரவின் பேரில் 1916 ஒ மார்ச்சு மாதம் 20ம் தேதி துவக்கி 24ம் தேதி வரையும் நடைபெற்று முடிவடைந்த விஷயம் எல்லோரும் அறிந்ததே.

இதற்காக முன்னதாகவே மகாராஜா அவர்கள் உத்திரவின்பேரில் அவ்வூர் திவான் மகா-ள-ள-ஸ்ரீ மாதவராவ் அவர்கள், கான்பரென்ஸுக்கு ஸெக்ரிட்டேரி ஸ்தானம் வஹித்த மகா-ள-ள-ஸ்ரீ சாமுவேல் ஜோசி அவர்களைக்கொண்டு இந்தியா முழுமையும் வியாபித்துள்ள சங்கீத சாஸ்திர விஷயமாய் அறிந்துள்ள பலரில் வியாலம் எழுதும் திறமையுள்ள இங்கிலீஷ் பாஷை மூலமாய் எழுதி அனுப்பும்படிக் தெரிவிக்கப்பட்டு அந்தப்படி கான்பரென்ஸ் கூட்டிய விபரமும் பலர் தெரிந்து கொண்டிருக்கலாம்.

இதில் தென்னிந்தியாவின் சங்கீத விஷயமாக இத்தென்னாட்டில் விளங்கும் சில பண்டிதர் களுக்கு அறிவிக்கப்பட்டது. அதில் தஞ்சைநகர் வாசியான ராவ்சாஹேப். மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

இத் தஞ்சைமாநகரில் சில வருஷகாலமாய் ஏற்பட்டுள்ள சங்கீத ஸமாஜத்தை நடத்தி அதில் சேர்ந்த தலைவர்களிலும் ஒருவரான ஸ்ரீ பண்டிதரவர்கள் தேர்ந்தெடுக்கொள்ளுதலுக் கிசைந்து ஒரு கான்பரென்ஸில் பிரசிடெண்டு ஸ்தானத்தை வஹித்த திவான் மாதவராயரவர்கள் அச்சமயம் பேசியதில் மஹா ராஜாக்களால் நடத்தப்பட்டும் நடத்தக்கூடியதுமான இப்பெருங்காரியத்தை மிஸ்டர் பண்டிதரவர்கள் வஹித்துச்கொண்டு நடத்திவருவதைப்பற்றி நான் மிகவும் மெச்சிக்கொள்ளு கிறேனென்றும் எல்லா வித்தைகளுக்குந்தும் உறை விடமாயிருந்த இத்தஞ்சை சமஸ்தானத்தில், சங்கீத வித்தையும் கவனித்து விடாமல் இவ்வித சங்கமொன்றை ஏற்படுத்தி சங்கீத வித்வான் களை ஆதரிக்கிற அவருடைய செயலானது அந்த வித்தையைத் திரும்ப உயிர்ப்பிக்கும் என்பதில் சந்தேகமில்லை யென்றும் சங்கங்கள் பலர் கூடி செய்யவேண்டிய தேவலை என்று தெளிவாய் விளங் கக் கூடியதென்றும் சங்கீதக் களஞ்சியம் என்று பேர் வாங்கிய இத்தஞ்சைமாநகரில் ஸ்தாபிக்கப் படவும் அதனால் இச்சங்கம் நிலைத்திருந்து நல்ல பெயர் வாங்கவும் கடவுளை நோக்கிப் பிரார்த்திக் கிறேன் என்றும் நல்ல மனதுடன் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால் இத்தஞ்சைமாநகரையும் ராவ் சாஹேப் பண்டிதரவர்களையும் ஞாபகத்தில் வைத்திருப்பவராதலால் தனது ராஜ்யத்தில் நடத்தப்படும் எல்லா இந்திய சங்கீத கான்பரென் ஸுக்கு நமது பண்டிதரவர்களும் அவசியம் வரவேண்டுமென்று கருதி அவர்களிடமிருந்து மகா-ள-ள-ஸ்ரீ பண்டிதர் அவர்களுக்கு அழைப்புப் பத்திரம் அனுப்பப்பட்டது.

ஷே அழைப்புப் பத்திரத்தைப்பெற்ற பண்டிதரவர்கள் தனது முயற்சிக்கு ஒரு பலிதகால மாயிருந்தாலும் தன்னுடைய சௌகரியத்திற்கும் தாரதிச சஞ்சாரத்துக்கும் பொருத்தமா யிருக்கவேண்டித் தெரிவித்ததின் பேரில் வேண்டிய அனுகூலங்களைச் செய்துகொடுப்பது தனது கடமையாயிருக்குமென்பதை திவான் மகா-ரா-ரா-ஸ்ரீ மாதவராயர் அவர்கள் வற்புறுத்தி எழுதியதின் பேரில் பண்டிதர் அவர்களும் அதற்கிசைய நேர்ந்தது.

பரோடா விஜயம்.

ராவ் சாஹேப் பண்டிதர் அவர்களுக்கு அனுகூலமாய்த் தனது இரண்டு குமாரிகளுடனும் மற்றும் சில சங்கீத வித்வான்களுடனும் புறப்படத் தீர்மானித்ததில் அதில் சிலர் தங்கள் தங்கள் சௌகரியக் குறைவால் வருவதற்கில்லாது போனபோதிலும் முக்கியமாய் வேண்டிய பரிவாரங்களுடன் 1916-ம் இஸ்வி மார்ச்சு மாதம் 15-ம் தேதி புதன்கிழமை மாலை 5-30 மணிக்குப் புறப்பட்டார்கள்.

எழும்பூர் ஸ்டேஷனில் இறங்கி, ஸென்றல் ஸ்டேஷனுக்கு எதிர்த்த வாடையிலுள்ளதும் பார்க்கு ஸ்டேஷனுக்குச் சமீபமாயுள்ள ஒரு பங்களாவில் தங்கினார்கள்.

ஸென்றல் ஸ்டேஷனில் புறப்படுகிற டெல்லி எக்ஸ்பிரெஸ், பகல் ஒரு மணிக்கு மேல் புறப்படுவதால் அதற்குள் விஜயநகரம் வீணை வித்வான் வேங்கடராமனாதாஸ் அவர்களும் மைலாப்பூர் வாசியான A. P. கணேசையர் அவர்களும் ஏற்கனவே குறிக்கப்பட்டவர்களில் சேர்ந்தவர்களாதலால் அவ்விடம் வந்து கலந்து கொண்டார்கள்.

பிறகு அவரவர்கள் தங்கள் வஸதியான இடங்களில் ஸ்நான போஜனாதிகளை முடித்துக் கொண்டு பகல் 12 மணிக்கே ஸென்றல் ஸ்டேஷனில் ஒன்று கூடினார்கள்.

அச்சமயத்தில் சென்னை போலீஸ் கமிஷனர் திவான் பகதூர் பராங்குசநாயுடுகாரு அவர்கள் ஸ்டேஷனில் வந்திருந்து புறப்பட்டவர்கள் எல்லோரையும் கண்டு களித்தார்கள்.

அச்சமயம் புறப்பட்டவர்கள் 12 பேர். இதில் பண்டிதரைச் சேர்ந்த இனம் ஏழு பேரும் அவர்களை அனுசரித்தவர்களாய் ஐந்து பிராமணர்களும் சேர்ந்திருந்ததைக் கவனிக்கும் பொழுது ப்ராக்ருதி சுரங்கள் ஏழும் விக்ருதி சுரங்கள் ஐந்தும் ஆக 12 சுரங்கள் ஒன்று சேருவதால் தான் சங்கீதம் என்ற முழுப்பெயரை அடைகிறது என்பதை நன்குணர்த்தியது போலும்.

ஒரு ஸ்தாயியில் புறப்பட்ட பன்னிருவர்களையும் யார் யாரை எந்த ஸ்தானத்தில் வைப்பது என்று ஒரு தோற்ற முண்டாகுமல்லவா? அதற்கு ஒருவாறு இப்படி அமைத்துக்கொள்ளலாம்.

கோமல நிஷாதத்தில் மிஸ்ஸஸ் பண்டிதரவர்கள், சுத்தமத்திமத்தில் கனகவல்லி அம்மாள், ஷட்ஜஸ்தானத்தில் பண்டிதரவர்கள், பஞ்சம ஸ்தானத்தில் மரகதவல்லி அம்மாள், தீவ்ர ரிஷபத்தில் துரைப்பாண்டியன், கோமலகாந்தாரத்தில் சுந்தரபாண்டியன், தீவ்ரதைவதத்தில் தங்கையா, அந்த காந்தாரத்தில் வீணை வேங்கடராமணதாஸ், காகலி நிஷாதத்தில் என். பி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள், பிரதிமத்திமத்தில் பஞ்சாபகேசபாகவதர், கோமல ரிஷபத்தில் ஏ. பி. கணேசையர் அவர்கள், கோமல தைவதத்தில் சேஷாசலபாகவதர். இப்படியாக இப்பன்னிருவர்களும் அவரவர்கள் ஸ்தானங்களில் அமர்ந்தார்கள். திவான் பகதூர் மகா-ரா-ரா-ஸ்ரீ பராங்குச நாயுடுகாரு அவர்கள் மிகுந்த அன்புபாராட்டி ஒவ்வொருவரும் சௌக்கியமாக உட்கார்ந்ததை விசாரித்து க்ஷேமமாயும் சுகதோஷமாயும் போய் ஜெயத்தை அடைந்து சௌக்கியமாய் வந்து சேர வாழ்த்துக்கள் கூறி அன்புள்ள தனது மலர்ந்த முகத்தோடு வழியனுப்பினார்கள்.

பூனு ஸ்டேஷன் வந்து சேர்ந்தது. அங்குப் பண்டிதரவர்களுக்குச் சொந்தமாயுள்ள Rev. ஏசுவடியான் அவர்களின் உதவியால் பிரகிருதி விக்ருதிகளுக்குத் தனித் தனியே அவ் வூரில் பெங்களூரிலிருந்து வந்திருக்கும் மெடிக்கல் காலேஜ் மாணவர்களில் இரண்டு பிராமணச் சிறுவர்களிடம் தெரிவித்து அ காலேஜிலுள்ள பிராமண விடுதியில் விக்ருதிகளுக்கு அன்ன மளிக்கச் செய்து பிரகிருதி சுரங்களைத் தனது ஜாகையில் உபசரித்தார்.

அ மாணவர்கள் மிகவும் அன்புடன் பானத்திற்கு டீயும் ஸ்நானத்திற்கு வெந்நீரும் உடனே போஜனமும் தந்து அதி சிக்கிரமாய் வண்டி வைத்து 9½ மணிக்குப் புறப்பட வேண்டிய வண் டிக்குத் தவக்கமன்னியில் 10 நிமிஷம் முன்னதாகவே வரும்படிக் கொண்டு வந்து விட்டார்கள்.

6⅓ மணி முதல் 9½ மணி வரையில் அம்மாணவர்கள் இருவரும் வெகு சுறு சுறுப்பாய் நடந்து ஒரு நிமிஷமும் இளைப்பாறுமல் உபசரித்த இவர்களது உபகாரத்தை நினைக்கும் போது எவ்வளவு ஜன்மத்திலும் மறக்க முடியாத விஷயம் என்று இவர்களையும், இவர்களை ஏவிய பாதிரி யார் அவர்களையும் பதிவு செய்யப்பட்டது. உடனே வண்டியும் புறப்பட்டது.

சந்திரபகவான் நான் காட்டுகிற காக்ஷியைக்காணக் கண்ணயர வேண்டாம் என்றார். பகல் கண்டதற்கு இது கண்காக்ஷி யென்று நினைத்து விழித்திருந்தோம். ரயில் வண்டியானது ஒரு இருட்டறையில் புகுந்து வெளிப்பட்டது. அங்குப் பார்த்தால் ஒரு பக்கம் மலையின் உயர்ச்சியும் ஒருபக்கம் பள்ளத்தாக்கும் இருப்பதும் இதனடுவே வண்டி போவதும் பார்க்க இச்சமயம் மித் திரன் உதவியிருந்தால், கண்காக்ஷி விஸ்தாரமாயிருக்கும். ஆகிலும் இது கண் படைத்தவர்க ளுக்கு விந்தைதான் போன்று களியுற்றோம். இவ்வாறு பல குகைகளில் வண்டி பிரவேசித்துப் போகும்போது கர்மபாசத்தினுல் இழுக்கப்படும் ஜீவன் கர்ப்பவாசமும், வெளியேறுவதுமான செய்கைபோல் தோற்றியது. பிறகு பம்பாய்ஸ்டேஷனைக் கண்டோம். வியப்புற்று திகைத் தோம். விக்டோரியா என்னும் வண்டியில் கொஞ்ச தூரம் மாட மாளிகையுள்ள வீதிகளின் வழியே சென்று மற்றோர் ஸ்டேஷனில் பரோடாவுக்குச் செல்லும் வண்டியில்அமர்ந்தோம். காலை 7 மணிக்கு வண்டி புறப்பட்டது. 9 மணி வரையில் பம்பாய்ப் பட்டணத்தைத் தாண்டியதாகத் தெரியவில்லை. பிறகு ஒரு ஸ்டேஷனில் வரும்பொழுது நாங்கள் இந்த வண்டியில் புறப்பட்டு வருவதை பரோடா திவான் மகா-ரா-ரா-ஸ்ரீ மாதவராயர் அவர்களுக்கு ஒரு தந்தி மூலமாய்த் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. அன்று மாலை ஐந்து மணி வரையில் முதல் நாளைப்போல் பழம், பால்தான் ஆகாரம்.

5 மணிக்கு பரோடா ஸ்டேஷன் வந்தபோது திவான் மகா-ரா-ரா-ஸ்ரீ மாதவராயர் அவர்களால் அனுப்பப்பட்ட அரண்மனை உத்யோகஸ்தர்களும் பல வேலைக்காரர்களுமான அநே கர் கூடியிருந்தார்கள். ஸப்த சுரம் போலுள்ள வாரத்தில் ஏழாவது வாரமான ஸ்திர வாரத்தில் விக்ருதி சுரம் போலுள்ள 5 மணி வேளையில் பிரகிருதி விக்ருதி பேதங்களால் பல இராகங்கள் உண்டாகின்றன என்பதைக் காட்டுவதுபோல் அநேக ஜனங்கள் ராவ் சாஹேப் பண்டிதர் அவர் களிடம் அதுராகத்தோடு சென்று ஆதரவுடன் இனிமையாய் கை குலுக்கி உபசரித்து ஊடாடி எல்லோரும் ஏற்றமுடன் ஐக்கியமாய் ஒற்றுமைப் பட்டு ஓதிய ஸௌஜன்யம் அதைக் கண்டு களியாதாரைக் காணக்கிடைத்தோமில்லை.

உடனே மோட்டார்காரிலும் இரட்டைப்புரவி வண்டியிலும் ஒற்றைக்குதிரை பீட்டனிலும் சென்று இந்தியன் கெஸ்டஹவுஸ் என்ற மாடகூடம் தோப்புத்தரவுகளடங்கிய ஓர் பெருத்த விடு தியில், சௌகரியமாய் வாசம் செய்ய இடமளித்து உதவினர்கள்.

வாசஸ்தல விசேடம்

ஒரு பக்கத்தில் பிராமணர்களுக்குப் போஜனம் தயாராகிறது. மற்றோர் பக்கத்தில் வெந்நீர் காய்ந்து கொண்டு சீக்கிரம் ஸ்நானம் செய்யுங்கள் என்று தூண்டுகிறது. மற்றோர் அறையில் பழமும், பாலும் பிஸ்கோத்தும் நாங்கள் இங்கு வசிக்கிறோம் நீங்கள் நினைத்தபோது உதவுவோம் என்றன. மின்சார விளக்குகள் இடை இடையே பழங்கள் போல் தொங்கி, நாங்கள் இல்லாத இடம் இராவென்றன. காற்றில்லாவிடத்தில் காற்றடி நான் உபசரிப்பேன் என்கிறது. இப்படியாக நினைத்ததை அனுபவிக்கக் கொடுக்கும் நவநிதி போலும் ஆவலை அடக்கும் தேவலோகம்போலும்விளங்கி மனமகிழ்ச்சியைக்கொடுத்ததால் ஸ்நானம், தியானம், பூஜை, போஜனம் இவைகளை வழுவற நடத்தி தூரதேசப் பிரயாணசிரமத்தை இளைப்பாறி இருந்து வென்றோம்.

மறுநாள் ஆதிவாரம் தோன்றியது. அன்றுகாலை திவான் மகா-ரா-ரா-ஸ்ரீ மாதவ ராயர் அவர்களும் மற்ற உபஸ்தகர்களுடன் தோன்றி வேண்டிய சௌகரியங்களைப் பண்டிதர் அவர்களிடம் விசாரித்து இருப்பதுபோக இல்லாததற்கு ஏவினர்கள்.

மறுநாள் முதல் நடக்கப்போகும் கான்பரென்ஸுக்கு வந்த பல தேசத்தவர்களும் தங்குவதற்கு அநேக ஜாகைகள் அமர்த்தப் பட்டிருந்தபோதிலும் இதுதான் தங்களுக்கு சௌகரியமாயுள்ளது என்றும் அறிவித்தார்.

கான்பரென்ஸ் கால அட்டவணையில் (programme) முதலாவதான தெய்வ வணக்கத்தை ராவ் சாஹேப் பண்டிதர் அவர்களின் குமாரிகளால் ஸ்தோத்திரிக்கப்படும் என்று எழுதப்பட்டிருந்தபடியால் அதற்குரிய ஸ்தோத்திரப்பாடல்களில் எதைப்பாடலாம் என்று யோசித்து திவான் மகா-ரா-ரா-ஸ்ரீ மாதவராயர் அவர்களும் மகா-ரா-ரா-ஸ்ரீ பாத்கண்டே அவர்களும், கான்பரென்ஸ் பிரசிடெண்டு ஸ்தானத்தை வகிக்க இருக்கும் மகா-ரா-ரா-ஸ்ரீ நவாப் ஆலிக்கான் அவர்களும் தியாகராஜசுவாமி கீர்த்தனங்களில் முக்கியமாயுள்ளதும், உருக்கமாயுள்ளதும் காலத்திற்கேற்றதும் ஹிந்துஸ்தான் இராகங்களில் சேராததாயுமுள்ள அடாணை தேவகாந்தாரி என்று சொல்லப்படும் இராகங்களிலுள்ள இரண்டு கீர்த்தனைகளைப் பாடத் தீர்மானித்தார்கள்.

அன்று மாலை திவான் மகா-ரா-ரா-ஸ்ரீ மாதவராயர் அவர்கள் கிருகத்தில் ஓர் சப் கமிட்டி மீற்றிங் கூட்டப்பட்டு ஒவ்வொரு வியாசத்திற்கும் குறிப்பிட்டிருக்கும் காலத்திற்கு மேற்பட்டுக் கொஞ்சம் காலஅளவைத்தரவேண்டுமென்று மகா-ரா-ரா-ஸ்ரீ ஹரிதாகபூஷணமையர் அவர்கள் முதலான சிலர் வாதாடிக்கேட்டுக்கொண்டார்கள். கடைசியாக ஸ்ரீ ஆபிரகாம் பண்டிதர் அவர்களால் எல்லா வியாசங்களும் புரோகிராமில் கண்டபடியே குறித்த காலத்திற்குள் வாசிக்கப்படவேண்டுமென்றும் அதற்கேற்ற விதமாய் முக்கியமான இடங்களை மாத்திரம் வாசித்து முடிக்கவேண்டுமென்றும் நாம் காளையதினம் நடக்கவேண்டிய காரியங்களை யோசிக்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டு சபையோர் யாவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

உடனே திவான் மகா-ரா-ரா-ஸ்ரீ மாதவராயரவர்களால் பண்டிதர் அவர்களோடு பண்டிதர் அவர்களின் குழந்தைகள் எவ்விதமான சௌகரியத்தோடு உட்கார்ந்து பாடவேண்டுமோ அவ்விதம் அமையப்பெறும்படி கான்பரென்ஸ் ஹாலில் சீர்திருத்தம் செய்யப்பட்டது. அதுபோல மறுநாள் சோம்வாரத்தன்று கான்பரென்ஸுக்கு வந்திருக்கும் வித்வான்களும் வியாசகர்களும் போஷகர்களும் ஆதரிப்போர்களுமான மகாஜனங்கள் காலை 5 மணி முதலாகவே ஸ்நானபானாதிகளைச் செய்து கொண்டு அவரவர்கள் அந்தஸ்துக்குரிய இடங்களில் அமர்ந்தார்கள். கடைசியாக திவான் மகா-ரா-ரா-ஸ்ரீ மாதவராயர் அவர்களும் சபையிருக்கவேண்டிய அமைப்பு சரியாயுள்ளதா

என்று நிதானித்து விட்டு சர்வமகாஜனங்களுடன் மகாராஜா அவர்களின் வரவிற்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் மகாராஜா அவர்கள் வருகிறார்களென்ற அறிகுறி காணப்பட்டது.

சர்வ ஜனங்களும் ஆவலுடன் கவனித்த சமயத்தில் மகாராணி சமேதராய் மகாராஜா அவர்கள் ப்ரசன்னமானதைக் கண்ட சர்வ ஜனங்களும் எழுந்து நின்று மரியாதை செய்ய மகாராஜா அவர்களும் எல்லோரையும் கவனித்து தனது ஸ்தானத்தை வஹித்தார். அச்சமயம் ஓர் நிமிஷம் வரையில் நிச்சப்தமும் அதிலிருந்து ஓர்பிரணவ நாதமும் அதைத் தொடர்ந்து தெய்வ வணக்கமும் பண்டிதர் அவர்களின் குழந்தைகளால் பாடப்பட்ட பொழுது சர்வ ஜனங்களின் மனதும் அசைவற்று ஆனந்தத்திலுல் முழுகப்பட்டு விட்டது. உடனே ராஜ கீதமும் பாடப்பட்டது. பிறகு சபை நடுவில் திவான் மாதவராயரவர்கள் எழுந்து கான்பரென்ஸின் ஆரம்ப பிரசங்கம் செய்து கான்பரென்ஸை எதோக்தமாகத் துவக்க மகாராஜா அவர்களின் அநுமதியைப் பிரார்த்தித்தார்கள். உடனே சர்வ ஜனங்களின் கரகோஷமத்தியில் மகாராஜா அவர்கள் எழுந்து நின்று சர்வ வித்தைகளிலும் சிறந்ததான இச்சங்கீத வித்தையை பள்ளியில் படிக்கும் ஆண்கள், பெண்கள் முதலாய் எல்லோரும் எளிதில் அறிந்து பாடும்படி கொட்டேஷன் மூலமாக ஒழுங்கு படுத்தி வெளிப்படுத்துவதற்கு இப்பொழுது கூட்டப்பட்ட இச்சங்கமானது மிகுந்த ஆதரவளிக்கும் என்று நம்புகிறேன் என்று சொல்லிக் கான்பரென்ஸைத் திறந்து வைத்தார்.

உடனே நவாப் ஆலிக்கான் அவர்களைப் பிரசிடெண்ட் ஸ்தானத்தை வஹிக்கும்படி எல்லோரும் கோரி ஆமோதிக்கப்பட்டு அவரும் அந்த ஸ்தானத்தை வஹித்தார். சங்கீத சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்து அதன் ரகசியங்களை நான்முகமாய் ஏற்கனவே வெளிப்படுத்தியிருக்கின்ற மகா-ரா-ரா-ஸ்ரீ பாத்கண்டே அவர்கள் சங்கீத சாஸ்திரத்தில் வடமொழியினுல் கூறப்படும் கிரந்தங்களின் ஆதாரங்களைக்கொண்டு த்வாவிம்சதி சுருதியின் ரகசியத்தை ஒருவாறு வெளியிட்டுப் பேசினர். இப்படியாக அவரவர்கள் தங்கள் தங்கள் வியாசங்களைக் கால அட்டவணையின் பிரகாரம் படித்து வந்தார்கள்.

ஷ கான்பரென்ஸ் ஆரம்பத்தில் ராவ் சாஹேப் பண்டிதர் அவர்களின் புத்திரிகள் சௌபாக்கியவதி மரகதவல்லியம்மாளும், சௌபாக்கியவதி கனகவல்லி அம்மாளும் தெய்வ வணக்கமாக முதலாவது பாடப்பெற்றது நம்மெல்லொரும் சந்தோஷிக்கப்படும் விஷயம். மேலும் அவ்விதமாகவே சபை ஆரம்பிக்கும் ஒவ்வொரு தினத்திலும் இவர்களையே பாடச் செய்ய எல்லோருடைய கோரிக்கையும் உண்டாகி அதுபோல் நடந்தேறியதும் இத்தென்னாட்டுச் சங்கீதத்திற்கும் பெருமையானதால் இதுவும் மிகுந்த சந்தோஷத்திற்குக் காரணம்.

கான்பரென்ஸில் நடந்த விஷயங்கள் இங்கிலீஷ் பாஷையில் நடந்ததால் விபரமாக அறிந்து கொள்ள முடியவில்லை. ஆகிலும் அச்சபையின் குறிப்புகளால் ஒருவாறு அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அச்சபையில் மிகுந்த செல்வாக்கை அடைந்திருந்த ஓர் மகமதிய துரைசாணி Atiya Begum Fyzee Rahimin அவர்கள் மற்றொருவருடன் பேசிக்கொண்டிருந்ததில் சொல்லப்பட்டதை பக்கத்திலிருந்த என்னால் கேட்கப்பட்டபோது சங்கீத விஷயம் வாதிப்பதிலும் சண்டையிடுவதிலும் என்ன பிரயோஜனம். பண்டிதர் அவர்களின் குமரிகளைக் கொஞ்சம் பாடச் சொன்னாலும் சுகமாகக் கேட்கலாம். பொழுதோ விருதாவாகப் போகிறது. உஸ் என்று பெருமூச்சுவிட்டு ஒருவரிடம் சொன்னதை நான் கேட்டேன். தவிர பொது ஜனங்கள் அடைந்திருந்த உற்சாகக் குறைவைக் கொண்டும் ஸ்தூலமாக கான்பரென்ஸில் வாசிக்கப்படும் வியாசங்கள்

இவர்களுக்கு ஸாரமாக இருக்கவில்லையோ என்று நான் நினைக்க நேர்ந்தது. இப்படியாக இரண்டு நாள் மீட்டிங் நடந்தேறியது. பிறகு மூன்றாவது நாளில் பண்டிதர் அவர்களாலும் வியாசம் வாசிக்கப்பட்டது. இந்த வியாசத்திற்கு 3 மணி நேரம் வரையில் கால வரை யிருந்ததால் மற்றவர்களைக் காட்டிலும் நீண்டகால அளவைப் பெற்றிருந்த இந்த வியாசத் திற்கு ஏற்கனவே வாசிக்கப்பட்ட வியாசங்களின் காலத்தின் அளவை வியாசங்களுக்குத் தக்கபடி குறிப்பிட்டிருந்த காலத்திலிருந்து 5 நிமிஷம் 10 நிமிஷம் குறைத்து முடிக்கும்படி தூண்டிக்கொண்டு வந்த பிரசிடெண்ட் நவாப் ஆலிக்கான் அவர்கள் 3 மணிநேரத்தைப் பெற்றி ருக்கும் நமது பண்டிதர் அவர்களின் வியாசத்தையும் அவ்வாறு குறைக்கச் செய்வாரோ என்ற கவலை மேலாடிக் கொண்டிருந்தது. ஆனால் பிரசிடெண்ட் ஸ்தானத்தை வஹித்துள்ள நவாப் ஆலிக்கான் அவர்களின் திறமையை யோஜிக்கும்போது ஷேயார் சங்கீத விற்பன்னர், ஆர்மோனி யம் வாசிப்பதில் ஒருகையினால் தாளம் போட்டுக் கொண்டு மற்றொருகையினால் வாசிக்கிற பழக் கத்தை இரண்டு கைகளுக்கும் பழக்கி வைத்திருப்பவர், ஸுஸ்வரமாய்ப் பாடக்கூடிய சக்தியுள் ளவர், பெருத்த ஜமீன்தார், கல்ல குணமுள்ளவர் என்று விளங்கியதைக் கொண்டு அரை மணி நேரம் அதிகமாக நடந்திருப்பதைக்கூட மறந்து விஷயத்தின் சாரத்தில் கவனம் செலுத்தி யிருக் கிறார் என்று தெரியவந்தது.

ராவ்சாஹேப் பண்டிதர் அவர்களின் வியாசத்தை அவரது மருமகன் மகா-ரா-ரா-ஸ்ரீ துரைப் பாண்டி அவர்களாலும் மகா-ரா-ரா-ஸ்ரீ N. P. சுப்பிரமணிய ஐயர் அவர்களாலும் வாசிக்கப்பட்ட உடனே மற்ற விஷயங்களையும் சபையோருக்கு எடுத்துச்சொல்ல பண்டிதர் அவர்கள் எழுந்து தான் பேசுவது தமிழ்ப்பாஷையானதால் சர்வஜனங்களும் தெரிந்துகொள்ள மகா-ரா-ரா-ஸ்ரீ N. P. சுப்பிரமணிய ஐயர் அவர்களும் பிறகு சென்னை வாசியான C. R. சீனிவாஸ ஐயங்கார் அவர் களும் திவிபாஷிகளாயிருந்து இங்கிலீஷில் மொழிபெயர்த்துத் தெரிவித்தார்கள். இதில் பண்டி தர் அவர்கள் தமிழ்ப் பாஷையிலுள்ள கிரந்தங்களில் நூல்முறையுடன் சொல்லியிருக்கிற முறைப் படி ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை, சதுரப்பாலை என்ற பிரிவில் 12, 24, 48, 96 வகைகளாகப் பாடப்பட்டும் அவ்வாறே வீணையின் ஸ்தானங்கள் பிரிக்கப்பட்டு இப்போதுள்ள 12 இடங்களினின்றும் ஒரு ஒரு இடை வெளிகளிலும் அரையாகவும், காலாகவும் அரைக்காலாக வும் வீசமாகவும் இது அனுபவத்திலிருப்பதாகவும் தெரிவித்தார். பிறகு "முக்கியமாயுள்ள 24 ஸ்தானங்களை இவ்வித ரகசியத்தைச் சிலர் உணராமலும் உணர்ந்தவர்களிற் சிலர் விளக்கிச் சொல்லத் தெரியாமல் மயங்கி 22 ஸ்தானத்துடன் நின்றுவிட்டார்கள். இவைகளைப்பற்றி நான் பேசும் பொழுதெல்லாம் என்னைச்சிலர் சங்கீதத்தின் நாட்டத்தை ஞானமியவில்லை என்றும் என்னைப் பைத்தியக்காரனென்றும் சொல்லத்தலைப்பட்டார்கள். ஆனாலும் எனது பெண்ணை மரகதவல்லி அம்மாளின் உதவியைக்கொண்டு கானத்தில் விளங்கும் ஒவ்வொரு சுருதி ஸ்தானங் களையும் யான் கவனித்து அனுபவ கீதத்திற்கும் தமிழ் நூல் ஆதாரங்களுக்கும் ஒத்துமையா யுள்ள இந்த ரகசியத்தை என்னால் அடக்கிவிட முடியாது. இதற்காக என்னால் ஓர் நூலெழுதி வந்து கொண்டிருக்கிறது. இந்த ரகசிய முறைகளை என் பிள்ளைகளுக்குப் படித்துக் கொடுக் கும் உபாத்தியாயராய் இப்பொழுது பிடில் வாசித்த மகா-ரா-ரா-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதரான இவருக்கும் நான் சொல்லவில்லை. அவரும் 22 சுருதியையே நம்பிக்கொண்டிருப்பவர். உங்க ளோடு அவரும் ஒருவராய் இப்பொழுதுதான் தெரிந்து கொள்ளப்போகிறார்." என்கிறவரையில் சொன்னார்கள். இந்தசமயம் சபையிலுள்ள எல்லோரும் என்னை ஒரே காலத்தில் பார்க்கும் பாக்கி யத்தை அடைந்தேன். ஆனால் நான் வெட்கத்தை அடையவேண்டியதிருக்கு மென்று சிலர் நினைக்க நேர்ந்தாலும் நான் மகிழ்ச்சியுள்ளவனாகவே இருந்தேன். ஏனென்றால் சங்கீதம், சமுத்திர

ரூபமாயுள்ளபோது, ஒருவன் சொல்லக்கூடியது ஸ்வல்பமாகத்தான் இருக்கும்; இதனால் "கற்றது கைம்மண்ணளவு, கல்லாததுலகளவு" என்ற வாக்கியத்தையே நினைப்பில் வைத்திருக்கிற எனக்கு வெட்கத்தைத் தரவில்லை. தவிர நமது மாணாக்கர்களுக்காவது இந்த இரகசியம் தெரிந்திருக்கிற தல்லவா என்ற மகிழ்ச்சியும் தந்தது.

இதன் பிறகு பண்டிதரவர்கள் தான் குறிப்பிட்டு வைத்திருக்கிற சுருதி ஸ்தானங்களில் சில வற்றை இந்த இராகங்களில் இந்த சுருதி ஸ்தானங்கள் வந்து கொண்டிருக்கின்றன என்பதைஎன் னால் சொல்லிவைத்திருக்கிற கீர்த்தனங்கள் மூலமாய் தனது பெண்களைக்கொண்டு பாடச்செய்து காட்டினார்கள். இதில் (ராம பாணத்தான) என்கிற ஸாவேரி இராகத்தில் உள்ள ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனத்தில் (ரா) என்கிற அக்ஷரத்தை இழுத்து (ம) என்கிற அக்ஷரத்தைச் சொல்லுவதற்கு முன்னுள்ள சுத்த ரிஷப ஸ்தானத்தில் நிற்கும்போது மகா-ரா-ரா-ஸ்ரீ ஹரிநாக பூஷணமையர் என்ற சங்கீத வித்வான் அந்த இடத்தை இன்னும் குறைத்துப் பிடிக்கவேண்டு மென்று தான் பாடிக்காட்டும்போது ஷட்ஜ சுரத்தினால் இழுக்கப்பட்டு விட்டார். இவரது வாதத்தை மகா-ரா-ரா-ஸ்ரீ சிட்டிபாபு நாயுடு என்பவர் சமாதானஞ்செய்தார். இதன் பிறகு வீணை யிலுள்ள 24 ஸ்தானங்களையும் படித்து வரிசைக் கிரமமாயும் பாடிக்காட்டப்பட்டது. இதை இரண்டு தடவை மறுபடி திரும்பிச் சொன்னபோதும் தந்தி நாதத்திற்கும் சாரீரத்திற்கும் ஒற்றுமையாயிருந்ததாடு கொஞ்சமேனும் வித்தியாசமில்லாமல் இருந்ததை எல்லோரும் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.

இந்த சமயத்தில் இந்துஸ்தான் சங்கீதம் பாடுவதில் கியாதிபெற்றவரும் தருபத் வித்வானும் உதயப்பூர் ஸாக்ருடீன் என்பவர் இந்த சுருதி வரிசைகளைத் தானும் சமீபத்தில் உட்கார்ந்து வீணை யுடன் பாடிப்பார்த்தார். ஆனால் மேரு முதல் அளவாயுள்ள 24 வது மெட்டில் வரவும் ஷட்ஜஸ் தானம் கிடைத்து விட்டதாக நினைத்து நின்றுவிட்டார். ஆகிலும் சுருதி ஞானத்தில் தேர்ந்தவ ரென்பதில் தடையில்லை. இப்படியாக வரிசைக்கிரமமாய் இந்தச் சுருதிஸ்தானங்களைப் படித்துக் காட்டும் பொழுது பெண்பிள்ளைகளாயிருந்தபோதிலும் தைரியத்துடனும் உற்சாகத்துடனும் சொல்லப்பட்டு ஒற்றுமையாயிருந்ததை நினைத்தால் வாஸ்தவமாய் பண்டிதர் அவர்களுக்கு ஈசனு டையஅருள் உதவியும் சேர்ந்திருக்கிறதாகத் தீர்மானித்தேன். இப்படியாக சுருதிஸ்தானங்களைச் சபைமத்தியில்நிரூபித்து வாத்தியத்துடன் தனித்தனியாகவும்தொடர்ச்சியாயும்அனுபவத்திலுள்ள தாயும் எடுத்துக்காட்டியவர் நமது பண்டிதரவர்கள்தான்; மற்றவர்கள் இப்படி ரூபித்துக்காட்ட முன்வரவில்லை. இதன் பேரில் கனம் பண்டிதர் அவர்கள் முடிவாக ஒரு விஞ்ஞாபனமும் செய்து கொண்டார்கள். அதாவது "இப்போது நான் எடுத்துக்காட்டியமுறையை ஆக்ஷேபிக்க இஷ்டமுள் ளவர்கள் கேட்டால் நான் சமாதானம் சொல்லத் தயாராயிருக்கிறேன்" என்றும் கேட்டுக்கொண் டார்கள். அப்போது ஆக்ஷேபிக்க ஒருவரும் முன்வரவில்லை. மகா-ரா-ரா-ஸ்ரீ திவான் மாதவராவ் அவர்களும் பரம சந்தோஷத்தை அடைந்திருந்தார்கள். இதனால் மறுநாள் ஹிஸ்ஹைனஸ் மகா ராஜா அவர்கள் தமது சமூகத்தில் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தப்படி முக்கியமான சிலருடன் வீணையில் மிகுந்த பாண்டித்தியமுள்ள தமது மகாராணி அவர்களுடன் தனிமையாக இருந்து குழந்தைகளின் கானத்தைக் கேட்டதுடன் ராவ்சாஹேப் பண்டிதரவர்கள் மகா-ரா-ரா-ஸ்ரீ N. P. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் மூலமாக இங்கிலீஷில் தெரிவிக்கும்படி செய்து சங்கீத சாஸ்திரத்தின் பெருமையு தென்னிந்தியாவில் புராதனமாய் சீர்திருத்தத்துடன் நடைபெற்று வருவதையும் அதில் தமிழ் நூலில் சொல்லப்பட்டிருக்கிற பாலை விபரங்களையும் அதனால் சுருதிஸ் தானங்கள் தெளிவாய் நிர்ணயமாகிற தென்றும் அதற்கு உதவியாக வீணையும் இன்ன இலக்ஷணத்

துடன் அமைக்கப்பட வேண்டுமென்பதையும் விசிதமாயும் சுருக்கமாயும் தெரிவித்தார்கள். மகா-ரா-ரா-ஸ்ரீ மாதவராயர் அவர்களும் பண்டிதர் அவர்களைப்பற்றி ஒவ்வொரு விஷயத்திலும் நட்பமான ஆராய்ச்சி செய்யும்போது எவ்வளவு பிரயாசை யிருந்தாலும் பின்வாங்குபவர் அல்ல என்னும் சொல்லும்போது மகாராஜா அவர்கள் வெகுவாக சந்தோஷித்தார்கள். பிறகு கான்பரென்ஸில் நடந்ததுபோல் சுருதிஸ்தான விபரங்களும் காண்பிக்கப்பட்டன. அப்போது மகாராஜா அவர்கள் சந்தோஷித்து பண்டிதர் அவர்களின் ஆராய்ச்சிக்கு மெச்சிக்கொண்டு புகழ்ந்தார்கள்.

இதில் கான்பரென்ஸ் நடந்தகாலத்தில் குழந்தைகளால் படிக்கப்பட்ட ககனகுதூகலம் என்ற ராகத்திலுள்ள ரகுவம்ச சுதாமபுதிசந்த' என்ற கீர்த்தனத்தைக் கேட்ட ப்யாண்ட் மாஸ்டர் Mr. Fredlis வெகு சந்தோஷப்பட்டு இதை நொட்டேஷனில் குறித்துக்கொடுக்கும்படி கேட்டார் அதுபோலவே சௌபாக்கியவதி மரகதவல்லி அம்மாளால் அடையாளத்துடன் குறித்துக்கொடுக்கப்பட்டது. அதை ப்யாண்ட்மாஸ்டர் தனது ப்ளூட் என்ற வாத்தியத்தில் ஊதி மகிழ்ந்துகொண்டு எவ்வளவு கீர்த்தனையானாலும் தேவையிருக்குமென்று கேட்டுக்கொண்டார்.

மற்றோர் நாள் மகா-ரா-ரா-ஸ்ரீ திவான் மாதவராயர் அவர்கள் பங்களாவில் ஒரு மீட்டிங் கூடியபோது குழந்தைகளின் கானம் நடந்தது. அன்று அதிகநேரம் கிடைத்திருந்த படியால் அருமையான கீர்த்தனங்கள் பாடப்பட்டபோது எல்லோரும் விசேஷ சந்தோஷத்தை அடைந்தார்கள். மேற்சொல்லிய ப்யாண்ட்மாஸ்டரும் சந்தோஷப்பட்டார். அன்றைய தினத்திலும் கான்பரென்ஸில் நடந்தபடி 24 சுருதிஸ்தானங்களையும் பாடிக்காண்பிக்க நேர்ந்தபோது மேற்படி பியாண்ட் மாஸ்டர் துரையவர்கள் வீணையின் மேல்ஸ்தாதஸ்தானம் குறைவாயிருப்பதுபோல் நினைத்து ஆட்சேபித்தார். மற்றவர்கள் சரியாயிருப்பதாய் வாதித்தார்கள். பண்டிதர் அவர்களும் சரியாயுள்ள தென்று தெரிவித்தார்கள். அப்போது துரையவர்கள் பலஸ்தாயிகளில் சஞ்சாரம் செய்யும் அநேக வாத்தியங்கள் வாசிக்கப்படும் காலத்தில் ஏதாவது ஒன்று ஏற்றத்தாழ்வடைந்தால் அதைக்கண்டுபிடிக்கும் தீரன் நான் என்பதை நீங்கள் நம்பவேண்டுமென்று ஆங்கிலத்தில் சொன்ன அவ்வார்த்தையை மகா-ரா-ரா-ஸ்ரீ திவான் அவர்கள் தமிழில் எடுத்துரைத்தார்கள். அதைக்கேட்ட பண்டிதரவர்கள் வாயினுல் 12 சுருதி ஊதப்படுகிற பெருத்த நாதத்தைக் கண்டுபிடிக்கும் திறமைவாய்ந்தவர்களுக்கு இந்திய சங்கீதத்தில் வரும் நட்ப சுரங்களைக் கண்டுபிடிக்க முடியாது என்று விடையளித்தார்கள். பிறகு விஜய நகரம் வீணை வித்வான் வேங்கடரமணதாஸ் அவர்களின் வீணையையும் சேர்த்துப்பார்த்த காலத்தில் துரையவர்களுக்கும் ஒப்புக்கொண்டுவிட நேர்ந்து விட்டது.

பிறகு தஞ்சை சங்கீதஸமாஜத்தில் பிரதி கான்பரென்ஸுக்கு வந்திருந்தவரும், லக்ஷணலக்ஷிய வித்வானும் பூவனூர்வாசியுமான மகா-ரா-ரா-ஸ்ரீ பிரதாப ராமசாமி பாகவதர் அவர்களும் சென்னை டாக்டர் நஞ்சுண்டராவ் அவர்கள் மூலமாய் அழைப்புப் பத்திரம் பெற்று பரோடா கான்பரென்ஸுக்கு ஓர் மெம்பராயும் தாக்கல் செய்துகொண்ட ஷே பாகவதர் அச்சமயம் இருந்தவராதலால் அவரது அபிப்பிராயம் ஏதாவது பேதமடைந்திருக்கிறதா வென்று தெரிந்துகொள்ள பண்டிதர் அவர்கள் பாகவதர் அவர்களைப் பார்த்து வீணையின் சுருதிகளைக் கவனித்தீர்களா என்றார். பாகவதர் வீணை நன்றாயிருக்கிறதாகச் சொன்னார். சுருதி விஷயத்தைத் தெரிந்து கொண்டீர்களா எனறு பண்டிதர் அவர்களால் கேட்கப்பட்டது. அதற்குப் பாகவதர் அவர்கள் ஊர்போய்ப் பேசிக்கொள்வோம் என்றார். அப்போது திவான் மகா-ரா-ரா-ஸ்ரீ மாதவராயர் அவர்

கள் ஏதாவது சர்ச்சை செய்வதானால் இப்பொழுதே செய்யலாம் என்றார்கள். அதற்குப் பாகவதர் 24 சுருதிக்கு ஆதாரம் கிடைக்கவில்லை என்றார். பண்டிதர் அவர்கள் தமிழ் நூலில் சொல்லப்பட்டிருக்கிறதென்றார்கள்.

பிறகு பாகவதர் தமிழ் நூலில் சங்கீதத்தைப்பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிற சிலப்பதிகாரத்தில் இவ்விஷயம் காணப்படவில்லை என்றார்கள். பண்டிதர் அவர்கள் நூல் மறைப்பை விலக்கி ஆழ்ந்து கவனித்தால் அறியக்கூடும் என்றார்கள். இன்னும் கொஞ்சம் சம்பாஷணை நடந்தது. பிறகு பாகவதர் மௌனத்தை வகித்தார்.

இதன் பிறகு எல்லோரிடமும் உத்திரவு பெற்றுக்கொண்டு பரோடாவை விட்டுப் புறப்பட்டு பம்பாய் வந்து சேர்ந்த அன்று ஒரு லெக்சர் ஹாலில் பண்டிதர் அவர்களின் உபந்நியாசம் என். பி. சுப்பிரமணிய ஐயர் இங்கிலீஷ் மொழி பெயர்ப்புடன் நடந்தது. பண்டிதர் அவர்களின் புத்திரிகள் கானமும் நடந்து வந்திருந்த கிறிஸ்துவ மதப்பற்றுள்ள எல்லோரும் சந்தோஷமடைந்தார்கள். பிறகு அங்கிருந்து புறப்பட்டு சென்னைக்கு வந்து சேர திவான் பகதூர் மகா-ரா-ரா-ஸ்ரீ பராங்குச நாயுடுகாரு அவர்கள் பங்களாவில் உபசரிக்கப்பட்டு மூன்று நாள் தங்க நேர்ந்தது. அநேக வித்வான்களும் தமிழ்ப் பண்டிதர்களும் பண்டிதர் அவர்களைக் கண்டு களித்து பரோடா விஜய வர்த்தமானங்களை அறிந்தபோது எல்லோரும் கொண்டாடினார்கள்.

தமிழ்ச் சங்கீதம் என்று ஏற்பட்டு தொன்றுதொட்டு நீண்டகாலமாக அறியப்பட்டு அனுபவத்திலுள்ள சங்கீத இரகசியத்தின் உண்மையை அநேகர் அறியாமலிருப்பதை முன்னிட்டுத் தமிழ் நாட்டின் சங்கீதம் பிரகாசமடைய நூல் முகமாய் கருணைமிர்த சாகரம் என்ற பெயருடன் வெளிவர இருப்பதையும் அதன் சுருக்கம் நான்கு பாலைகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதையும் வெளியிட்டுச் சொல்லும் பொழுது இதைக்கேட்ட தமிழ் அபிமானியாயுள்ள மகா வித்வான் மகாமகோபாத்தியாயர் பட்டம் பெற்றவரான ஸ்ரீ சாமிநாதையர் அவர்கள், சங்கீத வித்வான் சபேசையர் அவர்கள் முதலான அநேகர் தமிழ்ப் பாஷைக்குள்ள ஏற்றத்தையும், அதன் விஷயமாய்ப் பண்டிதர் அவர்களின் பிரயாசையையும் எண்ணி மிகுந்த திருப்தியடைந்தார்கள்.

சென்னை வாசியான சங்கீத வித்வான் மகா-ரா-ரா-ஸ்ரீ திருவாதி சபேசையர் அவர்கள் 24 சுருதிகளின் விபரத்தை அறிந்து பண்டிதரவர்களின் சிரமத்தையும் தைரியத்தையும் குறிப்பிட்டு மிகவும் மெச்சிக் கொண்டார்கள். 1916 ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 5-ம் தேதியன்று சுகமாகத் தஞ்சை வந்து சேர்ந்து அவரவர்கள் சந்தோஷமடைந்தார்கள்.

முடிவுரை

இவ்விதமாகத் தமிழ்த்தேசத்தின் சங்கீதப்பயிற்சி அபிவிருத்தியாவதற்குத்தென்னிந்தியாவின் ஒருபாகத்திலுள்ள தமிழ் நூல்களே ஆதாரமடைந்திருப்பதை அறிந்து அதைத் தழைத்தோங்கச் செய்யவேண்டுமென்று ராவ் சாஹேப் ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் ஊக்கத்துடன் முன்வந்து உழைக்கும்படி லோககர்த்தாவான ஜகதீசனை தூண்டப்பட்டிருக்கிற அவருக்கு தென்னிந்தியா வாசியாயும் தமிழபிமானியாயுமுள்ள ஒவ்வொருவரும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை மனப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சுபமஸ்து.

பிடில், பஞ்சாபகேச பாகவதர்,
தஞ்சாவூர்.

17

MIRAJ,
8th August 1916.

DEAR RAO SAHIB PANDITHER,

I am in receipt of your so-called 'refutation.'

I made no reply to criticisms appearing in the Madras Mail as the question between us is not one in which the public is sufficiently well-informed for discussion in such a paper to be profitable.

1. In the pamphlet you have now printed you do not quote the remarks which you criticize. Most readers will be in the dark as to what the discussion is about.

2. Your method of replying to my criticism is to restate your own case and to call for a test.

3. You cannot seriously entertain the belief that any test of any value whatever was made at Baroda.

4. I took notes then of the dicta of Jakroddin Khan. On my return to Dharwar, I will hunt them up and let you see what absurdities they lead to. As far as the Indian Harmonium was concerned the test was a farce.

5. The remarks you quote from the Bombay Chronicle favour your view of the matter much less than they do mine. They amount to this that the Kâfi scale is as follows:—

Sa	Ri	Ga	Ma	Pa	Dha	Ni	Sa.
9/8	16/15	10/9	9/8	9/8	16/15	10/9	

According to you it should be:—

Sa	Ri	Ga	Ma	Pa	Dha	Ni	Sa.
$2^{\frac{1}{6}}$	$2^{\frac{1}{12}}$	$2^{\frac{1}{6}}$	$2^{\frac{1}{6}}$	$2^{\frac{1}{6}}$	$2^{\frac{1}{12}}$	$2^{\frac{1}{6}}$	

According to my experience it is

Sa	Ri	Ga	Ma	Pa	Dha	Ni	Sa.
10/9	16/15	9/8	9/8	10/9	16/15	9/8	

6. Kindly ask yourself how many of the 'experts' who attended the Conference had undergone the preliminary training with the help of a specially tuned instrument necessary to enable their ears to recognize the difference between the tempered tone, the major tone, the minor tone and other simple harmonic intervals. Several members of the Conference spoke in familiar terms of intervals represented by simple ratios such as $\frac{9}{8}$, $\frac{10}{9}$, $\frac{5}{4}$, $\frac{6}{5}$. How many of them could recognize these intervals with certainty if they heard them or could claim to be able to distinguish any of them from intervals tempered or otherwise which approximate to them?

7. To come to the singing of your daughters which seems to you a vindication of your theories.

8. I would like to ask why you discard the drone which I have always found associated with Indian music? Let them sing to a drone of two tamburas. You will find in Raga Kedar-

gavla and in Shankarabharanam they will sing not your *ga* but the *ga* which is $\frac{5}{4}$ of *shadj*. In Raga Hanumantodi they will sing the *dha* which is $\frac{8}{5}$ of *shadj*; in raga Natabhairavi, they will sing the *ga* which is $\frac{6}{5}$ of *shadj*. To put the matter more briefly they will sing *real music*.

9. Artificial music is an abomination.

10. I venture to prophesy that it will be discarded in Europe before many centuries have passed. In Europe many factors combined to reconcile musicians to its obvious faults and deficiencies. I have endeavoured to treat the subjects in an article in the September to November 1915 numbers of Indian Education (Longmans Green and Co., Hornby Road, Bombay.) That article might prove of interest to you.

11. To resume, if you make inquiries you will find that an unaccompanied singer or violinist has great difficulty in rendering artificial intervals correctly, your daughters are no exception.

12. When they sing to your special bina they sing the harsh tones of temperament.

13. When they sing with the violin both they and the violinist insensibly drift away into other scales.

14. The scale they tend most towards is the ditonal scale, generally described as the scale of Pythagoras.

Some day I shall write an article on this scale. Books like Blaserna's 'Theory of Sound' have completely misled the ordinary reader as to the part it has played in the history of music. The view I hold is that it never formed the basis of musical art until temperament led to its use. In ancient Greece it was what we might term the Shuddh scale in one method of tuning the Kithara; on account of its convenience for the purpose it became the nucleus of the instrumental notation. The Kithara was furnished with a device for tightening the strings by any interval up to a semitone—whatever scale was required was obtained by means of this device, just as the binkar gets any intervals not given by the frets by pressing heavily on the wire or pulling it to one side and so increasing the tension. As far as one can tell, the ditonal scale was never used in any old Greek music; that is to say there was no Raga founded on the Shuddh notes of Pythagorean tuning .In the time of the Byzantine Empire theorists who did not know what they were talking about, added the Pythagorean ratios to scales which were not Pythagorean, just as pandits of modern India who have no practical knowledge of just intervals talk glibly of the $303\frac{3}{4}$ ga and 405 dha and so on.

15. I am of opinion that your daughters' singing, although much admired and commended by Jakroddin and others, is not a test in any sense of the word.

I would like to make clear my position with regard to your equal division of the octave.

16. Indian music, in my opinion, is now, in its best form, and ever was *real music*.

17. Any system of musical art founded on the use of a drone must be built up from true concord.

18. True concord to the primitive philosopher is a knot impossible to unravel. It is not until the philosopher begins to experiment with string-lengths that he has any notion of the way to set to work.

19. This, however, does not daunt him. We find him in ancient India and in ancient Greece, (probably he was busy weaving phantasies of the same kind in Eygpt, Assyria, and China), building up a theory of sound, worthless because it was not submitted to any scientific test, which explained all scales on the basis of an equal division of the octave. All the

philosophers attacked the problem in the same way. They thought there must be some unit interval just as one uses the span or cubit as a unit of length. The only unit which suggested itself was the smallest perceptible difference of pitch. Having arrived so far, they proceed to estimate, with all the introspective mental ingenuity of which they were capable, the number of units contained in the various intervals used by musicians of their time.

20. The circumstance which sets Bharata and his follower Sarangdev on a pedestal above Aristoxenus and the rest of them, including your Tamil philosophers, is that one can trace a connection between the intervals of 13 srutis, 9 srutis, 4, 3, 2 srutis and one sruti with which they deal and the harmonic intervals $\frac{3}{2}, \frac{4}{3}, \frac{9}{8}, \frac{10}{9}, \frac{16}{15}, \frac{81}{80}$.

21. In short my position is that, until modern times, artificial music only existed in the brains of primitive philosophers.

Yours faithfully,
(Sd). E. CLEMENTS.

APPENDIX.

NOTE I

Note on the so-called test of the Indian harmonium.

22. Jakroddin appeared to be influenced by the generally sceptical and disapproving attitude of the audience towards the instrument.

He reluctantly admitted that pa which was exactly $\frac{3}{2}$ of sa was correct. He found ma komal which was exactly $\frac{4}{3}$ too low. He found ga komal, an exact minor third above sa ($\frac{6}{5}$) too low for Bhairavi. He found ni tivra which was a just semitone ($\frac{16}{15}$) below sa too flat for Yaman.

23. He wouldn't agree that I had the Kafi notes on the instrument at all as far as I remember, but I have no detailed note of this.

I remember his Kafi took the major tone to start with and not the minor tone. I gave a note to the President giving all details, but I cannot find a copy of it. All I have is a brief notice from which and from memory I give the above statement.

24. It appeared to me that Jakroddin is not gifted with a phenomenally accurate ear.

(Sd). E. C.

19—8—16.

NOTE II.

I have recently tested the notes given by the frets of two binas made by Hussenkhan the renowned Sitar-maker of Miraj.

They both gave the following scales.

Tivra notes:—

Sa	re	ga	ma	pa	dha	ni	sa.
$\frac{9}{8}$	$\frac{10}{9}$	$\frac{16}{15}$	$\frac{9}{8}$	$\frac{10}{9}$	$\frac{9}{8}$	$\frac{16}{15}$	

The dha is the low or madhya tivra note.

Komal notes :—

Sa	re	ga	ma	pa	dha	ni	Sa.
16/15	10/9	9/8	9/8	16/15	10/9	9/8.	

The ga and ni are the low ones which I have always found associated with Kafi, Bhimpalas, Miyaki Malhar, Sindhada etc.

The ga and ni of Bhairavi, Jivanpuri etc. are obtained by pressing hard on the fret or pulling the wire to one side and so increasing the tension. Tivra dha is got in the same way.

(Sd). E. C.

மீராஜ்,
8 " ஆகஸ்டு 1916.

மிதவும் பிரியமுள்ள ராவ் சாயப் பண்டிதரவர்களுக்கு,

என்னுடைய வியாசத்திற்கு " மறுப்பு " என்று பேர்வைத்துத் தாங்கள் எழுதிய சிறு புத்தகத்தைப் பார்வை யிட்டேன்.

Madras Mail இல் பிரசுரிக்கப்பட்ட Article களுக்கு நான் பதில் எழுதாததற்குக் காரணம் என்ன வென்றால் நாம் இருவரும் எதைப்பற்றி வாதிக்கிறோமோ அந்த விஷயமானது அந்தப் பத்திரிகையை வாசிக்கும் பெரும்பான்மையோருக்குத் தெரியாத விஷயமானதால் அதைப்பற்றி எழுதுவதில் பயனில்லை என்று நினைத்தே.

1. இப்போது தாங்கள் அச்சிட்டிருக்கும் பத்திரிகையில் நான் சொன்ன எந்த விஷயங்களைப் பற்றித் தாங்கள் வித்தியாசமான அபிப்பிராயப்படுகிறதாகச் சொல்லவில்லை. எதைப்பற்றிப் பேசப்படுகிறதென்று அநேகருக்குத் தெரியவராது.

2. என்னுடைய கொள்கையைத் தாங்கள் எப்படிக் கண்டிக்கிறீர்களென்றால், உங்களுடைய அபிப்பிராயத்தையே சொல்லி யாவரும் அதைச் சோதித்துப் பார்க்கவேண்டுமென்பது தான்.

3. பரோடாவில் எந்த விதமான ருசுவும் சரிவர நடத்தப்பட்டதென்று தாங்கள் யதார்த்தமாய் நம்பிவிடக்கூடாது.

4. Jakruddin Khan உடைய அபிப்பிராயங்களை யெல்லாம் நான் குறித்துவைத்திருக்கிறேன். நான் Dharwar க்குத் திரும்பிப்போன பிறகு அதைத் தேடி எடுத்து அனுப்புவேன். அப்போது அந்த வித்வான் சொன்னவைகள் எவ்வளவு கூடாத காரியங்கள் எவ்வளவு தப்பிதங்களுக்குக் கொண்டுவந்துவிடும் என்று வெளிப்படும். இந்திய ஹார்மோனியத்தைப் பற்றி நடந்த பரீக்ஷையானது எவர்க்குச் சிரிப்பை யுண்டாக்குகிறது. அதுவும் ஒரு பரீக்ஷை யாகுமா ?

5. பம்பாய் கிராணிக்கிளிலிருந்து தாங்கள் எடுத்துச் சொன்ன விஷயமானது என் அபிப்பிராயத்திற்கு எவ்வளவு சாதகக் குறைவாயிருக்கிறதோ அதைப்பார்க்கிலும் தங்களுக்கு அதிக சாதகக் குறைவாயிருக்கிறது.

ச	ரி	க	ம	ப	த	நி	ச
9/8	16/15	10/9	9/8	9/8	16/15	10/9	

தங்கள் அபிப்பிராயத்தின்படி அது பின் வருமாறு இருக்கும்.

ச	ரி	க	ம	ப	த	நி	ச
$2^{\frac{1}{6}}$	$2\frac{1}{12}$	$2\frac{1}{6}$	$2^{\frac{1}{6}}$	$2\frac{1}{6}$	$2\frac{1}{12}$	$2\frac{1}{6}$	

என்னுடைய அனுபோகத்தின்படி அது பின் வருமாறு இருக்கும்

ச	ரி	க	ம	ப	த	நி	ச
$\frac{10}{9}$	$\frac{16}{15}$	$\frac{9}{8}$	$\frac{9}{8}$	$\frac{10}{9}$	$\frac{16}{15}$	$\frac{9}{8}$	

6. வந்திருந்த "வித்வான்களில்" எத்தனை பேர் சுரங்களைப் பகுத்தறியும் விஷயத்தில் வாத்தியங்களின் உதவியினால் பழகியிருந்தவர்கள்? அவர்களில் எத்தனை பேருக்கு Tempered tone, Major Tone, Minor Tone, சாதாரண ஆர்மானிக் இடைவெளிகள் முதலியவற்றின் நுட்ப வித்தியாசம் தெரியும்? அநேக மெம்பர்கள் தங்கள் வியாசங்களில் $\frac{9}{8}$, $\frac{10}{9}$, $\frac{5}{4}$, $\frac{6}{5}$ என்ற இடைவெளிகளைப்பற்றித் தண்ணீர்பட்ட பாடமாய்ப் பேசினார்களே. அவர்களில் எத்தனை பேருக்கு இந்த நுட்ப வெளிகளின் வித்தியாசங்கள் தெரிந்திருக்கும்?

7. தங்களுடைய குழந்தைகளின் கானத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள். அவர்கள் பாடியது உங்களுடைய அபிப்பிராயத்தை நிலை நிறுத்தினதாக நினைக்கிறீர்கள்.

8. இந்திய சங்கீதம் எப்போதும் ஒரு சுரத்தையும் அதன் பஞ்சமத்தையும் சப்தித்துக்கொண்டு (தம்புராவை மீட்டுவதுபோல்) பாடுகிற வழக்கமாயிற்றே. உங்கள் குழந்தைகள் அப்படியேன் சொல்லவில்லை. அவர்கள் எப்போதும் இரண்டு தம்புராக்களை மீட்டிக்கொண்டே பாடட்டும். அப்படிப் பாடுவார்களானால் கேதாரி கௌளம் சங்கராபரணம் முதலிய இராகங்களில் உங்களுடைய காந்தாரத்தை யல்ல சட்ஜத்துக்கு $1\frac{1}{4}$ ஆய் இருக்கப்பட்ட காந்தாரத்தைப் பாடுவார்கள். அனுமத்தோடியில் சட்ஜமத்துக்கு $1\frac{3}{5}$ ஆய் உள்ள தைவதத்தையும் நடபைரவியில் சட்ஜமத்துக்கு $1\frac{1}{5}$ ஆய் உள்ள காந்தாரத்தையும் படிப்பார்கள். தொகையாய்ச் சொல்ல வேண்டுமானால் அப்போதுதான் சரியான சங்கீதம் படிப்பார்கள்.

9. நாமாய்க் கூடக் குறைய வைத்துக்கொள்ளும் சுரங்களாலான சங்கீதம் அருவருப்பானது.

10. இன்னும் சில நூற்றாண்டுகளுக்குள் ஐரோப்பாவில் அது முற்றிலும் இல்லாமற்போகுமென்று நான் நிச்சயமாய்த் தீர்க்கதரிசனமாய் உரைப்பேன். அதில் குறைகளும் தப்புகளும் அதிகம் இருந்தபோதிலும் அநேக காரியங்கள் ஒன்று சேர்ந்து ஐரோப்பாவில் அது ஸ்தாபகமானது. Indian Education என்ற பத்திரிகையில் Sep-to Nov. 1915 நம்பர்களில் இது விஷயத்தைப் பற்றிப் பேசியிருக்கிறேன். அதை வாசிப்பீர்களானால் நலமாயிருக்கும். நான் சொல்லிவந்த காரியத்தைப்பற்றித் திரும்பச் சொல்லுகிறேன். நீங்கள் நன்றாய் விசாரித்தால் தெரியும்.

11. வேறே வாத்திய உதவியில்லாமல் இந்த artificial இடைவெளிகளைப் பாடுகிற அல்லது Violin வாசிக்கிற எவரும் அவைகளைச் சரியாய்ப் பாடுவது துர்லபம். தங்கள் குழந்தைகளும் அப்படியே தவறுகிறார்கள்.

12. தாங்கள் தயார் செய்த வீணையை வைத்துக்கொண்டு குழந்தைகள் பாடினபோது குறைத்து வைத்த இடைவெளியைப் பாடினதினால் அது காதுக்கு அவ்வளவு இனிமையாய் இல்லை.

13. அவர்கள் பிடிலுடன் சேர்ந்து பாடினபோது அவர்களும் பிடில் வாசித்தவரும் தங்களை யறியாமலே வேறு ஆரோகண அவரோகணங்களுக்கு மாறிவிட்டார்கள்.

14. அவர்கள் முக்கியமாய் மாறிப்போகிற Scale க்கு Ditonal scale என்று பெயர். இதைத்தான் Pythagoras உடைய ஸ்கேல் என்று சாதாரணமாய்ச் சொல்லுவார்கள்.

இதைப் பற்றி நான் ஒரு article சீக்கிரம் எழுதுவேன். Blasernaஎன்பவருடைய 'Theory of sounds' என்ற நூலைப் போன்ற மற்ற நூல்களால் தான் Pythagoras உடைய scale சங்கீத சரித்திர விஷயத்தில் என்ன வேலை செய்திருக்கிறதென்பதைப்பற்றிச் சாமான்ய ஜனங்கள் தப்பான அபிப்பிராயம் கொள்வதற்கு இடமாயிருக்கிறது. என்னுடைய அபிப்பிராயமென்ன வென்றால் temperament வந்த பிறகுதான் அது சங்கீதத்திற்கு ஒரு முக்கிய ஆதாரமாக எண்ணப்பட்டதே யொழிய அதற்கு முந்தி யல்ல. ஆதிகிரேக்கருக்குள் கித்தாரியைச் சுருதிசேர்ப்பதில் உபயோகப்படுத்தப்பட்ட சுத்த ஸ்கேல் முறைகளில் இது ஒன்றாயிருந்தது. இது வெகு சௌகரியமாயிருந்த படியால் இந்த ஸ்கேலை ஆதாரமாகக்கொண்டே

வாத்தியங்களுக்கு notation எழுத ஆரம்பித்தார்கள். அந்தக் கித்தாரியின் தந்திகளே முறுக்கினால் அரைச் சுரம் வரைக்கும் உயர்த்தக்கூடிய விதமாய் அது அமைக்கப்பட்டதனால் எந்த ஸ்கேல் அவசியமோ அதை வாசிக்கும்படியாய்ச் சௌகரியம் ஏற்பட்டது. தற்கால பிங்கார் அல்லது வீணையில் மெட்டுகளில் இல்லாத சுரங்களே எப்படித் தந்தியை இழுப்பதனால் கமகமாய் வாசிக்கிறோமோ அப்படித்தான். இந்த ditonal scale ஆனது தெரிந்தவரையில் கிரேக்க சங்கீதத்தில் உபயோகப்படுத்தப்படவில்லை. அதாவது ஒரு இராக மாவது Pythagoras முறையாய்ச் சுருதி சேர்த்த சுத்த சுரங்களால் உண்டானதல்ல. Byzantine Empire (மகமதிய ராஜாங்க) காலத்தில் சங்கீதமே தெரியாத சிலர் Pythagoras உடைய கணக்கை ஒட்டிவிட்டார்கள். தற்காலம் Just intervals என்றால் என்ன வென்று தெரியாத பண்டிதர்கள் $303\frac{3}{4}$ உள்ள காந்தாரம் 405 உள்ள தைவதமென்று தண்ணீர்பட்ட பாடமாய் எப்படிச் சொல்லுகிறார்களோ அப்படித் தான் அதுவும்.

15. தங்கள் குழந்தைகளுடைய கானமானது Jakruddin ஆலும் மற்றவர்களாலும் அதிகமாய்ப் புகழப் பட்டபோதிலும் அது எவ்விதத்திலும் ருசு என்று சொல்ல முடியாது.

தாங்கள் ஸ்தாயியைச் சரிபாகமாக வகுப்பதைப்பற்றி என் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன்.

16. இந்திய சங்கீதமானது இப்போதுதான் திவ்வியமான பதவியிலிருக்கிறது.

17. ச-ப என்ற ஒற்றுமை ஆதாரமாகக் கொண்ட எந்த சங்கீத முறையும் முற்றிலும் சரியான ஒற்றுமையுள்ள சுரங்களாலானதா யிருக்கவேண்டும்.

18. ஆதிகாலத்தில் சாஸ்திரிகளுக்கு சுத்த ஒற்றுமையுள்ள சுரங்கள் அவிழ்க்கப்படக்கூடாத ஒரு முடிச்சுபோல் இருந்தது. தந்தியின் அளவால் சுரங்கள் கண்டுபிடிக்கப் படவேண்டும் என்று அறிந்த பிறகு தான் சரியான வழி அவர்களுக்குத் தெரிந்தது.

19. ஆனால் இப்படிச் சுரங்கள் கண்டு பிடிப்பது கஷ்டமென்று தெரிந்தும் அந்த சாஸ்திரி எதுக்கும் பயந்தானே? இல்லை, போய் விழுந்து சாடி ஒரு முறையைக் கண்டுபிடித்தான். அப்போப்பட்ட சாஸ்திரிகள் இந்தியாவிலும் கிரேக்க தேசத்திலும் ஒருவேளை எகிப்து, ஆசீரியா, சீனு தேசங்களிலும் நினைப்பி சாஸ்திரோக்தமில்லாத ஒரு சங்கீத முறையை ஏற்படுத்தி எல்லா ஸ்கேல்களும் ஸ்தாயியை சம பாகங்களாகப் பிரிப்பதினால் ஏற்படுகிறவைகள் என்று சொல்லிச் சாதித்தார்கள். எல்லா சாஸ்திரிகளும் இவ்வித முறையையே உண்டாக்கினார்கள். ஒரு சாண் அல்லது ஒரு முழத்தைக் கொடுக்கப்பட்ட அளவாக நினைப்பது போல் எல்லா இடைவெளிகளுக்கும் பொதுவான ஒரு சம அளவு இருக்க வேண்டுமென்று நினைத் தார்கள். இந்தப்பொதுவான சம அளவு சுரங்களுக்கு அதி நுட்பமான சிறு வித்தியாசந்தான். இதை ஆதாரமாக வைத்துக் கொண்டு தங்கள் காலத்திலுள்ள வித்வான்களால் உபயோகிக்கப்பட்ட இடை வெளி களுக்கு வெகு விசித்திரமான விதமாயும் வெகு சாமர்த்தியமான விதமாயும் அப்படி எத்தனை நுட்பமான சுரங்கள் இருக்கும் என்று கண்டு பிடித்தார்கள்.

20. Aristoxenus என்ற கிரேக்க வித்வானையும் மற்ற ஆதி சாஸ்திரிகளையும் உங்களுடைய தமிழ் சாஸ்திரிகளையும் விட பரதரும் அவரைப் பின்பற்றினவராகிய சாரங்க தேவரும் உயர்ந்த பீடஸ்தானத் தில் வைக்கப்பட்டதற்குக் காரண மென்னவென்றால் அவர்கள் சொல்லுகிற 13 சுருதி 9, 4, 3, 2, 1 முதலிய சுருதிகளுக்கு இருக்கப்பட்ட சம்பந்தமும் அவர்கள் உபயோகிக்கும் $\frac{2}{3}$, $\frac{4}{3}$, $\frac{9}{8}$, $\frac{10}{9}$, $\frac{16}{15}$, $\frac{81}{80}$ முதலிய Harmonic இடை வெளிகளுமே.

21. சுருக்கமாக என் அபிப்பிராயம் என்ன வென்றால் தற்காலம் வரை Artificial சங்கீத மானது ஆதி சாஸ்திரிகளின் மூளையில் இருந்ததே யல்லாமல் நிசமாய் உபயோகத்திலில்லை என்பதே.

அனுபந்தம்.

Note

இந்தியன் ஆர்மோனிய சுருதிகளைச் சோதித்ததாகச் சொல்லுவதைப்பற்றிய குறிப்பு.

22. அந்த வாத்தியத்தைக் கூடி வந்தவர்கள் அருவருத்து அபிப்பிராயத்தைக் காண்பித்ததனால் Jakruddin உம் அதினால் இழுக்குண்டு கெட்ட அபிப்பிராயப்பட்டார்.

ச விலிருந்து $1\frac{1}{2}$ ஆய் இருந்த பஞ்சமம் சரியென்று அவர் பிரியமில்லாமலே ஒப்புக்கொண்டார். ச விலிருந்து $1\frac{1}{5}$ ஆய் இருந்த கோமள க சற்று குறைகிறது என்றார். யமன் இராகத்தில் ச வுக்குக் கீழ் Just semitone-ல் $(\frac{16}{15})$ இருந்த தீவிர நிஷாதம் அதிக குறைந்தது என்றார்.

23. எனக்குத் தெரிந்த வரையில் காப்பி இராக சுரங்கள் ஹார்மோனியத்தில் கொஞ்சமாவது சரியாயிருக்கவில்லை என்றார். ஆனால் இதைப்பற்றி நுட்பமாய் நான் குறித்து வைக்கவில்லை.

அவர் பாடிய காப்பி இராகம் Major tone-ல் ஆரம்பித்தது. Minor tone-ல் ஆரம்பிக்கவில்லை. இவைகளை யெல்லாம் குறித்து நான் President க்குக் கொடுத்திருக்கிறேன். ஆனால் என்னிடத்தில் அதற்குக் காப்பி இல்லை. என் கையிலிருப்பது சொற்பக் குறிப்புதான். மற்றவையெல்லாம் என் ஞாபகத்திலிருந்தே எழுதுகிறேன்.

24. Jakruddin Khan மிக நுட்பமான காதுடையவர்களல்ல.

Note ii.

Miraj நகரிலுள்ள Sitar என்னும் வாத்தியம் செய்யும் Hussenkhan என்பவன் செய்த இரண்டு வீணையின் மெட்டுகளின் உதவியினால் என்னுடைய ஹார்மோனியத்தின் சுரங்களைப் பரிட்சித்தேன்.

அவைகள் இரண்டிலும் பின் வரும் ஸ்கேல்கள் வருகின்றன.

தீவிர சுரங்கள்.

ச	ரி	க	ம	ப	த	நி	ச
$\frac{9}{8}$	$\frac{10}{9}$	$\frac{16}{15}$	$\frac{9}{8}$	$\frac{10}{9}$	$\frac{9}{8}$	$\frac{16}{15}$	

இங்கே தைவதம் குறைந்து மத்திய தீவிரமாய் வருகிறது.

கோமள சுரங்கள்.

ச	ரி	க	ம	ப	த	நி	ச
$\frac{16}{15}$	$\frac{10}{9}$	$\frac{9}{8}$	$\frac{9}{8}$	$\frac{16}{15}$	$\frac{10}{9}$	$\frac{9}{8}$	

காந்தார நிஷாதங்கள் காப்பி, பீம் பாளம், மியாரி மல்லார், சிந்தாதா முதலிய இராகங்களில் வரும் குறைந்த சுரங்கள்.

பைரவி, ஜீவன்புரி முதலிய இராகங்களில் வரும் காந்தார நிஷாதங்கள் மெட்டுவை நன்றாய் அழுத்துவதனாலாவது தந்தியை ஒரு பக்கம் இழுத்து வாசிப்பதனாலாவது உண்டாகக் கூடியவைகள். தீவிர தைவதமும் அப்படியே உண்டாகும்.

(Sd.) E. Clements.

18

E. Clements I. C. S. துரையவர்கள் ஆகஸ்டு மாதம் 8-ம் தேதி எழுதிய கடிதத்திற்கு மறுப்பு.

RESPECTED AND DEAR SIR,

ஆகஸ்டு மாதம் 8ம் தேதியில் மிராஜ் என்ற ஊரிலிருந்து தாங்கள் எழுதிய கடிதம் எனக்குக் கிடைத்தது. தாங்கள் அதில் எழுதிய பல குறிப்புகளுக்கு ஏற்ற சமாதானம் சொல்ல வேண்டியிருந்ததனால் உடனே பதில் எழுதக்கூடவில்லை.

அதோடு பரோடாவிலிருந்து வந்த பின் சுருதி விஷயமாய் நான் எழுதிக்கொண்டு வரும் புத்தகத்தில் பாக்கியாயிருந்த சில விஷயங்களை முடிக்கவும், இவ்விடத்தில் வழக்கமாக நடந்துவரும் சங்கீத வித்யா மகாஜன சங்கத்தின் ஏழாவது கான்பரென்ஸ் கூட்டமும் அதில் கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் நுட்பமான சுரம் சுருதிகள் இன்னவையென்று நிச்சயப் படுத்தவும் வேண்டிய வேலைகளில் அதிகம் முயற்சிக்கவேண்டியதாயிருந்தது.

பரோடாவில் என்னுடைய சுருதியைப்பற்றி வியாசம் 3½மணிநேரம் நடந்த போதிலும் என்னுடைய முக்கியமான கணிதபாகம் சொல்ல நேரம் இல்லாமையால் விட்டுவிடப்பட்டது. பிறகு அதை தந்தியின் அளவிற்கு வீணையின் அளவு ஒத்திருக்கிறதென்றும் அவ்வளவில் கிடைக்கக்கூடிய சுரங்கள் அனுபோகத்திலிருக்கும் சுரங்களுக்குச் சரியாயிருக்கின்றனவென்றும் தெளிவாக சந்தேகமற வாத்தியத்தினாலும் வாய்ப்பாட்டினாலும் கணக்கினாலும் வீணையின் அளவினாலும் இரண்டு மணி நேரங்களுக்குமேல் விளக்கிக்காட்டினேன். அந்தச் சமயத்தில் தாங்களும் இன்னும் இரண்டு மூன்று பெயர்களும் மாத்திரம் வரவில்லை. Mr. Fredlis, Band Master, நிஷாதம் கொஞ்சம் குறைகிறதென்று வாதாடினர். விஜயநகரம் வேங்கடரமணதாஸ் அவர்கள் வீணையைக் கொண்டும் மற்றும் இராகங்களில் வழங்கிவரும் ஆரோகண அவரோகணங்களைக் கொண்டும் பரிசோதித்தபோது சுரங்கள்யாவும் சரியான ஓசையுடையவைகளாயிருக்கின்றனவென்று President Nawab Ali khan அவர்கள், திவான் சாஹிப் V. P. மாதவராவ் அவர்கள், சிட்டி பாபு நாயுடு அவர்கள், சாக்குருடன்சாயப் அவர்கள இன்னும் மற்றும் இந்துஸ்தான் சங்கீத வித்வான்கள் கர்நாடக வித்வான்கள் பலரும் எவ்வித ஆக்ஷேபணையுமின்றி ஒப்புக்கொண்டு சந்தோஷமடைந்தார்கள். இவை மார்ச்சு மாதம் 25ம் தேதி சனிக்கிழமை மாலையில் ஐந்து மணி முதல் 7½ மணிவரையும் நடந்தன.

தாங்கள் அந்தச் சமயம் இல்லாதிருந்தாலும் தங்களைப்போல 22 சுருதிக்காகப் போராடும் பிரதாப ராமசாமி பாகவதர் அங்கே வந்திருந்தார். கூட்டம் முடிந்த சமயத்தில் வீணையின் சுரங்களைப்பற்றிக் கேட்கும் பொழுது துவாவிம்சதி சுருதியிலேயே ஒட்டிக் கொண்டிருந்ததாக வெளிப்பட்டது. துவாவிம்சதி சுருதியின்படி ஒருதுக்கடா, அல்லது ஒரு கீர்த்தனம் பாடிக்காட்ட வேண்டுமென்று கேட்டபொழுது இன்னும் இரண்டு மாதத்தில் பாடிக் காட்டுகிறேன் என்று சொன்னர். அப்படிச்சொன்னவர் இங்கே (தஞ்சையில்) ஆகஸ்டுமாதம் நடந்த கான்பரென்சிலும் பலவித குழப்பங்கள் செய்யவும் 22 சுருதியையே சாதிக்கவும்வேண்டுமென்று சில பெயரைக் கட்சிசேர்த்துப் பூணூலைப் பிடித்துச் சத்தியம் செய்து கொண்டு வந்திருந்தார். ஆனாலும் அவர்கள் பேசிய கட்சி ஒன்றுவது சபை முன் நிற்கவில்லை. அவரவர்களுக்கு ஏற்ற சமாதானமும் பதிலும் வாய்மொழியினாலும் பாட்டினாலும் வீணையினாலும் காட்டப்பட்டன.

பூர்வ தமிழ்நூல்களில் சங்கீதத்தைப்பற்றிச் சொல்லும் அபிப்பிராயங்களைப் பரிசோதிக்கவும் ஒரு ஸ்தாயியில் வரும் அளவைச்சொல்லும் கணக்கைப் பரிசோதிக்கவும், $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$, $\frac{1}{16}$. சுரங்களைவரும் 67 இராகங்களடங்கிய நாலு அட்டவணை களிலுள்ளவைகளைப்பாடி அவைகள் சரிதானு என்று ஆராய்ச்சிசெய்யவும் வேண்டி மூன்றுவிஷயங்களிலும் தெரிந்தவர்களடங்கிய மூன்று பஞ்சாயத்து ஏற்படுத்தி அவர்களால் இது தீர்மானிக்க வேண்டியதாயிற்று.

இம்மூன்று பஞ்சாயத்தாரும் விஷயங்களை அறிந்துகொள்வதற்குப் போதுமானபடி விளக்கிக்காட்டப்பட்டது. கான்பரென்ஸின் முதல்நாள் முழுநேரமும் அடுத்தநாள் பாதி நேரமும் கர்நாடக சங்கீதத்தின் சுருதி விஷயமென்ற ஒரே காரியம் என்னால் மாத்திரம் பேசப்பட்டு முடிவுக்கு வரவேண்டியதிருந்தது. அப்படியே பூரணமாக பரிசோதிக்கப்பட்டு என்னுடைய முறை சரியானதென்று பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதோடு பஞ்சாயத்தாரால் ரிப்போர்ட்டும் அனுப்பப்பட்டிருக்கிறது. ரிப்போர்ட் அச்சாகி முடிந்தவுடன் தங்களுக்கு அனுப்புவேன்.

பரோடாவுக்கு நான் வந்திருக்கும் பொழுது கான்பரென்ஸ் நடந்த இரண்டாம் நாள் மாலையில் திவான் சாகிப் மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் C. I. E. அவர்களும் Baroda High Court Judge, மகா-ரா-ரா-ஸ்ரீ K. R. சாரங்கபாணி ராவ் B.A., B.L., அவர்களும் என்னைக் கூப்பிட்டுத் தாங்கள் ஒன்றும் பேசாதிருக்கிறீர்களே மற்றவர்கள் தீர்மானம் செய்து வைக்கிறார்களே என்று கேட்டபொழுது "மற்றவர்கள் காரியத்தில் தலையிடுவது எனக்குப் பிரியமில்லை. என்னுடைய முறை வரும்பொழுது என் காரியத்தை நான் சொல்லவேண்டும். அல்லது என்காரியத்தில் வேறுயாராவது தலையிடுவார்களானால் அப்பொழுது என் நியாயத்தைச் சொல்லிக் கொள்ளவேண்டும். வந்திருக்கிறவர்கள் யாவரும் இந்துஸ்தானி சங்கீதத்தைப் பற்றியே பேசுகிறார்கள். கர்நாடக சங்கீதத்தைப்பற்றி இன்னும் ஒருவரும் பேசவில்லை. கர்நாடக வித்வான்களிருக்கும் நாட்டிலேயே கர்நாடக சங்கீதத்தின் சுருதிகள் இன்னவையென்று தீர்மானிக்கப்படவேண்டும். நாளை, என் முறையில் சொல்லவேண்டியவைகளைச் சொல்லி அனுபோக பூர்வமாய் நிரூபிக்கவேண்டியது என்னுடைய கடமை" என்று சொன்னேன்.

அப்படியே அடுத்தநாள் செய்தும் காட்டினேன். அதன் பயனாகத் துவாவிம்சதி சுருதியென்ற ஒரு குழப்பம் நீங்கிப் பன்னிரண்டு சுரத்தில் Staff Notation குறிக்கப்பட்டுப் படித்துக்கொடுக்கலாம் என்று Mr. V. N. Bhatkandi B.A., B.L. அவர்களால் பிரேரிக்கப்பட்டு அப்படிச் செய்வது தகுதியென்று பல நியாயங்கள் சொல்லி என்னால் ஆமோதிக்கப்பட்டது.

அன்புள்ள ஐயா! வடநாட்டில் 12 சுரங்களைப் பற்றியிருக்கும் ஆக்ஷேபணையைப் பார்க்கிலும் தமிழ்நாட்டில் நூறு மடங்கு அதிகமிருக்கிறதென்று நான் அறிவேன். அவைகள் யாவும் ஆதாரமற்ற விவாதங்களே. மேலும் சங்கீத ரத்னாகரருடைய சில சூத்திரங்களைப் பாடம் செய்தவர்கள், ஸ்ரீரணம் பண்ண முடியாமலும் வாந்தி பண்ணிவிட முடியாமலும் வயிறு உப்பிப்போய்ப் புரண்டு கொண்டிருக்கும் மலைப்பாம்பு போலிருக்கிறார்கள்.

அனுபோகத்திற்கு வராத சாஸ்திரங்களைக் குட்டிப்பாடம்பண்ணிக் குருட்டாட்டமாய்ச் சாதிக்கிறவர்களைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது. அவர்கள் சங்கீத விஷயமாய் அதிகம் தெரிந்தவர்கள் என்று மற்றவர்கள் எண்ணும்படி சில சூத்திரங்களைச் சொல்லி தங்களை எல்லாம் தெரிந்தவர்களாகக் காட்டிக்கொள்வது வழக்கம். ஆகையினால் வடநாட்டைப் பார்க்கிலும்

தென்னாட்டில் 12 சுரங்களைப் பற்றியும் 12 சுரங்களில் உண்டாக்கப்பட்ட 72 மேளக் கர்த்தாவைப் பற்றியும் ஆக்ஷேபனைகள் உண்டு. இதோடு ஒரு ஸ்தாயியை 96 பாகங்கள் வைத்து வழங்கிவரும் தூட்ப சுருதிகள் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, க்ஷேத்திரிஞர் பதங்கள், தியாகராஜ ஐயர் கீர்த்தனங்கள் ஆகிய இவைகளில் வழங்கி வருவதினால் சுரங்கள் இன்னவை யென்று நிதானிப்பது கூடாத காரியமாய் இதுவரையும் இருந்தது.

ஒரு ஸ்தாயியில் வழங்கிவரும் சுரங்கள் ச-ப முறையாய்ப் பன்னிரண்டே. ச-ப முறையில் கிடைக்கும் 12 சுரங்களில் ச-ப போன்ற இரண்டு சுரங்களில் பாதி பாதி குறைத்துக் கமகமாய் வாசித்து வந்திருக்கிறார்கள். அதாவது ஒரு ஸ்தாயியைப் பன்னிரண்டு சுரங்களாகப் பிரித்து ஒவ்வொரு சுரத்திற்கும் இரண்டு அலகுகள் வைத்து மொத்தத்தில் 24 அலகாக்கி அதில் ரி-த, த-க, க-நி, போன்ற சுரங்களில் ஒவ்வொரு அலகு குறைத்துக் கானம் செய்து வந்திருக்கிறார்கள். இன்னின்ன சுரங்களில் குறைக்க வேண்டும் என்பதை அறிய மும்மூன்று அலகாக வரும் சுரங்கள் குறைத்துச் சொல்லப்பட வேண்டும் என்று வட்டப்பாலே முறை சொன்னார்கள்.

வட்டப்பாலையின் அலகு 22 ஆக வருவதினால் ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் வருகின்றன வென்று நாம் நினைக்கக்கூடாது. ஒரு ஸ்தாயியில் 24 சுருதிகளே. சங்கீத ரத்னகரரும் அவருக்கு முற்பட்ட பரதரும் 22 என்று சொல்லுகிற மற்ற எவரும் இவ்விஷயத்தில் தவறிப் போனார்கள் என்றே நினைக்கவேண்டியதா யிருக்கிறது. தமிழ்நாலின் கருத்து இன்னதென்று தெரிந்து கொள்ளாமல் இப்படிச்செய்ததே யொழிய வேறில்லை. என்றாலும் அவர்கள் எழுதிய விரிவான முறையினால் மயங்கும்படி நேரிட்டது. அவர் எழுதிய முறைப்படித் தற்காலம் ஒருவரும் படிக்க முடியாமல் அனுபோகத்துக் கில்லாமல் வெறும் நூல்மாத்தி ரமிருக்கிறதே போதுமான சாட்சியாகும்.

நாங்கள் இந்திய சங்கீத விஷயமாய்ச் சில தூட்பங்களை ஆராய்ந்து அதிலும் சுருதியை ஆராய்ந்து சொல்லவந்ததை நினைத்து நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். $\frac{2}{3}$, $\frac{3}{4}$ என்ற பின்ன எண்களினால் கிடைத்த சுரங்களோடு சாரங்கதேவர், பரதர் எழுதிய முறைப்படிக் கிரக மாற்று கையில் மூன்று சுருதிகள் புதிதாய்க் கண்டு ஆக ஒரு ஸ்தாயியில் 25 சுருதிகள் என்று நிச்சயித்து அதற்கேற்ற விதமாய் ஹார்மோனியம் தயார்செய்து கான்பரென்ஸுன் தாங்கள் கொண்டு வந்ததை நினைக்க நினைக்க எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.

இதைப் பார்க்கிலும் விசேஷமாக, கான்பரென்ஸ் நடந்த மூன்று நாட்களில் தாங்கள் வியாசம் படித்தும், பல தர்க்கங்கள் செய்தும், கணக்குகள் காட்டியும், ஹார்மோனியம் வாசித்தும் காட்டினீர்கள். நான் துவாவிம்சதி சுருதி, அனுபோகத்திற்கு வராத ஒன்றென்றும் சங்கீத ரத்னகரர் முறைப்படி சுருதி சேர்க்கப் பஞ்சமம் கூட சுவோடு பொருந்தாதென்றும் பல நியாயங்கள் சொல்லி பூர்வ தமிழ்மக்கள் வழங்கிவந்த 7, 12, 24, 48, 96 சுரங்கள், சுருதிகள் தான் தற்காலம் வழங்கி வருகின்றனவென்றும் நூல் வழியாகவும் அனுபோக மூலமாகவும் பிரசங்க மூலமாகவும் மறுப்பு மூலமாகவும் தெளிவாகச் சொன்னேன். கடைசியில் இந்தியன் ஹார்மோனியம் அனுபோகத்திலிருக்கும் சுரங்களுக்கு ஒத்துவாவில்லை என்று கூடி இருந்த சபையார் எல்லாராலும் தள்ளப்பட்டது. பரோடாவில் வாசித்த வியாசங்களின் மூன்று பாகமும் நான் தங்களுக்குக் கொடுத்திருந்தும் தங்கள் கட்சியை ஸ்தாபிப்பதற்கென்று இன்னும் ஒரு கடிதம் எழுதி அதை அச்சிட்டு எனக்கு அனுப்பிய தங்கள் வீரச் செயலை நான் என்னென்று சொல்வேன்?

தங்களைப் போல் சோர்வடையாமல் விடாப்பிடியாய்ச் சாதிப்பவர்கள் கிடைப்பது அரிது. தாங்கள் தென்னிந்தியாவில் உத்தியோகத்தி லிருக்கும்படி நேர்ந்திருந்தால் என் அபிப்பிராயத்தை அனுசரிக்கவும் கொண்டாடவும் கூடியவர்களா யிருப்பீர்கள். பூர்வ தமிழ் மக்களின் சங்கீதப் பயிற்சியிலிருக்கும் நுட்பங்கள் யாவையும் அனுபோக மூலமாகவே அறிந்து கொள்வீர்கள். Mr. தேவாலுடைய சுருதி முறையிலிருந்து வேறு சில சுருதிகள் கண்டுபிடித்து ஒரு ஸ்தாயியில் 25 சுருதிகள் உண்டென்று சொன்னதுபோல ஒரு ஸ்தாயியில் 96 நுட்பமான சுருதிகள் வழங்கிவருகின்றன வென்று ஹார்மோனியம் முதலியவைகள் செய்து என் முறையை உலகத்தார் யாவரும் அனுசரிக்க வேண்டுமென்று பிரசுரம் செய்திருப்பீர்கள். பூர்வ தமிழ்மக்கள் வழங்கி வந்த முறை மிக உத்தமமானதென்றும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்ததென்றும் அதை அறிந்து கொள்ளாமல் இதுவரையும் 22 சுருதியில் திண்டாடினேம் என்றும் எல்லாருக்கும் எடுத்துக்காட்டி யிருப்பீர்கள். தமிழ் மக்களின் கானத்தில் வழங்கிவரும் சுரங்களையும் சுருதி களையும் நான் அனுபோக முறையாய்ப் பாடிக்காட்டுகையில் சமீபத்திலிருந்தும் தாங்கள் மாத்திரம் அவைகளை ஒப்புக்கொள்ள மனதில்லாமல் ஒரு ஸ்தாயியில் 25 சுருதி யிருக்கவேண்டு மென்று திரும்பவும் சொல்வதானது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.

அப்படியிருந்தாலும் என்னுடைய நியாயத்தை அனுபோகத்தினால் அறிந்துகொள்ளக் கூடாத இந்துஸ்தானி பாடல்கள் பாடும் நாட்டில் இருக்கிறீர்கள். தாங்கள் லீவு நாட்களில் சில மணி நேரம் தஞ்சையிலிருக்கக் கூடுமானால் என்னுடைய அபிப்பிராயத்தைப் பழமையான தமிழ் நூல்கள் மூலமாகவும் அனுபோக மூலமாகவும் ருசுப்படுத்தித் தங்களை ஏற்றுக்கொள்ளும்படி நான் செய்வேன். தெய்வமும் அதற்கு அனுகூலமா யிருக்கவேண்டு மென்று பிரார்த்திக்கிறேன்.

தாங்கள் எழுதிய கடிதத்தில் சில குறிப்புகளுக்கு நான் பதிலெழுதாமல் இருக்கலா மென்றே நினைத்தேன். மனநேர்மையும் சத்தியமும் விடாமுயற்சியு முள்ள தங்களையொத்த ஒரு துரைக்குப் பதில் எழுதாமலிருப்பது நியாயமாகத் தோற்றவில்லை. உண்மையைக் கண்ட ஒருவர் சொல்லும் உண்மையை மாற்றி வேறு விதமாய்ச் சொன்ன துரைகளையும் இதுவரையும் நான் பார்த்ததில்லை. ஆகையால் தங்களுக்குப் பின்வரும் சில குறிப்புகளுக்குப் பதில் எழுதத் துணிந்தேன். நியாயங்களை எடுத்துச் சொல்லும்பொழுது சிலருக்கு மனவருத்தம் உண் டாகலாம். அப்படி உண்டாகாதிருக்கும்படித் தங்களை மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

1. ''இப்போது தாங்கள் அச்சிட்டிருக்கும் பத்திரிகையில் நான் சொன்ன எந்த விஷயங்களைப் பற்றித் தாங்கள் வித்தியாசமான அபிப்பிராயப் படுகிறதாகச் சொல்லவில்லை. எதைப் பற்றிப் பேசப்படுகிற தென்று அநேகருக்குத் தெரியவராது.''

'நான் சொன்ன எந்த விஷயங்களைப்பற்றித் தாங்கள் வித்தியாசமான அபிப்பிராயப் படுகிறதாகச் சொல்லவில்லை. பரோடா கான்பரென்ஸில், பண்டிதர் சங்கீத ரத்ன கருடைய துவாவிம்சதி சுருதியைத் தள்ளிவிடுகிறார். Equal Temperament முறைக்கு இழுக்கிறார்' என்று தாங்கள் சொன்னீர்கள். அதற்கு வேண்டிய நியாயங்கள் சுமார் ¾ மணி நேரம் சொல்லி, 'இதற்கு ஆக்ஷேபனை ஏதாவது இருக்குமானால் சொல்லவேண்டு'மென்று

நான் கேட்டபொழுது பதில் சொல்லாமல் எதற்காக மௌனம் சாதித்தீர்களோ அதையே மெயில் பேப்பருக்கு மார்ச்சு மாதம் 30-ம் தேதி Indian Music என்ற தலைப்புள்ள வியாசத்தின் 2-வது கலத்தில், 2-வது பாராவில், எழுதியிருந்தீர்கள்.

இவ்விரண்டு குறிப்பில் கான்பரென்ஸில் தாங்கள் சொன்ன விஷயம் நான் எழுதிய மறுப்பில் நாலாவது பக்கம் இரண்டாவது பாராவில் சொல்லப்படுகிறது. இரண்டாவது குறிப்பு ஐந்தாவது பக்கம் இரண்டாவது பாராவில் தெளிவாகக் காணப்படுகிறது. இவ்வியாச்சியத் திற்கு மூல புருஷராயிருந்த தங்கள் மனதிற்கு அது நன்றாகத் தெரியும். ஆனால் இவ்வளவு காலத் திற்குப் பின் நான் எழுதின இரண்டு விஷயத்தையும் இல்லாமற் செய்துவிடத் தாங்கள் எண்ணங் கொண்டதாகத் தங்கள் கடிதத்தால் விளங்குகிறது. அன்றியும் இவ்விடங்களை நன்றாய்ப் பார்க்க வில்லை என்று நினைக்கவும் இடமிருக்கிறது. முதலுக்கே மோசமானால் 'வட்டிக்கு வழக்காடுகிற துண்டா? தங்களைப் போன்ற அறிவாளிகளுக்கு நான் எழுதவேண்டியது என்ன இருக்கிறது.?

அன்புள்ள ஐயா! சுருதி விசாரணையில் தாங்கள் நெடுநாள் உழைத்தவர்கள் என்பதையும் Mr. தேவால் தங்களுக்குத் துணைவர் என்பதையும் நான் அறிவேன். தங்களுடைய Introduction to the Study of Indian music என்ற புஸ்தகத்தையும் தேவால் அவர்களுடைய The Hindu Musical scale and the 22 Srutis, என்ற புத்தகத்தையும் பார்த்திருக்கிறேன். தாங்கள் கான் பரென்ஸுக்கு வருகிறதாகக் கேள்விப்பட்டுத் தங்களிருவரையும் Rao Sahib, R. பண்டார்க்கார் B. A., L. M. S. அவர்களையும் பார்க்கவேண்டு மென்று விருப்பங்கொண்டே நானும் அங்கே வந்தேன். தங்களுடைய கணக்கு விஷயமாகவும் 22 சுருதிக்கு மேல் ஸ்ரகம் மாற்றும்பொழுது மூன்று சுருதிகள் கிடைத்தன என்று சொல்வதின் விஷயமாகவும் Mr. தேவால் அவர்கள் $\frac{3}{4}$ ஆய் பெருக்கிக்கொண்டு போகும் பொழுது நாலாவது படியில் அதாவது காந்தாரத்தில் திரித் திரிபம்மா (மறைப்பு $3\frac{3}{4}$, $5\frac{5}{8}$) செய்வதையும் அப்படியே தமக்கு வேண்டிய வேறு இடங்களிற் செய்வதையும் கவனித்த நான் இவ்விஷயங்களைப் பற்றிப் பூரணமாகப் பேச வேண்டுமென்று தயாராக வந்திருந்தேன்.

அதோடு 22 சுருதியுண்டென்று போராடும் கர்நாடக வித்வான்களில் இரண்டொருவர் அங்கு வந்திருந்ததனால் அவர்கள் முறையையும் அதைச் சேர்ந்த Mr. சகஸ்ராபுத்தி, Mr. மோகன சந்திரதாகோர், Dr. பண்டார்க்கார், Mr. Barve, சங்கீத ரத்னகர், பாரிஜாதக் காரர் ஆகிய இவர்களுடைய அபிப்பிராயங்கள் Diatonic Scale முதலிய இருபதுக்கு மேற் பட்ட அபிப்பிராயங்களையும் நான் ஆராய்ச்சி செய்து, யார் எதைக் கேட்டாலும் அதற்குத் தகுந்த பதில் சொல்வதற்கென்று மிகவும் தயாராய் வந்தேன்.

தாங்களும் Mr. V. N. Bhatkandi அவர்களும் தங்களைச் சேர்ந்தவர்களும் முந்தின இரண்டுநாள் கான்பரென்ஸிலும் முகம் கருகப் பேசிக்கொண்டதுபோல நான் செய்ய விரும்ப வில்லை. கறுப்புப் பலகையில் சங்கீத ரத்னகாரின் சுருதிக் கணக்கைத் தாங்கள் எழுதின பொழுது அதில் தவறுதல் இருக்கிறதென்று என் பக்கத்திலிருந்தவர்களுக்கு எடுத்துக்காட்டி னேன். தங்களுடைய கணக்கைத் தவறுதலென்று சபையில் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் வெறும் வார்த்தை பேசுவதைப் பார்க்கிலும் ருசுப்படுத்திக் காட்டுவதையே பெரிதாக நினைத்தேன்.

நான் மூன்றாவது காளில் ருசுப்படுத்திக் காட்டின பின், தாங்கள் இவைகள் எல்லாவற்றையும் இல்லாமற் செய்கிறதென்ற கோக்கத்துடன் மெதுவாக 'பண்டிதர் சங்கீத ரத்னாகரருடைய அபிப்பிராயத்தைத் தள்ளிவிடுகிறார். Equal Temperamentக்கு இழுக்கிறார்' என்று ஏளனம் செய்தீர்கள். அச்சமயத்தில் சங்கீத ரத்னாகரருடைய முறை முற்றிலும் தவறுதலான முறை யென்றும் $\frac{2}{3}$, $\frac{3}{4}$ ஐப் பெருக்கிக் கொண்டுபோகும் முறை யாவும் முற்றிலும் பிசகென்றும் Geometrical Progression படியே சுரங்க ளிருக்கவேண்டுமென்றும் வேண்டிய நியாயங்கள் சொல்லி முடிவில் ஆக்ஷேபணையிருந்தால் சொல்ல வேண்டுமென்று கேட்டேன். தாங்கள் ஆ என்றாவது, ஊ என்றாவது வாயைத் திறந்திருப்பீர்களானால் அப்போது என் பதிலை நன்றாய் அறிந்திருப்பீர்கள். எனக்கு ஏற்ற சமயம் கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட்டேன். அப்படி வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் தாங்கள், இந்தக் கடிதம் எழுதினதற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

---

2. "என்னுடைய கொள்கையைத் தாங்கள் எப்படிக் கண்டிக்கிறீர்களென்றால், உங்களுடைய அபிப்பிராயத்தையே சொல்லி யாவரும் அதைச் சோதித்துப் பார்க்கவேண்டு மென்பதுதான்"

மேற்கண்ட வசனத்தில் தங்கள் முறையை நான் தவறுதலென்று அறிந்து கொள்ளும்படி சொல்வதோடு கூட என்னுடைய அபிப்பிராயத்தை மற்றவர் சோதித்துப் பார்க்கும்படி சொல்வது தப்பிதமா? வாதி, பிரதிவாதிகளின் கருத்துத்தெரியாமல் எப்படி முடிவு காணக்கூடும்? ஆகையினால் தங்களுடைய கருத்தையும் என் கருத்தையும் மற்றவர் சோதித்துப் பார்க்கவேண்டு மென்று நான் செய்தது எவ்விதத்திலும் தவறுதலாக மாட்டாது. என்னுடைய கருத்து இன்னதென்று மற்றவர்களுக்கு வீணையினாலும் வாய்ப்பாட்டினாலும் சாதித்துக் காட்டினேன். அப்படிச் செய்து காட்ட சபையாரால் கேட்கப்பட்டுத் தாங்கள் செய்து காட்டியபொழுது சபையார் யாவராலும் தங்கள் ஆர்மோனியம் தவறுதலென்று தள்ளப்பட்டதே. இது போதாதா? இதையே எழுதியிருந்தேன்.

---

3. "பரோடாவில் எந்த விதமான சுருவும் சரிவர நடத்தப்பட்டதென்று தாங்கள் யதார்த்தமாய் நம்பிவிடக் கூடாது."

இவ்வாக்கியத்தைப் பார்க்கும்பொழுது பரோடாவில் எவ்விதமான சுருவும் சரிவர நடத்தப்படவில்லை என்ற தங்களுடைய அபிப்பிராயத்தையே சொல்லுகிறீர்கள். 'எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை' என்றுசொன்னது போல இதுவும் இருக்கிறதேயொழிய வேறில்லை. தாங்கள் எண்ணியது போல நான் எண்ணவில்லை. சரிவர நடத்தாமலா பழக்கத்திலிருக்கும் சுரங்களுக்குத் தங்கள் ஆர்மோனியத்தில் வரும் சுரங்கள் சரியாக வரவில்லை என்று கள்ளினார்கள்? அப்போது இந்தியாவின் பல இடங்களிலிருந்து வந்திருந்த சங்கீத வித்வான்கள் சரிவர நடந்து கொள்ள வில்லையா? இவர்களை நடத்தின பிரசிடெண்ட் அவர்கள் கூட்டத்தைச் சரியாய் நடத்த வில்லையா? 22 சுருதி முறைப்படித் தாங்கள் செய்து வந்த ஆர்மோனியம் தள்ளப்பட்டது சரியாய் நடந்த தென்பதை ருசுப்படுத்திக் காட்டவில்லையா? அப்போது தாங்கள் சபைமுன் ஒப்புக்

கொள்ள இல்லையா? சுரங்கள் குறைவுதான் என்று தாங்கள் சபை முன் சொல்லாதிருந்தால் நான் தங்களுக்கு ருசுப்படுத்தத் தயாராயிருந்தேன். தாங்கள் ஒப்புக்கொண்டபின் மறுபடி நான் உங்களைக்கேட்பது மரியாதையாகுமா? இந்திய சங்கீதத்தைக் கெடுத்துக்கொண்டிருக்கும் எத்தனையோ புண்ணியவான்களிருக்க தாங்கள் இவ்வளவு தூரம் சிரமம் எடுத்துக் கொண்டதற்கு நான் நன்றி பாராட்டவேண்டாமா?

அன்புள்ள தலைவரே! இந்திய சங்கீதத்தில் மிகுந்த சாஸ்திர முறைமையுடைதென்று யாவரும் கொண்டாடும் தென்னிந்திய சங்கீதம் பல்லாயிர வருடங்களுக்கு முன்னிருந்த காலது வரையும் தமிழ் மக்களால் பாடிக்கொண்டு வரப்படுகிறது. அனுபோகத்திற்கு வந்தபின் சாஸ்திரங்கள் மறந்து போவதும் நூல்களைப் பேணமல் விடுவதும் கால இயல்புதானே? இப்படித் தமிழ் மக்கள் கவனிக்காமல் போனபின் சமீபகாலத்தில் அதாவது 5ம் நூற்றாண்டிலிருந்த பரதரும் 13ம் நூற்றாண்டிலிருந்த சங்கீத ரத்னகரரும், தமிழ் முறையில் ஒரு ஸ்தாயியில் 24 சுருதிகள் சொல்லப்பட்டு அதில் இரண்டு அலகு குறைத்து 22 அலகில் கானம் செய்யப்படுவதை அறிந்து கொள்ளாமல் 22 என்று எழுதி வைத்தார்கள். அவர்கள் சொல்லுகிற சில இராகங்கள் தற்காலத்திலும் பாடப்பட்டு வருகின்றன. ஆனால் அவர்கள் சொல்லும் நூல்முறைப்படி அவைகள் அனுபோகத்திற்கு வாக்கூடியவைகளாயில்லை. இப்படி அனுபோகத்திற்கு வாராத 22ஐ வைத்துக் கொண்டு இந்திய சங்கீதத்தில் வரும் சுரங்களையும் சுருதிகளையும் பரிட்சை பண்ணுவது முற்றிலும் கூடாத காரியம் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன்.

பன்னிரண்டு பிரதானமான சுரங்களோடு சேர்ந்து வரும் சுரங்களை நிச்சயம் செய்வது கூடாதகாரியமாயிருந்ததனால் பூர்வ தமிழ்மக்கள் வழங்கிவந்த ஆயப்பாலியின் பன்னிரண்டு சுரங்களுக்கே துவாவிம்சதி சுருதியின் மயக்கம் உண்டாகிவிட்டது. வடநாட்டைப் பார்க்கிலும் தென்னாட்டில் சங்கீத ரத்னகரருடைய சூத்திரங்களை மனப்பாடம் செய்துகொண்டு தமிழ் மக்களின் கானம் முழுவதையும் இருபத்திரண்டிற்குள் மாற்றிவிடப் பார்க்கும் சங்கீத வித்வான்கள் பலருண்டு. ஆனால் அனுபோகத்திற்குக் கொண்டுவர முடியாமல் வெறும் போராட்டத்தோடு நின்று விட்டார்கள்.

Harmonic Ratio வின்படி சமமில்லாத இடைவெளிகளையும், வைபரேஷன்களையும் சொல்லிக்கொண்டிருந்தாலும் தென்னாட்டிலும், வட நாட்டிலும் வழங்கி வரும் சங்கீதத்தில் பன்னிரண்டு சுரங்கள் வழங்கி வருகின்றன வென்று கண்டு 12 சுர முறைப்படி நம்முடைய கானத்தை Staff Notation ல் குறிக்கவேண்டுமென்று வடநாட்டில் இந்துஸ்தான் சங்கீதத்தில் தேர்ந்தவரும் பல புத்தகம் எழுதியவருமான Mr. V. N. Bhatkandi B. A., B. L. அவர்கள் பிரேரேபிக்க, அவர் சொல்லிய பன்னிரண்டு சுரங்களே ஆயப்பாலியாய் பூர்வம் தொட்டு கர்நாடக சங்கீதத்தில் வழங்கி வருகின்றனவென்றும், இப்போது தங்கள் முன் இருக்கும் வீணையிற் காணும் சுரங்களே அவைகள் என்றும், அவைகளே ச-ப, ச-ம முறையாய் ஒரு ஸ்தாயியில் அமைகின்றன வென்றும், இப் பன்னிரண்டு சுரங்களே இந்துஸ்தானி சங்கீதத்திலும் வழங்கி வருகின்றனவென்றும், Equal Temperament என்று மேற்றிசையார் பியானோ, ஆர்மோனியங்களில் வழங்கி வருகிற சுரங்கள் இவைகளே என்றும், இவைகளை நாம் முதல் பாடமாக அனுட்டிக்கக் கூடிய தென்றும் நான் ஆமோதிக்கையில், சபையோர் யாவரும் ஒப்புக்கொண்டார்களே. அப்போது தாங்கள் எங்கே போனீர்கள்? தங்கள் சிநேகிதர் Mr. தேவால் எங்கே போனார்? இதனால் துவாவிம்சதி சுருதியின் போராட்டம் முடிய வில்லையா? தங்களுடைய அபிப்பிராயம் தள்ளப் பெற்றதென்று திரும்பவும் சொல்லவேண்டுமா?

பரோடா மகாராஜா அவர்கள் செலவு செய்த பன்னீராயிர ரூபாய்க்கு இது மிஞ்சின பலனென்று நான் நினைக்கிறேன். Pythagoras போன்ற தத்துவஞானிகள் 2500 வருடங்களுக்கு முன் தவறிப்போன இவ்விஷயம் பரோடாவில் என்னால் திருத்தப்பட்டதற்கு எத்தனை கோடி ரூபாய் செலவிட்டாலும் அதுவும் சிறிதே. 2500 வருடங்களாக உண்டான பல ஆபத்துக்கள் நீங்கி பழையபடி சங்கீதம் நன்னிலைக்கு வரும் என்ற குறி 12 சுரத்தினால் தோன்றவில்லையா? அதை உள்ளபடி கண்டு சந்தோஷிக்கும் விவேகிகள் சங்கீதத்திற்குப் புதிய உலகம் தோன்றியிருக்கிறதென்று சொன்னார்கள். சீவகோடிகள் யாவும் கண்டு சந்தோஷிக்கும்படியான சூரிய உதயத்தைச் சீவர்களை அடித்துத் தின்று காலம் கழிக்கும் கொடிய மிருகங்களும் பட்சிகளும் அருவருத்து ஓடி ஒளித்துக்கொள்ளுகின்றனவே. அதுபோல் ஒரு ஸ்தாயியில் வரும் 12 சுரத்தை அறியாதவர்கள் சொல்வார்கள். இந்தப் பன்னிரண்டு சுரத்திலிருந்து கமகமாய் வாசிக்கப்படும் 24, 48, 96 போன்ற நுட்ப சுரங்களை அறிந்துகொள்வது வெகு சுலபமாயிருக்கும். அஸ்திபாரம் போட்டபின் வீடு கட்டுவது பெரிய காரியமா? சங்கீதத்திற்கு அடிப்படையான இப் பன்னிரண்டு சுரங்களும் தவறுதலென்று சொல்லும் தங்களையொத்த யாவரும் அனுபோகமாய்ப் பாடிக்கொண்டிருக்கும் சுரங்கள் இன்னவையென்று அறியாதவர்கள் என்று நினைக்கிறேன்.

எவ்விதமான ருசுவும் சரிவர நடத்தப்படவில்லை என்ற வார்த்தை என் மனதிற்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. சரிவர ருசுப்படுத்த வேண்டுமென்றே அங்கு வந்தேன். சரிவர ருசுப்படுத்தியும் காட்டினேன். தங்கள் அபிப்பிராயத்தையும் அவ்வாறே கண்டித்தேன். ஆட்சேபனை இருக்குமானால் சொல்லவேண்டுமென்று பலதடவை கேட்டேன். தாங்கள் மௌனம் சாதித்தீர்கள். அனுபோகத்திலிருக்கும் சுரங்களுக்குத் தங்கள் ஹார்மோனியத்தின் சுரத்தை ஒத்துப்பார்க்கும்பொழுது ஹார்மோனியமும் பின் வாங்கிக்கொண்டது. அதற்கு முன்பே Mr. தேவால் மறைந்துபோனர். தாங்களும் அது குறைந்ததுதான் என்று ஒப்புக்கொண்டீர்கள். சபையோர் யாவரும் பன்னிரண்டு சுரத்தின்படி Staff Notation குறிக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அப்பொழுதும் தங்கள் சத்தத்தை அங்கு காணோம். ஹிஸ் ஹைனஸ் மகாராஜா மகாராணி அவர்கள் முன்னிலையில் லக்ஷ்மிவிலாசத்தில் நான் சபையில் சொன்னபடியே சொல்லி $\frac{2}{3}$, $\frac{3}{4}$ ஐப் பெருக்கிச் செல்லும் முறையும் 22 சுருதிமுறையும் முற்றிலும் சங்கீதத்திற்குப் பொருந்தாதென்றும் பூர்வ தமிழ் மக்கள் 7, 12, 24, 48, 96 ஆக ஒரு ஸ்தாயியைப் பிரித்து வழங்கி வந்திருக்கிறார்கள் என்றும் போதுமானபடி சொல்லி ருசுப்படுத்திக் காட்டிய பொழுது திவான் சாகிப் V. P. மாதவராவ் C. I. E அவர்களும் பிரசிடென்ட் நவாப் ஆலிக்கான் சாயப் அவர்களும் Mr. V. N. Bhatkandi அவர்களும் Mrs. Atiya Begum Fyzee Rahimin அவர்களும் Fine arts பலவற்றிலும் மிகத்தேர்ந்த Mr. Samuel அவர்களும் வந்திருந்தார்கள். தாங்களும் அவர்களுடன் வந்திருந்தீர்கள். அங்கும் தாங்கள் எவ்விதமான ஆக்ஷேபனையும் சொல்லவில்லை.

ஹிஸ் ஹைனஸ் மகாராஜா அவர்களின் பிறந்த நாள் அன்று நடந்த விசேடமான Garden Party க்கு நானும் அழைக்கப் பட்டிருந்தேன். அச்சமயத்தில் மகாராஜா அவர்கள் என்னைக்கண்டு சுகம் விசாரித்து, "தாங்கள் சங்கீத விஷயமாய் நெடுநாளாக அதிக வேலை செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதில் தாங்கள் இளக்காரித்துப் போகாமல் வேலை செய்ய வேண்டும். பூர்வ நூல்களையும் இந்திய சாஸ்திரங்களையும் நாம் பேணி முன்னுக்குக் கொண்டு வரவேண்டும்" என்று சொல்லிப் பல பேர் முன்னிலையில் என்னை உற்சாகப்படுத்தினர்கள். இப்படியெல்லாம் இருக்க எந்த விதமான ருசுவும் பரோடா மியூசிக் கான்பரென்சில்

சரிவர நடத்தப்படவில்லை என்று நான் அபிப்பிராயப்படுவேனா ? எவ்விதமான ருசுவும் சரிவர நடத்தப் பட்டதென்று தாங்கள் நம்பிவிடக்கூடாதென்று சொல்லுகிறீர்களே ! என் புத்தியை இப்படித்தானா மாற்றவேண்டும். என் அபிப்பிராயத்தை நேரே கேட்காமல் இப்படிப்பட்ட ஒரு பெரியசபையை அவதூறு சொல்லாதிருக்கும்படி மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

4. "Jakruddin Khan உடைய அபிப்பிராயங்களை யெல்லாம் நான் குறித்துவைத்திருந்தேன். நான் Dharwar க்குத் திரும்பிப்போன பிறகு அவைகளைத் தேடி எடுத்து அனுப்புவேன். அப்போது அந்த வித்வான் சொன்னவைகள் எவ்வளவு கூடாத காரியங்கள் எவ்வளவு தப்பிதங்களுக்குக் கொண்டுவந்துவிடுபவைகள் என்று வெளிப்படும். இந்திய ஆர்மோனியத்தைப் பற்றி நடந்த பரீக்ஷையானது பரிகாசக் கூத்தா (Farce) யிருந்தது. (எனக்குத் சிரிப்பையுண்டாக்குகிறது. அதுவும் ஒரு பரீக்ஷை யாகுமா ?")

'இந்திய ஆர்மோனியத்தைப்பற்றி நடந்த பரிக்ஷையானது பரிகாசக் கூத்தாயிருக்கிறது' என்று நீங்கள் சொல்வதைக் கேட்க வியப்படைகிறேன். ஆல் இந்தியா மியூசிக் கான்பரென்ஸ் முன்னால் தாங்கள் 22 சுருதி ஆர்மோனியத்தைக் கொண்டு வந்து அதையே இந்தியா முழுவதும் பரப்பிவிடுவதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்தீர்களே. தாங்களும் தங்களைச் சேர்ந்த சிலரும் Mr. Bhatkandi அவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் வியாசம் வாசித்தும் ஒருவருக்கொருவர் விரோதமாய் வாதாடியும் இரண்டு மூன்று நாள் மிகப் பிரயாசப்பட்டீர்களே. அப்படிப்பட்ட ஊக்கம் சாஸ்திர விசாரணையில் இருக்கவேண்டியது மிக அவசியந்தான். இந்தியாவிலுள்ள எத்தனையோ பெயர் தங்கள் பழமையைக் கவனியாதிருக்கும்பொழுது மேற்றிசையிலிருந்து வந்த தாங்கள் அதில் ஒருவராக ஏற்பட்டதைக்குறித்து மிகவும் சந்தோஷமடைந்தேன்.

தங்கள் ஆர்மோனியம் அனுபோகத்திற்கு ஒத்திருக்கிறதா என்று பரிட்சைபார்க்கப் படுகிற வரையும் இவையெல்லாம் எப்படி முடியுமோ என்று கவனித்துக்கொண்டிருந்தேன். ஒழுங்கான முடிவுக்கு வராதென்று நானறிந்திருந்தேன். ஆனால் சபையார் அனுபோகத்திற்கும் ஆர் மோனியத்திற்கும் ஒத்துவரவில்லை என்று சொல்லியபொழுது தாங்கள் குறைகிறதென்று ஒப்புக்கொண்டதைக்கேட்ட மாத்திரத்தில் தங்கள்மன கோர்மையையும் முகவாட்டத்தையும் கண்டு உண்மையாக நான் மிகவும் வருத்தமடைந்தேன். என்னாலும் சாஸ்திர விஷயமான விவகாரத்தில் இப்படி யெல்லாம் வருவதும் அதினால் ஒரு நன்மையுண்டாவதும் உலகந் தோன்றியது முதல் அனுபோகத்திலிருப்பதால் என் வருத்தத்தை மறந்தேன். தாங்களும் அவ்வருத்தமெல்லாம் மறந்து பழையபடியும் அதில் உண்மை யிருக்கிறதென்று நினைத்து எனக்கு எழுதினது மிகவும் சந்தோஷத்தைத் தரத்தக்கதே. இன்னும் ஒரு கான்பரென்ஸுக்குள் தற்காலம் அனுபோகத்திலிருக்கிற சுரங்களுக்கேற்ற விதமாய் என் கணக்கின்படி ஆர்மோனியம் அமைத்துக்கொண்டு வருவீர்களானால் எல்லோருக்கும் உபயோகமாயிருக்கும். அப்போது என் கொள்கையும் கர்நாடக சங்கீதத்தின் முறையும் தெளிவாக யாவருக்கும் விளங்கும்.

இது ஒரு பரிகாசக் கூத்து என்று தாங்கள் அலட்சியம் செய்கிறதாகத் தோன்றுகிறது. அப்படி அலட்சியமாய் நினைக்காதிருக்கும்படி தங்களை மிகவும் வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். மூன்று நாள் வியாசம் மூலமாகவும் வாதாட்டத்தின் மூலமாகவும் கறுப்புப் பலகையில் எழுதப்பட்ட கணக்கின் மூலமாகவும் ஆர்மோனியத்தில் பாடினது மூலமாகவும்

உங்கள் கருத்து யாவும் சபையாருக்குத் தெரிவிக்கப்பட்டதே. Mr. தேவால் புஸ்தக மூட்டைகளைக் கொண்டுவந்து தொப்பென்று போடுவதும் பின் வாத்தியத்தை முன் கொண்டுவந்து வாசிப்பதாகப் பாவனை செய்வதும் பின் ஒரு புஸ்தகத்தைத் திறந்து வேறொன்றைப் பேசுவதும் புஸ்தகத்தைத் தொப்பென்று கீழேபோட்டு விட்டு சமஸ்கிருத சூத்திரம் சொல்வதும் தாங்கள் கணக்குச் சொல்வதும் கறுப்புப் பலகைக்கு ஓடிக் கணக்கு எழுதுவதும் ஹார்மோனியத்தைத் திறந்து சில அபசுரங்கள் வாசிப்பதும் வேறு சிலர் ஆக்ஷேபிப்பதும் 'நான் இப்படிச் சொல்லுகிறேன்' என்பதும் 'அப்படித்தான் நினைக்கிறேன்' என்பதும் போன்ற விஷயங்கள் பல நடந்தன. உயர்ந்த பீடமும் இடமகன்ற கூடமும் அறிவாளிகள் நிறைந்த சபை எனக்கு தேவ சபையாகவும் ராஜ சபையாகவும் நியாய சபையாகவும் ஆராய்ச்சி சபையாகவும் தோன்றிற்று. ஆனால் தங்களுக்குப் பரிகாசக் கூத்தாடுமிடமாய்ப் படுவது நியாயந்தானே. இந்திய சங்கீதத்துக்கு விரோதமாய் தாங்கள் ஸ்தாபிக்கவந்த சுருதி முறையும் ஹார்மோனியமும் தவறுதலென்று சபையார் தள்ளினதினால் தாங்கள் இது ஒரு பரிகாசக் கூத்து என்று சொல்லுகிறீர்கள். கூத்துக்கும் குறைவானதா? கூத்துப்போட்டவர்கள் கூத்தைக் குறை சொல்லலாமா? கூத்துப் பார்க்கவந்த சபையார் முன்பாக ஏன் அவ்வளவு தூரம் எடுத்துச் சொன்னீர்கள்? தங்களைப் பரிட்சிக்கத் தகுதியற்றவர்கள் முன் அவ்வளவு சொல்வதுகல்லதல்ல என்று தாங்கள் ஏன் முன்னமே அறிந்து கொள்ளவில்லை? சுமார் இரண்டுமணி நேரமாக காபி, பெலவால், யமன், கமாஸ், பைரவி முதலிய ராகங்கள் அனுபோகத்திற்கும் ஹார்மோனியத்திற்கும் ஒத்துவருகிறதாவென்று பாடிக்காட்டப்பட்டதே. தாங்கள் உண்டாக்கின ஹார்மோனியத்தில் தாங்களே வாசித்துப் பார்த்துச் சுரம் வாய்ப்பாட்டிற்குக் குறைவாயிருக்கிறதென்று ஒப்புக்கொண்டீர்களே. இது பரிட்சை அல்லாமற் போனால் ஆராய்ச்சி யாகும். தகுந்த சுரஞானமுள்ள இந்துஸ்தான் கவாய்களும் கர்நாடக சங்கீத முறைப்படி $\frac{1}{16}$ போன்ற துட்பமான சுரங்களைப் பாடவும் கேட்கவும் தெரிந்த கர்நாடக வித்வான்களும் வந்திருந்தார்கள். நானும் மிகவும் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தேன். நானும் சில கேட்க நினைத்தேன். ஆனால் தாங்கள் உண்மையாக ஒப்புக்கொண்ட பிற்பாடு ஒன்றும் கேட்கத் துணியவில்லை. அந்தச் சமயத்தில் 'இது என்ன பரிட்சை, இது ஒரு பரிட்சையாகுமா என்னைப் பரிகாசமா செய்கிறீர்கள்? இது பெரும் பரிகாசக் கூத்தாயிருக்கிறது' என்று சொல்லிச் சிரித்திருந்தீர்களானால் அதற்குத் தகுந்த பதில் சொல்லியிருப்பேன். இருந்தாலும் சமயம் தவறிப்போகவில்லை. இன்னும் ஒரு கான்பரென்ஸ் கூடுகிற சமயத்தில் பரிகாசக் கூத்து (Farce) என்று சொல்வதைக் கேட்க மிக ஆவலாயிருக்கிறேன்.

சங்கீத ரத்னகரர் முறைப்படி ஒரு ஸ்தாயியில் 22 அல்லது 25 என்று சொல்லும் சுருதி முறை உலகம் முடியும் வரை எந்த காலிலாவது பாடப்படமாட்டாது என்று நிச்சயம் சொல்வேன். சங்கீத ரத்னகரர் முறைப்படி தாங்கள் சுருதி செய்யவில்லை என்பதை தாங்கள் எழுதிய Introduction to the study of Indian Music என்ற புத்தகத்தினால் அறிகிறேன். அவைகளை இதன் பின் வரும் குறிப்புகளில் பார்ப்போம்.

---

5. "பம்பாய் கிராணிக்கிளிலிருந்து தாங்கள் எடுத்துச் சொன்ன விஷயமானது என் அபிப்பிராயத்திற்கு எவ்வளவு சாதகக்குறைவாயிருக்கிறதோ அதைப் பார்க்கிலும் தங்களுக்கு அதிக சாதகக் குறைவாயிருக்கிறது."

ச	ரி	க	ம	ப	த	நி	ச
$\frac{9}{8}$	$\frac{16}{15}$	$\frac{10}{9}$	$\frac{9}{8}$	$\frac{9}{8}$	$\frac{16}{15}$	$\frac{10}{9}$	

தங்கள் அபிப்பிராயத்தின்படி அது பின் வருமாறு இருக்கும்

ச	ரி	க	ம	ப	த	நி	ச
$2^{\frac{1}{6}}$	$2^{\frac{1}{12}}$	$2^{\frac{1}{6}}$	$2^{\frac{1}{6}}$	$2^{\frac{1}{6}}$	$2^{\frac{1}{16}}$	$2^{\frac{1}{6}}$	

என்னுடைய அனுபோகத்தின்படி அது பின் வருமாறு இருக்கும்

ச	ரி	க	ம	ப	த	நி	ச
$\frac{10}{9}$	$\frac{16}{15}$	$\frac{6}{8}$	$\frac{9}{8}$	$\frac{10}{9}$	$\frac{16}{15}$	$\frac{9}{8}$	

தங்கள் கட்சிக்கு சாதகமாக வாசித்த வியாசங்களும் வியாக்கியானங்களும் கணக்குகளும் தங்கள் ஆர்மோனியத்தில் அடங்கியிருக்கின்றன. தாங்கள் மூன்றுநாள் பட்ட பிரயாசையாவும் இரண்டு மணி நேரப் பரிட்சைக்கு நிற்காமல் தள்ளப்பட்டன என்று கிராணிக்கிள் பேப்பர் சொல்லுகிறது. "After about two hours trial and discussion the conference came to the conclusion that the scales laid down on the above mentioned Ragas by Mr. Clements did not tally with those of practical artistes" என்று பம்பாய் கிராணிக்கிள் மார்ச்சு மாதம் 23ஆம் தேதி பேப்பரில் 5ஆவது பக்கத்தில் சொல்லுகிறது. தங்களுடைய நெடுநாள் பிரயாசமும் ஒருங்கே அழிந்து விட்டதென்று தெரிகிறதே. தங்கள் ஆர்மோனியத்தில் தங்கள் கணக்கின்படி சுரங்கள் செய்யப்பட்டிருந்தன. அப்படிச் செய்யப்பட்டது ஒன்று சபையாரால் தள்ளப்பட்டது. அதையே பேப்பரில் எழுதியிருந்தார்கள். உள்ளபடி இது உங்கள் கட்சிக்கு சாதகக் குறைவுதான். கிராணிக்கிள் பேப்பரில் என்னைப்பற்றியும் சில குறிப்புகள் எழுதியிருந்தார்கள். அதைப் பார்க்கையில் கான்பரென்சில் நடந்தவைகளில் உண்மையும் சாரமுமானவைகளையே சொல்லியிருந்தார்கள்.

The Bombay Chronicle, March, 24th 1916.

"The All-India Music Conference met again this morning. Thakur Nawab Ail Khan of Akbarpur presiding. The work of the day commenced with the reading of the paper entitled "An article on Shrutis" by Rao Sahib M. Abraham Pandither. It was a learned disquisition on the much disputed question of the *Shrutis* or quarter-tones, which are used in the singing of Indian Ragas, embodying the results of researches that the octave should be divided into twenty-four sub-divisions instead of twenty-two as prescribed by the ancient Sanskrit texts. The lecture was highly technical in character, and full of mathematical calculations and logarithms, but they were enlivened by the excellent discoursive style in which the lecture was delivered and by the interludes of songs of prayer sung in the very finely cultivated and musical voices of the two daughters of Mr. Pandither, who it is understood, are proficient in Indian as well as European music. The most interesting portion of the lecture was the demonstration given by the daughters of Mr. Pandither of the micro-tones used in certain of the South Indian *Ragas*, by sining to the accompaniment of the *Veena*. The ordinary frets of the *Veena* were supplemented by movable ivory frets placed on the board of the *Veena* at different places in order to produce the micro-tones exhibited, and in this way Mr. Pandither explained what notes were now in use in some of the Southern *Ragas*. The correctness of the notes sung with those produced on the instrument was vouched for by so distinguished a musician as Mr. Zakr-ud-Din of Udeypore. The paper of Mr. Pandither was the only item arranged for the morning.

பம்பாய் கிராணிக்கிள்: 24, மார்ச்சு 1916.

இந்தியா முழுவதிலும் இருந்து வந்து கூடிய கான்பரென்ஸ் இன்று காலை மறுபடியும் கூடினது. Thakur Nawab Ali Khan சாயப் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். இன்று காலை முதல் முதல் சுருதிகளின்பேரில் ராவ் சாயப் M. ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் ஒரு உபந்நியாசம் வாசித்தார்கள். இந்திய ராகங்களில் வரும் துட்பமான சுருதிகள் அல்லது கால் சுரங்களைப்பற்றித் தன் சங்கீதக் கல்வித் திறமையைக் காட்டும்படியான விதமாய் பண்டிதரவர்கள் சொன்னார்கள். சுருதிகள் பல அபிப்பிராயம் ஏற்கக்கூடியவையென்பது யாவருமறிந்த விஷயமே. பண்டிதரவர்கள் அநேக வருஷங்களாய் இது விஷயத்தில் பல ஆராய்ச்சிகள் செய்ததின் பலனாய் ஒரு ஸ்தாயியானது சமஸ்கிருத நூல்களில் சொல்லப்பட்ட பிரகாரம் 22 சுருதிகள் என்றிராமல் 24 சம சுருதிகளாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று எடுத்துக்காண்பித்தார்கள். இந்த வியாசமானது சங்கீத சாஸ்திர விஷயமான அதி நுட்பமான விஷயங்களையும், கணக்குகளையும், துருவ எண்களையும் பற்றிச் சொன்னதினால் கருகலாயிருந்தபோதிலும் அது சொல்லப்பட்ட போங்கானது ஒருவரிடம் பேசுவதுபோலத் தெளிவுள்ளதாயிருந்ததினாலும் ஐரோப்பிய சங்கீதத்திலும் இந்திய சங்கீதத்திலும் மிகத் தேர்ச்சிபெற்ற அவர்களுடைய இரண்டு குமாரத்திகளும் தங்களுடைய மிக இனிமையான சாரீரத்தோடு இடைக்கிடையே பக்திரஸமான கீர்த்தனங்களைப்பாடியதாலும் நேரம்போனது ஒருவருக்கும் தெரியவில்லை. இந்த வியாசத்தில் வெகு முக்கியமாய்க் கவனிக்கப்படத்தக்க விஷயம் யாதென்றால், தென்னிந்திய ராகங்களில் சிலவற்றில் வழங்கும் அதி நுட்பமான சுரங்களை பண்டிதரவர்கள் குமாரத்திகள் யாவருக்கும் விளங்கும்படியாய் வீணையுடன் பாடிக்காட்டியதுதான். வீணையில் சாதாரணமாயுள்ள மெட்டுகளை யல்லாமல் அங்குமிங்கும் சமயத்திற்கேற்ற விதமாய்த் தள்ளிவைக்கக்கூடிய தந்த மெட்டுகளை வைத்து அதி நுட்பமான சுரங்களைப் பாடிக்காட்டி இவ்விதமாய்த் தென்னிந்தியா ராகங்களில் வழங்கும் சுரங்களை பண்டிதரவர்கள் எடுத்துக் காட்டினார்கள். பாடிய சுரங்களும் வீணையில் வாசித்த சுரங்களும் ஒற்றுமையுள்ளவைதான் என்று மிகப் பிரபல வித்துவானாகிய உதையப்பூர் சாக்குடீன் சாயப் அவர்களால் நற்சாட்சி பெற்றார்கள். காலையில் வாசிக்கப்படும்படி குறிக்கப்பட்டது இந்த ஒரே விஷயமாய் இருந்தது.

மேற்கண்ட சில வரிகளை நாம் பார்க்கையில் உண்மையுள்ள ஒருவருக்கு என்ன அபிப்பிராயம் உண்டாகுமென்று நான் சொல்லத் தேவையில்லை. இது என் கட்சிக்கு சாதகக் குறைவென்று தங்களைத் தவிர மற்ற எவரும் எண்ணமாட்டார்கள். கிருஷ்ண பரமாத்மா துரியோதனனையும் தருமரையும் கூப்பிட்டு, 'உலகத்தில் நல்லவர்கள் யார் கெட்டவர்கள் யார் பார்த்து வாருங்கள்' என்று சொன்னார். அப்போது தீமையே உருவாக அவதரித்த துரியோதனன் 'சுவாமி! தங்கள் சொற்படித் தேடி வந்தேன் என்னைத் தவிர நல்லவர் வேறு ஒருவரும் இல்லை. மற்றவர்கள் யாவரும் பொல்லாதவர்களாயிருக்கிறார்கள்' என்றுசொன்னான். தருமர் வந்து 'சுவாமி! உலகத்திலுள்ள யாவரும் நல்லவர்களாயிருக்கிறார்கள். நான் ஒருவன் தான் மிகப் பாவியாயிருக்கிறேன்' என்று வணங்கினார். இதுபோலவே தாங்கள் சொல்லுகிறதும் இருக்கிறது. உங்கள் ஆர்மோனியம் ஒத்துவரவில்லை என்று சொன்னதுபோல என் கணக்காவது வீணையின் சுரங்களாவது வாய்ப்பாட்டாவது ஒத்துவரவில்லை என்று சொன்னார்களா? தங்கள் கட்சிக்கு விரோதமான அபிப்பிராயம் சபையார் சொன்னதையே அவர்கள் கிராணிக்கிள் பேப்பரில் எழுதியிருந்தார்கள். ஆனால் சபையார் என் விஷயத்தில் எந்த நல்ல அபிப்பிராயப்பட்டார்களோ அதையே கிராணிக்கிள் பேப்பரில் எழுதியிருந்தார்கள். என் கட்சிக்கு சாதகக் குறைவான ஒரு வார்த்தையும் அவர்கள் சொல்லவில்லையே. பின் ஏன் தாங்கள் இப்படிச் சொல்லவேண்டும்? இதைப் பார்க்கும் மற்றவர் தங்களை உண்மையுள்ளவர்களென்று நினைப்பார்களா?

எல்லாரும் அதிகமாகப் பிரியப்படுவதான காபி தங்கள் ஆர்மோனியத்தில் குறைந்ததனால் எல்லோருக்கும் தலைவலி யுண்டாயிற்று. அவைசரியான சுரங்களாயிருக்குமானால் அச்சுரங்களைக் கிரகமாற்றும் பொழுது கரகரப்பிரியா, அனுமத்தோடி (பைரவி), மேசகல்யாணி

(யமன் கல்யாணி), அரிகாம்போதி (காம்போதி), கடபைரவி (தோடி), சுத்த தோடி (சுத்த பைரவி), சங்கராபரணம் (பெலவால்) முதலிய தாய் இராகங்கள் ஆறும் உண்டாகவேண்டும். இதைச் சங்கீத அனுபோகமுள்ள யாவரும் அறிவார்கள். இச் சுரங்களுக்குப் பின்ன எண்களைப் போட்டுப் பின்னப் படுத்துவது பரிதாபமாயிருக்கிறது. இப் பரிதாபத்திற்கு இன்னின்ன இடைவெளிகள் வரவேண்டுமென்று என் அபிப்பிராயத்தை இரண்டாவது வரியில் எழுதுகிறீர்கள். அது அப்படியல்ல. ஆனால் அவைகள் நான் பரோடா கான்பரென்ஸில் வாசித்த இரண்டாவது வியாசத்தில் ஆயப்பாலே அட்டவணையில் காட்டியபடி இருக்க வேண்டும். நீங்கள் சமீபத்தில் இல்லையே என்று மிகவும் வருத்தப்படுகிறேன். இப்படிப்பட்ட கணக்குகளுக்குப் பதில் எழுதுவது யானை கண்ட குருடர் பேசிக்கொள்வது போலிருக்கும். ஒருவன் யானை உலக்கைபோலிருக்கிறதென்றும் மற்றொருவன் உரல்போலிருக்கிறதென்றும் வேறொருவன் விளக்குமாறு போலிருக்கிறதென்றும் சொல்லுவான். யானையைக்கண்டவன் அதைக்கேட்டு நகைத்தால் "நான் என்கையினால் தடவிப் பார்த்தேன். உனக்குக் கண்ணிருந்தும் கருத்து இல்லாமற் போய்விட்டதே" என்று பரிகாசம் செய்வான். இவ்வாறே உள்ளதை இல்லாததாகவும் இல்லாததை உள்ளதாகவும் சாதிப்பது உலக வழக்கம்.

---

6. "வந்திருந்த 'வித்வான்களில்' எத்தனை பேர் சுரங்களைப் பகுத்தறியும் விஷயத்தில் வாத்தியங்களின் உதவியினால் பழகியிருந்தவர்கள்? அவர்களில் எத்தனை பேருக்கு Tempered tone, Major Tone Minor tone, சாதாரண ஆர்மானிக் இடைவெளிகள் முதலியவற்றின் நுட்ப வித்தியாசம் தெரியும்? அநேக மெம்பர்கள் தங்கள் வியாசங்களில் $\frac{2}{3}$, $\frac{10}{9}$, $\frac{5}{4}$, $\frac{6}{5}$ என்ற இடைவெளிகளைப்பற்றித் தண்ணீர்பட்ட பாடமாய்ப் பேசினார்களே, அவர்களில் எத்தனை பேருக்கு இந்த நுட்ப வெளிகளின் வித்தியாசங்கள் தெரிந்திருக்கும்?"

வந்திருந்த வித்வான்களின் வித்வத்திறமையைப் பற்றித் தாங்கள் சில வார்த்தைகள் சொல்வதை முற்றிலும் ஆக்ஷேபிக்கிறேன். தொட்டவிடமெல்லாம் உங்களைக் குறைசொல்வது என் மனதிற்குத் திருப்தியாயில்லை. தாங்கள் கடிதம் எழுதாமலிருந்தால் தங்கள் நேர்மைக்காகப் புகழ்ந்துகொண்டே யிருப்பேன். சுரஞானம் மிக அருமையானதுதான். Major tone, Minor tone, இன்னதென்று தெரியாதிருக்கலாம். ஆனால் அவர்கள் அனுபோகத்தில் எந்நேரமும் அவைகளையே பாடிக்கொண்டிருக்கிறார்கள் என்று தங்களுக்குத் தெரியவில்லை.

சங்கீதத்திற்குரிய நுட்ப விதிகளையும் பெயர்களையும் சங்கீதம் கற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு மேல் நாட்டில் சொல்லிவைப்பதுபோல் இந்தியாவில் செய்யாமல் மிகச்சிறு பிராயத்திலேயே அனுபோகத்திற்கு வரும்படி பாடம் செய்து வைக்கப்படுகிறது. பல வருடங்கள் மனப்பாடம் பண்ணினபின் விசாரிக்கும் விவேகிகளுக்குப் பல இரகசியங்கள் வெளியாகும். மற்றவர்கள், கேட்டதையே சொல்லும் கிளிப்பிள்ளைபோலத் தாங்கள் படித்தவைகளை மாத்திரம் சொல்லிக்கொண்டு நிற்பார்கள். இப்படிப்பட்ட கிளிப்பிள்ளைகள் இந்தியாவில் ஏராளம். Diatonic Scale, Tempered Scale என்றால் தெரியாது. ஆனால் பூர்வமாய் உலக சரித்திரம் உண்டாவதற்கு முன்னாலேயே அதாவது Haeckel என்னும் தத்துவசாஸ்திரி 'சுமார் 20,000 வருடங்களுக்கு முன்னாலேயே லெமூரியா நாட்டிலுள்ளோர் சகல கலைகளிலும் தேர்ந்திருந்தார்கள்' என்பதற்கிணங்க தமிழ்மக்கள்வழங்கிவந்த சுரமும் சுருதியும் சம இடைவெளிகளுடையவைகளாயிருக்கின்றனவென்றும் சம இடைவெளிகளுடைய முறைப்படியே நாளது வரையும் கர்நாடக சங்கீதம் பாடப்பட்டுவருகிறதென்றும் அதன் சிதைவாக மற்றும் பல தேசத்தில் அச் சுரங்களையே பாடிக்கொண்டிருக்கிறார்களென்றும் நான் அறிகிறேன்.

இந்தியாவிலுள்ள சங்கீத வித்வான்கள் பள்ளிக்கூடத்திலல்லாமல் பரம்பரையாய்க் கேட்டுப் படிப்பதே வழக்கமாயிருப்பதினால் தங்களைப்போன்றவர்கள் நூலறிவைக் கேட்கும் பொழுது பதில் சொல்லத் தெரியாதவர்களாயிருந்தாலும் தாங்கள் கேட்கும் இவ்வற்ப கேள்விக்குமேற்பட்ட அனுபோக முடையவர்களா யிருக்கிறார்களென்று நான் துணிந்து சொல்வேன். சர்க்கரை, சர்க்கரை என்று ஓயாமல் சொல்லிக்கொண்டிருப்பதால் நாவு தித்திக்குமா? ஒருவன் நூல் அறிவு பெரிது என்பான். மற்றொருவன் அனுபோகம் பெரிது என்பான். இவ் விரண்டு முடைமையே சிறந்தது.

அனுபோகத்தில் தேர்ந்தவர்களாகிய பல கவாய்களும் கர்நாடக வித்வான்களும் வந்திருந்தார்கள். தங்களைப்போல் Major tone, Minor tone Tempered Scale, Diatonic scale என்று சொல்லத்தெரிந்தவர்களும் பலர் வந்திருந்தார்கள். தங்களைப்போல் $\frac{2}{3}$, $\frac{3}{4}$ ஐப் பெருக்கி அதன் மூலமாய்க் கிடைக்கும் பின்ன எண்களை 'இப்படித்தான் வரவேண்டு'மென்று சொல்லும் கணிதவல்லோரும் வந்திருந்தார்கள். அப்படிக் கூடியிருக்கும் சமயத்தில் 'உங்களில் எத்தனை பெயருக்குச் சுரங்களைப் பகுத்தறியும் சக்தி உண்டு. உங்களில் யார் யாருக்கு Major tone, Minor tone தெரியும். தெரிந்தவர்கள் இருக்கலாம் மற்றவர்கள் போய்விடலாம்" என்று சொல்லியிருப்பீர்களானால் $\frac{8}{9}$, $\frac{9}{10}$, $\frac{4}{5}$, $\frac{5}{6}$ போன்ற நுட்ப இடைவெளிகளை அறிந்தவர்கள் இன்னு மென்று தெளிவாகத் தெரிந்துகொள்ளலாமே.

சபையில் வந்திருந்த அறிவாளிகளைப் பார்த்து இப்படிச் சொல்வதை நான் மிகவும் அன்போடு ஆக்ஷேபிக்கிறேன். மற்றவர்களை அற்பமாய் எண்ணும் இந்த வார்த்தைகள் தங்களுக்கே திரும்ப வருமே என்று மிகவும் விசனப்படுகிறேன். அங்கு வந்திருந்த சபையில் நான் ஒருவனுக எண்ணப்படுவதற்குத் தகுதியுள்ளவனே என்று கவலைப்படுகிறேன். தகுதியுள்ளவனுக தாங்கள் நினைப்பீர்களானால் நான் எழுதிவந்த மூன்று வியாசங்களில் தவறுதல் எடுத்துக் காட்டவேண்டும். இல்லையானால் தாங்கள் சொன்ன வார்த்தைக்கு நான் சம்மதிக்கவில்லை. இப் படியே வந்திருந்த பலர் மிகுந்த சுரஞானமும் அனுபோகமும் உடையவர்கள். என்னை எப்படிச் சொன்னாலும் பரவாயில்லை. மற்றவர்களைப்பற்றி நீங்கள் சொல்லுவதை நான் விரும்பவில்லை. இப்படித் தெரியாதவர்கள் முன் தங்கள் ஆர்மோனியத்தை அரங்கேற்ற எப்படித் துணிந்தீர்கள்? தங்கள் ஆர்மோனியம் குறைகிறதென்று தாங்களே ஒப்புக்கொள்ளும்படிச் செய்தவர்கள் சுர ஞானமுள்ளவர்கள் அல்லவோ? இவ்விஷயத்தில் நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை. இப்படிச் சபையிலுள்ள யாவரும் கூடித் தள்ளும்படியான அபிப்பிராயத்தைக் கொண்டுவந்த தாங்கள் அதற்கு நேர் விரோதமாய்ச் சொல்லுகிறது 'திராட்சப்பழம் புளிக்கும்' என்ற நரியின் கதைபோலிருக்கிறது. தாங்களும் அம்முறைபோல் நடந்துகொண்டீர்களேயொழிய வேறில்லை.

---

7. "தங்களுடைய குழந்தைகளின் கானத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள். அவர்கள் பாடியது உங்களுடைய அபிப்பிராயத்தை நிலை நிறுத்தினதாக நினைக்கிறீர்கள்."

'தங்கள் குழந்தைகள் பாடியது தங்கள் அபிப்பிராயத்தை நிலைநிறுத்தினதாக நினைக்கிறீர்கள்' என்று தாங்கள் எழுதுகிறீர்கள். 'நீங்கள் நினைக்கிறீர்கள்' என்பதை நான் பார்க்கும்பொழுது மனிதர்களுடைய உள்ளங்களிற் புகுந்து அவர்கள் அபிப்பிராயத்தைக்

கண்டுகொள்ளத் திறமையுடையவர்களாகக் காணப்படுகிறது. இப்படிப்பட்ட தங்களுக்கு பரோடாவில் வாசித்த இரண்டாவது வியாசத்தில் பூர்வ தமிழ்மக்கள் பாடிவந்த முறைப்படியே தற்காலமும் பாடி வரும் கர்நாடக சங்கீதம் இருக்கிறதென்றும் அதில் 7, 12, 24, 48, 96 போன்ற சுரங்களும் சுருதிகளும் வழங்கிவருகின்றனவென்றும் சொல்லி உதாரணமாக 67 இராகங்கள் குறித்துக் கொடுத்திருந்தேன். அவைகளில் சபையார் விரும்பியவற்றைப் பாடியும் காட்டினேன். அவைகளுக்கு ஏற்பட்ட கணக்கின்படி வீணைத் தந்தியின் சரியான அளவில் வரும் சுரங்கள் இன்னவை யென்றும் காட்டினேன். கர்நாடக சங்கீதம் தெரிந்த யாவரும் மிகப் பிரியமாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்கள். கணக்கிற்கண்ட அளவின்படியே வீணையின் சுர ஸ்தானங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தற்காலத்திற் பாடப்பட்டுவரும் முறைப்படியே யாவருக்கும் பழக்கமான கீர்த்தனைகளை அதில் வாசித்து வாயினல்பாடி தூட்ப சுரங்களைக் குறிப்பிட்டுக் காட்டி என் அபிப்பிராயத்தையே பூர்வ தமிழ்மக்கள் வழங்கிவந்திருக்கிறார்களென்று சொன்னேன். இதையே பூர்வ தமிழ் மக்கள் வழங்கி வந்திருக் கிறார்களென்று பல ஆதாரமும் எடுத்துக்காட்டினேன். என் வாக்கு ஒன்றையும் மனது வேறுகவுமிருக்கவில்லை என்று தாங்கள் ஏன் கவனித்துப் பார்க்காமல் போனீர்கள். என் மன விருப்பத்தின்படி கர்நாடக சங்கீதத்தில் எது உண்மையாயிருக்கிறதோ அதையே சபையார் முன் வீணையில் காட்டினேன். கர்நாடக சங்கீதம் ஒன்றுகவும் வீணை வேறுகவுமிருக்க வில்லை. வீணை ஒன்றுகவும் குழந்தைகள் பாடின கீதம் மற்றொன்றுகவும் இருந்ததில்லை. நாங்கள் பாடின கீர்த்தனங்களை அங்கு வந்திருந்த கர்நாடக வித்வசிரோமணிகள் அறிவார்கள். அனுப்பிசகுமானால் அதை ஒப்புக்கொள்ளுகிறதற்கு அவர்கள் தயாராயிருந்ததில்லை. தவறினல் சும்மா விட்டிருக்கவுமாட்டார்கள். சாவேரி இராகத்தில் வரும் ரிஷபத்தின் முதல் சுருதி இன்னும் குறைந்து வரவேண்டுமென்று சரியாயிருந்த ஒன்றை Mr. அரிகாகபூஷணமையர் B.A., B.L., ஆக்ஷேபனை செய்ததையும் அதை ஒப்புக்கொள்ளாமல் Mr. சிட்டி பாப்பு நாயுடு அவர்களும், Mr. சீனிவாச ஐயங்கார் B.A., L.T., அவர்களும் சபையிலுள்ள மற்றும் சிலரும் தடுத்ததையும் தாங்கள் அறிவீர்களே.

துவாவிம்சதி சுருதி யென்றே சாதிக்கவேண்டுமென்று கங்கணங்கட்டிக்கொண்டு என் அபிப்பிராயங்களுக்கு நேர் எதிர்த்துநின்ற (என் பிள்ளைகளின் உபாத்தியாயரான) மகா-ரா-ரா-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர் அவர்கள் நான் சபை முன் வாய்திறக்கும் வரையும் நாங்கள் செய்யப் போகிறது இன்ன தென்று அறியாதிருந்தார்கள். அவர் ஓயாமற் குதர்க்கம் செய்வதை அறிந்த சிலர் பரோடாவுக்கு அவரைக் கூட்டிக்கொண்டு போகவேண்டாமென்று என்னைத் தடுத்தார்கள். ஆனல் நானும் பிள்ளைகளும் செய்துகாட்டுகிற சுருதி முறையை அவர் கேட்டுச்சரியென்று சொல்வதை நான் பெரிதாக நினைத்தேன். ஏனென்றல் 'பரோடாவில் கான்பரென்ஸ் நடக்கிறது. திவான்சாகிப் மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் அவர்கள் வரும்படி எழுதியிருக்கிறார்கள். கட்டாயம் நாம் போகவேண்டியதாயிருக்கிறது' என்று நான் சொல்லும்பொழுது மகா-ரா-ரா-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர் அவர்கள் 'ஆம், ஆம், கர்நாடக சங்கீதம் தெரியாத வடநாட்டில் ராஜ சபையில் தங்கள் அபிப்பிராயத்தை அரங்கேற்றிவிட்டால் அதைக்கொண்டு இவ்விடத்துக் கான்பரென்ஸிலும் சாதித்து விடலாம்' என்று சொன்னர்கள். நான் செய்யப்போகிறது இன்னதென்று அறியாததனல் இப்படிச் சொன்னர்கள். எப்படியிருந்தாலும் அவர்களையே சாட்சியாகவைத்துக் கொண்டு என் அபிப்பிராயங்களை சபை முன் தெரிவிக்கத் தீர்மானித்தேன்.

அவர்கள் என் பிள்ளைகள் படிப்பதையும் என் அபிப்பிராயத்தையும் மிகக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். கூட்டம் முடிந்தவுடன் தங்கள் அபிப்பிராயம் எப்படி? உங்கள்

மனதிற்கு திருப்தியாயிருந்ததா? என்று நான் கேட்டபொழுது 'நான் அழுதுகொண்டு இருக்க வேண்டியவன், சபை முன் என்னைத் தைரியப் படுத்திக்கொண்டிருந்தேன். எனக்கு வேறென் றும் தோன்றவில்லை. எழுந்திருந்து குழந்தைகளை நமஸ்காரம் செய்யவேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று' என்று உள்ளம் நிறைந்த அன்புடன் சொல்லிப் பிள்ளைகளை ஆசீர்வதித்தார்கள். அப்போது "எல்லாம் தங்களுடைய கிருபைதான் எல்லாம் தாங்கள் சொல்லிக்கொடுத்த கீர்த்தனங்களிலிருந்தே பாடிக்காட்டினேம்" என்று சொல்லி சந்தோஷமடைந்தோம்.

இன்னிசையைக் கேட்டிருந்த கல்லும் கரையுமே? தங்கள் மனதிற்கு மாத்திரம் விசித்திராசமான அபிப்பிராயம் தோன்றுவதை நினைக்க நினைக்க நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன். வீணையின் இனிய ஓசையைக் கேட்டுக் கேட்டு மனதும் இளகி அல்லது காருண்யமுடையதாகி வீணைவாசிப்போர் வாய்ச்சொல்லும் மிக மிருதுவாகிவிடுகிறதென்று பூர்வ தமிழ்மக்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை,

"செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடைய நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்னரம் புளர." என்னும் அடிகளால் அறியலாம்.

சங்கீதத்தின் சுருதி விஷயமாக ஆராய்ச்சி செய்து வரும் தாங்கள் இப்படி மாறுதலான அபிப்பிராயப் படுவானேன். என் அபிப்பிராயம் வேறு குழந்தைகளின் வாய்ப்பாட்டு வேறு யிருக்கிறதென்று நான் அறிந்தேனுனல் சபைமுன் வந்திருக்கமாட்டேன். வீணையின் நாதம் வேறு தற்கால அனுபோகம் வேறுயிருக்கிறதென்று நான் அறிவேனுனல் தங்களைப் போல் துணிகரமாய் சபைமுன் வந்திருக்க மாட்டேன். ஆர்மோனியம் குறைகிற தென்று தோல்வியுடன் போயிருக்கவு மாட்டேன். அபிப்பிராயம் வேறு, ஆர்மோனியத்தின் சுரங்கள் வேறு, தற்கால அனுபோகம் வேறுயிருந்த தங்கள் அனுபோகத்தின்படியே என்னையும் நினைத்து விட்டீர்கள். அனுபோகம் வேறு எண்ணம் வேறுயிருக்கும் எந்த முறையும் உலகத்தில் முன்னுக்கு வரமாட்டா தென்று நான் அறிவேன்.

கர்நாடக சங்கீதத்தில் எது அனுபோகத்திலிருக்கிறதோ அதையே வீணையில் அளந்து காட்டினேன். வீணையிற் கண்ட ஓசையின்படியே பிள்ளைகள் பாடினர்கள். என் கருத்து இன்னதென்று என் பிள்ளைகள் அறிவார்கள். நான் கொண்டுவந்திருந்த வீணையும் அறியும். அப்போது கூட இருந்த குழந்தைகளின் உபாத்தியாயரான மகா-ரா-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர் அவர்களும் சில கர்நாடக வித்வசிரோமணிகளும், Mrs. Atya Begum Fyzee Rahimin அவர்களும், சாக்ருடன் சாயபும் மற்றும் அங்கு வந்திருந்த வடதேசத்து கனவான்களில் மிகுதியானவர்களும் அறிவார்கள். தங்களுக்குத் தெரியாமல் போனதைப்பற்றி நான் ஆச்சரியப்படவில்லை. ஏனென்றால் இந்துஸ்தான் இராகங்களைத் தவிர கர்நாடக சங்கீதத்தைக் கனவிலும் தாங்கள் கேட்டிருக்கமாட்டீர்கள். ஆனால் இந்துஸ்தான் சங்கீதத்தை எடுத்து நிறுத்த நீங்கள் செய்து கொண்டு வந்த ஆர்மோனியத்தின் சுரங்கள் தற்காலம் அனுபோகத்திலிருக்கும் இந்துஸ்தான் இராகங்களின் சுரங்களுக்கு ஒத்திருக்கவில்லை என்று சபையோரால் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் ஆகஸ்டுமாதம் 19ம் தேதி நடந்த தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கத்தில் கர்நாடக வித்வ சிரோமணிகள் முன்னிலையிலும் கணிதம் தேர்ந்த Professor கள் முன்னிலையிலும் தமிழ்மொழி வல்ல புலவர்கள் முன்னிலையிலும் பிரசிடென்ட் V. P. மாதவராவ் அவர்கள்

முன்னிலையிலும் சொல்லி பூர்வ தமிழ் நூல்களின் ஆதாரமும் காட்டிக் கணக்கின்படியே வீணையின் அளவும் காட்டி வீணையில்வரும் நாதத்தின்படியே பாடியும் காட்டிய என் அபிப்பிராயம் பலராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஒரு ஸ்தாயியில் $\frac{2}{3}$, $\frac{2}{3}$ ஆகவும் $\frac{3}{4}$, $\frac{3}{4}$ ஆகவும் போவதில் கிடைக்கும் சுரங்கள் சரியானவைகள் அல்ல என்றும் ஒரு ஸ்தாயியில் 22 அல்ல இருபத்து நான்காகவே வரவேண்டுமென்றும் என் அபிப்பிராயத்தைச் சாதித்துக் காட்டினேன். பிள்ளைகள் பாடிக்காட்டியதும் என் அபிப்பிராயமும் ஒன்றே யொழிய வேறில்லை. பூரண சுர ஞானமுள்ள வித்வசிரோமணிகளே இதை அறிவார்கள். மற்றவர் அறியமாட்டார்.

---

8. ''இந்திய சங்கீதம் எப்போதும் ஒரு சுரத்தையும் அதன் பஞ்சமத்தையும் சப்தித்துக்கொண்டு (தம்புராவை மீட்டுவதுபோல்) பாடுகிற வழக்கமாயிற்றே. உங்கள் குழந்தைகள் அப்படியேன் சொல்லவில்லை. அவர்கள் எப்போதும் இரண்டு தம்புராக்களை மீட்டிக்கொண்டே பாடட்டும். அப்படிப் பாடுவார்களானால் கேதார கௌளம் சங்கராபரணம் முதலிய இராகங்களில் உங்களுடைய காந்தாரத்தை யல்ல சட்ஜத்துக்கு $1\frac{1}{4}$ ஆய் இருக்கப்பட்ட காந்தாரத்தைப் பாடுவார்கள். அனுமத்தோடியில் சட்ஜமத்துக்கு $1\frac{2}{5}$ ஆய் உள்ள தைவதத்தையும் கடபைரவியில் சட்ஜமத்துக்கு $1\frac{1}{5}$ ஆய் உள்ள காந்தாரத்தையும் படிப்பார்கள். தொகையாய்ச் சொல்ல வேண்டுமானால் அப்போதுதான் சரியான சங்கீதம் படிப்பார்கள்.''

இந்திய சங்கீதத்தில் தம்புராவை வைத்துப் பாடுகிறது போல் உங்கள் குழந்தைகள் பாடவில்லை என்று சொல்லுகிறீர்கள். அதாவது தங்கள் சாரீரத்திற் கேற்ற விதமாய் சட்சமமும் அதன் பின் அதற்குப் பஞ்சமமும் மேல் சட்சமமும் சேர்த்துக் கொண்டு அதற்கேற்ற விதமாய் ஏன் பாடவில்லை என்று கேட்கிறீர்கள். அப்போதுதான் சரியான சங்கீதம் படிப்பார்கள் என்றும் சொல்லுகிறீர்கள். தாங்கள் நினைக்கிறபடியே நாங்கள் பழகியிருக்கிறோம். அம்முறைப்படிதானே சபை முன்பாடிக் காட்டினோம். அதை அறிந்து கொள்ள முடியாமல் பாடியது வேறு என்று குற்றம் சொல்லுகிறீர்கள். வீணையின் நாலு தந்திகளிலும் ச-ப முறையாய் சுரங்கள் நிற்கவில்லையா? வீணையின் பக்கத்தில் சுருதிக்காக இருக்கும் மூன்று தந்திகளில் ச-ப-ச வாக சுருதிசேர்க்கப்படுகிறதே. பாடும் கீர்த்தனங்களுக்கேற்ற தாளங்களில் ச-ப-ச என்று பக்கத்து தந்திகள் மீட்டப்படுகின்றனவே. வீணையின் பக்கத்துத் தந்திகள் சுருதி மீட்டும் தம்புராவாகவும் தாளம் மீட்டும் தந்திகளாகவும் அமைக்கப்பெற்றிருக்கின்றனவென்று தாங்கள் அறியாமல் போனீர்களே! பாடுகிற ஒருவன் தான்பாடும் பொழுதும் வீணையின் சுரஸ்தானங்கள் பேசும் பொழுதும் அபசுரமுண்டாகாமல் திருத்திக்கொள்வதற்கு அவை உதவியாயிருக்கின்றனவே. இம்முறையையே பிள்ளைகள் சுருதியோடு பாடினார்கள். இதைப்பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்தும் அறியாமல் எங்கேயோ வெகு தூரம் காட்டில் அலைந்து இந்த யுக்தியைப் பிடித்துக் கொண்டுவந்து விட்டீர்கள். இவ்வளவு யுக்தி சொல்லும் தங்களுக்கு நான் என்ன சொல்லியும் பிரயோசனப் படுமோ என்று சந்தேகப்படுகிறேன். நாங்கள் படித்தது சரியான சங்கீதம்தான். தாங்கள் ஏற்படுத்திக் கொண்டுவந்த இந்திய ஹார்மோனியத்தின் படி அபசுரங்களில் பாடப்படுமானால் அது இந்து சங்கீதத்தைக் கெடுக்கவந்த ஒரு கோடரி என்று நிச்சயமாகச் சொல்லுவேன். அப்படியே ஆல் இந்திய மியூசிக் கான்பரென்ஸ் சபையாரும் அருவருத்துப் பயந்து தள்ளினார்கள். அதைப்பார்த்திருந்த நானும் திரும்பச் சொல்லவேண்டியதில்லை என்று நினைக்கிறேன்.

---

9. "நாமாய்க் கூடக் குறையவைத்துக்கொள்ளும் சுரங்களாலான சங்கீதம் அருவருப்பானது."

நாமாய்க் கூடக் குறைத்து வைத்துக்கொள்ளும் சுரங்களாலான சங்கீதம் அருவருப்பானது என்று தாங்கள் எழுதுகிறீர்கள். உள்ளபடியே அது அருவருப்பிலும் மகா அருவருப்பானது என்று நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். தாங்கள் தானே அப்படிச் செய்கிறீர்கள். 20, 22, 27, 63, 71, 84, 90, 92 சென்ட்ஸ்கள் இடைவெளியாகச் சுரங்கள் வரவேண்டுமென்று தங்கள் கணக்கினால் தெரிகிறது. இவைகள் படிப்படியாய் ஒன்றற்கொன்று தீவிரமாய் நடுவில் வேறு நாதமுண்டாகாமல் ஒரு ஸ்தாயில் 22 சுருதிகள் வரும் என்று சொன்ன சங்கீத ரத்னகார் முறைக்கு ஒத்திருக்கிறதா? முன்னோருடைய அபிப்பிராயங்களை முற்றிலும் மாற்றி அதற்கு விரோதமாகத் தாங்கள் கூட்டிக் குறைத்து வைத்துக் கொள்ளும் சுரங்களை அருவருப்பானவை. தாங்கள் எழுதிய Introduction to the study of Indian Music என்ற புத்தகத்தில் Srutis of modern Hindustani Music என்ற தலைப்பின் கீழ் ஏழாவது, எட்டாவது பக்கங்களில் சுருதிகளுக்குச் சொல்லிய வைடரேஷன் கணக்கினால் அவைகள் தெளிவாகத் தெரிகின்றன. 320, 324, 337½, 341⅓, 360, 378, 384, 400, 405, 420, 426⅔ என்ற வைபரேஷன்களுக்கு என்ன ஒற்றுமையிருக்கிறது? சங்கீத ரத்னகார் அபிப்பிராயமா? அல்லது அதற்கு முந்திய பரதரின் அபிப்பிராயமா? சங்கீத ரத்னகாரின் அபிப்பிராயத்தை அறிந்த தாங்கள் இப்படிச் செய்தால் மற்றவர் என்ன செய்யமாட்டார்? சங்கீத ரத்னகார் சுருதிசேர்க்கும் விஷயமாய் தங்கள் புஸ்தகத்தில் என்ன சொல்லுகிறீர்களென்று அடியில் வரும் சில வரிகளிற் பார்ப்போம்.

Introduction to the study of Indian Music Page 53.

THE SANGIT RATNAKAR

(ANANDASHRAMA SERIES POONA)

SVARADHYAYA (PRAKARAN 3)

"*Verses 3 to 11* are taken up with an attempt to explain the phenomena of sound.

Verse 12:— Take two Vinas with 22 wires each and tune as follows. Let the first wire give the lowest possible note, the next a note a little higher and so on, so that between the notes given by two adjacent wires a third note is impossible.

Verses 13 to 16:— These successive notes are the srutis. Sa will stand on the fourth wire being a svara of four srutis; Ri will be on the third wire counting from the fifth; Ga which has only two srutis, will fall on the second counting from the eighth; Ma being of four srutis, on the fourth, counting from the tenth; Pa on the fourth, counting from the fourteenth; Dha on the hird after Pa; Ni on the second after Dha; so Ni will fall on the twenty-second sruti."

சங்கீத ரத்னகரம்

பூனா ஆனந்தாஸ்ரம சீரிஸ்

சுவர அத்தியாயம் (பிரகரண் 3)

"3 முதல் 11 அடிகள் வரை:—சப்தம் என்பதின் தோற்றத்தைப்பற்றிச் சொல்லியது.

12-வது அடி:—ஒவ்வொன்றும் 22 தந்திகளுள்ள இரண்டு வீணைகளை எடுத்துக்கொள். முதல் தந்தியில் கூடியவரையில் ஆரம்பமாக உள்ள ஸ்வரத்தை வைத்துக்கொள். அடுத்த தந்தியில் அடுத்த ஸ்வரம்

பேசட்டும். இப்படி மேலே செல். எந்த இரண்டு தந்திகளே எடுத்துக்கொண்டாலும் அவைகள் இரண்டிற்கும் நடுவில் வேறு நாதமுண்டாகாதபடி அவைகளே அமைத்துக்கொள்.

13-16 அடிகள் :—இப்படி ஒன்றன் பின் ஒன்றாய் ஒலிக்கும் நாதங்கள் தான் சுருதிகள். சட்ஜம் நாலு சுருதி கொண்டதால் நாலாவது தந்தியில் அது பேசும். ஐந்தாவதிலிருந்து கணக்கிட்டால் மூன்றாவது தந்தியில் ரிஷபம் பேசும். காந்தாரம் இரண்டு சுருதியானதால் எட்டாவதிலிருந்து இரண்டாவது தந்தியில் அது பேசும். மத்திமம் 4 சுருதியானதால் பத்தாவதிலிருந்து நாலாவது தந்தியில் அது பேசும். அப்படியே பஞ்சமம் பதினாலாவதிலிருந்து நாலாவது தந்தியில் பேசும். தைவதம் பஞ்சமத்திற்கு மேல் மூன்றாவது தந்தியிலும் நிஷாதம் தைவதத்திலிருந்து இரண்டாவது தந்தியிலும் பேசும். அப்படியானால் நிஷாதம் 22ஆவது சுருதியாகப் பேசும்."

இதனால் ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் வருகின்றனவென்றும் அவைகள் ஆரம்ப சுரத்திலிருந்து படிப்படியாய் ஒன்றற்கொன்று தீவிரமாய் நடுவில் வேறு நாதமுண்டாகாமல் ஓசையில் சம அளவாயிருக்கவேண்டுமென்றும் தெளிவாகக் காண்கிறோம்.

Introduction to the study of Indian music Page 22.

"The ancient theorists of India had no knowledge of harmonic ratios; to them the interval termed a sruti appeared to be the smallest interval which the human voice was capable of singing; consequently, they assumed roughly that their 22 srutis divided the octave into equal parts."

"இந்தியாவின் பூர்வ சங்கீத நூலாசிரியர்களுக்கு Harmonic ratios என்றால் இன்ன தென்றே தெரியாது. மனித சரீரத்தால் பாடக்கூடிய நுட்பமான இடைவெளி எதுவோ அதையே சுருதி இடைவெளி யென்று நினைத்தார்கள். ஆகையால் அவர்கள் ஒரு ஸ்தாயியானது ஏறக்குறைய 22 சம பாகங்களுள்ள சுருதி களாகப்பிரிக்கப்பட வேண்டுமென்று அமைத்துக்கொண்டார்கள்."

இதனால் ஒரு ஸ்தாயியை சமபாகங்களுள்ள சுருதிகளாக அதாவது சம ஓசையுள்ள தாக22 சுருதிகள் வரவேண்டுமென்று அமைத்துக் கொண்டார்கள் என்றும் $\frac{3}{3}$, $\frac{4}{4}$ ஆல் கிடைக்கும் Harmonic ratios அவர்களுக்குத் தெரியாதென்றும் வெளியாகிறது. அது உண்மையே. Pythagoras போன்றவர்களுக்குப் பின்னால் இப் புரளியுண்டாயிற்று. இது சுத்தமான சங் கீதத்திற்குச் சனியனாக வந்திருக்கிறது. இது இல்லாமற் போனால் உங்களுக்கும் எனக்கும் இத்தனை நேரமும் கடதாசியும் செலவாயிருக்காது.

Introduction to the study of Indian music Page 76.

"According to Sarangdev's theory of the equality of the srutis."

"சுருதிகள் சமபாகங்களுள்ளவையா யிருக்கவேண்டுமென்று சொல்லுகிற சாரங்கதேவர் முறைப்படி".

சுருதிகள் சமபாகங்களுள்ளவையாயிருக்கவேண்டுமென்று தாங்களும் ஒப்புக்கொள்ளு கிறீர்களென்று தெளிவாகத் தெரிகிறது.

The Hindu Musical scale and the twenty two Srutis.

"Now as observed by Professor Pietro Blaserna, of the Royal university of Rome, in his valuable treatise on the "Theory of sound in its relation to Music," by a musical scale is meant "the collection of all the notes comprised between the fundamental note and its octave, which succeed each other and are intended to succeed each other with a certain pre-established regularity."

" Theory of sound in its relation to music என்ற நூலை எழுதிய Professor Blaserna of the royal university of Rome சொல்லுகிற தென்னவென்றால், சங்கீத ஸ்கேலாவது ஆதாரசுரத்திற்கும் அதன் ஆக்டேவுக்கும் இடையிலுள்ள சுரத்தொடர்ச்சி. இதில் சுரங்கள் எப்படி ஒன்றன்பின் ஒன்றாய் வரவேண்டுமென்றால் அவைகள் ஒவ்வொன்றிற்கும் இடையில் முன் நிர்ணயிக்கப்பட்ட ஒருவித ஒழுங்கு இருக்க வேண்டும்."

இதில் சுருதிகள் ஒன்றன் பின் ஒன்றாய் ஒழுங்கான இடைவெளிகளோடு வரவேண்டுமென்று தெளிவாய்த் தெரிகிறது.

Introduction to the study of Indian music Page 21.

"To avoid misapprehension, it will be advisable to premise that a scale is a collection of notes ranging from a given note to the note an octave above and resembling a ladder in this respect, that array ("that") of notes must afford a practical means of ascent and descent.

"பின்னாலே நான் சொல்லுவதைச்சரியாய்க் கிரகிக்காமல் தப்பிப்போகாதபடிக்கு, நான் முன்னதாகவே சொல்லிவைக்கிறதென்னவென்றால், ஒரு ஸ்கேலானது எடுத்துக்கொண்ட ஒரு சுரத்தினின்று அதன்மேல் ஆக்டேவ் வரைக்கும் உள்ள பல சுர அடுக்குகளாலானது. இந்தச் சுர அடுக்குகள் ஒரு ஏணியைப் போன்றவை. அதிலுள்ள சுரங்கள் லேசாய் ஏறுவதற்கும் இறங்குவதற்குமான வகையாய் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்."

இதில் தங்கள் புஸ்தகத்தை வாசிக்கிறவர்களுக்குத் தவறுதலான அபிப்பிராயம் உண்டாகாதிருக்கும்படி தாங்கள் எச்சரித்துச் சொல்லுகிறது என்ன வென்றால் 'ஒரு ஸ்தாயியில் வரும் சுர அடுக்குகளானவை சுலபமாய் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் கூடியதாய் ஒரு ஏணியைப் போலிருக்கவேண்டும்' என்று சொல்லுகிறீர்கள். தாங்கள் கொடுத்திருக்கும் சுர அளவுகள் ஒரு ஏணிப்பழுவுக்கு ஒத்திருக்கின்றனவா? ஏணியின் கிரமத்தை அறியாதவர்கள் இல்லை. ஒரு ஏணியைச் செய்யும் ஒரு பட்டிக்காட்டு ஆசாரி முதல் முதல் ஏணிக்குரிய இரண்டு மரங்களைத் தெரிந்து கொண்டு ஒவ்வொரு படியும் ஒன்பது அங்குலமாய், அல்லது பத்து அங்குலமாய் அல்லது பதிஞ்சென்று பன்னிரண்டு அங்குலமாய் வரவேண்டுமென்றும் அதற்குத் தூள அதன்மேல் ஒரு அங்குலம் அல்லது $1\frac{1}{2}$ அங்குலம் வரவேண்டுமென்றும் ஒரே குச்சியில் குறித்துக்கொண்டு $(9+1\frac{1}{2})$ அதுபோல் பெரிய மூங்கிலில் குறித்துக்கொண்டே போகிறான். முதற் பழுவிற்கும் கடைசி பழுவிற்கும் முன்னும் பின்னும் $\frac{1}{4}$ அடிக்குக் குறையாமல் விட்டுத் தண்டு பண்ணுகிறான். அதன் பின் தான் குறித்தபடி 9 அங்குலம் இடைவெளியாகவும் $1\frac{1}{2}$ அங்குலம் தூளையாகவும் வைத்துத் தூளையடித்த பின் மற்றொரு மூங்கிலைத் தூளையடித்ததின் பக்கத்தில் வைத்து மூலமட்டப் பலகையினால் அதற்குச் சமமாக அடையாளம் செய்து கொஞ்சமாவது கூடுதல் குறைதல் இல்லாமல் தூளையடித்துப் பழுமாட்டுகிறான். ஏனென்றால் அவைகள் முன் பின்னாக இருக்குமானால் ஏறுவதும் இறங்குவதும் கஷ்டமாகும். ஏணியும் சீக்கிரம் கெட்டுப்போகும். ஏறுகிறவர்கள் வழுக்கி விழுவார்கள்.

இவ் வுவமானம் சொன்ன தாங்கள், தங்கள் சுருதி முறைக்குக்கொடுக்கும் வைபரேஷனின் கணக்கை சமமாயிருக்கிறதா என்று ஒத்துப்பார்க்கவில்லை என்று தெரிகிறது. தங்கள் புத்தகம் 8வது பக்கத்தில் பதின்மூன்றாவது சுருதியிலிருந்து இருபத்திரண்டு வரையிலும் பதிஞ்சு சுருதிகள் சொல்லப்படுகின்றன. இவைகளில் தாங்கள் கண்டு பிடித்த நூதனமான இரண்டு சுருதிகளும் 324, 420 என்ற வைபரேஷனோடு வருகின்றன. இவை தாங்கள் தெரிந்து

கொள்ளும் ஐந்து மத்திமங்களில் மூன்றுவதாகவும் தாங்கள் வைத்துக் கொள்ளும் ஐந்து நிஷாதங்களில் முதல் நிஷாதமாகவும் காணப்படுகின்றன. இவைகளின் ஓசையின் அலைகளின் கணக்கை நாம் கவனிப்போமானால் 320 க்கும் 324 க்கும் பேதம் 4 ஓசையின் அலைகளும் 324 க்கும் 337½க்கும் பேதம் 13.5 ஓசையின் அலைகளும் இப்படியே 5, 19, 18, 6, 16, 5, 15, 6·67, 5·31, 18·4, போன்ற வரிசைகளும் கிடைக்கின்றன. இவ்வளவு பேதமான ஓசைகளும் ஏணிப் படிகளும் வருமானால் ஏறி இறங்க மிகச் சுலபமாகுமா? மேற் கண்ட ஒழுங்கினமான அளவின்படி ஒரு ஆசாரி ஏணி செய்து கொண்டு வந்து கொடுத்தால் நீங்கள் சும்மா விடுவீர்களா? என்ன பாடு படுத்துவீர்கள்? ஏணி செய்த ஆசாரிக்கு ஒரு நியாயமும் ஒழுங்கினமான சுருதிகளைச் சொல்லும் தங்களுக்கு ஒரு நியாயமுமா? சற்று நிதானித்துப் பாருங்கள்.

இவைகள் நான் பரோடாவில் வாசித்த இரண்டாவது புத்தகத்தில் 37, 38ம் பக்கங்களிலுள்ள அட்டவணையில் 7 ஆவது கலத்தில் பத்தாவது வரியிலிருந்து கவனிப்பீர்களானால் தெளிவாகத் தெரியும். சுருதிகள் மேல் போகப்போக Geometrical Progression படி கொஞ்ச கொஞ்சம் கூடுதல் அடையும் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அதிகம்தெரிந்த தாங்கள் அட்டவணையில் தெளிவாகக் கண்டு கொள்ளலாம். கூட அட்டவணையில் கண்ட கணித முறைப்படியே வீணையில் அளந்து சுரஸ்தானங்கள் குறித்து சபை முன் பாடினேன். அவை கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் சுரங்களும் சுருதிகளுமாகவே யிருந்தன. அங்கு வந்திருந்த கர்நாடக வித்வான்களில் ஒருவராவது பாடல் தவறுதலாயிருக்கிறதென்றுவது வீணையின் ஓசை தவறுதலாயிருக்கிறதென்றுவது பிள்ளைகள் பாடிய கீர்த்தனம் தவறுதலாயிருக்கிறதென்றுவது சொல்லவில்லை. தங்களைத்தவிர சபையார் யாவரும் ஆனந்தித்தார்கள். தங்கள் காதுக்குள் அருவருக்கப்பட்ட ஆர்மோனியத்தின் அபசுரமிருந்தபடியால் தங்கள் காதிற்கு மாத்திரம் அது அருவருப்பாயிருந்தது.

Equal Temperament முறை இன்னதென்றும் அது 120, 150 வருடங்களுக்கு முன்னால் Mozart, Beethoven என்பவர்களால் கண்டு பிடிக்கப்பட்டதென்றும் அது மற்றவர்களால் ஏளனம் செய்யப்படுகிறதென்றும் பெரும்பாலும் அனேக வித்வான்களுக்குத் தெரியாது. இதனால் என்ன தோஷம்? ஆனால் பல்லாயிர வருடங்களுக்கு முன் பாடிவந்த இராகங்களில் வழங்கும் சுரங்களையும் சுருதிகளையும் அணுப்பிரமாணமும் தவறாமல் கேட்டுப் பாடம் பண்ணிப் படிக்கக்கூடியவர்கள் என்பதில் யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. ஆனால் துட்பமான சுருதிகள் பல சுரங்களோடு சேர்ந்து வரும் பொழுது அவைகளை இன்னதென்று சொல்ல முடியாமல் போனதினால் குறை சொல்லுகிறீர்கள். கர்நாடக சங்கீதத்தைப் பற்றித் தங்களுக்குத் தெரியாததனால் இப்படிச் சொல்லுகிறீர்கள். இந்துஸ்தான் சங்கீதத்தைச் சொல்ல வந்த தாங்கள் கர்நாடக சங்கீதத்தைக் குறை சொல்லாமலிருந்தால் தங்களை இந்துஸ்தான் சங்கீதத்திலாவது தேர்ந்தவர்களென்று நினைக்க இடமுண்டு.

தாங்கள் கொண்டுவந்த ஆர்மோனியம் இந்துஸ்தான் சுரத்திற்கும் அதைப்போலுள்ள கர்நாடக சுரத்திற்கும் ஒத்துவராமல் போனபின் அதை இந்திய ஆர்மோனியம் என்று சொல்லலாமா? அபசுரம் நிறைந்த தங்கள் ஆர்மோனியத்தில் வாசித்துப் பழகிய நிமித்தம் இனிமையுள்ள தென்று யாவராலும் கொண்டாடப்பட்ட கீர்த்தனங்கள் தங்களுக்கு அருவருப்பாய்த் தோன்றின.

தங்கள் சுரங்கள் சம அளவுடையவைகளாய்த் தாங்கள் சொல்லுகிறபடி ஒரு ஏணியைப்போலிருக்குமானால் அப்போது ஒரு ஸ்தாயியில் Geometrical Progression படி 24 சுருதிகளே கிடைக்கும் என்றும் அதில் ச-ப முறைப்படியும், ச-ம முறைப்படியும் பன்னிரண்டு சுரங்கள் 24 சுருதிகள், மற்றும் நுட்பமான சுருதிகளும் அமையும் என்றும் திட்டமாய்க் காண்பீர்கள். இன்னும் ஒரு சடவை கான்பரென்ஸுக்கு வரும்பொழுது என்கணக்கின்படியே தங்கள் ஆர்மோனியத்தைத் திருத்திக் கொண்டுவரும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்போது என் முறை சரியென்று ஒப்புக்கொள்வீர்கள். நானைக் கூடக் குறைத்து வைத்துக்கொள்ளவில்லை. தமிழ்மக்கள் பாடிவந்த சங்கீதத்தில் வரும் ஓசைகளும் நுட்பமான சுருதிகளும் வரும் இடங்களே பல வருடங்களாக விசாரித்து அதன் பின் அதற்குக் கணக்கு ஏற்படுத்தினேன்.

---

10. "இன்னும் சில நூற்றாண்டுகளுக்குள் ஐரோப்பாவில் அது முற்றிலும் இல்லாமற்போகுமென்று நான் நிச்சயமாய்த் தீர்க்கதரிசனமாய் உரைப்பேன். அதில் குறைகளும் தப்புகளும் அதிகம் இருந்தபோதிலும் அநேக காரியங்கள் ஒன்று சேர்ந்து ஐரோப்பாவில் அது ஸ்தாபகமானது. Indian Education என்ற பத்திரிகையில் Sep-to Nov. 1915 நம்பர்களில் இது விஷயத்தைப்பற்றிப் பேசியிருக்கிறேன். அதை வாசிப்பீர்களானால் நலமாயிருக்கும். நான் சொல்லிவந்த காரியத்தைப்பற்றித் திரும்பச் சொல்லுகிறேன். நீங்கள் நன்றாய் விசாரித்தால் தெரியும்."

இன்னும் சில நூற்றாண்டுகளுக்குள் Equal Temperament முறையில்லாமல்போகும் என்று தீர்க்க தரிசனம் சொல்லுகிறீர்கள். இந்த தீர்க்கதரிசனம் ஒருபோதும் நிறைவேறாது. மேற்திசையில் ச-ப முறையாய் ஆர்மோனியம், பியானோ முதலியவைகளில் சுருதி சேர்க்கும் பொழுது ஒரு ஸ்தாயியில் 12 சுரங்கள் கிடைக்கின்றன. இவைகளே Equal Temperament முறையென்று சொல்லுகிறார்கள். தந்தியில் $\frac{2}{3}$ ஆக வைக்கும்பொழுது கிடைக்கும் ஓசைகளுக்கு Harmonic series என்று பெயர் வைத்தார்கள். உள்ளபடி Harmony உடையதை Equal Temperament என்று ஏளனம் செய்தார்கள். Harmonic series படி செல்லும் பொழுது ஒரு ஸ்தாயி சரிவர முடிவடையாமல் ஒவ்வொரு சுரத்திலும் கொஞ்சம் கொஞ்சம் கூடுதல் அடைந்து ஓநாய் ஊளையிடுகிறதுபோல் அருவருப்புண்டாகிறதென்று சட்சமம் பஞ்சமம் பொருந்தும் முறையில் 12 சுரங்களே ஸ்தாபித்தார்கள். பஞ்சமம் எவ்வளவு கூடவேண்டும் எவ்வளவு குறையவேண்டுமென்று கணக்குச் சொல்வது கூடாதகாரியமென்றும் சுரஞானத்தைக்கொண்டு தீர்க்கவேண்டுமென்றும் முடித்தார்கள்.

The art of tuning the pianoforte by Hermann Smith, Page. 54.

"These trials, as they are called, afford at each step a check by which the correctness of the progress may be indicated, or, unfortunately, probably the incorrectness of your first estimates of "how much" and "how little."

The last is the severest test, as the two notes of which this fifth is formed have been obtained by different series of fifths, and any imperfection in the gradation of the beatings allotted to the previous fifths will mainfest itself here. Hence this fifth, from the frequent harshness and howlings of its beats, has been technically termed the wolf, and strict injunctions are, "Look out for the wolf" Reckon yourself fortunate if no wolf appears."

"இந்த நோட்டுகளைத் திரும்பத் திரும்ப வாசித்துப் பார்த்தால் எவ்வளவு கூட்டவேண்டும் எவ்வளவு குறைக்கவேண்டும் என்பது திட்டமாகுவதுமல்லாமல் காம் நோட்டுகளைச் சரியான சுரத்தில் வைக்கிறோமோ அல்லவோ என்றும் நமக்கு நிச்சயமாகும். இந்த ஐந்தாவது ஐந்தாவதாய் (ச-ப பொருத்தமாய்) நோட்டுகளை சுரப்படுத்துவது தான் அதிக கஷ்டம். எனென்றால் முதலில் இதைக் கொஞ்சம் கூடவைத்துவிடுவோமானால் அது ரவர அதிகப்பட்டுக் கடைசியில் பெருங்கஷ்டத்தை விளைவிக்கும். இந்த ஐந்தாம் பொருத்தம் காதுக்கு இனிமையைத்தராமல் ஒரு ஓநாயின் ஊளையைப்போல் அடிக்கடி இருப்பதால் அதற்கு "ஓநாய்" என்றே பெயர். பியானுவை ற்யூன் பண்ணும் ஒருவனுக்குக் கொடுக்கப்பட்ட மூக்கிய கட்டளை என்ன வென்றால் "ஓநாய் வராமல் ஜாக்கிரதையாயிரு, அப்படி ஓநாய் வராவிட்டால் நீ பாக்கியவான்தான்" என்பதே."

இதில் தாங்கள் Harmonic series என்று கட்டிக்கொண்டு அவதிப்படும் $\frac{2}{3}$, $\frac{3}{4}$ என்ற மேல்காட்டு ஓநாயின் ஊளையைப்பற்றி இங்கே சொல்லப்படுகிறது. மேற்றேசங்களில் பிறந்து வளர்ந்த இந்த ஓநாய் உருப்படி இன்னதென்று தெரியாமல் தங்களைக் கிழித்துத் தின்றுவிடுமே யென்று மிகவும் அனுதாபப்படுகிறேன்.

Harmonic series இன்னதென்றும் Equal Temperament முறை இன்ன தென்றும் நான் இதன் முன் கவனிக்கவில்லை. ஆனால் பூர்வ தமிழ் மக்கள் வழங்கிவந்த இசைத் தமிழின் சில குறிப்புகளைக்கொண்டும் நாளது வரையும் பாடப்பட்டு வரும் அனுபோகத்தைக் கொண்டும் தீர விசாரித்து முடிவானவைகளைச் சொன்னேன். இதை மாற்ற நினைப்பவர்கள் சங்கீதத்திற்கே சத்துருக்களாவார்கள். நான் கொடுத்த 67 கீர்த்தனைகளில் ஒரு பிழையாவது காட்டவேண்டு மென்று பிரயாசப்பட்டுக் கடைசியில் 'அனுபத்தாறும் சரியாயிருக்கின்றன. தன்னியாசி கீர்த்தனத்தில் மாத்திரம் காந்தாரம் கூடிவருகிறது' என்று சொல்லி வெகுரோசம் வாதித்தும் சபையோரால் தள்ளப்பட்டதுபோல் தாங்களும் இருப்பீர்கள். தங்கள் 22 சுருதி முறையும் 25 சுருதி முறையும் அடுத்த கான்பரென்ஸுக்குள்ளாகவே மாறிப்போகும் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். இது சமயத்திற்கேற்ற விதமாய் அருத்தமாகும் தீர்க்க தரிசனமல்ல.

அதோடு 'நான் சொல்லிவந்த காரியங்களைத் திரும்பச் சொல்லுகிறேன் நீங்கள் நன்றாய் விசாரித்தால் தெரியும்' என்று சொல்லுகிறீர்கள். Equal Temperament முறையையும் தங்கள் முறையையும் தேவால் அவர்களுடைய முறையையும் நன்றாய் விசாரித்து இரண்டு வருடங்களுக்கு முன்னாலேயே அவைகளுக்கு மறுப்பு எழுதியிருக்கிறேன். Indian Education என்ற பத்திரிகையில் எழுதிய விஷயங்கள் தங்கள் புஸ்தகத்தை அனுசரித்தேயிருக்கும். வேறு விஷயங்களிருக்குமானால் எழுதி அனுப்புங்கள். கட்டாயம் பார்க்கிறேன்.

---

11. "வேறே வாத்திய உதவியில்லாமல் இந்த artificial இடைவெளிகளைப் பாடுகிற அல்லது Violin வாசிக்கிற எவரும் அவைகளைச் சரியாய்ப் பாடுவது துர்லபம். தங்கள் குழந்தைகளும் அப்படியே தவறுகிறார்கள்."

பிள்ளைகள் பாடிய கீர்த்தனங்களிலுள்ள சுரங்களை artificial இடைவெளிகளையுடை யவையென்று தாங்கள் குறைவான வார்த்தைகளைச் சொல்லுகிறீர்கள். பிடிலில் வாசிப்பது கூடாத காரியம் என்றும் குழந்தைகளும் அப்படியே தவறுகிறார்களென்றும் சொல்லுகிறீர்கள். உண்மை மறைந்து துலங்காமல் போனபின் உண்மையைச் சொல்லுகிறவர்கள் பைத்தியக்காரர்

தானே. உண்மைக்கு எதிர் நின்று போராடுகிறவர்கள் பின்னல் பாபிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். குழந்தைகள் பாடின சங்கீதத்திற்கு நான் கணக்குச் சொன்னேன். இவ்விரண்டும் உண்மையுடையவையென்று மற்றவர்கள் காணும்பொழுது தங்களை இகழ்வார்களேயென்று அனுதாபப்படுகிறேன்.

பிள்ளைகள் ஒரு ஸ்தாயியில் வரும் பன்னிரண்டு சுரங்களையும் 24 சுருதிகளையும் வரிசையாய்ப் பாடிக் காட்டினார்களே. அதில் எந்தச் சுருதியில் எவ்வளவு குறைந்ததென்று கவனித்தீர்கள்? பாடிக்காட்டியவைகள் சம அளவான ஓசையுடையவைகளாயிருந்தனவென்று நான் திடமாகச் சொல்லுவேன். பாதர், சங்கீத ரத்னகார் போன்ற மகான்கள் அங்கிருந்தால் அவர்களும் தங்கள் கருத்து 'இதுதான், இதுதான்' என்று கொண்டாடுவார்கள். 'இது விஷயத்தில் நாங்கள் தவறிப்போனோம்' என்று ஒப்புக்கொள்வார்கள். பல்லாயிர வருடங்களாகத் தமிழ் மக்கள் பாடிக் கொண்டிருக்கும் சுரங்களையும் சுருதிகளையும் சொன்னேனே யொழிய தகுந்த சாஸ்திர ஆதாரமில்லாமல் நான் ஒன்றும் சொல்லவில்லை. தாங்கள் இதை அறியாமல் போனாலும் மற்ற யாவரும் அறிந்துகொள்வார்கள் என்பது நிச்சயம்.

கோடை இடியின் சத்தமும் கேட்காத செவிடன் காதில் சங்கு ஊதி என்ன பிரயோஜனம்? தாங்கள் இந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதி விஷயமாய் நினைத்தபடியெல்லாம் சொல்லுகிறதென்ற குருட்டாட்டமான முறையைப் பிடிவாதமாய்ச் சாதிக்கிறதாக நான் காண்கிறேன். பிடில் வாசிக்கிற எவரும் சம இடைவெளிகளுள்ள சுரங்களை வாசிப்பது துர்லபம் என்றும் அப்படியே குழந்தைகளும் தவறுகிறார்களென்றும் என்னத் துணிகரமாய்ச்சொல்லுகிறீர்கள். பிடில் வாசித்த உபாத்தியாயரின் திறமையாவது பாடின குழந்தைகளின் திறமையாவது தங்களுக்குத் தெரியாது. அப்படித் தெரியாமல் போனாலும் சபையில் பாடினபொழுதாவது சுருதிகளை அணு அணுவாகப் பிரித்துக் காட்டியபொழுதாவது கவனித்து அறிந்துகொள்ளக் கூடிய சுர ஞானம் தங்களுக்கு கொஞ்சமாவது இல்லை என்று தங்கள் வியாசத்தினால் தெரிகிறது.

கர்நாடக சங்கீதத்தில் மிகுந்த பிரக்கியாதி பெற்ற மகா-ரா-ரா-ஸ்ரீ மகா வைத்தியநாத ஐயர் அவர்கள் கொண்டாடும்படியான சுஞானமுடையவரும் கேட்டவர் மனம் உருகும் விதமாய்க் கதை செய்வதிலும் சாகித்தியத்திலும் தாளத்திலும் வாய்ப்பாட்டிலும் நாளதுவரை யாவராலும் கொண்டாடப்படுகிற மகா-ரா-ரா-ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் அவர்கள் கூடவே சிஷ்யராயிருந்து அவரைப்போலவே கதை செய்வதிலும் கானம் செய்வதிலும் பிடில் வாசிப்பதிலும் தேர்ந்த வித்வ சிரோமணியென்று தமிழ் நாடு முற்றிலும் கொண்டாடப்பட்டு வருகிற மகா-ரா-ரா-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர் அவர்களையா சரியாய்ப்பாட வில்லை, தவறிப் போனார்கள் என்று சொல்லுகிறீர்கள்? கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் நுட்பமான சுருதிகளைக் கீர்த்தனைகளில் வரும் முறைப்படி அணுவேனும் தவறுமல் வாத்திய உதவியில்லாமலே பாடக்கூடிய தேர்ந்த ஞான முடையவர். அவருடைய கல்வித் திறமையை கான்பரென்ஸில் வந்திருந்த கர்நாடக வித்வ சிரோமணிகள் தெளிவாய் அறிவார்கள். அவருடைய சாமர்த்தியம் இன்னதென்று தாங்கள் தெரிந்துகொள்வதற்கு பிள்ளைகள் பாடிய ஒரு கீர்த்தனமே போதும். அதைக் கேட்டு நிதானிக்கும் சுரஞானம் தங்களுக்கு இல்லாமையினால் இப்படிச் சொல்லுகிறீர்கள்.

பன்றி வேட்டையாடுகிறவர்கள் நீண்ட ஈட்டியினால் குத்தி அதை வதைத்து வேடிக்கை பார்த்து சந்தோஷப்படுவதுபோல சபையிலுள்ள வித்வ சிரோமணிகளைக் குறை கூறி தாங்கள் சந்தோஷப்படுகிறதாகத் தெரிகிறது. இப்படிப் பிறரை அவதூறு சொல்லி சந்தோஷப்படு

வதில் தாங்கள் அதிக கை தேர்ந்தவர்கள் என்று ஒவ்வொரு குறிப்பினலும் தெரிகிறது. தாங்கள் குறைசொல்லும் பிடில் உபாத்தியாயருக்கு இவ்விஷயம் இன்னும் சொல்லப்படவில்லை. ஏனென்றல் 22 சுருதியைச் சாதிக்கவேண்டுமென்று சத்தியம் செய்துகொண்ட திருக்கூட்டத்தில் சேர்ந்து தன்யாசியில் வரும் காந்தாரம் துவாவிம்சதி சுருதியின் முறைப்படி குறைந்து வரவேண்டுமென்று தான் படித்துக் கொடுத்த கீர்த்தனையையே தான் குறைத்துப் பாட, நான் பல நியாயமும் சொல்லி தாங்கள் படித்துக்கொடுத்த கீர்த்தனங்களே வேண்டுமென்று குறைத்துப் பாடுகிறீர்கள் என்று சொல்ல வந்திருந்த வைணீக சிரோமணி மகா-ரா-ரா-ஸ்ரீ சேஷண்ணு அவர்களாலும் மற்றும் சபையோராலும் 'தாங்கள் சொல்வதுசரியல்ல' வென்று மறுக்கப்பட்டதினல் சற்றேறக்குறைய இரண்டு மாதமாக பாகவதர் அவர்கள் என் வீட்டிற்குவரவில்லை. அவர்கள் வந்தபின் கட்டாயம் நான் அவர்களுக்குத் தெரிவிப்பேன். அவர்களும் தங்களுக்குப் பதில் எழுதுவார்கள்.

அதோடு விட்டுவிடாமல் குழந்தைகளையும் குறை சொல்லுகிறீர்கள். குழந்தைகள் என்று சொல்லும்பொழுது பெற்றவனுக்கு குமாரத்திகளானலும் தங்களைப் பார்க்கிலும் தேர்ந்த சங்கீத ஞானமுடைய வர்களென்று நீங்கள் கவனிக்கவில்லை.

தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் தட்ப சுருதிகளை நான் கவனிக்குமுன் மேற்கையாரின் சங்கீத விஷயமும் இன்னதென்று அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பி St. Peter's High School தலைமை உபாத்தியாயரும் St. Peter's Church Organist-ம் ஆன மகா-ரா-ரா-ஸ்ரீ A. G. பிச்சைமுத்து B.A., L.T., அவர்களைக்கொண்டு English Music கற்றுகொடுக்கும்படி செய்து Trinity College of Music, London கலாசாலையின் பரீட்சையில் எனது குமாரத்தி மரகதவல்லி அம்மாள் 1914-ம் வருஷம் சூன் மாதம் Higher Local என்ற ஏழாவது பரீட்சையிலும் கனகவல்லி அம்மாள் 1913-ம் வருஷம் சூன் மாதம் Intermidiate என்ற நாலாவது பரீட்சையிலும் theory பாஸ்பண்ணி யிருக்கிறார்கள். என் குமார்த்தி மரகதவல்லி அம்மாளே இந்திய கிறிஸ்தவர்களுக்குள் முதல் முதல் அந்த உயர்தர பரீட்சையில் தேறி யிருக்கிறது.

மகா-ரா-ரா-ஸ்ரீ தியாகராஜபிள்ளை அவர்கள் குமாரர் மகா-ரா-ரா-ஸ்ரீ சாமியாபிள்ளை அவர்களிடத்தில் ஆரம்ப படிப்புமுதல் சுமார் 100 கீர்த்தனைகள் படித்ததோடு அரண்மனை வைணீகர் மகா-ரா-ரா-ஸ்ரீ ஆதிமூர்த்தி ஐயர் அவர்கள் குமாரர் மகா-ரா-ரா-ஸ்ரீ வேங்கடாசலமையர் அவர்களால் வீணையில் சொற்ப பயிற்சியும் பெற்றார்கள். அதோடு மகா-ரா-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர் அவர்களால் சுமார் 100 கீர்த்தனங்கள் வரையும் வெகு தட்பமான சுரங்களைக் கவனித்துப் பாடும் சுரஞானமும் தாளஞானமு முடையவர்களானர்கள். இப்படி படித்துக் கொண்டு வருகையில் சங்கீதத்திற்குரிய சில முக்கிய அம்சங்களும் இடைக்கிடையே என்னல் சொல்லப் பட்டும் வந்தது. அதில் எடுத்துக்கொண்ட ஆரோகண அவரோகணத்திற்கு கவனிக்கவேண்டிய ஐந்து விதமான இலக்கணங்களையும் எனது சம்சாரம் பாக்கியம் அம்மாளுக்குக்கற்றுக்கொடுத்து கீதம் இராகச்சாயைச் சுருக்கம் ஜீவசுரம் முதலியவைகளோடு சுமார் ஆயிரம் இராகங்கள் எழுதி முடிந்திருக்கிறது. இம் முறையை பிள்ளைகளும் அறிவார்கள். அப்படிச் செய்த கீதத்திலிருந்து கீர்த்தனம் எழுதும் முறையை கற்றுக்கொடுக்க அதில் தேர்ந்த மரகதவல்லி அம்மாளால் சற்றேறக்குறைய 50 கீர்த்தனங்கள் புதிய இராகங்களில் புதிதாய் செய்யப்பட்டிருக்கின்றன. மாதிரிக்காக பழமையான இராகங்களிலும் சில கீர்த்தனங்கள் செய்யப்பட்டுள்ளன.

இவைகளில் சில கீர்த்தனங்கள் ஆகஸ்டு மாதம் 19-ம் தேதி நடந்த தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கத்திற்கு வந்திருந்த சபையோர் முன் பாடிக்காட்டப்பட்டன. அச்சடித்த பிரதிகளும் கொடுக்கப்பட்டன. எவரும் எவ்விதமான குறையும் சொல்ல வில்லை. மிகவும் சாஸ்திரோக்தமும் இனிமையுமுள்ளதென்று பலராலும் கொண்டாடப்பட்டது. குழந்தைகளும், அவர்களின் தாயாரும் நானும் வீணாக அங்கு வரவில்லை. கூடியவரை இந்திய சங்கீதத்திற்காக என்ன என்ன செய்யவேண்டியது அவசியமோ அவைகளைச் செய்வதின் நோக்கமாகவே அங்கு வந்தோம்.

தாங்கள் சுருதியைப் பற்றி வாதிக்கும்பொழுது தாங்கள் சொல்லும் சுருதியின்படி ஒரு Music Piece செய்துகாட்டவேண்டு மென்று ஒரு சிறு துண்டு கடிதம் பிரசிடெண்டுக்கு எழுதி அனுப்பினேன். தாங்கள் சொல்லாமல் போனால் நான் என் முறைப்படி சொல்லவும் செய்து காட்டவும் தயாராயிருந்தேன். அவர்களோ இது யாரால் செய்ய முடியுமென்று சொல்லி விட்டார்கள். சபையின் நோக்கமறிந்தாலும் சும்மாவிருந்தேன்.

இந்திய சங்கீதத்திற்கு Staff notation எப்படி குறிக்கிற தென்ற விஷயத்தில் Staff notation for Indian Music என்ற தலைப்புடையதாய் மூன்றாவது article மாகதவல்லி அம்மாளால் வாசிக்கப்பட்டதையும் அதில் ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை, சதுரப் பாலை என்னும் நாலுவித பாலைகளுக்கு திஷ்டாந்தமாகக் கொடுக்கப்பட்ட கீர்த்தனங்களைப் பாடிக் காட்டியதையும் புஸ்தகத்தையும் தாங்கள் பார்த்தீர்களே! பார்த்திருந்தும் தாங்கள் குறை கூறுவதைக் கொண்டு தங்களுக்கு இங்கிலீஷ் மியூசிக்கிலும் தகுந்தஞானமில்லையென்று வெளி யாகிறது.

இதோடு பிள்ளைகள் ககனகுதுகலம் அல்லது கதன குதுகலம் என்ற கீர்த்தனையைப் பாடும்பொழுது அதில் பிரியப்பட்ட பரோடா சமஸ்தான Band Master Mr. Fredlis அக்கீர்த் தனையைத் தனக்கு Staff notationல் குறித்துக்கொடுக்க வேண்டுமென்று பிரியமாய்க் கேட்டுக் கொள்ள அன்று சாயங்காலம் மூன்று மணிக்கே எழுதி கொடுக்கப்பட்டு தமது fluteல் அப்படியே வாசித்து சபையோர்களை சந்தோஷப்படுத்தினார்களே. கர்நாடக சங்கீதத்தை வெகு சுலபமாய் Staff notationல் குறித்துக் கொடுத்ததையும் Band Master அதின் படியே வாசித்ததையும் தாங்கள் கேட்டுக்கொண்டிருந்தீர்களே. இப்படிப்பட்டவர்களையா நீங்கள் குறைசொல்லவேண் டும். அணு அணுவான சுரங்களை தாங்கள் அறிந்து கொள்ளத் திறமை யில்லாமல் அறிந்து பாடுகிறவர்களையும் அவதூறு சொல்லுகிறீர்கள். அணு அணுவான சுரங்களைப் பழகுகிறதற்கு நாங்கள் பட்ட கஷ்டத்தை தெய்வம் அறிவார். சபையில் வந்திருந்த யாவரும் ஒருவாறு அறி வார்கள். தாங்கள் அறியாமல் போனதைப் பற்றி நான் ஆச்சரியப்படவில்லை.

தங்களைப்போல் நிஷாதம் குறைகிறதென்று Band Master Mr. Fredlis தர்க்கித்து 'அறுபதுபேர் வாசிக்கும் பொழுது ஒருவன் தவறுவானானால் அதைக் கண்டுபிடிக்கக் கூடிய சாமர்த்திய முடையவன் நான்' என்றுவீரம் பேசினார். அப்போது பன்னிரண்டு பெருத்த நாதங் களைப்பழகும் உங்களுக்குத் தெண்ணூற்றிலில் ஒன்றான நுட்பசுரம் வராமட்டாதென்று சொல்லி அணு சுரங்களினாலும் அணுபோகத்திலிருக்கும் இராகங்களின் சுரங்களாலும் பாடிக்காட்டி அங் கிருந்த கர்நாடக வித்வான்களும் இந்துஸ்தானி கவாய்களும் நிஷாதம் சரிதான் என்று சொல்ல உடனே தூரை என்னை மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். நானும் மன்னித்தேன்.

நீங்களும் என்னையாவது குழந்தைகளையாவது பிடில் வாசித்த மகா-ரா-ரா-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர் அவர்களையாவது கேட்டிருந்தால் எங்களுடைய பதிலினால் தங்களுக்குச் சரியான அறிவு வந்திருக்கும். ஐந்து நாள் அங்கு இருந்தோமே. அந்த நாட்களில் இவ்விதமான குறிப்புகளில் எதையாவது ஒன்று சொல்லி யிருப்பீர்களானால் உங்களைச் சும்மாவிட்டிருப்போமா? சரியானபடி நியாயந்தீர்த்திருப்போம். அதைவிட்டு இவ்வளவு நாளானபின் சபையைப் பற்றியும் வந்திருந்த வித்வான்களைப்பற்றியும் என் குழந்தைகளைப் பற்றியும் நீங்கள் குறிப்புகள் எழுதுவது முற்றிலும் தவறுதலான காரியம். இப்படிப் பட்டவர்களுக்குப் பதில் எழுதாமல் விடுவது இன்னும் அதிக கெடுதலுக்கிடமாகுமென்று எழுத நினைத்தேன். தாங்கள் எவ்வளவோ உயர்ந்த பதவியி லிருந்தும் இப்படி அநியாயமான வார்த்தைகளைச் சொல்வதைப் பார்க்க நான் வெட்கப்படுகிறேன்.

---

12. "தாங்கள் தயார் செய்த வீணையை வைத்துக்கொண்டு குழந்தைகள் பாடினபோது குறைத்து வைத்த இடைவெளியைப் பாடினதினால் அது காதுக்கு அவ்வளவு இனிமையாய் இல்லை."

நான் தயார் செய்த வீணையைக் கொண்டு பிள்ளைகள் பாடியது குறைந்த இடைவெளிகளுள்ளவைகளாயிருந்ததால் காதுக்கு இனிமையாயில்லை என்று சொல்லுகிறீர்கள். தாங்கள் போட்டிருக்கும் ஒழுங்கினமான 25 சுருதிகள் என்ற அழுக்கடைந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து விட்டுப் பார்ப்பீர்களானால் அப்போது துலாம்பரமாய்த் தெரியும். அபசுர க் குடுக்கையாகிய தங்கள் ஹார்மோனியத்தை வந்த வழியே அனுப்பிவிட்டு பூர்வத் தமிழ் மக்கள் சுருதி சேர்க்கும் முறைப்படி. ஹார்மோனியம் செய்து அதிலாவது வீணையிலாவது பழகிப் பாருங்கள். அப்போது இந்தியாவின் பூர்வ குடிகளாகிய தமிழ் மக்கள் வழங்கி வந்த கானத்தின் சூட்சுமம் அறிந்து சொல்ல முடியாமல் பலர் பலவிதமாய் அபிப்பிராயப்பட்டு தூல் எழுதினார்களென்று அறிவீர்கள். சுகசுரமாய் வீணையில் வாசிக்கவேண்டிய சுரங்களை அதற்குரிய இனிமையோடு ஹார்மோனியத்தில் முற்றிலும் காட்டமுடியாதென்று தாங்கள் அறியவேண்டும்.

---

13. "அவர்கள் பிடிலுடன் சேர்ந்து பாடினபோது அவர்களும் பிடில் வாசித்தவரும் தங்களை யறியாமலே வேறு ஆரோசண அவரோகணங்களுக்கு மாறிவிட்டார்கள்."

பிடில் வாசித்த உபாத்தியாயரும் பாடிய பிள்ளைகளும் தங்களை அறியாமலே வேறு ஆரோகண அவரோகணங்களுக்கு மாறிவிட்டார்களென்று சொல்லுகிறீர்கள். இது மிக நன்றாயிருக்கிறது. தங்களுக்குக் கர்நாடக சங்கீதமும் தெரியுமென்று இதனால் வெளிப்படுத்துகிறீர்கள். எந்த இராகம் பாடும்பொழுது எந்த இராகத்திற்கு மாறினார்கள்? அதைச் சொல்லாமற் பொதுவாகச் சொல்வது மிகவும் மோசமானது. சபையில் இப்படி ஒரு குறிப்பைச் சொல்லி யிருப்பீர்களானால் அங்கிருந்த கர்நாடக வித்வான்கள் உங்களைச் சும்மாவிட்டிருக்கமாட்டார்கள். அவர்களெல்லோரும் உங்களோடு சண்டைக்கு வரவேண்டுமா?

ஆரோகணம், அவரோகணங்களில் கிரமம் மீறி வேறு ஒரு சுரம் கலக்குமானால் கெருப்பில் விழுந்த புழுப்போல் மனம் துடிக்கும் அறிவாளிகள் பிள்ளைகளென்றுவது, பாகவதரென்

ருவது பார்க்கமாட்டார்கள். கேட்டுக்கொண்டு சும்மாயிருக்கவும் மாட்டார்கள். வேறு ஆரோ சனங்களுக்கு மாறிவிட்டார்களென்று எங்களையும் அவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த கர்நாடக வித்வான்களையும் தாங்கள் மோடனம் செய்வது சரியல்ல.

எங்கள் வயிற்று ஆத்திரத்திற்காகவா 1500 ரூபாவுக்கு மேல் செலவு செய்து பல விதமான சங்கடங்களையும் அனுபவித்துக் கொண்டு அங்குவந்து வேறு இராகங்களுக்கு மாற்றிப் பாடினோம்? மற்றவர்கள் எதற்காகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்? என் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களென்று அவர்களை நீங்கள் கேட்கக் கூடாதா? எங்களைப் போலவே அவர்களையும் மூடர்களென்று நினைத்துக் கொண்டீர்கள். இப்படி ஜனசமூகத்தைப் புண்படுத்தும் வார்த்தைகள் சொல்வதைப் பார்க்கிலும் தாங்கள் சும்மாயிருந்தால் மிகப் பெருமையாயிருக்கும்.

மகாராஜா அவர்கள் கூட்டிவைத்த சபையையும் சபையில் வந்திருந்த வித்வான்களையும் தாங்கள் நன்குமதிக்கவில்லை என்று தங்கள் வசனங்களினால் வெளியாகின்றது. 'தமிழ் மக்களின் பூர்வ கானத்தின் உண்மையை யாவரும் அறிந்து கொள்ளவேண்டும்; அம்முறையே உலகத்திலுள்ள சங்கீதம் யாவற்றிலும் மேலானது; ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் வருகின்றனவென்று அவதிப்பட வேண்டாம்' என்று, என் சொந்த ஜனங்களுக்கும் சொந்த தேசத்தாருக்கும் உலகத்தார் யாவருக்கும் உண்மையைத் தெரியப்படுத்த நான் அவ்வளவு தூரம் வற்தேனேயொழிய, இப்படித் தங்களால் அவதூறான குறைந்த வார்த்தைகளைக் கேட்க வரவில்லை. தங்களையொத்தவர்கள் இவ்வார்த்தைகள் சொல்வதும் முற்றிலும் தவறுதலாக இருக்கிறது.

---

14. "அவர்கள் முக்கியமாய் மாறிப்போகிற Scale க்கு ditonal scale என்று பெயர். இதைத்தான் Pythagoras உடைய ஸ்கேல் என்று சாதாரணமாய்ச் சொல்வார்கள்.

இதைப் பற்றி நான் ஒரு article சீக்கிரம் எழுதுவேன். Blaserna என்பவருடைய 'Theory of sounds' என்ற நூலைப் போன்ற மற்ற நூல்களால் தான் Pythagoras உடைய scale சங்கீத சரித்திர விஷயத்தில் என்ன வேலை செய்திருக்கிறதென்பதைப்பற்றிச் சாமான்ய ஜனங்கள் தப்பான அபிப்பிராயம் கொள்வதற்கு இடமாயிருக்கிறது. என்னுடைய அபிப்பிராயமென்ன வென்றால் temperament வந்த பிறகுதான் சங்கீதத்திற்கு ஒரு முக்கிய ஆதாரமாக எண்ணப்பட்டதே யொழிய அதற்கு முந்தியல்ல. ஆதிரேக்கருக்குள் கித்தாரியைச் சுருதிசேர்ப்பதில் உபயோகப்படுத்தப்பட்ட சுத்த ஸ்கேல் முறைகளில் இது ஒன்றுயிருந்தது. இது வெகு சௌகரியமாயிருந்த படியால் இந்த ஸ்கேலை ஆதாரமாகக்கொண்டே வாத்தியங்களுக்கு notation எழுத ஆரம்பித்தார்கள். அந்தக் கித்தாரியின் தந்திகளை முறுக்கினால் அரைச் சுரம் வரைக்கும் உயர்த்தக்கூடிய விதமாய் அது அமைக்கப்பட்டதனால் எந்த ஸ்கேல் அவசியமோ அதை வாசிக்கும்படியாய்ச் சௌகரியம் ஏற்பட்டது. தற்கால பிங்கார் அல்லது வீணையில் மெட்டுகளில் இல்லாத சுரங்களை எப்படித் தந்தியை இழுப்பதனால் கமகமாய் வாசிக்கிறோமோ அப்படித்தான். இந்த ditonal scale ஆனது தெரிந்தவரையில் கிரேக்க சங்கீதத்தில் உபயோகப்படுத்தப்படவில்லை. அதாவது ஒரு இராகமாவது Pythagoras முறையாய்ச் சுருதி சேர்த்த சுத்த சுரங்களால் உண்டானதல்ல. Byzantine Empire (மகமதிய ராஜாங்கம்) இருந்த காலத்தில் சங்கீதமே தெரியாத சிலர் Pythagoras உடைய கணக்கை ஒட்டிவிட்டார்கள். தற்காலம் Just intervals என்றால் என்னவென்று தெரியாத பண்டிதர்கள் 303$\frac{7}{8}$ உள்ள காந்தாரம் 405 உள்ள தைவதமென்று தண்ணீர்பட்ட பாடமாய் எப்படிச் சொல்லுகிறார்களோ அப்படித்தான் அதுவும்."

சம அளவான ஓசையுடையதாயிருக்க வேண்டுமென்ற பூர்வ தமிழ் முறைப்படி செய்த வீணையில்கண்ட நாதத்தின்படியே தமிழ் மக்கள் பூர்வம் வழங்கி வந்ததும் தற்காலம் தமிழ் மக்களின் வழக்கத்திலிருப்பதுமான சங்கீதத்தையே பிள்ளைகள் பாடினார்கள். அதைத் தாங்கள் 'artificial இடைவெளிகள்' என்று பதினேராவது வாக்கியத்திலும் 'நாமாய்க்கூடச் குறைத்துவைத்துக் கொள்ளும் சுரங்களாலான சங்கீதம் அருவருப்பானது' என்று ஒன்பதாவது வாக்கியத்திலும், 'குறைத்து வைத்த இடைவெளிகளுடைய சுரத்தில் பாடியதினால் அது இனிமையாயில்லை' என்று பன்னிரண்டாவது வாக்கியத்திலும், 'தங்களை அறியாமலே வேறு ஆரோகண அவரோகணங்களுக்கு மாறிவிட்டார்க'ளென்று பதின்மூன்றும் வாக்கியத்திலும் சொல்லுகிறீர்கள். இவைகளைக் கவனிக்கும் பொழுது Equal Temperament முறைக்கும் Pythagoras முறைக்குமுள்ள நாத வித்தியாசம் இன்னதென்று தாங்கள் தெளிவாக அறிந்து கொள்ளவில்லை; ஓசையை அறிந்து நிதானிக்கும் திறமையும் தங்களுக்கு இல்லை என்று தோன்றுகிறது. ஏன் சங்கீதத்தை உபத்திரவப் படுத்துகிறீர்கள்?

Just intervals என்றால் இன்னதென்று கணக்குப் பெருக்கிக்கொண்டுபோன தேவால் $303\frac{3}{4}$ வைபரேஷனில் $3\frac{3}{4}$ வைபரேஷன் ஏன் தள்ளினார் என்று காரணம் சொல்லாமல் ஏன் மிரட்டுகிறீர்கள்? அவர் தப்பிதமாய்ச் செய்த கணக்கை தாங்கள் ஏன் ஆதாரமாக எடுத்துக் கொண்டீர்கள்? ஆதார சட்சம் 240 வைபரேஷன் என்று வைத்துக்கொண்டு $\frac{3}{5}\times\frac{3}{5}$, $\frac{3}{5}\times\frac{3}{5}\times\frac{3}{5}$ என்று பெருக்கிக் கொண்டுபோன தந்தியின் பின்னத்திற்கு ஓசையின் அலைகள் கண்டுபிடித்த தப்பான முறையையே தாங்களும் எடுத்துக் கொண்டு சாதிக்க வந்திருக்கிறீர்கள். $\frac{3}{5}$, $\frac{3}{4}$ என்ற பின்னங்கள் மிச்சமில்லாமல் வகுக்கப்பட முடியாத எண்கள் என்று புள்ளி போட்டுக்கொண்டு நிற்பதையும் அப்படியே பெருக்கும்பொழுது ஸ்தாயிக்குரிய 1, 2, 4, 8 போன்ற முழு இலக்கங்கள் கிடைக்காமல் ஆஞ்சநேயர் வால்போலப் போகப் போக நீண்டுபோவதையும் எடுத்துச் சொன்னவுடனே கான்பரென்ஸில் வந்திருந்த அநேக வித்வான்களுக்கும் மற்றும் அறிவாளிகளுக்கும் இது சரியான முறையல்ல என்று தகுந்த காரணம் சொல்லி 'இதில் ஆட்சேபனை இருக்குமானால் சொல்லவேண்டு'மென்று பல தடவை கேட்டேனே. ஒருவரும் ஒன்றும் பேசவில்லையே. தாங்களும் அங்கு இருந்தீர்களே. ஒரு வார்த்தை வாய்திறந்து சொன்னீர்களா? தங்களுக்கு ஏன் அப்படிப்படவில்லை? அப்போது சும்மா இருந்துவிட்டு ஆறு மாதத்திற்குப் பிறகு என்ன ஆரவாரம்?

ஒன்றிருக்க மற்றொன்றைச் சொல்லும் அறிவாளிகளின் சொல் எத்தனை நாளைக்கு நிற்கும்? மனிதவாக்குக் காயங்கள் மூன்றிலும் ஒன்றுகக் காணப்படும் ஒரு சத்தியம், சுவர்க்க, மத்திய, பாதாளம் என்னும் மூன்று உலகத்திலும் ஒன்றுகவே நிலைத்திருக்கும். அப்படியில்லாதவை "பிழைக்கிற பிள்ளையானால் பிறந்த உடனே சாகாதா"? என்று சொல்லும் பரிகாசவாக்கியம்போல் ஆகுமே. தங்கள் ஆர்மோனியமும் அன்றே தொலைந்ததே. உயிரற்ற ஒன்றைக் கட்டிக்கொண்டு எத்தனை நாள் அவதிப்படுவீர்கள். நாறிப்போகுமே.

ஆயினும் தாங்கள் ஏளனம் செய்கிற பண்டிதர்கள் கூடிய சீக்கிரம் உங்கள் கணக்கையும் ஆர்மோனியத்தையும் கண்டித்து உங்களுக்கு எழுதுவார்கள். 'இந்திய சங்கீதம் மேற்றிசையிலிருந்து ஒரு ஐரோப்பியர் வந்து தன்னை எடுத்து நிறுத்தவேண்டுமென்று ஆவலாய்க் காத்துக் கொண்டிருக்கிறது' என்று சொன்ன சொல்லுக்கு இந்தியாவின் முன்னோர்களையும் அவர்களின் முறைகளையும் அனுபோகத்தையும் பாழ் செய்யத் தாங்களா தலையெடுக்கவேண்டும்? தங்களு

டைய குறிப்புகள் (Remark) பார்க்கும் பொழுது ஒன்று மில்லாத சொற்கள் போலிருந்தாலும் விடமுள்ள பாணங்களைப்போல் வருத்தத்தைத் தருகின்றனவே.

---

15. ''தங்கள் குழந்தைகளுடைய கானமானது Jackruddin ஆலும் மற்றவர்களாலும் அதிகமாய்ப் புகழப் பட்டபோதிலும் அது எவ்விதத்திலும் ருசு என்று சொல்ல முடியாது.''

'தங்கள் குழந்தைகளுடைய கானமானது சாக்ருடினாலும் மற்றவர்களாலும் அதிகமாய்ப் புகழப்பட்டபோதிலும் அது எவ்விதத்திலும் ருசு என்று சொல்லமுடியாது' என்று சொல்லுகிறீர்களே. ஒரு நல்ல வார்த்தையாவது பூர்ணமாய்ச் 'சொல்லக்கூடாதா? சொல்வதிலும் ஒரு ருஜு வைத்தா சொல்லவேண்டும். சபையில் வந்திருந்த சற்றேறக்குறைய 500 பேர்களும் கொண்டாடும்படி நாங்கள் அவர்களுக்கு என்ன செய்தோம்? முன்பின் எங்களை அவர்களுக்குத் தெரியுமா? இனிய கீதத்தைக்கேட்டதின் நிமித்தம் அதைக்கொண்டாடினார்கள்.

கான்பரென்ஸ் ஆரம்பத்தில் தெய்வவணக்கம் பிள்ளைகள் சொல்லவேண்டுமென்று புரோகிராமில் குறித்திருந்தார்கள். முதல் முதல் அடானா கீர்த்தனம் பாடப்பட்டது. ஆரம்பித்து முதல் அடி சொல்லும் பொழுதே பிள்ளைகள் பக்கமிருந்த Mrs. Atya Begum Fyzee Rahimin இனிய குரலுக் கீடுபட்டு அநேக காலம் பழகினவர்கள்போல் பிரியங்காட்டினார்கள். அதன் பின் 'தன் வீட்டிற்கு வரவேண்டுமென்றும், தன்னோடு Tea சாப்பிடவேண்டுமென்றும், தன் பாட்டைக்கேட்கவேண்டுமென்றும், பிள்ளைகள் தனக்காக இன்னும் சில பாட்டுகள் தன் வீட்டில் பாடவேண்டுமென்றும்' கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டபடியே நாங்களும் செய்தோம். அவர்கள் பாடியபொழுது நாங்கள் மிகவும் ஆச்சரியப்பட்டோம். இனிய குரலும் பக்திரசமான பொருளும் இராகங்களின் முறையும் கேட்க மிக இனிமையாயிருந்தன. சங்கீதத்தில் அவர்கள் அவ்வளவு அறிவுடையவர்களாயிருந்ததனால் அல்லவோ பிள்ளைகள் பாட்டில் பிரியப்பட்டார்கள்?

இன்னும் சிலர் முதல் பல்லவியைக் கேட்டபின் கீர்த்தனத்தின் பொருளும் இராகத்தின் அமைதியும் கண்டு தங்கள் கண்களை மூடிச் சமாதி நிலையில் நின்றார்கள். வேறு சிலர் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்கள். ஹிஸ் ஹைனஸ் மகாராஜா அவர்களும் 'பாட்டு எங்கிருந்து வருகிறது, யார் பாடுகிறார்'? என்று விசாரிக்க ஆரம்பித்தார்கள். சபையோர் பலரும் அருமையான பல குறிப்புகள் பெருமையாய்ப் பேசிக்கொண்டார்கள். சற்றேறக்குறைய 500 பேர் அப்போது கூடியிருந்தார்களென்று உத்தேசிக்கிறேன். இவர்களில் உண்மையாய்ச் சங்கீதத்தை அப்பியாசம் பண்ணினவர்களும் அறிந்தவர்களும் 300 பேராவது இருக்கலாம். இவர்களாலும் யாவராலும் புகழப்பட்ட குழந்தைகளின் கானம் தாங்கள் ஒருவருக்கு மாத்திரம் அருவருப்பாயிருந்ததற்குக் காரணமென்ன? ஹிஸ் ஹைனஸ் மகாராஜா மாகாராணியவர்களும் ராஜகுடும்பத்தாரும் லக்ஷ்மி விலாசத்தில் பிள்ளைகளின் பாட்டைக் கேட்டபோது 'பிள்ளைகளின் பாட்டு மிக நன்றாயிருந்தது அவர்களுக்கு மிகவும் நன்றி பாராட்டுகிறோம்' என்று பிரிய வசனம் சொன்னார்களே. தாங்களும் அப்போதிருந்தீர்களே. தங்களுக்குச் சரியான சங்கீதம் கேட்டுப்பழக்கமில்லாததனால் இப்படிச் சொல்லுகிறீர்கள் என்று எண்ணுகிறேன்.

ஹிஸ் ஹைனஸ் மகாராஜா மகாராணி அவர்களாலும் இந்தியாவின் சங்கீதத்தில் தேர்ந்த எல்லா வித்வான்களாலும் ஒன்றுபோல் புகழப்பட்ட கீதம் உங்களுக்கு அருவருப்பா யிருக்கிற தென்று அங்கேயே சொல்லியிருப்பீர்களானால் தங்களையும் ஒரு துக்கடா பாடச்சொல்லிப் புகழ்ந் திருப்பேன். சபையார் யாவராலும் அருவருக்கப்பட்டிருப்பீர்கள். அப்படியானால் ஆறுமாதத் திற்குப் பிறகு இப்படி பிதற்றமாட்டீர்கள். தங்கள் அபசுரமுள்ள ஹார்மோனியம் உங்கள் காதைக் கெடுத்து விட்டது என்று நான் நிச்சயம் சொல்வேன். இக் கோய் தீர கீலயாத்தில் தைல முண்டோ? ஐந்து ஜூரிகள் அல்ல 300க்கு மேற்பட்டவர்கள் 'ஆம்' என்று சொல்வதை ஒருவர் மாற்றிச் சொல்ல என்ன ஆதாரமிருக்கிறது? இது அனியாயத்திலும் அனியாயம் அறியாமையிலும் அறியாமையே.

கர்நாடக சங்கீத முறைக்கும் இந்துஸ்தான் முறைக்கும் சில பேதங்கள் உண்டு. இவைகள் இரண்டும் வெவ்வேறுயிராமல் இரண்டும் ஒன்று சேர்ந்து ஒரு கீர்த்தனத்தை அழகு படுத்த வேண்டுமென்பது என்னுடைய முக்கிய நோக்கம். இவ்விரண்டும் வெவ்வேறாக நினைப்ப வர்கள் கூட திருப்தியடையக் கூடியதாயிருக்குமானால் தாங்கள் மாத்திரம் தனித்து நின்றால் இவ்விரண்டிலும் தங்களுக்குச் சிறிதும் கேள்வி யில்லையென்றே சொல்லவேண்டியதா யிருக்கிறது.

பிள்ளைகள் பாடிய கீர்த்தனம் சுருதி முறைகளுக்கு ருசுவென்று தங்களை நான் சொல் லச் சொன்னேனா? அல்லது சபையாரையாவது சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டேனா? தென்னாட்டின் தமிழ்மக்கள் பாடிவரும் சங்கீதத்தை வட நாட்டில் இந்துஸ்தான் சங்கீதம் பாடு வோர் ஒப்புக்கொள்ளுவார்களா? ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் உண்டென்று வாதாடும் வட நாட்டில் 96 துட்பமான சுருதிகள் வழங்குகின்றனவென்று சொன்னால் அறிந்து கொள் வார்களா? ஆகையினால் எவ்விதமான முடிவும் (ரெசலூஷனும்) சொல்ல நான் நினைக்கவில்லை.

'ஒரு ஸ்தாயியை 24 சுருதிகளாக வகுத்து அதில் இரண்டு அலகு குறைத்து 22 என்று கணக்குச்சொன்ன பூர்வ தமிழ் நூலின் கருத்தறியாமல் ஒரு ஸ்தாயியில் 22 என்று மற்றவர்கள் தவறுதலாய்ச் சொல்லுகிறார்கள். நான் இந்தத் தடவை வியாசம் வாசித்துக் காட்ட முடியாது. அவ்விடத்துக் கான்பரென்ஸின் நடபடிக்கையைப் பார்த்துக் கொண்டு அடுத்த கான்ப ரென்ஸில் வாசிக்கிறேன்' என்று திவான்சாகிப் மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் C. I. E. அவர் களுக்கும் Mr. V. N. Bhatkandi B A., B. L. அவர்களுக்கும் கடிதம் எழுவதியும் நான் வர வேண்டுமென்றும் சுருதிகளைப் பற்றிச் சொல்லியே தீரவேண்டுமென்றும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதினால் சுருதிகளைப் பற்றி எழுதிவரும் என்னுடைய புத்தகம் முடித்தும் முடியாமலு மிருக்கையில் என் வேலைகளை எல்லாம் போட்டுவிட்டு பல கஷ்டங்களையும் மேற்கொண்டு அங்கு வந்தேன்.

இடத்துக்கு நான் புதிதாயிருந்ததனாலும் தமிழ் மக்களின் மேலான சங்கீத ஞானம் அவ்விடத்திற்குப் புதிதாயிருக்குமானதினாலும் நான் அதிகமாக என் வார்த்தைகளைச் செல வழிக்கவில்லை. ஆனாலும் அங்கு வந்திருந்த அறிவாளிகள் ஆழ்ந்து கவனிக்கும்படி சில அரிய விஷயங்களைப் புத்தகமாக அச்சடித்துக் கொடுத்தும் சுருக்கமாய் $3\frac{1}{2}$ மணி நேரம் வியாக்கியானம் செய்தும் காட்டினேன். ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை, சதுரப்பாலை, என்னும் நாலு பாலையாக தங்கள் கானத்தை வகுத்து 12,000 இராகங்கள் பாடி வந்த தமிழ்மக்களின் முறையில் நாலு அட்டவணைகளில் தற்காலத்தில் வழங்கும் 67 கீர்த்தனங்கள் எழுதி அதன் படியே சபையின் முன் ருசுப்படுத்திக் காட்டினேன். இந்நாலு அட்டவணைகளில் தாங்கள் பிர மாதமாகச் சொல்லும் 5, 6 இராகங்களைத் தேடிப் பிடித்து அதன்படி பாடிப்பார்த்தால் தங்

களைப் பிடித்த அபசுர ஞானம் உடனே நீங்கிவிடும். தங்கள் சொல்லை நம்பித்தலையாட்டங் கொண்டவர்களும் கவனித்தால் நிச்சய புத்தியுண்டாகிவிடும். தங்களுக்குத் தெரிந்த சில இராகங்களில் நட்ட சுரங்கள் வருவது போல் இன்னும் ஏராளமான இராகங்களில் சில சுருதிகள் வருகின்றனவென்று தாங்கள் கண்டுகொள்வீர்கள். கிரகசுரம் மாற்றுவதனால் மூன்று சுருதிகள் கிடைத்தன என்று சொன்னதுபோல் அதற்கு என்ன காரணம் சொல்லுவீர்கள்?

'சபையில் யாருக்காவது ஆக்ஷேபமிருந்தால் சொல்லட்டும். இன்னும் தெளிவாகச் சொல்லக் கூடியவைகளைச் சொல்லுகிறேன், கேட்கிறவர்கள் தனித்து வந்தாலும் சொல்லத் தயாராயிருக்கிறேன்' என்றும், கணித விஷயமாக $\frac{2}{3}$, $\frac{3}{4}$ ஆகக் கண்டுபிடித்துக் கொண்டு போகும் சுரங்கள் சங்கீதத்திற்குச் சரியான அளவைத் தராது என்றும் பல நியாயங்கள் சொல்லி, Geometrical Progression படியே சரியான சுரங்கள் கிடைக்கும் கணிதம் காட்டி, 'ஆக்ஷேபணையிருக்குமானால் சொல்லவேண்டு' மென்றும் சபையோரைப் பார்த்துக் கேட்டுக்கொண்டேனே. கேட்டுக் கொண்ட இடத்தில் மறுத்து ஒருவரும் கேட்க வில்லையே என்று வருத்தப்பட்டேன். கேட்டிருந்தால், ஒருமணி நேரமல்ல இரண்டு மூன்று மணி நேரமானாலும் எடுத்துக்கொண்ட சுருதிவிஷயத்தைப் பூரணமாய் அறிந்து கொள்ளும்படி சொல்லத்தயாராயிருந்தேன்.

தாங்கள் காலம் காள் கழுவலாய்ச் சொல்லோடு சொல்லாய்ச் சொன்ன இரண்டு குறிப்புகளுக்கு இரண்டு நிமிஷம்தான் பதில் சொல்லக் கிடைத்தது. ஆனால் $\frac{3}{4}$ மணி நேரம் சொல்லும்படி விட்டுவிட்டார்கள். சாப்பாட்டுக்கு வழக்கமாய்ப் போகும் நேரத்தைப் பார்க்கிலும் அதிக நேரம் ஆகிவிட்டது. அப்போதும் 'தாங்கள் ஏதாவது ஆக்ஷேபனை சொல்வதாயிருந்தால் சொல்ல வேண்டு' மென்று கேட்டபொழுது சொல்லாதிருந்தீர்கள். சொல்லியிருப்பீர்களானால் தேவால் அவர்களின் தவறுதலான கணக்கையும் அத் தவறுதலில் செல்லும் தங்களுடைய கணக்கையும் எடுத்துக்காட்டி அம்முறைப்படி வீணையில் சுருதிஸ்தானங்களைக் காட்டித் தங்கள் முறை தவறுதலென்று ஒப்புக்கொள்ளும்படி செய்திருப்பேன். நான் தங்களிடத்தில் பெருமை பாராட்டுவதாக நினையாதிருக்க மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உண்மையிருக்குமானால் நான் ஏன் வாய்திறந்து சொல்லக்கூடாது? பல்லாயிர வருடங்களாகப் பூர்வ தமிழ் மக்கள் வழங்கி வந்த நட்பமான சுருதிமுறை இவ்வளவு காலமும் அறிந்து கொள்ளக் கூடாமல் போயிற்றேயென்று வருத்தப்படுகிறேன். உள்ளபடி மற்றவர்கள் அதை அறிந்துகொள்ள வேண்டிய பிரயத்தனம் எடுத்துக் கொள்ளாமல் போனால் நான் என் தேசத்திற்கும் என் ஜனங்களுக்கும் என் பாஷைக்கும் துரோகியாவேன். நான் பூர்வத்தில் இல்லாதவைகளைச் சொல்லுகிறேன் என்று தாங்கள் எண்ணுதிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சுருதி விஷயமாக முற்றிலும் ஆராய்ந்து பார்க்காமல் அவரவர்கள் தங்கள் தங்களுக்குக் கிடைத்த சில சுருதிகளைக் கண்டுபிடித்ததாகக் கொண்டு வந்து விட்டார்கள். இது குருடனுக்குக் காட்டிய கொக்குப்போல் கேடாய் முடிந்தது.

ஒரு குருடனுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அது பால் புரையேறி இறந்து விட்டது. துக்கம் விசாரிக்க வந்த ஒருவனிடத்தில் பால் எப்படியிருக்கும் அண்ணா என்று குருடன் கேட்டான். அவன் கொக்குப்போல் இருக்கும்என்றான். பக்கத்திலிருந்த வேறொருவனைக் கொக்கு எப்படியிருக்கு மென்று கேட்டான். அவன் முழங்கையையும் முன்னங்கையையும் கொக்குப் போல் வளைத்துக் குருடன் கையை அதன் மேல்வைத்துத் தடவிப்பார்க்கச் சொல்லி, 'கொக்கு இப்படித் தான் இருக்கும்' என்றான். குருடன் உடனே தன் தடியை எடுத்துக்கொண்டுபோய்க் கொக்குப்

போல் ஒரு கையை மடக்கிக்காட்டிக்கொண்டு 'இத்தப் பெரிய கொக்கை எப்படி பிள்ளைக்குக் கொடுத்தாய்' என்று தன் பெண்சாதியை அடித்தான். அவள் கூக்குரலிட்டாள். இதுபோல் தங்களுடைய 25 சுருதியும் இருக்கிறதே.

மிராஜ் பட்டணத்து Mr. Krishnaji Mahadev Gokhale அவர்கள் 22 சுருதிக்கு மேற்பட்டு நுட்பமான சுருதிகள் வரும் 83 இராகங்களைப் பாடிக் காட்டினார்களென்று சொன்ன தாங்கள் இருபத்தைந்தை மாத்திரம் ஏன் எடுத்துக் கொண்டீர்கள்? சங்கீத வித்வானுடைய அபிப்பிராயத்தின்படி இருபத்திரண்டையும் தள்ளி கே. Mr. Krishnaji Mahadev Gokhale சங்கீத வித்வானுடைய அபிப்பிராயத்தையும் தள்ளி நடுவில் இருபத்தைந்து என்ற கொக்கைக் கொண்டு வந்தால் எங்களால் ஒப்புக்கொள்ள முடியவில்லையே. நாங்கள் கஷ்டப்படும்படி செய்வது இந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் நுட்பமான சுருதிகள் இன்னவையென்று அறியாத தங்கள் கவனக் குறைவேயொழிய வேறல்ல. தங்களைப் போன்றவர்கள் ருசு வென்று சொல்லிவிட்டால் கர்நாடக சங்கீதத்தில் பாண்டித்திய முள்ளவர்கள் ஒப்புக் கொள்வார்களோ. கர்நாடக சங்கீதத்தில் பாண்டித்திய முடையவர்களுங்கூட வேண்டுமென்று குதர்க்கம் சொல்வார்களானால் தாங்கள் சொல்லக் கேட்பானேன்.

தங்களைப் போல 1000 கிளமென்ட்ஸ் துரைகளை ஒன்றுசேர்த்து உருக்கி வார்த்ததுபோன்றவரும் பிள்ளைகளுக்குப் படித்துக் கொடுக்கிறவருமாகிய மகா-ரா-ரா-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதரவர்கள் 67 கீர்த்தனைகளிலும் ஒரு பிழைகூட கண்டுபிடிக்க முடியாமல் எப்படியாவது ஒன்றில் ஒரு குறைசொல்லவேண்டும் என்று தீர்மானித்து, 'தன்னியாசியில் வரும் காந்தாரத்தைப் பிள்ளைகள் கூட்டிப் பாடுகிறார்கள். அது 22 சுருதியின்படி குறைந்து வரவேண்டியது' என்று பிடிலில் வாசித்துக் கோகரணம், கஜகரணம் எல்லாம் செய்தார்கள். மகா-ரா-ரா-ஸ்ரீ மகா வைத்தியநாத ஐயருடைய சிடரில் ஒருவரும் கர்நாடக சங்கீதத்தில் தேர்ந்த வருமான பழமாறனேரி மகா-ரா-ரா-ஸ்ரீ சாமிநாத ஐயர் அவர்களும் அதற்கு ஒத்துப் பாடினார்கள். அப்போது நிஷாதம் கூடுதலாக வருவதை வீணையில் காட்ட, ஒப்புக்கொண்டார்கள். நிஷாதம் போலவே, 'காந்தாரமும்கூட வரவேண்டும் இல்லையானால் அதற்கு ச-ப ஒற்றுமை யில்லை' யென்று நான் சொன்னேன். அப்போது மைசூர் வைணீக வித்வான் மகா-ரா-ரா-ஸ்ரீ சேஷண்ணு அவர்களும் மற்ற வித்வான்களும் 'காந்தாரம் கூட வராமல் போனால் அது தன்னியாசியாக மாட்டாது. பிள்ளைகள் பாடுவது சரியாயிருக்கிறது' என்று தீர்மானித்தார்கள். கர்நாடக நாட்டில் நுட்பமாய்க் கவனிக்கிறது போல வடநாட்டில் அதைக் கவனிக்கவில்லை என்றுதான் வருத்தப்படவுமில்லை. பிறர் அதன் அருமையைத்தெரிந்து கொள்ளவில்லை என்று குறை சொல்லவுமில்லை. சுருதியைப்பற்றிய அறியாமையும் குதர்க்கமும் நீங்கிச் சரியான அறிவு வரும் காலத்தில் அதன் அருமையை அறிவார்கள்.

---

16. "தாங்கள் ஸ்தாயியைச் சரிபாகமாக வகுப்பதைப்பற்றி என் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன். இந்திய சங்கீதமானது இப்போதுதான் திவ்வியமான பதவியிலிருக்கிறது."

ஸ்தாயியைச் சரிபாகமாக நான் வகுப்பதைப்பற்றி எவ்வளவு தாங்கள் பரிகாசம் செய்யவேண்டுமோ அவ்வளவு பரிகாசம் செய்ய சில குறிப்புகள் சொல்லுகிறீர்கள். அத்தனை பரி

காசமும் தங்களுக்கே சொல்லப்பட்டவையென்று தாங்கள் அறியாதிருக்கிறீர்கள். இந்திய சங்கீதமானது இப்போதுதான் திவ்வியமான பதவியிலிருக்கிறது என்று சொல்லுகிறீர்கள். தங்கள் முறைப்படியே அது தள்ளப்பட்டதே. பின் யார் முறைப்படி திவ்வியமான நிலையிலிருக்கிறது?

---

17. "ச-ப என்ற ஒற்றுமை ஆதாரமாகக் கொண்ட எந்த சங்கீத முறையும் முற்றிலும் சரியான ஒற்றுமையுள்ள சுரங்களாலானதாயிருக்க வேண்டும்."

ச-ப முறையை ஆதாரமாகக் கொண்ட எந்த சங்கீத முறையும் முற்றிலும் சரியான ஒற்றுமையுள்ள சுரங்களாலானதாயிருக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளுகிறீர்கள். இவ்வுத்தம அபிப்பிராயத்தை நான் மிகவும் ஒப்புக்கொள்ளுகிறேன். ச-ப முறையில் ஒரு ஸ்தாயியில் பன்னிரண்டு சுரங்கள் கிடைக்கவேண்டுமென்ற பூர்வதமிழ் முறையையே இங்கே சொல்லுகிறீர்கள். ச-ப முறையில் சுரங்கள் கண்டு பிடிப்பதற்கு $\frac{2}{3}$, $\frac{3}{4}$ என்ற முறை சரியானதன்று. சுரஞானத்தினால் கண்டு பிடிக்கவேண்டுமென்று பூர்வ தமிழ்மக்கள் இசைத் தமிழ் நூலில் தெளிவாய்ச்சொல்லியிருக்கிறார்கள்.

ஏற்றிய குரலிளி யென்றிரு நரம்பின்-ஒப்பக் கேட்கும் உணர்வினளுகி.

அம்முறை Geometrical Progression படி சுரங்களும் சுருதிகளும் வரவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லுகிறதாக இருக்கிறது.

இம் முறையில் பூர்வ தமிழ்மக்கள் தொட்ட சுரத்திற்கு ஏழாவது ஏழாவதாகவும் ஐந்தாவது ஐந்தாவதாகவும் ஒரு ராசியில் 12 சுரங்கள் கண்டுபிடித்து

வரன்முறை மருங்கின் ஐந்தினும் ஏழினும்-உழைமுத லாகவும் உழையீ ருகவும்
குரன்முத லாகவும் குரலீ ருகவும்

ஒவ்வொரு சுரத்திலும் ச-ப, ச-ம முறையாய் ஒவ்வொரு அலகும் அதற்குக் குறைந்து வருகிற துட்ப சுரங்களும் ச-ப, ச-ம முறையில் பொருந்தி வரவேண்டுமென்று உலகத்தார் ஒருவரும் அறிந்து கொள்ளாத திவ்விய பதவியைச் சொல்லியிருக்கிறார்கள். 'என் முறையே இந்திய சங்கீதத்திற்கு திவ்வியமான பதவியைத் தந்தது' என்று தாங்கள் தீர்க்கதரிசனம் சொல்லுகிறது போலிருக்கிறது.

ஒரு ஸ்தாயியில் 12 சுரங்களும் 24 சுருதிகளும் மற்றும் துட்ப சுருதிகளும் Geometrical Progression படி தந்தியின் எந்த அளவில் வருகின்றனவென்று கண்டு அவற்றின்படி மெட்டுகள்வைத்து அனுபோகத்திலிருக்கும் இராகத்தைப் பாடிக்காட்டியபோது 'சங்கீதத்திற்குப் புதிய உலகம் தோன்றி இருக்கிறது, இனிமேல் சுருதிகளை விசாரிக்க வேண்டிய அவசியமில்லை, இவை போதும், Mr. தேவால் Mr. கிளமெண்ட்ஸ் அவர்கள் சுருதிமுறை பாதாளத்திற்குத் தள்ளப்பட்டது' என்று, கூடியிருந்த கனவான்களும் அறிவாளிகளும் சொல்லித் தங்களுக்குள்ள சந்தோஷத்தைக் காட்டினார்களே. அதைத்தானே தாங்கள் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறீர்கள்? அல்லது யாவராலும் தகுந்த பரிக்ஷையின் மேல் அனுபவத்திற்கு ஒத்துவர வில்லை என்று அருவருத்துத் தள்ளிய ஆர்மோனியம் திவ்வியபதத்தைத் தந்ததென்று மனசாட்சிக்கு விரோதமாய்ச் சொல்லுகிறீர்களோ?.

ஏனென்றால் என்னுடைய முறை ச-ப வை ஆதார மாகக்கொண்டது. முற்றிலும் சரியான ஒற்றுமையுள்ள சுரங்களாலானது. தங்கள் முறையோ முற்றிலும் சங்கீதத்திற்கு ஒத்துவராத சுரங்களுடையது. $\frac{2}{3}$, $\frac{3}{4}$ என்ற பின்ன எண்களினால் பெருக்கிக் கொண்டுபோய் ஒரு இடத்தில் தலையைத் தட்டியும் மற்றொரு இடத்தில் காலிலவெட்டியும் சரிப்படுத்தியது. இவை களைப்பற்றிக் கருணாமிர்த சாகரம் இரண்டாம் பாகத்தில் போதுமானபடி சொல்லியிருக்கிறேன்.

---

18. "ஆதிகாலத்தில் சாஸ்திரிகளுக்கு சுத்த ஒற்றுமையுள்ள சுரங்கள் அவிழ்க்கப்படக்கூடாத ஒரு முடிச்சுப்போல் இருந்தது. தந்தியின் அளவால் சுரங்கள் கண்டுபிடிக்கப் படவேண்டும் என்று அறிந்த பிறகு தான் சரியான வழி அவர்களுக்குத் தெரிந்தது."

ஆதிகாலத்து சாஸ்திரிகளுக்கு சுத்த ஒற்றுமையுள்ள சுரங்கள் அவிழ்க்கப்படாத முடிச்சுப்போலிருந்தன. அவர்களால் அவிழ்க்கக் கூடாதிருந்த முடிச்சைத் தாங்கள் அவிழ்த்து விட்டீர்கள். தந்தியின் அளவால் கண்டுபிடிக்கவேண்டுமென்று அறிந்த பிறகுதான் சரியான வழி அவர்களுக்குத் தெரிந்தது என்று சொல்லுகிறீர்கள். காதினால் ச-ப வின் ஒற்றுமையை அறிந்துகொள்ள வேண்டியிருக்க மட்டப் பலகையினால் $\frac{2}{3}$, $\frac{3}{4}$ என்று தந்தியில் அளந்து போவது வந்த பிறகுதான் இந்த விபரீதங்களெல்லாம் உண்டாயின. ஆனால் இதை மெச்சிக் கொள்ளுகிறீர்கள். Pythagoras என்பவரால் இது ஏற்பட்டது. அதற்கு முற்பட்ட தமிழ் மக்களின் சங்கீத முறையை நீங்கள் கவனிப்பீர்களானால் $\frac{2}{3}$, $\frac{3}{4}$ முறையாகச் சுரங்களைக் [illegible]டி பிடிப்பது சுத்த அறியாமை என்று சொல்லுவீர்கள்.

ஓசையை அளப்பது காதோ, மட்டப்பலகையோ? ஒருவனை மட்டப்பலகையினால் அளந்து இன்ன உயரமுள்ளவனென்றும் தராசில் நிறுத்து இத்தனை எடையுள்ளவனென்றும் சொல்லிவிடலாம். அவனுக்குள் மறைந்திருக்கும் ஜீவசக்தியையும் உத்தம எண்ணங்களையும் அளப்பது எதனால் முடியும்? அணுபோகத்தினாலும் மனதினாலும் மாத்திரம் கண்டு கொள்ளலாம். எடையினால் விலை தீர்மானிக்கப்படும் வயிரத்திற்கும் குணத்தினால் விலை மதிக்கப்படாத ரத்தினத்திற்கும் ஒப்பான சுருதியை மட்டப்பலகை அறியுமா? சுரஞானத்தில் தேர்ந்தவனே ச-ப வின் ஒற்றுமையை அறிவான். ச-ப வின் ஒற்றுமையை அறிந்த பின் ப வை ச வாக வைத்துக் கொண்டு அதன் மேல் ப அறிவான். இம்முறையில் ஒரு ஸ்தாயியை இராசிவட்டமாகப் பிரித்து ஏழாவது ஏழாவதாக வரும் பன்னிரண்டு சுரங்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதை அறிய முடியாதவர்கள் ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் என்றும் 25 சுருதிகள் என்றும் 53 சுருதிகள் என்றும் சுருதிகள் அனந்தம் என்றும் பிதற்றுவார்களே யொழிய உண்மையைக் காணமாட்டார்கள்.

---

19. "ஆனால் இப்படிச் சுரங்கள் கண்டு பிடிப்பது கஷ்டமென்று தெரிந்தும் அந்த சாஸ்திரி எதற்கும் பயந்தானே? இல்லை, போய் விழுந்து சாடி ஒரு முறையைக் கண்டுபிடித்தான். அப்பேர்ப்பட்ட சாஸ்திரிகள் இந்தியாவிலும் கிரேக்க தேசத்திலும் ஒருவரோ எகிப்து, ஆசீரியா, சீனு தேசங்களிலும் இளம்பி சாஸ்திரோக்தமில்லாத ஒரு சங்கீத முறையை ஏற்படுத்தி எல்லா ஸ்கேல்களும் ஸ்தாயியை சம பாகங்களாகப் பிரிப்பதினால் ஏற்படுகிறவைகள் என்று சொல்லிச்சாதித்தார்கள். எல்லா சாஸ்திரிகளும்

இவ்வித முறையையே உண்டாக்கினார்கள். ஒருசாண் அல்லது ஒரு முழத்தைக் கொடுக்கப்பட்ட அளவாக நினைப்பது போல் எல்லா இடைவெளிகளுக்கும் பொதுவான ஒரு சம அளவு இருக்க வேண்டுமென்று நினைத்தார்கள். இந்தப்பொதுவான சம அளவு சுரங்களுக்குள்ள அதிதுட்பமான சிறு வித்தியாசந்தான். இதை ஆதாரமாக வைத்துக் கொண்டு தங்கள் காலத்திலுள்ள வித்வான்களால் உபயோகிக்கப்பட்ட இடை வெளி களுக்கு வெகு விசித்திரமான விதமாயும் வெகு சாமர்த்தியமான விதமாயும் அப்படி எத்தனை நுட்பமான சுரங்கள் இருக்கும் என்று கண்டு பிடித்தார்கள்."

இப்படி ச-ப, ச-ம முறையை அறிந்து கொள்ளாத சாஸ்திரிகள் அனுபோகத்திலிருக் தும் சங்கீதத்தில் என்ன என்ன சுரம் சுருதிகள் வருகின்றனவென்று நிதானித்து ஆராய்ந்து பார்க் காமல் தமக்கு எதிர்ப்பட்ட வழியெல்லாம் ஓடி வாய்க்கு வந்த தெல்லாம் உளறி புத்திமான் களைப் போல் சுருதி முறை என்று புஸ்தகம் எழுத ஆரம்பித்தார்கள். ஏதோ தங்களுக்குக் கிடைத்த சில நூல்களைப்பார்த்து அவற்றின் இரகசியம் விளங்காமையால் முன்னும் பின்னுமாயச் சொல்லித் தூஷித்தார்கள். ஒரு ஸ்தாயியை சமபாகமாகப் பிரிக்க வேண்டும் என்பது ஒருவருக் கும் தெரியாத இரகசியம்போல் எண்ணிக் கொண்டு ஒரு ஏணியைத் திஷ்டாந்தம் சொன்னார்கள். ஏணியின் படிக்களைத் திஷ்டாந்தமாகச் சொல்லியும் ஒரு சாணில் ஒரு விரற்கடையையும் ஒரு முழத்தில் மூன்று விரற்கடையையும் கூடக்குறைத்து வைத்துக் கொண்டால் பாதகமில்லை என்பது போலச் சுரமும் சுருதிகளும் முன்பின்னாய் வரலா மென்று கணக்குக் கொடுத்தார்கள். இப்படிப் பட்ட அளவுகளினால் நமது கானமிருக்கிற தென்று வாய்ச்சமர்த்தாகப் பிரசங்கித்தும் வியாசம் எழுதியும் இந்தியாவில் பெரிய வித்வான்களென்று கொண்டாடும் படி சில நாள் கழித் தார்கள். தங்கள் முறைப்படி ஆர்மோனியம் செய்து பரோடாவில் கூடிய ஆல் இந்திய மியூசிக் கான்பரென்ஸில் அகப்பட்டுக் கொண்டார்கள். ஆர்மோனியத்திலிருக்கும் சுரங்கள் ச-ப முறை யாய் ஒற்றுமை யுள்ளவை யென்றும் சம இடைவெளிகளுடையவை யென்றும் சாதித்தார்கள். ஆனால் சம இடைவெளிகளுடையதாய் தற்காலத்தில் அனுபோகத்திலிருக்கும் சுரங்களுக்குக் குறைந்து வருகிற தென்று கண்டார்கள். குறைந்து வருகிற தென்று சபைமுன் ஒப்புக்கொள் ளும் நல்ல எண்ணம் வந்தாலும் ஆறு மாதம் ஆகிறதற்குள் வந்துவிட்டது ஐயா பழைய குதர்க் கம் வந்துவிட்டது. சபையிலுள்ள யாவராலும் ஆக்ஷேபிக்கப்படாமலிருந்த தென்னிந்திய சுருதி முறையைக் கோணல் என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். Equal Temperament என்று ஏளனம் செய்தார்கள். 'எதற்கும் பயப்படாமல் அங்குமிங்குமாய் விழுந்து சாடி ஒரு முறையைக் கண்டுபிடித்தான்' என்று சொன்னார்கள். 'இப்பேர்ப்பட்ட பயித்தியக்காரன் இந்தியா வினும் கிளம்பி சாஸ்திரோக்தமில்லாத ஒரு சங்கீத முறையை ஏற்படுத்தினான்' என்று சொன்னார்கள். பரிதாபம்! பரிதாபம்!!

அன்புள்ள தமையே! பூர்வ தமிழ்மக்கள் எழுதிவைத்த இசைத்தமிழ் நூலை ஆராய்ச்சி செய்யப்போதுமான நூல்கள் எனக்குக் கிடைக்காமல் போனாலும், முதல் நூற்றாண்டில் இளங் கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரம் என்ற இயல் இசை நாடகமென்னும் முத்தமிழைச் சொல்லும் நூலாலும் அதற்குப் பல்லாயிரவருடங்களுக்கு முன்னுள்ள நூல்களில் அங்கங்கே சொல்லப்படும் சில பாக்களாலும் சங்கீதம் தமிழ் நாட்டில் தற்காலத்தவர் அறிந்து கொள்ள முடியாத அவ்வளவு தேர்ச்சியுடையதாயிருந்ததென்று நான் கண்டு அதன்படி தற்காலம் அனுபோகமிருக்கிறதா என்று பூரணமாய்ப் பரிசோதித்து கான்பரென்ஸ் முன் சொன்னேனேயொழிய தங்களைப்போல் வாய்க்கு வந்தவைகளையெல்லாம் சொல்லி விடவில்லை. நாங்கள் சாமர்த்தியமாய் எழுதிய கடிதத்தை உற்று நோக்கும் புத்திமான்கள் என்னைப் பற்றியும் நான் கொண்டுவந்த சுருதி முறையைப் பற்றியும் அச்சுருதி முறைகள் சொன்ன இந்தியாவின் மகான்களைப் பற்றியும் என்ன நினைப்பார்கள்?

இந்தக் கடிதத்தை எவ்வளவு யோசனையாய் எழுதியிருக்கிறீர்கள். இன்னும் என்னென்ன விபரீதம் எழுதப்போகிறீர்களோ என்று நான் பயப்படவில்லை. நான் எழுதிய மறுப்பில் தங்களைப் பற்றிச்சொல்லும் குறைகளை நிவர்த்திப்பதை விட்டுவிட்டுக் காடுமேடாய்ப் பிதற்றுகிறீர்கள்.

---

20. "Aristoxenus என்ற கிரேக்க வித்வானையும் மற்ற ஆதி சாஸ்திரிகளையும் உங்களுடைய தமிழ் சாஸ்திரிகளையும் விட பரதரும் அவரைப் பின்பற்றினவராகிய சாரங்க தேவரும் உயர்ந்த பீடஸ்தானத்தில் வைக்கப்பட்டதற்குக் காரண மென்னவென்றால் அவர்கள் சொல்லுகிற 13 9, 4, 3, 2, 1 முதலிய சுருதிகளுக்கு இருக்கப்பட்ட சம்பந்தமும் அவர்கள் உபயோகிக்கும் $\frac{2}{3}$, $\frac{4}{5}$, $\frac{8}{9}$, $\frac{10}{9}$, $\frac{16}{15}$, $\frac{81}{80}$ முதலிய Harmonic இடைவெளிகளுமே."

கிரேக்க வித்வான்களையும் மற்றதேசத்து ஆதிசாஸ்திரிகளையும் உங்களுடைய தமிழ் சாஸ்திரிகளையும்விட பரதரும், சாரங்கதேவரும் உயர்ந்த பீடஸ்தானத்திலிருக்கிறார்களென்று சொல்லுகிறீர்கள். ஆ! ஆ! இது மிகவும் நன்றாயிருக்கிறது. எத்தனை நாளைக்கு நிற்கும்.

இவ்வுண்மையை உள்ளபடி அறிந்துகொள்வீர்களானால் சங்கீதத்தில் சுருதி விஷயமாகத் தாங்கள் நினைத்திருக்கும் தப்பான அபிப்பிராயம் முற்றிலும் நீங்கும் என்று நினைக்கிறேன். எனென்றால் பரதரும் சாரங்கதேவரும் சொன்ன 22 சுருதிகளையும் 13, 9, 4, 3, 2, 1 என்ற சுருதிகளையும் அவைகளுக்கு இருக்கப்பட்ட $\frac{2}{3}$, $\frac{4}{5}$, $\frac{8}{9}$, $\frac{10}{9}$, $\frac{16}{15}$, $\frac{81}{80}$ முதலிய ஹார்மானிக் இடைவெளிகளின் ஒற்றுமை என்கிறீர்கள். இந்த மூன்றும் ஒன்றற்கொன்று சம்பந்தமில்லாமலும் தற்காலம் அனுபோகத்திற்கு வராமலுமிருக்கிறவையென்று தங்களுக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் தாங்கள் இப்படிச் சொல்லமாட்டீர்கள். சமயம்போல் போதைகளுக்கு எதையாவது சொல்லிக் காரியம் சாதித்துக்கொள்கிறதென்பதை அறிவாளிகள் கண்டால் அருவருப்பார்களே.

தாங்கள் 'பரதரும், சாரங்கதேவரும் உயர்ந்த பீடத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்' என்று சொல்லுகிறீர்கள். ஆனால் அவ்வுயர்ந்த பீடம் 22 அடி உயர்ந்ததாகவும் அதில் வீற்றிருக்கும் பரதரையும் சாரங்கதேவரையும் கீழே தள்ளுவதும், பல்லவபடி 25 அடி நீள முள்ள கயிற்றில் உருவு சுருக்குப் போட்டுக் கழுத்தில் மாட்டி மேலே தூக்கிவைப்பதும், அவர்களுக்குச் சம்பந்த மில்லாத இந்துஸ்தான் சங்கீதம் என்னும் பாதாளத்தில் அவர்களைத் தகுதியாயிருக்கும் என்று தள்ளுவதும், பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது. இவை உண்மையோ அல்லவோ என்று அறிவாளிகள் விசாரிப்பார்கள். தாங்கள் Introduction to the study of Indian Music என்ற புத்தகத்தில் எழுதியிருக்கும் சில குறிப்புகளே இதை நன்கு விளக்குகின்றன.

Introduction to the study of Indian Music Page. 5.

The ancient believed that if the octave were divided into twenty two roughly equal parts all the notes in use could be obtained. They called these small intervals "Srutis" and spoke of intervals of two Srutis three Srutis and four Srutis and of raising or lowering a note by one Sruti or more. They believed that all the "Shuddh" and Vikrit notes had Srutis to themselves. The author concludes, from a study of Bharata's Natya Shastra and the Sangit Ratnakar of Sarangdev that their system in reality involved the use of 25 notes to the octave and not 22 as they imagined (See appendix E.)

ஒரு ஸ்தாயியானது ஏறக்குறைய 22 சமபாகங்களாகப் பிரிக்கப்பட்டால் அவற்றிலுள்ள எல்லா சுரங்களும் அகப்பட்டுப்போகும் என்று பூர்வத்தார் நம்பினார்கள். இந்தச் சிறிய இடைவெளிகளுக்கு அவர்கள் சுருதிகள் என்று பெயரிட்டார்கள். மேலும் இரண்டு சுருதி இடைவெளிகள் மூன்று அல்லது நாலு சுருதி இடைவெளிகள் உண்டென்றும் ஒரு சுவரத்தைக் கூட்டியாவது குறைத்தாவது பிடிக்கலாமென்றும் சொன்னார்கள். சுத்த சுரங்களும் விக்ருதி சுரங்களும் சுருதிகளாலானவை என்றும் நம்பினார்கள். இந்த நூலை எழுதினவர் பரத நாட்டிய சாஸ்திரத்தையும் சாரங்கதேவருடைய சங்கீத ரத்னாகரத்தையும் ஆராய்ந்த பிறகு சொல்வதென்னவென்றால் 'அவர்களுடைய முறையானது ஸ்தாயியில் அவர்கள் நியமத்தின்படி 22 அல்ல 25 சுரங்கள் உள்ளதாயிருக்கவேண்டும்' என்பதே.

மேற்கண்ட குறிப்பில் 'ஒரு ஸ்தாயியில் 22 சம பாகங்களான சுருதிகளாகப் பிரிக்கலாம் என்றும் எல்லாச் சுரங்களும் அதில் வந்துவிடுமென்றும் நம்பினார்களென்றும் ஒரு சுரத்தைக் கூட்டியாவது குறைத்தாவது பிடிக்கலாம் என்றும் சுத்த சுரங்களும் விக்ருதி சுரங்களும் சுருதிகளாலானவையென்று நம்பினார்க' ளென்றும் சொல்லுகிறீர்கள். 'நம்பினார்கள், நினைத்தார்கள்' என்று சொல்லும் வார்த்தை அவ்வளவு உறுதிபானவையல்ல. சாரங்கதேவர் எடுத்துக்கொண்ட சுரத்திலிருந்து படிப்படியாய் ஒன்றற்கொன்று தீவிரமாய் ஏறுவில் வேறு ஸ்தானமுண்டாகாமல் ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் கிடைக்கின்றனவென்று தெளிவாகச் சொல்லுகிறார். அப்படியிருக்க பரதநாட்டிய சாஸ்திரத்தையும் சாரங்க தேவருடைய சங்கீத ரத்னாகரத்தையும் நன்றாய் ஆராய்ந்து பார்த்த பின் ஒரு ஸ்தாயியில் 22 அல்ல 25 சுருதிகள் கிடைக்கின்றனவென்று சொல்லுகிறீர்கள். 'கொட்டிக் கொட்டி அளந்தாலும் குறுணி பதக்காகுமா'? ஒரு ஸ்தாயியில் 22 சுருதி உண்டென்று சொன்ன சாரங்கர் கிரகம் மாற்றும்பொழுது 4, 3, 2, 4, 4, 3, 2 என்று சொன்னார். சட்சமத்தின் 4 சுருதிகளில் இரண்டு சுருதிகள் தள்ளிக்கொண்டு கிரகம் மாற்றினால் இரண்டு சுருதியுள்ள நிஷாதமும் காந்தாரமும் ரிஷப தைவதத்தில் லயத்தையடைகின்றனவென்று சொன்னீரே. இவைகள் சம அளவுடையவையாயில்லாமற் போனால் எப்படி லயத்தையடையும்? சற்றேறக்குறைய 12, 4, 10, 3, 14, 3, 12, 3, 12, 5, 4, 13, 5, 19, 18, 6, 16, 5, 15, 6, 5, 18, 4, 24 போன்ற வித்தியாசமிருக்கும் வைபரேஷன்களைத் தங்கள் புத்தகம் 7-வது பக்கத்திலும் எட்டாவது பக்கத்திலும் சொல்லுகிறீர்கள். ஒன்றற்கொன்று இவ்வளவு வித்தியாசமான அளவுகளுள்ள சுரங்கள் எப்படிக் கிரகமாற்றவரும்? சட்சமத்தில் மூன்று சுருதி குறைத்துக்கொண்டுபோக மூன்று சுருதியுள்ள ரிஷப தைவதங்கள் சட்சம பஞ்சமத்தில் லயத்தையடைகின்றனவென்று சொல்லியிருக்கிறீரே. தாங்கள் சொல்லும் ஒழுங்கற்ற வரிசை எங்கே லயத்தை யடைகிறது? அது லயத்தை அடையும்படியான இடம் தங்கள் புஸ்தகத்தினால் தெரியவில்லை. இந்த ஒழுங்கீனமான சுருதி வரிசைகள் இந்துஸ்தான் சங்கீதத்திற்குரியவையென்று முடிசூட்டப்பார்க்கிறீர்கள். அதன் பலனை இனிமேல் அறிவீர்கள்.

இந்திய ஹார்மோனியம் என்று பெயர் வைத்துக்கொண்டு இந்துஸ்தான் சுரங்களுக்கு ஒத்துவராமல் சபையோரால் தள்ளப்பட்ட தங்கள் ஹார்மோனியம் போனபின் தங்கள் புத்தகத்தினுடைய கொள்கை நிற்குமா? திரும்ப ஒரு தரம் ஏன் எடுத்து நிறுத்தப் பார்க்கிறீர்கள்? தங்கள் புஸ்தகத்திற்கு முகவுரை யெழுதிய Dr. குமாரசாமி அவர்கள் 6-வது பக்கத்தின் கீழ்ப்பில் சொல்லியிருக்கும் இரண்டு வரிகளை இன்னதென்று தாங்கள் கவனிக்கவில்லையோ?

"The neglect of centuries as in so many analogous cases, has proved less disastrous than the renewed patronage of a few decades."

இதனால் 'அநேக நூற்றாண்டுகளாகப் பேணுவாரற்றுப் போனதினால் உண்டான கெடுதல்களைப் பார்க்கிலும் சங்கீதத்தை எடுத்து நிறுத்த வந்தவர்களால் அதற்கு அதிக இடையூறு உண்டாயிற்று' என்று சொல்லுகிறீரே. அது தங்களைப்பற்றிய தீர்க்கதரிசனம் என்று எண்ணுகிறேன். Dr. குமரசாமி அவர்களை நான் நேரில் அறிவேன். அவர்கள் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் பல தடவை சுற்றுப் பிரயாணம் செய்து முக்கியமான தமிழ் நாடுகளில் வேண்டிய காலம் தங்கியிருந்து இந்தியாவின் fine artsகளை வெகு சிரத்தையுடன் கவனித்திருந்ததினால் தென் தமிழ்நாட்டு சங்கீதம் சிறந்ததென்றும் மிக துட்பமான சுருதிகளுடையதென்றும் அறிந்திருந்தார்களென்று நான் பிரத்தியட்சமாய் அறிவேன். என் வீட்டிற்கும் வந்து சுருதிகளைப் பற்றி விசாரித்துப் போனார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் ஒழுங்கற்ற சுருதி முறையானது உண்மையான சங்கீதத்தைக் கெடுக்கக்கூடியதென்று அறிந்தே இப்படிச் சொன்னார்.

தாங்கள் இன்னும் கொஞ்சம் விசாரித்தால் சங்கீத ரத்னாகரத்தில் 25 சுருதிகள் உண்டென்று சொல்வதற்கு இடமேயில்லையென்றும் தங்கள் கருத்திற்கு இசைந்தவாறு கிரகம் மாற்றும்பொழுது மூன்று கிராமங்களிலும் மூன்று சுருதிகள் கிடைத்தனவென்று கண்டுகொள்வீர்கள். இப்படி ஒரு நாளும் உண்டாகக்கூடியதல்ல. பூர்வ தமிழ்மக்கள் கிரகம் மாற்றிச் சொல்லும் முறையில் மருதம், குறிஞ்சி, நெய்தல், பாலை என்று நாலு யாழ் வகைகள் சொல்லுகிறார்கள். அவைகளை சட்சகிராமம் மத்திமகிராமம், பஞ்சமகிராமம் தாரக்கிராமம் அல்லது காந்தாரகிராமம். இந்த நாலு கிராமங்களிலும் வரும் அலகு முறையும் சொல்லியிருக்கிறார்கள்.

அவைகளில் சட்சகிராமம் 4, 4, 3, 2, 4, 3, 2 மருதயாழ் என்றும்
மத்திமகிராமம் 2, 4, 3, 2, 4, 4, 3 குறிஞ்சியாழ் என்றும்
பஞ்சமகிராமம் 4, 3, 2, 4, 4, 3, 2 நெய்தல்யாழ் என்றும்
தாரக்கிராமம் 3, 2, 4, 3, 2, 4, 4 பாலையாழ் என்றும்

காண்கிறோம். இவைகளில் நெய்தல்யாழ் அலகுமுறையை (பஞ்சமகிராமத்தை) சாரங்கர் சொன்னார். மற்ற கிராமங்களைத் தேவலோகத்திற்கும் பாதாளலோகத்திற்கும் அனுப்பிவிட்டார்.

நாலு கிராமங்களிலுமிருந்து நவ்வாலு ஜாதிப் பண்கள் பிறக்கும் முறையும் தமிழ் மக்கள் சொன்னார்கள். அவைகள் ச-க-ப-நி என்ற சுரங்களில் முறையே, அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என்ற 16 சாதிப் பண்கள் பிறக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். ஒரு ஸ்தாயியை 12 சமபாகங்களாகப் பிரித்து 12 சுரத்தையும் ஒரு இராசியை 24 சமபாகங்களாகப் பிரித்து 24 சுருதிகளையும் சொல்லி அதில் பஞ்சம முறையால் வரும் இரண்டு சுரங்களில் ஒரு அலகு குறைத்து கமகமாய்ப்பாடுவது என்று சொல்வதை விளக்கிக்காட்ட இரண்டு அலகுள்ள அரைச் சுரத்தில் ஒரு அலகையும் நாலு சுருதியுள்ள முழுச்சுரத்தில் ஒரு அலகையும் குறைத்துப் பாட வேண்டுமென்று சொல்வதாக நாம் அறியவேண்டும்.

அவர்கள் சொல்லியவற்றில் சங்கராபரண சுரமே செம்பாலையாகச் சொல்லப் பட்டிருப்பதினால் நவ்வாலு அலகுள்ள விளரி கைக்கிளையில் ஒவ்வொரு அலகு குறைத்து மும்மூன்று அலகாகச் சொல்லப் படவேண்டுமென்று சொன்னதேயொழிய ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் வருகின்றனவென்று அவர்கள் சொல்லவில்லை. மத்திமத்தை சட்சமமாக வைத்துக்கொண்டு செல்லும் குறிஞ்சியாழில் இரண்டு அலகுள்ள மத்திமம் சட்சமமாகிறது. இரண்டிரண்டு சுருதி வீதம் அலகு மாற்றிக்கொண்டு போகும்பொழுது 12 பாலையுண்டாகின்றன என்று சொல்லுகிறார். ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகளாயிருக்குமானால் 11 தரம் தானே வரும்.

மேலும்

"ஆயத்துக் கீரா றறிநான்கு வட்டத்துக்
கேயுங்கோ ணத்துக் கிரட்டிப்புத்—தூயவிசை
நுண்மைக் கதிலிரட்டி நோனலகு மோர்நிலைக்கிங்
கெண்மூன்று கேள்விகொண் டெண்."

என்று இசைமரபென்னும் பழமையான தமிழ் இசை நூலில் தெளிவாகக் காணப்படுகிறது. இதோடு இவ்வலகின்படியே தற்காலம் பாடப்பட்டுவருகிறதென்ற முறைக்கு கணக்கும் சொல்லி 67 கீர்த்தனங்கள் திஷ்டாந்தம் காட்டியுமிருக்கிறேன். அவைகளை ஒவ்வொன்றாய் எடுத்துச் சொல்ல நான் விரும்பவில்லை. அறிவாளிகள் தெளிவாய்க் காண்பதற்கு அட்டவணையாகக் கொடுத்திருக்கிறேன். தாங்கள் திஷ்டாந்தமாகக் கொடுக்கும் இராகங்களுக்கும் 25 சுருதிகளுக்கும் மேலாக 96 சுருதிகளையும் அவைகள் வழங்கும் ஆயிரமாயிரமான கீர்த்தனங்களையும் நான் சொல்லக் கூடும். ஒரு ஸ்தாயியில் 22 என்று சொல்லி ஒருவரும் அறிந்து கொள்ளமுடியாத உயர்ந்த பீடமாகிய சங்கீதரத்னகரத்தில் உட்கார்ந்திருந்த அவரை 25 சுருதி களுண்டென்ற தங்கள் யம பாசத்தினால் கட்டிப் பாதாளத்துக்குத் தள்ளி அலக்கழிக்க வில்லையா? இன்னும் ஒரு முறை வேறு விதமாகவும் அலக்கழிக்கிறீர்கள்.

Introduction to the study of Indian Music Page 54.

Verse 47:— When Ni takes the first Sruti of Sa, it is Kaishik; and when it takes two, it is Kakali. These are the two Vikrits of Ni

Such are the twelve Vikrits. The total of Shuddh and Vikrit Svara as is nineteen.

Note.—The above classification of Vikrits is inexact and confused. It was probably in vogue among musicians, and Sarangdev took it as he found it. Out of the twelve Vikrits; seven, namely. Chyut Sa, Ma, And Pa, antara and Sadharan Ga. Kaishik and Kakali Ni are new, the rest are old Svaras with new names.

47-வது அடி:—நிஷாதம் சட்சமத்தின் முதல் சுருதியில் பேசும்போது அது கைசிகமாகும். இரண்டாவது சுருதியில் பேசும்போது அது காகலியாகும். இவைகளே நிஷாதத்தின் இரண்டு விக்ருதிகள்.

12 விக்ருதிகள் உண்டாவது இப்படியே. ஆக சுத்த விக்ருதி சுரங்கள் மொத்தம் 19.

கவனிப்பு. இந்த விதமாய் விக்ருதி சுரங்களைக் கணக்கிடுவது தப்புமாத்திரமல்ல. மனக்குழப்பத்தை உண்டுபண்ணுவதற்கும் இடமாயிருக்கிறது. அக்கால சங்கீத வித்வான்களுக்குள் இப்படிப்பட்ட உபயோகம் இருந்திருக்கவேண்டும். சாரங்கதேவர் தன் கண் கண்டதை எழுதி வைத்திருக்கிறார். 12 விக்ருதி சுரங்களில், சுத்த ச, ம, ப, அந்தர க, சாதாரண க, கைசிக காகலிநிஷாதங்களாகிய ஏழும் புதிது. மற்றவை பழைய சுரங்கள் தான். ஆனால் புது பேர்கள் அவைகளுக்குக் கொடுபட்டிருக்கின்றன.

சங்கீத ரத்னகரர் முறைப்படி சூத்திரம் சூத்திரமாய் அர்த்தம் செய்ததில் சுத்த சுரம் ஏழு என்றும் விக்ருதி சுரங்கள் 12 என்றும் ஆக சுரங்கள் 19 என்றும் சொல்லியிருக்கிறீர்கள். இப்படி அவர் சொன்னதற்குச் சரியான நியாயம் சொல்லத் தெரியாமல் அவர் கண்டுபிடித்த சுரங்கள் தப்புமாத்திர மல்ல மனக்குழப்பத்தையும் உண்டு பண்ண இடமாயிருக்கின்றனவென்ற வருத்தத்தினால் அல்லவோ ஒரு ஸ்தாயியில் 25 சுருதிகளைக் கண்டுபிடித்தீர்கள். இது அவர் பீடத்திலிருந்து அவரைத் தலைகீழாகத்தள்ளினதாகுமா ஏற்றிவைத்ததாகுமா? தமிழ்

நாட்டில் செம்பாலை என்று வழங்கி வந்த தீரசங்கராபரணத்தின் சுத்த சுரங்களும் ச-ப முறையாய் ஒரு இராசியில் கிடைக்கும் 12 சுரங்களும் 24 அலகுகளும் என்று சொன்ன முறையில் மயக்கம் கொண்டு சுரங்களின் அலகை 22 என்றும் சுத்த சுரங்கள் ஏழு என்றும் சுத்தவிக்ருதி சுரங்களாய் அமைந்த பன்னிரண்டை விக்ருதி சுரங்களென்றும் ஆக 12+7=19 என்றும் இவைகளை இருபத்திரண்டோடு சேர்க்க மிகவும் சங்கடப்பட்டிருக்கிறார்களென்றும் அறிகிறோம்

இதோடு இவ்விதக் குழப்பமான சுருதிமுறையை வைத்துக் கொண்டு இராகங்களும் இராக லட்சணங்களும், சுருதி லட்சணமும் சொல்லிக் குழம்புகிறார்கள். இது போதாமல் தாங்களும் அதோடு சேர்ந்து கொண்டு சங்கீதத்தை ஹார்மோனியம் மூலமாய்க் குழப்புகிறீர்கள். இதோடு விடாமல் சாரங்கதேவர் ச-ம-ப அந்தர க, சாதாரண க, கைசிக நி, காகலி நிஷாதம் என்ற ஏழுசுரங்களையும் புதிதாகச் சொன்னதாகவும் மற்றவைகள் பழைய சுரங்களாகவும் ஆனால் புதுப்பெயர்கள் அவைகளுக்குக் கொடுக்கப் பட்டிருப்பதாகவும் தாங்கள் சொல்லுகிறீர்கள். பூர்வ தமிழ் மக்கள் பழகி வந்த இராகங்களின் பெயர்களையும் சுரம், சுருதிகளின் பெயர்களையும் முற்றிலும் மாற்றிப் புதிதாக தான் எழுதினதாகப் பிறர் கொண்டாட எழுதி வைத்த சாஸ்திரம் நிற்குமா? சங்கீதத்திற்கு உதவி செய்ய வந்ததாக எண்ணும் புண்ணியவான்கள் செய்தவைகள் யாவையும் சுருதியைப்பற்றிச் சொல்லும் கருணைமிர்த சாகரத்தில் சொல்லியிருக்கிறேன். சங்கீத ரத்னகரர் 7, 12, 19, 22 என்ற இலக்கங்களைச் சொன்னதுபோலவே தங்களுக்குக் குருவாக முன் எழுதிய தேவால் அவர்களின் வார்த்தைகளைப் பார்ப்போம்.

The Hindu Musical Scale and the twenty-two Shrutees. Page 40

"Shrutees may be more than twenty-two also, this number being the one generally accepted, some Sanskrit authors recognising 42, some 66 and some saying that they are innumerable."

"சுருதிகள் 22-க்கும் அதிகமாயிருக்கலாம். ஆனால் 22 என்ற சாதாரணமாய் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. சில சமஸ்கிருத கிரந்தகர்த்தாக்கள் 42 சுருதிகள் என்றும் சிலர் 66 என்றும் இன்னும் சிலர் எண்ணிறந்த சுருதிகள் உண்டு என்றும் சொல்லுகிறார்கள்."

மேற் காட்டிய வரிகளில் 22 சுருதிகளுக்கு மேலாக இருக்கலாம் என்றும் சாதாரணமாய் 22 என்று ஒப்புக்கொள்ளப்படுகிறதென்றும் அதற்குமேல் 42 என்றும் 66 என்றும் சுருதிகள் எண்ணிறந்தவை என்றும் சொல்லுகிறார். இதனால் ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகளுண்டென்று சொன்ன சாரங்கதேவரை அவர் வீற்றிருக்கும் உன்னத பீடத்திலிருந்து தலைகீழாகத் தள்ளி நீங்கள் அலக்கழிக்கிறீர்களென்று தெளிவாகத் தெரிகிறது. மேலும் 22 சுருதிகளுக்கும் மேலாக அதிகமான சுருதிகளைத் தாங்கள் கண்டுபிடித்ததாக அடியில் வரும் வசனத்தால் தெளிவாகச் சொல்லுகிறீர்கள்.

The Hindu Musical scale and the twenty two Srutis, Introduction by E. Clements. Page 2.

"Mr. Krishnaji Mahadev Gokhale of Miraj who makes use of considerably more than 22 Srutis has kindly sung over to me 83 Ragas and Raginis and given me the names of the notes used in them."

"22 சுருதிகளுக்கு அதிகமான சுருதிகளை உபயோகிக்கும் மிராஜ் பட்டணத்து Krishnaji Mahadev Gokhale என்பவர் 83 ராகங்கள் ராகினிகளை எனக்குப் பாடிக் காண்பித்ததுமல்லாமல் அவைகளில் உபயோகப்படும் சுரங்களின் பேர்களையும் எனக்குக் கொடுத்தார்."

'மிராஜ் பட்டணத்து கிருஷ்ணஜி மகாதேவ கோக்கலே என்பவர் 83 இராகங்களைப் பாடிக்காட்டி அவைகளில் வழங்கும் சுரங்களுக்குப் பெயர்களையும் எனக்குக் கொடுத்தார்' என்று சொல்லுகிறீர்கள். இதில் 22 சுருதிகளுண்டென்று சங்கீத ரத்னகரர் அபிப்பிராயமும் கிரகம் மாற்றுகையில் 25 சுருதிகள் கண்டு பிடித்தேன் என்ற தங்கள் அபிப்பிராயமும் அடிபட்டுப் போகாமல் நிலைத்திருக்கின்றனவா? இவைகள் யாவற்றையும் முன்பின் ஆராய்ந்து பார்க்காமல் சங்கீத ரத்னகரரையும் பரதரையும் உயர்ந்த பீடத்தில் வைக்கிறீர்கள். உள் நுழைந்து பார்த்தால் தாங்களும் Mr. தேவாலும் அவர்கள் இருவருடைய கழுத்திலும் சுருக்கிட்டுத் தெருத் தெருவாய் இழுத்து அவமானம் செய்கிறீர்கள். அடியில் வரும் சில வரிகளைக்கவனித்தால் அதற்குமேலும் செய்கிறீர்களென்று தெளிவாய்த் தெரிகிறது.

Introduction to the study of Indian Music Page. 2.

The present work deals with Hindustani Music only; the author hopes to be able to show that a great part of it is directly traceable to the systems set forth in Bharata's Natya Shastra of about the fifth century A. D. and the Sangit Ratnakar of the thirteenth century. These are the most closely reasoned and critically worded of the early text books.

இந்த நூல் இந்துஸ்தான் சங்கீதத்தைப்பற்றி மாத்திரம் பேசுகிறது. அதில் சொல்லியிருக்கும் அநேக காரியங்கள் 5-ம் நூற்றாண்டிலுள்ள பரத நாட்டிய சாஸ்திரத்திலும், 13-ம் நூற்றாண்டிலுள்ள சங்கீத ரத்னகரத்திலும் சொல்லியிருக்கும் முறைகளினின்று எடுக்கப்பட்டவைகள்தான். ஆதி இரண்டு நூல்கள்தான் தகுந்த நியாயாதாரங்களுள்ளவையும் ஆராய்ச்சியுள்ளவைகளுமாய் இருக்கின்றன.

சங்கீத ரத்னகரமும் பரத சாஸ்திரமும் தகுந்த நியாய ஆதாரங்களும் ஆராய்ச்சியுமுள்ளவையென்று சொல்லுகிறீர்கள். இந்த நூல்களை ஆதாரமாகக் கொண்டே தாங்கள் இந்துஸ்தான் சங்கீதத்திற்கு நூல் எழுதுகிறதாகச் சொல்லுகிறீர்கள். அடுத்த வாக்கியத்தில் சங்கீத ரத்னகரத்தை ஆராய்ந்துபார்த்தால் அது இந்துஸ்தான் சங்கீதத்தைப்பற்றிச் சொல்லுகிறதென்று சொல்லுகிறீர்கள். இது எவ்வளவு தூரம் உண்மையா யிருக்குமென்று நாம் பார்க்க வேண்டும்.

Introduction to the study of Indian Music Page 2.

"It is reputed that Sarangdev, the author of the Sangit Ratnakar, was an inhabitant of Kashmir. From internal evidence one would conclude that the Music he describes is that of Hindustan. However, the pandits of southern India endeavour to appropriate him to themselves. The present writer hopes to show that it is only by doing violence to his theory that it can be applied to Karnatic Music."

"சங்கீத ரத்னகரம் எழுதின சாரங்கதேவர் காஷ்மீர் நகரவாசி என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். நூலினுள் ஆராய்ந்து பார்த்தால் அவர் சொல்லுகிறது இந்துஸ்தான் சங்கீதத்தைப் பற்றி. ஆனால் தென்னிந்திய சங்கீத பண்டிதர்கள் அவர் தங்களைச் சேர்ந்தவர் என்று சொல்லிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். இந்நூலை எழுதுகிறவர் என்ன சூபிக்கப்போகிறாரென்றால், அவருடைய கொள்கைக்கு முற்றும் விரோதமான ஒன்றைச்சொன்னால்தான் அது கர்நாடக சங்கீதத்திற்கு ஏற்றதாக முடியும்."

சாரங்கதேவர் தேவகிரி என்ற ஊரில் சிம்மணராஜன் காலத்தில் 1207—1249 வரையும் சமஸ்தான வித்வானாயிருந்ததாகவும் அக்காலத்தில் இந்நூல் எழுதப்பட்டதாகவும் தெரிகிறது. 1294க்கு மேல் விந்தியமலைக்குத் தென்பாகம் மகமதியர்கள் படையெடுத்து வந்தார்களையொழிய

அதற்குமுன் அங்கு வரவில்லை. அவர்கள் வந்தபின் தேவகிரிக்கு அரங்கபாத்தைச் சேர்ந்த தௌலதபாத் என்று பெயர் வழங்கிற்று. இதனால் இந்துஸ்தான் சங்கீதத்திற்கு என்று அந்நூல் எழுதப்பட்ட தல்லவென்று தெரிகிறது. அவர் இந்துஸ்தான் சங்கீதத்திற்கு எழுதியிருப்பா ரானால் இந்துஸ்தான் பாஷை பேசுவோர் வழங்கும் தெய்வங்களின் பெயர், முக்கியமான ராஜாக்களின் பெயர், அவர் காலத்திருந்த நவாப்பின் பெயர் முதலியவைகளனைத்தும் நூலில் சொல்லியிருப்பாரே. அவர் அப்படிச் சொல்லாமல் இந்துக்களுடைய தெய்வங்களையும் முனிவர்களையும் மற்றும் இந்துக்களுடைய பழக்க வழக்கங்களையுமே முற்றும் சொல்லியிருக் கிறார். அதோடு பூர்வ தமிழ்நாட்டில் வழங்கிவந்த பல இராகங்களில் தக்க என்பதை டக்க என்றும் நட்டராகம் என்பதை நாட்டை என்றும், சாதாரி என்பதை ரூபசாதாரி, சுத்த சாதாரி என்றும் வைரவம் என்பதை பைரவம் என்றும் குறிஞ்சி என்பதை குராஞ்சி என்றும் இந்தளம் என்பதை இந்தோளம் என்றும் தனஸி என்பதை தன்னியாசி என்றும் இன்னும் இவைபோல் பல பண்களின் பெயர்களையும் மாற்றி அவர் வழங்கியிருக்கிறார்.

இதோடு இராகசஞ்சாரம் சொல்வதை நாம் கவனிப்போமானால் தமிழ்நாட்டில் வழங்கிவந்த வைரவம், வராடி, தக்கராகம், இந்தளம் போன்ற இராகங்களுக்கு இலக்ஷணம் சொல்லுகிறார். அவ்விராகங்களின் சுரங்களும் சுருதிகளும் தமிழ் முறைப்படி சொல்லியிருப்பா ரானால் எல்லோருக்கும் உபயோகப்படக் கூடியதாயிருக்கும். இராகங்களின் அலகு முறையும் 22 சுருதியில் சொல்வதினால் அவைகளை முற்றிலும் அனுபோகத்திற்கு வராமல் தள்ளும்படி கேரிட்டது.

வேகரஞ்சி என்ற இராகத்திற்குச் சொல்லும் இலக்ஷணத்தையும் சுர சஞ்சாரத்தை யும் நாம் கவனிப்போமானால் அவைகள் மேகரஞ்சனி என்று தற்காலத்தில் வழங்கும் இராகத் திற்குரியவையா யிருக்கிறது. இதைத் தமிழ் மக்கள் மேக இராகம் என்று சொன்னார்கள். மேக இராகம் என்ற பூர்வ பெயரை மேகரஞ்சி என்றும், வேகரஞ்சி என்றும் மாற்றினதேயொழிய மற்றப்படி இராகசஞ்சாரம் மூன்றுக்கும் ஒன்றுகவே இருக்கிறதென்று காண்போம். ஆனால் 22 சுருதி முறையில் இவைகள் பாட முற்றிலும் கூடாதகாரியமென்று தெரிகிறது.

தமிழ் நாட்டில் வழங்கிவந்த பண்களையும் இராகங்களையும் சொல்லவந்தவர் தமிழ் மக்கள் வழங்கி வந்த 24 சுருதிகள் இன்னவையென்று அறிந்துகொள்ளாமல் ஒரு ஸ்தாயியில் 22 என்று மேளம் கட்டிச் சொன்னதினாலே முற்றிலும் அவர் நூல் உபயோகப்படாமல் போய் விட்டது. தென்னிந்திய சங்கீத முறைப்படி அந்நூல் உபயோகப்படவேண்டுமானால் காந்தாரக் கிராமத்தைத் தேடிப்போயிருக்கும் சங்கீத ரத்னகரரை வரவழைத்து, 24 சுருதி முறைப்படி, தாங்கள் சொல்லும் இலக்ஷணங்களைத் திருத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டால் திருந்து மேயொழிய வேறு எவ்விதத்திலும் அவர் நூல் அனுபோகத்திற்கு வராது. இந்துஸ்தான் சங்கீதம் படிப்போர்களுக்கு அவர் எழுதவுமில்லை. அவர் முறைப்படி இந்துஸ்தான் சங்கீத மிருக்கவுமில்லை. இந்துஸ்தான் சங்கீதம் படிப்போர் இதில் மயங்கவில்லை என்று இந்திய ஆர் மோனியத்தைத் தள்ளினதினால் அறிந்து சந்தோஷப் படுகிறேன். சங்கீத ரத்னகரரையும் பர தரையும் சரியான நியாய ஆதாரத்தோடு உயர்ந்த பீடத்தில் வைத்த தாங்கள் அவர்களை அவ மானப் படுத்துகிறீர்களென்று இதன்பின் வரும் தங்கள் வசனத்தால் தெளிவாய்க் காண்கிறோம்.

Introduction to the study of Indian Music, Introduction, Page XIII.

"Modern text books may appear learned to the uninitiated; the historian will, however, frankly admit that, since the days of the Sangit Ratnakar, Indian Musical systems have fallen into such confusion that no one has been able to reconcile the teaching of that authoritative treatise with latter works on the subject or with the practice or theory of modern musicians."

"சூட்சுமம் தெரியாதவர்களுக்குத் தற்கால சங்கீத நூல்கள் வெகு கல்வித்திறமை யுள்ளவைகளாய்க் காணப்படலாம். ஆனல் சரித்திரக்காரன் எதை வெளிப்படையாய் ஒப்புக் கொள்ளுவானென்றல், சங்கீத ரத்னகரம் தோன்றிய நாள் முதல் இந்திய சங்கீத முறைகள் சதா சந்தேகத்துக்கு இடமாய்விட்டது. மூல நூலென்றும் அதிகாரநூல் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கீத ரத்னகரத்துக்கும் பிற்பின நூல்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை யென்பது மாத்திரமல்ல, அந்த நூலுக்கும் தற்கால சாஸ்திர அனுபோகங் களுக்குங்கூட கொஞ்சமாகிலும் சம்பந்தமே யில்லை."

'சங்கீத ரத்னகரம் தோன்றிய நாள் முதல் இந்திய சங்கீத முறைகள் சதா சந்தேகத்திற் கிடமாயிற்று' என்று எழுதுகிறீர்கள். இது உண்மையே. ஒரு ஸ்தாயியில் 12 சுரங்கள் அமைத்து இருபத்து நான்கும் நாற்பத் தெட்டும் தொண்ணூற்றாறுமான சுருதிகள் வழங்கிவந்த தமிழ் முறைக்கும் ஒரு ஸ்தாயியில் 22 என்று சொன்ன சங்கீத ரத்னகரர் முறைக் கும் எப்படிப் பொருந்தும்? பூர்வ தமிழ் முறைப்படியே தற்கால அனுபோக முறையிருக்கிற தென்று கண்ட பாரிஜாதக்காரர், வேங்கடமகி போன்றவர்கள் சங்கீத ரத்னகரத்தால் அனு போகத்திலிருக்கும் சங்கீதத்திற்கு ஆபத்து வரும் என்று கண்டு பூர்வம் தமிழ்மக்கள் பாடிக் கொண்டிருந்த முறையிலும் யாழிலும் கண்டபடி 12 சுரங்களையே ஸ்தாபித்தார்கள். என்றாலும் நுட்ப சுரங்கள் இன்னவையென்று கண்டுகொள்ளமுடியாமல் போனர்கள்.

12 சுரங்களோடு வரும் நுட்ப சுரங்களை துவாவிம்சதி சுருதியில் சேர்த்து விடலா மென்று தென்னிந்தியாவிலுள்ள சிலர் மிகவும் பிரயாசப் பட்டார்கள். என்றாலும் அனுபோகத் திற்குக் காட்டமுடியாமல் வெறும் வாய்ப்பேச்சோடு நின்றுவிட்டார்கள். துவாவிம்சதி சுருதி யென்று சொன்ன பூர்வ நூல்களை ஸ்தாபிப்பதற்குத் தங்கள் பூணூலைப்பிடித்துச் சத்தியம் செய்துகொண்டார்கள். சத்தியம் பண்ணிச் சாதிப்பவை முற்றிலும் பொய்யாயிருக்குமோ வென்று சந்தேகிக்க இடங்கொடுக்கிறதே. ஆனல் தாங்கள் உள்ளது உள்ளபடியே பரதம் சங்கீத ரத்னகரம என்ற நூல்களுக்கும் அதற்குப் பிற்பின நூல்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று சொல்லுகிறீர்கள். அதோடு அனுபோகத்திற்கும் கொஞ்சமாவது சம்பந்தமில்லை என்று சொல்லுகிறீர்கள். தாங்களை சொல்லிவிட்டு அவர் நூலை ஆதாரமாகக் கொண்டு உண்டாக்கிய ஆர்மோனியமும் அனுபோகத்திற்கு ஒத்துவராமல் தள்ளப்பட்டதே. இது உண்மையே. இவ் வுண்மையைப் பிரத்யட்சமாய்க் கண்ட தாங்கள் அவரை உயர்ந்த பீடத்தில் வைத்து தாழத் தள்ளுகிறீர்கள்.

அனுபோகத்திற்கு வராத ஒரு சாஸ்திரத்தை உலகத்தில் எதற்கு நாம் ஒப்பிடுவது? விஷமும் கூட ஒரு மருந்திற்கு உதவுகிறதே. அப்படிக்கூட இல்லையே. போராட்டத்திற்கென்று ஒரு சாஸ்திரம் எழுதிவைப்பார்களா? ஒரு ஸ்தாயியில் சுருதிகள் இருபத்துநான்காய் வைத்துச் சாரங்கர் எழுதியிருப்பாரானல் பூர்வ தமிழ் நூல் எழுதிய மகான்களுக்குப் பின் இவரும் ஒருவராக எண்ணப்படுவார் என்பதற்குச் சந்தேகமில்லை. 22 எப்படி அனுபோகத்திலில்லாதிருக்

கிறதோ அப்படியே தாங்கள் கண்டுபிடித்த இருபத்தைந்து மிருக்கிறது. இதோடு இந்தியாவில் வீணை வாசிப்பவர்களாலும் வாய்ப்பாட்டுப் பாடுகிற வித்வான்களாலும் சங்கீத ரத்னகரம் தள்ளப்படுகிறதென்று அடியில் கண்ட வசனத்தில் சொல்லுகிறீர்கள்.

Introduction to the study of Indian music Page 82.

"Nowadays among the practical musicians of western India, the Sangit Ratnakar is looked upon as belonging to a bygone age although no one is able to say what it is which makes its theories inapplicable to modern practice. Professional musicians have constructed their own systems; needless to say, they differ widely one from another."

"தற்காலம் மேல் இந்தியாவின் வீணை வாய்ப்பாட்டு வித்வான்கள் சங்கீத ரத்னகரம் என்ற தூல உபயோகத்திலில்லாத அழிந்து போன பழைய நூல் என்று நினைக்கிறார்கள். ஆனால் என் அதில் சொல்லப் பட்டிருக்கிற முறைக்கும் தற்கால அனுபோகத்திற்கும் கிஞ்சித்தேனும் சம்பந்தமில்லை யென்பதற்குக் காரணம் சொல்லக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். சங்கீதத்தையே தொழிலாகக்கொண்ட அநேக வித்வான்கள் தங்களுக்குத் தோன்றிய முறைகளே உண்டாக்கி யிருக்கிறார்கள். ஆகையால் அவை ஒன்றற்கொன்று அனந்த வித்தியாசமுள்ளவைகளா யிருக்கின்றன."

மேற்கண்ட வசனத்தில் 'சங்கீத ரத்னகரம் என்ற நூலே உபயோகத்திலில்லாத அழிந்து போன பழைய நூல் என்று நினைக்கிறார்கள்' என்று சொல்லுகிறீர்கள். சங்கீத சாஸ்திரங்கள் யாவற்றிலும் வீணையை உயர்வாகச்சொல்லப்பட்டிருக்கிறது. மனுட சாரீரத்தால் சொல்லக்கூடிய இனிய நுட்பமான சுரங்களையும் வீணையில் சொல்லலாம். மற்ற வாத்தியங்களில் சொல்லமுடியாத நெடில் குறில் ஒற்றுக்களும் இன்னும் நினைக்கக்கூடிய இனிய ஓசைகளும் வீணையில் சொல்லப் படக்கூடியதாயிருப்பதனால் அதை உயிருள்ள வாத்தியமென்றும் தேவவாத்தியம் என்றும் சொன்னார்கள். மனிதனே தேவவாத்தியமென்றும் அல்லது காத்திர வீணையென்றும் மனுட சரீரத்தை ஒத்திருக்கும் செங்கோட்டியாழை தாரு வீணையென்றும் சாமவேதத்தின் துவக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே. இப்படி மேன்மை பொருந்திய வீணை வாசிக்கும் வைணீகர்களும் பாடகர்களும் சங்கீத ரத்னகரம் அனுபோகத்திற்கு வராமல் அழிந்துபோன பழைய நூல் என்று சொல்வதை முற்றிலும் கவனியாமல் தாங்கள் சங்கீத ரத்னகார் முறையை எடுத்து நிறுத்துவதாகச் சொல்லுகிறீர்கள். பூர்வ தமிழ் மக்கள் யாழ் என்று வழங்கி வந்த வாத்தியத்தை வீணை யென்று நற்காலத்தவர் வழங்கி வருகிறார்கள்.

சங்கீத ரத்னகார் முறைக்கும் தற்கால அனுபோகத்திற்கும் கிஞ்சித்தேனும் சம்பந்தமில்லை என்றுசொல்வதே போதாதா? அதற்கு மேல் காரணமும் வேண்டுமா? ஒரு ஸ்தாயியை 24 சமபாகங்களாய்ப் பிரிப்பதற்கும் 22 ஆய்ப் பிரிப்பதற்கும் வித்தியாசமில்லையா? இருபத்து நான்காய்ப் பிரிக்கும்பொழுது பஞ்சமம் 700 சென்ட்ஸ்களுடையதாகிறது. 22 சுருதிகளாய்ப் பிரிக்கும்பொழுது 709 சென்ட்ஸ்கள் வருகின்றன. ½ முறையாய் 702 சென்ட்ஸ்களாகின்றன. சமமாய்ப் பிரித்துக்கிரகம் மாற்றிப்பாடுவதற்கும் நுட்பசுரங்கள் கணித்துப் பாடுவதற்கும் அனுகூலமாக அனுபோகத்திலிருக்கும் முறையை மனப்பாடம் செய்து பாடிக்கொண்டிருக்கும் வித்வான்கள் அறியாமல் போனதினால் காரணஞ் சொல்லக்கூடவில்லை. காரணம்சொல்லாததனால் கற்கண்டு கல்லாகிவிடுமா?

ஒரு பொருள் நலமையை விளக்குமானால் நல்லதென்றும் கெடுதியை விளக்குமானால் கெட்ட பொருள் என்றும் அனுபோகத்தினாலேயே உலகத்திற்கு வெளிப்படையாய்த் தெரிந்திருக்கிறது. ஆனால் அவைகளின் தலையில் நல்லது கெட்டது என்று எழுதியிருக்கிறதா?

கற்கண்டு என்று பெயர் சொல்லாமல் போனால் அது தப்பிதமா? தாங்கள் கற்கண்டு என்று சொல்லி பாஷாணத்தை வாயில் போடுகிறது போலிருக்கிறது. இந்திய மியூசிக் கான்பரென்ஸில் தாங்கள் ஒரு பாஷாணத்தைப் பகிர்ந்து கொடுக்க வந்ததாகக் கண்டோம். அது முற்றிலும் கூடாதென்று தங்கள் கையிலிருந்து அதைப் பிடுங்கி எறிந்தோம். ஒருவரும் சாப்பிடக் கூடாதென்று விலக்கின நஞ்சை பழையபடி கையில் எடுக்கிறதாக அறிந்து வருத்தப்படுகிறேன். இன்னும் இந்தியன் ஆர்மோனியம்என்ற நஞ்சை கையாடுவீர்களானால் உங்கள் பெயரை முற்றிலும் கெடுத்து விடுமேயென்று அனுதாபப் படுகிறேன்.

அன்புள்ள துரையே! ஒவ்வொன்றாய்க் கவனித்துப் பாருங்கள். 22 சுருதியென்றும் 25 சுருதி யென்றும் சாதிக்கும் தங்களுக்காகவும் என் சொந்த ஜனங்களுக்காகவும் இவைகளை எழுதுகிறேன். தாங்கள் கொஞ்சம் கவனித் தீர்களானால் நான் உங்களுக்குக்கொடுத்த பரோடா கான்பரென்ஸ் வியாசங்களில் கண்டபடி Geometrical Progression இல் சுரம் சுருதிகள் வர வேண்டுமென்பது விளங்கும். தாங்கள் சங்கீத ரத்னகரரையும் பரதரையும் ஏற்றி இறக்குகிறதாகக் காண்கிறேன். அவர்களை உன்னதமான ஸ்தானத்தில் தாங்கள் வைக்கவில்லை. அவர்கள் தமிழ் நூலில் சொல்லிய மேலான கருத்தை அறிந்துகொள்ளாமல் தவறிப்போனவர்கள். தங்களால் கொண்டாடப் படுகிறார்கள். வடநாட்டில் வழங்கும் இந்துஸ்தான் சங்கீதத்திற்காக அவர் நூல் எழுதவில்லை. இவைகள் யாவற்றிற்கும் தகுந்த காரணம் காட்டித் தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கி வரும் சுருதிகளைப்பற்றிக் கருணாமிர்த சாகரம் முதல் புத்தகத்தில் இரண்டாம் பாகத்தில் சொல்லியிருக்கிறேன்.

தமிழ் மக்களின் பூர்வீகத்திலும் அவர்களின் நாகரீகத் தேர்ச்சியிலும் சங்கீதத்தில் அவர்கள் அடைந்த பயிற்சியிலும் மற்ற எல்லாத் தேசத்தவருக்கும் முந்தினவரென்று அங்கே சொல்லியிருக்கிறேன். நன்றாய்க் கவனிப்பீர்களானால் தமிழ் மக்களின் சங்கீத முறை முற்றிலும் Equal Temperament என்று தாங்கள் ஏளனம் செய்யும் முறை அன்று. அங்கே போய்ச் சாடி மற்றொரு இடத்தில் விழுந்து எழுந்து வழிவகை தோன்றாமல் 'ஆற்றில் போகும் கரடியைக் கம்பளி மூட்டையென்று கட்டிப்பிடித்துக்கொண்டான்' என்பதுபோலத் தமிழ்மக்கள் தங்களால் தூஷிக்கப்படக்கூடிய பேதைகளுமல்ல. அவ் வுத்தமமான முறையை எழுதி வைத்தவர்களைத் தாங்கள் பரிகாசம் செய்வதைப்பார்க்கிலும் தமிழ்மக்கள் யாவரையும் பரிகாசம் செய்வது இலேசாயிருக்கும்.

சுருதியைப்பற்றிய சில முக்கிய குறிப்புகள்.

பரதரும் சாரங்கதேவரும் எழுதிய சுருதிமுறையில் 13, 9, 4, 3, 2, 1 என்பதாகச் சொல்லும் கணக்கே அவர்களை உயர்ந்த பீடத்தில் வைக்கிறதற்குக் காரணம் என்று தாங்கள் சொல்லுகிறீர்கள். இந்த அளவுகள் அவர்கள் சொல்லாதிருப்பார்களானால் மிக நன்றாயிருக்கும். இவ்வளவைக்கொண்டு ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் சொல்லும்பொழுது அவர் குழம்புகிற குழப்பத்தையும் சுருதிகளின் பெயர்களையும் அதன் பின் சொல்லப்படும் 19 சுருதிகளுக்கு விபரமும் இராகங்களின் சஞ்சாரத்திற்குச் சொல்லும் லக்ஷணங்களும் இன்னும் ஒருவராலும் அவிழ்க்கப்படாத முடிச்சுப்போல் மாத்திரமல்ல கிட்டி நெருங்கியவர்களை இழுத்துப் பாதாளத்தில் தள்ளும் ஒரு நீர்ச்சுழலைப்போலவுமிருக்கிறது. இதில் அகப்பட்ட எவராவது கரை கண்டு கண்டவைகளைச் சொல்ல இதுவரையும் முன்வரவில்லை. தாங்களோ அவர் நூலை உள் துழைந்துபார்த்து வெளிவந்திருக்கிறீர்கள். ஆனால் கண்டவைகளைச் சொல்லாமல்

தாங்கள் கலங்கின கலக்கத்தின் பயனாக 25 சுருதி என்று மற்றவர்களுக்குச் சொல்லுகிறீர்கள். அவர் அர்த்தஞ் செய்தபடி தாங்கள் அர்த்தம் செய்தும் அதன் கருத்து இன்னதென்று கண்டு கொள்ளாமல் போனீர்கள்.

1. இப்போது சுருதிகளை அறியும் விஷயத்தில் சாரங்கர் என்ன சொல்லுகிறார் அதற்குப் பதில் தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள் அதன்பின் அதற்கு விரோதமாய் என்ன செய்கிறீர்களென்று நாம் கவனிக்கவேண்டும். சாரங்கர் "22 தந்திகள் போட்ட வீணையில் முதல் தந்தியில் உன்னல் சொல்லக்கூடிய ஆரம்ப நாதத்தை வை. அதன்பின் இன்னும் கொஞ்சம் கூடுதலாக வை. இப்படியே நாதத்தைக் கூட்டிக்கொண்டுபோக படிப்படியாய் ஒன்றற்கொன்று தீவிரமாய் நடுவில் வேறு நாதமுண்டாகாமல் 22 சுருதியுடன் ஒரு ஸ்தாயி அமைகிறது" என்றுசொன்னார். இவர் முறை சம அளவான ஓசையுடையதாயிருக்கவேண்டுமென்று தெளிவாய்த் தெரிகிறது. அவர் அப்படிச் சொல்லியிருப்பதினால் Geometrical Progression படியே 22 சுருதிகள் வரவேண்டும்.

2. தாங்கள் ஒரு ஸ்தாயியில் வரும் சுரங்கள் சுப ஒற்றுமையுடையவைகளாயிருக்கவேண்டும். அப்படியானால் முற்றிலும் சரியான ஒற்றுமையுள்ள சுரங்களால் ஆனவைகளாயிருக்கும். ஒரு ஸ்தாயியில் சுரங்கள் சம அளவுடையதாயிருக்கவேண்டுமென்று ஏணியைத் திஷ்டாந்தப் படுத்திக் காட்டியிருக்கிறீர்கள். இம்முறையில் ஒரு ஸ்தாயியிலுள்ள சுரங்கள் சமமான ஓசை அளவுடையதாயிருக்கவேண்டுமென்று சொல்லுகிறீர்கள். அப்படிச் செய்வதற்கு Geometrical Progression முறைப்படியே அவைகளிருக்கவேண்டும். தங்கள் அபிப்பிராயத்தின்படியே தங்களுக்குச் செய்யத் தெரியாமல் போய்விட்டது. நானே செய்து காட்டியிருக்கிறேன். பூர்வ தமிழ்மக்கள் இற்றைக்கு 2,000 வருடங்களுக்கு முன் பல்லாயிர வருடங்களாக இம்முறையையே பழகிவந்திருக்கிறார்கள்.

3. தாங்கள் சுருதிகள் சம அளவுடையவைகளாயிருக்கவேண்டுமென்று தங்கள் புத்தகத்தில் பல தடவை சொல்லியும் மற்றவர்கள் தவறிப்போகாமல் எச்சரித்தும் ஒற்றுமையில்லாத சுரங்களைக்கண்டு பிடிக்கும் குழியில் விழுகிறீர்கள். தங்களைப்போல் இன்னும் அநேகம் பேர் விழுந்துமிருக்கிறார்கள். தாங்கள் புத்தகத்தில் ஏழாம் எட்டாம் பக்கங்களில் கொடுத்திருக்கும் அட்டவணையையும் Mr. Deval எழுதிய புத்தகத்தின் D. அட்டவணையையும் கவனித்தால் சம அளவுள்ளதென்று தாங்கள் சொல்லும் சுரங்கள் வேறு ஒழுங்கற்ற ஓசைகளுடைய சுரங்கள் வேறு என்று சொல்லுகிறதாகக் காண்கிறேன். தாங்கள் சொல்லும் சுரங்களே ஒழுங்கற்றவை. நான் என்ன சொல்லியும் தங்கள் பிடிவாதத்தை விடமாட்டேன் என்று சாதித்தால் நான் என்ன செய்வேன். அன்புள்ள துரையே! தாங்கள் சமீபத்திலிருந்தால் வெகு சிக்கிரத்தில் சம மான அளவுடைய சுரங்களின் கானத்தின் பெருமையையும் தற்காலம் கர்நாடக சங்கீதத்தின் அனுபவத்தையும் இம்முறையே பூர்வ தமிழ்மக்கள் வழங்கி வந்திருக்கிறார்கள் என்ற மேற்கோளையும் நான் காட்டித் தெளிய வைத்திருப்பேன். தாங்கள் சங்கீத ரத்னகரருடைய சுப, சம முறைகளைப்பற்றி 13, 9 சுருதிகளுள்ளவையென்று அடியில் வரும் வாக்கியத்தில் சொல்லுகிறீர்கள்.

Introduction to the study of Indian Music Page 55.

"*Verse 51:*— Samvadi Svaras are those between which are eight or twelve Srutis."

"தங்களுக்கிடையே எட்டு அல்லது 12 சுரங்களுள்ளவை சம்வாதிப் பொருத்த சுரங்களாம்."

Introduction to the study of Indian Music Page 56.

"It will be noted that to have eight or twelve Srutis between, means intervals of nine and thirteen Srutis respectively."

"இடையில் 8 அல்லது 12 சுருதிகளுடையவையென்று சொல்லும்போது 9 அல்லது 13 இடை வெளிகளுள்ள சுருதிகள் என்று தாற்பரியம்."

4. சங்கீத ரத்னாகரர் சொல்லுகிறபடியே எந்த இரண்டு சுருதிகளுக்கு கடவிலாவது 8 அல்லது 12 சுருதிகள் வருமாஞல் அவைகள் சம்வாதி பொருத்தமுள்ள சுரங்கள் என்றும் 8, 12 என்று சொல்லும்பொழுது தொட்டசுரத்திற்கு 9, 13-வது சுருதிகள் வாதி சம்வாதியாக நிற்கும் என்றும் அர்த்தம் செய்திருக்கிறீர்கள். அவை முற்றிலும் சரியே. ஆனால் அவைகள் அளவிலும் பொருந்தும் முறையிலும் சரிதானு என்று உள் நுழைந்து கவனிக்கவில்லை. இந்த இடத்தைத் தாங்கள் கவனித்திருப்பீர்களானால் இந்த விபரீதத்திற்கு உட்பட்டிருக்க மாட்டீர்கள். எப்படி யென்றால் சங்கீத ரத்னாகரர் சொல்லுகிறபடி ஒரு ஸ்தாயியை Geometrical Progression படி 22 சம இடைவெளிகளாய்ப் பிரித்திருப்பீர்கள். அப்போது 13-வது சுருதியாகிய ப 709.09 சென்ட்ஸ்களாக வரும். (கருணாமிர்தசாகரம் 478-ஆம் பக்கம் 44-ஆவது அட்டவணை 13-ஆம் வரி.) ச-ப முறையில் கண்டு பிடித்துக்கொண்டு போகும் பொழுது 700 சென்ட்ஸ்களாக வரும். (கருணாமிர்தசாகரம் 843-ஆம் பக்கம் 14-ஆம் வரி.)

709 சென்ட்ஸ்கள் 32 அங்குல நீளமுள்ள தந்தியில் 21. 245 அங்குலத்தில் வரும். (கருணாமிர்தசாகரம் 478-ஆம் பக்கம் 44-ஆவது அட்டவணை 13-ஆம் வரி.) ஆனால் 700 சென்ட்ஸ்கள் 32 அங்குல நீளமுள்ள தந்தியில் 21. 357 அங்குலமாக வரும். (கருணாமிர்தசாகரம் 843ஆம் பக்கம் 14ஆம் வரி.) இவ்விரண்டிற்குமுள்ள பேதம் ·112 ஆகிறது. இவ்வளவு பேதத்தில் வரும் சுரங்கள் எப்படி ஒற்றுமைப்படும்? இவ்வளவு வித்தியாசமான பஞ்சமத்தை வைத்துக்கொண்டு 22 சுருதி கண்டு பிடித்தால் அவை முற்றிலும் விரோதமாகுமே. இந்துஸ்தான் நாட்டில் இந்தப் பஞ்சமம் அணுப் பிரமாணமேனும் குறையாமல் கர்நாடக சுரங்கள் போலவே பாடப்படுகிறது என்று காண்கிறேன்.

5. என்னுடைய இரண்டாவது வியாசத்தில் நான் கொடுத்திருக்கும் அட்டவணையின்படி வீணை செய்து அளந்து மெட்டுவைத்து அதில் தற்காலம் வடநாட்டில் பாடப்படும் சுரங்களை அனுபோக பூர்வமாய்ப் பாடிக் கொண்டிருக்கும் முறைப்படியே கவனித்தால் 13-ஆவது சுருதியாகிய பஞ்சமத்தின் பேதம் உங்களுக்குத் தெரியும். உலகம் எங்கும் படிக்கப்பட்டு வரும் பஞ்சமம் உங்கள் அனுபோகத்தில் கண்டு கொண்டபின், பஞ்சமம் 13-ஆவது சுருதியென்று சாரங்கர் சொல்லும் முறை சரியானதல்லவென்று மிகத்தெளிவாகத் தெரிந்து கொள்வீர்கள்.

பூர்வ தமிழ் மக்கள் முறைப்படி ஆயப்பாலை முறையில் ச-ப, ச-ப வாக 12 சுரங்கள் வருகின்றன. Geometrical Progression முறைப்படி பஞ்சமத்திற்கு 700 சென்ட்ஸ்வருகிறது. இதற்குக் கணக்குச் சொல்லாமல் நுட்பமான சுரஞானத்தைக் கொண்டு ச-ப, ச-ப வாக ஒரு ஸ்தாயியில் 12 சுரங்கள் அமைத்த மேற்கிசையாரின் பஞ்சமம் 700 சென்ட்ஸ்களாக வருகிறது. பஞ்சமம் 700 சென்ட்ஸ்களாக இருக்கவேண்டுமென்று சொன்ன Mozart, Beethoven ஐப் பார்க்கிலும் தங்கள் ஆராய்ச்சியும் அனுபோகமும் பெரிதென்று

ஒருவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தாங்கள் எடுத்துக்கொண்ட ஃ க்கு சற்றேறக்குறைய 702 சென்ட்ஸ்கள் வருகின்றன. இது 709 சென்ட்ஸ்களுக்கு எப்படிப் பொருந்தும்.? முற்றிலும் பொருந்தாத ஒரு அளவென்று தாங்கள் கவனிக்க வேண்டும்.

6. மேலும் ச-ப, ப-ரீ, ரி-த, த-க, க-நி, நி-ம, ம-ரி, ரி-த, த-க, க-நி, நி-ம, ம-ச, என்று பொருத்த சுரங்கள் வருகிறதாகப் பூர்வ தமிழ் நூல்களில் சொல்லப் பட்டிருக்கிறது. ஒருஸ்தாயியில் 22 சுருதிகள் என்ற முறையிலும் இப்பொருத்தமே சொல்லப் படுகிறது. அடியில் வரும் அட்டவணையில் தெளிவாய்க் காண்போம்.

சாரங்கதேவர் ச-ப முறையாய் 13 சுருதிகள் வரும் என்று சொல்வது தவறுதல் என்று காட்டும் அட்டவணை.

1	இளியுள்	துத்தம்	தோன்றும்	4 3 ப - ரீ	ப	3 த	2 நி	4 ச	3 ரி	12	*
2	துத்தத்துள்	விளரி	,,	3 3 ரி - த	ரி	2 க	4 ம	4 ப	3 த	13	
3	விளரியுள்	கைக்கிளை	,,	3 2 த - க	த	2 நி	4 ச	3 ரி	2 க	11	*
4	கைக்கிளையுள்	தாரம்	,,	2 2 க - நி	க	4 ம	4 ப	3 த	2 நி	13	
5	தாரத்துள்	உழை	,,	2 2 நி - ம	நி	4 ச	3 ரி	2 க	4 ம	13	
6	உழையுள்	குரல்	,,	2 4 ம - ச	ம	4 ப	3 த	2 நி	4 ச	13	
7	குரலுள்	இளி	,,	4 4 ச - ப	ச	3 ரி	2 க	4 ம	4 ப	13	

சங்கீத ரத்னகார் சொல்லும் அலகு முறையில் ஏழாவது வரியிலுள்ள ச-ப,வுக்கு 13 அலகுகள் வருகின்றன. அப்படியே 2, 4, 5, 6 என்ற வரிகளும் 13 ஆகவே வருகின்றன. ஆனால் முதல் வரியிலுள்ள ப-ரீ 12 அலகாகவும் 3-ஆவது வரியிலுள்ள த-க 11 அலகாகவும் வருகிறதே. இவைகள் எப்படிப் பொருந்தும்? தாங்கள் கொஞ்சம் கவனிப்பீர்களானால் ச-ப வின் பொருத்தம் கிடைக்காத ஒரு முறையைச் சொன்னார் என்று தெளிவாகத் காண்பீர்கள். இன்னும் இரண்டு சுருதிகள் சேர்ந்தால் மாத்திரம் ச-ப பொருந்துமென்று தெளிவாகத் தெரிகிறது. மும்மூன்றாக வரும் இரண்டு சுரங்களில் ஒவ்வொன்று சேர்த்துச் சொல்லவேண்டும்.

இப்படியே ஒன்பது சுருதியுடைய ச-ம பொருத்தமும் ஒன்பது, ஒன்பதாய் வரவேண்டியதற்குப் பதில் பத்தும் பதினொன்றுமாக வருகிறது. இவைகளைக் கவனிக்காமல் 22 சுருதியை விழுங்கி 25 சுருதியை ஏப்பமிடுகிறீர்கள். பூர்வ தமிழ்மக்கள் வழங்கிவந்த 24 சுருதிகளில் இரண்டு அலகு குறைத்துக் கமகமாய்ப் பாடவேண்டுமென்ற சூட்சுமத்தை அறியாமல் பரதரையும் சங்கீத ரத்னகாரையும் உயர்ந்த பீடத்தில் வைக்கிறீர்கள்.

தாங்கள் பூர்வ தமிழ் நூல் முறைகளைப் பார்க்காத குறையே யொழிய வேறில்லை. ஆதியோடந்தமாய்த் தெளிவாகச் சொல்லும் நூல்களில்லாமையினால் தமிழ் நாட்டிலுள்ளோரும் 22 என்று சாதிக்க ஆரம்பித்தார்கள். துவாவிம்சதி சுருதியின் மயக்கம் கொண்ட சங்கீத வித்வான்கள் முன் ஒன்றும் பின் ஒன்றுமாகப் பேசிக் குதர்க்கம் செய்தார்கள். என்றாலும்

விவேகிகள் உண்மையையும் அனுபோகத்தையும் அறிந்து தைரியப்படுத்தினர்கள். தாங்கள் ஓசைகள் ஏணியைப்போல சம அளவுடையவைகளா யிருக்கவேண்டுமென்ற முறைப்படியே நான் கணிதத்திலும் அனுபோகத்திலும் காட்டினேன். இதற்கு மேலும் தாங்கள் அறியாமலிருப்பது என் அதிருஷ்டந்தான்.

7. இதோடே தாங்கள் சொல்லும் ஆர்மோனிக் இடைவெளிகளைப் பற்றி சற்றுப் பார்ப்போம்.

(1) இந்த ஆர்மோனிக் இடைவெளிகளைப் பரதரும் சங்கீத ரத்னகரரும் கனவிலும் கண்டிருப்பதில்லை.

(2) ச-ப $\frac{2}{3}$, ச-ம $\frac{3}{4}$ என்ற அளவை அவர்கள் சுரம் கண்டுபிடிப்பதற்கு நூல்களில் சொல்லவுமில்லை.

(3) ச-ப 13 சுருதிகளையுடையவை ச-ம 9 சுருதிகளையுடையவையென்று சொன்னர்களே யொழிய $\frac{2}{3}$, $\frac{3}{4}$ என்று சொல்லவில்லை.

(4) அவர் முறைப்படி ச-ப 709 சென்ட்ஸ்களாகவும் ச-ம 491 சென்ட்ஸ்களாகவும் வருகின்றன. இதற்கும் 702 சென்ட்ஸ்களாய் வரும் $\frac{2}{3}$ க்கும் 498 சென்ட்ஸ்களாகவரும் $\frac{3}{4}$ க்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? இதை உற்றுப்பார்க்காமல் Harmonic Ratios என்று சங்கீத வித்வான்களுக்குத் தெரியாத கணக்குகளைச் சொல்லுகிறீர்கள். இந்தக் கணக்கிலேயா சங்கீதம் இருக்கிறது? இக்கணக்கு மற்றவருக்குத் தெரியாதென்று பரிகாசமும் பண்ணுகிறீர்கள்.

பல்லாயிர வருடங்களாகப் பரம்பரையாய்த் தமிழ் மக்கள் பாடிக்கொண்டிருக்கும் சங்கீதத்தை கவனிப்பீர்களானால் பதின்மூன்று ஒன்பது என்ற முறையும் அங்கு இல்லை. $\frac{2}{3}$, $\frac{3}{4}$ என்ற புரளியும் அங்கு இல்லை. ப $\frac{2}{3}$, ம $\frac{3}{4}$, க $\frac{5}{6}$, முதலிய பின்னங்களை எடுத்துக் கொண்டு அவைகளை ஒன்றோடொன்று பெருக்கிவரும் எண்களை இங்கே சொல்லுகிறீர்கள். தாங்கள் சொல்லுகிற பின்னக் கணக்கு சரியல்லவே. ஆனால் முன்னுள்ள பெரியோர்கள் இப்படிச் சொல்லவில்லை. அதாவது ச-ப, ச-ப வாக ஒரு ஸ்தாயியில் 12 சுரங்கள் வரும் என்று சொன்னர்கள். அவரோகண முறையாய் ச-ம, ச-ம வாக ஒரு ஸ்தாயியில் 12 சுரங்களும் வருகின்றனவென்று சொன்னர்களே யொழிய $\frac{2}{3}$ ஆல் சில சுரங்களையும் $\frac{3}{4}$ ஆல் சில சுரங்களையும் $\frac{5}{6}$ ஆல் சில சுரங்களையும் கண்டுபிடிக்கச் சொன்னர்களா? $\frac{2}{3}$, $\frac{3}{4}$ ஆகப் பெருக்கி ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகளைத் தாங்கள் கண்டுபிடித்தால் அப்போது வரும் பின்ன எண்களின் விபரீதம் தங்களுக்குத் தெரியும். இப் பின்னங்களுக்கும் 13, 9, 4, 3, 2, 1 என்ற சங்கீத ரத்னகரரின் இலக்கங்களுக்கும் எவ்விதசம்பந்தமுமில்லை. இவைகளைப்பற்றித் தாங்கள் சொல்லுகிறது போல ஆடம்பரமாக நான் சொல்லலாம். ஆனால் நான் சொல்வதைத் தெளிவாகத் தாங்கள் அறிந்து கொண்டு மனந்திருந்துவதற்கு ஏற்ற அளவு மாத்திரம் சொன்னேன். தங்களுக்கு இவை போதாதென்றால் இன்ன இன்ன விஷயம் என்று குறித்து எழுதுங்கள். தாங்கள் திருப்தியாகும் வரைக்கும் உண்மையானவைகளை எழுத மிகப் பிரியமாயிருக்கிறேன். உண்மையற்றவைகளை நான் எழுத விரும்பவில்லை. நான் ஆராய்ந்து பார்க்காத ஒன்றையும் தங்களுக்கு எழுத மாட்டேன். தாங்கள் இந்திய சங்கீதத்தை விசாரிக்கத் துவங்கும்பொழுதே 'வரையாட்டுக் குட்டிகளின் கால்மொழிகளைப் புரட்டிவிட்டு வளர்த்த ராபின்சன் குருசோவைப்போல்' தப்பிதமான கணக்கினால் வேறு ஒரு திசைக்குத் தங்களை திருப்பிவிட்டார்கள். தாங்கள் செல்லும் கோணலான வழியை விட்டு

ஒழுங்கான பாதைக்குத் திரும்புங்கள், திரும்புங்கள் என்று மிகவும்கேட்டுக் கொள்ளுகிறேன். 'முள்ளில் உதைப்பது உனக்குக் கடினமாம்' என்று சுவாமி சொல்லும்படி நடந்த முரட்டுச் சவுல் தானே மனந் திருந்தியபின் பரிசுத்த பவுல் அப்போஸ்தலனானார்.

---

21. "சுருக்கமாக என் அபிப்பிராயம் என்ன வென்றால் தற்காலம் வரை Artificial சங்கீதமானது ஆதி சாஸ்திரிகளின் மூளைகளில் இருந்ததே யல்லாமல் நிசமாய் உபயோகத்திலில்லை என்பதே."

மேற்காட்டிய குறிப்பினால் சம அளவான இடைவெளிகளையுடைய சங்கீதம் ஆதி சாஸ்திரிகளின் மூளையில் இருந்ததேயல்லாமல் உண்மையாய் உபயோகத்தில் இல்லை என்கிறீர்கள். தாங்கள் ஆதி சாஸ்திரிகளின் மூளைகளைப் பார்த்திருக்கிறதாகச் சொல்லுகிறீர்கள். எப்படிப் பார்த்தீர்களோ என்று நான் ஆச்சரியப்படுகிறேன். பீரங்கியின் இருப்புக் குண்டுகளைப் போல எப்பக்கத்திலும் கனத்த ஓடுகளினால் மூடப்பட்டுள்ள மூளைகள் தங்களுக்கு இலகுவாக எப்படித் தெரிந்தன? வாயினால் நாளது வரையும் தமிழ் மக்கள் பாடிக்கொண்டிருக்கும் கீதம் இன்னதென்று அறிந்துகொள்வது மிகச் சுலபமென்று எண்ணுகிறேன். அனுபோகத்திலிருக்கும் இச்சுலபமான முறையைத் தெரிந்து கொள்ளாதிருக்கிற தாங்கள், கண்ணுக்குப் புலப்படாதிருக்கும் மூளைக்குட் போய் எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?

ஒரு வேளை தாங்கள் மூளை என்று சொல்வதை அவர்கள் எழுதிய நூலின் கருத்தென்று சொல்லுகிறதாக வைத்துக்கொண்டால் தமிழ் இசை நூல்கள் தங்களுக்குத் தெரியாதே. அவைகளின் கருத்தை இது வரையிலுமுள்ள தமிழ்மக்களும் சங்கீத ரத்னாகரரும் அதன் முன்பாதரும் சரியாய் அறிந்து கொள்ளாதிருக்கையில் தாங்கள் அறிந்துகொண்டது எப்படி? சுரங்களும் சுருதிகளும் சம அளவுடையவைகளாயிருக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள் என்று சொல்லுகிறீர்கள். தாங்களும் 'சுரமும் சுருதியும் சம இடைவெளிகளுடையதாய் வர வேண்டும். ச-ப, ச-ம முறையாய் சுரங்கள் கண்டுபிடிக்கப்படவேண்டுமென்ற பூர்வத்தாரின் முறைப்படியே சுர வரிசைகள் சம அளவுடையதாயிருக்கும். அவைகள் ஏணிப்படிகளைப் போல ஏறுதற்கும் இறங்குதற்கும் அனுகூலமாயிருக்க வேண்டும்' என்று திஷ்டாந்தம் சொல்லி எச்சரித்தும் இருக்கிறீர்கள். ஆனால் தங்கள் மூளையிலிருந்தபடி அனுபோகத்திற்கு வரவில்லையே. ஒழுங்கினமான இடைவெளிகளையுடைய 25 சுருதிகளைத் தாங்கள் சொல்லுகிறீர்கள். அவைகளை இதன் முன் பார்த்திருக்கிறோம். உண்மை தங்கள் தலையில் இருந்திருக்கிறது. கையில் வந்ததோ அபத்தம். இதை அனுபோகத்திலிருக்கும் சுரங்களுக்கு ஒத்துவரவில்லையென்று ஆல் இந்திய மீயூசிக் கான்பரென்ஸில் வந்திருந்த வித்வான்கள் கண்டு தள்ளினார்களே. பின்னை ஏன் தாங்கள் மற்றவர்களைப் பழிக்கவேண்டும்? சொல் ஒன்றும் செய்கை வேறுமாயிருந்தால் உலகம் அருவருக்குமே.

பூர்வ தமிழ்மக்கள் சுருதிகள் சமமாயிருக்க வேண்டுமென்று தாங்கள் கினைத்தவைகளையே சொன்னார்கள். சொன்னவைகளையே சாதித்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் காட்டியபடியே நாளது வரையும் அனுபோகமுமிருக்கிறது. இவைகளைத் தெரிந்து கொள்வதற்குமுன் நானும் தங்களைப் போலவே கலங்கினேன். ஆனால் தங்களைப்போல் புஸ்தகமும் ஹார்மோனியமும் செய்துகொள்ளவில்லை. இரவு பகல் இதே நினைவாயிருந்து வேலை செய்துகொண்டு வருகையில் தெய்வாதீனமாய் இரண்டு, மூன்று குறிப்புகள் தெரிந்து அவைகள் அனுபோகத்துக்கு வந்தன. அனுபோகத்திற்கு வந்திருந்ததனால் தமிழ் நூலிற் சொல்லிய விஷயங்களை அறிந்து கொள்ளக் கூடியவனானேன். இல்லையானால் நானும் தங்களைப்போலிருப்பேன்.

ஒரு ஸ்தாயியில் 24 சுருதிகள் இருக்கின்றனவென்று அறிந்த நான் ஒரு இராக சஞ்சாரத்திற் குரிய பூர்ண அம்சங்களையும் காட்டக்கூடிய கீதம் எழுதவும் அவைகளில் கீர்த்தனம் உண்டாக்கவும் கூடிய திறமையடைந்தேன். அவைகளைச் செய்து காட்ட நோக்கமுடையவனாய் அங்கு வந்தேன். தாங்கள் சுருதியைப்பற்றி வாதாடும் சமயத்தில் சபையோர் கொடுத்த ஒரு ஆரோகண அவரோகணத்தில் ஒரு கீர்த்தனமாவது இராகச் சாயையாவது புதிதாகச் செய்து பாடிக் காட்டும்படி உங்களைக் கேட்க வேண்டுமென்று பிரசிடெண்ட் நவாப் ஆலிக்கான் அவர்களுக்குக் கடிதத்தில் எழுதி ஞாபகப் படுத்தினேன். ஆனால் அவர்கள் 'இது யாரால் முடியும்' என்று தங்களைக் கேட்காமல் நிறுத்தி விட்டார்கள்.

நானே தாங்கள் கொடுக்கும் ஆரோகண அவரோகணத்தில் இராக சஞ்சாரமாவது, கீதமாவது, கீர்த்தனமாவது செய்யத் தயாராய் வந்திருந்தேன். நான் என்னைப் பெருமையாய்ச் சொல்லிக் கொள்வது சரியல்ல. ஆயினும் என்னைப் பற்றி முற்றிலும் தெரியாத தங்களுக்குச் சில குறிப்புகளைச் சொல்வது தப்பிதமாகாது. நான் கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் சுரம் சுருதிகள் இன்னவையென்றும் இன்னின்ன சுருதிகள் இன்னின்ன கீர்த்தனங்களோடு வருகின்றனவென்றும் கண்டுபிடித்த பின் தமிழ் நூலில் இதன் விபரம் அறிந்தேன். அப்படியே கீதம் செய்வதற்கும் கீர்த்தனங்கள் செய்வதற்குமுரிய முறை தெரிந்த பின்பே பூர்வ தமிழ் நூல்களில் அவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று கண்டேன். இவைகள் யாவும் இராகங்களைப் பற்றிச் சொல்லும் இரண்டாம் புத்தகத்தில் விபரமாய் வெளிவரும். நான் கண்டு பிடித்தேன் என்று பெருமை பாராட்டிக் கொள்வதைப் பார்க்கிலும் இவைகளுக்குரிய ஆதாரமான விதிவகைகள் பூர்வ தமிழ் நூல்களில் காணப்படுவதனால் அவைகளையே எனக்கு ஆதாரமாக எடுத்துக்கொண்டேன். நான் எடுத்துக் கொண்டவிஷயத்தில் தமிழ் நூல்கள் மூலமாய்த் தெய்வம் இவ்வளவாவது கிருபை செய்தாரே யென்று மிகுந்த சந்தோஷமடைந்தேன்.

அதோடு என்னைச் சந்திக்கும் தேர்ந்த வித்வான்கள் பலருக்கும் கீதம் பாடித்துக்காட்டி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மைசூர் சமஸ்தான வித்வான் வைணிக சிகாமணி மகா-ரா-ரா-ஸ்ரீ சேஷண்ணா அவர்களும், விஜயநகரம் சமஸ்தான வித்வான் வைணிக சிரோமணி மகா-ரா-ரா-ஸ்ரீ வேங்கடரமணதாஸ் அவர்களும், அரிகேசவநல்லூர், மகா-ரா-ரா-ஸ்ரீ முத்தையாபாகவதர் அவர்களும், தஞ்சை, வீணை வேங்கடாசலமையர் அவர்களும் கீத முறைகளைக் கேட்டு மிகவும் சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கீத முறைகளைக் கேட்டுச் சந்தோஷமடைந்த மைசூர், மகா-ரா-ரா-ஸ்ரீ கிருஷ்ண ராவ் B.A. அவர்களின் அபிப்பிராயத்தை அடியில் வரும் சில வரிகளில் காண்க.

Indian Music Journal. By H. P. Krishna Rao, B.A. Vol. I. No. 5. 1911 Page 102, 103.

"Two days—25th and 26th were spent at Tanjore in the company of Rao Sahib Abraham Pandither avl. The Rao Sahib is a very popular gentleman both by his profession and good nature. He is an ardent admirer of music and the treatise on music that he is writing is likely to be of immense good to the students only if he would carry out the plans he has chalked out. All his children are well-versed in music, eastern and well as western, and it is a great pleasure to every friend of the Pandit to listen to the sweet singing of his children in *solo* or in *concert*. One admirable work that he is engaged in is the laying down of a set of rules for enabling every student of music to compose Gitams; Swarajatis and other Pieces.

மகா-ரா-ரா-ஸ்ரீ H. P. கிருஷ்ணாவ் B. A. அவர்களுடைய இந்தியன் மியூசிக் ஜர்னல் Vol. I. No. 5. 1911 பக்கம் 102, 103.

"25 ஆம், 26 ஆம் தேதிகளாகிய இரண்டு நாட்களையும் தஞ்சாவூரில் Rao Sahib Pandither அவர்களுடன் கழித்தோம். தன்னுடைய தொழில் மூலமாயும் சற்குணத்தின் மூலமாயும் Rao Sahib அவர்கள் யாவராலும் நன்கு மதிக்கப்பட்டார்கள். சங்கீதத்தில் அவர்களுக்கு அத்தியந்த பிரீதி. இப்போது அவர்கள் எழுதிக் கொண்டு வரும் சங்கீத நூலானது அவர்கள் மனதில் நினைத்திருக்கிற பிளான்படி முடிவடையுமானால் சங்கீதம் படிப்பவர்களுக்கு அதிக பிரயோசனமுள்ளதாய் இருக்கும். அவர்கள் குமாரர் குமாரத்திகள் எல்லாரும் மேற்றிசை சங்கீதத்திலும் கீழ்த்திசை சங்கீதத்திலும் தேர்ந்தவர்களானதால் அவர்கள் இன்னிசையோடு தனித்துப் பாடுவதையும் எல்லோரும் ஒன்று சேர்ந்து பாடுவதையும் அவர்கள் நேகிதரெல்லோரும் கேட்டு ஆனந்திக்கும் படியான சிலாக்கியம் இருக்கிறது. இப்போது அவர்கள் செய்து வரும் வேலையின் அருமையான பாகம் என்னவென்றால் சங்கீதம் கற்கும் ஒவ்வொருவரும் தானாய் கீதம், ஸ்வரஜதி முதலியவற்றை எழுதும் படிக்கான விதிகளை எழுதிக்கொண்டு வருவதே."

இதன் அருமையை முதல் முதல் தமிழ் மக்களும் அதன்பின் மற்றவரும் வெகு சீக்கிரம் அறிவார்கள். என் நினைப்பிலிருந்ததையே வாயினால் சொன்னேன். கையினால் செய்து காட்டினேன். பிள்ளைகள் பாடினார்கள். தாங்கள் ச-ப முறையாக வரும் சுரங்கள் சம இடைவெளிகளுடையவைகளாயிருக்க வேண்டுமென்று சொல்வதும் ஏணிப்படிக்களைப்போல் ஏறுதற்கும் இறங்குதற்கும் உதவியாயிருக்க வேண்டு மென்று சொல்வதற்குப் பொருந்துவதும் அனுபோகத்தக்கு வரக்கூடியதும் பல்லாயிர வருடங்களாகத் தமிழ் மக்கள் பாடிக்கொண்டிருப்பதும் இவைகளே. இவைகளைத்தானே ஆதிசாஸ்திரிகளின் மூளையிலிருந்தவை என்றும் தங்கள் மூளையில் இருப்பவை என்றும் தாங்கள் சொல்லுகிறீர்கள்.

இதைத் தாங்கள் artificial இடைவெளிகளுடைய தென்று ஏளனஞ்செய்கிறீர்கள். ஒன்றுயிருந்த ஆதார சட்சம் படிப்படியாய் மேலே போகும் பொழுது மத்தியஸ்தாயி சட்சம் இரண்டாகவும் அதன் மேல் தார சட்சம் போகும் பொழுது நாலாகவும் வரும் என்ற சங்கீத ரத்னாகரின் வசனம் Geometrical Progression ஐத்தான் குறிக்கும் என்று அறிவாளிகள் ஒப்புக்கொள்வார்களே. அதன் இரகசியம் தங்களுக்கு இதன்முன் தெரிந்திருந்தால் இதை artificial என்று சொல்லியிருக்கமாட்டீர்கள். தங்கள் புஸ்தகம் 34 ஆம் பக்கத்தில் ஒரு ஸ்தாயியை இரண்டாகவும் மூன்றாவும் பன்னிரண்டாகவும் பிரிப்பதற்கு லாகர்த முறைப்படியிருக்கவேண்டுமென்று மிக அற்பமாகத் தங்களுக்குத் தோன்றியிருக்கிறது. என்றாலும் அது 'குருடன் தன் காலில் தட்டிய பணப்பையைக் கல்லென்று நினைத்துக் காலால் தள்ளிவிட்டு அப்புறம் போனது போல்' உங்களைத் தவறுதலாக நடத்த ஏதுவாயிருந்ததேயொழிய சரியான முறைக்கு வழிநடத்தவில்லை. சரியான முறையாகச்சொல்லும் சில மேற்றிசையாரின் நூல்களையும் தாங்கள் பார்க்கவில்லை போலிருக்கிறது.

The art of tuning the Pianoforte by Hermann Smith, Page. 75, 76.

"Mr. W. H. B. Woolhouse remarks truly, "It is very misleading to suppose that the necessity of temperament applies only to instruments which have fixed tones. Singers and performers on perfect instruments must all temper their intervals, or they could not keep in tune with each other, or even with themselves; and on arriving at the same notes by different routes would be continually finding a want of agreement. The scale of Equal temperament obviates all such inconveniences, and continues to be universally accepted with unqualified satisfaction by the most eminent vocalists; and equally so by the most renowned and accomplished performers on stringed instruments, although these instruments are capable of an infinite variety of intonation.

The high development of modern instrumental Music would not have been possible, and could not have been acquired, without the manifold advantages of the tempered intonation by equal semitones, and it has, in consequence, long become the established basis of tuning."

"Mr. Woolhouse என்பவர் என்ன சொல்லுகிறார் என்றால், சுரங்கள் ஸ்தாபகமாயிருக்கப்பட்ட வாத்தியங்களுக்குத்தான் சுரங்களுக்குச் சரிபாகமாய்ப் பிரிக்கும்முறை அவசியம், மற்றவைகளுக்கு அவசியமல்ல என்று நினைப்பது பிசகு. பூரணவாத்தியங்களை வைத்துப் பாடுபவர்களும், வாசிப்பவர்களும் கூட தங்கள் சுரங்களைச் சுருதிக்கேற்க அமைத்துக் கொள்ளாவிட்டால், மற்றவர்களோடு சேர்ந்து பாடவாவது தாங்களே சுத்தசுரத்தில் பாடவாவது கூடாது. பல வழிகளின் மூலமாய் ஒரே சுரங்களில் வந்து சேரவேண்டிய அவசியம் இருப்பதால் அடிக்கடி வாசிப்போருக்கும் பாடுவோருக்கும் சுரவித்தியாசங்கள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கக் கூடியது. சுருதிகளை சமபாகமாகப் பிரித்து ஸ்தாபிக்கப்பட்ட ஆரோகணமானது இவ்வித வித்தியாசங்களை உண்டாக்க மாட்டாது. அதுவே சங்கீதம் பாடுகிற வித்வான்கள் முறை. வாத்தியங்கள் பலவும் பலவிதமாய் சுருதியேற்றக் கூடியவையாயிருந்த போதிலும் தந்திவாத்தியங்களில் நிபுணரான எல்லாசங்கீத வித்வான்களும் சரியென்று ஒப்புக்கொள்ளும் வழியும் இதுவே. இப்படி சுரங்களுக் கிடையிலுள்ள இடைவெளிகளை சமபாகங்களாகப் பிரிக்கும் முறை ஏற்பட்டபிறகுதான், சங்கீத வாத்தியகானமானது அதிக தேர்ச்சியடைந்திருக்கிறதுமல்லாமல், அதுவே எல்லா வாத்தியங்களையும் சுருதிக்கேற்கக் கொண்டுவரும் முறையென்றும், அதினால் உண்டாகும் பிரயோசனங்கள் அனந்தம் என்றும், யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது."

இதனால் சுருதிகளைச் சமபாகமாகப் பிரிக்கவேண்டும் என்றும் நிபுணரான எல்லா வித்துவான்களும் ஒப்புக்கொள்ளும் முறை யென்றும் சுரங்கள் சமமாய்ப் பிரிக்கப்பட்டபின் தான் சங்கீதம் மிகவும் தேர்ச்சியடைந் திருக்கிறதென்றும் சமமாய்ப் பிரிப்பதனால் உண்டாகும் பிரயோசனம் அனந்த மென்றும் சொல்லுகிறீரே. தங்கள் ஏணியைப்போல் தானே இதுவும் இருக்கிறது. பின்னேயேன் ஒழுங்கற்ற முறைகளைச் சாதிக்கிறீர்கள்? சம அளவான 12 சுரங்களையும் அதோடு கமகமாய்ச் சேர்த்துப்பாடும் நுட்ப சுரங்களையும் அறியாததனால் இப்படி மயங்கினீர்கள். இனி அம்மயக்கம் வேண்டாம். பூர்வ தமிழ்மக்களின் முறையும் இதுவே. போதுமான ஆதாரமுமிருக்கிறது.

அனுபந்தம்

Note

"இந்தியன் ஆர்மோனிய சுருதிகளைச் சோதித்ததாகச் சொல்லுவதைப்பற்றிய குறிப்பு.

22. அந்த வாத்தியத்தைக் கூடி வந்தவர்கள் அருவருத்து அப்பிரியத்தைக்காண்பித்ததனால் Jackruddin உம் அதினால் இழுக்குண்டு கெட்ட அபிப்பிராயப்பட்டார்.

ச விலிருந்து $1\frac{1}{2}$ ஆய் இருந்த பஞ்சமம் சரியென்று அவர் பிரியமில்லாமலே ஒப்புக்கொண்டார். ரி விலிருந்து $1\frac{1}{3}$ ஆய் இருந்த கோமள த சற்று குறைகிறது என்றார். யமன் இராகத்தில் க வுக்குக்கீழ் Just semitone-இல் $(\frac{16}{15})$ இருந்த தீவிர நிஷாதம் அதிகம் குறைந்தது என்றார்."

தங்கள் இந்தியன் ஆர்மோனியத்தைக் கூடிவந்தவர்கள் யாவரும் அருவருத்து அப்பிரியத்தைக் காண்பித்தார்கள் என்றும் அந்த அபிப்பிராயத்தினால் சாக்ருடின் சாயபு இழுக்கப் பட்டுக் கெட்ட அபிப்பிராயப் பட்டார் என்றும் சொல்லுகிறீர்கள். நியாயமில்லாமல் ஒரு வாத்தியத்தை சபையிலுள்ள யாவரும் அருவருக்கமாட்டார்கள். அங்கே வந்திருந்தவர்கள் சங்கீதத்தில் தேர்ந்த ஜவாபுகளும் சிற்றரசர்களும் Professor களும் பல உயர்ந்த உத்தியோகத்திலுள்ளவர்களும் மேற்றிசை சங்கீதத்திலும் இந்திய சங்கீதத்திலும் தேர்ந்த கனம்பொருந்திய பல துரைசாணிகளும் சங்கீதமே ஜீவனமாகக் கொண்ட வித்வான்களுமாயிருந்தார்கள். இவர்கள்

எல்லோரும் தங்கள் ஹார்மோனியத்தை அருவருப்பதற்கு அவ் ஹார்மோனியத்தின் சுரங்கள் அருவருப்பாயிருந்ததே காரணம். காரணமில்லாமல் அவர்கள் அருவருத்துத் தள்ளவில்லை. பாரபட்சமுள்ளவர்கள் இரண்டொருவர் இருந்தார்களோ இல்லையோ அறியேன். ஆனால் சபையிலுள்ள பெரும்பான்மையோரை நான் கவனித்ததில் அவர்கள் முகத்தில் விளங்கிய தேஜசினும் வார்த்தையினும் பிரசங்கங்களினும் அவர்கள் ஒரு வார்த்தையும் தவறுத சத்திய சீலர்கள் என்று எனக்குப்பட்டது. தங்கள் அபிப்பிராயத்திற்கு மிக அற்பர்கள் என்று பட்டது என் மனதிற்கு வேதனையாயிருக்கிறது. மற்றவர் அருவருக்க அதனால் இழக்குண்ட சாக்ருடீன் சாயபும் கெட்ட அபிப்பிராயப் பட்டார் என்று சொல்லும் பொழுது அவர் மனசாட்சியில்லாதவர் என்றும் சத்தியம் தவறிச் சொல்லுகிறவர் என்றும் மற்றவர்கள் சொல்லுகிறபடி யெல்லாம் ஆடுகிறவரென்றும் கருதஇடமாகிறதே. தகுந்த வித்வான் என்று வடகாட்டில் கொண்டாடப்படும் ஒரு வித்வானை இப்படித் தாங்கள் அவமரியாதையாய்ச் சொல்வதை நினைத்து வருத்தப்படுகிறேன். தாங்களே கரகரப்பிரியாவில் வரும் சுரங்களுக்குத் தங்கள் ஹார்மோனியத்தின் சுரங்கள் குறைகின்றனவென்று சபைமுன் ஒப்புக்கொண்டபின் இப்படிச் சொல்வது நியாயமாகுமா?

---

23. "எனக்குத் தெரிந்த வரையில் காபி இராக சுரங்கள் ஹார்மோனியத்தில் கொஞ்சமாவது சரியாயிருக்கவில்லை என்றார். ஆனால் இதைப்பற்றி நிட்பமாய் நான் குறித்து வைக்கவில்லை."

அவர் பாடிய காபி இராகம் Major tone-இல் ஆரம்பித்தது. Minor tone-இல் ஆரம்பிக்கவில்லை. இவைகளை யெல்லாம் குறித்து நான் President க்குக் கொடுத்திருக்கிறேன். ஆனால் என்னிடத்தில் அதற்குக் காப்பி இல்லை. என் கையிலிருப்பது சொற்பக் குறிப்புதான். மற்றவையெல்லாம் என் ஞாபகத்திலிருந்தே எழுதுகிறேன்."

'காபி இராகத்தில் வரும் சுரங்கள் ஹார்மோனியத்தில் கொஞ்சமாவது சரியாயிருக்கவில்லை என்றார்' என்று இவ்வளவாவது உண்மை சொன்னீர்களே. சபை முன் காபி இராகத்தில் வரும் சுரங்களுக்கு ஹார்மோனியத்தில் வரும் சுரங்கள் குறைகின்றனவென்று தாங்களே வாயினால் ஒப்புக்கொண்டீர்களே. காபி இராகம் Major tone-இல் அவர் ஆரம்பித்துப் பாடினார். Minor tone-இல் அது ஆரம்பிக்கமாட்டாது. Minor tone-இல் ஆரம்பித்தால் 'நாம நாராயணி' என்ற ஐம்பதாவது மேளக்கர்த்தாவில் ஜனித்த 'குசுமாபாகி' என்ற இராகமாகும். தாங்கள் Minor Tone-இல் ஆரம்பித்ததனால் காபியின் சுரங்களுக்கு முற்றிலும் பொருந்தவில்லை. Major Tone-இல் தாங்கள் ஆரம்பித்துப் பாடியபொழுது காபி இராகத்திற்குக் கூடுதலாயிருந்தது. இப்படிப்பட்ட ஒரு அபசுரக் குடுக்கையைக் கொண்டு வந்தால் பைத்தியக்காரர்களே அதை ஆம் என்று சொல்வார்கள்.

---

24. "Jackruddin நிட்பமான சுரங்களைப் பகுத்தறியக் கூடிய அவ்வளவு தேர்ந்த காதுடையவரல்ல.

Note ii.

Miraj நகரிலுள்ள Sitar என்னும் வாத்தியம் செய்யும் Hussenkhan என்பவன் செய்த இரண்டு வீணையின் மெட்டுகளின் உதவியினால் என்னுடைய ஹார்மோனியத்தின் சுரங்களைப் பரிட்சித்தேன்.

அவைகள் இரண்டிலும் பின் வரும் ஸ்கேல்கள் வருகின்றன.

தீவிரசுரங்கள்.

ச	ரி	க	ம	ப	த	நி	ச
$\frac{9}{8}$	$\frac{10}{9}$	$\frac{16}{15}$	$\frac{9}{8}$	$\frac{10}{9}$	$\frac{9}{8}$	$\frac{16}{15}$	

இங்கே தைவதம் குறைந்து மத்திமம் தீவிரமாய் வருகிறது.

கோமள சுரங்கள்.

ச	ரி	க	ம	ப	த	நி	ச
$\frac{16}{15}$	$\frac{10}{9}$	$\frac{9}{8}$	$\frac{9}{8}$	$\frac{16}{15}$	$\frac{16}{9}$	$\frac{9}{8}$	

காந்தார நிஷாதங்கள் காபி, பீம் பாளம், மியாரி மல்லாக், சிந்தாதா முதலிய இராகங்களில் வரும் குறைந்த சுரங்கள்,

பைரவி, ஜீவன்புரி முதலிய இராகங்களில் வரும் காந்தார நிஷாதங்கள் மெட்டுவை கன்முய் அழுத்துவதனுலாவது தந்தியை ஒரு பக்கம் இழுத்து வாசிப்பதனுலாவது உண்டாகக் கூடியவைகள். தீவிர தைவதமும் அப்படியே உண்டாகும்.''

(Sd.) *E. Clements.*

சாக்ருடன் சாயபு நட்பமான சுரங்களைப் பகுத்தறியக் கூடிய காதுடையவரல்ல என்று சொல்லுகிறீர்கள். என்னிடத்தில் அவரைப் பற்றித் தாங்கள் சொல்ல என்ன அவசியமிருக்கிறது? எப்பொழுது அவர் வாயைத்திறந்து தன்னுல் கூடிய அதிகபேரம் ஒரே சுருதியில் சுரத்தைச் சொன்னரோ அப்பொழுதே அவர் தகுந்த வித்வான் என்று நான் எண்ணினேன். அவர் தங்கள் ஆர்மோனியத்தின் சுரம் சரியாயிருக்கிறதோ இல்லையோ என்று தாங்கள் பல தடவை பார்க்கும் வரையிலும் தங்கள் ஆர்மோனியத்தின் அபசுரம் தன் காதிற்புகாமல் கையைக் காதில் வைத்துக்கொண்டு ஒரு சுரத்திலேயே அலைவில்லாமலும் கூடுதல் குறைவில்லாமலும் நின்றார். தாங்கள் ஆர்மோனியத்தின் காற்றுருடியைப் பலமாக மிதித்தும் சுரஸ்தானத்தைப் பலமாக அழுத்தியும் Major toneக்கும் Minor toneக்கும் மாற்றி மாற்றிப் பார்த்தீர்கள். 25 சுருதி வரிசையில் எதையாவது பிடித்துக் காட்டிவிடலாமென்று பல நிமிஷம் பிரயத்தனப்பட்டீர்கள். ஆனல் அவரோ மிகுந்த காம்பீரமாய் முன் பின் போகாமல் ஒரு சுரத்திலேயே நின்று காட்டினர். இப்படிக் காட்டின ஒரு வித்வானே அதிக சுரஞானம் உள்ளவர் என்று சொல்லத் தயாராயில்லை என்கிறீர்கள். யார் உங்களைத் தேர்ந்த வித்வான் என்று சொல்லும்படிக் கேட்டார்கள்? பிள்ளைகள் வீணையில் 24 சுருதிகளைப் பாடிக் காட்டுகையில் அதோடு அவரும் சேர்ந்து 24 சுருதிகளை வாயினல் பாடிக்காட்டினரே. அதைத் தாங்களும் கேட்டுக்கொண்டிருந்தீர்கள். அப்படிப்பட்ட ஒருவரை சுரங்களைப் பகுத்தறியக் கூடிய காதுடையவரல்ல என்று சொல்லுகிறீர்களே, இது நியாயமாயிருக்கிறதா? மற்றவர்கள் தாங்கள் சொல்வதை ஒப்புக்கொள்வார்களா?

தாங்கள் இந்துஸ்தானி இராகங்களில் வழங்கிவரும் சுரங்களுக்கு ஒத்துவராத ஆர்மோனியம் செய்து வந்ததினல் இந்துஸ்தானி சங்கீதத்திலாவது, பிள்ளைகள் பாடியபொழுது 'வேறு ஆரோகண அவரோகணங்களுக்கு மாறிப் போனர்கள்' என்று சொல்வதினல் கர்நாடக சங்கீதத்திலாவது, சுரங்கள் சம அளவுடையதாய் ஏணிப் படிவைப்போல் வரவேண்டுமென்று சொல்லிவிட்டு 'பண்டிதர் Equal Temperament முறைக்கு இழுக்கிறார், பிள்ளைகள் artificial இடைவெளிகளை உபயோகிப்பதினல் கானம் அருவருப்பாயிருந்தது' என்று சொல்வதினல் இங்கிலீஷ் மியூசிக்கிலாவது தங்களுக்குத் தகுந்த ஞானமில்லை என்று தெளிவாகக் காட்டுகிறீர்கள். இம்மூன்று விதமான சங்கீதமும் தெரியாத தாங்கள் சாக்ருடன் சாயபு அவர்களை நியாயந்தீர்ப்பது எப்படி? அதை யார் ஒப்புக்கொள்வார்கள்? தங்கத்துக்கும் கொரிந்து தேசத்தின் பித்தளைக்கும் பேதமில்லையா?

அவரைப் பற்றிச் சொல்வது தங்கள் மேல் குற்றமில்லை. தாங்கள் $\frac{2}{3}$, $\frac{3}{4}$ என்ற சுர ஞான மற்றவர்கள் சொல்லும் கணக்கை எடுத்துக் கொண்டு கண்டுபிடிக்கும் ஒழுங்கற்ற சுருதி முறையைச் சொல்லிக் காட்டும் ஹார்மோனியத்தை நாங்கள் பார்த்தும் அதிலுள்ள அபசுரங்களைக் கேட்டு மிருக்கிறோம். அபசுரக் குடுக்கையாகிய அவ் ஹார்மோனியத்தினால் உங்கள் காது கெட்டுப்போயிருக்கிறது. எல்லோரும் மிகுந்த பிரியமாய் பெரிய வித்வான் என்று கொண்டாடி ராஜ சபையிலும் பாடும்படிச் செய்த அவரை மிகத் தேர்ந்த வித்வான் அல்ல என்று சொல்வதற்குக் காரணம் இந்திய சங்கீதத்தில் தங்களுக்கு இருக்கும் குறைந்த அறிவே என்று எண்ணுகிறேன். சபையோர் யாவரையும் ஆனந்திக்கச் செய்த குழந்தைகளின் கானம் தங்களை மாத்திரம் அருவருக்கச் செய்த காரணம் யாது? தங்களின் ஹார்மோனியத்தில் வரும் அபசுரமல்லவா? பலவித புஷ்பங்களைக் கட்டும் பூக்கட்டி வீட்டுத் திண்ணையில், இராத்திரி படுத்திருக்கவேண்டுமென்று உத்திரவுகேட்டுப் படுத்திருந்த வர்த்தகரான மீன் வியாபாரிகள், புஷ்பவாசனையினால் தூக்கம் வராமல் வெகுநேரம் புரண்டு புரண்டு சங்கடப்பட்டுப், பின்பு தங்கள் மீன் கூடையை எடுத்துத் தலையில் கவிழ்த்துக்கொண்டு கன்னுய்த் தூங்கினார்கள் என்பதுபோல, அபசுரம் நிறைந்த ஹார்மோனியம் தங்கள் காதை எவ்வளவாகக் கெடுத்திருக்கிறதென்று அறிந்து, இதற்குப் பரிகாரமில்லையோ என்று வருத்தப்படுகிறேன்.

இதோடு தாங்கள் சொல்லும் சில பரிட்சைகளும் சில இராகங்களில் வரும் சுரங்களின் தீர்மானமும் $\frac{2}{3}$, $\frac{3}{4}$ என்ற அளவினால் தாங்கள் கண்டு சொல்வதைக் கொண்டு அவைகளைப் பற்றி நான் சொல்வது வீண்வேலையாகும் என்று விட்டுவிட்டேன்.

அன்புள்ள துரையே! நான் எழுதிய மறுப்பில் தங்கள் கணக்கில் $\frac{2}{3}$, $\frac{3}{4}$ ஆகப் போகும் முறை முற்றிலும் தப்பிதமென்றும் ஒரு ஸ்தாயியில் 22 அல்லது 25 சுருதிகள் என்று தாங்கள் சொல்லும் முறை ஒரு நாளும் கூடாத காரியமென்றும் தெளிவாகச் சொன்னேன். அதோடு Madras Mail-இல் தாங்கள் எழுதாமல் விட்ட விஷயங்களையும் எழுதினேன். இவைகளில் எதையாவது எடுத்துத் தகுந்த ஆதாரம் சொல்லி மறுப்பு எழுதவேண்டியது கிரமம். அப்படியிருந்தால் தாங்கள் எழுதிய வியாசம் வாசிப்போர்களுக்குப் பிரயோசனமாயிருக்கும். தங்கள் வியாசத்தின்மேல் குறிப்பு சொல்வதற்காக 24 நம்பர் போட்டுப் பிரித்தேனேயொழிய அதை மாற்றிவிட நினைக்கவில்லை. தாங்கள் எழுதின கடிதத்தையே இப்படிப் பிரித்தேன்.

என் மனதிற்குத் தங்கள் வியாசத்தைப் பார்த்தவுடன் மிக அருவருப்பாயிருந்தது. என்றாலும் என் மனதை சமாதானப்படுத்திக்கொண்டு சில குறிப்புகள் எழுதினேன்.

தாங்கள் எழுதிய வியாசத்தின் சிற்சில குறிப்புகளினால் பின் வரும் தப்பிதங்கள் செய்கிறதாகத் தெரிகிறது.

அதாவது:—

1. 'பரோடா கான்பரென்ஸில் எந்த விதமான ருசுவும் சரிவர நடத்தப்படவில்லை' என்பதனால் ஆல் இந்திய மியூசிக் சபையைப்பற்றிக் குறைவாகவும், (3)

2. 'ஹார்மோனியத்தைப்பற்றி நடந்த பரிக்ஷையானது பரிகாசக் கூத்தாயிருந்தது' என்பதனால் சபையில் வந்திருந்தவர்கள் அதைப் பரிட்சிக்கத் தகுந்தவர்கள் அல்ல என்றும், (4)

3. 'சபையில் வந்திருந்த வித்வான்கள் Major tone, Minor tone, Tempered Scale முதலிய நுட்பமான வித்தியாசங்களைத் தெரியாதவர்கள் ஆனால் பின்ன எண்களைத் தங்களுக்குத் தெரியாமலே உபயோகிக்கிறார்கள்' என்பதினால் சபையில் வந்திருந்த வித்வான்கள் சங்கீதமாவது, கணிதமாவது உங்களைப்போல் தெரியாதவர்கள் என்றும், (6)

4. 'பிள்ளைகள் பாடியது உங்கள் அபிப்பிராயத்தை நிலைநாட்டினதாக நினைக்கிறீர்கள்' என்பதனால் என் அபிப்பிராயம் வேறு பிள்ளைகளின் கானம் வேறுயிருந்ததென்றும், (7)

5. 'தம்புராவை வைத்துப் பாடாததனால் அவர்கள் சரியான சங்கீதம் பாடவில்லை' என்பதனால் அவர்கள் தப்பான சங்கீதம் பாடினார்கள் என்றும், (8)

6. 'Artificial இடைவெளிகளை உபயோகித்ததனால் அருவருப்பாயிருக்கிறது. இனிமையாயில்லை, வேறு ஆரோகண அவரோகணங்களுக்கு மாறிவிட்டார்கள்' என்று சொல்வதனால் பிள்ளைகள் பாடிய பாடல்கள் முற்றும் தவறுதலென்றும், (9, 11, 12, 13)

7. 'சுரங்கள் சம அளவுடையதாய்ப் பிரிக்கவேண்டுமென்ற சாஸ்திரோக்தமில்லாத ஒரு சங்கீத முறையை ஏற்படுத்தினார்கள்' என்று சொல்வதனால் சம அளவாய்ப்பிரித்த பூர்வ தமிழ் முனிவர்களையும் என்னையும் பயித்தியக்காரர்களென்றும், (19)

8. 'Artificial சங்கீதமானது ஆதி சாஸ்திரிகளின் மூளையிலிருந்ததேயல்லாமல் உபயோகத்திலில்லை' என்பதனால் அவர்கள் அனுபோக மற்றவர்கள் என்றும், வீணை சாஸ்திரங்களை எழுதிவைத்தார்களென்றும், (21)

9. 'சபையில் வந்திருந்தவர்கள் தங்கள் ஆர்மோனியத்தை அருவருத்து அப்பிரியப்பட்டார்கள்' என்பதனால் அவர்கள் பாரபட்சமுள்ளவர்களென்றும் நியாயந்தீர்க்கத் தகுதியற்றவர்கள் என்றும், (22)

10. 'சாக்ருடன் சாயபு அதினால் இழுக்கப்பட்டார்' என்று சொல்வதனால் அவர் ஒரு நிலையில் நிலைத்திராத பத்தாம்பசலி சோடாபாட்டிலைப் போல நிச்சய புத்தியில்லாதவ ரென்றும். (22)

11. 'சாக்ருடன் சாயபு அதிக நுட்பமான காதுடையவரென்று சொல்லத் தயாராயில்லை' யென்று தாங்கள் சொல்வதனால் அவருக்கு சங்கீதத் திறமை போதாது என்றும் சொல்லுகிறீர்கள். (24)

இவ் விஷயங்களைத் தாங்கள் கன்முய்க் கவனித்துப் பார்த்தீர்களானால் இக்குறிப்புகளில் எந்த ஒன்றையாவது சொல்ல முற்றிலும் தகுதியற்றவர்கள் என்று தோன்றும். ஆயினும் தங்கள் ஆர்மோனியம் தள்ளப்பட்டதனால் உண்டாகிய மன வருத்தத்தினாலும் மனக்குழப்பத்தினாலும் பணச்செலவினாலும் அவமானத்தினாலும் இப்படிச்சொல்லுகிறீர்களென்று என்னைச் சாந்தப்படுத்திக்கொண்டு இதை எழுதினேன்.

தாங்கள் ஒப்புக்கொள்ளும் முக்கியமான இரண்டு குறிப்புகள்.

(1) 'கரகரப்பிரியா இராகத்தில் வரும் சுரங்களுக்கு ஆர்மோனியம் குறைந்ததென்று சாக்ருடன் சாயபு சொன்னார்' என்று சொல்வதும் தங்கள் ஆர்மோனியம் சபைமுன் பரிட்சிக்கப்பட்டுத் தள்ளப்பட்டது என்ற கருத்தடங்கிய வார்த்தைகளைச் சொல்வதும்

(2) 'தங்கள் குழந்தைகளின் கானம் சாக்ருடனுலும் மற்றவர்களாலும் அதிகமாய்ப் புகழப்பட்டது' (அதிசயிக்கப்பட்டது) என்று சொல்வதும் சற்று உண்மையாயிருக்கின்றது.

இவ்விரண்டையும் தாங்கள் ஒப்புக்கொண்டதே போதும். இவ்விரண்டையும் பற்றியே முன் வியாசத்தில் எழுதியிருந்தேன். இப்போதும் ஒப்புக்கொள்ளுகிறீர்கள். தங்கள் ஆர்மோனியம் தள்ளப்பட்டதும் பிள்ளைகளின் கானம் ஒப்புக்கொள்ளப்பட்டதும் பரோடாவில் நடந்தவைகளில் முக்கியமானவை. இவ்விரண்டின் சம்பந்தமாய் உண்மையாக நடந்தவைகளை யாவரும் அறிந்துகொள்ள இங்கு எழுதினேன். இவ்விரண்டையும் தாங்கள் ஒப்புக்கொண்ட பின் இனிமேல் மறுத்து எழுதப் பென் எடுக்கத் துணியமாட்டீர்களென்று நினைக்கிறேன். ஆர்மோனியம் தள்ளப்பட்டது பிள்ளைகளின் கானம் யாவராலும் அதிகமாகப் புகழப்பட்டது (ஆச்சரியமாய் எண்ணப்பட்டது) என்று மாத்திரம் சொல்லியிருப்பீர்களானால் தாங்கள் மிகுந்த புகழ்ச்சிக்குப் பாத்திரராயிருப்பீர்கள். எத்தனை பெயரைப் புண்படுத்திவிட்டீர்கள். இது இந்திய சங்கீதத்திற்கு உதவியல்ல, உபத்திரவம். உபத்திரவப் படுத்தும் தங்களைப்போல் புண்ணிய வான்கள் இனி ஒருவரும் தலையெடுக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்.

எப்படியாவது தங்கள் மனதில் இருந்த உண்மை வெளிவந்தது என்பதை முடிவில் அறிய நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இவ்விரண்டு உண்மைகளும் தங்களை அறியாமலே தங்கள் மூளையிலிருந்து கைவழியாக பேனாவில் இறங்கி மையினால் கடிதத்தில் எழுதப்பட்டன. தங்கள் ஆர்மோனியம் தள்ளப்பட்டதென்றும் பிள்ளைகளின் கானம் புகழப்பட்டதென்றும் தாங்களே சொல்லும் பொழுது நான் வேறு என்ன சொல்ல இருக்கிறது. உண்மையைக் கவனிக்கும் சில கனவான்கள் எழுதிய கடிதத்தினாலும் இவைகள் புலப்படுகின்றன. அவைகளில் இரண்டொன்றைத் தாங்கள் பார்க்கவேண்டியது அவசியம்.

பரோடா கான்பரென்ஸுக்கு வந்திருந்தவர்களில் Mr. Bhatkande B.A., LL.B. அவர்களையும் மைசூர் சமஸ்தானம் வைணீக வித்வான் Mr. கிருஷ்ணராவ் B. A. அவர்களையும் தாங்கள் அறிவீர்கள். அவர்கள் கான்பெரென்ஸுக்கு வந்திருந்தபொழுது கவனித்தவைகளைப் பற்றிக் கடிதங்களில் எழுதியவைகள் தங்களுக்கும் தங்களைப்போல் என் அபிப்பிராயத்திற்கு விரோதமாய் வாதாடும் சில கோணல்களுக்கும் பிரயோசனமாயிருக்குமென்று எண்ணுகிறேன்.

V. N. BHATKANDE Esq., B.A., LL.B.,
Santaram House, Malabar Hill, Bombay.

My Dear Rao Sahib Pandither,

It is a practically long time since we separated at Baroda and I think I ought to take up my correspondence with you once more in my own interest. I may sincerely tell you that your great labours and scholarship very nearly stunned me. I shall be always proud of having the privilege of calling you my friend. I may or may not agree with all your views but that will never prevent me from always bearing in mind the fact that you are a great Music scholar. I am so thankful to Dewan Saheb that he brought us together. I shall certainly not fail to derive considerable benefit from your labours. I have to thank you most sincerely for coming to my help in hitting that mischievous sruti harmonium movement on the head in time. It had very nearly turned the heads of several of our workers here. Mr. Deval had almost persuaded the

educational authorities of this presidency to introduce the Harmonium as a compulsory accompaniment in our schools. But for you I should not have been able to make my poor voice heard. You disposed of Deval's Sharangdev's srutis like a miracle.

Your exposition has however brought to light one fact and that is likely to disappoint all the present music enthusiasts here. I am referring to that part of your book where you say or rather point out—that with the exception of the Sa and its octave, none of the intermediate notes of will exactly correspond with any of our modern notes. You go on to say again that all attempt at reviving Sarangadev's music is bound to be a failure. This conclusion of yours seems to be of tremendous importance. * * * * *

Yours Sincerely,
(Sd.) V. N. BHATKANDE.

எனது பிரியமுள்ள ராவ் சாகேப் பண்டிதரவர்களுக்கு,

நாம் பரோடாவில் ஒருவரை யொருவர் விட்டுப்பிரிந்து வெகுகாலமாகிவிட்டபடியால் என்னுடைய சுயகாரியத்திற்காகவே நான் திரும்ப தங்களுக்கு எழுதுவது அவசியமாய்த் தோன்றுகிறது. சங்கீதத்திற் காகத் தாங்கள் செய்த வேலையும் தங்கள் கல்வித் திறமையும் எனக்கு அதிபிரமிப்பை உண்டுபண்ணின. தங்களே எப்போதும் என் சிநேகிதரென்று அழைக்கும் சிலாக்கியமானது எனக்கு அதிக பெருமை. சங்கீத விஷயமாய்த் தாங்கள் சொல்லும் அபிப்பிராயங்களே நான் சரியென்று ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளா விட்டாலும் தாங்கள் சங்கீதத்தில் வித்வான் என்கிற சங்கதியானது எப்போதும் என்மனதில் இருக்கும். நம்மிருவருடைய சிநேகிதத்திற்கும் காரணராயிருந்த Dewan Saheb அவர்களுக்கு வந்தனம் சொல்லுகிறேன். தங்களுடைய வேலையின் பலனிலிருந்து நான் அதிக பயன் அடைவேன் என்பதற்குச் சந்தேகமில்லை.

தக்க சமயம் பார்த்துத் தாங்கள் எனக்கு உதவியாய் வந்து அநேக கெடுதிகள் செய்து வந்த சுருதி ஆர்மோனியக் கொள்கையின் தலையை உடைத்ததற்காக அதிக நன்றியறிதலுள்ளவனாயிருக்கிறேன். சங்கீத விஷயத்தில் இங்கு உழைக்கும் அநேகருடைய இருதயத்தை இந்தச் சுருதி ஆர்மோனியம் கொள்ளை கொண்டு போய்விட்டது. Mr. தேவால் அவர்கள் இந்த ராஜதானியிலுள்ள பள்ளிக்கூடங்களில் இந்தச் சுருதி ஆர்மோனியத்தைக் கட்டாயமாய் உபயோகப்படுத்தும்படி கலாசாலை அதிபதிகளை ஏறக்குறைய சம்மதிக்கப் பண்ணி விட்டார்கள். தாங்கள் என் உதவிக்கு வராதிருந்தால் என்னுடைய சத்தம் வனாந்தரத்தில் தனியாய்க் கிடந்து கத்துகிறவனுடைய சத்தம் போலாயிருக்குமே. Mr. தேவால் அவர்களுடைய சாரங்கதேவ சுருதிகளைத் தாங்கள் அற்புதமான விதமாய் மாய்த்து விட்டீர்கள்.

ஆனால், தாங்கள் சொல்லும் அபிப்பிராயத்தில் ஒரு விசேஷமானது இங்கிருக்கும் சங்கீத வித்வான் களுக்கு மிகவும் அதைரியத்தை உண்டாக்குகிறது. அதென்னவென்றால், சாரங்கதேவர் முறைப்படி ஒரு ஸ்தாயியில் ஷட்ஜமத்தையும் அதின் எட்டாவது சுரமாகிய ஷட்ஜமத்தையும் தவிர நடுவில் வரும் எந்த சுரமாவது தற்காலத்தில் வழங்கும் சுரங்களுக்கு ஒத்துவராது என்று சொல்லுவதுதான். சாரங்கதேவருடைய சங்கீதத்தைத் திரும்ப எடுத்து நிறுத்துவது கூடாதகாரியமென்றும் தாங்கள் சொல்லுகிறீர்கள். இந்த முடிவான வார்த்தையானது அதிக விசேஷமான ஒரு சங்கதி. * * * * *

தங்களின் உண்மையுள்ள,
(Sd.) V. N. BHATKANDE.

மேற்கண்ட கடிதத்தில் தங்கள் சுருதி ஆர்மோனியம் தள்ளப் பட்டதென்றும் தேவால் எடுத்துச்சொன்ன சாரங்கதேவருடைய சுருதிகள் பிரயோஜனமற்றவைகள் என்று தளளப்பட்டனவென்றும் தெளிவாகச் சொல்லுகிறார். நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை என்று எண்ணுகிறேன்.

SHANTARAM HOUSE, MALABAR HILL,
BOMBAY.
Monday 7th Aug. 16.

DEAR RAO SAHEB PANDITHER,

Many many thanks for the copies of your refutation of Mr. Clement's letters to the *Madras Mail* as also for the two kind letters accompanying the same. I think I have already told you that I would never cease to admire your great labours and scholarship. If I live long enough I won't be surprised to find you one of these days mentioned as the great leader of the Southern Music School. * * * * *

Then Sharangadeva was dragged in and became their sheet-anchor. I was not able to effectively dislodge them from that position with that success which you obtained the other day. I frankly admit. * * * * *

(In my travels throughout India) Not a single Pandit could argue the Shruti question with anything like precision. No authorities were ever cited or discussed. Many made attempts to say that some of the Ragas admitted smaller tones than semitones but when pressed to explain and demonstrate with reasons and authorities they backed out. No *grantha* could be cited as authority for the distribution of the Shrutis, which therefore appeared to be to depend on personal whims. As to the use of the well-known 12 notes *there was absolutely no disagreement.* * * *

But I had full confidence in my God. "Commit thyself unto God and trust in Him and He will bring it to pass," was my motto. Who appealed sincerely to God and did not succeed ? God Almighty saw that I was unjustly being swamped away by influential mischief-makers and decided to help me. He inspired H. H. The Gaekwar and his most sympathetic prime mnister, the large-hearted Dewan Saheb, to take up my cause. Your great assistance also I ascribe to His inspiration. I take no credit to me for all that happened at the Conference. Mr. Deval and Mr. Clements and their great following collapsed like a pack of cards. The Sanskrit Professors corroborated all my interpretations and falsified Deval's. I never had *a Shruti Theory* of my own. I relied upon the 12 notes which were firmly established throughout the country. My contention all through my books was that for popular education in music a system based on the established 12 notes was very convenient and therefore ought to be retained. Of course when the minute Shrutis were unanimously accepted by our scholars and practical experts, I had not the least objection to bow to their decision. It was naturally a great satisfaction to me that the great Conference came and decided that my contentions were not unreasonable. I shall never be elated with success because I know and honestly believe that it was He that was enacting all that was happening there. * * *

Your 24 Shrutis theory is really very interesting. If it is duly accepted in the South by the musicians there, I should be the first person to give it a trial in our music. * * *

Yours sincerely,
(Sd.) V. N. BHATKANDE.

பிரியமுள்ள ராவ் சாகேப் பண்டிதரவர்களுக்கு,

கிளமெண்ட்ஸ் துரை மெயிலில் எழுதிய கடிதத்திற்குத் தாங்கள் எழுதிய மறுப்பும் அத்துடன் அன்பாய் அனுப்பப்பட்ட தங்களுடைய இரண்டு கடிதங்களும் கிடைத்தன. அவைகளுக்காக அநேக வந்தனம் சொல்லுகிறேன். தாங்கள் சங்கீத விஷயத்தில் பட்ட பிரயாசங்களையும் தங்களுடைய கல்வித்திறமையையும்

வியந்து கொள்ளும் விஷயத்தில் நான் ஒருக்காலும் சலிப்பதில்லை யென்று நான் முன்னமே தங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். கடவுள் எனக்கு ஆயுசைக்கொடுக்கும் பக்ஷத்தில் சில வருஷங்களுக்குள் தாங்கள் தென்னிந்திய சங்கீத முறையை ஸ்தாபித்த பெரிய மகான் என்று உலகம் ஒப்புக்கொள்வதைக் கேட்டால் ஆச்சரியப்படமாட்டேன். * * * * * *

பிறகு (Mr. Clements, Mr. Deval) சாரங்கதேவருடைய புஸ்தகத்தை ஆதாரமாகக் கொண்டு அவர் மேல் தங்கள் நங்கூரத்தைப் போட்டார்கள். இந்த நங்கூரத்திலிருந்து அவர்களைக் கிளப்பிவிட எனக்கு அதிக பிரயாசையாயிருந்தபோதிலும், தாங்கள் அவர்களைப் பரோடா கான்பரென்சில் தங்கள் பாய்களை விரித்து முதுகு காட்டி யோட அடித்தீர்கள் என்று மனப் பூரணமாய் ஒப்புக்கொள்ளுகிறேன். * * *

(இந்தியாவின் பல பாகங்களிலும் சுற்றிவந்ததில்) சுருதி விஷயமாய் நியாயாதாரங்களைத் தகுந்த விதமாய் எடுத்துப் பேசக்கூடிய ஒரு வித்வானாவது அகப்படவில்லை. எவராவது தாங்கள் சொல்லுகிறதற்கு ஆதாரத்தை எடுத்துக் காண்பிக்கக் கூடியவர்களாயில்லை. அநேகர், சில இராகங்களில் அரைச் சுரத்தைவிடக் குறைந்த சுருதிகள் இருக்கின்றன என்று சொல்லியும், அவைகளை வாய்ப்பாட்டின் மூலமாவது கணக்குகளின் மூலமாவது ருசுப்படுத்தக் கேட்கப்பட்டபோது பின் வாங்கி விட்டார்கள். ஒரு ஸ்தாயியில் சுரங்களை எப்படி நிரவுகிறது என்பதற்குக் கிரந்தங்களின் மூலமாய் ஒரு ருசுவும் எற்படாததால் அவர்கள் தங்கள் மனதிற்குத் தோன்றியபடி நிரவி வந்தார்கள் என்று வெளியாயிற்று. ஆனால் யாவருக்கும் தெரிந்திருந்த 12 சுரங்களைப்பற்றி சுவ்விடத்திலாவது வித்தியாசமான அபிப்பிராயம் சிறிதேனும் காணப்படவில்லை. * * *

ஆனால் கடவுளிடத்தில் எனக்கு முழுநம்பிக்கையிருந்தது. "உன் வழிகளைக் கடவுளிடம் ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு அவரே உன் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்" என்பதே நான் நம்பின சத்தியம். உண்மையாய்க் கடவுளிடம் தங்கள் காரியத்தை ஒப்புவித்தவர்களில் எவர் சித்திபெறாமற் போனார்? உயர்ந்த பதவியில் இருந்துகொண்டு விஷமம் செய்கிறவர்களால் நான் எடுத்த காரியத்திற்கு இடையூறு உண்டாகிறதென்று அறிந்த கடவுள் எனக்கு உதவிசெய்ய முன்வந்தார். அவர் H. H கெய்க்வார் மகாராஜா அவர்கள் மனதிலும் மிகுந்த பச்சாதாபமும் பெருந்தன்மையும் வாய்ந்த அவர்கள் மந்திரியாகிய Dewan Saheb அவர்கள் மனதிலும் புகுந்து என் காரியத்தை எடுத்து நிறுத்தினார். தாங்கள் எனக்குச் செய்த பேருதவியும் கடவுளின் கடத்துதல்தான். கான்பரென்சில் நடந்த யாதொன்றும் என் செயலல்ல. * * *

Mr. தேவாலும் Mr. கிளமெண்ட்ஸும் அவர்கள் கூட்டமும் ஆர்பாட்டமும் விளையாடும் சீட்டுகளால் கட்டப்பட்ட ஒருவீடு அடியோடு சாய்வதுபோல் விழுந்து சாய்ந்து போனார்கள். என் வியாக்கியானங்கள் எல்லாம் சரியென்றும் தேவாலுடைய வியாக்கியானங்களெல்லாம் பொய்யென்றும் சமஸ்கிருத பண்டிதர்களால் உறுதி செய்யப்பட்டது. நானுக சுருதிமுறை ஒன்றும் உண்டாக்கவில்லை. தேசமெங்கும் சாதாரணமாய் வழங்கிவரும் 12 சுரங்கள்தான் என்னுடைய ஆதாரம். என்னுடைய புஸ்தகங்களில் நான் பேசுகிற கட்சியெல்லாம் யாதென்றால் சாதாரண ஜனங்களுக்குச் சங்கீதம் கற்றுக் கொடுப்பதற்கு 12 சுரங்களாலான முறையே வெகு சுலபம். ஆகையால் அவைகளையே உபயோகத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதே. ஆனால் சபையில் வந்திருந்த கல்விமான்களும் சங்கீத வித்வான்களும் அதிநுட்ப சுரங்களை எதிர்பார்த்து ஒப்புக்கொண்டபோது அவர்கள் தீர்மானத்திற்கு யாதொரு தடையுமின்றி தலை குனிந்து வணங்கினேன். இத்தப்பெரிய கான்பரென்ஸ் ஏற்பட்டு நான் சொல்லிய முறையில் நியாயத்திற்கு விரோதமானது ஒன்றுமில்லை யென்று செய்த தீர்ப்பானது எனக்கு மிகவும் திருப்திதான். இது இயற்கைதானே. ஆனால் கடவுள்தான் அங்கு பிரசன்னமாகி நடந்த வைகளுக்கெல்லாம் ஆதிகாரணராயிருந்தார் என்று நான் நிச்சயமாகவே அறிந்து விசுவாசிக்கிறபடியால் என் காரியம் சித்தியானதற்காக நான் ஒரு நாளும் பெருமை கொள்ளமாட்டேன். * * *

தங்களுடைய 24 சுருதிமுறை யாவரும் பிரீதியாய் ஒப்புக்கொள்ளக் கூடியதாய் இருக்கிறது. தென்னிந்திய வித்வான்களால் அது ஒப்புக்கொள்ளப்படுமாகில் இவ்விடத்திலும் அதை உபயோகித்துப் பார்ப்பதில் நானே முதல்வனாயிருப்பேன். * * * * *

தங்களின் உண்மையுள்ள,

(Sd.) V. N. BHATKANDE.

மேற்கண்ட கடிதத்தால் 'பன்னிரண்டு சுரங்களே எல்லோரும் உபயோகத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்பது என்னுடைய நோக்கம். ஆனால் சபையில் வந்திருந்த கல்விமான்களும் சங்கீத வித்வான்களும் அதி நுட்ப சுரங்களே ஏகோபித்து ஒப்புக்கொண்டபோது அவர்கள் தீர்மானத்திற்கு நான் யாதொரு தடையுமின்றித் தலை குனிந்து வணங்கினேன்' என்று சொல்லுகிறதைத் தாங்கள் கவனிக்கவேண்டும். சுருதிகளைப்பற்றியும் நுட்ப சுருதிகளைப்பற்றியும் வீணையிலும் வாய்ப்பாட்டினாலும், ஆயப்பாலையில் வழங்கும் 12 சுரங்களையும், வட்டப்பாலையில் வழங்கும் 24 சுருதிகளையும், திரிகோணப்பாலையில் வழங்கும் 48 சுருதிகளையும் சதுரப்பாலையில் வழங்கும் 96 சுருதிகளையும் நான் திஷ்டாந்தப்படுத்திக் காட்டியபோது தாங்களும் Mr. Bhatkande அவர்களும் பக்கம் பக்கமாய் வீணைக்குச் சமீபத்தில் இருந்து கவனித்துக் கொண்டிருந்தீர்கள். தூரத்திலிருந்த உங்களை Mrs Atya Begum Fyzee Rahimin அம்மாள் அவர்கள் கிட்டவந்து உட்காரும்படி வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். அவர்களாலும் மற்றும் சபையிலுள்ள கனவான்கள் யாவராலும் ஒருங்கே அதிகமாய் ஆச்சரியத்தோடு கொண்டாடப்பட்ட சங்கீதம் தங்களுக்கு மாத்திரம் அருவருப்பாயிருந்தது என்று சொல்லுகிறீர்கள்.

நுட்ப சுருதிகளை ஒவ்வொன்றாய் நாலு பாலைகளின்படி வெவ்வேறு கீர்த்தனங்களில் போதுமானபடி ருசுப்படுத்திக்காட்டி இதில் ஆக்ஷேபனையிருக்குமானால் சொல்லவேண்டும் என்று சபையோரைக் கேட்கையில் அவர்கள் எவ்வித ஆக்ஷேபனையும் சொல்லாமல் இருந்தார்கள். இப்படிச் சாரங்கர் சுருதி முறை தற்கால சங்கீதத்திற்கு உதவாதென்று ருசுப்படுத்திக்காட்டும் பொழுதும் கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகள் Geometrical Progression படி வரவேண்டுமென்று சொல்லும்பொழுதும் நுட்பமான சுருதிகளைப் பாடிக்காட்டி திஷ்டாந்தப்படுத்தும்பொழுதும் ஆக்ஷேபனையிருந்தால் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டேனே.

அகம்பாவத்தினால் சபையோரை அலட்சியமாக நான் அப்படிக் கேட்கவில்லை. பெரியோர்கள் அநேகர் வந்திருப்பார்களென்றும் என் முறையில் தவறுதல்களைத் திருத்தி அனுக்கிரகம் செய்வார்கள் என்றும் நினைத்து மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொண்டேன். ஆக்ஷேபனை செய்திருந்தால் நுட்ப சுருதிகளைப்பற்றி இன்னும் விரிவாகச்சொல்லி விஸ்தரித்திருப்பேன். ஆனால் தாங்கள் ஒப்புக்கொண்டதற்கு இணங்க அவர்கள் அன்பும் ஆதரவுமான பல இனிய வசனங்கள் சொல்லி ஆரவாரமும் செய்தார்கள். சபையோர் யாவரும் ஒப்புக்கொண்டார்கள் என்று Mr. Bhatkande சொல்லுகிறதற்கு மாறுக 'இது ருசுவல்ல' என்று சொல்லுகிறீர்கள். தாங்கள் ஆர்மோனியத்தை ருசுப்படுத்திவிட வேண்டுமென்று கொண்டுவந்ததுபோல நான் கர்நாடக சுருதி முறைகளை ருசுப்படுத்திஸ்தாபித்து விடலாமென்று நினைத்தது வரவில்லை. இந்தியாவில் எல்லா இடங்களிலுமிருந்து சங்கீதத்தில் தேர்ந்த கனவான்கள் வரும் இடத்தில் பூர்வ தமிழ் நூலின் அபிப்பிராயத்தையும் தற்காலத்தின் அனுபோகத்தையும் தெரிவித்து வைக்கவேண்டுமென்று நான் எண்ணினேன். திவான் சாகிப் V. P. மாதவராவ் அவர்கள் விருப்பத்திற்கும் பரோடா மகாராஜா அவர்கள் அழைப்பு பத்திரத்திற்கும் நான் கீழ்ப்படிய வேண்டுமென்று நினைத்தேன். ருசுப்படுத்திவிடுவதற்கு அனுகூலமாக ஒருவரையும் ஆமோதிக்கும்படி கேட்டுக் கொள்ளவுமில்லை. என் அபிப்பிராயத்தை தாங்கி ரிப்போர்ட்டில் எழுதுவார்களென்று நான் நினைக்கவுமில்லை.

$3\frac{1}{2}$ மணி நேரமாகவும் அதன்பின் தாங்கள் சொன்னதற்குப் பதில் சொல்லும் விஷயமாக $\frac{3}{4}$ மணி நேரமாகவும் எல்லோர் மனதையும் கவர்ந்துகொள்ளும் படியாக என் பிரசங்கமும் பாட்டும் இருந்தாலும் அவைகளைக் கான்பரென்ஸ் முடியும் சமயத்தில் எடுத்துச் சொல்ல மறந்து

போனார்கள். சபையார் யாவராலும் தள்ளப்பட்ட ஆர்மோனியத்தைக்கொண்டு வந்த தங்களைப் பற்றியும் தங்கள் சிஷ்யைகளைப்பற்றியும் இன்னுஞ் சிலரைப்பற்றியும் மாத்திரம் ரிப்போர்ட் வாசித்து முடித்தார்கள். ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று நான் கேட்கும்பொழுது அவசரமாய் ரிப்போர்ட் தயார்செய்தோம், மறந்து போனேம் இனி சேர்த்துக்கொள்வோம் என்று சொன்னார்கள். இவையாவும் Fine arts, Mr. Samuel அறிவார். சபையிலுள்ள யாவரையும் ஆச்சரியப்படுத்தியது என்று தாங்கள்சொல்லும் இக்காரியம் விடப்பட்டுப்போனதைப்பற்றி நான் வருத்தப்படவுமில்லை. இனி ரிப்போர்ட் எப்படித்தயார் செய்வார்கள் என்று நினைக்கவுமில்லை. எப்படியிருந்தாலும் "சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும் நீதி வானத்திலிருந்து தாழப்பார்க்கும்" (சங். 85. 11.) என்ற வேத வசனம்போல இவைகளை இன்னும் சில காலத்தில் பூரணமாய்க் காண்பீர்கள். நீங்கள் மாத்திரம் இதை ஒரு வேளை காணுமல் போனாலும் உலகத்தவர் யாவரும் கண்டு கொள்வார்கள் என்பதற்கு பரோடா கான்பரென்ஸுக்கு வந்திருந்த சபையார் யாவரும் ஒப்புக்கொண்டதே போதுமான சாக்ஷியென்று நினைக்கிறேன். நெருப்புக்குப் புகையும் நீருக்கு நுரையும்போல பரோடாவில் கூடிய ஆல் இந்திய மீயுசிக் கான்பரென்ஸுக்கு தாங்களும் தங்களைச் சேர்ந்த சிலருமிருப்பது பெரிய காரியமல்ல.

LAKSHMIPURAM,
Mysore, 10-8-1916.

DEAR SIR,

In your Tamil letter of invitation, I was glad to find that you were going again to settle the question of Srutis. I heartly support your contention that Sharanga Dev was inaccurate in many respects, and that your exposition was most convincing. I appreciate only 3 or 4 papers that were presented in that Baroda Conference and yours was the most interesting to me of all. Those of Messrs. Clements and Deval were also learned, but the theories did not agree with their practical demonstrations. * * * * *

I agree to your division of the octave into 24 srutis and their demonstration through the help of your accomplished daughters. I am sure that the different notes used for the Ragas as expounded by you are correct. * * * * *

If anything was striking to me in the Baroda Conference, it was your paper. Wishing success to your earnest attempts.* * * *

Yours truly,
(Sd.) H. P. KRISHNA RAO.

லக்ஷ்மீ புரம்
மைசூர், 10—8—1916.

பிரியமுள்ள ஐயா,

தாங்கள் என்னைக் கான்பரென்ஸுக்கு அழைத்த (தமிழில் எழுதப்பட்டிருந்த) கடிதத்தில் கண்ட பிரகாரம் சுருதி விஷயத்தைப்பற்றித் திரும்ப விசாரிக்கப்போகிறேம் என்று எழுதியிருந்தது எனக்கு மெத்த சந்தோஷம். சாரங்கதேவர் பல விஷயங்களில் பிசகிப்போயிருக்கிறார் என்று தாங்கள் சொல்வதை நான் மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளுகிறேன். தாங்கள் சங்கீத விஷயத்தை விஸ்தரித்ததானது எல்லாருடைய மனதிலும் நன்றாய்ப்பட்டது. பரோடா கான்பரென்சில் வாசிக்கப்பட்ட உபந்நியாசங்களில் மூன்று அல்லது

நாலு வியாசங்கள் தான் அதிக விசேஷமாணவைகளாக என் மனதில் பட்டது. அவைகளில் தங்களுடையது தான் எல்லாவற்றிலும் மேலாக எனக்குத் திருப்திகரத்தை உண்டாக்குகிறது. Mr. கிளமெண்ட்ஸ் தேவால் முதலியவர்களுடைய உபந்நியாசங்கள் அதிக கல்வித் திறமையைக் காட்டின போதிலும் அவர்களுடைய முறைகள் வாத்தியங்களின் ருசுவோடு ஒத்திருக்கவில்லை.

ஒரு ஸ்தாயியை தாங்கள் 24 சம பாகங்களாகப் பிரித்த முறையையும் தங்களுடைய சிறப்புவாய்ந்த கல்வித்திறமையுள்ள குமாரத்திகளின் உதவியால் தாங்கள் அதை ருசுப்படுத்தியதையும் சரியென்று ஒப்புக் கொள்ளுகிறேன். பல இராகங்களில் வருவதாகத் தாங்கள் காண்பித்த சுரங்கள் சரியென்பதற்குச் சந்தேகமில்லை.

பரோடா கான்பரென்ஸில் என் மனதில் அதிகமாய்ப் பட்டது தங்கள் உபந்நியாசந்தான்.

தங்களுடைய முயற்சிகளில் கடவுள் கூட இருந்து அவைகளைச் சித்திபெறச் செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
(Sd.) H. P. KRISHNA RAO.

மேற்கண்ட கடிதத்தில் (1) சாரங்கதேவர் பல விஷயங்களில் தவறிப்போயிருக்கிறார் என்பதை மனப் பூர்வமாய் ஒப்புக்கொள்ளுகிறேன்; (2) தாங்கள் சங்கீத விஷயத்தை விஸ்தரித்தது எல்லோர் மனதிலும் நன்றாய்ப் பட்டது; (3) தங்களுடையது [வியாசம்] தான் எல்லாவற்றிலும் மேலாக எனக்குத் திருப்திகரத்தை யுண்டாக்குகிறது; (4) Mr. Clements, தேவால் முதலியவர்களுடைய உபந்நியாசங்கள் வாத்தியங்களின் ருசுவோடு ஒத்திருக்கவில்லை; (5) ஒரு ஸ்தாயியை 24 சமபாகங்களாகப் பிரிப்பதையும் தங்கள் குமாரத்திகளின் உதவியால் அதை ருசுப் படுத்தியதையும் சரியென்று ஒப்புக்கொள்ளுகிறேன்; (6) பல இராகங்களில் வருவதாகத் தாங்கள் காண்பித்த சுரங்கள் சரியென்பதற்குச் சந்தேகமில்லை; (7) பரோடா கான்பரென்ஸில் என் மனதில் அதிகமாகப் பட்டது தங்கள் உபந்நியாசந்தான் என்று சொல்லும் குறிப்புகளைத் தாங்கள் கவனிப் பீர்களானால் என் வியாசத்தில் சொல்லியிருக்கும் குறிப்புகள் முற்றிலும் சரியானவை யென்று தங்களுக்கு விளங்கும்.

சங்கீத ரத்னகரருடைய துவாவிம்சதி சுருதி முறை தற்கால சங்கீதத்திற்கு ஒத்துவராதென்று பல விதத்திலும் ருசுப்படுத்திக் காட்டினேன். தங்கள் கணித முறையும் தங்கள் ஹார்மோனியமும் முற்றிலும் ஒத்துவராதவை யென்று ருசுப்படுத்தினேன். ஒரு ஸ்தாயியில் பன்னிரண்டு $\frac{1}{2}$ சுரங்களும் இருபத்துநான்கு $\frac{1}{4}$ சுரங்களும் நாற்பத்தெட்டு $\frac{1}{8}$ சுரங்களும் தொண்ணூற்றாறு $\frac{1}{16}$ சுரங்களும் வருகின்றனவென்று கணித மூலமாகவும் வீணையில் கண்ட அளவு மூலமாகவும் சுரம் சுருதிகள் வரும் இராகங்கள் மூலமாகவும் விளக்கினேன். இம் மூன்றையும் பற்றி இங்கே சொல்லுகிறவார்த்தைகளைத் தாங்கள் கவனிக்கவேண்டும்.

'சாரங்கர் பல விஷயங்களில் தவறிப்போயிருக்கிறார். Mr. Clements, தேவால் முறைகள் வாத்தியங்களின் ருசுவோடு ஒத்திருக்கவில்லை. சுரம் சுருதிகளைத் தாங்கள் ருசுப்படுத்தியதை சரியென்று ஒப்புக்கொள்ளுகிறேன். தாங்கள் காண்பித்த சுரங்கள் சரியென்பதற்குச் சந்தேகமில்லை' என்று சொல்லும் குறிப்புகள் என் அபிப்பிராயம் சரியென்று சொல்வதற்குப் போதுமானவையல்லவா? இவைகளைப் பார்க்கிலும் நான் என்ன திஷ்டாந்தம் கொடுக்கக்கூடும்?

'பரோடா கான்பரென்ஸில் என் மனதில் அதிகமாய்ப்பட்டது தங்களுடைய வியாசந்தான்' என்று கல்வித்திறமையுள்ளவரும் வைணீக வித்வானுமாயிருக்கிற ஒருவர் சொல்லும் சத்தியத்தை நீங்கள் எப்படி மறுக்கக்கூடும்? முழு அபத்தம் எழுதியிருக்கிறீர்களே. இன்னும் இப்படிப்பட்ட அநேக கடிதங்கள் காட்டக்கூடும். இவர்கள் இருவரும் பரோடா கான்பரென்ஸுக்கு வந்திருந்தவர்கள். ஆகையினால் இவர்கள் இருவர் கடிதத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டேன்.

என்னுடைய சுருதிமுறைதள்ளப்பட்டது. தங்கள் சுருதி முறை யாவராலும் அங்கீகரிக்கப்பட்டது என்று மாத்திரம் எழுதியிருந்தால் நான் தங்களைப் பெருமை பாராட்டிச் சொல்ல ஏதுவாயிருக்கும். இவ்விரண்டு குறிப்புகளுக்கு மாத்திரம் பதில் எழுதியிருப்பேன். ஆனால் இவைகளோடு கலந்த மற்ற குறிப்புகள் அவற்றிற்கு பதில் எழுதும் படியாக என்னைத் தூண்டிவிட்டன. எல்லாம் எழுதி முடிந்த பின் அவைகளுள் இவ்விரண்டையும் பற்றிச்சொல்வது அவசியமாயிற்று. தங்கள் ஆர்மோனியம் தள்ளப்பட்டதென்று தாங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்கள். பிள்ளைகளின் கானம் சாக்ரூடன் சாயபு அவர்களாலும் மற்றவர்களாலும் அதிகமாய்ப் புகழப்பட்டது (ஆச்சரியமாய் எண்ணப்பட்டது) என்றும் சொல்லுகிறீர்கள். இவ்விரண்டு முக்கியமான குறிப்புகளையும் தாங்களே ஒப்புக்கொண்டது யாவராலும் கவனிக்கப்படத்தக்கது.

இவ்விரண்டு விஷயங்களில் தங்கள் சுருதிமுறையும் ஆர்மோனியத்திலுள்ள சுரங்களும் சபையிலுள்ள யாவராலும் அனுபோகத்திற்கு வராதவைபென்று தள்ளப்பட்டன. தாங்களும் அந்தச் சமயத்தில் ஒப்புக்கொண்டு விட்டதனால் சபையிலுள்ள ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோராலும் உங்கள் சுருதிமுறை தள்ளப்பட்டதாகவில்லையா? அப்படியே பிள்ளைகள் பாடிய கர்நாடக சங்கீதமும் ஒரு ஸ்தாயியில் 12, 24, 48, 96 போன்ற நாத வேற்றுமைகளும் அடங்கிய நாலு அட்டவணைகளில் பல இராகங்கள் வாசித்துக் காட்டியபோது சாக்ரூடன் சாயபு அவர்களும் சபையாரும் மிகுந்த ஆச்சரியப்பட்டார்கள் என்று தாங்கள் சொல்லும் பொழுது இதுவரையும் காணுமலும் கேட்காமலுமிருந்த நூதனமான ஒன்றைக் கண்டு கேட்டு ஆனந்தித்தார்கள் என்று தாங்கள் சொல்லுகிறதாகத் தெரிகிறதே. தாங்களும் பிள்ளைகளின் சமீபத்திலிருந்து நன்றாய்க் கவனித்தீர்கள். அந்தச் சமயம் தாங்கள் ஒன்றும் குறைசொல்லவில்லை. 'புகழ்ந்து கொண்டார்கள்' என்பதனால் சபையிலுள்ளோரும் தாங்களும் என் சுருதி முறையையும் அதன்படி பாடிய பாட்டையும் ஒப்புக் கொண்டதாயிற்றே. ஆறுமாதத்திற்கு முன் நடந்தவைகளுக்கு விரோதமாய் இப்பொழுது சொல்லுவது முற்றிலும் சரியல்லவென்று இதைப்பார்க்கும் அறிவாளிகள் யாவரும் காண்பார்கள்.

உண்மையான கணக்கிற்கும் இனிமையான பாட்டிற்கும் அனுபோகமான திஷ்டாந்தங்களுக்கும் தாங்கள் கொஞ்சமாவது அசையாமல் பதிலெழுதக் கூடிய தீரர் என்று நான் நினைக்கிறேன். இந்திய சங்கீதத்தைப்பற்றி மற்ற தேசத்தார் தவறுதலாய் எண்ணும்படி தாங்கள் ஒரு இடறு கல்லாயிருப்பீர்களோ என்று தோன்றியதால் இதை எழுதினேன்.

தங்களைப் போலவே தென்னாட்டில் துவாவிம்சதி சுருதி என்று வாதாடுகிறவர்களுக்கு.

தங்களைப்போல் ஒழுங்கீனமான சுர வரிசைகளையும் குதர்க்கங்களையும் சொல்லும் பலர் இக்காட்டிலுமிருந்து தென் இந்திய சங்கீதத்திற்குக் குழப்பம் உண்டாக்குகிறதை அறிந்து தங்களுக்கும் மற்றவருக்கும் இலகுவாய் விளங்கக் கூடியவைகள் எவைகளோ அவைகளையே எழுதினேன்.

1. 'வீணையில் பஞ்சமம் குறைகிற'தென்று கான்பரென்ஸில் வாதாடிச் சபையோரால் வீணையில் பஞ்சமம் சரிதான் என்று தீர்க்கப்பட்டுத் தோல்வியடைந்த சென்னை மைலாப்பூர் சுந்தரமையரும்,

2. இருபத்திரண்டு சுருதியின்படி ஒரு துக்கடா பாடிக்காட்ட வேண்டுமென்று கான்பரென்ஸில் கேட்டபொழுது சபைமுன் பாட முடியாமல் ஒளிந்து கொண்ட பூவனூர் மகா-ரா-ரா-ஸ்ரீ பிரதாப இராமசாமி பாகவதர் அவர்களும்,

3. 'தன்னியாசியில் காந்தாரம் குறைந்து வரவேண்டு'மென்று சொல்லி சபையோரால் கூடியேவரவேண்டும் என்று சொல்லக்கேட்டு மௌனம்பூண்ட மகா-ரா-ரா-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர் அவர்களும்,

4. 'ஒரு ஸ்தாயியில் ச-ப முறையில் 53 சுருதிகள் வரவேண்டு'மென்று சாதித்த மகா-ரா-ரா-ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களும்,

5. 'சிலப்பதிகாரத்தில் சங்கீதத்தைப்பற்றி இரண்டு வரிதான் இருக்கின்றன' என்று தஞ்சை கான சபையில் சொன்ன மகா-ரா-ரா-ஸ்ரீ T. N. இராதாகிருஷ்ண ஐயர் B. A., அவர்களும்,

6. 'ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் வருகின்றன' வென்று சொன்ன ராவ் பகதூர் மகா-ரா-ரா-ஸ்ரீ நாகோஜிராவ் B. A. அவர்களின் அபிப்பிராயத்தைத் தாங்கி நிற்கும் மகா-ரா-ரா-ஸ்ரீ சுந்தரமையர் B. A., L. T. அவர்களும்,

7. 'சுருதி விஷயம் நமது புத்திக்கெட்டாதது இப்பொழுது பிரயோஜனப்படாதது, ஒரு காலும் முடிவுபெறுத சாஸ்திர சண்டையுடையது, துட்பமான சுருதிகளைக் கவனித்துக் கீர்த்தனங்கள் பாடுவதற்கு அநேக சதாப்தங்களாகிவிடும், இவ்விதமான சீர்திருத்தம் இப்போது நமக்கு வேண்டாம், தஞ்சாவூர் சங்கீத கான்பரென்ஸ் 24 சுருதிகளுக்கும் 22 சுருதிகளுக்கும் ஏற்பட்ட போர்க்களமாய் முடிந்தது என்று எழுதிய மகா-ரா-ரா-ஸ்ரீ C. R. சீனிவாச ஐயங்கார் B. A. அவர்களும்,

8. மைலாப்பூர் மகா-ரா-ரா-ஸ்ரீ A. P. கணேச ஐயர் அவர்களும் இன்னும் இவர்கள் போதனைக்குட்பட்ட சில புண்ணியவான்களும் கடந்தவைகளுக்கு முற்றிலும் விரோதமாகத் தங்களைப்போல் பேப்பர்களுக்கு எழுதினார்கள்.

இவர்களுடைய கடிதம் சிலவற்றிற்கு எனது சிநேகிதர்கள் பதில் எழுதியிருந்தார்கள். எல்லாவற்றிற்கும் அவர்கள் எழுதவில்லை. நானும் எழுத நினைக்கவில்லை. ஆனால் தங்கள் கடிதத்திற்கு எழுதவேண்டியது அவசியமாயிற்று. அதோடு தங்களைப் போல் பேப்பருக்கு எழுதிய தென்தேசத்துக் கனவான்களும் அறிந்துகொள்வதற்கு முக்கியமாய் எழுதவேண்டியதாயிற்று.

மற்றும் முக்கியமான சில கடிதங்களையும் அவைகளுக்கு எழுதிய பதிலையும் கருணாமிர்த சாகரத்தில் 'தென்னிந்திய சங்கீதத்தின் சுருதிகளும் ஆல் இந்திய சங்கீத கான்பரென்ஸும்' என்ற தலைப்பின் கீழ்க் காணலாம்.

முடிவாக.

(1) தங்கள் அபிப்பிராயத்தின்படியும் பூர்வத்தோரின் அபிப்பிராயங்களின்படியும் தென்னிந்தியாவிலுள்ள தவசிரேஷ்டர்கள் அபிப்பிராயத்தின்படியும் தாங்கள் திஷ்டாந்தம் கொடுத்த ஏணிப்பழுவைப் போலவும் சமமான ஓசையுடைய சுரங்களாலான சங்கீதமே சரியான சங்கீதம்.

(2) சமமான ஓசையுடைய சுரங்களாலான சங்கீதமே பரோடாவில் என்னால் காட்டப்பட்டது. அம்முறையே பூர்வ தமிழ்மக்களின் சாஸ்திர ஆதாரத்திற்கும் தற்கால அனுபோகத்திற்கும் அணுப்பிரமாணமும் பிசகாமல் ஒத்துவாக்கூடியது. இனிவரும் காலத்திலும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுக் கொண்டாடக்கூடிய முறையென்றும் சங்கீத சாஸ்திரத்திற்கே புதிய உயிர் நிலை என்றும் நான் நிச்சயம் சொல்லுவேன். ஆனால் தங்கள் ஒழுங்கினமான முறை தள்ளப்பட்டுப் போயிற்று.

(3) தென்னிந்தியாவில் பிடிவாதமாய் துவாவிம்சதி சுருதியென்று சாதிக்கும் சிலரையும் முன்பின் அறியாமல் ஒரு ஸ்தாயியில் 25 சுருதிகள் என்று சாதிக்கும் தங்களையும் தவிர தற்கால அனுபோகத்தையும் பூர்வ முறைகளையும் கவனிக்கும் அறிவாளிகளும் இனிவரும் சந்ததியாரும் அனுஷ்டிக்கக்கூடிய உத்தமமான முறை என் முறையேயென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன்.

(4) சுருதி சமமாய் வரவேண்டுமென்ற பூர்வ தமிழ் முறைப்படியே பல அனுபோகங்களைக்கொண்டு திஷ்டாந்தப் படுத்திக்காட்டுவேன். அவைகளுக்கு நேர் விரோதமாய்ச் செய்யும் தங்களுடைய முறை முற்றிலும் ஒழுங்கினமானதென்றும் ஒழுங்காயிருக்கும் கர்நாடக சங்கீதத்தையும் இந்துஸ்தான் சங்கீதத்தையும் கெடுத்துக்கொண்டிருக்கும் என்றும் நான் நிச்சயமாகச் சொல்லுவேன். தாங்கள் இனி இப்படிச் செய்யாதிருக்கும்படி மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு தாங்கள் இப்போது எழுதியிருக்கும் கடிதத்தைப்போல் எழுதவீர்களானால் இங்கிலீஷ் சங்கீதமாவது கர்நாடக சங்கீதமாவது இந்துஸ்தான் சங்கீதமாவது முற்றிலும் தெரியாதவர்களென்று மற்றவர்கள் உங்களை ஏளனம் செய்யும்படி நேரிடும். ஏனென்றால் பூர்வ தமிழ் மக்கள் ஆயப்பாலையில் வழங்கிவந்த 12 சுரங்களும் இந்துஸ்தான் கீதத்திலும், இங்கிலீஷ் சங்கீதத்திலும் வழங்கி வரும் சுரங்களும் ஒன்றுகவே இருக்கின்றன.

(5) பரோடா மகா ராஜா அவர்கள் நடத்திய சபையையும் சபையில் வந்திருந்த வித்வான்களையும் அவமதிக்கிறதோடு அங்கு நடந்த உண்மைகளை வெளியிடாமல் அதற்கு மேர் விரோத மானவைகளைத் தாங்கள் வெளியிட்டிருக்கிறீர்கள். இந்திய சங்கீதத்திற்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென்று தாங்கள் கொண்ட ஆவலை நான் மிகவும் மெச்சிக்கொள்ளுகிறேன். ஆனால் கெடுதல் செய்கிறீர்கள்.

(6) தாங்கள் எண்ணுகிறபடி ஒரு காலத்திலும் இந்திய சங்கீதத்தை எடுத்து நிறுத்த தங்களால் முடியாதென்று நிச்சயம் சொல்லுவேன். சுருதிகள் சம அளவுடையவைகளாய் வரவேண்டுமென்று சொன்ன பூர்வ தென் தமிழ் முனிவர்களை 'சாஸ்திரோக்தமில்லாத ஒரு முறையைக் கண்டுபிடித்தான்' என்று சொன்னதற்குப் பதில் அவர்கள் தங்கள் முறையையே பரிகாசக் கூத்தாக்கிவிட்டார்களென்று நீங்கள் நன்றாய் நினைக்கவேண்டும்.

(7) இதன்முன் சங்கீத விஷயமாய் யாதும் அறியாத நான் விசாரிக்கத் தொடங்கிய கால முதல் அப்போதைக்கப்போது அறிந்துகொள்ளவேண்டிய அளவிற்குத் தகுந்தபடி அறியாதவைகளை அறியும்படி செய்து இவ்வளவு தூரம் எனக்கு அனுக்கிரகம் செய்த பெரியோர் தங்களுக்கும் அனுக்கிரகிக்கும்படி கடவுளை பிரார்த்திக்கிறேன்.

அன்புள்ள துரையே! தங்கள் கடிதத்திற்கு வேலைத் தொல்லையினால் பதில் எழுதக் கூடாமலிருந்தாலும் சுருக்கமாகத் தங்களுக்கு இதை எழுதினேன். என் வேலைகளைச் செய்ய வேண்டியிருப்பதால் தற்சமயம் தங்களிடத்தில் உத்திரவு பெற்றுக்கொள்ளுகிறேன். தாங்கள் என் முறைப்படி இந்திய சங்கீதத்தின் உண்மையை அறிந்துகொள்வீர்களானால் சந்தோஷமடைவீர்கள். தங்களுக்கு என் அன்பான வந்தனம்.

தங்கள் உண்மையுள்ள,
மு. ஆபிரகாம் பண்டிதர்,
தஞ்சாவூர்.

LETTER NO. 19

SHANTARAM HOUSE, MALABAR HILL,
BOMBAY.
Monday, 7th Aug. 16.

DEAR RAO SAHEB PANDITHER,

Many many thanks for the copies of your refutation of Mr. Clement's letters to the *Madras Mail* as also for the two kind letters accompanying the same. I think I have already told you that I would never cease to admire your great labours and scholarship. If I live long enough I won't be surprised to find you, one of these days, mentioned as the great leader of the Southern Music School.

I write to-day explaining generally my activities on this side and thereby removing any possible misapprehension that may have crept into your mind about my attitude towards some of the leading questions on the subject of music. I do not know which of my

publications have come to your notice, but I hope you have seen my Hindustani Sangit Paddhati in Marathi. The second Volume of the Paddhati briefly deals with the Shruti theories of our writers. here. *I have personally no Shruti theory of my own.* The Shruti discussion in the beginning of the 2nd Volume of the Paddhati is practically a refutation of Mr. Deval's theories by the *Reductio ad absurdum* meth d. The irony running through the chapter is patent to an intelligent Marathi reader. My publications *Parijat Praveshika* and *Ragabodha Praveshika* became necessary when Mr. Deval and his comrades were pressing *Ahobala* and *Somnath* into service. These publications put a stop to further mischief in that direction.

Then Sharangadeva was dragged in and became their sheet-anchor. I was not able to effectively dislodge them from that position with that success which you obtained the other day, I frankly admit.

But in the Paddhati I could show that Mr. Deval could not father his Shrutis on the author of Ratnakar. I shall now tell you, in brief, the whole history from our point of view.

I travelled for two or three months in the Southern Presidency in search of useful information in the cold weather of 1904. I had learnt my Hindusthani music under first class masters and was thinking of taking some steps to evolve a tolerably workable music system for popular use on this side. I wanted a good rational and workable model for the same. I consulted the late Mr. Tirumalaya Naidu and Pandit Singarachary at Madras. Under their advice I visited Tanjore. I made then the acquaintance of Messrs. C. Nagoji Rao, P. Subrahmanya Shastri, Srinivas Rao, Ramanna, Jugunnath Goswami, Panchapkesa Bhagavat, Muttaya Bhagvat, Seturam Das Swami and some others and freely discussed music with them through interpreters. P. Subrahmanya Sastri was not so well up in the subject then as he appears to be now. There was one thing which *invariably* came into my observation and it was this. The 12 *Hindustani* notes I sang to them were declared by the musicians there as their *own 12 principal notes also.* It was very encouraging to me. I was anxious to obtain a system of *Parent modes or Melakartas*, which would be at once scientific and exhaustive for the classification of the 150 Ragams in use in our part of the country. My idea was that such a good foundation for the system would combine permanence and rationality. I visited the Sarasvati Bhandara or Palace Library but did not find any Sanskrit Grantha there, which was likely to solve my difficulty. Jagannath Goswami did show me a Sanskrit Manuscript containing the 72 Melas and their *Janya Ragas*, but the same was incomplete. I have already published that small work and called it *Raga Lakshna*, because the Swami said that was its name. From Tanjore I was directed by C. Nagoji Rao to Ettayapuram, where the late Subrama Dikshit Pandit lived. I learned good many things from that gentleman. He was really a great man and I liked him very much. He gave me a copy of the most valuable manuscript *Chaturdandi Prakashika*. He died before sending me the first and the last chapters but I got almost all I wanted through my valuable friend, *Mr. A. Krishnaswami Aiyar* of Tinnevelly. I have the highest respect for *Venkatmakhi Pandit*, who could write a work like that. I liked his frankness and powerful language as also his spirit. I visited Mysore, Ramnad, Rameshwar, Shrirang Madura and other places, but did not obtain much that, in my opinion, would be of material use to the Northern system of music. I knew full well that the northern system had many points quite peculiar to itself, but the fact that the principal 12 notes in the country were the same decided me to adopt *Chaturdandi's 72 Melakarta system* as a good basis for the Northern Ragas. The method of classifying Ragams under their Janaka Melas was a very old one and I saw no objection to adopt it for my design. The next three or four cold weather tours were undertaken by me to the Northern cities to satisfy myself that the Northern Musicians had none of their own independent

systems, and to collect opinions on the question of differentiating characteristics of the different Ragas and so forth. I found Ratnakar and Darpana constantly cited as authorities in the north, but none who could rationally explain how they became useful. I visited Nagpur, Calcutta, Puri, Vijayanagar, Hyderabad, Nasik, Delhi, Agra, Jeypore, Mathura, Lucknow, Benares, Gaya, Baroda, Kathiawar, Karachi, Cutch, Lahore and several other places—but failed to meet a single decent Pandit who could argue the subject on the strength of any Sanskrit Granthas. I got much valuable practical information no doubt and I utilized all that in the books I have written.

(In my travels throughout India) Not a single Pandit could argue the Shruti question with anything like precision. No authorities were ever cited or discussed. Many made attempts to say that some of the Ragas admitted smaller tones than semitones but when pressed to explain and demonstrate with reasons and authorities they backed out. No *grantha* could be cited as authority for the distribution of the Shrutis, which therefore appeared to be to depend on personal whims. As to the use of the well-known 12 notes *there was absolutely no disagreement.*

I finished my last tour in 1909 and took up the work of writing my book. I retired from business for that purpose and devoted my whole time to the work. I first wrote the Ssnskrit *Lakshya Sangit*, in which I included all that I had to say about the Hindusthani system. My friends who were in my confidence told me that the theories in the book could not be followed quite clearly and asked me to write a commentary in Marathi. Thus the Hindustani Paddhati came into existence, I took, as I said, *Chaturdandi Melakartas* as my foundation and classified all the Northern Ragas thereunder. My friends tell me that my works are favourably received and that even the professionals accepted them as authoritative. I have cited Sanskrit Texts all through to show how the Ragas went through different phases before they assumed their present shapes which I have fully explained in all possible details and with due illustration. I won't refer to that now and shall come to the point where Mr. Deval comes in.

Messrs. Deval and friends came in the mean while on the scene. They brought out the 22 Shrutis *of the ancient Rishis of* 2000 *years ago.* They supported them by quotations or rather misquotations from Parijat and Ragabodha. They said I was wrong in establishing a popular music system on the *basis of 12 notes.* They flourished their Dichord and dazzled their audiences. Mr. Clements interested himself in the subject and that added considerably to the strength of the combination. Mr. Deval was neither a musician nor a scholar, but the same could not be said of Mr. Clements. I wrote the 2 *Praveshikas* and showed that the 22 Shrutis of Deval had no basis in those books which they cited. The Phil-harmonic Society was my own suggestion and I was present at its first meeting at Satara, but I could not later on associate with its work which I knew to be wrong and had to keep aloof from it. In the meantime Mr. Clements brought out into prominence the great 22 Shruti harmonium and sought the patronage of the Governor and the Director of Public Instruction for the same. Indeed it was feared at one time that the instrument would have a place in every one of the Musical institutions in this Presidency, under the control of Government. The War came in and postponed the project. My Praveshikas had one effect. Mr. Deva. gave up his original stand on the the *Granthas of Ahobala and Somnatha* and quietly fathered the 22 Shrutis on Sharangadeva! That led to my including a chapter on the Shrutis in the 2nd Vol. of the Paddhati. The *reductio ad absurdum* process there is, as I said, patent to any Marathi reader My writings no doubt succeeded in throwing suspicion on Mr. Deval's Shrutis, but the influences of Mr. Clements still invested his book with some importance and I should say capacity for mischief. Mr. Deval continued to give demonstrations of his Shrutis in the Southern Maratta country but after my publications, he did not meet with the success he expected. He never

ventured to bring his demonstrations to Bombay. His agitation was however causing me any amout of anxiety because it was quite unfairly destroying the useful work I was doing. I knew he was wrong but I could not cope with the influence of his champion Mr. Clements. I have a very great respect for Mr. Clements. He is a great scholar and takes real interest in Indian Music. I tried to explain matters to him in the right spirit but he was so fascinated with Deval's Shrutis—perhaps he sincerely believed that Deval interpreted Sharangadeva right—that he practically refused to listen to me. He ignored me and my labours and set about distributing the 22 Shrutis among the Hindusthani Ragas with the help of musicians not carrying any very high reputation in the north. He began by giving *3 Shruti Ri* and *3 Shruti Dha* and *Ati Komal Ga* and *Atikomal Ni* to the common Raga *Kaphi*. He said that was the *real Shudha Scale* of the ancient Rishis and munis as also of Sharangdeva, commenced to evolve scales for Kalian, Khawaja. and etc. from that scale. This, I saw, was rather serious. The northern musicians, as also the Southern ones. used *Chatushrutis Ri and Dha* and *Sadharana Ga, Kaishik Ni* in *Kaphi* Ragam, and I told him so, but he said Mr. Deval was right and I was wrong, and went on with his new classifications. I drew his attention to this practice of the *Vainikas* in the country but was told that they were all playing wrong. He went the length of writing to me that it was the Vina players and the Nagsur players who had spoiled the real Hindusthani music. Reconciliations between us thus became impossible. I appealed to Deval and requested him to correct the slight errors he had drifted into and thus come and co-operate with me. I told him I was not against the use of micro-tones or Shrutis in such of the Ragas as really required them, but all I wanted was they should not be fathered on the Sanskrit writers so as to render their works ridiculous. I proposed that we should fix the Shrutis for the Ragas in a sort of Conference of the Pandits and experts. He refused the offer saying he had gone too far to recede, and said he would stand or fall with his protector Mr. Clements. Thus a great cloud was hanging over my head. The position was this. *Either Deval was right or I was*, all my labours, perfectly honest and disinterested, were to come to nothing simply because Deval had a strong and influential friend and I had not.

But I had full confidence in my God. "Commit thyself unto God and trust in Him and He will bring it to pass," was my motto. Who appealed sincerely to God and did not succeed ? God Almighty saw that I was unjustly being swamped away by influential mischief-makers and decided to help me. He inspired H. H. The Gaekwar and his most sympathetic prime minster, the large-hearted Dewan Saheb, to take up my cause. Your great assistance also I ascribe to His inspiration. I take no credit to me for all that happened at the Conference. Mr. Deval and Mr. Clements and their great following collapsed like a pack of cards. The Sanskrit Professors corroborated all my interpretations and falsified Deval's. I never had *a Shruti Theory of my own*. I relied upon the 12 notes which were firmly established throughout the country. My contention all through my books was that for popular education in music a system based on the established 12 notes was very convenient and therefore ought to be retained. Of course when the minute Shrutis were unanimously accepted by our scholars and practical experts, I had not the least objection to bow to their decision. It was naturally a great satisfaction to me that the great Conference came and decided that my contentions were not unreasonable. I shall never be elated with success because I know and honestly believe that it was He that was enacting all that was happening there.

I have nothing more to tell you now about my relations with Deval and his friends. I still love them as my friends and brothers because I know they too are working in the cause of our Indian Music with the same enthusiasm. Such tiffs are quite natural and unavoidable. They invariably lead to good results. I never claimed to be infallible myself. I have always corrected

mistakes which I committed, as will appear from my Hindusthani Paddhati. One must humbly go on working without regard to name or fame—and leave it to Him to do the rest. Our ancestors—whom we can never equal-wrote their great works without caring to say who they were or when they wrote! But I must not be a philosopher.

I shall distribute the pamphlets you hâve kindly sent to my friends. I thank you most sincerely for the kind invitation for the Sangit Conference at Tanjore next week. I am sorry owing to some unavoidable engagement here I cannot make it convenient to attend this time. I beg to be excused on that account. Give my best compliments to our worthy friend the Dewan Saheb. You may assure him that I shall never never forget the kindness he has constantly shown to me ever since our acquaintance. I shall write to him separately in a day or two.

You are good enough to ask me how I have liked your exposition of Sharangadeva's Shrutis. What answer can I make? You have a better means of understanding Sharangadeva than myself. I do see there is considerable force in your arguments and it will require a greater intellect than mine to find flaws in them. What I would like you now to do is to take up the Ragams and Jatis of Ratnakar—a few of them—and show how your Shrutis and Swarams fit into them. Sharangadeva's is a great work admittedly. The Ragams he names and describes are known to us by their names at least. We sing them all in our own way. You will be doing invaluable service by tackling them; at least some of them. It will not be enough to say Sharangadeva misunderstood some Tamil texts and based his system on impossible lines. Shrutis and Swarams after all are intended to represent actual practical music i.e, the Ragams, and if that is so, it naturally follows that those Shrutis or Swaras only will be acceptable which render these Ragams intelligible. I think you will quite agree with me in the above line of argument. Sharangadeva is comparatively a recent writer, and as such, must have sung his Ragams very nearly just as we have been singing them now. An attempt therefore should be made to solve his music with the help of the Shrutis and Swarams you have deduced from his own descriptions. When you succeed in doing that all controversy will come to an end. "The taste of the pudding is in its eating" as they say. I am only putting forward the common sense view. Sharangadeva was either a musicina ro a fool. A fool could not have written, people will say, what he has written. If he was then a great musician, show what he sang practically by correctly explaining his Ragams with the help of his Lakshanas and obtain the verdict in your favour. So long as that is not done people will simply say "here is *another theory which is worth consideration*, but *which remains to be proved.*" I put before you the argument of the lay mind.

Your 24 Shrutis theory is really very interesting. If it is duly accepted in the South by the musicians there, I should be the first person to give it a trial in our music.

But I should submit it to a special committee of the Northern experts for geting it tested. It is just such things that are to be done in a conference. My idea is that everything we do for the public should be done with their full consent and knowledge. Discord is hardly the best instrument of success.

Pardon me for having inflicted such a long letter on your valuable time and patience I had no right to do so. I only did it because I thought you might be under the mis-apprehension that I have had a Shruti theory for myself and was reticent in my arguments or exchange of views.

With best Namaskarams to yourself and your sons and daughters.

I remain,

Yours sincerely,

BHATKHANDE.

பிரியமுள்ள ராவ் சாஹேப் பண்டிதரவர்களுக்கு,

கிளமெண்ட்ஸ் துரை மெயிலில் எழுதிய கடிதத்திற்குத் தாங்கள் எழுதிய மறுப்பும் அத்துடன் அன்பாய் அனுப்பப்பட்ட தங்களுடைய இரண்டு கடிதங்களும் கிடைத்தன. அவைகளுக்காக அநேக வந்தனம் சொல்லுகிறேன். தாங்கள் சங்கீத விஷயத்தில் பட்ட பிரயாசங்களையும் தங்களுடைய கல்வித்திறமையையும் வியந்து கொள்ளும் விஷயத்தில் நான் ஒருக்காலும் சலிப்பதில்லை யென்று நான் முன்னமே தங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். கடவுள் எனக்கு ஆயுசைக்கொடுக்கும் பக்ஷத்தில் சில வருஷங்களுக்குள் தாங்கள் தென்னிந்திய சங்கீத முறையை ஸ்தாபித்த பெரிய மகான் என்று உலகம் ஒப்புக்கொள்வதைக் கேட்டால் ஆச்சரியப்படமாட்டேன்.

சங்கீத விஷயமாய் நான் இந்தப் பக்கங்களில் செய்துவரும் வேலையைப்பற்றித் தங்களுக்குத் தெரிவிப்பதே இந்தக் கடிதத்தின் முக்கிய நோக்கம். அப்படி விபரமாய்த் தங்களுக்குத் தெரிவித்தால் சங்கீத விஷயத்தில் முக்கியமான சில விஷயங்களைப்பற்றி நான் கொண்டிருக்கிற அபிப்பிராயம் இன்ன தென்பது தங்களுக்குத் தெரிவதோடுங்கூட அது விஷயத்தைப்பற்றித் தாங்கள் எதாவது தப்பான அபிப்பிராயப் பட்டிருந்தாலும் அதுவும் நீங்கிப்போகும். நான் வெளியிட்டிருக்கும் புஸ்தகங்களில் எவைகளைத் தாங்கள் வாசித்திருப்பீர்களோ எனக்குத்தெரியாது. ஆனால் நான் மராத்தி பாஷையில் எழுதின "இந்துஸ்தான் சங்கீத பத்ததி" என்னும் நூலைப்பார்த்திருக்கலாம் என்று நம்புகிறேன். இந்தப்பத்ததியின் இரண்டாம் பாகத்தில் அநேக நூலாசிரியருடைய சுருதி முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நானுக சுருதிமுறை யொன்றையும் சொல்லிக் கொள்ளவில்லை. என்னுடைய பத்ததியின் இரண்டாம் பாகத்தின் துவக்கத்தில் சொல்லப்பட்டிருக்கும் சுருதி முறை விசாரணையானது Mr. தேவால் என்பவரின் சுருதிமுறை முற்றிலும் தப்பு என்றும், தர்க்கசாஸ்திரத்தில் Reductio ad absurdum என்னும் விதிப்படி சுத்த ஆபாசமானது என்றும் தெளிவாய்ச் சொல்லுகிறது. மராத்தி பாஷைதெரிந்த கூர்மை யறிவுள்ள எவரும் அந்த அதிகாரம் முழுவதும் வியாபித்து நிற்கும் கத்திபோல் கூர்மையான சிலேடைப்பதங்களை அறியாதிரார். Mr. தேவால் என்பவரும் அவரைச் சேர்ந்தவர்களும் அகோபிலர், சோமநாதர் முதலியவர்களைத் தங்களுக்கு ஆதாரபலமாகக் கொண்டதினால் நான், 'பாரிஜாத பிரவஷிக' 'ராகபோத பிரவஷிக' என்னும் நூல்களைப் பிரசுரிக்கவேண்டியதாயிற்று. உடனே அவர்கள் அதற்குமேல் கை காட்டாதபடி இந்த இரண்டு நூல்களும் அவர்கள் வாயை அடைத்துப்போட்டன.

பிறகு (Mr. Clements Mr. Deval) சாரங்கதேவருடைய புஸ்தகத்தை ஆதாரமாகக் கொண்டு அவர் மேல் தங்கள் நங்கூரத்தைப் போட்டார்கள். இந்த நங்கூரத்திலிருந்து அவர்களைக் கிளப்பிவிட எனக்கு அதிக பிரயாசையாயிருந்தபோதிலும், தாங்கள் அவர்களைப் பரோடா கான்பரென்சில் தங்கள் பாயிகளை விரித்து முதுகு காட்டி யோட அடித்திர்கள் என்று மனப் பூரணமாய் ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஆனால் என்னுடைய பத்ததியில் Mr. தேவால் சங்கீத ரத்னகரருடைய முறையை ஆதாரமாகக் கொள்ளவேயில்லையென்று தெளிவாய் எடுத்துக் காண்பித்திருக்கிறேன்.

இப்போது Mr. தேவாலுக்கும் எனக்கும் இது விஷயத்தில் உண்டாயிருந்த வித்தியாசத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

1904-ம் வருஷம் மழை காலம் ஆரம்பித்தவுடன் இது விஷயத்தைப்பற்றிப் பிரயோசனமான குறிப்புகள் அகப்படுமாவென்று பார்க்க தென் இராஜதானி முழுதும் இரண்டு மூன்று மாதம் சுற்றினேன். திறமை வாய்ந்த வித்வான்களிடம் நான் இந்துஸ்தான் சங்கீதம் கற்றிருந்ததால், இப்பக்கத்திலுள்ளவர்களுக்குச் சங்கீதம் போதிக்கிறதற்குத் தகுதியானதாயும் கூடியவரையில் எளிதானதாயுமுள்ள ஒரு முறையை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணங்கொண்டேன். இதற்கு நியாயமானதாயும் இலகுவானதாயுமுள்ள ஒரு மூலாதார முறைவேண்டுமேயென்று நினைத்து உடனே சென்னப்பட்டணத்தில் இப்போது காலஞ்சென்ற திருமலையா நாயுடு அவர்களையும் பண்டிட் சிங்கராச்சாரியாரையும் கலந்து யோசித்தேன். அவர்கள் சொன்னதின் பேரில் தஞ்சைக்கு வந்தேன். அங்கே Messrs. நாகோஜி ராவ், பி. சுப்பிரமணிய சாஸ்திரி, சீனிவாச ராவ்,

ராமண்ணா, ஜகன்னாதபட்டோசாமி, பஞ்சாபகேச பாகவதர், முத்தையா பாகவதர், சேதுராம், தாஸ்சுவாமி முதலியவர்களிடம் பாஷை மொழி பெயர்ப்பவர்களின் உதவியால் சங்கீதத்தைப்பற்றித் தர்க்கித்தேன். P. சுப்பிரமணிய சாஸ்திரி இப்போது சங்கீதத்தில் தேர்ச்சியுற்றவராகக் காணப்படுவதுபோல் அப்போது இல்லை. நான் எவரிடம் பேசினபோதிலும் ஒரு விஷயம் முக்கியமாய் எனக்குக் காணப்பட்டது. அதென்னவென்றால் இந்துஸ்தான் சங்கீதத்தில் ஒரு ஸ்தாயியில் வரும் 12 சுரங்களையும் நான் பாடிக்காட்டியபோது தங்கள் தங்களுடைய சங்கீதத்தில் வழங்கிவரும் முக்கியமான 12 சுரங்களும் அவைகளே என்று ஒருவர் தவறாமல் ஒப்புக் கொண்டார்கள். இந்தச் சங்கதி எனக்கு அதிக உற்சாகத்தை யுண்டுபண்ணிற்று. எங்கள் தேசத்தில் வழங்கி வரும் 150 இராகங்களையும் ஒழுங்குபடுத்தி அட்டவணையாகக் குறிப்பதற்கென்று சாஸ்திர விதிகளுக்கொத்ததும் யாவையும் தன்னில் அடக்கியிருப்பதான தாய் ஆரோகணங்களை அல்லது மேளக்கர்த்தாக்களை ஏற்படுத்துவதைப்பற்றி வெகு கவலையாயிருந்தேன். என்னுடைய நோக்கம் என்னவென்றால் அந்த முறைக்கு அப்படி நல்ல தருந்த ஆதாரம் ஏற்படும் விஷயத்தில் அது என்றைக்கும் நிலைக்கும்படியானதாயும் நியாயத்துக்குக் கட்டுப்பட்டதாயும் இருக்குமென்பதே.

தஞ்சாவூரில் அரண்மனையிலுள்ள சரஸ்வதிமாலில் போய்த் தேடினேன். என்னுடைய நோக்கத்தைப் பூர்த்திசெய்வதற்கிதமான யாதொரு சமஸ்கிருத கிரந்தத்தையும் அங்கே நான் பார்க்கவில்லை. 72 மேளங்களையும் அவைகளின் ஜன்னிய ராகங்களையும் உடைய ஒரு சமஸ்கிருத கையெழுத்துப் பிரதியை ஜகன்னாத கோஸாமி என்பவர் எனக்குக் காண்பித்தார். ஆனால் அவைகள் முடிவானதாகக் காணப்படவில்லை. இந்த நூலை "ராக இலக்ஷணம்" என்று பெயரிட்டு நான் முன்னமே பிரசுரித்திருக்கிறேன். ஜகன்னாத கோஸ்வாமி சொன்ன பேர்தான் இது. தஞ்சாவூரிலிருந்து Mr. ராகோஜி ராவ் கேட்டுக்கொண்டதின்படி எட்டையாபுரம் சுப்பராம தீக்ஷிதரையும் போய்க் கண்டேன். இந்தக் கனவானிடமிருந்து நான் அநேக விஷயங்களைக் கற்றறிந்தேன். அவர் நிசமாகவே ஓர் மகான். அவரிடத்தில் நான் அத்தியந்த பிரியம் கொண்டேன். சதுர் தண்டிப்பிரகாசிகை என்ற அருமையான நூலின் முதல் கையெழுத்துப் பிரதி ஒன்றை அவர் எனக்குக் கொடுத்தார். ஆனால் அந்த நூலின் முதல் அதிகாரத்தையும் கடைசி அதிகாரத்தையும் எனக்கு அனுப்புமுன் அவர் காலஞ்சென்று விட்டார். என்றாலும் என் அருமையான சிநேகிதரான திருநெல்வேலி A. கிருஷ்ணசாமி ஐயர் மூலமாய் எனக்கு வேண்டிய யாவற்றையும் சம்பாதித்துக்கொண்டேன். அப்பேர்ப்பட்ட அருமையான நூலை எழுதிய வேங்கடமகி பண்டிதரை அதிக கண்ணியமாக மதிக்கிறேன். அவருடைய களங்கமில்லாத குணத்தையும் அதி வல்லமையுள்ள வார்த்தைகளையும் அவருடைய உற்சாகத்தையும் நான் அங்கீகரிக்கிறேன். இதன்பிறகு நான் மைசூர் ராமநாதபுரம், ராமேஸ்வரம், ஸ்ரீரங்கம், மதுரை முதலிய இடங்களுக்குப் போனேன். ஆனால் வடநாட்டுச் சங்கீதத்திற்குப் பிரயோசனமுள்ள எந்தச் சங்கதியையும் நான் அந்த இடங்களில் அறியவில்லை. வடநாட்டுச் சங்கீதத்தில் அதற்கு மாத்திரம் ஏற்பட்டுள்ள அநேக விஷயங்கள் இருந்தபோதிலும், இந்தியா முழுவதிலும் ஸ்தாயியில் 12 சுரங்கள் வழங்கி வருகின்றன என்ற இந்த ஒரு குறிப்பின் பலத்தை வைத்துக்கொண்டு சதுர் தண்டிப்பிரகாசிகையில் சொல்லப்பட்டிருக்கும் 72 மேளக்கர்த்தாக்களையும் வடதேசத்து ராகங்களுக்கு ஒரு மூல ஆதாரமாகவைத்துக் கொள்ளலாமென்று தீர்மானித்தேன். இராகங்களை அவைகளின் ஜனகமேளங்களுக்குக் கீழ் அட்டவணையாகக் கொண்டு வருவது வெகு பழமையான ஒரு வழக்கமானதால் நான் எடுத்துக்கொண்ட முறைக்கு ஒருவரும் தடைசொல்ல மாட்டார்கள் என்று நினைத்தேன்.

அடுத்த காலந்து வருஷங்களில் குளிர் காலம் ஆரம்பித்தவுடன் வடதேசத்திலுள்ள முக்கிய நகரங்களைச் சுற்றிப்பார்த்து, வடதேசத்தார் தாங்களாய் உண்டு பண்ணின முறை ஏதாவது இருக்கிறதா என்று விசாரித்தேன். அந்தந்த இராகங்களுக்குரிய தனி லக்ஷணங்களைப்பற்றி என்னென்ன அபிப்பிராயங்கள் சொல்லப்படுகிறதென்றும் கவனித்தேன். வடதேசத்தில் அநேக இடங்களில் ரத்னாகரம் தர்ப்பணம் என்ற தூல்கள் ஆதார நூல்களாகச் சொல்லப்பட்ட போதிலும், அவைகள் அப்படி எண்ணப்படுவதற்குத் தகுந்த நியாயங்களை எடுத்துச் சொல்வார் ஒருவருமில்லை. வடதேசத்தில் நாகப்பூர், கல்குத்தா, பூரி, விஜயநகரம், ஐதராபாத், நாசிக், டில்லி, ஆசிரா, ஜெயப்பூர், மத்திரா, லக்னௌ, காசி, கயா, பரோடா, கத்தியவார், கராச்சி, கூச், லாகூர்,

இன்னும் அநேக இடங்களைச் சுற்றினேன். ஆனால் எந்த இடத்திலாவது சமஸ்கிருத கிரந்தங்களை ஆதாரமாய் வைத்துக் கொண்டு சங்கீத விஷயத்தில் தர்க்கம் செய்யக்கூடிய எந்தப் பண்டிதரையாவது நான் கண்டேனில்லை. ஆனால் அநேக இடங்களில் பாடல் வாத்தியம் வாசித்தல் முதலியவைகளைப்பற்றிய அநேகமான விஷயங்கள் எனக்குக் கிடைத்தன. அவைகளை யெல்லாம் நான் எழுதிய தூல்களில் அங்கங்கே காண்பித்திருக்கிறேன்.

(இந்தியாவின் பல பாகங்களிலும் சுற்றிவந்ததில்) சுருதி விஷயமாய் நியாயாதாரங்களைத் தகுந்த விதமாய் எடுத்துப் பேசக்கூடிய ஒரு வித்வானுவது அகப்படவில்லை. எவராவது தாங்கள் சொல்லுகிறதற்கு ஆதாரத்தை எடுத்துக் காண்பிக்கக் கூடியவர்களாயில்லை. அநேகர், சில இராகங்களில் அரைச் சுரத்தைவிடக் குறைந்த சுருதிகள் இருக்கின்றன என்று சொல்லியும், அவைகளை வாய்ப்பாட்டின் மூலமாவது கணக்குகளின் மூலமாவது ருசுப்படுத்தக் கேட்கப்பட்டபோது பின் வாங்கி விட்டார்கள். ஒரு ஸ்தாயியில் சுரங்களை எப்படி நிரவுகிறது என்பதற்குக் கிரந்தங்களின் மூலமாய் ஒரு ருசுவும் எற்படாததால் அவர்கள் தங்கள் மனதிற்குத் தோன்றியபடி நிரவி வந்தார்கள் என்று வெளியாயிற்று. ஆனால் யாவருக்கும் தெரிந்திருந்த 12 சுரங்களைப்பற்றி எவ்விடத்திலாவது வித்தியாசமான அபிப்பிராயம் சிறிதேனும் காணப்படவில்லை.

1909-ம் வருஷத்தில் என் சுற்றுப்பிரயாணங்கள் எல்லாம் முடிவுக்கு வரவே நான் என் புஸ்தகத்தை எழுத ஆரம்பித்தேன். என் லாயர் தொழிலையும் நான் விட்டுவிட்டு என் முழு சாவகாசத்தையும் புஸ்தகம் எழுதுவதிலேயே செலவழித்தேன். நான் முதலாவது சமஸ்கிருதத்தில் 'லக்ஷிய சங்கீதம்' என்ற தூலை எழுதினேன். இதில் நான் இந்துஸ்தான் சங்கீதத்தைப்பற்றிச் சொல்லவேண்டியவைகளையெல்லாம் சொல்லிவிட்டேன். என் முழுச்சங்கதியையும் அறிந்திருந்த என் ஆப்த நிநேகிதர்கள் நான் எழுதிய புத்தகத்திலுள்ள முறையை மற்றவர் அறிவது கஷ்டமாகத் தோன்றினபடியால் மராத்தி பாஷையில் அதற்கு ஒரு வியாக்கியானம் எழுதும்படி கேட்டுக்கொண்டார்கள். அதன் பிறகுதான் நான் முன் சொன்ன இந்துஸ்தான் பத்ததி எழுதப்பட்டது. நான் முன் சொன்னபடி, சதுர்தண்டி பிரகாசிகையின் மேளக்கர்த்தாக்களை அஸ்திபாரமாக வைத்துக்கொண்டு, வடநாட்டு இராகங்களெல்லாம் இன்னின்ன மேள அட்டவணையின் கீழ் வருகின்றன வென்று குறித்தேன். நான் எழுதிய புஸ்தகம் யாவராலும் பிரயோஜனமுள்ளதென்று ஒப்புக்கொள்ளப் பட்டதுமல்லாமல் சங்கீதத்தைத் தொழிலாகக்கொண்ட வித்வான்களுங்கூட என்னுடைய தூலை அதிகாரமுள்ள ஒரு ஆதார நூலாக ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்று என் நிநேகிதர் எனக்குத் தெரிவித்தார்கள். இராகங்கள் என்னென்ன உருவம் மாறித் தற்கால அனுபோகத்திலிருக்கின்றன என்பதை ரூபிக்க சமஸ்கிருத நூல்களிலிருந்து அங்கங்கே ஆதாரங்களை எடுத்துச் சொல்லியிருப்பதுமல்லாமல், இராகங்களைப்பற்றிய சரித்திரம் முழுவதையும் விஸ்தரித்துக் காண்பித்து அவைகளைப்பற்றிய படக்குறிப்புகளையும் எழுதியிருக்கிறேன். அவைகளைப்பற்றி நான் இப்போது இங்கு எழுதாமல் Mr. தேவால் முதலியவர்கள் இச்சமயத்தில் தோன்றியதைப்பற்றி எழுதுகிறேன்.

காரியம் இப்படியிருக்கையில் Mr. தேவாலும் அவருடைய நிநேகிதரும் காடகமேடையில் தோன்றினார்கள். 2000 வருடங்களுக்கு முன் ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டதென்று சொல்லி 22 சுருதியைக் கொண்டுவந்தார்கள். பாரிஜாதத்திலும் இராகவிபோதத்திலும் இருந்து தங்களுக்கு இதமான வாக்கியங்களை எடுத்துக் காண்பித்தார்கள். [மற்றவைகளை விட்டுவிட்டார்கள். சாத்தான் தனக்கு இதமான வாக்கியங்களை மாத்திரம் எடுத்துச் சொல்வதுபோல் இது இருக்கிறது.] 12 சுரங்களால் நான் ஸ்தாபித்த எல்லாராலும் விரும்பப்பட்ட முறையானது தப்பு என்று சொன்னார்கள். Dichord என்ற வாத்தியத்தை எல்லாருக்கும் காண்பித்து ஜனங்களின் மனதை மயக்கினார்கள். இப்படியிருக்கும்போது கிளமெண்ட்ஸ் வந்து அவர்களுடைய முறையில் பிரிபப்பட்டவர்போல் காண்பிக்கவே அவர்கள் கட்சி பலத்தது. Mr. தேவால் சங்கீத வித்வானுமல்ல, கல்வித்திறமை வாய்ந்தவருமல்ல; ஆனால் கிளமெண்ட்ஸ் துரையைப்பற்றி அப்படிக் குறைசொல்ல முடியாது. நான் முன் சொன்ன இரண்டு பிரவேஷிக்கைகளையும் எழுதி Mr. தேவால் உடைய சுருதி முறைக்கு அவர் சொல்லும் புத்தகத்தில் யாதொரு ஆதாரமுமில்லை என்று எடுத்துக் காண்பித்தேன். அங்கே எற்படுத்தப்பட்ட Philharmonic society (சங்கீத அபிமானிகள் சங்கம்) என்னால் உண்டானது. அது

முதல் தரம் சத்தாராவில் கூடினபோது நானும் போயிருந்தேன். ஆனல் அது செய்கிற வேலை தப்பென்று நான் அறிந்த பிறகு அந்தச் சங்கத்தில் மெம்பராயிருப்பதை நிறுத்திவிட்டேன். இப்போது கிளமெண்ட்ஸ் துரை தன் சுருதி ஆர்மோனியத்தை வெளியிட்டார். கவர்னர் துரையும் Director of Public Instruction உம் அவருடைய ஆர்மோனியத்திற்குப் போஷகர்களாக ஏற்பட்டுவிட்டார்கள். இந்த ராஜதானியில் கவர்மெண்டாரின் கீழ் உள்ள எல்லா சங்கீத கலாசாலைகளிலும் எங்கே அதற்கு ஒரு இடங் கிடைத்துவிடுமோ என்ற பயமும் எங்களுக்கு உண்டாய் விட்டது. அது சமயத்தில் யுத்தம் ஆரம்பித்து விட்டதால் ஆர்மோனியமும் பின்னல் பார்த்துக் கொள்ளலாம் என்று நிறுத்தப்பட்டது. நான் எழுதிய பிரவேஷிக்கைகளால் பிரயோஜனம் உண்டாயிற்று. ஆகோபிலர் சோமநாதர் இவர்களுடைய கிரந்தங்களின்படி தன் முறையைச் செய்தேன் என்று முதலில் சொன்ன தேவால் என்பவர் இப்போது தான் பாடும் சங்கீதத்தை மாற்றி மற்றவர் அறியாதபடி தன்னுடைய 22 சுருதிகள் சாரங்கதேவருடைய முறைப்படி செய்யப்பட்டது, அவை அவருக்குப் பிறந்தவை என்று அவர் மேல் பழியைப் போட்டார். இதனுல் என்னுடைய பத்ததியின் இரண்டாம் பாகத்தில் சுருதிகளைப்பற்றி ஒரு அதிகாரம் புதிதாய்ச் சேர்க்கவேண்டியதாயிற்று. நான் அங்கே உபயோகித்திருக்கும் Reductio ad absurdum முறையானது, நான் முன்னே சொன்னதுபோல, மராத்தி பாஷைதெரிந்த யாவருக்கும் சுலபமாய் விளங்கும். நான் எழுதிய புஸ்தகங்கள் Mr. தேவாலின் சுருதி முறையைப்பற்றி யாவரும் சந்தேகப்படும்படி செய்தபோதிலும் கிளமெண்ட்ஸ் துரையின் ஆதரவானது அந்தப்புஸ்தகத்திற்கு ஒருவித அதிகாரத்தைக் கொடுத்ததுமல்லாமல் அந்தப்புஸ்தகம் மற்றவர்கள் விஷமம் பண்ணுதற்கும் இடமாயிற்று. இதன் பின் Mr. தேவால் தென்மகாராஷ்டிர தேசத்தில் தன் சுருதிகளை அடிக்கடி ருசுப்படுத்திக் காண்பிக்கப் பிரயாசப்பட்டபோதிலும் என்னுடைய புஸ்தகங்கள் வெளியானபிறகு அவர் எதிர்பார்த்திருந்த சித்தி அவருக்குக் கிடைக்கவில்லை. அவர் தன்சுருக்களை பம்பாய் நகரத்தில் ஒருபோதும் காண்பிக்கத் துணியவில்லை. ஆனல் அவர் கிண்டிவிட்ட வேலையானது நான் செய்து வந்த உபயோகமான வேலையை அநியாயமாய்க் கெடுக்கக்கூடியதாயிருந்தபடியால் எனக்குஅதிக மனக்கவலையை உண்டுபண்ணிற்று. அவர் தவறுகிறார் என்று எனக்குத்தெரிந்தபோதிலும் அவருக்குப் பர்வதம்போல் உதவியாயிருந்த கிளமெண்ட்ஸ் துரையின் செல்வாக்குக்கு எதிரியாய் நின்று ஒன்றும்செய்ய முடியவில்லை. கிளமெண்ட்ஸ் துரையிடத்தில் எனக்குஅதிக மதிப்புண்டு. அவர் கல்வியில் நிபுணர். இந்தியசங்கீதத்தில்உண்மையாகவே அபிமான முடையவர். என்னுடைய முறையைப்பற்றி நியாயமாயும் தகுந்த விநயத்தோடும் அவரிடத்தில் பேசப் பிரயாசப்பட்டேன். ஆனல் அவர் Mr. தேவாலுடைய சுருதி முறையில் ஒருவிதமான கண்மூடித்தனமான பிரியம் வைத்துவிட்டதால் நான் பேசின வார்த்தைகள் செவிடன் காதில் சங்கு ஊதினதுபோல் ஆயிற்று. ஒருவேளை தேவால் என்பவர் சாரங்கதேவருடைய மூலத்தகுந்த விதமாய் வியாக்கியானம் பண்ணியிருக்கிறார் என்று Mr. கிளமெண்ட்ஸ் உண்மையாகவே நம்பினராக்கும். நான் சொன்ன வார்த்தைகளையும் நான் உழைத்த உழைப்பையும் அவர் கொஞ்சமேனும் கவனியாமல், இந்துஸ்தான் இராகங்களுக்குள் அந்த 22 சுருதிகளையும் எப்படியாவது நுழைத்துவிட வேண்டுமென்ற நோக்கமாய் வடதேசத்தில் தேர்ந்த வித்வான்களல்லாத சிலருடைய உதவியை நாடினர். ஆரம்பித்தவுடன் சாதாரண காப்பி ராகத்தில் 3 சுருதி ரிஷபத்தையும், 3 சுருதி தைவதத்தையும், அதிகோமள காந்தாரத்தையும் அதிகோமள நிஷாதத்தையும் உபயோகித்தார். ஆதிரிஷி முனிவர்கள் சாரங்கதேவர் முதலியவர்களுடைய உண்மையான சுத்த ஸ்கேல் இதுவே என்று விளம்பினர். பிறகு இந்த ஆரோகண அவரோகணத்திலிருந்து கலியாணி கமாசு முதலிய இராகங்களுக்கு ஆரோகண அவரோகணங்கள் உண்டாக்க ஆரம்பித்துவிட்டார். காரியங்கள் மோசமான நிலைக்கு வருகிறதாகக் கண்டேன். வடதேசத்து வித்வான்களும் தென்தேசத்து வித்வான்களும் காப்பி இராகத்தில் சதுஸ்ருதி ரிஷப தைவதங்களையும், சாதாரண காந்தாரத்தையும் கைஷிக நிஷாதத்தையும் உபயோகிக்கிறார்கள் என்று அவரிடத்தில் நான் எடுத்துக்காட்டின போதிலும் தேவால் சொல்வதே சரி நான் சொல்லுவது தப்பு என்று ஒரு போடு போட்டுவிட்டு மறுபடியும் தான் மனதிற்கண்டபடி ராகங்களுக்குப் புதிதாய் ஆரோகண அவரோகணங்கள் உண்டாக்க ஆரம்பித்துவிட்டார். வடதேச வைணீகர் இப்படிச் சொல்லுகிறார் என்று எடுத்துக்காண்பித்தும், அவர்கள் செய்வதெல்லாம் தப்பு என்று உருட்டிவிட்டார். வீணைவாசிப்பவர்களும் நாக சுரம் வாசிப்பவர்களுமே இந்துஸ்தான் சங்கீதத்தின் குடியைக் கெடுக்க வந்த கோடரிக்காம்புகள் என்று எனக்கு எழுதி வெருட்டினர். நாங்கள் இருவரும் சமாதானம் பண்ணிக்கொள்வது குதிரைக்கொம்பு போல் ஆகிவிட்டது. காரியம் இப்படியானவுடன் Mr. தேவாலையாவது சரிப்படுத்தலாமென்றெண்ணி அவரு

டைய முறையில் காணப்பட்ட சில தப்புகளே அவர் திருத்திக்கொள்ள வேண்டுமென்றும் இது விஷயத்தில் என்னுடன் சேர்ந்து வேலைசெய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டேன். எந்தெந்த இராகங்களுக்கு நுட்ப சுரங்கள் அவசியமோ அவைகளுக்கு அந்த சுரங்களே உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பதே என்னுடைய அபிப்பிராயம் என்று தெரிவித்ததுமல்லாமல் ஒரு காரியத்தைப்பற்றி மாத்திரம் வற்புறுத்திச் சொன்னேன். அதென்னவென்றால் அந்த நுட்பமான சுரங்கள் சமஸ்கிருத நூலாசிரியர்களுக்குப் பிறந்தவை என்று சொல்லி அவைகளே வேசிப்பிள்ளைகளாக்கக் கூடாது என்பதே. அப்படிச் செய்தால் சமஸ்கிருத நூல்களைப் பார்த்து யாவரும் சிரிப்பதற்கு இடமாகும் என்றும் சொன்னேன். பிறகு பண்டிதர்களையும் வித்வான்களையும் வைத்துக் கொண்டு இன்னின்ன இராகங்களுக்கு இன்னின்ன சுரங்கள் சுருதிகள் என்று குறிக்கவேண்டும் என்று Mr. தேவாலைக் கேட்டுக்கொண்டேன். அவரோ, "நான் வெகுதூரம் முன் சென்று விட்டேன். முன் வைத்த அடியை இனிப் பின் வைக்கக்கூடாது. என்னுடைய துணைவரான Clements துரையுடன் கட்டிப்புரளுவேன். நாங்கள் நின்றாலும் சரி அடித்துப் புரண்டு கீழே விழுந்தாலும் சரி இருவரும் ஒன்றாயிருப்போம்" என்று சொல்லிவிட்டார். ஆகவே ஒரு பெரிய மேகம் என் தலைக்கு மேல் நின்று கொண்டேயிருந்தது. காரியம் எப்படியிருந்ததென்றால் ஒன்று தேவால் சொல்வது சரி அல்லது நான் சொல்லுவது சரியாயிருக்கவேண்டும். தேவால் என்பவருக்கு ஒரு செல்வாக்குள்ள சிநேகிதர் இருந்தார். எனக்கோ ஒருவரும் இல்லை. ஆகையால் இத்தனை வருஷங்களாய் உண்மையாயும் ஒருலாபத்தையும் உத்தேசியாமலும் நான் செய்து வந்த வேலையெல்லாம் வியர்த்தமாயிற்றே என்று அங்கலாய்த்தேன்.

ஆனால் கடவுளிடத்தில் எனக்கு முழுநம்பிக்கையிருந்தது. "உன் வழிகளைக் கடவுளிடம் ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு அவரே உன் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்" என்பதே நான் நம்பின சத்தியம். உண்மையாய்க் கடவுளிடம் தங்கள் காரியத்தை ஒப்புவித்தவர்களில் எவர் சித்திபெறாமற் போனார்? உயர்ந்த பதவியில் இருந்துகொண்டு விஷமம் செய்கிறவர்களால் நான் எடுத்த காரியத்திற்கு இடையூறு உண்டாகிறதென்று அறிந்த கடவுள் எனக்கு உதவிசெய்ய முன்வந்தார். அவர் H. H கெய்க்வார் மகாராஜா அவர்கள் மனதிலும் மிகுந்த பச்சாதாபமும் பெருந்தன்மையும் வாய்ந்த அவர்கள் மந்திரியாகிய Dewan Saheb அவர்கள் மனதிலும் புகுந்து என் காரியத்தை எடுத்து நிறுத்தினார். தாங்கள் எனக்குச் செய்த பேருதவியும் கடவுளின் நடத்துதல்தான். கான்பரென்சில் நடந்த யாதொன்றும் என் செயலல்ல.

Mr.தேவாலும் Mr.கிளமெண்ட்ஸும் அவர்கள் கூட்டமும் ஆர்பாட்டமும் விளையாடும் சீட்டுகளால் கட்டப்பட்ட ஒருவீடு அடியோடு சாய்வதுபோல் விழுந்து சாய்ந்து போனார்கள். என் வியாக்கியானங்கள் எல்லாம் சரியென்றும் தேவாலுடைய வியாக்கியானங்களெல்லாம் பொய்யென்றும் சமஸ்கிருத பண்டிதர்களால் உறுதி செய்யப்பட்டது. நாலுக சுருதிமுறை ஒன்றும் உண்டாக்கவில்லை. தேசமெங்கும் சாதாரணமாய் வழங்கிவரும் 12 சுரங்கள்தான் என்னுடைய ஆதாரம். என்னுடைய புஸ்தகங்களில் நான் பேசுகிற கட்சியெல்லாம் யாதென்றால் சாதாரண ஜனங்களுக்குச் சங்கீதம் கற்றுக் கொடுப்பதற்கு 12 சுரங்களாலான முறையே வெகு சுலபம். ஆகையால் அவைகளையே உபயோகத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதே. ஆனால் சபையில் வந்திருந்த கல்விமான்களும் சங்கீத வித்வான்களும் அதிநுட்ப சுரங்களை ஏகோபித்து ஒப்புக்கொண்டபோது அவர்கள் தீர்மானத்திற்கு யாதொரு தடையுமின்றி தலை தூங்கி வணங்கினேன். இந்தப்பெரிய கான்பரென்ஸ் ஏற்பட்டு நான் சொல்லிய முறையில் நியாயத்திற்கு விரோதமானது ஒன்றுமில்லை யென்று செய்த தீர்ப்பானது எனக்கு மிகவும் திருப்திதான். இது இயற்கைதானே. ஆனால் கடவுள்தான் அவ்வு பிரசன்னமாகி நடந்த வைகளுக்கெல்லாம் ஆதிகாரணராயிருந்தார் என்று நான் நிச்சயமாகவே அறிந்து விசுவாசிக்கிறபடியால் என் காரியம் சித்தியானதற்காக நான் ஒரு நாளும் பெருமை கொள்ளமாட்டேன்.

எனக்கும் Mr. தேவாலுக்கும் அவருடைய சிநேகிதருக்கும் இருக்கப்பட்ட சம்பந்தத்தைப்பற்றி இப்போது நான் வேறே ஒன்றும் சொல்லுவதற்கில்லை. அவர்களும் என்னைப்போல வெகு வைராக்கியத்தோடு இந்திய சங்கீத அபிவிர்த்திக்காக உழைக்கிறவர்களானதால் அவர்களே இன்றும் என் சிநேகிதராகவும் சகோதரராகவும் பாவித்து அவர்களே நேசிக்கிறேன். இவ்வித சண்டைகள் வரவேண்டியது இயற்கைதான். அவைகள்

வராமல் இருக்க முடியாது. அநேகமாய் அவைகளால் நல்ல பிரயோஜன முண்டாகிறது. மாசற்றவன் என்று எல்லாரும் என்னை நினைக்க வேண்டுமென்று நான் எண்ணுகிறதேயில்லை. என்னுடைய இந்துஸ்தானி பத்ததியை வாசிப்பீர்களானால் எத்தனையோ என்னுடைய தப்புகளைத் திருத்தியிருக்கிறேன் என்பது விளங்கும். பேர் அல்லது கீர்த்திக்காக ஒருவர் வேலை செய்யாமல் தாழ்மையாய் வேலை செய்து எல்லாவற்றையும் கடவுளிடத்தில் ஒப்புவிக்கவேண்டும். நம் முன்னோர்கள் அவர்கள் யாரென்றும் எப்போது எழுதினார்களென்றும் சொல்லாமல் தங்களுடைய அருமையான நூல்களை எழுதிவைத்தார்கள். நாம் எவ்விதத்திலாவது அவர்களுக்கு ஈடாகமாட்டோம். ஆனால் நான் தத்துவசாஸ்திரம் பேசக்கூடாது.

தாங்கள் எனக்குத் தயவாய் அனுப்பின பிரதிகளை என் சிநேகிதருக்குக் கொடுப்பேன். தஞ்சையில் அடுத்தவாரம் நடக்கும் சங்கீத கான்பரென்சுக்கு என்னை விரும்பி அழைத்ததற்காக அதிக வந்தனம் செலுத்துகிறேன். ஆனால் எனக்கு அநேக வேலைகளிருப்பதால் தற்சமயம் வர சாவகாசமில்லாததற்காக அதிக வருத்தப்படுகிறேன். என்னை மன்னிக்கும்படி வேண்டுகிறேன். நம்முடைய சிநேகிதரான Dewan Saheb அவர்களை நான் அதிகம் விரும்பிக்கேட்டதாகச் சொல்லுங்கள். நான் அவர்களை அறிந்தநாள் முதல் அவர்கள் எப்போதும் எனக்குக் காண்பித்திருக்கிற பட்சத்தை நான் ஒருநாளும் மறக்கமுடியாது. நாளைக்கு அல்லது மறுநாள் நான் நேரே அவர்களுக்கு எழுதிக்கொள்வேன்.

சாரங்கதேவருடைய சுருதிமுறையைத் தாங்கள் விஸ்தரித்ததைப்பற்றி என்னுடைய அபிப்பிராயம் என்னவென்று என்னைத் தயவாய்க் கேட்டீர்கள். என்னைவிடத் தங்களுக்கே அவர் முறையை அறிந்துகொள்வதற்கு வேண்டிய சாதனங்கள் அதிகம். நாங்கள் எடுத்துச்சொல்லும் நியாயங்களை அதிவல்லமையுள்ளவைகள் என்று நான் கருதுகிறேன். தாங்கள் சொல்வதில் குற்றம் கண்டுபிடிக்க வேண்டுமானால் என்னைவிடத் திறமை வாய்ந்த ஒருவர் அதற்கு ஏற்படவேண்டும். இப்போது தாங்கள் என்னசெய்யவேண்டுமென்றால், இரத்னகரருடைய ராகங்கள், ஜாதிகள் இவற்றில் சிலவற்றை யெடுத்துக்கொண்டு அதில் தங்களுடைய சுரம் சுருதிகள் எப்படிப் பொருந்துகின்றன என்று காண்பிக்கவேண்டியது. சாரங்கதேவருடைய நூல் மிக அருமையானது என்று யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர் சொல்லி விஸ்தரிக்கும் இராகங்களுக்குப் பேராவது நமக்குத் தெரிந்திருக்கிறது. நம்முடைய சொந்த முறைப்படி அவைகளை நாம் பாடுகிறோம். அவைகளில் சிலவற்றையாவது தாங்கள் சோதித்துப் பார்ப்பீர்களானால் பெரிய உதவியாயிருக்கும். சாரங்கதேவர் தமிழ் நூல்களை அறியாததனால் அவருடைய முறையானது முற்றிலும் பிசகானது என்று மாத்திரம் சொல்லுவது போதாது. சுரங்களும் சுருதிகளும் உபயோகத்தில் இருக்கப்பட்ட இராகங்களைக்காட்டும் அடையாளங்கள். அப்படியானால் இராகங்களை மற்றவர் கண்டுபிடிக்கும்படியாய் உபயோகப்படுத்தப்படுகிற சுரங்கள் சுருதிகள் மாத்திரம்தான் யாவராலும் ஒப்புக் கொள்ளப்படும். நான் சொல்லும் நியாயம் முற்றிலும் சரியென்று தாங்கள் ஒப்புக்கொள்வீர்கள். சாரங்கதேவர் சொற்ப நூற்றாண்டுகளுக்குமுன் இருந்தவராதலால் அவர் காலத்திலுள்ள இராகங்கள் இப்போது நாம் தற்காலம் பாடுகிறவைகள் போலவே பாடப்பட்டிருக்கவேண்டும். ஆகையால் அவர் சொல்லும் சுரங்கள் சுருதிகளையே ஆதாரமாக வைத்துக்கொண்டு அவைகள் அவர்சொல்லும் இராகங்களுக்குச் சரியாய்ப் பொருந்துகின்றனவா என்று பார்க்கவேண்டும். இதைத் தாங்கள் செய்வீர்களானால் எல்லாவித வாதமும் தர்க்கமும் முடிவுக்கு வரும். "புடிங் ருசியாயிருக்கிறதா அல்லவா என்பது அதைத் தின்றுபார்த்தால் தெரியும்" என்றது ஒரு பழமொழி. நான் சாதாரண மனுஷர் சொல்லக்கூடியதைச் சொல்லுகிறேன். சாரங்கதேவர் ஒரு சங்கீத வித்வானாயிருக்கவேண்டும் அல்லது முட்டாளாயிருக்கவேண்டும். ஒரு முட்டாள் அப்பேர்ப்பட்ட புஸ்தகம் எழுதியிருக்கமாட்டார் என்று சாமானிய ஜனங்கள் சொல்லுவார்கள். அவர் பெரிய வித்வானாயிருந்தால் அவருடைய இராகங்கள் எந்தவிதமாய்ப் பாடப்பட்டதென்று அவருடைய இராகங்களையும் லக்ஷணங்களையும் சேர்த்துப் பரிசோதித்துப்பார்த்து அவருடையது தப்பு என்று ரூபித்தீர்களானால் தங்கள் முறை சரியென்றாகும். அப்படிச் செய்யாதவரையில் "ஒரு புதுமுறை தோன்றியிருக்கிறது. அதை நாம் யோசித்துச் சோதித்துப்பார்க்கவேண்டும் என்று சொல்வதற்கான லக்ஷணம் அதற்குஇருக்கிறது. ஏனென்றால் அது இன்னும் ரூபிக்கப்படவில்லையே" என்றுதான் யாரும் சொல்லுவார்கள். சங்கீதம் தெரியாதவர்கள் சொல்லக்கூடியதைத்தான் நான் எடுத்துச் சொல்லுகிறேன்.

நங்களுடைய 24 சுருதி முறை யாவரும் பிரீதியாயீ ஒப்புக்கொள்ளக் கூடியதாயீ இருக்கிறது. தென்னிந்திய வித்வான்களால் அது ஒப்புக்கொள்ளப்படுமாகில் இவ்விடத்திலும் அதை உபயோகித்துப் பார்ப்பதில் நானே முதல்வனுயிருப்பேன்.

ஆனல் வடதேச வித்வான்களைக் கூட்டி அவர்களை முதலில் அதைச் சோதித்துப்பார்க்கச் செய்ய வேண்டும். கான்பரென்சில் இவ்வித காரியங்கள்தான் சோதிக்கப்பட்டு முடிவுபெறவேண்டும். பொதுஜன நன்மைக்காக நாம் எதுசெய்கிறேமோ அது பொதுஜனங்களின் அனுமதியோடு செய்யப்படவேண்டும் என்பது என்னுடைய கருத்து. காரியசித்திக்கு முக்கியமான உதவி ஒற்றுமைதான்.

இவ்வளவு நீண்ட கடிதம் எழுதி தங்கள் அருமையான நேரத்தையும் பொறுமையையும் போக்க டித்ததற்காக மன்னிக்கவும். நான் அப்படிச் செய்வதற்கு எனக்குப் பாத்தியமேயில்லை. ஒருவேளை நான் ஒரு சுருதிமுறையைக் கையாடுகிறேனென்றும் அதைப்பற்றி நான் ஒரு வார்த்தையும் பேசாமலும் என் மனதில் இருப்பவைகளைக் கான்பரென்சில் தெரிவிக்காமலும் இருந்தேன் என்றும் தாங்கள் தப்பு அபிப்பிராயம் கொள்ளா தபடி இதை எழுதினேன்.

தங்களுக்கும், தங்கள் குமாரர் குமாரத்திகளுக்கும் என்னுடைய நமஸ்காரம்.

தங்கள் உண்மையுள்ள,

BHATKHANDE.

20

தங்கள் அன்பான கடிதம் கிடைத்தது. கடிதம் வந்த சமயத்தில் கான்பரென்ஸுக்குரிய வேலைகளில் மிகவும் முயற்சியாயிருக்க நேர்ந்ததனல் உடனே பதிலெழுதக் கூடவில்லை. நான் பரோடா கான்பரென்ஸுக்கு வரும் பொழுது சரியான ஆயத்தம் செய்து கொள்ளக் கூடாமை யாயிருந்தது. ஆனல் என்னல் கூடியவரை சுருக்கமாகச் சொல்லக்கூடியதும் செய்துகாட்டக் கூடியதும் மாத்திரம் தயார் செய்துகொண்டு வந்தேன். தென்இந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் துட்பமான சுருதிகளும் முறைகளும் தெளிவாய்ச் செய்துகாட்டுவதற்கு அநேக பிரயத்தனங்கள் செய்ய வேண்டியது பாக்கியிருந்தது. ஆகையினல் அவைகளைச் சபையோர் அங்கீகரிக்க வேண் டிய பல பிரயத்தனங்கள் செய்ய வேண்டியிருந்தது. சுருதிகளைப்பற்றி விசாரிக்கவும் வாசிக்கவுங் கூடிய அநேகர் தென்னட்டிலும் இருக்கிறார்கள். அதோடு சமஸ்கிருதத்தில் சொல்லப்பட்ட தெல்லாம் வேதமென்று பிடிவாதமாய்ச் சாதிக்கிறவர்களுமிருக்கிறார்கள். ஆகையினல் இவ் விடத்தில் உள்ளவர்கள் ஒப்புக்கொண்டாலொழிய பயன் படாதாகையால் இவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டியதற்காக பல ருசுக்களும் உபந்நியாசங்களும் செய்யவேண்டி யிருந்தது. ஆகையினல் கான்பரென்ஸ் நடந்த இரண்டு நாளும் சுருதி முறையை விசாரிப்பதற்காக என் சொந்த அபிப்பிராயப்படி காரியங்களுக்கேற்ற விதமாய் ஒழுங்கு பண்ணிக்கொள்ள வேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதோடு சங்கீத சம்பந்தமாக பூர்வ தமிழ் நூல்களில் சொல்லப்பட்டிருப்பவைகளை விசாரிப்பதற்கென்று தமிழ் வித்வான்கள் அடங்கிய ஒரு பஞ்சாயத்தும், ஒரு ஸ்தாயியை 12 ஆய் 24 ஆய் 48 ஆய் 96 ஆய் பிரிப்பதிலும் தந்தியின் நீளம் குறிப்பதிலும் செய்யப்பட்டிருக்கும்

கணக்கு சாஸ்திர முறைப்படி சரிதானவென்று பார்ப்பதற்கு கலாசாலை கணித போதனை சிரியர்கள் அடங்கிய ஒரு பஞ்சாயத்தும், ஒரு ஆரோகண அவரோகணத்தில் வழங்கிவரும் 12 சுரங்களும் கர்நாடக சங்கீதத்தில் வழக்கத்திலிருக்கும் சுரங்கள்தானு மற்றும் நுட்பமான சுருதிகள் கர்நாடக கீர்த்தனங்களில் வழங்கி வருகின்றவைதானவென்று பார்ப்பதற்குச் சுரஞானமும் சங்கீதத்தில் தேர்ச்சியுமுடைய வித்வான்களடங்கிய பஞ்சாயத்துமாக மூன்று பஞ்சாயத்துகள் நியமிக்கப்பட்டன.

தமிழ் வித்வான்கள் பஞ்சாயத்துக்கு H. H. Maharaja of Ramnad அவர்கள் பிரசிடென்டாகவும் விருதை மறைத்திருவன் சிவஞானயோகிகள் செக்ரிடரியாகவும் நியமிக்கப்பட்டார்கள். மற்ற பண்டிதர்களில் பெரும்பாலார் காலேஜ்களில் தமிழ்ப் பண்டிதர்களாயிருக்கிறவர்கள். முதல் நாள் முழுவதும் மூன்று பஞ்சாயத்தாரும் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள் விளக்கிக் காட்டப்பட்டன. ஒவ்வொரு பஞ்சாயத்தாருக்கும் குறைந்த பட்சம் ஒவ்வொரு மணி நேரம் பிரசங்கம் செய்யப்பட்டது.

கணிதபஞ்சாயத்திற்கு கும்பகோணம் கவர்ண்மெண்டு காலேஜ் மகா-ள-ள-ஸ்ரீ Pattr-achariar M.A., L.T., அவர்கள் பிரசிடென்டாகவும் St. Peter's High School கணிதாசிரியரான மகா-ள-ள-ஸ்ரீ T. K. வேம்பு ஐயரவர்கள் B.A., L.T., செக்ரிடரி ஆகவும் இருந்தார்கள்.

சங்கீத பஞ்சாயத்திற்குப் பூண்டி ராவ் பகதூர் அப்பாசாமி வாண்டையார் அவர்கள் பிரசிடென்டாகவும் S. P. G. ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயரும் St. Peter's Church organist உமான மகா-ள-ள-ஸ்ரீ A. G. பிச்சை முத்து, B.A., L.T., அவர்கள் செக்ரிடரி ஆகவும் இருந்தார்கள். இதில் பாடத்தெரிந்தவர்களும் சுரஞான முள்ளவர்களுமான College Professor களும் வக்கீல்களும் சேர்ந்திருந்தார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்தாருக்கும் முக்கியமான விஷயங்கள் என்னால் எடுத்துக் காட்டப்பட்டன. என் குமாரத்திகள் மரகதவல்லி அம்மாளாலும் கனகவல்லி அம்மாளாலும் ருசுப்படுத்திக் காட்டப்பட்டது. சுருதி விசாரணையினால் உண்டாகும் பிரயோஜனத்திற்குத் திருஷ்டாந்தமாக இதுவரையும் கேட்டிராத புதிய கீர்த்தனங்கள் செய்யப்பட்டுப் பாடிக்காட்டப்பட்டன.

அடுத்த நாளில் மூன்று பஞ்சாயத்துப் பிரசிடென்டுகளும் இவை எல்லாவற்றிற்கும் சேர்மெனுக விருந்த மகா-ள-ஸ்ரீ V. P. மாதவராவ் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய நேரமானதினால் அந்தச் சமயத்திலும் தமிழ் மக்களின் பூர்வீகமும் தமிழ்ப்பாஷையின் பழமையும் தமிழ் மக்களின் பூர்வ நாகரீகமும் அந்நாகரீகத்திற்கேற்ற விதமாகச் சங்கீதத்தில் அவர்கள் அடைந்திருந்த தேர்ச்சியும் அவர்களின் நுட்பமான சுருதி ஞானமும் விளக்கிக் காட்டப்பட்டன.

அதன் பின் ஒவ்வொரு பஞ்சாயத்துப் பிரசிடென்டும் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை எழுதிச் சபை முன் வாசித்து சேர்மென் மகா-ள-ள-ஸ்ரீ V. P. மாதவராவ் அவர்களுக்குக் கொடுத்தார்கள். இம்மூன்று பேர்களின் அபிப்பிராயத்தையும் ஒன்றுசேர்த்துச் சொல்ல வேண்டியது சேர்மென் அவர்களின் கடமை. அது இன்னும் சொல்லப்படவில்லை. அவர்கள் அபிப்பிராயம் வந்தவுடன் தங்களுக்குத் தெரிவிப்பேன். ஒவ்வொரு பஞ்சாயத்தின் Majority ஆனபேர் ஒவ்வொன்றையும் ஒப்புக்கொண்டார்கள். எல்லா விவரங்களும் இதன்பின் எழுதுவேன். இதன் பின் பல நாள்களிலும் விசாரிக்கும் பலருக்கும் ருசுப்படுத்திக் காட்டிக்கொண்டு

வருகிறேன். மைசூர் வேணீக சிகாமணி மகா-ரா-ரா-ஸ்ரீ சேஷண்ணா அவர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் முன்னிலையில் பல வித்வான்களும் சிநேகிதர்களும் கூடி ஒரு சிறு சபை நடந்தது. அதில் வேண்டிய விஷயங்கள் நன்கு விளக்கி ருசுப்படுத்திக் காட்டப்பட்டன. முன் கான்பரென்ஸில் குதர்க்கம் செய்தவர்கள் அப்போதும் குதர்க்கம் செய்தார்கள். அவர்களுக்குத் தகுந்த பிரதியுத்தரம் சொல்லிப் பதில் பேசவாயில்லாமற் செய்யப்பட்டது. நான் சொன்ன நியாயங்களை மகா-ஸ-ரா-ஸ்ரீ சேஷண்ணா அவர்களும் ஒப்புக்கொண்டு அவர்களுக்குச் சொன்னர்கள்.

என்னுடைய சுருதி விஷயத்தைப்பற்றியும் புது கீர்த்தனங்களைப் பற்றியும் மிகவும் சந்தோஷப்பட்டு தான் திருப்தியடைந்ததாகச் சொன்னர். மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் அவர்களும்கூட இருந்தார்கள். பரோடாவில் கடைசி நாளில் நாம் கூடியபோது நிஷாதம் குறைகிறதென்று சொன்ன Band Master Fredilis ஐப் போலவே கான்பரென்ஸ் நடக்கும் போதும் பஞ்சமம் குறைகிறதென்று சொல்லி முடிவில் ஒப்புக்கொண்டார்கள். 22 சுருதியென்று வாதித்தவர்களில் பரோடாவுக்கு வந்திருந்த பிரதாப ராமஸ்வாமி பாகவதர் மீட்டிங் முடிந்தபின் கடைசியாய் திவான் சாயபு அவர்கள் முன்னிலையில் 22 சுருதியைப்பற்றிப் பேசுகையில் 22 சுருதியின் படி ஒரு ராகமாவது கீர்த்தனமாவது பாடிக்காட்ட வேண்டுமென்று கேட்டபொழுது அவர் 'இன்னும் இரண்டு மாதத்தில் பாடிக்காட்டுகிறேன்' என்று சொன்னர். தஞ்சாவூர் கான்பரென்ஸுக்கு அவர் வந்திருந்த சமயத்திலும் 22 சுருதியைப்பற்றிச் சில பேசினர். '22 சுருதியின் படி இரண்டு மாதத்தில் பாடிக்காட்டுகிறேன்' என்றுசொன்னீரே இப்போதாவது பாடிக்காட்டுமென்ற போது ஒன்றும் பதில் சொல்லாமல் போய்விட்டார். இப்படிச் சொல்லிலும் கணக்கிலும் தவறிப்போன சிலர் பல விதமாக எழுதவும் செய்தார்கள். அதனல் அவற்றிற் சிலவற்றிற்குப் பதிலும் எழுதவேண்டியிருந்தது. இதன் நடுவில் நான் எழுதிக்கொண்டு வருகிற புஸ்தகம் ஒருவாறு முடிந்து 'கர்நாடக சங்கீதமும் பரோடா கான்பரென்ஸும்' என்ற பகுதி நடந்து கொண்டிருக்கிறது.

தங்களுக்கு ஒவ்வொரு நாளும் பதிலெழுதவேண்டும் என்ற ஞாபகம் வந்துகொண்டேயிருந்தது. நான் மறந்துவிடவில்லை. தூரத்திலிருக்கிறவர்களுக்குப் பதில எதிர்பார்த்து மனம் வருத்தப்படுமென்று நான் அறிவேன். ஆனல் உங்களுக்குக் கடிதமெழுதநேரமில்லை. தாங்கள் சங்கீதவிஷயமாய்ச் செய்திருக்கிற பிரயாணமும் விசாரணையின் முடிவும் தாங்கள் எழுதியிருக்கும் புஸ்தகங்களும் அவைகளின் முறையும் ஆகிய இவைகளைப் பற்றித் தாங்கள் எழுதியிருக்கும் ஒவ்வொரு வார்த்தையும் என்னை உற்சாகப் படுத்திற்று. உண்மையான ஒன்றை உலகத்திற்குச் சொல்ல வருபவர்களில் யாரை உலகத்தார் சும்மாவிட்டார்கள். இப்படிப்பட்ட உபத்திரவங்கள் உலகத்தில் உண்டாகவேண்டியது அவசியந்தான். ஆனல் உபத்திரவப்படுத்துகிறவர்களின் முடிவு பரிதாபம். இவ்விடத்திலும் உதவியாய் இருக்கவேண்டியவர்கள் உதவி செய்யாமற் போனர்கள். நான் கூட்டிவந்த பிள்ளைகளின் உபாத்தியாயர் கூட விரோதக் கட்சியிலிருக்கிறார் என்பதை நான் அறிந்தும் நடக்கிறவைகள் இன்னவை யென்று அவர் அறிவதற்காகவே அவரை அங்குக்கூட்டி வந்தேன். நமக்கு முன் ஒன்றும் பிறிடத்தில் ஒன்றுமாகச் சொல்லும் துரோகிகள் இங்குமிருக்கிறார்கள். இவைகள் யாவற்றிலும், சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க வந்தவரும் கபட மற்றவர்களைக் காக்கிற வருமாகிய கர்த்தரின் கருணையினல், இது வரைக்கும் காப்பாற்றப்பட்டிருக்கிறோம். சத்தியத்தைச் சொல்ல நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார். நாம் சொல்லவேண்டியது நமது கடமை. அதை வீர்த்திக்குக் கொண்டுவர வேண்டியது அவருடைய கிருபை. அநேக பெரியோர் என் முறைகளை விசாரித்து மிகவும் சரியாயிருக்கிற

தென்று ஒப்புக்கொண்டு வருகிறார்கள். தாங்கள் கான்பரென்ஸுக்கு வருவீர்களென்று திவான் சாயபு அவர்கள் அடிக்கடி என்னை விசாரித்தார்கள். தாங்கள் வந்திருப்பீர்களானால் இவ்வளவு விரிவாயெழுதும் சிரமம் எனக்கிராது. பிரயாணத்தின் சிரமத்தைக் கவனிக்கும் பொழுது நீங்கள் ஏன் வரவில்லையென்று கேட்க மனந்துணியவில்லை.

தாங்கள் எழுதியிருந்தபடி சங்கீத ரத்னகார் தேர்ந்த வித்வான்தான். காவியங்களும் புராணங்களும் எழுதுவதில் தேர்ந்தவர் என்று நினைக்கிறேன். ஆனால் சங்கீதம் பாடத்தெரிந்தவர் என்று என் மனதிற்குத் தோற்றவில்லை. ஏனென்றால் அனுபவத்திற்கு வராத அதிக அபிப்பிராயங்கள் அங்கே காணப்படுகின்றன. அவைகள் 1, 2 என்று இலக்கத்திற்குள் அகப்படுவதாயிருந்தால் அவைகளில் சிலவற்றைச் சொல்லி உங்கள் மனதைத் திருப்திசெய்வேன். அவைகள் ஏராளமாயிருக்கின்றன. திருஷ்டாந்தமாக, காந்தார கிராமம் தேவலோகத்திற்குப் போய்விட்டதென்று சொல்லுகிறார். பரகரும் அப்படியே சொல்லுகிறார். எந்த வழியாய்த் தேவலோகத்திற்குப்போயிற்று? யார் பார்த்துக் கொண்டிருந்தார்கள்? ஒரு ஸ்தாயியில் 22 சுருதி என்று சொல்லியிருக்கிறீர், அப்படியிருக்க சுத்த சுரங்கள் 7உம் விக்ருதி சுரங்கள் 12உம் ஆக 19 சுருதிகள் உண்டென்று சொல்லுவது பொருத்துமா? சுத்த சுரங்கள் 7 என்பது நாம் அறிந்த விஷயமே. ஒரு ஸ்தாயியில் 12 சுரங்கள் சுத்த விக்ருதி சுரங்களாக இருக்கின்றனவென்று நம் அனுபவத்திலிருக்கிறது. 19உம் 22உம் ஆன சுருதிகள் எங்கேயிருக்கின்றன? பாதர் '14 சுருதிகள் உலகத்தில் பாடப்படுன்றன. மற்றவை தேவலோகத்திற்குப் போய்விட்டன 'என்கிறீரே. வழக்கத்தில் இலலை என்று சொன்னால் போதாதா? சுரங்கள் தேவலோகத்திற்குப் போகுமா? அவர் சுருதி முறைப்படி யாராவது ஒருவர் பாடிக்காட்டினால் நாம் வெகு சிக்கிரத்திற்குள்ளாக இன்னின்ன சுரங்கள் சுருதிகள் என்று சொல்லலாம். அனுபவத்திற்கில்லாத ஒன்றை எப்படி நாம் பரிட்சை செய்யக்கூடும்? மலடிக்கு மகனிருந்தால் மலடி என்று பேர் வருமா? வட தேசத்துக் கானத்திற்காவது தென் தேசத்துக் கானத்திற்காவது அனுபவத்திற்குவராத ஒரு சாஸ்திரத்தை வடதேசத்தார் தங்களுக்குரியதென்றும் தென் தேசத்தார் தங்களுக்குரிய தென்றும் எடுத்துக்கொண்டு போராடுவதைப்பார்க்க நான்மிகவும் வருத்தப்படுகிறேன். வீட்டிற்குரிய சாமான்களின் உபயோகம் தெரிந்தவர்கள் 'இது பானையுமல்ல குடமுமல்ல இது ஒரு பூத'மென்று மண்ணுருவத்தை விலக்குவதுபோல, அறிவாளிகள் தங்கள் அனுபவத்திலிருக்கும் தீதத்தைக் கொண்டு சுரம் சுருதிகளை நிதானிக்க வேண்டியதேயன்றி, இப்போர்ப்பட்ட நூல்களை எடுத்துக்கொண்டு அவதிப்படக் கூடாது. அவர் பைத்தியக்காரர் என்று நான் சொல்லவில்லை. அவர் எழுதியவையெல்லாம் கல்லைபோல் தோன்றுகின்றன. 1247 ஆம் வருடம் முதற்கொண்டு இதுவரையும் சுமார் 650 வருடங்களாக அனுபவத்திற்கில்லாத ஒரு நூலை நம்பி ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் உண்டு என்று நம்பிக்கொண்டிருந்த நாம் தான் பைத்தியக்காரர்கள். 22 சுருதிகளையும் அதில் சொல்லப்படும் சுரங்களையும் சுரமுறையில் வரும் ராகங்களையும் இன்னதென்றறிந்து தொள்ளாமலும் அதின்படி ஒரு பாட்டுப் பாட முடியாமலும் விழிக்கிற நாம் பைத்தியக்காரர்களா? அவர் பைத்தியக்காரரா? 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும்' என்று சொல்லுகிறார்களே. 650 வருடங்களாக ஒருவருக்குந் தெரியாமல் எழுதப்பட்ட ஒரு சாஸ்திரம் பைத்தியக்காரன் எழுதுவானா? அவர் எழுதின புஸ்தகத்தில் ஒரு ராகமாவது நம் அனுபவத்திற்கு வரக்கூடாததாயிருக்கையில் 22 என்று சொல்லும் பைத்தியம் நமக்கிருக்கும்பொழுது யாரைப் பயித்தியக்காரர் என்று சொல்வது? '24 சுருதி உண்டென்று பண்டிதர் சொல்லுகிறார். 24 சுருதிகளில் வரும் கீர்த்தனைகளை அவர் பிள்ளைகள் பாடிக்காட்டுகிறார்கள். எல்லாம் சரிதான் 22 க்கு விரோதமாய் நாம் சொல்லுவோமானால் நம்மைக் கல்லெறிந்து கொல்லுவார்களே' என்று சொல்லுகிறவர்கள் பைத்தியக்

காரரா? சாரங்கர் பைத்தியக்காரரா? 'ஒரு ஸ்தாயியில் 22 சுருதிதான் வருகின்றனவென்று நாம் சொல்லவேண்டும்' என்று ஐந்து ஆறு பேர் கூடிப் பூணூலைப்பிடித்துச் சத்தியம் செய்துகொண்டார்கள். இவர்களில் யாரைப் பயித்தியக்காரர் என்று சொல்வது? இப்படியே அனுபவத்திற்கு வராத எத்தனையோ மந்திரங்களும் அநுஷ்டானங்களும் உலகத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. இவைகளைக் கண்டு நீங்கள் மலைக்கவேண்டாம். இவைகளைச் சாதிக்கும் மற்றவர்களுக்கு சமாதானம் சொல்லவும் அதிக நேரம் செலவழிக்கவும் வேண்டாம். உலகத்தில் அனுபவத்திலிருப்பதும் தங்கள் அனுபவத்திற்கு வரக்கூடியதுமானவைகள் எவைகளோ அவைகளை ஒரு வரிகூட விடாமல் எழுதிவையுங்கள். அவைகள் பிற்காலத்தில் உலகத்திற்கு உபயோகமாயிருக்கும். தங்கள் விருப்பத்தை நிறைவேற்றக்கூடிய உத்தம மாணாக்கராக ஒரு சீமான் உங்களுக்கிருக்கிறார் என்று அறிவேன். அவர் சங்கீதம் கற்றுக்கொண்டு வருவதினால் அவர் உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வார் என்றெண்ணுகிறேன்.

எல்லா கல்விருப்பங்களையும் உண்டாக்கி விர்த்திசெய்து காப்பாற்றும் கடவுள் நம் விருப்பங்களை ஆசீர்வதிக்கும்படி பிரார்த்திக்கிறேன். திவான் சாயபு அவர்கள் சௌக்கியமாயிருக்கிறார்கள். நேற்று நான் போயிருந்தபொழுது தங்கள் க்ஷேமத்தைப்பற்றிக் கடிதம் வந்ததாவென்று விசாரித்தார்கள். மற்றும் விஷயங்கள் இதன் பின் எழுதுகிறேன். நாங்கள் யாவரும் சுகமாயிருக்கிறோம். தங்கள் மாணாக்கரான துரையவர்களை நான் மிகவும் கேட்டதாகச் சொல்லுங்கள். Mr. Clements ஒரு கடிதம் எனக்கு அனுப்பியிருக்கிறார். அதைப்பார்த்து நான் வருத்தப்படுகிறேன். இருந்தாலும் அவர் எழுதினதற்கும் இனிமேல் அப்படி எழுதாமலிருப்பதற்கும் வேண்டியபடி பதிலெழுத வேண்டியவனாயிருக்கிறேன். மூன்று கடிதத்தில் ஐந்துபக்கங்களில் Dear Pandither என்று அச்சடித்து அனுப்பியிருக்கிறார். உங்களுக்கு அந்தக் கடிதம் வந்திருக்குமா? வராதிருந்தால் நான் இதை அனுப்புகிறேன். அதோடு நான் அதற்குப் பதில் எழுதியனுப்பும் பொழுது தங்களுக்கும் அனுப்புவித்தால் யார் யாருக்கு அனுப்பிவைக்க வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் அனுப்பிவிடக் கூடுமா?

அல்லது பம்பாய் முதலிய மற்றவிடங்களிலுள்ள சிநேகிதரின் விலாசம் தெரிவிப்பீர்களானால் அவர்களுக்கு நான் அனுப்பிவைக்கிறேன். இப்படிப்பட்ட விஷயங்களை நாம் நெடுநாள் வளர்ப்பது சரியல்ல. அன்பான நமஸ்காரம்.

தஞ்சாவூர்,
7—10—16.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
மு. ஆபிரகாம் பண்டிதர்.

The Hindu, Friday, 2nd September 1916.

My interest in the new theory of the 24 srutis was first aroused by hearing the eloquent and studious discourse of Rao Saheb Abraham Pandither of Tanjore on the subject at the All-India Music Conference, Baroda, on which occasion I had the pleasure of interpreting into English his ample explanations in Tamil. Ever since I have been sedulously studying the subject and the proofs adduced by Mr. Pandither in favour of it. I find that his references to the Silappadhikaram are correct; and the mathematical calculation ought naturally to be so too. But, the

Tamil work abovementioned states clearly that the seven swaras have, on the whole, 22 alagus though the appointment of them differs a little from that of the Sanskrit writers. But, I fail to come across the passage in the book which distinctly and spêcially mentions the fact that there are 24 srutis or alagus in an octave. I request Mr. Pandither to refer me to the page and stanza where it could be found.

(2) Again, on page 19 of his "Extract from the first book on srutis, part II." being the essay read before the Conference, he mentions that "here each rasi has two alagus"; would he be kind enough to refer me to the passage in the Tamil work which authorises this statement, for, upon this point depends the whole thing, the soundness or otherwise of his theory?

(3) Page 15 of his essay gives the diagram of Vattapalai, constructed according to the rules given in the Tamil work. The 7 swaras are assigned seven out of the 12 places in the Rasichakra. So far right. But on page 19 of the essay, Mr. Pandither has assigned srutis for all the 12 houses in the Rasi chakra—sa (1) ree (2) ga (2) ma (2) pa (1) dha (2) nee (2). What is his authority to do so? If he divides each swaram into 2 srutis, why leave out sa and pa?

C. R. SRINIVASA AIYANGAR, B. A.

'ஹிந்து' வெள்ளிக்கிழமை 2 செப்டம்பர் 1916

பரோடாவில் நடந்த ஆல் இந்தியா கான்பரென்சில் ராவ் சாயேப் ஆபிரகாம் பண்டிதரவர்கள் வாசித்த கல்வித்திறமை வாய்ந்த மதுரமான உபந்நியாசத்தைக் கேட்டபோதுதான் முதல் முதல் 24 சுருதிகளைப் பற்றி எனக்கு ஒருவித பிரியம் உண்டாயிற்று. அச் சமயத்தில் அவர்கள் தமிழில் சொன்னவைகளை நான் இங்கிலீஷில் மொழிபெயர்த்தும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதுமுதல் அவ் விஷயத்தையும் சுருதி விஷயமாயிப் பண்டிதரவர்கள் சொல்லிய நுணுக்கங்களையும் நன்றாய் ஆராய்ந்து பார்த்தேன். சிலப் பதிகாரத்திலிருந்து அவர்கள் எடுத்துச் சொல்வதெல்லாம் சரியே. ஆகையால் அதுவிஷயமாய் அவர்கள் சொல்லும் கணக்கு முதலியவைகளும் சரியாய் இருக்கவேண்டுமென்று தெரிகிறது. ஆனால் சிலப்பதிகாரத்தில் எழு சுரங்களுக்கும் 22 அலகுகள் இருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவைகளை உண்டாக்கும் விதம் சமஸ்கிருத நூலாசிரியர்கள் சொல்லுவதுபோல் அல்ல. ஆனால் ஸ்தாயியில் 24 அலகுகள் வருகின்றனவென்று சிலப்பதிகாரத்தில் எந்த இடத்திலும் சொல்லியிருப்பதைக் காணேம்.

(2) Extract from the first book on srutis part II. 19ஆம் பக்கத்தில் (இதுதான் கான்பரென்சில் வாசிக்கப்பட்டது.) ஒவ்வொரு இராசிக்கும் இரண்டு அலகுகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதற்குத் தமிழ் நூல்களில் எவ்விடத்தில் ஆதாரம் இருக்கிறதென்று எடுத்துச் சொல்வார்களானால் நலமாயிருக்கும். ஏனென்றால் அவர்களுடைய கொள்கை சரியானதோ தப்போ என்று இந்த ஒரு கேள்வியே ரூபித்துவிடும்.

(3) தமிழ்நூலில் சொல்லியபடி வியாசத்தின் 15ஆம் பக்கத்தில் வட்டப்பாலைச் சக்கரம் வருகிறது. இராசிச் சக்கரத்தின் 12 ஸ்தானங்களில் 7 ஸ்தானங்களுக்கு ஒவ்வொரு ஸ்வரமாக 7 சுரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அதுவரையில் சரியே. ஆனால் வியாசத்தின் 19ஆம் பக்கத்தில் இராசிச்சக்கரத்தில் 12 வீடுகளுக்கும் சுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ச (1), ரி (2), க (2), ம (2), ப (1) த (2) நி (2) என்ற ஆதாரத்தைக் கொண்டு பண்டிதரவர்கள் இப்படிப் பிரிக்கிறார்கள்? ஒவ்வொரு சுரத்தையும் இரண்டு சுருதிகளாகப் பிரித்தால் ச வையும் ப வையும் ஏன் விட்டுவிட வேண்டும்?

C. R. சீனிவாஸ ஐயங்கார், B. A.

மகா-ரா-ரா-ஸ்ரீ அன்புள்ள ஐயா அவர்களுக்கு இவ்விடம் யாவரும் க்ஷேமம். தங்களுடைய க்ஷேமத்திற்கு எழுதும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் பரோடாவில் சந்தித்த பிறகு

பட்டணத்துக்கு வந்து தங்களைப் பார்க்கவேண்டு மென்கிற நோக்கத்தால் கடிதம் எழுத வில்லை. சுருதிவிஷயமாகத் தங்களுக்குள்ள நுட்ப அறிவைக்குறித்து அடிக்கடி ஞாபகம்வருகிறது. மகா-ள-ள-ஸ்ரீ சிட்டிபாபு நாயுடு அவர்களுக்கு சங்கீதத்தில் இருக்கும் பிரியமும் துட்பசுரங்களில் இருக்கும் அறிவையும் கண்டு கேரில்வந்து தங்களையும் அவர்களையும் தங்களைப் போலொத்த பல அறிவாளிகளையும் ஒன்று சேர்த்து கர்நாடகசங்கீதத்தில் வழங்கிவருகிற சுருதிகளையும் மற்றும் சிலவிஷயங்களையும் பற்றி என் அபிப்பிராயத்தைச் சொல்ல மிகவும் பிரியப்பட்டிருந்தேன். ஆனால் பரோடாவிலிருந்து வந்தபின் பெங்களூர் நீலகிரி பாலக்காடு முதலிய விடங்களுக்கு என்சொந்தவிஷயமாய்ப் போகவேண்டியிருந்ததாலும் சங்கீத விஷயமான புஸ்தகம் சீக்கிரம் முடிக்க வேண்டியிருந்ததாலும் உடம்பு சொற்ப அசௌக்கிய மாயிருந்ததனாலும் கான் நினைத்திருந்தபடி பார்க்கக்கூடாமற் போயிற்று. இருந்தாலும் என் அசௌக்கியத்தின் நடுவில் முன்னே குறித்திருந்த தேதியிலேயே கான்பரன்ஸை நடத்தவேண்டு மென்று தீர்மானித்து அதற்குரிய சகல பிரயத்தனங்களும் செய்யப்பட்டு சகலமும் ஒழுங்காக நடந்தேறிமுடிந்தது. சுருக்கமான 3 ரிப்போர்ட்களை 3 பஞ்சாயத்தார்களும் அனுப்பியிருக்கிறார்கள். கூடியசீக்கிரம தங்களுக்கும் மகா-ள-ள-ஸ்ரீ சிட்டிபாபு நாயுடு அவர்களுக்கும் அனுப்புகிறேன்.

தங்களைப்போல் உண்மையை அறியவேண்டு மென்ற அவாவோடு உண்மையை அறிந்து உள்ளபடி சந்தோஷப்படும் அறிவாளிகள் அந்த சமயமிருந்தால் என் மனதிற்கு கொஞ்சம் இளைப்பாறுதல் இருக்கும். 'பண்டிதர் அபிப்பிராயத்திற்கு விரோதமாய் 22 சுருதியென்று கூடியவரை சாதிக்கவேண்டு' மெனத் தங்கள் பூணூலைப்பிடித்துச் சத்தியம் பண்ணிக்கொண்டவர்கள் அநேகர் வந்திருந்தார்கள். நான் வீணையில் ருசுப்படுத்திக்காட்டும் போது பஞ்சமம் குறைகிற தென்றும் தக்யாசியில் காந்தாரம் குறைத்துப்பாட வேண்டுமென்றும் 22 சுருதிகளின்படி வரவேண்டு மென்றும் பலவிதமாய் ஆட்சேபனை செய்தார்கள். அவர்கள் ஆட்சேபனை நில்லாமல் தாங்களே அவமானப்பட்டுப் போனார்கள். தெய்வ உதவியினால் எல்லாரும் உண்மையை யறிந்துகொண்டார்கள். உண்மையற்ற பொய்யர்கள் கட்டவைகள்யாவும் பிசகானவை யென்று பேப்பர்களில் பல விதமாய் எழுதினார்கள். நான் அவற்றுள் ஒன்றிற்காவது பதில் எழுத நினைக்கவில்லை.

இதன் நடுவில் உண்மையாய் நடந்த விஷயங்களைப்பற்றித் தாங்களும் ஒரு ஆர்ட்டிக்கிள் எழுதியிருந்தீர்கள். அதில் ஒரு ஸ்தாயியில் 24 சுருதிகள் இருக்கின்றனவென்று சிலப்பதிகாரத்தில் எங்கே சொல்லியிருக்கிறதென்றும், ஒவ்வொரு ராகிக்கு 2, 2 அலகு என்று எங்கே சொல்லியிருக்கிறதென்றும் ராகம் மாற்றும்பொழுது 1, 2, 2, 1, 2, 2, 2 என்று போவதற்கு நியாயமென்ன வென்றுங் கேட்டிருந்தீர்கள். இவைகள் எல்லாவற்றிற்கும் பதில் பேப்பரில் எழுதக்கேட்டிருந்தீர்கள். ஒவ்வொரு விஷயமும் விரிவாய் எழுதினால் மாத்திரம் மற்றவர்களுக்கு விளங்கும். அதிகமாய் எழுதினால் பேப்பரில் இடமில்லையென்று திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். தாங்கள் எனக்கு நேரில் எழுதியிருந்தால் கொஞ்சங் கொஞ்சமாயாவது உங்களுக்குப்பதில் எழுதியிருப்பேன். இதைப் பார்க்கிலும் நாம் இருவரும் அரைமணி நேரம் இதைப்பற்றி பேசிக்கொள்வோமானால் தங்கள் தெளிவான அறிவுக்கு வெகு சீக்கிரத்தில் புலப்படும். நேரில் பேசிக்கொள்ளும் போது தங்கள் நோக்கத்துக்குத் தகுந்தபடி தெளிவான நியாயம் சொல்லுவது மிக சுலபமாயிருக்கும். அதைப்பற்றி பேப்பரில் எழுதாமற் போனாலும் கடிதமூலமாகத் தங்களுக்குத் தெரிவிப்பது சுலபந்தான்.

வட்டப்பாலையில் சட்சமத்தை ஆரம்பிக்கும் மருதயாழில் 4, 4, 3. 2, 4, 3. 2 அலகுள்ள ஆரோகணத்தில் மத்திமத்திலிருந்து ஆரம்பிக்கும் 2, 4, 3, 2, 4, 4, 3 என்ற வரிசையை

வைத்து ஆரோகணம் சொல்லுகிறார். முந்தினது தீரசங்கராபரண சுரமாகவும் பிந்தினது மேசகல்யாணியாகவும் ஆயப்பாலே முறையில் வருகிறது. விளரி கைக்கிளையில் ஒவ்வொரு அலகு குறைத்து கானம் செய்யும்போது முந்தினது மருதப்பண் என்றும் பிந்தினது குறிஞ்சிப் பண் என்றும் சிலப்பதிகாரத்தில் காணக்கிடைக்கிறது. அலகு மாற்றும் விஷயம் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை 92-93ஆம் பக்கங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் சட்சமத்தின் முதலாவது இரண்டாவது அலகும் நிஷாதத்தில் முதல் அலகும் சேர்த்து 3 அலகாக்கி 3-ஆவது அலகில் காந்தாரம் போடச்சொல்லுகிறார். அதன் பின் சட்சமத்தின் 3ஆவது 4ஆவது அலகில் 1, 2 அலகுள்ள மத்திமம் வருகிறது. நிஷாதத்தில் மீதியாயிருந்த 1 அலகை 3 அலகுள்ள தைவதத்தோடு சேர்க்க 4 அலகாயிற்று. 4-ஆவது அலகில் 4 அலகுள்ள ரிஷபம் போடச் சொல்லுகிறார். இம்முறையே சுரங்களுக்கு வரும் அலகின்படி பன்னிருதடவை மாற்றினால் 12 பாலே பிறக்குமென்று சொல்லுகிறார். இப்பன்னிருபாலையுள் 7 பெரும்பாலையும் 5 சிறுபாலையுமென்று சொல்வதினாலும் 7 பெரும்பாலையின் பேர்கள் சொல்லப்படுவதினாலும் 12 பாலையில் எவ்வித சங்கேதமுமில்லை.

அதோடு கூட சட்சமத்தின் 4ஆவது அலகில் நின்ற 2 அலகுள்ள மத்திமம் வலமுறையானாலும் இடமுறையானாலும் கிரகமாற்றப்படும்பொழுது மத்திமத்திற்குரிய 2, 2 அலகோடு போகவேண்டுமென்பது, 2, 4, 3, 2, 4, 4, 3 என்ற அலகு முறையால் தெரிகிறது. இப்படி 2, 2 அலகு மாற்றிக்கொண்டு போகும்பொழுது 22 சுருதியுள் ஒரு ஸ்தாயியில் பதினொரு தடவைதான் மாற்றமுடியுமேயொழிய 12 தடவை மாற்றமுடியாது. இதனால் ஒரு ஸ்தாயியில் 24 சுருதிகள் வைத்து அதில் மத்திமத்தின் முன்னுள்ள காந்தாரத்திலும், பஞ்சமத்தின் பின்னுள்ள தைவதத்திலும் ஒவ்வொரு அலகு குறைந்த சுரமாய் கமகமாய்ப் பிடிக்கவேண்டுமென்று சொன்ன சுரமேயொழிய ஒரு ஸ்தாயில் 22 என்று சொல்ல வரவில்லை. 4 அலகுள்ள சதுர்சுருதி ரிஷபத்திற்கும் 2 அலகுள்ள சுத்த ரிஷபத்திற்கும் நடுவில் 3ஆவது சுருதி ஒன்று இருக்கிறதே. இதை 2 சுருதி ரிஷபத்திலிருந்து கமகமாய் இழுத்து வாசிக்கிறோமே. இதனால் 4ஆவது சுருதி ரிஷபம் எங்கேபோய் விட்டது? இப்படியே மற்ற சுரங்களிலும் வருகிறது. எங்கெந்த சுரங்களில் குறைந்துவருகிறதென்று காட்டுகிறதற்கு 16 சாதிப்பண்கள் சொல்லியிருக்கிறார்கள். அவைகளின் மொத்த அலகு கூட்டிப் பார்க்க 22 ஆக வரும். இதனால் ஒரு ஸ்தாயியில் 22 அலகாகக் குறைந்த 2 அலகையும் சேர்த்து 24 ஆகச் சொல்லவேண்டும். மேலும் கவும் தவும் மருதயாழில் குறைந்து வருகின்றன. பஞ்சமத்தில் சட்சமம் ஆரம்பிக்கும் பொழுது 4, 3, 2, 4, 4, 3, 2 என்ற அலகுமுறை வரும். இதையே சங்கீத ரத்னகார் 4, 3, 2, 4, 4, 3, 2 என்று சொல்லுகிறார். பஞ்சமம் சட்ஜமமாகும் பொழுது அதற்கடுத்த 3 அலகுள்ள தைவதம் ரிஷபமாகிறது. 2 அலகுள்ள நிஷாதம் காந்தாரமாகிறது. இம்முறையே 16 ஜாதிப்பண்கள் மாற்றப்படும்பொழுது சட்சமம் முதற்கொண்ட ஏழு சுரங்களும் 3 சுருதியாக வரலாமென்று தாங்கள் அறியலாம்.

இதனால் ரிஷபமும் தைவதமும் எப்போதும் 3 சுருதிகளாக வருகின்றனவென்று நாம் நினைக்கக்கூடாது. ஒவ்வொரு ராகத்திற்கும் தகுந்தவிதம் வெவ்வேறு சுரங்களில் குறைந்து வருகிறது. ஆனால் ச-ப முறையாகவும் ச-ம முறையாகவும் வரும் 2 சுரங்கள் கமகமாய் வரவேண்டுமென்று சொல்லவந்ததேயொழிய வேறில்லை. ச-ப 7ஆவது 7ஆவது ராசியாய்ப் பார்த்துக் கொண்டு போகும்பொழுது ஒரு ராசியில் 12 சுரங்கள் கிடைக்கின்றன. அப்பன்னிரண்டு ராசியில் 2 அலகுள்ள மத்திமத்தை எடுத்துக்கொண்டு கிரகமாற்றிக்கொண்டு போனால் பன்னிருபாலை பிறக்கும் என்பதினால் ஒவ்வொருராசி 2, 2 அலகாக 24 அலகுகள் நிரம்பியிருக்கின்றனவென்றும் தெளிவாகக்காண்கிறோம். இதோடு இன்னும் பல குறிப்புகளையும் நாம் சேர்த்துப்பார்க்க வேண்டும். வரன்முறை மருங்கின் ஐந்தினும் ஏழினும் என்றபடி உழைமுதல் இடவோட்டாக 5ஆவது

5ஆவது இராசியாகவும் வலதோட்டாக ச-ப முறையில் 7ஆவது 7ஆவது ஆகவும் ஒரு இராசியில் 12 சுரங்கள் வருகின்றனவென்று நாம் காண்பதினால் 12 ராசியில் நிற்கும் சுரங்களில் ஒவ்வொன்றும் ச-ப ச-ம முறைப்படி பொருத்தமுள்ள சுரமென்று காண்கிறோம். இதனால் 11 இராசிகள் வரமாட்டாவென்றும் சுருதிகள் (7+5) 12 ஆக 22 சுருதிகள் அல்ல 24 சுருதிகள் என்றும் தெளிவாய்த் தெரிகிறது.

இதோடு 2ஆவது ராசி அல்லது சட்ஜமம் நின்ற நாம்பாகும் பொழுது 2ஆவது ராசியிலுள்ள ரிஷபமும் சட்சமத்திற்கு 4ஆவது ராசியிலுள்ள காந்தாரமும், 5ஆவது ராசியிலுள்ள சுத்த மத்திமமும் 7ஆவது ராசியிலுள்ள பஞ்சமமும் சட்சமத்தோடு பொருந்துமென்றும் 3ஆவது 6ஆவது ராசியிலுள்ள சுரங்கள் பொருந்தாதென்றும் சொல்லுகிறார். இதன்மேல் இம்முறையே பஞ்சமத்திற்கு மேல் 2ஆவது ராசியிலுள்ள தைவதமும் 4ஆவது ராசியிலுள்ள நிஷாதமும் அதற்குமேல் 5ஆவது ராசியிலுள்ள மத்திமமும் வருகிறது. 5ஆவது ராசியிலுள்ள மத்திமம் நின்ற நாம்பாகிய சட்சமம் நின்ற ராசியில் வருகிறது.

சட்சமத்தின்மேல் 2 ராசியுள்ள ரிஷபமும் 2 ராசியுள்ள காந்தாரமும் 1 ராசியுள்ள மத்திமமும் 2 ராசியுள்ள பஞ்சமமும் 2 ராசியுள்ள தைவதமும் 2 ராசியுள்ள நிஷாதமும் 1 ராசியுள்ள சட்ஜமமும் சேர்ந்து ஒரு ஆரோகணம் உண்டாகிறது. இவ்வாரோகணத்தை பூர்வ தமிழ்மக்கள் செம்பாலைப் பண் என்றும் தற்காலத்தார் தீரசங்கராபரண மென்றும் வழங்குகிறார்கள். இவ்வேழு சுரங்களையும் 1, 2, 2, 1, 2, 2, 2 முறையில் வைத்துக்கொண்டு 7 தடவை கிரகம் மாற்ற தீரசங்கராபரணம், கரகரப்பிரியா, அனுமத்தோடி, மேசகல்யாணி, அரிகாம்போதி ,நடபைரவி, சுத்ததோடி முதலிய ராகங்கள் பிறக்கும். இவையாவும் பரோடா கான்பரன்ஸில் வாசித்த 2ஆவது வியாசத்தில் தெளிவாகக் காட்டியிருக்கிறேன். தங்களுக்கு நான்கொடுத்த புஸ்தகத்தை அல்கத்தாவிலிருந்து வந்த ஒருவருக்கு வாங்கிக்கொடுத்து விட்டேன். திரும்பதருகிறதாகச் சொன்ன நான் கொடுத்தேனே இல்லையோவென்று சந்தேகப்படுகிறேன். தங்களுக்கு புஸ்தகமில்லாதிருந்தால் உடனே அனுப்புகிறேன். சில கேள்விகளைப் பார்த்தால் புஸ்தகம் பார்த்திருப்பதாகவும் தெரிகிறது. தமிழ்நூலில் விசாரணையுள்ள தங்களுக்கு சுருக்கமாக எழுதினேன். பேப்பர்களில் எழுதுவதாயிருந்தால் இப்படி 8 பங்கு எழுத வேண்டுமே. புஸ்தகத்திற்காக எழுத வேண்டியவை அதிகமிருந்தமையால் உங்களுக்கு உடனே பதிலெழுதக் கூடவில்லை. சிலப்பதிகாரம் அல்லாமல் இசைமரபுஎன்ற பழைய நூலில் காணப்படும்

> "ஆயத்துக் கீரா றறுநான்கு வட்டத்துக்
> கேயுங்கோ ணத்துக் கிரட்டிப்புத்—தூயவிசை
> நுண்மைக் கதிலிரட்டி நோனலது மோர்நிலைக்கிங்
> கெண்மூன்று கேள்விகொண் டேண்."

என்ற வெண்பாவினாலும் தெளிவாக அறியலாம். இன்னும் பல அரிய விஷயங்களைக் கருணாமிர்த சாகரமென்ற எனது புஸ்தகத்தில் எழுதியிருக்கிறேன். அதில் சுருதிகளைப்பற்றி என்னால் கூடியவரை வெளிப்படையாக எழுதியிருக்கிறேன். மற்றுமுள்ள விஷயங்கள் பின் எழுதுவேன். தாங்கள்கேட்டகேள்விகளுக்கு தங்களுக்கு சமாதானம் உண்டாகாதிருந்தால் உடனே விவரமாய் எழுதுங்கள். திருப்தி உண்டானால் அதையும் எழுதுங்கள். எழுதினால் அதற்குமேல் எழுதக் கூடியவைகளை எழுதுகிறேன்.

மகா-ள-ள-ஸ்ரீ சிட்டிபாபு நாயுடு அவர்கள் வருகிறதாகத் தந்தியடித்தும் நெருங்கினசமயத்தில் வரக்கூடவில்லையென்று தெரிவித்தார்கள். அது என்மனதிற்கு மிகவும் வருத்தமாயிருந்தது. அவர்களையும் அன்பாய் விசாரித்தேன் என்று என் அன்பைச் சொல்லுங்கள். உங்களோடு

நேரில் சம்பாஷித்துக் கொள்ளக்கூடாமல் கடிதமெழுத நேரிட்டதே யென்று வருத்தப்படுகிறேன். பரோடா கான்பரன்ஸில் சுருதியைப்பற்றி நான் சொன்னவைகளும் காட்டியவைகளும் இன்று நான் எழுதியவைகளும் கர்நாடக சங்கீதத்திற்குப் பொருத்தமானவைதானு என்று தங்கள் அபிப்பிராயத்தை எனக்குத் தெரிவிக்கும்படி மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். தாங்களும் தங்கள் இனஜனபந்துக்களும் க்ஷேமமாயிருக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

தஞ்சாவூர்,
23—10—16.

இங்ஙனம் தங்கள்
உண்மையுள்ள நண்பன்,
மு. ஆபிரகாம் பண்டிதர்.

The Hindu Friday, 22nd September 1916.

Several letters have, for sometime past, been appearing in the columns of the "Hindu", about Indian music, in connection with Rao Sahib M. Abraham Pandithar's claims to have solved the knotty question of srutis and their number in an octave, in a paper read before the "All-India Music Conference" attended with a so-called demonstration of his theory of 24 srutis by his accomplished daughters, both vocally as well as on the "vina;" so a short "resume" of what transpired in all the 7 sessions of Tanjore Sangita Vidya Mahajana Sangham, which met under his auspices, is bound to be useful to your readers. So far, of the several learned discourses read before the Conference on this all important question, with the solitary exception of Mr. Pandithar's, all the others were based on the theory of 22 srutis. No doubt there was another exception of a Pillai, who laboured hard to base his theory of 24 Srutis on the fact that the "Gayatri" consists of 24 syllables. This does not merit any serious consideration at our hands. As for Mr. Pandithar's pet theory, at the very first conference, he began by expounding a view which was a medley of a number of conflicting opinions, which bore no resemblance or other relationship to each other In that very session, I read a paper on the theory of 12 Swaras (on the Vina) of the author of "Sangitaparijata" and tried to reconcile his views with the orthodox view by pointing out some of his errors. In the 2nd conference, besides elaborating the views of the same author, I showed upon what 22 srutis he could have based his 12 and also broadly hinted that Mr. Pandither's theory of 12 svaras of equal intervals in an octave was erroneous and, if at all they should be of equal intervals, the number of such intervals should be 53 and not 12. The same topic was continued by me in the 3rd Session, when I tried to reconcile the theory of 53 equal intervals with ancient tradition and modern practice and even demonstrated its correctness on an instrument specially prepared for the purpose. As this was not acceptable to Mr. Pandithar, he has been all along trying not to give any facilities for its further exposition. Messrs. Prataparamaswami Bhagavatar and T. A. Panchapagesa Bhagavatar were at one with me in my views and calculations from the very beginning and Mr. P. S. Sundaram Aiyar had by this time explained Rao Bahadur C. Nagoji Rao's theory and demonstrated the same on a specially designed harmonium. At the 5th session, I again called into question the soundness of Mr. Pandithar's theory in a paper on "Sruti Nirnaya" wherein I forestalled Mr. Pandithar by quoting for my purpose from the same "Silappadikaram," upon the fancied support of which he so much relies for establishing his theory. Finding that he was baffled everywhere and that the authorties upon which he formerly relied proved elusive, he, with the help of a number of pandits employed for the purpose, seems to have ransacked the pages of "Silappadikaram" and tried to place fancied interpretations upon passages therefrom to suit his own purpose. I do not know how far the world of

Music is going to be benefited by his theory of 24 srutis, whether it bears his stamp and the words "Manufactured in the Karunanidhi Medical (Musical?) Hall" or has the fancied impress of the "Silappadikaram," which can exists only in the imagination of Mr. Pandithar. I have a little to be hard upon the Pandithar, for the interests of Indian music which has outlived the attacks of ages should not be so easily allowed to be jeopardised by any one, who, having understood a little of Indian music and something of European music to boot, masquerade before the public as the Messiah of Indian music.

PANDIT S. SUBRHMANYA SASTRI.

"ஹிந்து" வெள்ளிக்கிழமை 22 செப்டம்பர் 1916.

சிறிது காலமாக இந்திய சங்கீதத்தைப்பற்றிப் பற்பல கடிதங்கள் இந்துபேப்பரில் வந்துகொண்டேயிருக்கிறதைப் பார்த்தேன். அவைகளில் ராவ் சாயப் M. ஆபிரகாம் பண்டிதரவர்கள் சுருதி என்ற கடினமான விஷயத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டதாகவும், ஒரு ஸ்தாயியில் இத்தனை சுருதிகள் வருகின்றன வென்பதைப்பற்றி பரோடா ஆல் இந்திய கான்பரென்சில் ஒரு முடிவு பண்ணினதாகவும், அதற்கு ருசுவாக வீணையிலும் வாய்ப்பாட்டிலும் அவருடைய கல்வித் திறமை வாய்ந்த குமாரத்திகள் வாசித்தும் பாடியும் காட்டினதாகவும் வாசித்தறிந்தேன். ஆகையால் பண்டிதரவர்கள் கூட்டிய தஞ்சை சங்கீத கான்பரென்சு எழுகளிலும் நடந்தவைகளைச் சொல்வது யாருக்கும் பிரயோசனமாயிருக்கும். இந்த எழு கான்பரென்சிலும் வாசிக்கப்பட்ட உபந்நியாசங்களெல்லாம் (பண்டிதரவர்களுடையது நீங்கலாக) 22 சுருதிகளைப்பற்றியே பேசின. ஆனால் இன்னொரு பிள்ளை யொருவர் மாத்திரம் காயத்திரி 24 பகுதிகளாலானதால் சுருதிகளும் 24 என்று ருசுப்படுத்த வெகுவாய்ப் பிரயாசைப்பட்டார். இதை நாம் ஒரு பொருட்டாய் எண்ணுகிறதில்லை. பண்டிதரவர்களின் செல்வக்கொள்கையைப்பற்றி நான் சொல்லுகிறதென்னவென்றால், முதலாவது கான்பரென்சிலேயே ஒன்றற் கொன்று விரோதமாயுள்ள பல கொள்கைகளை ஒன்று சேர்த்து தன்னுடைய முறையாகச் சொல்லிக்கொண்டார்கள். அதே கான்பரென்சில் வீணையின் 12 சுரங்களையும் பற்றி பாரிஜாதக்காரர் சொல்வதை எடுத்துக் காண்பித்து பண்டிதரவர்களுடைய முறையையும் அதையும் சமாதானப்படுத்தும்படி அவர்கள் முறையிலுள்ள தவறுதல்களை எடுத்துக் காண்பித்தேன். இரண்டாவது கான்பரென்சில் பாரிஜாதக்காரருடைய கொள்கையைப்பற்றி விஸ்தாரமாய்ப் பேசினதுமல்லாமல், 22 சுருதிகளில் எந்த 11 ஆக அவர்கள் ஆதாரமாய் எடுத்துக் கொண்டார்கள் என்பதைப்பற்றியும், ஸ்தாயியில் சம முறையாய் 12 சுரங்கள் வருவது தப்பென்றும், ஸ்வரங்கள் சமமாயிருந்தால் அவைகள் 12 அல்ல 53 ஆய் இருக்கவேண்டுமென்பதைப்பற்றியும் சொன்னேன். மூன்றாவது கான்பரென்சில் திரும்பவும் அதையே சொல்லி 53 சம இடைவெளிகள் பூர்வ முறைக்கும் தற்காலப் பழக்கத்திற்கும் இசைந்ததாயிருக்கிறதென்று ரூபித்ததுமல்லாமல் அதற்கென்று தயார் செய்யப்பட்ட வாத்தியத்தின் மூலமாய் அது சரியென்றும் ருசுப்படுத்தினேன். இது பண்டிதரவர்களுக்குப் பிரியமாயில்லாதபடியால் அதைத் திரும்பவும் விஸ்தரிப்பதற்கு முடியாதபடி அநேக இடையூறுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். பிரதாப ராமசுவாமி பாகவதரவர்களும் பஞ்சாபகேச பாகவதரவர்களும் ஆதி முதல் என் கொள்கையை அனுசரித்தவர்கள். மகா-ரா-ரா-ஸ்ரீ P. S. சுந்தரமையர் அவர்களும் ராவ் பகதூர் காகோஜி ராயருடைய முறையை மற்றவர்களுக்குச் சொல்லி அதற்கென்று செய்யப்பட்ட சுருதி ஆர்மோனியத்தின் மூலமாய் ருசுப்படுத்தியுமிருக்கிறார்கள். ஐந்தாவது கான்பரென்சிலும் நான் படித்த "சுருதி நிர்ணயம்" என்ற வியாசத்தில் பண்டிதரவர்களுடைய கொள்கை தப்பென்று சொன்னதுமல்லாமல் என் முறையை ஸ்தாபிப்பதற்கு அவர்கள் ஆதாரமாய்ச் சொல்லுகிற சிலப்பதிகாரத்திலிருந்து சில வரிகளையும் எடுத்து ரூபித்தேன். எங்கே போனாலும் தனக்கு இதம் இல்லை என்றும் தான் நம்பியிருந்த நூல்கள் பிரயோசன மற்றவையென்றும் பண்டிதரவர்கள் கண்டு இதற்கென்று சில தமிழ்ப் பண்டிதர்களை ஏற்படுத்தி சிலப்பதிகாரத்தை முதல் தொடங்கிக் கடைசி வரைக்கும் ஆராய்ந்து தன்னுடைய கொள்கைக்குத் தகுந்த பிரகாரம் அதை வியாக்கியானம் பண்ணிவைத்திருக்கிறார்கள். அவர்களுடைய 24 சுருதி முறையினால் சங்கீதம் எவ்வளவு தூரம் பயனடையும் என்று நான் சொல்ல முடியாது. அவர்களுடைய கொள்கையானது அவர்களுடைய சொந்த முத்திரையையும் "கருணாநிதி வைத்தியசாலை (சங்கீத சாலை) யில் செய்யப்பட்டது" என்ற முத்திரையையும் உடையதாயிருக்குமோ அல்லது சிலப்பதிகார முத்திரையையுடையதாயிருக்குமோ தெரியவில்லை. சிலப்பதிகார முத்திரை அவர்கள் மனதில் இருக்குமேயொழிய மற்றவர் அதைச் சரியென்று ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பண்டிதரவர்களைப்பற்றி நான் கரேமான வார்த்தைகளைச் சொல்லுகிறேன். ஆனால் இந்திய சங்கீத விருத்திக்கு அது அவசியமானதாய்த்தான் இருக்கிறது. என் என்றால் அதற்கு உண்டான இடையூறுகளை ஊழிகாலமாய் எதிர்த்து ஜெயங்கொண்ட இந்திய சங்கீதமானது தன்னை எளிதில் யாரும் ஜெயிக்க இடங்கொடுக்கக்கூடாது. பண்டிதரவர்கள் சற்று இந்திய சங்கீதமும் ஐரோப்பிய சங்கீதமும் தெரிந்துவிட்டதென்று இந்திய சங்கீதத்தை எடுத்து நிறுத்த வந்த மேசியா என்று எல்லாருக்கும் முன்பாக நடித்தால் யார் அவரை அங்கீகரிப்பார்கள்?

S. சுப்பிரமணிய சாஸ்திரி.

☞ இவர் எழுதிய விஷயங்கள் பலவற்றிற்கும் ஏற்கனவே புத்தகத்தில் பதில் எழுதியிருப்பதால் இங்கு ஒன்றும் எழுதவில்லை.

1917-ஆம் வருஷ சுதேசமித்திரன் அனுபந்தம் 21–22ஆம் பக்கம்.

சுருதிகளின் விவாதம்.

ஆனால் இவ்விதமான நோக்கமுள்ள சிலர் தற்காலத்தில் செய்து வரும் சங்கீத சீர்திருத்தங்களில் சில வழிகள் அவ்வளவு சிலா஘ிக்கக்கூடியவையல்ல. தற்கால சங்கீதத்தைக் கலையைப் பிடுங்கி நன்முய் வளர்த்து நமக்கு உபயோகப்படக்கூடிய ஸ்திதியில் வைப்பதற்குப் பதிலாய் சிலர் நமது புத்திக்கெட்டாததும் ஒருநாளும் முடிவுபெறுததுமான சாஸ்திர சண்டைகளைப்போட்டுக்கொண்டு அதற்காக கான்பரென்ஸுகளை வைத்து புஸ்தகங்களை எழுதி ஸமாசாரப் பத்திரிகைகளில் யுத்தம் செய்கிறார்கள். ' அவர்கள் சுருதிகள் பரமாணுக்கள் மாத்ரா சலனங்களில் ஆரம்பித்து நாம் பாடும் கீர்த்தனங்களுக்கு வருவதற்குள் எவ்வளவோ சதுர் யுகங்களாய் விடும். இவ்விதமான சீர்திருத்தம் இப்பொழுது நமக்கு வேண்டாம். * * * * *

இவ்விதமான நோக்கத்துடனே நடக்குமென்று எல்லோரும் எண்ணியிருந்த தஞ்சாவூர் ஸங்கீத கான்பரென்ஸ் முடிவில் 24 சுருதிகளுக்கும் 22 சுருதிகளுக்கும் ஏற்பட்ட போர்க்களமாய் முடிந்தது.

சீனிவாச ஐயங்கார்.

மகா-ரா-ரஸ்ரீ சீனிவாச ஐயங்கார் B. A. அவர்கள் எழுதிய வியாசத்திற்குப் பதில் கடிதம்.

Dear Sir,

1917ஆம் வருஷத் துவக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட சுதேசமித்திரன் அனுபந்தம் 21ஆம் பக்கத்தில் 'சங்கீதம் சீர் திருந்த வேண்டும்' என்ற தலைப்பின்கீழ்ப் பலபாகங்களாகப் பிரித்துத் தாங்கள் எழுதிய வியாசத்தைப் பார்வையிட்டேன். பல வேலைகளினால் அதற்கு உடனே பதில் எழுதக்கூடாமற் போனதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதில் 'சுருதிகளின் விவாதம்' என்ற பிரிவில் சிலவரிகளைக்கவனிக்கும் பொழுது தங்களைப் போன்ற விவேகிகள் இப்படியும் எழுதலாமோ வென்று சங்கதிக்கிறேன்.

1916ஆம் வருஷம் மார்ச்சுமாதம் 20ஆம் தேதி முதல் பரோடாவில் நடந்த ஆல் இந்திய மியூசிக் கான்பரென்ஸில், கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகள் இன்னவையென்று கணக்கின் மூலமாகவும், கணக்கில் கிடைக்கும் அளவின்படி; மெட்டுகள் வைத்த வீணையின் மூலமாகவும் வீணையில் வாசித்த கர்நாடக கீர்த்தனங்கள் மூலமாகவும் நான் சபையில் விளக்கிக் காட்டிய பொழுது தாங்கள் பக்கத்திலிருந்து நான் தமிழிற் சொல்லியவைகளை இங்கிலீஷில் மொழிபெயர்த்து எனக்கு உதவி செய்தீர்களே. அதோடு கூட்டம் முடிந்த பின் ' இவ்விஷயங்கள் என் மனதிற்குச் சந்தோஷமாயிருக்கிறது. சிலப்பதிகாரத்தை நான் பார்த்திருக்கிறேன். சங்கீதத்தைப் பற்றி வரும் சில விஷயங்களை எனக்கு விளக்கிக் காட்டினால் நான் எல்லாருக்கும் சொல்லி விடுகிறேன், என்று சொன்னீர்களே. தங்கள் உண்மையான மனதிற்காகச் சந்தோஷமடைந்து சல்லாபம் பண்ணிக் கொண்டோமே. 1916ஆம் ஸெப்டம்பர்மீ 2ஆம் தேதி தாங்கள் சுருதிகளைப்பற்றி எழுதிய கடிதத்திற்கு 1916ஆம் அக்டோபர்மீ 23ஆம் தேதி கடிதம் எழுதியிருந்தேன். அக்கடிதம் தங்களைப் போன்றவர்களுக்கு அறிந்து கொள்ளப் போதுமானதே. அப்படியிருக்கச் 'சுருதிகளின் விவாதம்' என்ற தலைப்பின் கீழ்த் தாங்கள்

சொல்லிய சில வசனங்களைக் கவனிக்கையில் தமிழில் தாங்கள் திருப்பிய வால்மீக ராமாயணம் பாலகாண்டம் கோட்டுகள் 221ஆம் பக்கம் முதல் 277ஆம் பக்கம் வரையிலும் 56 பக்கங்களில் சங்கீதத்தைப் பற்றித் தாங்கள் சொல்லிய விஷயங்களை உணர்த்திப் படித்துவதற்காக இப்படி எழுதி இருக்கலாமோ என்று தோன்றுகிறது.

அங்கே சாரங்கர் முறைப்படிச் சொல்லிய 22 சுருதிகளுக்கும் அவற்றின் பெயர்களுக்கும் மகா-ரா-ரா-ஸ்ரீ மாணிக்கமுதலியார் அவர்கள் எழுதிய சங்கீத சந்திரிகையிலிருந்து தாங்கள் அப்படியே எடுத்து எழுதியிருக்கும் பன்னிரண்டு அரைச் சுரங்களுக்கும் அவற்றின் விக்ருதி பேதத்தாலுண்டான பதினைந்து சுரங்களுக்கும் அவைகளின் பெயர்களுக்கும் அவைகளினாலுண்டாகும் 72 மேளக்கர்த்தாக்களுக்கும் அவைகளின் பெயர்களுக்கும் அவைகளில் வரும் ஜன்னிய ராகங்களுக்கும் எவ்விதமான சம்பந்தமுமில்லை யென்று தாங்கள் அறிந்து கொள்ள முடியாமல் இரண்டும் ஒன்றுபோல் தோன்றும்படி எழுதியிருக்கிறதாகத் தோன்றுகிறது.

தற்காலத்தில் நாம் பாடுகிற கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் கீர்த்தனங்கள், மகா-ரா-ரா-ஸ்ரீ S. மாணிக்க முதலியார் அவர்கள் எழுதிய சங்கீத சந்திரிகையின் படிக்கும், மகா-ரா-ரா-ஸ்ரீ வேங்கடமகி எழுதிய சதுர்தண்டிப் பிரகாசிகையின் படிக்கும், பன்னிரண்டு சுரங்களின் பிரஸ்தாரத்தாலான 72 மேளக்கர்த்தாவிலும், அவற்றின் ஜன்னிய ராகங்களிலும் வருகிறதாகத் தாங்கள் மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்வீர்கள். ஆனால் சாரங்கர் எழுதிய துவாவிம்சதி சுருதி முறைப்படி அவைகள் வரவில்லையென்றும் துவாவிம்சதி சுருதி முறைப்படி காளது வரையும் உலகத்தில் எந்தப் பாகத்திலாவது ஒரு கீர்மாவது படிக்கப்படவில்லை என்றும் தாங்கள் இனி மேலாவது விசாரிக்கும்படியாக மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். சுருதி விசாரணை மிகவும் அருமையும் நுட்பமுமானது தான. இதுவரையும் அதைப்பற்றி ஒரு நூலும் தெளிவாய்ச் சொல்ல வில்லைஎன்பதும் உண்மை தான். ஆனால் 'இவ்விதமான சீர்திருத்தம் இப்போது நமக்கு வேண்டாம்' என்று தங்களைப் போன்றவர்கள் சொல்வது நியாயமாயிருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை. சுருதியைப்பற்றி எழுதும் வியாசங்கள் அதை விசாரிக்க விரும்பும் அறிவாளிகளுக்குப் பிரியமாயிருக்கும். மற்றவருக்கு அது சாஸ்திர சண்டைபோல் தோன்றுமே யொழிய முடிவில் நன்மையைத் தரத்தக்கது என்று தெரிய மாட்டாது. நாம் இவ்வித அறியாமைக்கு என் செய்வோம்?

கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் நுட்பமான சுருதிகளை விசாரிக்கவேண்டாம் என்று சொல்லுகிறீர்கள். தமிழ் மொழியைக் கற்க விரும்பும் ஒருவனுக்கு முன்னே மிகச் சங்கடப்பட்டு அரைகுறையாய்க் கற்ற ஒருவன் 'அப்பா! அது மிகத்துன்பம். நமது புத்திக்கு எட்டாதது. இரவு பகலாக அதே தொடர்பாகவிருந்து ஏழு, எட்டு வருஷம் பிரயாசப்பட்டாலும் ஒரு நாளும் முடிவு பெறுவதது. கேர்ந்த வித்துவானுவது கூடாதகாரியம். அதில் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டாம். அவற்றில் நீண்ட உயிர் எழுத்துக்கள் ஏழாம். குறிய உயிரெழுத்து ஐந்தாம். இதற்குஆவி, அச்சு, சுரம் என்று பெயராம். மெய்யெழுத்துக்கள் பதினெட்டாம். அவைகள் ஒற்று, உடல், உடம்பு என்று பெயர் பெறுமாம். அவற்றில் வல்லினம், மெல்லினம் இடையினம் என்று மூன்று விதமாம். ஒவ்வொரு உடம்பிலும் சுரம் புகுந்து 216 எழுத்து பேதமுண்டாகுமாம். இதன் மத்தியில் உயிருமல்லாமல் மெய்யுமல்லாமல் ஆய்தமென்று ஒன்று வருமாம். இவைகளை யெல்லாம் எந்தக் காலத்தில் கண்டு பிடித்துத் தமிழ் வாசிக்கப் போகிறாய்? முதல் முதல் நெடுங் கணக்கு வாசிக்க வேண்டும். அதன்பின் அசை எடு படிக்க வேண்டும். அகராதியும் (நிகண்டும்) பாடம் செய்ய வேண்டும். தேமா, புளிமா, கருவிளம், கூவிளம், தேமாங்

காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய், தேமாந்தண்பூ முதலிய வாய்ப்பாடுகள் பழத்து நீ வெண்பா விருத்தம் எழுதுவதற்குள்ளாக உன் பொழுது விடிந்துபோம். இதில் சரியானபடி வாய்மல்போனால் 'காரிகைகற்றும் கவிகட்ட வல்லாதான் பேரிகை கொட்டிப் பிழைப்பதன்று' என்பதற்கிணங்கப் பறையடித்துப் பிழைக்கப்போக வேண்டுமாம். உனக்கு எது சம்மதம். நான் சொல்வதைக்கேள். அங்காடிக்குப்போ. அங்கங்கே கொஞ்சம் நின்று பேசப்படும் வார்த்தைகளைக் கவனித்தால் உனக்குத் தமிழும் வந்து விடும். தெலுங்கும், துளுக்கும் வந்து விடும். புல் விற்கிற இடம்போனால் இங்கிலீஷும் கொஞ்சம் பேசலாம்' என்று சொல்வதுபோலிருக்கிறதே. நான் என்ன சொல்லட்டும்.

தியாகராஜ ஐயர் கீர்த்தனங்களில் பத்துக் கீர்த்தனையும் காடோடிப்பாட்டுகளில் சிலவும் தெரிந்து விட்டால் கதை செய்து பிழைக்கலாம் எனறு வெளிவந்து விடுகிறவர்களின் வரும் படியைப் பார்த்து தேர்ந்த சங்கீத வித்வான்களும் தங்களுக்கு கஷ்டமான வாய்ப்பாட்டை விட்டுச் சுலபமாய்க் கதைசெய்வதில் இறங்கிவிட்டார்கள்.

இது தவிர தங்களுக்குத் தெரிந்த நூறு, இருநூறு தியாகராஜ ஐயர் கீர்த்தனைகளில் வழங்கிவரும் நாட்ட சுருதிகள் இன்னவையென்று அறியாமலும் தம்பூரா சுருதி சேர்க்கத் தெரியாமலுமிருக்கும் சிலர் அவைகள் சுலபமாய்ப் பாடும் சங்கீதத்திற்குக் கேளகளாயிருக்கின்றனவென்று கேளாத்தவிடும் புண்ணியவான்களைப்போல ஆர்மோனியத்தில் பழகிக்கொடுத்துக் காலந்தள்ளி வருகிறதையும் காண்கிறோம். அப்படிப்பட்ட இனிமையற்ற முறையைத் தாங்கள் மெச்சிக் கொண்டு அம்முறை விருத்திபாகவேண்டுமென்று தூண்டுகிறீர்கள்.

$\frac{1}{4}$, $\frac{1}{8}$, $\frac{1}{16}$ போன்ற நாட்பமான சுருதிகளில் பாடப்படும் தியாகராஜ ஐயர் அவர்கள் கீர்த்தனையையும் மற்றும் பூர்வி பண்களின் இனிமையையும் கெடுப்பதுபோல் ஆகவில்லையா? கமகமாய்ச் சொல்லப்படும் நாட்பமான சுருதிகளில்லாதிருந்தால் கீர்த்தனங்கள் இனிமைப்படுமா? ஒரு மனிதனது அங்கத்தில் பெரியவைகளான கை, கால், தலை போக கண், காது, மூக்கு, நாக்கு விரல்கள் போன்ற சிறிய அவயவங்களை எடுத்து விட்டால் எப்படியிருக்குமோ அப்படியும் தீர சங்கராபரணம் போலவும் இருக்கும்.

தீரசங்கராபரணத்தில் வரும் சதுர்சுருதி ரிஷபத்திற்கும் அல்லது காலு அலகான ரிஷபத்திற்கும் சங்கராபரணத்தில் வரும் $4\frac{1}{2}$ சுருதியான ரிஷபத்திற்கும் தீரசங்கராபரணத்தில் ஜன்னியமான தேவகாந்தாரியில் வரும் $4\frac{3}{4}$ சுருதி யான ரிஷபத்திற்கும் அதே இராகத்தில் ஜனித்த ஆரபி இராகத்தில் வரும் $4\frac{1}{4}$ சுருதியான ரிஷபத்திற்கும் பேதமில்லையா? $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$ போன்ற நாட்பமான கமக சுரங்களை எடுத்துவிட்டு ஆர்மோனியத்தில் வரும் சதுர் சுருதி ரிஷபமாகச் சொன்னால் நியாயமாயிருக்குமா? இவ்வணுவணுவான சுரங்கள் அந்தந்த இராகங்களுக்கு ஜீவசுரமாகச் சொல்லப்படுகின்றன. ஜீவன்போனமனிதன் எப்படியிருப்பானோ அப்படியே ஆர்மோனியத்தில் வாசிக்கப்படும் இராகங்களுமிருக்கும் என்பதை நீங்கள் ஏன் அறியாமற் போனீர்கள்?

தஞ்சையில் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் என்னோடிருக்கக்கூடுமானால் இவைகள் யாவும் தெளிவாகத் தெரியும்படித் தங்களுக்கு எடுத்துச் சொல்வேன்.

அன்புள்ள ஐயா! போராட்டமில்லாமல் போனால் வெற்றியுண்டாகுமா? யாவரும் வெற்றியையே விரும்புவார்கள். வெற்றியடைய ஒருவன் போராடுமிடத்தைப்போர்க்களம் என்று

சொல்வது வழக்கம். போராடுமிடத்தில் உண்மையும் வல்லமையுமற்ற ஒருவன் தோற்பதும், உண்மையும் ஆற்றலுமுள்ள ஒருவன் வெல்வதும், வென்றுகொண்ட வீரன் போர்க்களத்திலேயே வெற்றிக் கொடி நாட்டுவதும் வெற்றிமாலை சூடுவதும் வெற்றிமுரசு அடிப்பதும் வெற்றி கொண்டாடுவதும் வெற்றி வேந்தனுய் வீடடைவதும் வழக்கம். வெற்றி அடையாதவன் போர்க்களத்திலேயே விழுந்து கிடப்பான். மற்றவர் அவனை அப்புறப்படுத்துவார். இது உண்மையே. நெற்போராடியாமற்போனுல் தானியம் வீடுபோய்ச் சேராது. விற் போர் நடவாமற் போனுல் சத்துருக்களின் உபத்திரவத்தினுல் நாம் வீட்டிலிருக்க முடியாது. சொற்போர் நடவாமற் போனுல் நூல்களின் உண்மையான கருத்து இன்னதென்று அறிந்துகொள்ள முடியாதாகையால் வீடடையும் மார்க்கம் புலப்படாது. விவேகிகள் யாவரும் இதை ஒப்புக்கொள்வார்கள். இவ்வுண்மையான ஒரு மேன்மையைத் தஞ்சை சங்கீத வித்யாமகாஜன சங்கத்திற்குச் சூட்டிவைத்ததற்காக நான் தங்களுக்கு மிகவும் வந்தனம் சொல்லுகிறேன். தங்களை நேரில் பார்க்கும் படியான ஒரு சமயத்தை பகவான் அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று காத்துக் கொண்டிருக்கிறேன்.

தங்களுக்கு என் அன்பான வந்தனம்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
மு. ஆபிரகாம் பண்டிதர்.



பரோடா, ஆல்-இந்திய மியூசிக் கான்பரென்ஸ் ரிப்போர்ட்டு.

பரோடா கான்பரென்ஸ் ரிப்போர்ட்டை இத்துடன் சேர்த்திருந்தால் இதைப் பார்க்கும் அன்பர்களுக்கு மிக உபயோகமாயிருக்கும். ஆல் இந்திய மியூசிக் கான்பரென்ஸ் நடந்து ஒரு வருஷமாகியும் ரிப்போர்ட் வராததினுல் வந்தபின் கூடுமானுல் புத்தகத்தின் கடைசியிலாவது சேர்த்துக்கொள்ளலாமென்று இங்கே விடப்பட்டது.

தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகள் இன்னவையென்று தஞ்சை சங்கீத வித்தியா மகாஜனசங்கத்தில் சென்ற நாலு வருஷங்களாக ஆறு கான்பரென்ஸ்களில் பல வியாசங்கள் வாசிக்கப்பட்டும் போதுமானபடி ஸ்திரிக்கப்பட்டும் வந்தன. அவைகளில் தற்காலம் படிக்கப்படும் கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகளுக்கு ஒத்துவராத முறைகளும் கணக்குகளும் சொல்லப்பட்டு வந்ததோடு அனுபோகத்திற்கு ஒத்துவராதவைகளும் சொல்லப்பட்டன. அதனுல் தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகளைப்பற்றிக் கணக்குகளும் கணக்கின்படி வீணையில் சுரஸ்தானங்களின் அளவும் வீணையின் அளவின்படி கிடைக்கும் சுரங்களும் அச்சுரங்கள் சுருதிகளின் விவரமும் அனுபோகத்திலிருக்கும் கீர்த்தனங்களில் 67 கீர்த்தனங்களும் அவற்றிற்குப் பூர்வ தமிழ் நூல்களின் மேற்கோள்களும் என்னல் ஏழாவது கான்பரென்ஸில் காட்டப்பட்டன.

இதில் பூர்வ தமிழ் நூலின் மேற்கோளை ஆராய்வதும் அம்முறைப்படி சுரம் சுருதிகளின் கணித முறை சரிதானு என்று பார்ப்பதும் அக்கணித முறையாய் வீணையில் வைக்கப்பட்ட அளவின்படி தற்கால அனுபவமிருக்கிறதாவென்று சுரம் சுருதிகளை ஆராய்வதும் ஒரு



1. G. Gnanasigamoney.
2. P. V. Krishnasamy Iyer.
3. P. S. Krishnasamy Iyer, B.A.B.L.
4. Saptharishi Bhagavather.
5. P. Sundaram Iyer.
6. Prathapa Ramaswamy Bhagavather.
7. S. Subramaniya Sastri.
8. Appasamy Iyer.
9. T. K. Vembu Iyer, B. A. L. T.
10. T. R. Krishnasamy Iyer.
11. N. P. Subramaniya Iyer, M.R.A.S.
12. A. G. Pichaimuthu B. A. L. T.
13. V. P. Madheva Rao, C.I.E.
14. Swamy Viruthai Sivagnana Yogigal.
15. Gopalasamy Ragunatha Rajaliar.
16. Sunmugam Pillai.
17. Rao Saheb M. Abraham Pandither.
18. Samya Pillai.
19. L. Oolaganatha Pillai.
20. T. K. Nagaraja Rao, B. A.
21. R. Sundaram Iyer, B. A. L. T.
22. A. P. Ganasa Iyer.
23. Sivagnanam Pillai.
24. Sitharama Pillai.
25. Duraisamy Pillai.
26. Parathama Narayanasamy Iyer.
27. Muthuthandavaraya Pillai.
28. T. S. Murukasam Pillai
29. P. S. Sundaram Iyer.
30. A. Maghalingam Iyer.
31. Harikaraparathiyar.
32. Devappirasatham Pillai.
33. G. Y. Pradhan.
34. William Devadoss.
35. Son of Somasundara Dhasikar.
36. Somasundara Desikar.
37. Sathuramaparathiyar.
38. Thirumalai Valu Kavirayer.
39. Sadhu Kanapathi Iyer.
40. Duraisamy Nadar.
41. Jivan Rao.
42. Devan Depathar.
43. Mahadhava Iyer.

வரால் கூடாத காரியமானதால் இம்மூன்று விஷயங்களில் பின்னல் சந்தேகமுண்டாகாதிருக்கும்படி மூன்று பஞ்சாயத்தார்கள் நியமித்து அவர்களுக்கு வேண்டிய அளவு தெளிவாக எடுத்துக் காட்டுவது அவசியமாயிற்று.

மேலும் பூர்வ தமிழ்நூல்களில் வழங்கிவரும் சுரம், சுருதிகளையும் மற்றும் சில குறிப்புகளையும் ஆராயும் தமிழ்ப் புலமையுடையோர் பஞ்சாயத்தும் சுரம் சுருதிகளுக்குச் சொல்லும் கணிதமுறைகளைப் பரிசோதனைசெய்யும் கணிதவல்லார் பஞ்சாயத்தும் கணிதமுறையாய்த் தயார் செய்யப்பட்ட வீணையில் வரும் ஓசைகளின்படி படிக்கப்பட்ட இராகங்களும் நூட்ப சுருதிகளும் நம் அனுபவத்திற்கு ஒத்தவைதானவென்று பரிசோதனை செய்யும் சங்கீத வித்வான்களுள்ள பஞ்சாயத்தும் கொடுத்த அபிப்பிராயங்களையும் இம் மூன்று பஞ்சாயத்தாரின் அபிப்பிராயங்களைப்பற்றி பிரசிடெண்ட் அவர்களின் முடிவான அபிப்பிராயத்தையும் ஏழாவது கான்பரென்ஸின் மற்றும் கடவடிக்கைகளையும் இதன்பின் பார்ப்போம்.

5. தஞ்சை சங்கீத வித்யா மகா ஜன சங்கமும் தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகளும்.

தஞ்சை சங்கீத வித்யா மகா ஜன சங்கம்.

1916-வது ஆகஸ்டுமூ 19ம்-20ம் தேதிகளாகிய சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் நடந்தேறிய ஏழாவது கான்பரென்சின் நடவடிக்கைகள்.

மீற்றிங் கடந்த இடம் கருணாநிதி சங்கீதமால்.

ஆஜராயிருந்தவர்கள்:—

1. மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவ ராவ் அவர்கள், C.I.E., திவான் பகதூர் பரோடா.
2. ,, Hon. ராஜா ராஜேஸ்வர சேதுபதி அவர்கள் ராமநாதபுரம்.
3. ,, ராவ் பகதூர் V. A. வாண்டையார் அவர்கள், பூண்டி.
4. ,, ராவ் பகதூர் அண்ணாசாமி தேவர் அவர்கள், உக்கடை.
5. ,, ராவ் பகதூர் சாமிநாத விஜய தேவர் அவர்கள், பாப்பாநாடு.
6. ,, T. சேஷையா அவர்கள், டிப்டி கலெக்டர்.
7. ,, ராவ் பகதூர் K. S. சீனிவாச பிள்ளை அவர்கள்.
8. ,, ராவ் சாயப் M. ஆபிரகாம் பண்டிதர் அவர்கள்.
9. ,, T. ஆரோக்கியசாமி பிள்ளை அவர்கள், சேர்மன், முனிசிபல் கவுன்சில் கோயம்புத்தூர்.
10. ,, சீனிவாச பாட்ராச்சாரியார் அவர்கள், M.A., L.T. கும்பகோணம்.
11. ,, T. K. வேம்பு ஐயர் அவர்கள், B.A., L.T.

12. மகா-ரா-ரா-ஸ்ரீ நாராயணசாமி ஐயர் அவர்கள் B.A., L.T.
13. ,, Rev. J. B. ஞான ஒளிவு, B.A., L.T.
14. ,, R. சுந்தரம் ஐயர் அவர்கள், B.A., L.T.
15. ,, T. K. நாகராஜ ராவ் அவர்கள், B.A.
16. ,, S. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.
17. ,, சுவாமி விருதை சிவஞான யோகிகள்.
18. ,, R. ராகவ ஐயங்கார் அவர்கள், தமிழ் வித்துவான் ராமனுதபுரம்.
19. ,, S. S. பாரதியார் அவர்கள் M.A., B.L.
20. ,, அரிகர பாரதி அவர்கள் தமிழ்ப் பண்டிதர்.
21. ,, L. உலகநாத பிள்ளை ,, ,,
22. ,, T. S. முருகேசம் பிள்ளை ,, ,,
23. ,, M. வேங்கடசாமி நாட்டார் ,, ,,
24. ,, Dr. ஷண்முகம் பிள்ளை ,, ,,
25. ,, சேதுராம பாரதியார் ,, ,,
26. ,, A. சுந்தரேச சாஸ்திரி ,, ,,
27. ,, கந்தசாமி பிள்ளை ,, ,,
28. ,, M. தேவப்பிரசாதம் பிள்ளை ,, ,,
29. ,, முத்துத்தாண்டவராய பிள்ளை ,, ,,
30. ,, A. G. பிச்சைமுத்து அவர்கள் B.A., L.T., (செக்ரிடெரி.)
31. ,, அப்பாசாமி ஐயர் அவர்கள் வையைச்சேரி.
32. ,, A. மகாலிங்க ஐயர் அவர்கள் இந்து காலேஜ் திருநெல்வேலி.
33. ,, P. S. சுந்தரம் ஐயர் அவர்கள் டிரைனிங் ஸ்கூல் தஞ்சாவூர்.
34. ,, பிரதாப ராமசாமி பாகவதர் அவர்கள் பூவனூர்.
35. ,, D. K. அனந்த பத்மநாப ஐயர் அவர்கள் பிளீடர் மதுரை
36. ,, வீணை வேங்கடாசல ஐயர் அவர்கள்
37. ,, பிடில் பஞ்சாபகேச பாகவதர் அவர்கள்
38. ,, சாமியாபிள்ளை அவர்கள்.
39. ,, சித்திரகவி சிவராம பாகவதர் அவர்கள்.
40. ,, T. R. சீனிவாச ஐயங்கார் அவர்கள், B.A., L.T.
41. ,, P. V. கிருஷ்ணசாமி ஐயர் ,,
42. ,, A. P. கணேச ஐயர் ,, சென்னை.
43. ,, I. குமரசாமி பிள்ளை ,, B.A., B.L.
44. ,, P. G. சுப்பிரமணிய ஐயர் ,,
45. ,, நீலகண்ட ஐயர் அவர்கள், எக்சிகூடிவ் இன்சினியர் தஞ்சாவூர்.
46. ,, G. R. கல்யாணசுந்தரம் ஐயர் அவர்கள் B.A., B.L.
47. ,, ராமச்சந்திர ராவ் அவர்கள், போடோகிராபர்.
48. ,, பக்கிரிசாமி பிள்ளை அவர்கள், ,,
49. ,, N. P. சுப்பிரமணிய ஐயர் அவர்கள், M.R.A.S., (செக்ரிடெரி).
50. ,, வேங்கடராம சாஸ்திரி அவர்கள்.
51. ,, R. கோவிந்த ராவ் அவர்கள்.
52. ,, சப்தரிஷி பாகவதர் அவர்கள், சமஸ்கிருத பண்டிதர்.
53. ,, S. சாமிநாத ஐயர் அவர்கள் மதுரை.
54. ,, R. கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் தஞ்சாவூர்.
55. ,, மகம்மதுகான் சாயப், டிப்டி சுப்பிரண்டெண்ட் போலீசு.

56. மகா-ரா-ரா-ஸ்ரீ மகாதேவ ஐயர் அவர்கள் மலையாளம்.
57. ,, துரை அப்பா ஐயர் அவர்கள்.
58. ,, பரதம் நாராயணசாமி ஐயர் அவர்கள்.
59. ,, T. A. கணபதி ஐயர் அவர்கள்
60. ,, சிங்கவனம் ஜமீன்தார் அவர்கள்.
61. ,, Rev. விஸ்வாஸம் அவர்கள்.
62. ,, மணிமணி நாடார் அவர்கள் B.A., சால்ட் இன்ஸ்பெக்டர்.
63. ,, சிவக்கொழுந்து முதலியார் அவர்கள் B.A., ஏஜண்ட் தேவஸ்தானம்.
64. ,, P. சுந்தரம் ஐயர் அவர்கள் பிடலர் மைலாப்பூர்.
65. ,, சுந்தரேச சாஸ்திரி அவர்கள் ராமனுதபுரம்.
66. ,, சாமிநாத ஐயர் அவர்கள், வித்தியா பானு, கோனுபேட்டை.
67. ,, பதான் பெர்சனல் கிளர்க் டிவான் சாயப் அவர்கள், பரோடா.
68. ,, துரைசாமி பிள்ளை அவர்கள் ரிட்டையர் டிப்டி சுப்ரன்டென்ட்.
69. ,, ஏகாம்பரம் பிள்ளை அவர்கள் ஸ்பெஷல் டிப்டி தாசில்தார்.
70. ,, சாமிநாத பிள்ளை அவர்கள். தஞ்சாவூர்.
71. ,, P. தானியேல் பிள்ளை அவர்கள் ரிடையர் இனிஸ்பெக்டர் போலீசு.
72. ,, D. ஜேசுதாஸ் பிள்ளை அவர்கள்.
73. ,, T. R. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் வக்கீல் திருமக்கலம்.
74. ,, சிவஞானம்பிள்ளை அவர்கள், எட்கிளார்க் ஸ்கூல்இனிஸ்பெக்டர் ஆபீஸ் தஞ்சாவூர்.
75. ,, சவுரிராய பிள்ளை அவர்கள் தமிழ்ப் பண்டிதர் காலேஜ் திருசிராப்பள்ளி.
76. ,, சேதுராம பிள்ளை அவர்கள் கருந்திட்டாங்குடி.
77. ,, திருமலைவேலு கவிராயர் அவர்கள் ஆனைமலைப்பட்டி.
78. ,, துரைசாமிநாடார் அவர்கள் ஆனைமலைப்பட்டி.
79. ,, சோமசுந்தர தேசிகர் அவர்கள் வேதாரண்யம்.
80. ,, ஞான துரை நாடார் அவர்கள் B.A., B.L., திருசிராப்பள்ளி.
81. ,, J. S. முத்தையா அவர்கள் இன்சினியர், திருசிராப்பள்ளி.
82. ,, S. K, தெய்வ சிகாமணி அவர்கள் B.A., L.T.,
83. ,, கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள், தாசில்தார், தஞ்சாவூர்.
84. ,, P. S. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் B.A., B.L., புதுகோட் பாலக்காடு.
85. ஸ்ரீமதி மரகதவல்லி அம்மாள்.
86. ,, அன்னபூரணி அம்மாள்.
87. ,, கனகவல்லி அம்மாள்.
88. ,, மங்களவல்லி அம்மாள்.
89. ,, பாக்கியம் அம்மாள்.

நடவடிக்கைகள்.

1916-வது ஆகஸ்டுமூ 19-ம்வ சனிக்கிழமை (காலை 8½-மணி முதல் 11½-மணி வரையும்.)

1. (a) கடவுள் வாழ்த்துக் கீதம்.
   (b) நம் நேசக் கட்சியாருக்கு வெற்றி கிடைக்க வேண்டுமென்ற தோத்திர கீதம்.
   (c) பிரிட்டிஷ் ராஜாங்க கீதம்.
2. பிரசிடெண்டு தெரிந்தெடுத்தல்.
3. மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் சிவான் சாகிப் அவர்கள் முன்னுரைப் பிரசங்கம்.
4. பரோடாவுக்குப் போனதைப்பற்றி ஆல் இந்திய மியூசிக் கான்பரென்ஸ் விஷயமாய் ஒரு உபந்நியாசம்—மகா-ரா-ரா-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதரவர்கள்.
5. மூன்று வித பஞ்சாயத்தார் நியமனம்.
6. "பூர்வ தமிழ் மக்களின் கானமுறை" யைப்பற்றி ஒரு பிரசங்கம்—மகா-ரா-ரா-ஸ்ரீ Rao Sahib ஆபிரகாம் பண்டிதர் அவர்கள்.

(சாயங்காலம் 3-மணி முதல் 5-மணி வரை.)

7. 24 சுருதிகளையும் அதி நுட்பமான சுருதிகளையும் வீணை மூலமாயும் வாய்ப்பாட்டின் மூலமாயும் ருசுப்படுத்திக்காட்டல், சுருதிகளை அறிவதின் பிரயோசனத்தைக்காட்ட புது இராகங்களில் உண்டு பண்ணிய கீர்த்தனங்களைப் பாடிக் காட்டுதல்.

(மாலை 6-மணி முதல் 8-மணி வரை.)

8. வித்துவான்கள் பல இராகங்களைப் பாடிக்காட்டுதல்.

1916-வது ஆகஸ்டுமூ 20ம்வ ஞாயிற்றுக்கிழமை.

(காலை 9-மணி முதல் 12-மணி வரை.)

1. தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கத்திற்கு வந்திருந்தவர்களைப் படம் பிடித்தல்.
2. தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகளைப்பற்றி மூன்று பஞ்சாயத்தாருக்கும் சபையாருக்கும் எடுத்துச் சொன்ன பொதுக் குறிப்புகள்.—மகா-ரா-ரா ஸ்ரீ ஆபிரகாம் பண்டிதர் அவர்கள்.
3. சங்கத்தின் பிரசிடெண்ட் மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் C.I.E., அவர்களுக்குப் பஞ்சாயத்தின் அக்கிராசனாதிபதிகள் கொடுத்த ரிப்போர்ட்.
   (a) தமிழ்நூல் வல்லபுலவர்களின் பஞ்சாயத்தின் Chairman ஆகிய சுவாமி விருதை சிவஞான யோகி அவர்களின் ரிப்போர்ட்.
   (b) சுரம் சுருதிகளுக்கு வரும் கணக்கைப் பரிசோதனை செய்யும் கணிதநூல் வல்லோரின் பஞ்சாயத்தின் Chairman ஆகிய மகா-ரா-ரா-ஸ்ரீ T. K. வேம்பு ஐயர் B.A., L.T., அவர்களின் ரிப்போர்ட்.
   (c) கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் சுரம், சுருதிகள் இன்னவையென்று பரிசோதிக்கும் சங்கீத பஞ்சாயத்தின் Chairman ஆகிய மகா-ரா-ரா-ரா-ஸ்ரீ ராவ் பகதூர் V. A. வாண்டையார் அவர்களின் ரிப்போர்ட்.
4. கான்பரென்ஸைப் பற்றி பிரசிடெண்டு மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் சிவான் சாகிப் அவர்கள் முடிவுரை.

கான்பரென்ஸ் நடவடிக்கைகளின் விவரம்.

காலை 8½ மணிக்குச் சங்கம் கூடிற்று. முதலில் கடவுள் வாழ்த்துக் கீதமும் பின் நம்தேசக் கட்சியாருக்கு யுத்தத்தில் வெற்றி கிடைக்கவேண்டும் என்ற தோத்திர கீதமும் அதன்பின் பிரிட்டிஷ் ராஜாங்க கீதமும் ஆகிய இவை மூன்றும் கனம் பண்டிதர் அவர்களின் குமாரத்திகளால் பாடப்பட்டன.

பிறகு பண்டிதரவர்கள் சபையோரின் வரவை நன்குமதித்து உபசாரம் சொன்னார்கள். அதன் பிறகு மகா-ள-ள-ஸ்ரீ P. V. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் பிரேரிக்க, மகா-ள-ள-ஸ்ரீ A. G. பிச்சைமுத்து அவர்கள் ஆமோதிக்க பரோடா திவான்சாயப் மகா-ள-ள-ஸ்ரீ V. P. மாதவ ராவ் C.I.E., அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் கான்ப ரென்ஸை ஆரம்பிக்கு முன், பின் வருமாறு பேசினார்கள்.

"சீமாட்டிகளும் சீமான்களுமான கனவான்களே!

இந்தக் கான்பரென்ஸில் அக்கிராசனம் வகிக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்ட விஷயத்தைப்பற்றி நான் வெகு கண்ணியமாய் நினைக்கிறேன். இனிய சங்கீத ஆராய்ச்சி விஷ யத்தில் பண்டிதரவர்கள் வெகு வருஷங்களாய்ச் செய்து வந்த வேலையின் பலனானது சங்கீத சாஸ் திரத்தில் நிபுணரான பல வித்வ சிரோன்மணிகளால் இப்போது பரிட்சிக்கப் படப்போகிறது என்பதை நினைக்கும்போது எனக்கு வெகு பெருமையா யிருக்கிறது. கர்நாடக சங்கீத சுருதி கள் விஷயமாய் Mr. பண்டிதரவர்கள் பல வருடங்களாக ஆராய்ச்சி செய்து கடைசியில் தன்னுடைய 24 சுருதி முறையானது கிறிஸ்தாப்தம் முதல் நூற்றாண்டில் இருந்த சிலப்பதி காரம் என்ற நூலை எழுதிய பேர்போன ஆசிரியரால் சரியென்று ஒப்புக்கொள்ளப் படுகிற தென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த நூலானது தற்கால சங்கீத முறையை ஸ்தாபித்த சமஸ்கிருத நூலாசிரியர்கள் தோன்றிய காலத்திற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் னுள்ளதாகத் தெரிகிறது. பரோடா கான்பரென்ஸில் பண்டிதரவர்கள் தன்னுடைய 24 சுருதி முறையை விஸ்தரித்தபோது சபையாரெல்லாரும் பிரமைகொண்டு ஆனந்தித்தார்கள் என்று நான் மனப்பூர்வமாய்ச் சொல்லும்படி எனக்கு இடங்கொடுங்கள். இந்தச் சுருதி முறையானது Mr. பண்டிதரவர்களுடைய கல்வித் திறமைவாய்ந்த குமாரத்திகளாகிய ஸ்ரீமதி மரகதவல்லி அம்மாளாலும் ஸ்ரீமதி கனகவல்லி அம்மாளாலும் வீணைமூலமாயும் வாய்ப்பாட்டின் மூலமாயும் ருசுப்படுத்தப் பட்டபோது உதயப்பூர் சமஸ்தான வித்வான் சாக்ருடன் சாயப் அவர்களாலும் சபையாராலும் இவர்கள் பலமுறை மெச்சிக்கொள்ளப் பட்டார்கள்.

சங்கீதத்தை சாஸ்திரோக்தமாய்க் கற்பிக்கும் விஷயத்தில் சுருதி முறையின் அவசியம் நன்றாய் விளங்கும். நம்முடைய சங்கீதத்திற்கு ஆதாரமாயுள்ள அப்படிப்பட்ட ஓர் முறையைப் பற்றிய சரியான அறிவு நமக்கு இல்லாததே நம்முடைய கர்நாடக சங்கீதம் க்ஷீணித்துப் போன தற்கு ஓர் காரணம். மேலும் சுருதிகளைப்பற்றிய சரியான அறிவு இருக்கும் பட்சத்தில் வித் வான்கள் புது இராகங்களை உண்டு பண்ணும் சக்தியை அடைவதுமல்லாமல் பல மாதிரியான கீர்த்தனங்களைச் செய்யும் திராணியும் அவர்களுக்கு உண்டாகும்.

பண்டிதரவர்கள் இந்தக் கான்பரென்ஸை ஏற்படுத்தின நோக்கம் தன் சுருதி முறை யைப்பற்றி மற்ற தேர்ந்த வித்வான்கள் சொல்லும் அபிப்பிராயத்தை அறிவதற்கே. சொற்ப

காலத்திற்கு முன்னேதான் பண்டிதரவர்கள் தன் அபிப்பிராயத்தை யெல்லாம் ஒன்றுசேர்த்து ஒரு ஒழுங்கான முடிவுக்குக் கொண்டுவருவதில் சித்திபெற்றார்கள். தன்னுடைய சுருதி முறையானது எந்த ஸ்தானத்திலிருந்து நோக்கினும் சரியாயிருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்கும் படி வெகு புத்திசாலித்தனமாய் மூன்றுவித பஞ்சாயத்துகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

முதல் பஞ்சாயத்தானது, 24 சுருதி முறைக்குப் பூர்வ தமிழ் நூல்களில் ஆதாரம் உண்டா என்று சோதிக்க நியமிக்கப்பட்டிருக்கிறது. தமிழில் பேர்போன பண்டிதர்கள் இதற்கென்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தமிழ் நூல்களை ஆராய்ந்து தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டியது.

இரண்டாவது பஞ்சாயத்தானது கணித சாஸ்திரிகள் சேர்ந்தது. இவர்கள் பண்டிதரவர்களின் சுருதி முறைக்கணக்கானது அவர்கள் சொல்வதுபோல் சரியாயிருக்கிறதா என்று பார்த்துச் சொல்லுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய முடிவான அபிப்பிராயம் தனக்குச் சாதகமாயிருந்தால் அதினால் தன் அபிப்பிராயத்திற்கு ஓர்வித பலம் உண்டாகுமென்று நம்பியே இந்தப் பஞ்சாயத்தார்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

மூன்றுவது பஞ்சாயத்தானது சங்கீதம் தெரிந்த வித்வ சிரோமணிகளுள்ளது. இவர்கள் 24 சுருதிகள், இன்னும் நுட்ப சுருதிகள் உண்டென்று சொல்லும் முறை சரிதானா என்று பார்க்கவும், அளவுகளுக்கும் கணக்குகளுக்கும் அவைகள் ஒத்திருக்கின்றனவா என்று பார்த்து அபிப்பிராயம் சொல்லவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பண்டிதரவர்கள் ஏற்படுத்தியிருக்கிற இந்தப் புதிய விஷயத்தில் இப்படிப் பல பஞ்சாயத்தார்களை நியமித்ததானது நிரம்ப புத்திசாலித்தனமாய் இருக்கிறது. பின் வருவதை முன்னறிந்தே இப்படிச் செய்திருக்கிறார்கள். இப்போது இந்த மூன்று பஞ்சாயத்தாரும் தங்கள் ஆராய்ச்சிக்குப் பின் ஏகவாக்காய் அவர்கள் முறை சரியென்று ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், பண்டிதரவர்களுக்கும், அவர்கள் முயற்சியைக் கூடவிருந்து பார்த்த அவர்களுடைய உண்மையான நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் அது அதிக சந்தோஷத்தைத் தரும் என்பதில் ஐட்சேபனையில்லை. இந்திய சங்கீதத்தை நிலைநிறுத்தவும் அதைச் சாஸ்திர விதிகளுள்ள ஒரு முறையாகச் செய்யவும் பண்டிதரவர்கள் தன் ஜீவகாலம் முழுவதும் எடுத்துக்கொண்ட பிரயாசத்தின் மேல் ஒரு முத்திரை வைத்ததுபோல் இருக்கும்." என்பதே.

சேர்மன் அவர்களுடைய வார்த்தைகள் செக்ரட்டெரியாகிய N. P. சுப்பிரமணிய ஐயரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இது முடிந்தவுடன் பஞ்சாயத்தார் நியமனமாகும்படி தீர்மானிக்கப்பட்டது. Mr. A. G. பிச்சைமுத்து அவர்கள் மூன்று பஞ்சாயத்தாருடைய பேர்களையும் பிரேரேபிக்க, அவை ஆக்ஷேபனையின்றி ஆமோதிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டன.

பஞ்சாயத்தார் நியமனமானவுடன் பிரசிடெண்ட் அவர்களின் சமீபமாய் இடது பக்கத்தில் தமிழ்ப் பஞ்சாயத்தாரும் அவர்கள் சேர்மெனும் வலது பக்கத்தில் சங்கீத பஞ்சாயத்தாரும் அவர்களின் சேர்மெனும் முன் பக்கத்தில் கணித பஞ்சாயத்தாரும் அவர்களின் சேர்மெனும் அவர்களின் பக்கத்தில் மற்றும் சபையோருமிருக்கும்படி ஆசனங்கள் அமைக்கப்பெற்று அமர்ந்திருந்தார்கள்.

முதல் முதல் சபையோரையும் பஞ்சாயத்தாரையும் பார்த்து மகா-ரா-ரா-ஸ்ரீ பண்டிதர் அவர்கள் பின்வருமாறு பேசினார்கள்.

" கனவான்களே!

யாவராலும் கொண்டாடப்பட்ட நம் கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகளைப் பற்றி இதற்கு முன் நடந்த ஆறு கான்பரென்ஸ்களிலும் பலர் பல வியாசங்கள் வாசித்து விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களில் சிலர் தங்களுடைய அபிப்பிராயமே சரியென்றும் தங்களுடைய அபிப்பிராயத்தை இது வரையும் ஒருவரும் மறுத்துச் சொல்லாததினால் அதையே ஸ்தாபிக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். இச்சங்கத்தின் பிரதிநிதியாயிருப்பதனால் எனது அபிப்பிராயத்தை நான் இப்பொழுது சொல்லவேண்டியதாயிற்று. என் அபிப்பிராயத்தை அனுபோக மூலமாகவும் கணித மூலமாகவும் பூர்வ தமிழ் நூல்களின் ஆதாரங்களுடனும் சொல்ல வேண்டுமென்று நினைத்ததினால் சற்றுக் கால தாமதம் ஏற்பட்டது. அதைத் தாங்கள் பொறுத்துக்கொள்வீர்களென்று நம்புகிறேன்.

என் ஆராய்ச்சியில் சுருதி விஷயமாய்க் கிடைத்த பல அரிய விஷயங்களை முற்றிலும் இங்கு சொல்ல எனக்கு நேரமில்லை. நான் பலர் முறைகளையும் விசாரித்து வருகையில் கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகளைப்பற்றித் தமிழ் நூல்களில் மிக விரிவாகச் சொல்லப் பட்டிருந்ததென்றும் அவற்றில் சிலப்பதிகாரத்தில் ஒருவாறு சொல்லப் பட்டிருக்கிறதென்றும் கண்டேன். அவ்விஷயத்தில் சுருதியைப்பற்றிப் பூர்ணமாய்ச் சொல்லவும் அம்முறையின்படி நம் அனுபவத்திலிருக்கும் சில உருப்படிகளைப் பாடிக்காட்ட வேண்டியதாகவும் இருக்கிறது. தாங்கள் இதற்காக இவ்வளவு தூரம் பல இடங்களிலிருந்து வந்ததற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

துவாவிம்சதி சுருதிகளைப்பற்றி நான் இங்கு சொல்ல வரவில்லை. துவாவிம்சதி சுருதிகள்தான் வழங்க வேண்டுமென்று சொல்லுகிறவர்கள் அவைகளைப்பற்றித் தங்கள் முடிவான அபிப்பிராயம் ஸ்தாபிக்க வேண்டியது. துவாவிம்சதி சுருதிகள் முறைப்படிக் கர்நாடக சங்கீதமிருக்கவில்லையென்று கண்ட நான் கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகளைப்பற்றி மாத்திரம் இங்கே சொல்லத் துணிந்தேன். கல்வி கேள்விகளில் சிறந்த பெரியோர்கள் முன்னிலையில் இவைகளைச் சொல்ல கேரிட்டதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். நான் சொல்வதில் வரும் குறைகளை மன்னித்து அனுக்கிரகம் செய்யும்படி மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சுருதி விஷயம் மிக அருமையானதென்றும் இதுவரையும் அதை விசாரித்த பலர் பல அபிப்பிராயப்பட்டுப் பலவிதமாய்ச்சொன்னார்களென்றும் அவைகளில் ஒன்றுவது மற்றொன்றோடு ஒத்திருக்காமல் வித்தியாசப்பட்டிருக்கிறதென்றும் அனுபோகத்திற்கு வரக்கூடியதல்லவென்றும் அவரவர்கள் கொடுத்த கணக்கைப் பரிசோதித்து அறிந்த நான் பூர்வதமிழ் நூல்களில் எழுதப்பட்டிருக்கும் குறிப்பைக் கவனிக்கையில் அங்கு சொல்லப்பட்டிருக்கும் முறைகளே சரியானவையென்றும் தற்கால அனுபோகத்திற்கு ஒத்துவரக்கூடியவையென்றும் கணக்கினாலும் வீணையின் அளவினாலும் ருசுப்படுத்திக் காட்டக்கூடியதென்றும் அறிந்தேன். இம்மூன்று விஷயங்களையும் ஒருங்கே அறிந்துகொள்ளக்கூடியவர்கள் மிகச்சிலராய் இருக்கலாமென்று உத்தேசித்தே மூன்று விஷயங்களையும் தனித்தனி ஆராய்வதற்கென்று மூன்று

பஞ்சாயத்துகள் ஏற்படுத்தவேண்டியது அவசியமாயிற்று. பஞ்சாயத்தார் என்ன அபிப்பிராயம் சொல்லுவார்களோ அவைகளைச் சேர்த்துப் பார்த்து பிரசிடெண்ட் அவர்கள் முடிவான அபிப்பிராயம் சொல்லுவார்கள்.

பஞ்சாயத்திலுள்ள கனவான்களே! நாம் பூர்வ தமிழ்ச் சங்கீத நூல்களில் என்ன சொல்லியிருக்கிறதென்றும் அவ்வபிப்பிராயத்தின்படி செய்திருக்கும் கணக்குகள் சரிதானவென்றும் அக்கணக்கின் படி வீணையில் அமைத்திருக்கும் சுரங்கள் தற்காலத்தில் அனுபோகத்திலுள்ளவைதானவென்றும் பார்க்கப் போகிறோம். இவ்விஷயத்தில் இன்னின்ன குறிப்புகளைக் கவனிக்கவேண்டுமென்று தெளிவாக அச்சடித்து உங்கள் கையில் கொடுத்திருக்கிறேன். இது தவிர இதற்குச் சம்பந்தமான அட்டவணைகளும் சக்கரங்களும் தெளிவுரைக்கும் சில மேற்கோள்களும் அச்சடித்துக் கொடுத்துமிருக்கிறேன். இன்னும் காரியங்களை அறிந்துகொள்வதற்கு அனுகூலமாக வேண்டுமளவு சொல்லத் தயாராயிருக்கிறேன். தங்களுக்கு ஆட்சேபனை தோன்றுமிடங்களில் தெளிவு செய்யப் போதுமான அளவு சொல்லப் பிரியமாயிருக்கிறேன். இவ்விஷயம் இவ்வளவு நேரத்திற்குள் முடியுமென்று சொல்லக் கூடாமையாயிருக்கிறதினால் தங்களுக்குக் கொடுக்கும் சிரமத்தை மன்னிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சங்கீத சாஸ்திர விஷயமாய்ப் பூர்வ தமிழ்மக்கள் மிக மேலான முறைகளையும் $\frac{1}{32}$ அல்லது ஒரு சுரத்தில் ($\frac{1}{16}$) வீசம் சுரங்களையும் கவனித்துப் பாடினார்களென்றும் ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை, சதுரப்பாலை யென்று $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$, $\frac{1}{16}$ போன்ற துட்ப சுரங்கள் வழங்கும் பண்களை நாலுவகையாகப் பிரித்திருந்தார்களென்றும் இவ்வுத்தமமான முறைகளை வெகு காலமாக மறந்துவிட்டு 22 சுருதியில் இடறுண்டு 12 ஆன $\frac{1}{2}$ சுரத்தில் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிறோமென்றும் தாங்கள் அறியும்பொழுது பூர்வீக தமிழ் மக்களின் சங்கீதப் பயிற்சியை மிக மேலானதென்று உலகத்தவர் யாவரும் கொண்டாடும்படியான காலம் தோன்றியிருக்கிறதென்றும் புதிய இராகங்களில் புதிய உருப்படிகள் செய்யும்படியான முறையும் நமக்குக் கிடைத்திருக்கிறதென்றும் மிகச் சந்தோஷப்படுவோம். நான் சொல்வது அநேகருக்கு நூதனமாகத்தோன்றினாலும் பூர்வ தமிழ்மக்களின் கலைப்பயிற்சியை அறியும் நுண் அறிவாளிகளுக்கு இது பழமையாகவே தோன்றும்.

இவ்விஷயத்தில் தீர்மானிக்கப் போகிறவைகள் எவைகளோ அவைகள் உலகத்திலுள்ள சங்கீதப் பயிற்சியுள்ள யாவரும் கவனித்தக்கொண்டாடக் கூடியதாயிருக்கும். அல்லது குறை சொல்லக்கூடியதாயிருக்கும். சாஸ்திரத்தின் உண்மைகள் உலகத்தவர் யாவருக்கும் பொதுவானதாயிருப்பதினாலும் அதில் யாவரும் காணக்கூடிய உண்மையிருக்குமானால் அதே கொண்டாடப்படக்கூடிய விதமாய் நிலைத்திருக்குமானதினாலும் தாங்கள் இவ்விஷயத்தில் நட்பமாய் ஆராய்ச்சி செய்து உண்மையானவைகளைச் சொல்லும்படித் தங்களை மிகவும் வணக்கமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன். என்னுடைய அபிப்பிராயத்திற்காகத் தாக்ஷணியப்பட்டு தாங்கள் ஒரு வார்த்தை சொல்வீர்களானால் அதைப்பார்க்கிலும் எனக்கு வருத்தம் தருவது வேறொன்றுமில்லை. தற்சமயத்தில் எனக்கு வருத்தம் தருவதாயிருந்தாலும் உண்மையான ஒன்றைக் கண்டுகொண்டபின்னடியார் சந்தோஷப்படுவார்கள் என்பதை நினைக்க நாம் தவறிப் போகக்கூடாது.

தாங்கள் ஆராய்ந்து பார்க்கக் கூடிய விஷயங்கள் ஒரு நாள், இரண்டு நாளில் பார்க்க முடியாது. ஆகையினால் புஸ்தகத்தில் சொல்லப்படும் தெளிவான கருத்திற்குரிய தமிழ்ச் செய்யுள்களிருக்கும் புத்தகம், பக்கம், வரி முதலியவைகளைத் தெளிவாய் அட்டவணையாக அச்சடித்து 10,

15 நாளைக்கு முன்னடியே அனுப்பியிருக்கிறேன். சிலருக்கு நேரில் தெளிவாகக் காட்டியுமிருக்கின்றேன். இக்குறிப்புகள் அக்கருத்தையுடையவைகள்தானு? அவ்வரிகளில் இவைகளிருக்கின்றனவாவென்று சொல்வதைத் தவிர உங்களுக்குக் கஷ்டமான வேலையாதொன்றும் வைக்கவில்லை. இவைகளில் கண்ட விஷயங்கள் யாவும் தங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கலாம். என்றாலும் இங்கேவந்திருக்கும் சபையோர்யாவரும் நான் எடுத்துச் சொல்வதைக் கேட்பது எனக்கு மிகச் சந்தோஷமாயிருக்கும். என்னுடைய திருப்திக்காகவே நான் கொஞ்ச நேரம் பேசும்படி எனக்கு இடங்கொடுங்கள்" என்று வணக்கமாய்க் கேட்டுக் கொண்டார்கள்.

அதன்பின் அட்டவணைகளும் சக்கரங்களுமுள்ள அச்சடித்த பிரதிகள் பஞ்சாயத்தாருக்குக் கொடுக்கப்பட்டன. மேற்கோள்களைப் பார்ப்பதற்காக புத்தகங்களும் வைக்கப்பட்டன. இவற்றின் உதவியைக்கொண்டு பின்வருமாறு அவர்களால் விளக்கிக்காட்டப்பட்டது.

பூர்வ தமிழ் நூல்களை ஆராயும் பஞ்சாயத்தாரைப் பார்த்து மற்றும் சபையோர் யாவரும் கேட்கும்படி பின்வருமாறு பேசினார்கள்.

"எல்லாம் அறிந்த தங்கள் முன் பூர்வம் தமிழ்மக்களின் கானத்தில் வழங்கிவந்த சில குறிப்புகளை விளக்கிச்சொல்லவந்த என் துணிவை மன்னிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். சங்கீத வித்யா மகாஜனசங்கத்தில் துவாவிம்சதி சுருதிகளைப்பற்றிய பலவியாசங்கள் வாசிக்கப்பட்டதினால் அவைகள் தற்கால கர்நாடக சங்கீதத்திற்கு உபயோகப்படுமோ படாதோவென்று பரிசோதித்துச் சொல்லவேண்டியது என்னுடைய கடமையாயிற்று. இதற்காக நான் பலர் சுருதி முறைகளையும் ஆராயும்பொழுது தமிழ் நூல்களில் என்ன சொல்லியிருக்கிறதென்று பார்க்கநேரிட்டது. அங்கே 22 சுருதி யென்று சொல்லியிருந்தாலும் யாரில் கமகமாய் வாசிக்க வேண்டிய 16 ஜாதிப்பண்கள் முறையில் சொல்லப்பட்டிருக்கிறதை கவனிக்கும்பொழுது ஒரு ஸ்தாயியில் 24 சுருதிகளே இருக்கின்றனவென்றும் 12 சுரங்கள்தான் உண்டென்றும் அவைகளில் விளரி கைக்கிளையைப் போல் சுபமுறையாய் இரண்டு அலகுகள் குறைத்துப் பிடிப்பதினால் 22 அலகு என்று சொல்ல நேரிட்டதென்றும் பல குறிப்புகளினால் தோன்றிற்று. அதோடு இதிலும் நுட்பமாக ஒரு ஸ்தாயியை 48 ஆகவும் 96 ஆகவும் பிரித்து நுட்பசுருதிகளில் கானம் செய்திருக்கிறார்கள் என்றும் கண்டேன். பூர்வ தமிழ் மக்கள் வழங்கிவந்த சுரங்களும் சுருதிகளும் மற்றும் முக்கியமான குறிப்புகளும் தற்காலத்தில் நமது அனுபோகத்திலிருக்கிறவையென்று தாங்கள் காணும்பொழுது மிகவும் சந்தோஷமடைவீர்கள்.

பூர்வ காலத்தில் வழங்கிவந்த கானம் நாலு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. 'ஆயம் சதுரம் திரிகோணம் வட்டமெனப் பாய நான்கும் பாலை யாகும்' என்பதினால் பாலையானது ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை சதுரப்பாலை என நான்கு வகையாகுமென்று தெளிவாகத் தெரிகிறது. இவைகளைப்பற்றி நாம பார்க்குமுன் சுரங்களையும் சுருதிகளையும் குறித்து எண்ணவும் அவைகளின் பொருத்தம் பார்க்கவும் கூடியதாக நம் பூர்வத் தோர் வழங்கிவந்திருக்கும் ஒரு இலகுவான முறையைப்பற்றி நாம் கவனிக்கவேண்டும்.

'வட்டமென்பது வகுக்குங்காலே யோரேழ் தொடுத்த மண்டலமாகு' மென்று ஏழு சுரங்களோடு வழங்கும் செம்பாலைப் பண்ணின் சுரங்கள் நிலையைக் குறிக்கும் ஒரு சக்கரம் சொல்லுகிறார். அதாவது ஒரு சாண் நீளம் அகலமிருக்கும்படி அடியிற்கண்ட வட்டம் போல் மூன்று சக்கரங்கள் போட்டு அதில் முதல் வரியில் இராசியின் பெயர்களும் இரண்டாவது வரியில் வலமுறையாய் ச-ப முறையாக ஏழாவது ஏழாவதாக உண்டாகும் சுரங்களையும் மூன்றாவது வரியில் இடமுறையாய் ச-ம முறையில் ஐந்தாவது ஐந்தாவதாக உண்டாகும் சுரங்களையும் குறிக்கிறார். இவைகளின் அலகும் சுரங்கள் நிற்கும் நிலையும் கருணாமிர்த சாகரம் முதல் புத்தகம் மூன்றாம் பாகம் 536-538 பக்கங்கள் வரையுமுள்ள சூத்திரங்களிலும் சக்கரத்திலும் காணலாம். அதில் ஆயப்பாலையில் பிறக்கும் முதற் பண்ணைய செம்பாலையின் சுரங்களை யுடையதாய்க் காணப்படுகிறது.

ஆயப்பாலையில் வழங்கி வரும் சுரங்கள் ச-ப முறையாய் ஏழாவது, ஏழாவதாகவும் உழை குரலாக இடமுறையாய் ஐந்தாவது, ஐந்தாவது இராசியாகவும் சுரங்கள் அமைந்து நிற்க வேண்டுமென்று சொல்லுகிறார். இம்முறையில் ஒரு ஸ்தாயியில் 12 சுரங்கள் கிடைக்கின்றன. அதோடு வலமுறையாய்க் கிடைக்கும் ஏழாவது, ஏழாவது சுரங்களை இடமுறையாக ஐந்தாவது, ஐந்தாவதாய்க் கிடைக்கின்றன. இதனால் சுரங்கள் சம அளவுடையதாயிருக்கின்றன வென்றும் ஒரு ஸ்தாயியில் 12 சுரங்கள்தான் ச-ப முறையாகவும் ச-ம முறையாகவும் கிடைக்கின்றன வென்றும் தெளிவாகக் காண்கிறோம். இதோடு இரண்டாவது வட்டத்தின் சுரத்திற்கு மூன்றாவது வட்டத்தின் சுரம் ச-ப பொருத்தமுடைய தென்றும் மூன்றாது வட்டத்தின் சுரத்திற்கு இரண்டாவது வட்டத்தின் சுரம் ச-ம பொருத்தமுடைய தென்றும் தெளிவாய்க் காணக் கூடிய தாயிருக்கிறது. மற்றும் விவரம் யாவும் கருணாமிர்த சாகரம் முதல் புத்தகம் மூன்றாம் பாகம் 724-725 பக்கங்களில் காண்போம்.

முதல் அட்டவணையில் கும்பம் சிங்கம் என்ற இரண்டு இராசிகளில் விளரி கைக்கிளையில் மும்மூன்று அலகு போட்டிருப்பதைக் கவனிப்போமானால் நாம் சற்று மயங்கநேரிடும். ஆயப்பாலை முறைப்படி இது வராமல் ஆறாவது இராசியில் வருவதினால் ஏழாவது ஏழாவது என்ற பொதுவிதிக்கு விரோதப்படுகிறதாகக் காண்போம். 'நின்ற நரம்பிற்கு ஆறும் மூன்றும் சென்று பெற நிற்பது கூடமாகும்' என்றதினால் ஆறாவது பகையாகுறது. கருணாமிர்த சாகரம் முதல் புத்தகம் மூன்றாம் பாகம் 657ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையில் காண்க.

இதனால் கைக்கிளையின் மூன்றாவது அலகு சிங்கத்தின் இரண்டு அலகுள்ள யாழ் மெட்டிலிருந்து கமகமாய்ப் பிறக்கப்படவேண்டியதென்று சொல்லப்படுகிறதாகத் தெரிகிறது. இது நால்வகை யாழில் பிறக்கும் 16 ஜாதிப் பண்களில் எந்தெந்த சுரங்கள் கமகமாய் வாசிக்கப் படவேண்டுமென்று குறிக்கிறதற்காக ஏற்பட்டதேயொழிய ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகளுண்டென்று சொல்லவந்ததல்ல.

"நாற்பெரும் பண்ணும் சாதி நான்கும், பாற்படு திறனும் பண்ணெனப் படுமே" என்று சொல்வதினால் அடியிற்கண்ட சக்கரத்தின்படி மருதம், குறிஞ்சி, நெய்தல், பாலை என்னும் நாலு பெரும் பண்களும் அவற்றில் அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என்னும் நாலு ஜாதிகளும் பிரித்துப்பாடினர்களென்று தெரிகிறது.

மருதயாழ் என்பது தீரசங்காபரணமாகவும், குறிஞ்சியாழ் என்பது மேசகல்யாணி என்ற இராகமாகவும், நெய்தல்யாழ் அரிகாம்போதி இராகமாகவும், பாலையாழ் தோடி இராகமாகவும் தற்காலம் வழங்குகிறோம். கருணாமிர்த சாகரம் முதற்புத்தகம் மூன்றாம்பாகம் 727ஆம் பக்கத்திலுள்ள சக்கரத்திற் காண்க.

இதன்மேல் "ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியி
னேரேழ் பாலை நிறுத்தல் வேண்டி
வன்மையிற் கிடந்த தார பாகமு
மென்மையிற் கிடந்த குரலின் பாகமு
மேய்க்கிளை நரம்பிற் கைக்கிளை கோள்ளக்
கைக்கிளை யொழிந்த பாகமும் பொற்புடைத்
தளராத் தாரம் விளரிக் கீத்துக்
கிளைவழிப் பட்டன ளாங்கே கிளையுங்
தன்கிளை யழிவுகண் டவள்வயிற் சேர"

என்று சொல்வதை நாம் கவனிக்கையில் வலிவு, மெலிவு, சமம் என்ற மூன்று ஸ்தாயிகளிலும் மத்திய ஸ்தாயியின் சுரங்கள் நிற்கும் நிலையைச் சொல்லுகிறார். கருணைமிர்த சாகரம் முதற்புத்தகம் மூன்றும்பாகம் 541ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையில் காண்க.

இதில் காலலகுபெற்ற சட்சமத்தில் முந்தின இரண்டு அலகையும் நிஷாதத்தில் முடிந்த அலகையும் சேர்த்து மூன்று அலகாக்கி சட்சமத்தின் இரண்டாவது அலகின் கீழ் காந்தாரம் போடச்சொல்லுகிறார். இதன்மேல் தாரத்தில் நின்ற ஒரு அலகையும் விளரியில் 3 அலகையும் சேர்த்து 21ஆவது அலகின் கீழ் காது அலகுள்ள ரிஷபம் போடச் சொல்லுகிறார். அதன்பின் காலலகுள்ள சட்சமம் காது அலகுள்ள பஞ்சமத்தின் கீழ் வருகிறது. இரண்டு அலகுள்ள மத்திமம் சட்சமத்தின் காலாவது அலகின் கீழ் வருகிறது. இம் முறையே காலலகுள்ள பஞ்சமம் ரிஷபத்தின் கீழ் வருகிறது. மூன்று அலகுள்ள காந்தாரத்தின் கீழ் மூன்று அலகுள்ள தைவதமும், இரண்டு அலகுள்ள மத்திமத்தின் கீழ் இரண்டு அலகுள்ள நிஷாதமும் வருகின்றன. இது மத்திம கிராமமாம். மத்திமம், சட்சமமாய் வைத்துப் பாடும்பொழுது இன்னின்ன சுரங்கள் இப்படி வரவேண்டுமென்று இதனால் தெரிகிறோம்.

இதுபோல் இரண்டு, இரண்டு அலகாய் சுரம் கிரகமாற்றிக் கொள்ளும் பொழுது பெரும்பாலை ஏழும் சிறு பாலை ஐந்துமாக உண்டாகின்றனவென்று சொல்லுகிறார். இவ்வாறு பன்னிரு கால் திரிக்கப் பன்னிரு பாலை உண்டாகும் என்றதினால் வெளியாகிறது. கருணைமிர்த சாகரம் முதல் புத்தகம் மூன்றும் பாகம் 720ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையில் காண்க.

பெரும்பாலை ஏழும் உண்டாகும் விவரத்தை அடியில் வரும் சக்கரத்தில் காணலாம். கருணைமிர்த சாகரம் முதல் புத்தகம் நான்காவது பாகம் 822ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையில் காண்க.

இதில் செம்பாலைப் பண்ணிற்குரிய இராசி இடைவெளிகளை 1, 2, 2, 1, 2, 2, 2 என்று சொல்லி இருக்கிறதாகக் காண்போம். அதாவது ஒரு இராசியில் இரண்டு அலகோடும் ரி இரண்டு இராசியில் காது அலகோடும், க இரண்டு இராசியில் காது அலகோடும், ம ஒரு இராசியில் இரண்டு அலகோடும் வருகிறதென்பது கருத்து. இம் முறைப்படியே தற்காலம் கிரகமாற்றி இராகங்கள் பாடுகிறோமென்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். இம் முறைக்குப் பூர்வ காலத்தில் வழங்கிய பெயர்களும் தற்காலப் பெயர்களும் குறித்திருக்கிறேன். அக்காலத்தில் ஆய்ச்சியர் குரவை பாடினார்கள் என்பதில் சில குறிப்புகள் சொல்லவேண்டியதாயிற்று. கருணைமிர்த சாகரம் முதல் புத்தகம் மூன்றும் பாகம் 687ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையில் காண்க.

இதில் நி, ச, ரி, க என்ற சுரத்தில் ஏதாவது ஒன்றை ஆரம்ப சுரமாக எடுத்து ஒரு பக்கத்தார் பாட மற்றொரு பக்கத்தார் ம, ப, த, நி என்ற சுரத்தில் முன் ஆரம்பித்த சுரத்திற்கு ச-ப முறையான சுரத்தை துவங்கி முன் சுர வரிசைக்குப்பொருந்தப் பாடுவதாம்.

இதோடு மாதவி சகோடயாழை வாங்கி அதில் செம்பகை, ஆர்ப்பு, அதிர்வு, கூடம் ஆகிய பகை நீங்கப் பரிசோதித்து இரண்டு ஸ்தாயியாக நின்ற 14 நரம்பில் உழை குரலான மத்திய ஸ்தாயியையும் அதின் கீழுள்ள மந்த ஸ்தாயியையும் மேலுள்ள உச்ச ஸ்தாயியையும் ஆராய்ந்து பார்த்து இணை, கிளை, பகை என்னும் முறையில் குரல், இளிக் கிரமத்தில் சரிதாஞ என்று இசைக் கூட்டிப் பார்த்து அதன் பின் மருதம், குறிஞ்சி, நெய்தல், பாலை என்னும் நால் விதப் பெரும் பண்ணில் அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என்னும் நால் ஜாதிப் பண்களுண்டாகும் சுரத்திலிருந்து வலிவு, மெலிவு, சமம் என்னும் மூவகை இயக்கும் வரும் முறையில் ஆராய்ந்து பாடினுள் என்றும் பின்னர் அதிலும் மாத்திரைக்குறைந்ததின்மேல் பண்ணை இனிதாகப் பாடி நெகிழ்ற மனத்தினளாய் அயர்ந்தாளெனவும் சொல்லப்பட்டிருப்பதினுல் வீணையில் ஒரு ஸ்தாயியை ஏழாவது இராசிக்கு ஏழாவது இராசியாக ச-ப முறையாய் 12 சுரங்கள் கண்டுபிடித்தார்களென்றும், ஐந்தாவது, ஐந்தாவதாய் ச-ம முறையில் ஒரு ஸ்தாயியில் 12 சுரங்களைக் கண்டு பிடித்தார்களென்றும் வெளியாகிறது. ச-ப முறையிலும் ச-ம முறையிலும் ஒரு ஸ்தாயியில் பன்னிரண்டு சுரங்கள் அமைத்து அதில் கிரக சுரம் மாற்றிப் பல இராகங்கள் உண்டாகும் முறை சொல்லப்படுவதாகத் தெரிகிறது. இது ஆயப்பாலையாம்.

ஒரு ஸ்தாயியின் பன்னிரண்டு சுரங்களையும் இரண்டு, இரண்டு அலகாகப்பிரித்து அதில் விளரி, கைக்கிளையில் ச-ப, ச-ம வாக வரும் இரண்டு சுரங்களில் ஒவ்வொரு அலகு குறைத்துக் கமகமாய்ப் பிடிக்க வேண்டுமென்று மருதம், குறிஞ்சி, நெய்தல், பாலை என்னும் நாலு வகைகளும் அதில் ஒவ்வொன்றிலும் அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என்னும் நாலு ஜாதிப் பண்களும் சொல்லப்படுவது வட்டப்பாலையாம். 16 ஜாதிப் பண்களில் எந்தெந்த சுரங்களில் அலகு குறைத்துப் பிடிக்கவேண்டுமென்பதைக் காட்ட 4, 4, 3, 2, 4, 3, 2 என்னும் எண்களைச் சொல்லி அவைகளைக் கிரகம் மாற்றி அவைகளில் முன்று என்ற இலக்கம் எந்த சுரத்திற்குக் கீழ் வருகிறதோ அவைகளை ஒரு அலகு குறைத்துப் பிடிக்கவேண்டுமென்று தெளிவாகத் தெரிகிறது. இதனுல் ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகளல்ல 24 சுருதிகள் என்றும் ஒரு சுரத்தை ஒரு அலகு குறைத்துப் பிடிப்பதனுல் ஒரு ஸ்தாயியில் 22 என்று சொல்வதற்கு நியாயமில்லை என்றும் தெளிவாகத் தெரிகிறது. இது வட்டப்பாலையாம்.

இதன் முன் ஒரு அலகு குறைத்துப் பிடித்ததுபோல் $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$ ஆன அலகுகள் குறைத்துப் பிடித்துப் பாடுவது மிக இன்பந் தருவதாகச் சொல்லப்படுகிறது. இதனுல் $\frac{1}{2}$ அலகு குறைத்துப் பாடுவது திரிகோணப்பாலை என்றும் $\frac{1}{4}$ அலகான இசை நுண்மையில் பாடுவது சதுரப்பாலை என்றும் சொல்ல இடந்தருகிறது.

இவ்விஷயத்தில் நான் சொல்லவேண்டியது அதிகமாயிருந்தாலும் எல்லாம் தெரிந்த தங்களுக்கு மற்றும் விஷயங்களைப் பக்கம் வரிகளுடன் குறித்து 10, 15 நாளைக்குமுன்னே கொடுத்திருக்கிறேனுகையால் அதிகம் சொல்ல அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

சங்கீத விஷயமாய் சிலப்பதிகாரத்தில் இன்னும் சில விஷயங்கள் அறியக்கூடியதாயிருந்தாலும் அவசியமான குறிப்புகளை மாத்திரம் இங்கே காட்டியிருக்கிறேன். அவைகள் குறிப்பில் கண்டபடி அர்த்தம் கொடுக்குமா என்று தாங்கள் கவனித்து முடிவான அபிப்பிரா

யத்தைப் பிரசிடெண்ட் அவர்களுக்குத் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்று முழுவதும் தாங்கள் ஆராய்ந்து பார்த்து, உண்டாகும் சந்தேகங்களுக்கு என்னைக் கேட்டுப் பிறகு தங்கள் பிரியம்போல் தீர்மானமான முடிவு சொல்லும்படியாய்த் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று சொன்னார்கள்.

புத்தகக் குறிப்பு தெரிந்துகொள்ள கொடுக்கப்பட்ட அட்டவணை பின்வருமாறு.

I.—தமிழ் நூல் வல்லோர் இசைத்தமிழ் சம்பந்தமாய் ஆராய்ச்சி செய்து சொல்லுவதற்குவேண்டிய சில குறிப்புகள்.

1. பூர்வ தமிழ் மக்கள் குரல் இளியாய் ச-ப, ச-ப முறையாகவும் உழை குரலாய் ச-ம, ச-ம முறையாகவும் ஒரு ஸ்தாயியில் 12 சுரங்களைக் கண்டுபிடித்து அவற்றில் ஏழு சுரங்கள் பாடினார்களென்பதும் வீணையில் அம்முறையே அமைத்துக் கானம் செய்தார்களென்பதும்.

2. வட்டப்பாலை முறையாய் 24 சுருதிகள் வைத்து அதில் வரும் நால் வகை யாழிலும் அவற்றின் தாது ஜாதிகளிலும் இரண்டு சுருதிகள் குறைத்து 22 சுருதிகளில் கானம் செய்து வந்திருக்கிறார்கள் என்பதும் நூலின் மறைப்பும் அதன் நிவர்த்தியும் இன்னதென்பதும்.

3. பூர்வ இராகங்களை தாது பாலைகளாக வகுத்து நட்ப சுரங்களை வழங்கியிருக்கிறார்களென்பது.

4. ஏழு சுரங்களில் கிரகமாற்றி இராகங்கள் பிறக்கும் முறையும் 24 சுருதிகளில் கிரகம் மாற்றிப் பண்ணிருபாலை பிறக்கும் முறையும்.

5. கிரகமாற்றி ஆய்ச்சியர் குரவை பாடும் முறை இன்னதென்று ஆராய்தல்.

இவைகளை இற்றைக்கு 1850 வருடங்களுக்கு முற்பட்ட சிலப்பதிகாரத்தாலும் கடைச்சங்க காலத்திய பரிபாடலாலும் முதற் சங்கத்தின் கடைசியில் அரங்கேறிய தொல்காப்பியத்தாலும் மெய்ப்பித்துக் காட்டுதல்.

கம்பர்.	ஆராயவேண்டிய விஷயங்கள்.	சிலப்பதிகாரம்	பக்கம்.	வரி.	அபிப் பிராயம்.
1	ஒரு பாடகன் சட்சமம் பஞ்சமம் ஒன்று சேரும் ஓசையைத் திட்டமாக அறியக்கூடிய சுரஞானமுடையவனாயிருக்கவேண்டுமென்று சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகிறதா? ...	அரங்கேற்று காதை.	90	59-60	
2	பூர்வதமிழ்மக்கள் ச-ப முறையாய் யாழிற் சுரங்கள் அமைத்திருந்தார்களா?	,,	90	63	
3	பூர்வதமிழ்மக்கள் ச-ப முறையாய் சுரங்கள் அமைத்து ஏழு சுரம் பாடினார்களா?	,,	92, 82, 83, 130	71	
4	பூர்வதமிழ்மக்கள் பதினாலு கோவை பாடினார்களா? ...	,,	92, 202	70	
5	பூர்வதமிழ்மக்கள் மத்திம கிராமம் வைத்துப் பாடினார்களா? ...	வேனிற் காதை.	202	31-32	

கம்பர்.	ஆராயவேண்டிய விஷயங்கள்.	சிலப்பதிகாரம்	பக்கம்.	வரி.	ஆயிப் பிராயம்
6	பூர்வதமிழ்மக்கள் ச-ப முறையாய் உழைமுதல் கைக்கிளை இறுதியாய்ச் செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை மேற்செம்பாலை என ஏழுபாலைகளை வழங்கிவந்தார்களா ?	அரங்கேற்று காதை.	93	82-90	
7	பூர்வதமிழ்மக்கள் வட்டப்பாலையில் பன்னிருபாலைகள் பிறக்கும் முறைக்கு அலருமாறும் முறையைத் தெளிவாய்க் காட்டியிருக்கிறார்களா?	அரங்கேற்று காதை.	93	72-78	
8	யாழ், குழல், தண்ணுமை, ஆமந்திரிகை, முழவு முதலிய வாத்தியங்களை ஒன்று சேர்த்துப் பாடியிருக்கிறார்களா ? ..	அரங்கேற்று காதை.	100	135-142	
9	பூர்வதமிழ்மக்கள் இணை, கிளை, பகை நட்பு என்று நான்குவிதமாகச் சுரங்களைக்கண்டு கானஞ் செய்திருக்கிறார்களா ? ...	வேனிற் காதை.	202	33-34	
10	பூர்வதமிழ்மக்கள் ச-ப முறையில் ஏழு ஏழாகவும், ச-ம முறையில் ஐந்து ஐந்தாகவும் உழை முதலாகவுங் குரல் முதலாகவும் வைத்து நாலு விதமான சாதிப் பண்கள் பாடியிருக்கிறார்களா ?	வேனிற் காதை.	203	35-41	
11	யாழ் இடத்து ச-ம வாக இடமுறை திரிந்தும் குழல் இடத்து ச-ப வாக வலமுறை திரிந்தும் வருவதின்படி சுரங்கள் அமைத்திருந்தார்களா ?	அரங்கேற்று காதை.	93	91-92	
12	குரல் இளியாய் வட்டப்பாலையில் ச-ப ச-ப வாக ஒரு ஸ்தாயியில் பன்னிரு சுரங்களெனச் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகின்றதா ?...	,,	93	72-78	
13	உழை குரலாய் இடமுறையாய் ச-ம, ச-ம வாக பன்னிரு சுரங்களெனச் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகின்றதா ? ...	அரங்கேற்று காதை.	93	...	
14	ஒரு ஸ்தாயியிலுள்ள பன்னிரு சுரங்களில் ஏழு சுரங்கள் பாடினார்களா ?	ஆய்ச்சியர் குரவை.	409	உரை.	
15	சகோடயாழில் குரல் இளிக் கிரமத்தில் சுரங்களை அமைத்திருந்தார்களா ?	அரங்கேற்று காதை.	90, 202	31, 32	
16	வலிவு, மெலிவு, சமம் என்னும் (மூவகையியக்கிலும்) மூன்று ஸ்தாயிகளிலும் 14 கோவை பாடினார்களென்று சிலப்பதிகாரத்திற் சொல்லப்படுகிறதா ?	,,	93, 94	93, 94 உரை.	
17	வட்டப்பாலை வகுக்கும் முறையும் அதில் ஏழு சுரங்கள் நிற்கும் இராசியுஞ் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகிறதா ? ...	ஆய்ச்சியர் குரவை.	405	...	
18	வட்டப்பாலை முறையில் நால்வகை யாழ் அல்லது நாலு கிராமம் உண்டாகும் விதமும் ஒவ்வொன்றில் நான்கு சாதிகள் பிறக்கும் விதமும் சொல்லப்பட்டனவா ?	வேனிற் காதை. ஆய்ச்சியர் குரவை.	202, 203, 405,	...	

நம்பர்.	ஆராயவேண்டிய விஷயங்கள்.	சிலப்பதிகாரம்	பக்கம்.	வரி.	ஆபிப் பிராயம்.
19	சகோட யாழில் வரும் 14 கோவைகளில் பண்களைப் பாடி அதன்பின் மாத்திரை குறைந்ததின்மேல் மாதவி யென்பவள் பண்ணை இனிதாகப்பாடினாள் என்று சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகிறதா?	சிலப். அரும் பதவுரை.	33	...	
20	சுருதி குறைத்துப் பாடுதல் பாடலமுதம் என்று தண்டியலங்காரத்தில் சொல்லப்படுகிறதா?	தண்டியலங்காரம்.	172	3 கலை மலை வமைதி.	
21	விளரிகைக்கிளையில் ஒவ்வொரு அலகு குறைத்து நாலு பெரும் பண்களும் நாலு ஜாதிப்பண்களும் பாடும் முறைகள் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகின்றனவா?	ஆய்ச்சியர் குரவை.	405, 406	...	
22	பூர்வம் இராகங்களை ஆடப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப் பாலை, சதுரப்பாலை என்று நாலு பாலைகளாக வகுத்திருக்கிறார்களா?	ஆய்ச்சியர் குரவை. அரங்கேற்று காதை	405, 93	...	
23	ஏழு சுரங்களில் இராகம் மாற்றினால் ஏழுபாலை இராகங்கள் வருகின்றனவா?	அரங்கேற்று காதை	93	...	
24	இருபத்து நான்கு சுருதிகளில் இரகம் மாற்றிப் பெரும் பாலை ஏழும், சிறுபாலை ஐந்துமாகப் பன்னிரு பாலைகள் சொல்லப்படுகின்றனவா?	அரங்கேற்று காதை அ.ப.	93, 10	...	
25	ஆய்ச்சியர் குரவையில் ஒரு பக்கத்தார் நிகரி தென்றும் மற்றவர் மபதநி என்றும் பெயர்வைத்துக்கொண்டு தவை ஆரம்ப சுரமாக வைத்துப் பாடினார்கள் என்று சிலப்பதிகாரத்திற் சொல்லப்படுகிறதா?	ஆய்ச்சியர் குரவை.	406, 407. 408	...	
26	மருதம், குறிஞ்சி, நெய்தல், பாலை என்னும் நால்வகை யாழ்கள் தொல்காப்பியத்தில் சொல்லப்படுகின்றனவா? ...	தொல். பொருள்.		...	
27	உழை குரலாய்வரும் பாலையை மருதப்பண் என்றும் குரலுக்கு ஐந்தாவது ஆகையால் உழை இளிக்குக் கிளையாயிற்று என்றும் ச-ம, ச-ம வாக இடமுறையாய்ச் சுரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் பரிபாடலிலும் அதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையிலும் சொல்லப்படுகிறதா?	பரிபாடல் உரை.		...	
28	ஆடலாசிரியன் அமைதியில் பல் வகையான நடனத்தின் இலக்கணமும், பதினொரு ஆடலின் இலக்கணமும் அபிநயத்தின் இலக்கணமுஞ் சொல்லப்படுகின்றனவா?	அரங்கேற்று காதை.	56	12-25	
29	இசை ஆசிரியன் அமைதியில் யாழும் குழலும் தண்ணுமைக் கருவியும் அவற்றின் இலக்கணமும் சொல்லப்படுகின்றனவா?	,,	56-57	25-35	
30	கவிஞன் அமைதியில் முத்தமிழ் மறிந்தவனுய் வேத்தியல் பொதுவியல் என்ற வகையில் நடன நூல் தெரிந்தவனுக விருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறதா?	,,	57	37-45	

நம்பர்.	ஆராயவேண்டிய விஷயங்கள்.	சிலப்பதிகாரம்	பக்கம்.	வரி.	அபிப்பிராயம்.
31	தண்ணுமையோன் அமைதியில் ஆடல், பாடல், இசை, பண், பாணி, தூக்கு முதலியவைகளே நன்முய் அறிந்து யாழ்ப் பாடலும் குழற் பாடலும் மிடற்றுப் பாடலும் இசைந்து நடப்பதைக் கேட்கக்கூடிய விதமாய் அடக்கி வாசிக்கக் கூடிய திறமையுடையவனுகவேண்டும் என்று சொல்லப் படுகிறதா?	அரங்கேற்று காதை.	57	45-55	
32	குழலோன் அமைதியில் ச-ப பொருந்தும் முறையில் தெளி வான அறிவுடையவனும் மத்தளத்தின் சுருதி சேருவதை யறிந்து மிருதங்கம் வாசிப்போனுடன் சேர்ந்து பாடுகிற வன் மனக் கருத்திற்கிசைந்து வாசிக்கக்கூடியவனுயிருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறதா?	,,	57-58	55-69	
33	யாழாசிரியன் அமைதியில் சுரங்களின் அலகு மாற்றும் முறை யும் ஏழு பாலைகளின் முறையும் நரம்புகளின் இலக்கண மும் மூன்று ஸ்தாயிகளின் முறையுங் குழல், யாழ்களின் இலக்கணமுஞ் சொல்லப்படுகின்றனவா?	,,	58	70-95	
34	அரங்கின் அமைதியில் ஆடுமிடத்தின் அகலம், நீளம், உயரமும் அதன் அலங்காரமும் சொல்லப்படுகின்றனவா? ...	,,	59	95-113	
35	தலைக்கோல் அமைதியின் இலக்கணம் சொல்லப்படுகிறதா? ...	,,	59	114-128	
36	அரங்கிற் புகுந்தாடுகின்ற முறைமை சொல்லப்படுகிறதா? ...	,,	60-61	129-175	
37	பாணி அல்லது தாளத்தைப்பற்றிச் சொல்லப்படுகிறதா? ...	,,	73		
38	ஆளத்தியின் இலக்கணம் சொல்லப்படுகிறதா?	,,	85		
39	ஆகி இசைகள் 11,991 இருந்ததாகச் சொல்லப்படுகிறதா? ...	,,	89		
40	தமிழ்மக்கள் சங்கீதத்தில் வழங்கிவந்தவை ஏழு சுரங்களென் றும் ச-ப முறையாய்க் கிடைப்பது 12 சுரங்கள் என்றும் அது ஆயப்பாலை என்றும், ஒரு ஸ்தாயியில் 24 அலகுகள் வகுக்கப்பட்டது வட்டப்பாலை என்றும் அதில் இரண்டு அலகு குறைத்து நாலு யாழ்வகைகளும், நாலு ஜாதிகளு மாக 16 பண்கள் பாடினார்கள் என்றும் பூர்வதமிழ் நூல் களால் நாம் தெளிவாய்க் காணக்கூடியதாயிருக்கின்றதா?				
41	இணை இணையான ச-ப ஏழு இராசியும் கிளையான ச-ம ஐந்து இராசியுமாய் வரும் பொழுது $7+5=12$ சுரங்களும் $14+10=24$ சுருதிகளுமாக வருகின்றனவா? ...				
42	ஆயப்பாலை வட்டப்பாலைகளை ஒன்றிணை இரண்டு இரண்டாகப் பிரித்துச் சொன்னதுபோலத் திரிகோணப்பாலை, சதுரப் பாலையையும் இரண்டு இரண்டாகப் பிரித்து $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$, $\frac{1}{16}$ சுரங்களாகச் சொன்னர்கள் என்று சொல்லலாமா? ...				

கம்பர்.	ஆராயவேண்டிய விஷயங்கள்.	சிலப்பதிகாரம்	பக்கம்.	வரி.	ஆபிப் பிராயம்.
43	சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள் சொல்லும் சில குறிப் புகளினால் அவர் கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்தவரென் கிறதாகத் தெரிகிறதா?				
44	நக்கீரர் எழுதிய இறையனார் அகப்பொருள் உரையினால் அவர் மூன்றும் சங்கத்திருந்தாரென்றும் கிறிஸ்துவுக்கு முன் னுள்ளவரென்றும் நாம் எண்ணலாமா?				
45	நக்கீரர் மூன்று சங்கங்களைக் குறித்துச் சொல்லியிருக்கிறாரா?...				
46	முதல் ஊழியின் கடைசியில் சுமார் 8,000 வருடங்களுக்கு முன் னிருந்த தொல்காப்பியர் நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையில் அதங்கோட்டாசான் முன்னிலையில் தொல்காப் பியம் அரங்கேற்றினர் என்று தொல்காப்பியம் சிறப்புப் பாயிரத்தில் சொல்லப்படுகிறதா?				
47	முதல் ஊழியில் முதல் சங்கத்தில் சுமார் 12,000 வருடங்களு க்கு முன் அகத்திய மாமுனிவர் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் அகத்தியம் என்ற நூல் செய் திருக்கிறாரா?				
48	இசைத்தமிழ் என்பது சங்கீதத்தைப்பற்றிய இலக்கணந் தானா?				

மு. ஆபிரகாம் பண்டிதர்.

இதன்பின் கணித பஞ்சாயத்தாரைப் பார்த்துப் பின்வருமாறு பேசினார்கள்.

"கனவான்களே! தங்கள் அருமையான நேரத்தையும் கவனிக்காமல் கர்நாடக சங்கீதத் தில் வழங்கிவரும் சுரம், சுருதிகள் இன்ன அளவில் வருகின்றனவென்ற கணக்கைப் பரிசோதிப் பதற்குத் தாங்கள் இவ்வளவு தூரம் வந்திருப்பதைப்பற்றி மிகவும் நன்றியறிதலுள்ளவனாயிருக் கிறேன்.

இந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுரம் சுருதிகள் இன்னவையென்று பலர் பலவித மான கணக்குச் சொல்லியிருந்தாலும் அவைகள் யாவும் ஒன்றற்கொன்று ஒற்றுமையில்லை என் றும் ஒழுங்கற்றவையாயிருக்கின்றனவென்றும் நான் கண்டேன். 'காற்றைக்காலால் எழுப்பிக் கருத்தாலியக்கி, ஒன்றெனத்தாக்கி, இரண்டெனப் பகுத்துப் பண்ணீர்மைகளைப் பிறப்பிக்கப் பட்ட மிடற்றுப் பாடல்' என்று பூர்வ தமிழ்மக்கள் சொல்லுகிற முறைப்படியும், ஓசை மந்தர ஸ்தாயியில் ஒன்றாகவும் மத்திய ஸ்தாயியில் இரண்டாகவும் தார ஸ்தாயியில் நாலாகவும் பெருத்துப் போகிறது என்று சொன்ன சாரங்கர் முறைப்படியும் ஒரு ஸ்தாயி ஒன்று என்றும் அதற்குமேல் மத்திய ஸ்தாயி இரண்டு என்றும் வைத்துக்கொண்டு இதன் நடுவில் வரும் 12 சுரங்களை இன்ன இடத்தில் வருகின்றனவென்றும் நாம் கண்டு பிடிக்கவேண்டும். பூர்வ தமிழ்

மக்கள் ச-ப, ச-ப வாக ஏழாவது, ஏழாவது இராசியில் வரும் சுரங்களின் முறைப்படி 12 சுரங்களைக் குறித்திருக்கிறார்கள். மேலும் இடவோட்டாக ஐந்தாவது ஐந்தாவது இராசியாய் ச-ம முறைப்படி முன்கண்ட 12 சுரங்களே வருகின்றனவென்று நிச்சயம் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் ஒரு ஸ்தாயியில் 12 சுரங்கள் என்ன அளவில் வருகின்றன வென்று நாம் பார்க்கவேண்டும். மேலும் கிரகம் மாற்றும்பொழுது உண்டாகும் ஒவ்வொரு இராகமும் இப்பன்னிரண்டு சுரத்தில் எந்த சுரத்தைப் பிடித்து வாசித்தாலும் அந்த இராகம் மாறாமலிருக்கவேண்டும் என்ற கருத்திற்கிசைய அவைகள் சம அளவான ஓசையுடையவைகளாயிருக்கவேண்டும். அப்படியில்லாமல் போனால் கிரகமாற்றி இராகம் பாடுவது கூடாத காரியம். இம்முறையையே சாரங்கர் சொல்லியிருக்கிறார். ஆகையால் ஒன்றான ஆதார சட்சத்திலிருந்து இரண்டான மத்தியஸ்தாயி சட்சத்திற்கு 12 சுரங்களும் எப்படி தொடர்ந்து செல்லுகின்றனவென்று நாம் பார்க்கவேண்டும். இதில் மேற்சையார் எழுதிய லாகிருதம் என்னும் கணிதம் உதவியாயிருக்குமென்று எண்ணுகிறேன். இரண்டின் துருவமாகிய .301030000 ஐ பன்னிரண்டால் வகுத்து வந்த ஈவை முதல் சுரத்திற்கு ஒன்றாகவும், இரண்டாவது சுரத்திற்கு இரண்டாகவும், மூன்றாவது சுரத்திற்கு மூன்றாகவும் முறையே பன்னிரண்டு சுரத்திற்கும் துருவம் கண்டுபிடித்து அப்பன்னிரண்டின் துருவங்களுக்கு சமான பின்னம் கண்டு பிரித்துக்கொண்டு சட்சமம் 540 வை ப்ரஷ்னஞல் மற்றப் பன்னிரண்டு சுரங்களும் எத்தனை வைபரேஷனுடையதா யிருக்குமென்று கண்டு அதன்மேல் ஒரு வீணைத் தந்தியைப் பாதியாக மடிக்கும்பொழுது மத்தியஸ்தாயி சட்சமம் கிடைப்பதால் ஒன்றாயிருந்த தந்தியின் நீளம் அதன் பாதி அளவு வரையிலும் எப்படிப்படிப்படியாய் 12 சுரத்திற்குக் குறைந்துபோகிறதென்று கண்டு பிடிப்பதினல் வீணைத்தந்தியின் எந்த அளவில் 12 சுரங்களும் வருகின்றனவென்று கணக்குச் செய்திருக்கிறேன். ஒரு ஸ்தாயியில் வரும் 12 சுரங்களுக்கு $\sqrt[12]{2}$ என்றும் 24 சுருதிகளுக்கு $\sqrt[24]{2}$ என்றும் 48, 96 போன்ற துட்பமான சுருதிகளுக்கு $\sqrt[48]{2}$, $\sqrt[96]{2}$ என்றும் கணக்குச் செய்திருக்கிறேன். அவைகளுக்குள்ள ஒற்றுமைகளையும் ஒழுங்குபட்டிருக்கும் முறையையும் கருணாமிர்த சாகரம் 831 ஆம் பக்கமுதல் 859 ஆம் பக்கம் வரையும் சொல்லியிருக்கிறேன். நான் பரோடாவுக்குக் கொண்டுபோன இரண்டாவது வியாசத்தில் இக்கணக்கைப்பற்றி விபரமாய்ச் சொல்லியிருக்கிறேன். அப்புத்தகம் தங்களுக்கு நாலு ஐந்து நாள் முன்னதாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. தாங்கள் அக்கணக்குகளை சரிதானவென்று பார்க்கிறதோடு அதற்கென்று நான் தயார் செய்திருக்கும் வீணையில் அமைத்திருக்கும் மெட்டுகள் கணக்கில் கண்டபடி அளவில் ஒத்திருக்கின்றனவாவென்று பரிசோதனை செய்து சொல்லவும் வேண்டுமென்று தங்களை மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பூர்வ தமிழ்மக்கள் சுருதியைப்பற்றிச் சொல்லும் கருத்திற்கிணங்க இக்கணித முறை செய்திருக்கிறேன். இம்முறை தகுதியானதாவென்றும் கணக்குச் சரிதானவென்றும் கணக்கில் கண்ட அளவின்படி வீணையில் அமைத்திருக்கும் சுரஸ்தானங்கள் சரிதானவென்றும் தாங்கள் பரிசோதிக்கிறதற்கு உதவியாக சில குறிப்புகள் இத்துடன் கொடுத்திருக்கிறேன். தாங்கள் அவைகளை இன்று முழுவதும் ஆராய்ந்து பார்த்து தங்கள் முடிவான அபிப்பிராயத்தை நாளைக்காலையில் பிரசிடெண்ட் அவர்களுக்குத் தெரிவிக்கும் படியாக மிக வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்". என்று கணித பஞ்சாயத்தாருக்கு மிகத் தெளிவாக எடுத்துரைத்து சிலகுறிப்புகளடங்கிய அட்டவணையும் கொடுத்தார்கள்.

II.—கணித நூல் வல்லோர் சுரம் சுருதிகளுக்கு வரும் கணித முறையில் ஆராய்ச்சி செய்து சொல்வதற்கு வேண்டிய சில குறிப்புகள்.

1. மந்தர ஸ்தாயியின் ஓசை ஒன்றுனல் மத்திய ஸ்தாயி அதன் இருமடங்காகவும் தார ஸ்தாயி மத்திய ஸ்தாயியின் இருமடங்காகவும் போகவேண்டுமென்கிற அபிப்பிராயத்தின்படியே தந்தியின் அளவில் ஸ்தாயி போகப் போகக் குறுகிய அளவுடையதாய் வருகிறது என்பதைச் சோதித்துப்பார்த்தல்.

2. ஒன்றுயிருந்த ஆதார சட்சமம் (அதாவது குரல்) இரண்டான மத்திய ஸ்தாயி சட்சமத்திற்குப் படிப்படியாய் ஒன்றற்கொன்று தீவிரமாய் நடுவில் வேறு நாதமுண்டாகாமல் எப்படிப் பன்னிரண்டு ஸ்தானங்கள் உண்டாகின்றனவென்று இலாகிருத (Logarithm) மூலமாக வரும் கணக்கைப் பார்த்தல்.

3. ஒரு ஸ்தாயியில் 24 சுருதிகளாக வருவதற்குக் கணக்குப் பார்த்தல்.

4. 48 ஆகவும், 96 ஆகவும் வரும் துட்ப சுருதிகளுக்கு இரண்டில் லாகிருதம் மூலமாகக் கணக்குப் பார்த்தல்.

5. மேற்படி கணக்கினுல் கிடைக்கும் தந்தியின் நீளத்திற்குரிய அளவின்படியே வீணையில் சுரங்கள் வருகின்றனவா என்று பரிசோதித்தல்.

6. ச-ப $\frac{2}{3}$, ச-ம $\frac{3}{4}$, என்னு முறையினுல் சரியான சுரங்கள் கிடைக்க மாட்டாதென்ற கணக்கைப் பரிசோதித்தல்.

நம்பர்.	ஆராயவேண்டிய விஷயங்கள்.	அபிப்பிராயம்.
1	மந்தரஸ்தாயியில் ஓசை ஒன்றுனல் மத்திய ஸ்தாயி அதன் இருமடங்காகவும் தார ஸ்தாயி நாலு மடங்காகவும் வரும் முறையில் தந்தியின் நீளம் ஒன்றுகவும், அரையாகவும், காலாகவும் குறைந்துகொண்டு போகிறதென்பதுசாத்திர முறைப்படி சரிதானு?	
2	ஒன்றுயிருந்த ஆதார சட்சமம் இரண்டான மத்திய ஸ்தாயியில் சட்சமத்திற்குப்போகும்பொழுது ஒரு ஸ்தாயியில் 12சுரங்கள் உண்டாகுமானுல் அவற்றின் அளவு முறை Geometrical Progression படி இருக்கவேண்டாமா? ...	
3	ஓசைகள் மேல் போகப் போகத் தீவிரமாகிக்கொண்டுபோவதற்கும் தந்தியின் நீளம் போகப் போகப் படிப் படியாய்க் குறைந்து கொண்டு போவதற்கும் அட்டவணையில் கண்ட இலாகிருத முறை சரிதானு?	
4	இலாகிருத முறைப்படி ஆறுவது கலத்தில் காட்டிய ஓசையின் அலகளும் ஒன்பதாவது கலத்தில் காட்டிய தந்தியின் நீளமும் கணக்கிற் சரிதானு?	
5	பத்தாவது கலத்தில் கண்ட அளவின்படி வீணையின் சுர ஸ்தானங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா?	

நம்பர்.	ஆராயவேண்டிய விஷயங்கள்.	அபிப்பிராயம்.
6	கிரகமாற்றி இராகங்கள் பாடுவதற்கு கணக்கினாலும் யாழின் தந்தியின் அளவாலும் ஒத்து வரக்கூடியதாயிருக்கின்றனவா?	
7	$\frac{2}{3}$, $\frac{3}{4}$, $\frac{4}{5}$, $\frac{5}{6}$ போன்ற முறைகளில் இவ்வொழுங்கு கிடைக்குமா?	
8	ஒரு ஸ்தாயியை 24 சமபாகங்களாகப்பிரிக்கும்பொழுது கிடைக்கும் ஓசைக்கும் ஒரு ஸ்தாயியை 22 சமபாகங்களாகப் பிரிக்கும்பொழுதுண்டாகும் ஓசைக்கும் பொருத்த மிருக்குமா?	
9	இலாகிருத முறைப்படி கிடைக்கும் 12 சுரங்களும் 24 சுருதிகளும் 48, 96 ஆன நுட்பமான சுருதிகளும்பாடிக்காட்டினது கர்நாடகசங்கீதமுறைப்படி சரியாயிருக்கின்றனவா?	

மு. ஆபிரகாம் பண்டிதர்.

அதன்பின் சங்கீத பஞ்சாயத்தாரைப் பார்த்துப் பின் வருமாறு பேசினார்கள்.

"கனவான்களே! இந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகள் என்று பலர் பலவிதமாய்க் கணக்கு சொன்னாலும் சிலர் இந்துஸ்தானி சங்கீதத்திற்குரியதென்றும் சிலர் ஆரிய சங்கீதத்திற்குரியதென்றும் சிலர் இங்கிலீஷ் சங்கீதத்திற்குரியதென்றும் சொல்வதினால் அவைகளைப்பற்றி இங்கு நான் சொல்ல வரவில்லை. சுருதிகளைப்பற்றி சாரங்கதேவர் சொல்வது நமது கர்நாடக சங்கீதத்திற்கு ஒத்ததாயிருக்கவில்லை. அதோடு அம்முறைப்படி ஒரு கீர்த்தனங்கூட வடநாட்டிலாவது தென்னாட்டிலாவது பாடிக் கேட்கவுமில்லை. இதைப்பற்றி வாதிப்போர்களே சங்கீத ரத்னாகரரின் முறையை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டியது. அம்முறைகளைப்பற்றி நான் ஒன்றும் சொல்லப் பிரியப்படவில்லை. எனென்றால் நாம் இப்போது கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகளை விசாரிக்க வந்திருக்கிறோம். இதன்முன் ஆறு கான்பரென்ஸுகளாக நாம் விசாரித்துமிருக்கிறோம்.

சங்கீத ரத்னாகரரின் 22 சுருதிகள் என்று சொன்னதைத் தவிர 22 சுருதிகள் என்று சொன்ன எவரும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையான முறைகளைச் சொன்னதில்லை. அவ்வொற்றுமையில்லாத முறைகளைச் சொல்லி நான் பொழுதுபோக்குவதிலும் கர்நாடக சங்கீதத்திற்கென்று சுருதிமுறைகளைச் சொல்லும் பூர்வதமிழ்மக்களின் ஒரு மேலான முறையை இங்கே சொல்லவும் அம்முறைப்படித் தற்காலம் பாடப்படும் கீத முறைகளைக்கொண்டு மெய்ப்பிக்கவும் வேண்டுமென்று நினைத்தேன். இக்காலத்தில் பூர்ணமாய் அர்த்தமாகாமல் போன தமிழ் மொழிகளுள்ள சிலப்பதிகாரத்தின் மேற்கோள்களை விளக்கிக் காட்டவும் அப்பூர்வ கருத்தின்படி சுருதிகள் குறிக்கும் கணக்குக் காட்டவும் அக்கணக்கின்படி வீணை அளவில் கிடைக்கும் சுரங்கள் சரிதானாவென்று அனுபோகத்திலிருக்கும் கீர்த்தனங்கள் மூலமாய்ப் பார்க்கவும் வேண்டியிருக்கிறது. இதன்முன் இரண்டு பஞ்சாயத்தாருக்கும் நான் சொன்ன அபிப்பிராயத்தை மிகப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். இப்போது வீணையில் அளவின்படி வைக்கப்

பட்ட மெட்டுகளில் ஒலிக்கும் சுரங்களும் துட்ப சுருதிகளும் தற்காலம் நம் அனுபோகத்திலிருக்கிறவைதானுவென்று தங்களால் பரிசோதிக்கப்படவேண்டும். தங்கள் அனுபோகத்திலிருக்கும் சுரங்களும் சுருதிகளும் துட்ப சுருதிகளும் சரியாயிருக்குமானுல் பூர்வ தமிழ்மக்கள் வழங்கி வந்தவைகள் அவைகளே யென்றும் இனிமேல் வழங்கி வரக்கூடியவைகள் அவைகள்தான் என்றும் நாம் நிச்சயிக்கலாம். இவைகளைப் பற்றி இதற்கு முன் சில குறிப்புகள் சொன்னதினுல் நான் அதிகம் சொல்ல அவசியமில்லை என்று எண்ணுகிறேன்.

இங்கே தங்கள் முன் வைத்திருக்கும் வீணை இதுவரையும் நம் நாட்டில் வழங்கிவரும் வீணையைப் போன்றதே யொழிய நூதனமானதல்ல. ஆனுல் இதன் முன் சுருதிகளைப் பற்றிச் சொல்லுகிறவர்கள் கருத்தை அறிந்து கொள்வதற்கு அவர்கள் கணக்கை 32 அங்குலத் தந்திக்கு மாற்றியிருப்பதினுல் 32 அங்குல நீளமுள்ள தந்தி போட்டு அதில் கணக்கில் கண்ட அளவின்படி சுரஸ்தானங்கள் பிரித்திருக்கிறேன். இதைத்தவிர நூதனமானது இதில் ஒன்றுமில்லை. ஆனுல் ஒரு ஸ்தாயியில் 12 சுரஸ்தானங்களைத் தவிர அரைச்சுரத்தை இரண்டாகப் பிரித்து 24 சுருதி ஸ்தானங்கள் வருமிடத்தையும் நாலாகப் பிரித்து 48 சுருதிகள் வரும் ஸ்தானத்தையும் எட்டாகப் பகுத்து 96 சுருதிகள் வரும் சுருதி ஸ்தானத்தையும் குறித்திருக்கிறேன். சிறிய வெள்ளிப் பொட்டுகளினுல் அடையாளம் வைத்திருக்கிறேன். இவைகளில் சொல்லப்படும் ஓசைகள் சரிதானு வென்று பாடிக்காட்டும்பொழுது கவனமாய்க் கேட்டு முடிவு சொல்லும்படி வணக்கமாய்த் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்' என்று சொன்னர்கள்.

III.—தமிழ்மக்கள் வழங்கிவந்த சுரம் சுருதிகள் இன்னவையென்று இசை வல்லோர் ஆராய்வதற்கேற்ற சில குறிப்புகள்.

1. இசைத்தமிழ் (சங்கீத) முறைப்படி குரல் இளியாய் ச-ப, ச-ப வாக, உழை குரலாய் ச-ம, ச-ம வாக ஒரு ஸ்தாயியில் வரும் பன்னிரண்டு சுரங்களையும் வரிசையாய்ப் பாடிக் காட்டுதல்.

2. ஒரு இராசி வட்டத்தில் 24 அலகுகளில் வரும் 24 சுருதிகளையும் பாடிக் காட்டுதல்.

3. தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் தூட்பமான சுரங்களுக்கும் சுருதிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் நாலு அட்டவணைகளிலுள்ள 67 இராகங்களில் விரும்பிய இராகங்களைப் பாடிப் பரிசோதித்தல்.

4. பூர்வம் கிரக சுரம் பிடித்து ஆய்ச்சியர் குரவை பாடும் முறையைப் பாடிக்காட்டுதல்.

5. ஏழு சுரங்களையும் கிரக மாற்றுவதிலுண்டாகும் பூர்வ இராகங்களின் பெயரும் அவற்றிற்குத் தற்காலம் வழங்கும் இராகங்களின் பெயரும்.

6. மூன்று ஸ்தாயிகளின் முறையும், நாலு கிராமங்கள், நாலு ஜாதிகள், பஞ்சம மத்திம சுருதிகள் முறையும் இன்னவையென்று சிலப்பதிகாரத்தினுல் விளக்கிக் காட்டுதல்.

நம்பர்.	ஆராயவேண்டிய விஷயங்கள்.	அபிப்பிராயம்.
1	ச-ப, ச-ப வாக ஒரு ஸ்தாயியில் பன்னிரண்டு சுரங்கள் வருகின்றனவா ?	
2	ச-ம, ச-ம வாக ஒரு ஸ்தாயியில் அதே பன்னிரு சுரங்கள் வருகின்றனவா ?	
3	ஒரு ஸ்தாயியில்வரும் பன்னிரண்டு சுரங்களேப்பாடியது சரியா?	
4	ஒரு ஸ்தாயியில் வரும் 24 சுருதிகளேப் பாடியது சரியா ? ...	
5	முதல் அட்டவணையில் வரும் இராகங்கள் பன்னிரண்டாகும் அரைச் சுரங்களில் வழங்கி வருகின்றனவா?	
6	இரண்டாவது அட்டவணையில் வரும் இராகங்களில் 24 சுருதிகளான $\frac{1}{4}$ சுரங்கள் வழங்கி வருகின்றனவா ?	
7	மூன்றாவது அட்டவணையில் 48 சுருதிகளில் $\frac{1}{8}$ சுரமான சுருதிகள் வழங்கி வருகின்றனவா ?	
8	நாலாவது அட்டவணையில் 96 சுருதிகளான $(\frac{1}{16})$ வீசம் சுரம் வழங்கி வருகின்றனவா ?	
9	ஆய்ச்சியர் குரவையில் ச-ப முறையாய் இணைச் சுரம் பிடித்துக் குரவை பாடினர்களென்பது சரிதானு ?	
10	ஏழு சுரங்களே கிரகம் மாற்றம்பொழுதுண்டாகும் செம்பாலே, படுமலைப் பாலே, செவ்வழிப் பாலே, அரும்பாலே கோடிப்பாலே, விளரிப்பாலே, மேற்செம்பாலே என்னும் ஏழுபாலேயின் சுரங்களுக்கு தற்காலத்தில் வழங்கும் தீரசங்கராபரணம், கரகரப்பிரியா, அனுமத்தோடி, கல்யாணி, மேசகல்யாணி, அரிகாம்போதி, நடபைரவி சுத்ததோடியாகப் பாடிக்காட்டியது சரிதானு ? ...	
11	நாலு பாலேகளின்படி பாடப்பட்ட இராகங்கள் சரிதானு? நாலு கிராமங்கள் மூன்று ஸ்தாயிகள் பஞ்சம சுருதி, மத்திம சுருதிகளென்பது சரிதானு? இதைத்தானு கர்நாடக சங்கீதமென்று வழங்குகிறோம்?	

ழ. ஆபிரகாம் பண்டிதர்.

அதன் பின் பண்டிதர் அவர்களின் குமாரத்திகள் மரகதவல்லி அம்மாளும் கனகவல்லி அம்மாளும் வீணையில் வரும் 12 சுரங்களே வரிசையாக வாசித்தும் பல தடவை வாயினல் சொல்லியும் காட்டினர்கள். அதில் மைலாப்பூர் மகா-ள-ள-ஸ்ரீ பிடில் சுந்தரமையர் என்பவர் பஞ்சமம் கொஞ்சம் குறைகிறதென்று சொன்னர். ஆனல் பஞ்சமம் எப்படி வரவேண்டும் என்று தாங்கள் சொல்லவேண்டுமெனப் பண்டிதர் அவர்கள் பலதடவை கேட்டும் சொல்ல முடியாமல்

மௌனம் சாதித்தார். ஏனென்றால் எடுத்துக்கொண்ட சட்சமத்தை வீணையில் பலதடவை மீட்டும் பொழுது அதற்குப் பஞ்சமம் வீணையிலிருக்கும் பஞ்சமப்படியே தாம் பழகியிருப்பதை அறிந்தும் அதற்குக் குறைத்துச் சொல்லத் தம்மால் முடியாதிருப்பதையறிந்தும் பேசாமலிருந்தார். ஆனாலும் பிள்ளைகளின் உபாத்தியாயரான மகா-ள-ள-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர் அவர்களால் தோடி, கல்யாணி, சங்கராபரணம், மாயாமாளவம் முதலிய இராகத்தின் சுரங்கள் பாடும் படி கேட்டு அப்படியே படிக்கப்பட்டு பிள்ளைகளால் வீணையில் ஒன்றன்பின் ஒன்றாய் வாசிக்கப் பட்டும் வாயினற் சொல்லப்பட்டும் அவைகளில் வரும் சுரங்கள் யாவும் சரியானவையென்றும் தற்காலம் நம் வழக்கத்திலிருப்பவை யென்றும் பஞ்சமம் சரியாயிருக்கிறதென்றும் சபையோர் யாவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

அதன்பின் ஒரு ஸ்தாயியில் வரும் 24 சுருதிகளும் பிள்ளைகளால் வாயினால் பாடியும் வீணையில் வாசித்தும் காட்டப்பட்டன. சபையோர் யாவரும் கவனமாயும் ஆச்சரியமாயும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதன் பின் 24 சுருதி முறைகளில் பாடப்படும் சாவேரியில் ஒரு அலகில் பாடப்படும் ரிஷப தைவதங்களும் ககவகியில் ஐந்தாவது அலகில் பாடப்படும் மத்திமமும் மற்றும் பவப்பிரியா, பியாகடை முதலிய இராகங்களும் பாடிக்காட்டப்பட்டன.

திரிகோணப்பாலியில் சங்கராபரணத்தில் வழங்கிவரும் $4\frac{1}{2}$ ஆகவரும் ரிஷப தைவதங்களும் தோடியில் $3\frac{1}{2}$ அலகாகவரும் காந்தார நிஷாதங்களும் தன்யாசியில் $4\frac{1}{2}$ அலகில் வரும் காந்தார நிஷாதங்களும் பவப்பிரியாவில் $3\frac{1}{2}$ ஆகவரும் காந்தார நிஷாதங்களும் $4\frac{1}{2}$ ஆக வரும் மத்திமமும் மற்றும் இதுபோல் சண்முகப்பிரியா, அம்சத்வனி, மோகனம் முதலிய இராகங்களும் பாடிக்காட்டப்பட்டன. (கருணாமிர்த சாகரம் 872—880ஆம் பக்கம் வரை காண்க.)

காலாவதான சதுரப்பாலியில் $4\frac{3}{4}$ அலகான ரிஷப தைவதங்களும் ஆரபியில் $4\frac{1}{4}$ ஆன ரிஷப தைவதங்களும் செஞ்சுருட்டியில் $4\frac{1}{4}$ ஆன ரிஷப தைவதங்களும் மத்திமாவதியில் $4\frac{3}{4}$ ஆன ரிஷபமும் மற்றும் சில இராகங்களும் படிக்கப்பட்டன.

இதில் தன்யாசி பாடப்படும் பொழுது 'காந்தார நிஷாதங்களைப் பண்டிதர் அவர்களுடைய கருத்திற்கிணங்க பிள்ளைகள் கூட்டிப் படிக்கிறார்கள். இதுவேண்டுமென்று செய்கிறதாகத் தெரிகிறது' என்று மகா-ள-ள-ஸ்ரீ பிரதாபராமசாமிபாகவதர் அவர்கள் ஆக்ஷேபனை செய்தார்கள். அப்பொழுது குறைந்துவரவேண்டுமென்று மகா-ள-ள-ஸ்ரீ பஞ்சாபகேசபாகவதர் அவர்கள் பிடில் வாசித்துக்காட்டினார்கள். பண்டிதர் அவர்கள் இவ்விரண்டு சுரங்களையும் நீக்கி மற்ற சுரங்கள் ஒரு ஸ்தாயியில் பன்னிரண்டாக வரும் சுரங்களில் சொல்லப்படுகின்றனவா அவைகளும் வித்தியாசமாயிருக்கின்றனவா என்று கேட்டார்கள். அதற்கு எவரும் பதில் சொல்லவில்லை. 12 சுரங்களில் பாடும் தங்கள் அனுபோகத்தை மறுத்து வேறு சொல்லக்கூடாதவர்களாய் இந்த இரண்டு சுரமும் 22 சுருதியின்படி வருகின்றனவென்று சொன்னார்கள். அப்போது பண்டிதர் அவர்கள் வாதஞ்செய்யும் மகா-ள-ள-ஸ்ரீ பிரதாபராமசாமி பாகவதர் அவர்களைப் பார்த்துத் 'தாங்கள் பரோடாவில் மகா-ள-ள-ஸ்ரீ திவான் சாகிப் அவர்கள் முன்னிலையில் இன்னும் இரண்டு மாதத்திற்குள் 22 சுருதிகளில் பழகிச்சொல்லுகிறேன் என்று சொன்னீர்களே ஆறு மாதமாயிற்றே. இப்போதாவது கொஞ்சம் பாடிக்காட்டுங்கள்' என்று கேட்டபொழுது பெரும் விழி விழித்து விட்டுப் பேசாமல் ஒரு மூலையில் போய் உட்கார்ந்துகொண்டார். அதன்பின் சபை முன் அவர் பேச்சுக் கேட்கப்படவில்லை. சபையோர் யாவரும் மிக ஆச்சரியப்பட்டார்கள். இன்னும் வேண்டும் கேள்விகளுக்குப் பதில் சொல்லப்பட்டது. குறித்த 11 மணிக்குமேல் $\frac{3}{4}$ மணி நேரம் கூட ஆகிவிட்டதனால் எல்லோரும் சாப்பாட்டிற்குப் போக வேண்டியதாயிற்று.

மறுபடியும் மாலை மூன்றுமணிக்கு சபை கூடிற்று. மூன்று மணியிலிருந்து ஐந்து மணிவரை 24 சுருதிகளையும் அதிநுட்பமான சுருதிகளையும் வீணைமூலமாயும் வாய்ப்பாட்டின் மூலமாயும் ருசுப்படுத்திக் காட்டுவதும் அதை அறிவதினாலுண்டாகும் பிரயோசனத்திற்கு திஷ்டாந்தமாக இதுவரையும் ஒருவரும் கீதமாவது கீர்த்தனமாவது செய்யாத புதிய இராகங்களில் புதிதாகச் செய்த கீர்த்தனங்களைப் பாடிக்காட்டவேண்டியதும் புரோகிராமில் குறித்த விஷயங்கள். இச்சமயம் மகா-ள-ள-ஸ்ரீ திவான் சாகிப் அவர்கள் சற்றுப் பிந்திவருவதாகச் சொல்லிக் கொண்டதினால் அவர்களுக்குப் பதில் கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் Mathematics Professor ஆன மகா-ள-ள-ஸ்ரீ சினிவாச பாட்ராச்சாரியார் M.A., L.T., அவர்கள் திவான் சாகிப் அவர்கள் வரும் வரையில் அக்கிராசனம் வகிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். சபையார் யாவராலும் இது அங்கிகரிக்கப்பட்டது.

இதன் நடுவில் மகா-ள-ள-ஸ்ரீ திவான்சாகிப் V. P. மாதவராவ் அவர்களும் வந்து விட்டார்கள். அப்போது மகா-ள-ள-ஸ்ரீ பண்டிதர் அவர்கள் சபையாரைப்பார்த்துச் சொல்லியவை பின் வருமாறு:—

"அக்கிராசனாதிபதியவர்களே! கனவான்களே!

24 சுருதிகள் ஒருஸ்தாயியில் உண்டென்று சொல்வது தங்களுக்குச் சற்று நூதனமாய்த் தோன்றும். ஒருஸ்தாயியில் 22 சுருதிகளுண்டென்று கேள்விப்பட்டிருக்கும் நமக்கு இது வியப்பாயிருக்கும். எப்படியிருந்தாலும் அனுபோகத்தில் நாம் காண்போமானால் நம்முடைய சந்தேகங்கள் யாவும் நீங்கிவிடும். பூர்வ தமிழ் மக்கள் ஒருஸ்தாயியை 12 ஆகப்பிரித்து அதில் ஏழு சுரத்தில் ஒரு இராகம் அமைத்துப் பாடினார்கள். இது ஆயப்பாலையாம். இந்த ஆயப்பாலை முறைப்படி வரும் ஏழு சுரங்களில் ச-ப முறையான இரண்டு சுரங்களில் ஒவ்வொரு அலகு குறைத்துப் பாடினார்கள். 4, 4, 3, 2, 4, 3, 2 என்று ஒரு அலகு குறைத்துப் பாடும் இடத்தைக் காணும்படியாக கிரகம் மாற்றி 16 ஜாதிப் பண்கள் பிறக்கும் வழி சொன்னார்கள். இதில் மூன்று அலகாய்வரும் சுரங்கள் ஒவ்வொரு அலகு குறைத்துப் பாடவேண்டுமென்பது கருத்து. இரண்டு அலகாயிருக்குமிடத்தில் மூன்று வருமானால் அது ஒரு அலகு குறைந்து வரவேண்டுமென்று அர்த்தமாகும். இதனால் ஒரு ஸ்தாயியில் 22 சுருதியல்ல 24 சுருதிகளே. இது வட்டப்பாலையாம்.

இதன் பின் வட்டப்பாலை முறையில் ஒரு அலகு குறைத்துப் பாடுவது போலவே $\frac{1}{2}$, $\frac{1}{4}$ ஆன சுருதிகள் குறைத்துப் பாடும்பொழுது அவைகள் திரிகோணப்பாலை என்றும் சதுரப்பாலை என்றும் வழங்கிவந்திருக்கிறார்கள் என்று விவரமாக காலையில் சொன்னேன். அதற்கிணங்க என் குமாரத்திகளைக் கொண்டு யாழில் வாசித்தும் வாயினால் பாடியும் காட்டினேன். ஒரு ஸ்தாயியைப் பன்னிரண்டாய்ப் பிரித்த முறைப்படி போதுமான அளவு சில இராகங்கள் பாடிக்காட்டினேன். வட்டப்பாலை முறைப்படியும் சில இராகங்கள் பாடிக்காட்டினேன். திரிகோணப்பாலை முறைப்படியும் சதுரப்பாலை முறைப்படியும் நாட்பமான சுருதிகளில் வழங்கும் தியாகராஜ ஐயர் அவர்கள் கீர்த்தனங்கள் பலவும் பாடிக்காட்டப்பட்டிருக்கின்றன. ஆக்ஷேபனை செய்தவர்களுக்கும் சபையார் யாவருக்கும் போதுமான சமாதானமும் சொல்லப்பட்டது.

இவைகள் யாவையும் கேட்டிருந்த தாங்கள் இதை விசாரிப்பதினால் என்ன பிரயோஜனமென்று அறிய விரும்புவீர்கள். இவ்விஷயம் பூர்வ தமிழ் மக்கள் வழங்கி வந்த

முறை வெகுகாலம் மறைந்து போனதினிமித்தம் நமக்கு இப்போது நூதனமாய்த் தோன்று கிறது. ஒரு பாஷையின் எழுத்துக்களும் அவைகளால் எழுதப்பட்ட நூல்களும் இல்லாமல் போன பின் எழுத்தில்லாத பாஷை எத்தனை காலைக்கு நிற்கும் என்பது போல் கர்நாடக சங்கீதம் வரவரக் குறைந்து தேசிகக்கலப்புண்டாகி முறை தவிர்ந்து மெலிந்து வருகிற தென்று நாம் அறிவோம். எழுத்தில்லாத பாஷையைப்போல் சங்கீதமுமிருக்கிறதென்று வருத்தத்தோடு சொல்லவேண்டியதாயிருக்கிறது. சுருதியின் நிச்சயம் நமக்கு இல்லாதபோது இவ்விஷயம் திருந்துவது கூடாதகாரியமென்று நாம் அறிவோம். நமது முன்னோர்கள் செய்துவைத்த உருப்படிகள் தவறுமல் மனனம் செய்து பேணப்பட்டு வந்ததினிமித்தம் இவ்வளவாவது கர்நாடக சங்கீதமென்று பெயர் நிலைத்திருக்கிறது. இதனுடைய இரகசியம் தெரியுமானால் நான் இவ்வளவு தூரம் வருந்திச் சொல்வதை தாங்கள் அறிந்து கொள்வீர்கள்.

இப்போது சுருதி விஷயமான விசாரணையில் என்ன பிரயோஜன முண்டாகுமென்று தாங்கள் அறிந்துகொள்வதற்காக இது வரையும் கேட்டிராத கீர்த்தனைகளைப் பாடிக்காட்டும்படி செய்யப்போகிறேன். தாங்கள் யாவரும் அறிந்த அளவு கர்நாடக சங்கீதத்தில் நாங்கள் அதிகப் பரிச்சயமுடையவர்களல்ல. இராகம் பல்லவி பாடுவதில் தேர்ந்தவர்களுமல்ல. அதிகமான கீதம் படித்தவர்களுமல்ல. ஆனால் கர்நாடக சங்கீதத்தில் தேர்ந்தவரும் லய சுத்தமாய்ப் பாடக்கூடிய வருமான மகா-ரா-ரா-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர் அவர்களால் சற்றேறக்குறைய 100 கீர்த்தனை படித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதோடு இங்கே யிருக்கும் எனது குமாரத்திகள் மரகதவல்லியம்மாளும் கனகவல்லியம்மாளும் ஒரு இராகத்தில் கீதம் எழுதும் முறையையும் ஜீவசுரம் காணும் முறையையும் அதிலிருந்து கீர்த்தனம் எழுதும் முறையையும் அதற்கு எத்துக் கடை சுரம் எழுதும் முறையையும் என்னால் ஒருவாறு தெரிந்திருக்கிறார்கள். இம்முறையி லிருந்து கீர்த்தனம் எழுதுவதைக் கற்றுக்கொண்ட மரகதவல்லி அம்மாளால் சுமார் 50 கீர்த் தனங்கள் வரையும் செய்யப்பட்டுள்ளன. இவைகள் இப்போது சுரத்துடனும் தாளத்துடனும் அச்சாகிக்கொண்டு வருகின்றன. அவற்றில் முதல் 15 கீர்த்தனைகளடங்கிய சிறு புத்தகம் இப்போது தங்கள் கையில் கொடுத்திருக்கிறேன். இம்முறைப்படி நம் இந்திய கானம் சுரப்படுத்தி எழுதப்படுமானால் மிகப்பிரயோஜனமாயிருக்கும். இதைப்படிக்கிறதற்கு வேண்டிய சுரஞானமும் தாளஞானமும் மாத்திரம் நமக்கு வேண்டியதே யொழிய வேறு எவ்விதமான மறைப்புமில்லாமல் தெளிவாகச் செய்திருக்கிறேன்.

நாம் இதன் முன் கேட்டிராத புதிய இராகங்களில் செய்த கீர்த்தனங்கள் சரிதானா என்று பார்ப்பதற்கு இதன் முன் நாம் கேட்டிருந்த பழைய இராகங்களில் புதிதாகச் சில கீர்த்தனைகள் மாதிரிக்காக எழுதப்பட்டிருக்கின்றன. சங்கீதத்தில் அதிக உருப்படி களும் இராகம், பல்லவிகளும் அதிகமாய்த் தெரியாத இவர்கள் கணக்கினால் புதிய உருப் படிகள் செய்வார்களானால் வாய்ப்பாட்டில் தேர்ந்த வித்வான்கள் செய்வது மிகச்சுலபமாயிருக் கும். புதிய கீர்த்தனங்கள் செய்வதற்கு அனுகூலமாகச் செய்துவரும் இராக விவரமடங்கிய இரண்டாம் புத்தகத்தில் இவைகள் யாவையும் தெளிவாகக்காண்போம். தாங்கள் யாவரும் நூதன மாக கீர்த்தனங்கள் செய்து பாடுவதை நான் கேட்க மிகவும் ஆசைப்படுகிறேன். என் சொந்த பிரயோஜனத்திற்கு மாத்திரம் செய்ய நினைத்திருப்பேனானால் இவைகளை நான் ஒருவருக்கும் சொல்ல நினைக்கமாட்டேன். நீங்களும் உலகத்தவரும் இதன் இரகசியத்தைத் தெரிந்து கர்நாடக சங்கீதத்தை மிகுந்த சாஸ்திர முறையுடைய தென்று ஒப்புக்கொள்ளவும் கர்நாடக சங்கீத முறை எந்நாளும் நிலைத்திருக்கவும் வேண்டுமென்பதே என் முக்கிய நோக்கம்" என்று தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

இதன் பின் திவ்வியகாந்தரி, வச்சிரகாந்தி, ஹிமாங்கி, விவர்த்தனி, ஆனந்தபைரவி, தர்மவதி, மேகரஞ்சனி, காசபூசணி என்ற புதிய கீர்த்தனைகளும், பௌளி, பூபாளம், வசந்தா; மோகனம், அம்சத்வனி, பரசு முதலிய பழமையான இராகங்களில் செய்த புதிய கீர்த்தனங்களும் பாடிக்காட்டப்பட்டன.

கீர்த்தனங்கள் புதியவைகளாயும் இனிமையுடையவைகளாயுமிருந்ததினால் சபையோர் யாவரும் சுவரில் எழுதின சித்திரம்போல் அசைவற்றுக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது மகா-ரா-ரா-ஸ்ரீ பண்டிதர் அவர்கள் சங்கீத வித்வான்களைப் பார்த்துப் பின்வருமாறு பேசினார்கள்.

"தாங்கள் புதிய கீர்த்தனங்களடங்கிய புத்தகத்தை மிகக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்தீர்கள். கீர்த்தனைகளில் வரும் சுரங்களும், நுட்ப சுரங்களும், சரிதானு என்று பாடக் கேட்டீர்கள். பிரமிப்பினாலும் ஆச்சரியத்தினாலும் தாங்கள் ஒருவராவது குறை சொல்ல வாய் திறக்கவில்லை. இம்மாதிரியே தாங்களும் இதற்கு மேலான விதமாய்க் கீர்த்தனைகளைச்செய்யலாம். அப்படிச் செய்வதற்கும் அதில் நுட்பசுருதிகளில் எவை ஜீவசுரமாக வருகின்றனவென்று கவனிப்பதற்கு முரிய சில விதிவகைகளை இரண்டாம் புத்தகமாக எழுதிவருகிறேன். சுரங்களையும் சுருதிகளையும் இன்னதென்று நிர்மானிக்காமல் நாம் ஒன்றும் செய்யமுடியாது. சுருதிகள் நாம்பாடும் கீர்த்தனங்களில் பனிரண்டில் ஒன்றோடு சேர்ந்து வரும் பொழுது என்ன என்ன சுரங்களோடு சேர்ந்து வருகின்றனவென்று நிச்சயம் தெரியாமல் அவைகளையும் சேர்த்துச் சுரமாகச் சொல்லிக் கொண்டு வருகிறதை மற்றவர் கண்டு ஏளனம் செய்கிறார்கள். பூர்வ தமிழ் நாட்டில் பெரியவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்ட முறை மிகவும் உத்தமமானது. இதைப்பார்க்கிலும் உத்தமமான முறைக்கு உலகத்தவர் எவரும் வந்து சேரவில்லை. நுட்பமான சுருதிகள் இன்னின்ன இடங்களில் வருகின்றனவென்று தாங்கள் அறிந்துகொள்ளும்பொழுது மிகவும் சந்தோஷப்படுவீர்கள்" என்று சொன்னார்கள்.

சாயங்காலம் ஐந்து மணிமுதல் ஆறுமணிவரை இளைப்பாற்றிக் கொள்ளும் நேரமாயிருந்தது.

ஆறுமணி முதல் எட்டுமணி வரையும் வந்திருந்த பலர் பல இராகங்களும் கீர்த்தனங்களும் பாடினார்கள். திருநெல்வேலி இந்து காலேஜ் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாலிங்க ஐயர் அவர்கள் தேவார திருவாசகங்களைப் பண்முறைப்படிச் சொல்லவேண்டுமென்று மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் C. I. E. அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் பாடிய பண்கள் மிக இனிமையாகவும் பக்திரசமாயும் இருந்ததினால் எல்லாரும் அசைவற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இராப்போஜனத்திற்கு நேரமானதினால் புஷ்ப தாம்பூலங்கள் வழங்கப்பட்டன.

மறுநாள் 20-ஆம் தேதி $8\frac{1}{2}$ மணிமுதல் 9 மணி வரையும் வந்திருந்த சபையோர்களின் படம் எடுக்கப்பட்டது.

9 மணி முதல் $11\frac{1}{2}$ மணி வரையும் பஞ்சாயத்தார் தங்கள் முடிவான அபிப்பிராயத்தை பிரசிடெண்ட் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய நேரமாயிருந்தது. அப்போது மகா-ரா-ரா-ஸ்ரீ பண்டிதர் அவர்கள் பஞ்சாயத்தாரையும் சபையோரையும் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்கள்.

"சபையின் அக்கிராசனாதிபதியவர்களே! பஞ்சாயத்து சபையோரே! மற்றும் கனவான்களே!

நாம் பாடிக்கொண்டிருக்கும் கர்நாடக சங்கீதத்தின் சுரம் சுருதிகளைப் பற்றிப் பலர் பலவிதமாக எழுதியிருப்பதனலும் அதைப்பற்றி முடிவான ஒரு அபிப்பிராயம் நமக்கு இதுவரை கிடைக்காததனலும் பூர்வ தமிழ் நூல் முறைப்படி உத்தமமான ஒரு முறையை இப்போது சொல்லவேண்டியதாயிற்று. இவைகளைப்பற்றித் தெளிவாய் அறிந்து கொள்வதற்குப் போதுமான விதம் தங்களுக்கு சுருக்கமாக மூன்று பஞ்சாயத்தாருக்கும் நூல் முகமாகவும் அனுபோக மூல மாகவும் எடுத்துக் காட்டினேன். அது தவிர தனித்தனி கேட்டவர்களுக்கும் விளக்கிக்காட்டி-னேன். பூர்வ தமிழ் மக்கள் வழங்கி வந்த சுருதிகளும் துட்ப சுருதிகளும் மற்றும் முறைகளும் அணுப்பிரமாணமும் தவறுமல் தற்காலத்தில் வழக்கத்திலிருக்கிறவை யென்றும் பூர்வமாய் வழங்கிவந்த முறைகளை விளக்கிச்சொல்ல நூல்களில்லாமையால் பலசங்கீதகங்கள் வந்தன வென்றும் எடுத்துச்சொன்னேன். பின்வரும் பாடல்களில் வரும் சுரங்கள் இன்னவையென்று தாங்கள் கவனிப்பீர்களானல் ஆயப்பாலியின் பன்னிரு சுரங்களே அணுப்பிரமாணமும் தவறுமல் உப யோகப்பட்டு வந்தனவென்றும் அம்முறையே இன்றளவும் உபயோகப்பட்டு வருகிறதென்றும் தாங்கள் தெளிவாய் அறிந்துகொள்வீர்கள்" என்றும் சொல்லி ஒருவர் மாற்றி ஒருவர் கிரகசுரம் பிடித்து ஆய்ச்சியர் குரவை பாடும் முறைமையில் 'கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன் etc.,' 'பாம்பு கயிறுக் கடல் கடைந்த மாயவன் etc.,' என்னும் இரண்டு அடிகளை யும் அதன்பின் ரிக்கு வேதத்தில் இரண்டு அடிகளையும் வீணையுடன் பிள்ளைகளைப் பாடும் படிச் செய்தார்கள். யாவரும் மிகுந்த சந்தோஷத்துடன் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந் தார்கள். இனிமையான கீதங்களில் வரும் சுரங்கள் ஆயப்பாலியின் பன்னிரு சுரங்களில் வராதவையென்று ஒருவரும் ஆக்ஷேபனை சொல்லவில்லை.

அப்போது பண்டிதர் அவர்கள் "ரிக்கு வேதத்தில் வழங்கிவந்த சுரங்களை தற்காலத் திலும் பாடிக் கொண்டிருக்கிறோம். அவைகள் வெகுகாலமாய் காதினல் கேட்டு காளதுவரையும் பேணப்பட்டு நிலைத்திருக்கிறது. அப்படியே ஆய்ச்சியர் குரவையும் ரிஷப தைவத கிராமங்களில் ஆரம்பித்து ஒருவர் மாற்றி ஒருவர் குரவை பாடினர்களென்றும் இவை ச-ப முறைப்படியான பன்னிரண்டு சுரங்களில் சொல்லப்படுகின்றனவென்றும் பூர்வ நூல்கள் சொல்வதோடு தற்காலம் அனுபவத்தாலும் காண்கிறோம். இதற்கு மறுதலித்து ஒரு ஸ்தாயியில் பன்னிரண்டு சுரங் களைத் தவிர வேறுவிதமாகச் சுரங்கள் வருகின்றனவென்று ஒருவரும் சொல்லமாட்டோம். தாங்கள் இப்போது தங்கள் அபிப்பிராயத்தை பிரசிடெண்ட் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி எழுத்தின்மூலமாக கொடுக்கவேண்டிய சமயம். இதில் அவரவர்களுக்கு கொடுக்கப்பட்ட விஷ யங்களைச்சந்தேகமறத் தெரிந்து உள்ளது உள்ளபடியே முடிவான அபிப்பிராயங்கள் சொல்வீர்க ளென்று நம்புகிறேன். நம்முடைய அபிப்பிராயத்தை நமது பின்னடியாரும் சங்கீதத்தை விசா ரிக்கும் உலகத்தவரும் கவனிப்பார்களானதினல் தங்கள் அபிப்பிராயத்திற்கு வந்த முடிவைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றார்கள்.

அதன் பின் தமிழ்ப் புலவர் பஞ்சாயத்தின் சேர்மென் மகா-ரா-ரா-ஸ்ரீ சுவாமி விருதை சிவ ஞானயோகிகள் சங்கீதத்தைப் பற்றிச் சுருக்கமாக சில அருமையான வசனங்கள் சொல்லி தங்கள் அபிப்பிராயத்தையும் வாசித்து பிரசிடெண்ட் அவர்களுக்கு ரிப்போர்ட் கொடுத்தார்கள். அவை அடியில் வருமாறு:—

தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கம், ஏழாவது கான்பரென்ஸுக்கு அக்கிராசனாதிபதியாயிருந்த பரோடா திவான் மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் C. I. E. அவர்களுக்கு தமிழ் நூல் வல்லோர் பஞ்சாயத்தின் பிரசிடெண்ட் எழுதிக்கொண்ட ரிப்போர்ட்.

தமிழ்ப் புலவர் பஞ்சாயத்தில் மாட்சி பொருந்திய ராஜ ராஜேசுவர சேதுபதி மகாராஜா அவர்கள் அவைத் தலைவராயும்

சுவாமி விருதை சிவஞான யோகிகள் அமைச்சராயும், பிரம்மஸ்ரீ R. இராகவையங்கார் முதல் 14 பெயர் உறுப்பினராயுமிருந்தனர். அமைச்சராகிய ஏன்னைடு 15 பெயருக்குச் சிலப் பதிகாரம், தண்டியலங்காரம், தொல்காப்பியம், பரிபாடல் என்ற நூல்களில் தமிழிசைபற்றிக் கூறப்பட்டிருப்பவைகளைப் பார்வையிட்டுச் சொல்லும்படி 48 கேள்விகளடங்கிய அச்சிட்ட கேள்வித்தாள்கள் கொடுக்கப்பட்டன. அக்கேள்வித்தாள்கள் இவ்வுறுப்பினர்க்கும் பல வேறு புலவர்க்கும் ஒரு வார முன்னரே அனுப்பப்பட்டுள்ளதாயும் தெரிகிறேன். அக்கேள்விகளில் இக் கேள்விப்பொருள் இன்ன நூல் இப்பக்கத்தில் இவ்விவ் வரிகளிற் கூறப்பட்டுள்ளனவென்னத் தெளிவான குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மறுநாள் கூடும் அவையில் விடை யெழுதித் தரவேண்டுமென்று உறுப்பினரறிவிக்கப்பட்டனர். கேள்விகள் கேட்கப்பட்ட 4 நூல்களும் வேண்டிய பஞ்சாயத்துறுப்பினர்க்குக் கொடுக்கப்பட்டன. பண்டிதர் அவர்கள் 12 சுரங்களையும் 24 சுருதிகளையும் நான்கு பாலைகளையும் நன்கு விளக்கும் சக்கரங்களைக் காட்டி விளங்கப் பிரசங்கித்தார்கள்.

தமிழ் நூல் வல்லோர் பஞ்சாயத்து.

அக்கிராசனாதிபதி மாட்சிமை பொருந்திய ராஜ ராஜேசுவர சேதுபதி மகாராஜா அவர்கள்.

1. அமைச்சர் சுவாமி விருதை சிவஞானயோகிகள்.

பஞ்சாயத்துறுப்பினர்.

2. மகா-ரா-ரா-ஸ்ரீ R. இராகவையங்காரவர்கள், சேது சமஸ்தானம், தமிழ் வித்வான்.
3. ,, S. S. பாரதிகள் M.A., B.L. தூத்துக்குடி.
4. ,, L. உலகநாத பிள்ளையவர்கள், தஞ்சாவூர்.
5. ,, அரிகரபாரதிகள், அம்பாசமுத்திரம்.
6. ,, T. S. முருகேசம் பிள்ளையவர்கள், எட்டையாபுரம்.
7. ,, வேங்கடசாமி நாட்டாரவர்கள், நடுக்காவேரி.
8. ,, டாக்டர் சண்முகம் பிள்ளையவர்கள், மாயூரம்.
9. ,, சேதுராம பாரதியார் அவர்கள், தஞ்சாவூர்.
10. ,, சுந்தரேசுர சாஸ்திரிகள், இராமநாதபுரம்.
11. ,, கந்தசாமிப் பிள்ளையவர்கள், கோயம்புத்தூர்.
12. ,, S. தம்பியப்ப ஐயர் அவர்கள், ஈரோடு.
13. ,, தேவப்பிரசாதம் பிள்ளை அவர்கள், சென்னை.
14. ,, முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள், சிகாழி.
15. ,, சிவஞானம் பிள்ளையவர்கள், தஞ்சாவூர்.

விடைதராதவர்கள்.

2, 3, 7, 10, 12-வது பஞ்சாயத்துப்பினர் 20—8—16இல் அவைக்கு வரவுமில்லை விடை தரவு மில்லை.

1916ஞெ ஆகஸ்டுமீ 20உ

இப்பஞ்சாயத்தின் அவைத்தலைவர் சேதுபதி மகாராஜா அவர்கள் இன்று வரஇல்லை. ஆதலால் அமைச்சனுயிருந்த என்னைத் தலைமைபூண்டு நிகழ்த்த வேண்டியபடி நான் கடத்தினேன்.

கேள்வி கேட்கப்பட்ட 15 பெயரில் 5 பெயர் வரவில்லை. அவைக்கு விடை யெழுதித் தந்தவர்களுள்

48 குறிப்புகளும் சரியென்று ஒப்புக்கொண்டவர்கள் 8 பேர்.

1. சுவாமி விருதை சிவஞானயோகி, தமிழ்ப் பிரம சூத்திராசிரியர், கோவிற்பட்டி.

2. L. உலகநாதபிள்ளை அவர்கள் 'சோழன் கரிகாற் பெருவளத்தானைப்பற்றிய ஆராய்ச்சி நூல்' ஆக்கியோன், கலியாண சுந்தரம் ஹைஸ்கூல், தமிழ்த் தலைமைப் பண்டிதர் தஞ்சாவூர். புகழ்ந்து சாத்துகவி கொடுத்திருக்கிறார்கள்.

3. T. A. முருகேசம்பிள்ளை அவர்கள், எட்டயாபுரம் சமஸ்தான வித்வான் சுப்பராம தீக்ஷிதரெழுதிய 'சங்கீத சம்பிரதாயப் பிரதரிசினி' என்ற பெரு நூலைப் பரிசோதித்துச் சாற்றுகவி தந்தவர், தமிழ், தெலுங்கு பண்டிதர், எட்டயாபுரம். 28 அடியுள்ள அகவலொன்றும் ஒப்பி எழுதி விடை யோடு தந்திருக்கிறார்.

4. டாக்டர் சண்முகம்பிள்ளையவர்கள், முத்தமிழ்க் கவியரசு மாயூரம், சில கவிகளும் புகழ்ந்து கூறியிருக்கிறார்.

5. A. சேதுராமபாரதியார் அவர்கள் தலைமைத் தமிழ்ப் பண்டிதர், S. P. G. High School, தஞ்சாவூர். புகழ்ந்து பாடிச் கவி கொடுத்திருக்கிறார்.

6. M. தேவப்பிரசாதம்பிள்ளை அவர்கள், தமிழ்ப்பண்டிதர் சென்னை. நூல்களிற் கூறப்பட்டுள்ளன ஐயமில்லை என்று வெண்பா ஒன்றும் சாத்துக்கவியும் எழுதியிருக்கிறார்.

7. ப. அ. முத்துத் தாண்டவராயபிள்ளை அவர்கள் தமிழ்ப்போதகாசிரியர், லூத்தரன் ஹைஸ்கூல், சிகாழி. புகழ்ந்து கவி கூறியிருக்கிறார்.

8. C. சிவஞானம் பிள்ளையவர்கள் தமிழ்ப்பண்டிதர், ஹெட்கிளர்க் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் ஆபீசு, தஞ்சாவூர்.

44 குறிப்புகள் சரியென்று ஒப்புக்கொண்டவர்—1.

9. A. கந்தசாமிப்பிள்ளையவர்கள் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் காலேஜ், கோயம்புத்தூர்.

34 குறிப்புகள் சரியென்று ஒப்புக்கொண்டவர்—1.

10. அரிகரமையர் அவர்கள் அம்பைத்தலப்புராண முதலிய நூல்களுக்காசிரியர் தமிழ்ப் பண்டிதர் ஹைஸ்கூல், அம்பாசமுத்திரம்.

இவர்கள் குறிக்கப்பட்ட நூல்களில் அப்பொருள்கள் கூறியிருக்கின்றனவா என்று பார்த்துச்சொல்லும் அறிவும் புலமையும் வன்மையுமுடையவர்கள் என்பதில் ஐயஞ் சற்றுமின்று. இவர்களுன்கு தெரிந்தே விடையளித்திருக்கின்றனர். அவற்றை இத்துடன் கொடுத்திருக்கிறேன்.

19—8—15ல் தமிழ்ப் புலவர் பஞ்சாயத்துக்குத் தலைமை வகித்த சேதுபதி மகாராஜா அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய குறிப்பையும் இத்துடன் கொடுத்திருக்கிறேன்.

"I am asked to do a work in which myself and most of the members of the Panchayet are absolutely ignorant. Further, to report on this which has provoked so much controversy and difference of opinion before to-morrow noon is absolutely impossible. Should you desire that we *should* consider this, then we require at least 3 months' time to do so. This Panchayet cannot do this work without the help of the musicians."

(Sd). RAJA.

"நானும் இக் கமிட்டியிலுள்ள மிச்சமான மெம்பர்களும் இவ்விஷயத்தை அறியாதவர்களாயிருக்கிறோம். விவகாரமும், அபிப்பிராய பேதங்களும் இவ்விஷயத்தைப் பற்றி விசேஷமாயிருக்கின்றமையால் நாளை மத்தியானத்திற்குள் முடிவான அபிப்பிராயத்திற்கு வரமுடியாது. அவசியம் செய்து தான் ஆகவேண்டுமென்று விரும்பினால், மூன்றுமாத காலமாவது வேண்டும். சங்கீத வித்வான்களுதவியில்லாமல் பஞ்சாயத்தார்களால் இவ்வேலையைச் செய்யமுடியாது.

(Sd.) RAJA.

பஞ்சாயத்தார் விடைகளைக் கான்பரென்சு சேர்மென் அவர்களுக்குக் கொடுக்கும் போது கூறிய முடிவுரையின் சுருக்கமுமித்துடன் கொடுத்திருக்கிறேன்.

வி. சிவஞானயோகி.

1916வது 20ஆ ஆகஸ்டுமீ கூடிய அவைக்குப் பஞ்சாயத்துத் தலைவர் மாட்சி சேதுபதி மன்னவரவர்கள் வாராமையால் அத்தலைமையை ஏற்று நடத்தும்படி அமைச்சர் வேண்டப்பட்டுத் தலைமைபூண்டு முடிவுரை கூறி விடைகளையும் கான்பரென்சுத் தலைவர்களிடங்கொடுத்தனர்.

சுவாமி விருதை சிவஞானயோகிகளின் முடிவுரை.

இத்தத் தமிழ்நாடு மிகப் பழமையானது. மாணிக்கவாசக சுவாமிகள் "பாண்டி நாடே பழம்பதி" என்றிக்கருத்தை விளக்கியுளார். இப்பொழுது இந்துமாக்கடலுண் மூழ்கியிருக்கும் நிலமாகிய தமிழகமே உலகில் மக்கள் முதலிற்றோன்றிய விடமென்று ஆங்கில நூலாசிரியராகிய புரோபசர் ஆக்கல் (Prof. Haekel) உம் மக்கள் நூல் (Science of man) உம் இன்னும் பல ஆங்கில ஆசிரியருங்கூறுகின்றனர். முற்காலத்தில் குமரிமுதல் ஆப்பிரிக்காவின் கீழ்க்கரை வரை நிலப்பரப்பாயிருந்தது. இந்துக்கடல் இருந்ததில்லை. அது நிலமாயிருந்தது என்று பல ஆங்கிலாசிரியர் கூறியிருக்கின்றனர். இறையனர் அகப்பொருள் உரையில் நக்கீரர் கூறியதற்கிணங்க குமரிக்கும் பஃறுளியாற்றுக்கும் இடையில் 700 காதம் (7000 மைல்) நிலப்பரப்புப் பரந்து நீண்டு கிடந்தது; அது தமிழகமெனப்படும். அதன் தென்பகுதியிலிருந்த தென்மதுரையில் முதற் சங்கமிருந்தது. அது இற்றைக்குச் சற்றேறக்குறைய 12000 ஆண்டுகளின் முன்னுவக்கி 4440 ஆண்டு அதில் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும் குன்றமெறிந்த குமாவேளும், அகத்தியனர், வன்மீகனர், மார்க்கண்டனர், கௌதமனர் முதலிய முனிவரும் புலவராய் வீற்றிருந்தனர். அவர் தமிழியற்றிய நூல்கள் இருக்கு யசுர் சாமம் போன்ற தலையாய வேதங்களென்றும் சுச்சி

ஞர்க்கினியர் தொல்காப்பியவுரையிற் கூறியிருக்கின்றனர். அகத்திய முனிவர் 12000 சூத்திரங்களுள்ள அகத்தியம் என்ற ஒரு நூலியற்றினர். அதில் இயலிசை நாடகம் என்னும் முத்தமிழின் இயல்புகளும் விளக்கப்பட்டன. அச்சங்கத்தில் கடவுள் வணக்கற்குப் பண்களோடுகூடிய எண்ணிறந்த பரிபாடல்களும் தோன்றின. அவைகளும் தலையாய வேதத்துட் சார்ந்தனவே. அவை அக்கால முதல் பண்ணோடு ஆலயங்களிற் பாடப்பட்டுவந்தன. அவற்றுட் சில வின்றுமிருக்கின்றன. முதற் சங்கமிருந்த தென்மதுரையும் இடைச்சங்கமிருந்த கவாடபுரமும் கடல் கொள்ளப்பட்டொழியவே அவற்றுக்கு பதிலாக தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலியன தோன்றி இதுகாறும் ஆலயவழி பாட்டில் பண்ணோடுதப்பாட்டு வருகின்றன. சிவாலயப் பிரமோற்சவகாலத்தில் திக்குப்பலியில் தமிழ்ப்பண்களே யோத ஆகமம் விதிப்பதால் அவ்வண்ணமே நடந்து வருகிறது. நாரத பரிவிராஜகோபநிஷத்தில், "சர்வாகமமயசிவ:" எல்லா ஆகமவடிவன் சிவன் என்றும் சிவாகமத்திற் கூறப்படுவதே ஞானம் என்றும் புகழப்படுகிற சிவாகமங்களே தமிழ் மறைகளைப் பண்ணோடு பூஜாகாலங்களில் ஓத விதிப்பதால் தமிழிசைகள் 12000 ஆண்டுகளுக்கு நெடுநாள் முன்னர்த் துவக்கி ஓதப்பெற்று வரும் பழமையுடையன வென்பது தெளிவாம்.

தலைச்சங்கத்தில் அகத்தியந்தவிரப் பெருங்குருகு பெருநாரை முதலிய இசை நூல்களும் இடை கடைச்சங்கங்களில் இசை நுணுக்கம் சிற்றிசை பேரிசை முதலிய நூல்களும் இருந்து இறந்தன. இப்பொழுது இசைமரபு என்ற நூலொன்றிருக்கின்றது. ஆனால் முழுமையுமில்லை. கிடைத்த பாட்டுகளில் இருபத்தினன்கு கேள்விகள் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதை நானே பார்த்திருக்கிறேன். திருவன் பண்டிதரவர்கள் இசையைப்பற்றி ஆராய்ந்த நூல் சிலப்பதிகாரம்; அது இசையைக் கூறவந்த நூலல்ல, ஆனால் அந்நூலில் அரங்கேற்றுகாதை வேனிற்காதை ஆய்ச்சியர்குரவை என்ற பகுதிகளில் ஆங்காங்கு இசைபற்றிக் கூறப்படும் உரையிற் கண்டவற்றை ஒருங்குதிரட்டி நோக்கித் தமிழிசை நூல் உண்மைகளையறிந்து கருணமிர்த சாகரம் என்ற நூலை யியற்றியிருக்கின்றனர். இப்பஞ்சாயத்திற் கேட்கப்பட்ட 48 கேள்விகளின் கருத்தெல்லாம் சுருக்கி நோக்கில் 7 இசைகளும் ஆய முதலிய 4 பாலைகளும் அவற்றிற் பயன்படும் கேள்விகளும் (சுருதிகளும்) சிலப்பதிகாரம் முதலிய 4 நூல்களிற் கூறப்படுகின்றனவா என்பதே.

இவண், "குரன் முதலேழும்" என்றதால் ஏழு இசை (சுரங்கள்) கூறப்பட்டன. இடப முதல் 12 ராசி வீட்டில் ச-ப வுக்கு ஒவ்வொரு வீடும் ரி, க, ம, த, நி களுக்கு இரண்டிரண்டு வீடுகளும் பகுத்தது ஆயப்பாலை. அது "ஏத்து மிடப மலவனுடன் சிங்-கோற்றனுக் கும்பமொடு மீனமிவை-பார்த்துச்-குரன்முதற் ரூ மிறுவரைக் கிடந்த-நிரலேழுஞ் செம்பாலை நேர்." என்பது முதலியவற்றால் விளங்குகின்றது. ஆதலால் ஆயப்பாலைக்கு 12 இசை.

12 வீட்டிலுள்ள சுரங்களை (ச-ப முறையாய்) "பன்னிரு காற்றிரிக்கப் பன்னிரு பாலையும் பிறக்கும்" என்றலையால் வட்டப்பாலையில் 12 ராசி வீட்டிலுள்ள திரித்தற்கேதுவான வீடுதோறும் 2 அலகு ஆக 24 அலகுகள் (கேள்விகள்) கிடைக்கின்றன.

இவ்வட்டபாலையில் உள்ள 24 கேள்விகளில் 4 யாழ்களும் 4 வகைச் சாதிப் பண்களும் பாடும்பொழுது 2 கேள்விகள் குறைத்து 22 கேள்விகள் பாடவேண்டும். அங்ஙனம் பாடுதல் கலைமலை வமைதியேயன்றி வழுவன்றென்று தண்டியலங்காரம் கலைமலைவமைதி உதாரணத்தில்,

"கூடம் விரவிக் குறைநிலத்தா னத்தியன்ற
பாட லமுதம் பருகினுள்" என்று கூறி குறைநிலத்தானத் தியன்றதனைப் பாடலமுதம் என்றது கலம்மலவாயினும் புனைந்துரையாதலிற் பொருந்துவதாயிற்று என்னுரையில் விளக்கப்பட்டுள்ளது. 7 சுரங்களில் 2 சுருதி குறைத்தமைக்கும் பொழுது,

"குரலுத்த நான்கு கிளைமுன் றிரண்டாங்
குறையா வுழையிளி நான்கு—விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னர்
களரிசேர் கண்ணுற் றவர்" என்ற வெண்பாவால், குரல்முதல் தாரம் வரை முறையே 4, 4, 3, 2, 4, 3, 2 என்று கைக்கிளை விளரிகளில் ஒவ்வொரு கேள்வி குறைக்கில் குரலே இளியாகிய மருதயாழ் ஆகிறது. இதினின்று,

"குரலிளியிற் பாகத்தை வாங்கியோ ரொன்று
வரையாது தாரத் துழைக்கும்—விரைவின்றி
யெத்தும் விளரி கிளைக்கீக்க வேந்திழையாய்
துத்தங் குரலாகுஞ் சொல்." என்று வலமுறை யிடமுறையாக 12 பாலைகளும் 4 யாழ்களும் 4 சாதிகளும் பிறக்கின்றன.

இனி "நால்வகைச் சாதிப் பெரும்பண்கள் விளைநிலம் பெற வலிவு மெலிவு சமமென்னும் மூவகையியக்கு முறைமையிலே ஆராய்ந்து பாடிப் பின்னர் மாத்திரை குறைத்தற்பண்ணைப்பாடு மேல்வைக்கண் அப்பண்ணை இனிதாகப்பாடி" என்ற உரையால், அதினும் நுட்பமாகிய 48 பகுதிகளாகிய திரிகோணப்பாலை, அதினும் நுட்பமாகிய 96 பகுதிகளாகிய சதுரப் பாலைப் பண்களும் குறிக்கப்படுகின்றன.

"ஆயஞ் சதுரந் திரிகோணம் வட்டமெனப்
பாய நான்கும் பாலை யாகும்" என்னப்படும் 4 பாலைகளும் சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டனவே.

ஒரு நிலைக்குக் கேள்விகள் 24 என்று தெளிவாய்க் கூறும் இசைமரபு

"ஆயத்துக் கீரா றுறுநான்கு வட்டத்துக்
கேயுங்கோ ணத்துக் கிரட்டிப்புத்—தூயவிசை
நுண்மைக் கதிலிரட்டி நோனலகு மோர்நிலைக்கிங்
கெண்மூன்று கேள்விகொண் டேண்." என்னும் வெண்பாவால் நன்கு விளங்குகின்றது. (இசைநுண்மை–நுண்பாலை–சதுரப்பாலை.)

மேற்கூறிப்போந்தவற்றுள் ஒரு ஸ்தாயியில் (கிளையில்) ஆயப்பாலைக்குரிய 12 சுரங்கள் ச-ப முறையாயும் ச-ம முறையாயும் கிடைக்கின்றனவென்றும் வட்டப்பாலையில் ஒரு ஸ்தாயி 24 சுருதிகளாகப் பிரிக்கப்பட்டு அதில் 2 சுருதி குறைத்து 16 சாதிப் பண்கள் பாடினார்கள் என்றும் அவற்றினும் குறைந்த நுட்பமான சுருதிகளோடு திரிகோணப்பாலை சதுரப்பாலைகள் பாடினார்களென்றும் பண்டிதரவர்கள் குறித்த 48 வினாக்களாலும் தெளிவாய் விளங்குகின்றது.

வி. சிவஞான யோகி.

அதன் பின் கணித பஞ்சாயத்தின் சேர்மென் மகா-ரா-ரா-ஸ்ரீ T. K. வேம்பு ஐயர் அவர்கள் கணிதத்தைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லி பின் வரும் ரிப்போர்ட்டைக் கொடுத்தார்கள்.

தஞ்சை சங்கீத வித்தியா மகாஜன சங்கம்.

1916 வது ஆகஸ்டுமூ 19ம்-20ம்தேதளாகிய சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் நடந்தேறிய ஏழாவது கான்பரென்சின் நடவடிக்கைகள்.

இரண்டாவது பஞ்சாயத்து.

சுருதிகளின் கணக்குகளைப் பரிசோதிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சப் கமிட்டியின் ரிப்போர்ட்டு

அடியில் கண்ட கனவான்கள் இதற்கு மெம்பர்கள்.

1. மகா-ரா-ரா-ஸ்ரீ K. சீனிவாசபாட்ராச்சாரியார் அவர்கள் M.A., L.T., கும்பகோணம் காலேஜ் Mathematics Professor (*Chairman*).
2. ,, T. K. வேம்பு ஐயர் அவர்கள் B.A., L.T., Senior Mathematics Assistant, St. Peter's High School தஞ்சாவூர் (*Secretary*).
3. ,, R. நாராயணசாமி ஐயரவர்கள் B.A., L.T., Science Assistant, Town High School, கும்பகோணம்.
4. ,, Rev. J. B. ஞான ஒளிவு B.A., L.T., Priest S.P.G. நாகப்பட்டணம்.
5. ,, R. சுந்தரம் ஐயரவர்கள் B.A., L.T., Science Assistant, St. Peter's High School, தஞ்சாவூர்.
6. ,, T. K. நாகராஜ ராவ் அவர்கள் B.A., Mathematics Asst. St. Peter's High School, தஞ்சாவூர்.
7. ,, S. சுப்பிரமணிய சாஸ்திரிகள், சமஸ்கிருத பண்டிதர், K. H. School தஞ்சாவூர்.

Mr. பண்டிதரவர்களின் சுருதிக்கணக்குகளும் அளவுகளும் பின் சொல்லப்போகிற மூன்று விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு செய்யப்பட்டிருப்பதாக நாங்கள் காண்கிறோம்.

(1) ஒரு ஸ்தாயியில் சுரங்கள் எப்படி அமைக்கப் பட்டிருக்கின்றனவென்றால், எந்த சுரத்திலாவது ஒரு ராகத்தை ஆரம்பித்து யாதாமொரு ஒழுங்குடன் ஆரோகணம் செய்யும் பட்சத்தில் இராகம் எப்போதும் மாறாமல் நன்றாக இருக்கிறது.

(2) ஒரு ஸ்தாயியின் சுரங்கள் 12, அல்லது 24, அல்லது 48, அல்லது 96 தான்.

(3) தற்காலம் கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் சுரங்களுக்கும் மேற்சொன்ன சுரங்களுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை.

Mr. சுப்பிரமணியசாஸ்திரிகள் துவாவிம்சதி சுருதி கொள்கைக்காரர். அவர் முன் சொன்ன மூன்று விஷயங்களும் முற்றிலும் தப்பென்று அபிப்பிராயப்பட்டார்.

ஆனல் மற்ற ஆறுமெம்பர்களும் முன்சொன்ன மூன்று விஷயங்களையும் சரியென்று ஆதாரமாக வைத்துக்கொண்டு, பண்டிதரவர்கள் ஒரு ஸ்தாயியிலுள்ள சுரங்களின் வைபிரேஷன் Geometrical Progression படி மேலேறிச் செல்லவேண்டியதென்றும், அவைகளுக்குள்ள காமன் ரேஷியோவானது $\sqrt[12]{2}$ என்று 12 சுரங்களுக்கும், $\sqrt[24]{2}$ என்று 24 சுரங்களுக்கும், $\sqrt[48]{}$ என்று 48 சுருதிகளுக்கும் $\sqrt[96]{2}$ என்று 96 சுருதிகளுக்குமாய் இருக்கவேண்டியதென்றும் சொல்வதானது முற்றிலும் சரியென்று ஒப்புக் கொண்டார்கள்.

தந்தியின் நீளம் அதிகமாக ஆக அதின் வைபிரேஷன்கள் ஒழுங்காய் பங்கு ஈட்டுக்கு ஏற்கக் குறைகிறதென்கிற விஷயம் முற்றிலும் சரி. வைபிரேஷன் கணக்குகளும், தந்தியின் அளவுகளும், சுரஸ்தானங்கள் ஏற்படும் இடங்களும், மற்றக்கணக்குகளும் தசாம்ச பின்னங்களும் ஏழு இடம் வரை முற்றிலும் சரியாயிருக்கிறதாகக் காண்கிறோம்.

மேலும், கொடுக்கப்பட்ட வீணையிலுள்ள தந்தியின் அளவுகளும், அவைகளுக்குரிய சுரஸ்தானங்களும் Mr. பண்டிதரவர்கள் புஸ்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அளவுக்கு முற்றிலும் ஒத்திருக்கின்றன. கொண்டுவந்திருக்கப்பட்ட வீணையில் வாசிக்கப்படப்போகிற ராகங்களும் கீர்த்தனங்களும் சரிதானே என்று கேட்டுச் சொல்வது சங்கீதந் தெரிந்த வித்வான்களுடைய கடமை.

Mr. பண்டிதரவர்களுடைய அபிப்பிராயத்தின்படி மத்திமத்திற்கும் பஞ்சமத்திற்கும் சுரஸ்தானங்கள் முறையே ·7491, ·6674 என்று வருகின்றன. இவைகள் ஏறக்குறைய முறையே $\frac{3}{4}$, $\frac{2}{3}$ க்கும் சரியாகின்றன. ஆனல் வித்தியாசம் ·001க்குக் குறைந்தே வருகிறது. ஆகையால் 32 அங்குலம் நீளமுள்ள தந்தியில் இந்த வித்தியாசமானது முறையே ·027 அங்குலமும் ·024 அங்குலமும் ஆகும்.

கான்பரென்சின் இரண்டாவது தினத்தில் மகா-ரா-ரா-ஸ்ரீ பாட்ராச்சாரியார் அவர்களும், மகா-ரா-ரா-ஸ்ரீ R. நாராயணசாமி ஐயரவர்களும் Rev. J. B. ஞான ஒளிவு அவர்களும் ஆஜராகவில்லை. ஆகையால் முன்சொன்ன ரிபோர்ட் ஆனது கான்பரென்சின் பிரசிடெண்டவர்களுக்கு என்னல் கொடுக்கப்பட்டது.

T. K. VEMBU IYER.
Secretary.

சங்கீத பஞ்சாயத்தாரின் பிரசிடெண்டாகிய மகா-ரா-ரா-ஸ்ரீ Rao Bahadur. V. A. வாண்டையார் அவர்கள் அடியில் வரும் ரிப்போர்ட்டைப் பிரசிடெண்ட் அவர்களுக்குக் கொடுத்தார்கள்.

தஞ்சை சங்கீத வித்தியா மகாஜன சங்கம்.

ஏழாவது கான்பரென்ஸ், 1916வது ஆகஸ்டுமீ 19, 20கள்

மூன்றாவது பஞ்சாயத்து.

பூர்வ தமிழ்மக்கள் கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவந்த சுரம் சுருதி முதலியவைகளை விசாரிக்க ஏற்பட்ட சப்கமிட்டியின் ரிப்போர்ட்டு.

இந்த சப்கமிட்டியைச் சேர்ந்த முக்கிய அங்கத்தினராகிய மகா-ரா-ரா-ஸ்ரீ A. G. பிச்சமுத்து அவர்கள் B.A., L.T., சாமியாபிள்ளையவர்கள், வையைச்சேரி அப்பாசாமி ஐயரவர்கள், திருநெல்வேலி இந்து காலேஜ் மகாலிங்க ஐயரவர்கள், ஹரிகேசவநல்லூர் முத்தையா பாகவதரவர்கள், தஞ்சை வீணை வேங்கடாசலமையர் அவர்கள், விஜயராகவம் வீணை வேங்கடரமணதாஸ் அவர்கள், தஞ்சை பஞ்சாபகேச பாகவதரவர்கள், திவான் V. P. மாதவராவ் அவர்கள் முதலிய கனவான்கள் இந்த விவகாரத்தை முன்னமே நன்றாய் ஆராய்ந்து பார்த்து 24 சுருதி நுட்ப சுருதிகள் இவைகளின் உண்மையை பண்டிதரவர்களின் ருசுக்கள் மூலமாய் நேரே அறிந்தவர்கள். மற்றவர்களுக்கு ஏற்கனவே இரண்டு வாரத்துக்கு முன் அச்சடித்து சில கேள்விகள் மறுமொழிக்காகக் கொடுக்கப்பட்டிருந்தன. ஆகையால் சப்கமிட்டி மெம்பர்களில் அநேகர் அந்தக் கேள்விகளுக்கு மறுமொழிகளைத் தயார்செய்து கொண்டுவந்திருந்தார்கள்.

ஆரம்பத்தில் Mr. பண்டிதரவர்கள் இது விஷயமாய் வெகுநேரம் மிகவிரிவாகப் பிரசங்கம் செய்து சிலப்பதிகாரம் முதலிய ஆதித்தமிழ் நூல்களின் மூலமாயும் சக்கரங்கள் அட்டவணைகள் மூலமாயும் ஒரு ஸ்தாயியில் 7 முக்கிய சுரங்கள் உண்டென்றும், ஆயப்பாலையில் 12 சுரங்கள், வட்டப்பாலையில் 24 கால்சுரங்கள், திரிகோணப்பாலையில் 48 அரைக்கால் சுரங்கள், சதுரப்பாலையில் 96 வீசம் சுரங்கள் உண்டென்றும் பேசினார்கள். மேலும் கிராகம் மாற்றுவதில் உண்டாகும் ஏழு சுரங்களினின்று பிறக்கும் செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலையாகிய இவைகளே தற்காலம் வழங்கும் தீரசங்கராபரணம், கரகரப்பிரியா, அனுமத்தோடி, கலியாணி, அரிகாம்போதி, கடபைரவி, சுத்ததோடி என்னும் இராகங்கள் என்றும் எடுத்துக் காண்பித்தார்கள்.

இது முடிந்தவுடன், இந்த அபிப்பிராயங்களை வீணையின் மூலமாயும் வாய்ப்பாட்டினாலும் பண்டிதரவர்கள் குமாரத்திகளாகிய துரைபாண்டியன் மரகதவல்லியம்மாளும், ரவமணி கனகவல்லியம்மாளும் ருசுப்படுத்த ஆரம்பித்தார்கள், அப்போது மைலாப்பூர் P. A. சுந்தரம் ஐயர் என்பவர் வீணையில் தொனிக்கும் ச-ப சற்று குறைகிறது என்றார். அவரையே சொல்லிக் காட்டக் கேட்டபோது தாமதித்தார். பிறகு அனுசுரங்களைப் பிடித்துக் காட்டினபோது ச-ப பூரணமாயிருந்தது. மகா-ரா-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர்களும் சங்கராபரணம், தோடி, கலியாணி முதலிய இராகங்களின் ஆரோகண அவரோகணங்களைப்பாடிப் பரிசோதித்தபோது சுரங்கள் சரியாயிருந்ததாகக் காணப்பட்டு சபையாரால் அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு பண்டிதரவர்கள் குமாரத்திகள் ஸ்தாயியில் 12 சுரங்களையும், 24 கால் சுரங்களையும் வீணையோடும் வீணையின் உதவியில்லாமலும் வரிசையாய்ப் பாடிக்காண்பித்தார்கள். சபையோரின் ஆச்சரியமும் சந்தோஷமும் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது.

பிறகு அவர்கள் அநேக கீர்த்தனங்களைப் பாடிக் கர்நாடக சங்கீதத்தில் நாலு பாலைகளில் வரும் 24, 48, 96 முதலிய நுட்ப சுரங்களை அந்தந்த சுரங்கள் ஏற்படும் கீர்த்தனங்கள் மூலமாய் ருசுப்படுத்திக் காண்பித்தார்கள்.

Mr. பண்டிதரவர்களுடைய நூலாகிய கருணாமிர்த சாகரத்தில் சொல்லப்பட்டிருக்கிற அளவுகள் கணக்குப் பிரகாரம் ஸ்தாயியின் 12 சுரங்களுள் ஒன்றுகிய ஆதார சட்ஜத்திலிருந்து இரண்டாகிய தார சட்ஜம் வரை படிப்படியாய் ஒன்றற்கொன்று தீவிரமாய் நடுவில் வேறு நாத முண்டாகாமல் உயர்ந்து செல்லுகின்றன என்று தெரிகிறது. இதற்கேற்ப இந்தச் சமயத்திற்கென்று தயார் செய்யப்பட்டிருந்த வீணையில் பண்டிதரவர்கள் குமாரத்திகள் தந்த மெட்டுகளை வேண்டிய அளவுக்குத் தள்ளிவைத்துப் பன்னிரண்டு சுரங்களுக்கும் நடுவில் உண்டாகும் நுட்ப சுரங்களாகிய $\frac{1}{16}$, $\frac{1}{8}$, $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$ முதலிய சுருதிகளைச் சமயத்திற்கேற்ற விதமாய்ப் பாடிக் காண்பித்தார்கள். அவைகளை மெட்டுகளில்லாமல் கமகமாகப் பிடித்தும் காண்பித்தார்கள்.

அவர்கள் தன்யாசியில் ஓர் கீர்த்தனம் படித்தபோது Mr. பிரதாப ராமசாமி பாகவதர் காந்தாரம் சற்றுக் கூடி வருகிறதென்றும் அது சற்றுக் குறைந்திருக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். அப்போது Mr. பண்டிதரவர்கள் இந்த காந்தார நிஷாதங்களைத் தவிர மற்ற சுருதிகள் 12 சுரங்களைச் சேர்ந்தவைகள் என்று ஒப்புக்கொள்ளுகிறீர்களா?" என்று கேட்டதற்கு அவர்கள் மறு வார்த்தை சொல்ல முடியவில்லை. பிறகு Mr. பண்டிதரவர்கள் Mr. பிரதாப ராமஸ்வாமி பாகவதரைப்பார்த்து "துவாவிம்சதி சுருதிப்பிரகாரம் 2 மாதத்திற்குள் ஒரு துக்கடா பாடுவதாக பரோடா கான்பரென்சில் வாக்குக் கொடுத்தீர்களே அதைத் தாங்கள் இப்போது பாடிக்காட்டவேண்டும்" என்று கேட்டதற்கு அவர் ஒன்றும் பதில் உரைக்கவில்லை.

மத்தியான மீற்றிங்கில் பண்டிதரவர்கள் சுருதிகளை அறிந்திருப்பதின் விசேஷத்தைப் பற்றி மறுபடியும் பேசினார்கள். அதை ருசுப்படுத்துவதற்கென்று ஸ்ரீமதி மரகதவல்லியம்மாள் புதிதாய் உண்டாக்கிய கீர்த்தனங்களில் 15 கீர்த்தனங்களைப் பண்டிதரவர்கள் அனுமதிப்படி பாடிக் காண்பித்தார்கள். அவைகளில் ஆயப்பாலையின் சுரங்களும், வட்டப்பாலை, திரிகோணப் பாலை, சதுரப்பாலை இவைகளில் வரும் அதி நுட்ப சுரங்களும் தனித்தனியே காட்டப்பட்டன. புது இராகங்களில் கீர்த்தனங்கள் உண்டுபண்ணும் விதம் வித்துவான்களுக்குத் தெரியாத காரியமாகையால் சபையோர் இவைகளைக் கேட்டவுடன் பிரமித்துப் போனார்கள். இந்தக் கீர்த்தனங்களில் ஒரு பிசகாவது ஒருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்தப் புதிய கீர்த்தனங்கள் எல்லாம் ஜீவசுரம் தாளம் முதலியவைகள் குறித்து அச்சடிக்கப்பட்டு ஏற்கனவே சபையோருக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. இந்தக் கீர்த்தனங்கள் திவ்விய காந்தாரி, வச்சிர காந்தி, ஹிமாங்கி, விவர்த்தனி, ஆனந்த தோடி, தர்மவதி, மேகரஞ்சனி, நாகபூஷணி என்னும் புது இராகங்களில் உண்டாக்கப்பட்டிருந்தன.

Mr. சுப்பிரமணிய சாஸ்திரிகள் இந்த சபகமிட்டியில் மெம்பராக இல்லாதிருந்தும் அடிக்கடி நடுவில் எழுந்து சத்தம் போட ஆரம்பித்தார். ஆனால் அவர் முறைதப்பிப் பேசினபடியால் சபகமிட்டிச் சேர்மென் அவரை நிறுத்திவிட்டார்கள்.

மறுநாளில் (20—8—16) பண்டிதரவர்கள் மறுபடியும் இது விஷயத்தைப்பற்றிப் பேசினார்கள். Mr. பண்டிதரவர்கள் குமாரத்திகள் ரிக்கு வேதம் ஓதும் முறையையும் ஆய்ச்சியர் குரவை பாடும் விதத்தையும் ஆதித் தமிழ்மக்கள் ச-ப முறையின் இணைச் சுரங்களைக் கொண்டு பாடினபிரகாரமாய்ப் பாடிக் காண்பித்தார்கள். வெகு சுலபமான இந்தத் துக்கடாக்

கள் எல்லாராலும் மிகவும் மெச்சிக்கொள்ளப்பட்டன. பிறகு ஒவ்வொரு சப் கமிட்டி மெம்பரும் சுருதி விஷயமாய்த் தத் தம் அபிப்பிராயத்தைக்கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். பஞ்சாயத்தில் மெம்பர்கள் மொத்தம் 13. இவர்களுள் 6 பேர்கள் பண்டிதரவர்கள் சுருதிமுறை முற்றிலும் சரியென்று ஒப்புக்கொண்டார்கள். ஏழு பேர் அந்த முறையில் பாதி சரியென்று சொன்னர்கள். இருவர் அந்த முறை முற்றிலும் தப்பென்று சொன்னர்கள். ஒருவர் தன் அபிப்பிராயத்தை வெளிவிடவில்லை. சப் கமிட்டி மெம்பர்கள் அடியில் வருமாறு:—

முற்றும் சரியென்று ஒப்புக்கொண்டவர்கள்.

1. V. A. வாண்டையார் அவர்கள், பிரசிடெண்டு, பிடில் தெரிந்தவர்கள்.
2. A. G. பிச்சமுத்து அவர்கள், St. Peter's High-School தலைமை உபாத்தியாயர், பாடக் கூடியவர், இங்கிலீஷ் கோவில் ஆர்கனிஸ்ட், இங்கிலீஷ் சங்கீதத்தில் தேர்ந்தவர் (செக்ரிடெரி.)
3. வையைச்சேரி அப்பாசாமி ஐயர் அவர்கள், பாடுவார். போர்போன மகா வைத்திய நாதையர் அவர்களுடைய சகோதரர்.
4. A. மகாலிங்க ஐயர் அவர்கள், இந்து காலேஜ் திருநெல்வேலி, Science-Assistant தேவாரம், திருவாசகம் முதலியன பண்முறைப்படி பாடவல்லவர்.
5. A. பத்மநாதையர் அவர்கள், வக்கில், பிடில் வாசிப்பார் மதுரை.
6. சாமியா பிள்ளை அவர்கள் பாடுவார். சங்கீத உபாத்தியாயர் தஞ்சாவூர்.

பாதி சரியென்று ஒப்புக்கொண்டவர்கள்.

7. பரதம் நாராயணசாமி ஐயர் அவர்கள் பரதநாட்டியம் கற்றுக்கொடுப்பவர் நல்லூர்.
8. சப்தரிஷி பாகவதர் அவர்கள் சமஸ்கிருத பண்டிதர், K. H. School, தஞ்சாவூர்.
9. பஞ்சாபகேச பாகவதர் அவர்கள் பிடில் தெரிந்தவர், சங்கீதம் கற்றுக்கொடுப்பவர், தஞ்சாவூர்.
10. சித்திர கவி சிவராமபாகவதர் அவர்கள், கதை செய்பவர் தஞ்சாவூர்.

முற்றிலும் தப்பு என்பவர்கள்.

11. பிரதாப ராமசுவாமி பாகவதர் அவர்கள் பாடுவார் பூவனூர்.
12. P. S. சுந்தரம் ஐயர் அவர்கள் B.A. L.T., Training School, தஞ்சாவூர்.

அபிப்பிராயம் கொல்லாதவர்.

13. K. துரையப்ப ஐயர் அவர்கள், பாடுவார்.

தொகையாக சிலப்பதிகாரம், தொல்காப்பியம் முதலிய பூர்வ தமிழ் நூல்களில் கண்ட படி ஆயப்பாலையின் 12 சுரங்களும் வட்டப்பாலையின் 24 சுருதிகளும், திரிகோண சதுரப்பாலைகளின் 48, 96 முதலிய சுருதிகளும் பூர்வ தமிழ் மக்கள் கானத்தில் வழங்கி வந்திருக்கிறதாகத் தெரிகிறது. இதற்கிசைவாக இசைமரபில் உள்ள அடியில் வரும் சூத்திரமும் இருக்கிறது.

"ஆயத்துக் கீரா றைநான்கு வட்டத்துக்
கேயுங்கோ ணத்துக் கிரட்டிப்புத்—தூயவிசை
நுண்மைக் கதிலிரட்டி நோனலது மோர்நிலைக்கிங்
கெண்மூன்று கேள்விகொண் டெண்."

நாலு அட்டவணைகளிலும் கொடுக்கப்பட்ட நாலு பாலைகளுக்கும் உதாரணமாகப் பாடப்பட்ட 67 கீர்த்தனங்களும் தற்கால கர்நாடக சங்கீத விதிகளுக்கு முற்றிலும் அனுசரணையாகவேயிருக்கின்றன. கர்நாடக சங்கீதத்திற்கு ஸ்தாயியை 12 அல்லது 24 அல்லது 48 அல்லது 96 நுட்பசுரங்களாய்ப் பிரித்தாலொழிய கானம் செய்தல் கூடாதென்பது அபிப்பிராயம்.

மீற்றிங் முடிந்தவுடன் இந்த சப்கமிட்டியின் சேர்மனாக இருந்த என்னால் கான்பரென்சின் சேர்மென் அவர்களுக்கு இந்த ரிப்போர்ட் கொடுக்கப்பட்டது.

V. A. வாண்டையார்,
சேர்மென்.

இதன் பின் பிரசிடெண்ட் அவர்கள் சபையோரைப்பார்த்து அடியில் வருமாறு பேசினார்கள்.

"பண்டிதரவர்கள் இது விஷயத்தில் எடுத்துக்கொண்ட அரும்பிரயாசம் மிகவும் மெச்சிக் கொள்ளத்தக்கது. அவைகளின் பெருமையை நாவால் சொல்லமுடியாது. கூடி வந்திருந்த சபையோரெல்லாரும் இந்த இரண்டு நாளும் நடந்த விஷயங்களைப்பற்றி ஆனந்தித்தார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. எல்லாருடைய மனதில் இருப்பதையும் நானேயறிந்து சொல்லுகிறேன். நடந்த தர்க்கங்களும் ஆட்சேபனை சமாதானங்களும் யாவருக்கும் அதிக பயன்படத் தக்கவையாயிருந்தன. வந்த விருந்தினருக்காகச் செய்யப்பட்டிருந்த உபசார ஏற்பாடுகளின் ஒழுங்கே எவருக்கும் அத்தியந்த சந்தோஷத்தை உண்டாக்குகிறது. சங்கீதம் தனக்கு இப்போது இருக்கும் மேன்மை கெட்டுப்போகாமல் எது விஷயத்தில் முன்னுக்கு வரவேண்டுமென்று தெரிவதற்கு சுருதிகளைப்பற்றிய சரியான ஞானமும் அம்முறையின் விதிகளைப்பற்றிய அறிவும் இருக்கவேண்டியது அவசியம். இப்போது பண்டிதரவர்கள் செய்யும் இப்பெரிய வேலையானது பூர்வத்தில் இந்து அரசர்களால் செய்யப்பட்டு வந்தது. அவர்களே சங்கீத சாஸ்திரத்திற்கு வேண்டிய உதவிபுரிந்து வந்தார்கள். நான் எனக்காகவும் சபையோருக்காகவும் இந்திய சங்கீத விஷயமாய்ப் பண்டிதரவர்கள் உண்மையாய்ச் செய்துவரும் வேலைக்காக அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்."



V. P. Madhava Rao, C. I. E. Dewan Sahib of Baroda.

பிறகு சேர்மன் அவர்களுக்குப் புஷ்ப ஆரம் சூட்டி, அக்கிராசனம் வகித்ததற்காக வந்தனமளிக்கப்பட்டது. புஷ்பதாம்பூலாதிகள் வழங்கியபின் மீற்றிங் முடிந்தது. தாம்பூலம் வழங்குகையில் ஸ்ரீராமச்சந்திரனுடைய பட்டாபிஷேகத்தைப் பற்றிப் பேர்போன அருணாசலகவிசெய்த கீர்த்தனத்தைப் பண்டிதரவர்கள் குமாரத்திகள் பாடினர்கள். கான்பரென்சுக்கு ஆஜரானவர்கள் எல்லாருக்கும் வழக்கம்போல் பண்டிதரவர்களால் விருந்து செய்யப்பட்டது.

N. P. சுப்பிரமணிய ஐயர்,
செக்ரிடெரி.

தஞ்சாவூர்
25-ஜனவரி-1917.

மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் அவர்கள் C.I.E.,
பங்களூர்.

கனம் பொருந்திய ஐயா,

தாங்கள் பிரசிடெண்டாயிருந்த ஏழாவது கான்பரென்சின் கடவடிக்கைகளையும், கான்பரென்சில் நியமிக்கப்பட்ட மூன்று பஞ்சாயத்தார்களின் தீர்ப்புகளையும் தங்களுடைய பார்வைக்கு அனுப்பியிருக்கிறேன். அவைகளைப் பார்வையிட்டுத் தங்களின் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்களுடைய அபிப்பிராயமானது இப்போது அச்சிலிருக்கிற கான்பரென்ஸ் கடவடிக்கைகளுடன் சேர்த்துக் கொள்ளப்படும்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள ஊழியன்
N. P. சுப்பிரமணிய ஐயர்,
செக்ரிடெரி.

மூன்று பஞ்சாயத்தாருடைய சாக்ஷியத்தின் பேரில், கான்பரென்சின் பிரசிடெண்டவர்களாகிய மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் அவர்கள் C.I.E., கொடுத்த முடிவான அபிப்பிராயம்.

பிரசிடெண்டவர்களின் அபிப்பிராயம்.

ஆதிகால முதல் உண்டாயிருக்கிற சங்கீத சாஸ்திர வித்தையைத் திரும்ப உயிர்ப்பித்து அதின் சாஸ்திர ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதில் இந்தியாவின் பலபாகங்களிலும் சங்கீத அபிமானிகள் அநேகர் உழைத்து வருகிறார்கள் என்பது நமக்குத் தெரிந்த விஷயம். அப்படிவெகு சிரத்தையுடன் உழைத்துத் தன் காலத்தையும் பொருளையும் வார்த்தையையும் அது விஷயத்தில் செலவழித்தவர்களில் தஞ்சை Rao Sahib ஆபிரகாம் பண்டிதரவர்கள் ஒருவர். இப்

போது உபயோகத்திலிருக்கும் கீர்த்தனங்களில் வழங்கும் சுரம் சுருதிகளைக் கண்டுபிடிப்பதில் அவர்கள் கொண்டிருக்கும் முறையானது பல கடவைகளில் ருசுப்படுத்தப் பட்டிருக்கிறது. அக்கத் கடவைகளிலெல்லாம் கூடவிருந்து அவைகளில் ஆனந்திக்கும்படியான சிலாக்கியத்தை நான் அடைந்தேன். புது ஜாகங்களில் நிதம் கீர்த்தனங்கள் உண்டுபண்ணும் விதத்தையும் அவர்கள் அநேகந்தரம் சொல்லிக் காண்பித்திருக்கிறார்கள். இந்த முறைகளின் விதிகளெல்லாம் எழுதப்பட்டு சுயப்படுத்தப் பட்டதுமல்லாமல் அவர்களுடைய கல்வித்திறமை வாய்ந்த குமாரத்திகளாகிய ஸ்ரீமதி மரகதவல்லியம்மாளாலும் ஸ்ரீமதி கனகவல்லியம்மாளாலும் வெகு அழகாய் ருசுப்படுத்திக் காட்டப்பட்டுமிருக்கிறது. அவர்களுடைய முறையானது பூர்வ தமிழ் நூல்களினால் உறுதி பண்ணப்படுகிறது என்ற விஷயமானது 1916வது ஆகஸ்டுமீ 19, 20 தேதிகளில் தஞ்சையில் கூடிய கான்பரென்சின் பஞ்சாயத்தாருடைய சாக்ஷியத்தினால் தெளிவாகிறது.

மைசூர் சமஸ்தான வைணீக சிரோமணியாகிய சேஷண்ணா, விஜயநகரம் சமஸ்தான வித்வான் வீணை வேங்கடரமணதாஸ் முதலிய பேர்போன சங்கீத வித்வான்கள் அவர்கள் முறையைச் சரியென்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்ற விஷயமும் எனக்குத் தெரியும்.

His Highness கெய்க்வார் மகாராஜா அவர்கள் கூட்டிய பரோடா ஆல்-இந்திய சங்கீத கான்பரென்சிலும் இந்த முறையானது Mr. பண்டிதரவர்களாலும் அவர்கள் குமாரத்திகளாலும் வீணை வாய்ப்பாட்டு மூலமாய் ருசுப்படுத்தப்பட்டது. நான் அது சமயம் அங்கு இருந்தபடியால் கூடிவந்த சபையோர் எவ்வளவு அபிமானத்தோடும் வியப்போடும் அதைக் கேட்டு ஆனந்தித்தார்கள் என்பதற்கு நான் சாட்சி. அது தவிரவென்றாலும் அந்த முறை கூடாதென்றாவது ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லை.

(1) முதல் பஞ்சாயத்தார் நிர்மானிக்கும்படி குறிக்கப்பட்டிருந்த 48 கேள்விகளுக்கும் இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்திலும் மற்றும் பூர்வ தமிழ் நூல்களிலும் ஏதாவது ஆதாரமிருக்கிறதா என்ற விஷயத்தைப்பற்றி அந்த பஞ்சாயத்துக்கு செக்ரட்டரியாயிருந்த மகா-ள-ள-ஸ்ரீ சிவஞான யோகிகளுடைய ரிப்போர்ட்டிலிருந்து என்ன தெரிகிறதென்றால், 10 மெம்பர்களில் 8 பேர் அந்த 48 விஷயங்களுக்கும் ஆதாரமிருக்கிறதென்றும், ஒருவர் 44 விஷயங்களுக்கு ஆதாரமுண்டென்றும், மற்றவர் 34-க்கு ஆதாரமுண்டென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் 12 சுரங்கள், 24, 48, 96 முதலிய சுருதிகள் முறைக்கு ஆதித் தமிழ் நூல்களில் ஆதாரமுண்டென்று பெரும் பான்மையோர் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்று தெளிவாகிறது.

(2) இந்த 12 சுரம், 24 முதலிய தட்ப சுரங்களுக்கு Mr. பண்டிதரவர்கள் கொடுக்கும் logaritham கணக்கு முதலியவைகள் சரியா என்று பரிசோதிப்பதற்கும், தந்தியின் பற்பல பாகங்களிலும் பற்பல சுரங்கள் பேசுகின்றனவா என்று பரிசோதிப்பதற்கும் ஒரு பஞ்சாயத்து நியமிக்கப்பட்டது. இதற்கு கும்பகோணம் கவர்ண்மெண்ட் காலேஜ் Professor ஆகிய மகா-ள-ள-ஸ்ரீ பாட்டாச்சாரியார் M.A.,L.T., அவர்கள் சேர்மனுகவும் மகா-ள-ள-ஸ்ரீ T. K. வேம்பு ஐயர் B.A.,L.T., அவர்கள் செக்ரிட்டரியாகவும் இருந்தார்கள். இவர்களுடைய ரிப்போர்ட்டிலிருந்து 7 பஞ்சாயத்தார்களில் ஒருவர் தவிர மற்றெல்லாரும் கொடுத்திருக்கும் கணக்குகளும் அதற்கேற்கத் தந்தியின் அளவில் பேசும் சுரங்களும் சுருதிகளும் சரியானவை என்றும் ஒப்புக் கொள்ளுகிறார்கள் என்று தெரிகிறது.



Kanagavalli Ammal Navamoney. Maragathavalli Ammal Duraipandian. Pakiam Ammal Abraham. M. Abraham Pandither. Dewan Saheb V. P. Madhava Rao, C.I.E. Vynika Shikamoney Mr. Seshanna of Mysore. Mr. A. G. Pichaimuthu B.A.,L.T.

Mr. William Devadoss. Mr. A. Gunapandian. Mr. A. Sundarapandian. Mr. A. Selva Pandian. Mr. G. Gnanasigamoney.

Vathavalli Ammal. Davamoney Thangapandian.

(3) வீணையில் பற்பல இடங்களில் சப்திக்கும் சுரங்கள் இப்போது உபயோகத்திலிருக்கும் சுரங்கள் தானு என்று தீர்மானிக்கிறதற்குக் குறிக்கப்பட்ட சப்கமிட்டிக்கு மகா-ரா-ரா-ஸ்ரீ Rao Bahadur V. A. வாண்டையார் அவர்கள் சேர்மனுகவும், St. Peter's High School ஹெட்மாஸ்டர் மகா-ரா-ரா-ஸ்ரீ A. G. பிச்சமுத்துப் பிள்ளையவர்கள் செக்ரட்டரியாகவும் இருந்தார்கள். இதில் மொத்தம் 13 மெம்பர்களில் 6 பேர் அந்த முறை முற்றிலும் சரியென்று அபிப்பிராயப்படுகிறார்கள். 4 பேர் அவைகளில் பாதி சரியென்றும், இருவர் அந்த முறை முற்றிலும் தப்பென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஒருவர் தன் அபிப்பிராயத்தைச் சொல்லவில்லை. ஆகையால் பண்டிதரவர்கள் வீணையின் சுரங்களும் சுருதிகளும் பெரும்பான்மையோரால் ஒப்புக்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பரிசோதனையானது அதிக திருப்திகரமாய் முடிந்தது என்று ஒப்புக்கொள்ளுகிறேன். நம்முடைய சங்கீதத்தை சுரப்படுத்தவும் வீணை முதலிய வாத்தியங்களைத் தயார் செய்யவும் இந்த முறையை எல்லாரும் உபயோகிக்கவேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். இந்திய சங்கீதத்தை எடுத்து ஸ்தாபிப்பதற்காக மகா-ரா-ரா-ஸ்ரீ ஆபிரகாம் பண்டிதரவர்கள் செய்த முயற்சிகள் இவ்வளவு தூரம் சித்தி அடைந்ததற்காக நாம் Mr. பண்டிதரவர்களுக்குப் பெருமையாக வாழ்த்துதல் சொல்லுகிறோம்.

V. P. மாதவராவ்,
President.

6: மகா-ரா-ரா-ஸ்ரீ சேஷண்ணு அவர்களும், தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கி வரும் சுருதிகளும்.

1916-ஆம் வரு செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதியில் தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கி வரும் சுருதிகளைப்பற்றி மைசூர் சமஸ்தானம், வைணிக சிகாமணி மகா-ரா-ரா-ஸ்ரீ சேஷண்ணு அவர்கள் முன்னிலையில் ஒரு சபை கூட்டப்பெற்றது. அப்போது பிரோடா திவான் சாகிப் மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் C. I. E. அவர்களும், மகா-ரா-ரா-ஸ்ரீ பழமாறனேரி சாமிநாத ஐயரவர்களும், வீணை மகா-ரா-ரா-ஸ்ரீ வேங்கடாசலம் ஐயரவர்களும், மகா-ரா-ரா-ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர் அவர்களும், வாய்ப்பாட்டு மகா-ரா-ரா-ஸ்ரீ சாமியாபிள்ளை அவர்களும், மகா-ரா-ரா-ஸ்ரீ பிச்சமுத்துபிள்ளை அவர்களும், மகா-ரா-ரா-ஸ்ரீ P. V. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களும், மகா-ரா-ரா-ஸ்ரீ ராமண்ணு அவர்களும், மகா-ரா-ரா-ஸ்ரீ N. P. சுப்பிரமணிய ஐயர் அவர்களும், மகா-ரா-ரா-ஸ்ரீ சப்தரிஷி பாகவதர் அவர்களும், மகா-ரா-ரா-ஸ்ரீ சேதுராமபாரதியார் அவர்களும், மகா-ரா-ரா-ஸ்ரீ உலகநாதபிள்ளை அவர்களும் மற்றும் பல கனவான்களும் ஆஜராயிருந்தார்கள்.

மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் C. I. E. அவர்கள் அக்கிராசனாதிபதியாக இருக்க மகா-ரா-ரா-ஸ்ரீ P. V. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டு சபையோர் யாவராலும் அங்கிகரிக்கப்பட்டது. அப்போது பண்டிதர் அவர்கள் பின்வருமாறு சொன்னார்கள்.

"கனவான்களே! அக்கிராசனாதிபதியவர்களே! தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கி வரும் சுரங்களைப்பற்றியும் சுருதிகளைப்பற்றியும் நிச்சயம் சொல்ல முடியாமல் பலர் பல விதமான அபிப்பிராயம்சொல்லும் படியான சந்தேக நிலையில் நம்முடைய சங்கீதமிருக்கிற தென்று சொல்ல விசனப்படுகிறேன். அவைகள் இன்னவையென்று திட்டமான அறிவுக்கு வரும்பொழுது இனி மேல் படிக்கும் பின்னடியாருக்கு உபகாரமாக விருக்கும். பிற்காலத்தில் சந்தேகம் உண்டாகாம லிருக்கும். இவைகளை நெடுநாள் விசாரித்து வருகையில் ஒரு ஆரோகண அவரோகணத்தில் கீதங்கள் எழுதவும் கீர்த்தனங்கள் செய்யவும் கூடிய சில உத்தமமான விதிவகைகளை புதிதாகக் கண்டுபிடித்தேன். இவைகளைப் பலமுறை தஞ்சாவூருக்கு வந்த மகா-ரா-ஸ்ரீ வைணீகசிகாமணி சேஷண்ணு அவர்கள் முன்னிலையிலும் காட்டி அவர்களும் மிகுந்த சந்தோஷமடைந்திருக்கிறார் கள். அவர்கள் முன்னிலையில் தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகளைச் சொல்வதில் மிகுந்த சந்தோஷ முடையவனாக இருக்கிறேன். நம்முடைய சங்கீதத்தில் வழங்கி வருவது பன்னிரண்டு சுரங்களை. இவைகள் ச-ப முறையாக ஏழாவது ஏழாவது சுரமாகவும் ச-ம முறைப்படி ஐந்தாவது ஐந்தாவது சுரமாகவும் பொருத்தமுடையவை. ச-ப, ச-ம முறைப்படி சம அளவான ஓசையுடையவை. இதைப் பூர்வத்தோர் ஆயப்பாலை என்று வழங்கி வந்திருக் கிறார்கள். இவைகளில் கிரகம் மாற்றி ஏழு தாய் ராகங்கள் பாடிவந்திருக்கிறார்கள். அம் முறையில் தற்காலத்திலுள்ள 72 மேளக்கர்த்தா ராகங்களுமிருக்கின்றன. அரை அரையான பன்னிரண்டு சுரங்களில் இவை பாடப்படுகின்றன வென்றும் வீணையின் பன்னிரண்டு ஸ்தானங் களில் நிற்கும் சுரங்களே அவைகள் என்றும் அம்முறைப்படி சுத்த சுரங்களில் நாம் தற்காலத் தில் தீரசங்கராபரணம் அரிகாம்போதி, காகரப்பிரியா, நடபைரவி, அனுமத்தோடி, மேசகல் யாணி, மாயாமாளவம் முதலிய தாய் ராகங்களையும் குந்தலவராளி, கருடத்தொனி, கோகிலத் தொனி, சிந்துமந்தாரி, சிந்து கன்னடா முதலிய ஜன்னிய ராகங்களையும் தற்காலம் பாடிக் கொண்டிருக்கிறோம்" என்றும் சொல்ல அவர்கள் குமாரத்திகள் வரிசையாக 12 சுரங்களையும் சில கீர்த்தனைகளையும் பாடிக்காட்டினார்கள்.

அதன்பின் ஒருஸ்தாயியில் வரும் 24சுருதிகளையும் வரிசையாகப் பாடிக்காட்டும் பொழுது சபையார் யாவரும் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். அதற்கு திஷ்டாந்தமாக சாவேரி, கைகவசி சகானு முதலிய ராகங்கள் பாடிக்காட்டப்பட்டன.

திரிகோணப்பாலையில் வழங்கி வரும் சங்கராபாணம், தன்யாசி, சண்முகப்பிரியா அம்சத்தொனி முதலிய ராகங்களில் காற்பத்தெட்டில் ஒன்றான சுருதி வழங்கி வருவதைக் கண்டு எல்லாரும் ஆச்சரியமடைந்தார்கள். தன்யாசியில் காந்தாரத்தை பிள்ளைகள் கூடப் பாடிக்கிறார்கள். அது சாதாரண காந்தாரத்திற்கும் குறைந்து வரவேண்டுமென்று மகா-ரா-ரா-ஸ்ரீ பழமாறனேரி சாமிநாத ஐயர் அவர்கள் மெதுவாக ஆரம்பிக்க அதை மகா-ரா-ரா-ஸ்ரீ பஞ்சா பகேசபாகவதர் அவர்கள் தாங்கிப் பேசிப் பிடிலும் வாசித்துக் காண்பித்தார்கள். அப்போது பல வாதங்கள் செய்யப்பட்டு பல கீர்த்தனங்களின் மேற்கோளினால் அது கூடியே வரவேண்டுமென்று பண்டிதர் அவர்கள் குமாரத்திகளின் உதவியால் திஷ்டாந்தப்படுத்திக்காட்டினார்கள். அப்போது சங்கீத கமிட்டிக்குச் சேர்மெனான சேஷண்ணு அவர்களும் 'அது கூடியே வரவேண்டும். சாதாரண காந்தாரத்திற்குக் கூடிவராமற்போனால் அது தன்யாசியாகமாட்டாது' என்று வற்புறுத்திச் சொன்னார்கள். பண்டிதர் அவர்கள் நிஷாதம் $4\frac{1}{2}$ அலகாய்க் கூடிவருவது போலவே காந்தாரமும் $4\frac{1}{2}$ அலகாய்க் கூடி வரவேண்டும். நாம் தற்காலத்தில் ராகம் பாடுவதற்கேற்ற புது விதிகளை அறியாமலும் அதன் ஜீவசுரம் இன்ன தென்று அறிந்து கொள்ள இயலாமலும்

இராகங்களைக் கெடுத்துக் கொண்டிருக்கிறோம். அம்முறை நமக்குத் தெரியும்பொழுது இப்படிப் பட்ட பிசகுகளை நாம்தெளிவாய்க் காண்போம் என்று சொல்ல ஆக்ஷேபனை செய்தவர்கள் அறிந்து அடங்கினார்கள்.

இதன் மேல் நாலாவதான சதுரப்பாலையில் ஒரு ஸ்தாயியில் தொண்ணூற்றுறில் ஒன்றான ஸ்வரம் சுரங்களில் வழங்கி வரும் மத்திமாவதி, தேவகாந்தாரி, ஆரபி. ககனகுதூகலம், செஞ்சுருட்டி, ஹிமாங்கி முதலிய இராகங்களில்வரும் கீர்த்தனங்கள் பாடிக்காட்டப்பட்டன. மிக இனிமையான சதுரப்பாலை இராகங்கள் பாடி முடிந்தவுடன் பண்டிதர் அவர்கள் 'நம் இந்திய கானம் இனிமையுடைய தென்று யாவராலும் கொண்டாடப்படுவதற்கு நுட்பமான சுரங்களே காரணம். இனிமையான சுரங்களை இன்னதென்று அறிந்துகொள்ள இயலாமலும் பிறருக்குச் சொல்ல ஏதுவில்லாமலுமிருக்கிறோம். இதனால் நமது பின்னடியாரும் நிச்சயம் தெரிந்து கொள்ளாமலும் வெகு சிரமம் அடையவேண்டிய தாயிருக்கிறது. மற்றவரும் குறை சொல்ல ஏதுவாயிருக்கிறது. நுட்பமான சுருதிகளுக்கு அனுபோகத்திற்கு ஒத்துவரக்கூடிய ஒரு முறையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று பிரயாசப் பட்டுக்கொண்டிருந்து பாடிக்கொண்டிருக்கும் இராகங்களைப் பரிசோதனை செய்து அவைகளை நாலு இனங்களாகப் பிரித்து ஒருவாறு நிச்சயப் படுத்தும் பொழுது பூர்வ தமிழ் நூல்களில் இவை ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை, சதுரப்பாலை என்று நாலு பாலைகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன வென்றும் ஒரு ஸ்தாயியைப் பன்னிரண்டாகப் பிரித்து ஆயப்பாலை என்றும் இருபத்து நான்காகப் பிரித்து வட்டப்பாலை என்றும், நாற்பத்தெட்டாகப் பிரித்து திரிகோணப்பாலை என்றும் தொண்ணூற்றாறாகப்பிரித்து சதுரப் பாலை என்றும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று கண்டேன். நமது அனுபோகத்தில் இப்போது இருக்கிறவைகள் பூர்வ தமிழ் மக்கள் வழங்கி வந்தவை என்றும் அவைகள் சாஸ்திர ஆதாரமுடையவை யென்றும் நிச்சயமாகச் சொல்வேன்' என்றும் தெளிவாக எடுத்துரைத் தார்கள்.

அப்போது சங்கீத கமிட்டிக்குச் சேர்மனாக இருந்த மகா-ரா-ரா-ஸ்ரீ சேஷண்ணா அவர்கள் எழுந்து நின்று சபையோரைப் பார்த்துப் பின் வருமாறு பேசினார்கள்.

"கனவான்களே! வித்வசிரோமணிகளே! நான் பல தடவைகள் பண்டிதர் அவர்களை சந்தித்திருக்கிறேன். அவர்கள் சங்கீத விஷயத்தில் வைத்திருக்கும் பிரியத்திற்காகவே நான் அடிக்கடி பார்க்கப் பிரியப்படுகிறேன். அவர்கள் பல தடவைகளில் புதிதுபுதிதாகச் சங்கீதத்தில் செய்திருக்கும் வேலைகளைக் காண்பித்திருக்கிறார்கள். இப்போது சுருதிகளைப்பற்றி அவர்கள் கண்டு பிடித்தவைகளைச் சொல்ல நாம் கேட்டோம். இவ்விஷயம் கருகலான தென்று நாம் அறிவோம். 22 சுருதிகள் உண்டென்ற முறையில் நானும் வெகுவாய் ஆராய்ச்சி செய்திருக் கிறேன். அவைகள் ஒரு முடிவுக்கு வரக்கூடியவைகளாக எனக்குத் தோன்றவில்லை. நாம் ஒரு ஸ்தாயியில் 12 சுரங்கள் வைத்துக் கானம் செய்து வருகிறோம். அதற்கும் ஒரு ஸ்தாயியை 22 ஆகப் பிரித்துக் கானம் செய்வதற்கும் சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லை. இருபத்து நான்காகப் பிரிப்போமானால் அச்சுரங்களைக் கமகமாப் நாம் பாடிவரும் கீர்த்தனங்களில் உபயோகித்து வருகிறோம் என்று நிச்சயமாய் அறிவோம். இப்போது அச்சுரங்களைப் பிள்ளைகள் தனித்து வாயினாலும் வீணையினாலும் பாடிக்காட்டினார்கள். 22 சுருதி என்று சாதிக்கிறவர்கள் அப்படி அவைகளைப் பாடிக்காட்டட்டும். அவைகள் உபயோகிக்கும் இடங்களையும் சொல்லிக் காட்டட்டும். நாற்பத்தெட்டு, தொண்ணூற்றாறாக வழங்கி வரும் நுட்ப சுருதிகள் இப்போது பாடிக்காட்டியமுறைப்படி கீர்த்தனங்களில் கமகமாய் வழங்கிவருகின்றனவென்பதற்கு யாதொரு

ஆக்ஷேபனையுமில்லை. கமகமாய் வரும் சுரங்களையும் வீசம் அரைக்காலான சுரங்களையும் தாங்கள் வாசிக்கக் கேட்டீர்களே. அவ்விடங்களை அறிந்து அவ்வோசைகளை வாயினால் சொல்லிக் காட்டிய பிள்ளைகளின் திறமை ரொம்ப மெச்சிக்கொள்ளக் கூடியதாயிருக்கிறது. பண்டிதர் அவர்களின் இந்த முயற்சி சபையோர் யாவராலும் நன்குமதிக்கக் கூடியதாயிருக்கிறது. சுருதிகளைப்பற்றிய விவாதம் ஒரு நல்ல முடிவுக்கு வந்திருக்கிறதென்பதைப் பற்றியும் தமிழ் நூல்களில் இதற்கு ஆதாரமிருக்கிறதென்று காண்பித்ததற்காகவும் நான் மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்" என்று சொன்னார்கள்.

அதன் பின் பரோடா திவான் சாகிப் மகா-ரா-ள-ஸ்ரீ V. P. மாதவராவ் அவர்கள் பின்வருமாறு சொன்னார்கள்.—

"கனவான்களே! பண்டிதர் அவர்கள் சுருதி விஷயமாகச் சென்ற கான்பரென்சில் அனுபோக பூர்வமாய்க் காட்டியது போலவே மைசூர் சமஸ்தான வித்வான் மகா-ரா-ரா-ஸ்ரீ வைணீகசிகாமணி சேஷண்ணு அவர்கள் முன்னிலையிலும் இன்று நடத்திக் காட்டியதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். மகா-ரா-ரா-ஸ்ரீ சேஷண்ணு அவர்களை நெடுநாளாக நான் அறிவேன். அவர்களுடைய சங்கீதத் திறமையைப்பற்றி நீங்கள் யாவரும் நன்றாய் அறிவீர்கள். அதனால் நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. அவர்கள் முன்னிலையில் ஒரு ஸ்தாயியில் 12 சுரங்கள் உண்டென்றும் 24 சுருதிகளும் 48, 96 ஆன நுட்ப சுருதிகளும் வழங்கிவருகின்றனவென்றும் ருசுப்படுத்திக் காட்டி அவர்களும் ஒப்புக்கொண்டதானது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது. பண்டிதர் அவர்கள் இவைகளைத் தற்காலத்தில் பாடிக்கொண்டிருக்கும் கீர்த்தனங்கள் மூலமாக ருசுப்படுத்திக் காட்டியதோடு சுமார் 2000 வருடங்களுக்கு முன்னுள்ள தமிழ் நூல்களில் சொல்லப்படுகிறதென்று ருசுப்படுத்திக் காட்டுவதானது நாம் ஆச்சரியப்படக் கூடியதாயிருக்கிறது. ஆதித் தமிழ்மக்கள் ஒரு ஸ்தாயியை 12 சுரங்களாய் 24 சுருதிகளாய் அதிலும் நுட்பமான சுருதிகளாக வகுத்து தாங்கள் கானம்செய்து வந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறியும்பொழுது சங்கீதம் பூர்வ தமிழ்மக்களால் மிகுந்த தேர்ச்சியடைந்திருக்கிறதென்று காண்கிறோம். அப்பழமையான முறைப்படி இன்றுவரையும் நம் அனுபோகத்திலிருக்கிறதென்று ருசுப்படுத்திக் காட்டுவது நம்மெல்லாருக்கும் மிகுந்த சந்தோஷத்தைத் தரும். அவர்கள் சுருதிமுறைக் கணக்கும் அவர்கள் குமாரத்திகள் பாடிக்காட்டிய முறையும் இங்கே வந்திருக்கும் சங்கீத வித்வான்கள் யாவரும் ஒப்புக்கொண்டு சந்தோஷப்படுவதுபோலவே கூடிய சீக்கிரம் கர்நாடக சங்கீத வித்வான்கள் யாவரும் சந்தோஷிப்பார்களென்று நான் நம்புகிறேன்." என்றார்கள். அதன்பின் வந்திருந்த வித்வான்களுக்கும் கனவான்களுக்கும் புஷ்ப தாம்பூலம் வழங்கப்பெற்றது.

N. P. சுப்பிரமணிய ஐயர்,
செக்ரிடெரி.

மகா-ரா-ரா-ஸ்ரீ வைணீக சிகாமணி சேஷண்ணு அவர்கள் ரிப்போர்ட்டை இதன்பின் பார்க்க.

The opinion of M.R.Ry. Vynika Sikamani Seshanna Avl., of Mysore, on the Question of Srutis.

It gave me great pleasure to attend the Music Conference held on the 11th September last in Tanjore by Rao Sahib Abraham Pandither Avergal and preside over the Committee of experts appointed to examine the Srutis used in Indian Music. Rao Sahib Abraham Pandither Avl. has been making research in the field of Music for several years past and in testing the accuracy of scientific propositions he has had a peculiar advantage in the skilful and marvellous singing of his daughters who have attained high proficiency in the science and art of music. The question that was to be settled in the Conference was one relating to the number of Srutis used in our Music and Rao Sahib Abraham Pandither Avergal's exposition of them in the light of ancient Tamil works was quite in keeping with the practice now obtaining according to those works, the Sthayi being divisible into 24 Srutis and not 22 as given in Sanskrit works. Half of the 24 coincide with the 12 notes now in use and the other half distribute themselves between these. According to our knowledge the 22 Srutis will not coincide with the 12 Swarams. The 24 Srutis can become 48, or 96 as per Tamil works, and there is no hesitation in saying that the 24 Srutis are correct.

These 12 Srutis are found used in some of the modern Ragas and the division of the Octave into 24 Srutis is quite a practical way of dividing the Sthayi; the Tamil works go still further and state that those 24 Srutis are divisible into 48 and even 96 Sub Srutis.

I do not doubt that the sub-division is reasonable. I am led to think that the correct intonation of the fundamental 12 notes is a work of great labour and skill, and that of the 24 Srutis also. The 24 Srutis are attainable after a very high degree of proficiency. Though some of the 48 or 96 Srutis are skipped over while singing or playing, it is almost impossible to locate them definitely and point them out to the observer. For the requirements of the musician, it is enough if he can master the 24 Srutis. But I must not fail to note that the voices of the daughters of Abraham Pandither Avergal are flexible to a wonderful degree and they may, with further cultivation of the art, be able to sound the series of the 48 Srutis also. To the average musician the subject will be a sealed book.

All lovers of music must, therefore, be grateful to the learned Rao Sahib Abraham Pandither Avergal for the unselfish work he has been doing in the cause of Music.

(Sd.) VYNIKA SIKAMANI SESHANNA.
Mysore.

சுருதிகளைப்பற்றி மைசூர் வைணீக சிகாமணி மகா-ஸ-ஸ-ஸ்ரீ சேஷண்ணு அவர்களுடைய அபிப்பிராயம்.

செப்டெம்பர்மீ 11உ தஞ்சையில் ராவ் சாயப் M. ஆபிரகாம் பண்டிதரவர்களால் கூட்டப்பட்ட சங்கீத கான்பரென்சில் ஆசராயிருந்த இந்திய சங்கீத சுருதி விசாரணைக் கென்று ஏற்படுத்தப்பட்ட கமிற்றிக்கு நான் பிரசிடெண்டாயிருந்த விஷயமானது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது.

பண்டிதரவர்கள் சங்கீத விஷயத்தில் அநேக வருஷங்களாய் உழைத்து வந்திருக்கிறார்கள். தாங்கள் செய்கிற சாஸ்திர விஷயமான சங்கதிகள் சரிதானவென்று சோதித்துப்பார்ப்பதில் அவர்களுக்கு அதிக

முக்கியமான ஒரு சாதகம் எற்பட்டிருக்கிறது. அதென்னவென்றால் சங்கீத சாஸ்திரத்திலும் அதன் அனுபோகத்திலும் அதிகமாய்த் தேறியிருக்கிற அவர்கள் குமாரத்திகள் பாடும் அதிசயிக்கத்தக்க அருமையான சங்கீதமே.

இந்தக் கான்பரென்சில் நிச்சயிக்கும்படி குறிக்கப்பட்ட விஷயம் என்னவென்றால், நம் சங்கீதத்தில் உபயோகிக்கப்படும் சுருதிகள் எத்தனை யென்பதே. இது விஷயத்தில் பண்டிதரவர்கள் பழமையான தமிழ் நூல்களை ஆதாரமாகக் கொண்டு சுருதிகளை விஸ்தரித்தது தற்காலம் அந்நூல்களின் பிரகாரம் அனுபோகத்திலிருக்கும் முறைக்கு முற்றிலும் ஒத்ததாகவேயிருந்தது.

அவர்கள் விஸ்தரித்த முறைப்படி ஸ்தாயியை சமஸ்கிருத நூல்கள் சொல்வது போல் 22 என்று பிரிக்காமல் 24 என்று பிரிக்கிறார்கள். இந்த 24 இல் பாதி சுரங்கள் தற்காலம் அனுபோகத்திலிருக்கும் 12 சுரங்கள் தான். மற்ற 12உம் இவைகளுக்கிடையே நிரவப்படுகின்றன. நமக்குத் தெரிந்தவரையில் 22 சுருதி முறைக்கும் 12 சுருதிகளுக்கும் ஒரு காலும் பொருத்தம் வராது. தமிழ் நூல்களில் சொல்லியிருக்கிறபடி இந்த 24 சுருதிகள், 48 ஆகவும் 96 ஆகவும் வரலாம். 24 சுருதிமுறை சரியானதென்று ஒப்புக் கொள்வதற்குக் கொஞ்சமேனும் தடையில்லை.

தற்காலம் பாடப்படும் அநேக இராகங்களில் இந்த 12 சுரங்கள் உபயோகத்திலிருக்கின்றன. ஸ்தாயியை 24 ஆகப் பகுப்பது முற்றிலும் அனுபோகத்திற்கு ஒத்த சரியான முறையே. ஆனால் தமிழ் நூல்களில் சொல்லியிருக்கிறபடி இந்தச் சுருதிகள் இதிலும் நுட்பமாக 48 சுருதிகளாகவும் 96 சுருதிகளாகவும் பிரிக்கப்படுகின்றன.

இப்படி நுட்ப சுருதிகளாகப் பிரிக்கிறது நியாயந்தான் என்பதற்குச் சந்தேகமில்லை. 12 சுரங்களை வரிசையாய்ச் சொல்லுவது அதிக கஷ்டம். திறமையுள்ளவர்கள் மாத்திரம் அப்படிச் சொல்ல முடியும். 24 சுருதிகளைச் சொல்லுவதும் அப்படியே. ஆனால் அதிகமாய்த் தேர்ந்த வித்வான்கள் தான் இதைச் சாதனை செய்யமுடியும். பாடும்போதும், வாத்தியம் வாசிக்கும்போதும், 48, 96 என்ற அதிக நுட்பமான சுரங்களைக் கமகமாகக் காண்பிக்கலாமே யொழிய அந்தச்சுருதிகள் பேசும் இடங்களைக் குறிப்பிட்டு கேட்பவர் அறியும்படி சொல்லுதல் கூடாதகாரியமாயிருக்கிறது. ஆனால் சங்கீத வித்வானுக்கு 24 சுருதிகளைப் பாடம் பண்ணிவிட்டால் அதுவே சங்கீத விஷயத்திற்குப் போதும்.

பண்டிதரவர்களுடைய குழந்தைகளின் சாரீரம் எப்பேர்ப்பட்ட சங்கீதத்திற்கும் வளைந்து கொடுக்கக்கூடிய ஆச்சரியப்படத்தக்க இனிமையுள்ளது. (இப்போது அவர்கள் 24 சுருதிகளை வரிசையாய்ச் சொல்லுகிறார்கள்.) ஆனால் இன்னும் கொஞ்சம் பிரயாசத்துடன் முயற்சிப்பார்களானால் அவர்கள் 48 சுருதிகளையும் கூட வரிசையாய்ச் சொல்லக்கூடியவர்கள். ஆனால் மத்திமமான சங்கீத வித்வான்களுக்கு இந்த வித்தை ஒரு காலும் வராது.

ஆகையால் சங்கீதத்தை விரும்பும் யாவரும் கல்வியில் சிறந்த நம்முடைய Rao Sahib பண்டிதரவர்கள் யாதொரு நன்மையையும் கருதாமல் சங்கீதத்திற்கென்றே செய்துவருகிறவேலைக்காக நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

(ஒப்பம்) வைணீக சிகாமணி சேஷண்ணை,

மைசூர்.

(True Copy.)

Translated from English.

The opinion of M.R.Ry. Vynika Siromani Venkataramanadas Avl., Samasthana Vidwan, Vizianagaram.

RESPECTED AND DEAR SIR,

We are all well here and I request you to let me know often about your welfare.

I was very anxious to attend the 7th Conference of the Tanjore Sangeetha Vidya Mahajana Sangam which was held at Tanjore on the 19th of August 1916. But I was detained here owing to the marriage of the Yuva Raja of this Samasthanam. I regret I had no opportunity to pay you a personal visit owing to the constant musical engagements I had here since the wedding.

I feel glad that I have had the privilege of travelling with you to Baroda to attend the All India music Conference held there in March of last year, to have heard your discourse on Srutis at the said Conference and to have been present at the demonstrations made by Srimati Maragathavalli Ammal and Kanagavalli Ammal on the Srutis of Karnatic music both at Baroda and at Madras in the presence of M. R. Ry. Sabesa Iyer Avergal.

I can assure you that the 12 Swarams you demonstrated on the Veena are the Swarams of modern Karnatic music. The minuter Srutis used in connection with these Swarams are generally played as Gamakams. But the only mistake in modern music is that the Gamaka-Swarams are mentioned as having different kinds of measurements having different irregular intervals. We who have practised the 12 ancient Srutis on the Veena, were ignorant as to how the 22 Srutis should be adjusted on it, and were in doubt for years as to what the 22 Srutis were.

I was very much pleased when you proved before the Vidwans at Baroda that the 22 Srutis system of Saranga Dev was incorrect, that there were only 12 Swarams to the Octave by the SA-PA principle, that each of these Swarams was divided into 2 Srutis thus forming the series 24, that ganam was made in the minuter Srutis 48 and 96 of the Octave. I was also cleared of the doubt as regards the 22 Srutis. But my joy reached its utmost limit when Keertanams were sung where these 12, 24, 48 and 96 Srutis were used. This demonstration is beyond the imagination of any Vidwan nor could it be sung by any.

When Srimathi Maragathavalli Ammal and Kanagavalli Ammal sang Keeratanams in the minute Srutis I was carried into the regions of ecstasy. I have seen many places from the Himalayas to Cape Comorin and I have made the acquaintance of many a musical expert. But I have not found any one to equal Srimati Maragathavalli Ammal in musical ear. When the audience at Baroda listened to her singing how she brought into prominence even the most insignificant Sruti their joy knew no bounds. Many clapped hands out of sheer joy, spoke words of deep appreciation, and said that a new era had dawned for the musical world. I was lost in admiration when I witnessed all this novelty.

I was anxious to see how this demonstration work would come off in the Tanjore Conference. So I regret very much that I was unable to be present. I was also sorry that I had to disappoint you twice owing to my indisposition. I am explaining your system of Srutis to many an inquirer. I am eagerly looking forward to meeting you in person and enjoy the music. I wish God's blessings on your daughters and other children.

VIZIANAGARAM,
17TH MAY 1917.

I remain,
Yours sincerely.
(Sd.) VENKATARAMANADAS.

விஜயநகரம் சமஸ்தான வித்வான் மகா-ரா-ரா-ஸ்ரீ வைணிக சிரோமணி, வேங்கடரமணதாஸ் அவர்கள் அபிப்பிராயம்.

விஜயநகரம்,
17—5—1917.

Respected and Dear Sir,

இவ்விடம் க்ஷேமம். க்ஷேமத்திற்கு அடிக்கடி தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

1916ஆம் வருஷம் ஆகஸ்டுமாதம் 19ம் தேதி தஞ்சையில் நடந்த சங்கீதவித்யாமகாஜனசங்கத்தின் ஏழாவது கான்பரென்ஸுக்கு நான் வரமிகவும் பிரியமாயிருந்தேன். ஆனால் இவ்விடம் சமஸ்தானத்தில் யுவராஜாவுக்கு கலியாணமானதால் நான் வரக்கூடவில்லை. அதற்குப்பிந்தின நாட்களில் கச்சேரிகள் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருந்ததால் இதுவரையும் வருகிறதற்கு சந்தர்ப்பமுமில்லை என்று வருத்தப்படுகிறேன்.

1916 ஆம் வருஷம் மார்ச்சு மாதத்தில் பரோடாவில் நடந்த ஆல் இந்திய மியூசிக் கான்பரென்ஸுக்கு தங்களோடு பயணம் செய்யவும், சுருதிகளைப்பற்றி கான்பரென்ஸில் தாங்கள் செய்த பிரசங்கத்தைக் கேட்கவும் ஸ்ரீமதி மரகதவல்லி அம்மாள், கனகவல்லி அம்மாள் கர்நாடக கீர்த்தனங்களில் வரும் நுட்பசுருதிகளைப்பாடி வீணையில் ருசுப்படுத்திக்காட்டின பொழுதும் அதன் பின் பட்டணத்தில் வந்து மகா-ரா-ரா-ஸ்ரீ சபேசையர் அவர்களுக்கு நுட்பசுருதிகளை ருசுப்படுத்திக்காட்டின பொழுதும் கூட இருக்கும்படியாக நேர்ந்ததைப்பற்றியும் எப்பொழுதும் சந்தோஷமடைந்து கொண்டிருக்கிறேன்.

தாங்கள் வீணையில் ருசுப்படுத்திக்காட்டிய 12 சுரங்களும் நம் கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவருகிற சுரங்களே. அதோடு வழங்கிவரும் நுட்பமான சில சுரங்களே கமகமாய் நாம் வழங்கி வருகிறோம். ஆனால் கமகமாய் வருகிற சுரங்கள் பெரிதும் சிறிதுமான இடைவெளிகளுடையனவாய் பல அளவில் சொல்லப்படுகின்றன. 12 சுரத்தின் பூர்வவழக்கத்தையும் வீணையின் அமைப்பின்படி பழகிய நாங்கள் 22 சுருதியை இதில் அமைக்கத் தெரியாமலும் பழக முடியாமலும் 22 சுருதி இன்னதென்று சொல்லமுடியாமலும் அநேக நாள் கலங்கினோம்.

தாங்கள் பரோடா கான்பரென்ஸில் வித்வான்கள் முன் ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் வருகின்றனவென்று சொன்ன சங்கீத ரத்னாகரர் முறை சரியானதல்லவென்றும் பூர்வ தமிழ் நாட்டின் முறைப்படி ஒரு ஸ்தாயியில் ச-ப முறையாய் 12 சுரங்கள் தான் அமைகின்றனவென்றும் ஒவ்வொரு சுரமும் இரண்டு அலகாய்ப் பிரிக்கப்பட்டு 24 சுருதிகளாக வழங்கி வந்தார்களென்றும் அதோடு ஒரு ஸ்தாயியை 48 ஆகவும் 96 ஆகவும் பிரித்து நுட்ப சுருதிகளில் கானம் செய்தார்களென்றும் ருசுப்படுத்திக்காட்டியபொழுது நான் மிகுந்த சந்தோஷமடைந்தேன். ஒரு ஸ்தாயியில் 22 சுருதி யென்ற மயக்கம் என்னைவிட்டு நீங்கிற்று. அதோடு 12, 24, 48, 96 என்ற சுருதி முறையில் தனித் தனி பல கீர்த்தனங்கள் பாடி திஷ்டாந்தப் படுத்தினபொழுது நான் அடைந்த சந்தோஷத்திற்கு அளவில்லை. இது எந்த வித்வான்களினாலும் மனதினால் நினைக்கக்கூடியதுமல்ல வாயினால் சொல்லிக்காட்டக்கூடியதுமல்ல.

ஸ்ரீமதி மரகதவல்லியம்மாளும் கனகவல்லி அம்மாளும் நுட்ப சுருதிகளில் சொல்லிக்காட்டியபொழுது மெய் மறந்து பரவசமானேன். நான் கன்னியாகுமரி முதல் இமயமலை வரையும் பல இடங்கள் சுற்றிப்பார்த்திருக்கிறேன். அநேக சங்கீத வித்வான்களோடும் சுர ஞானிகளோடும் பல நாள் பழகியிருக்கிறேன். ஆனால் ஸ்ரீமதி மரகதவல்லி அம்மாளைப்போல நுட்ப சுரஞானமுடையவர்களை நான் பார்த்ததில்லை. நிலைப்படாத நுட்ப சுரங்களில் கார்வை கொடுத்து சொல்லிக்காட்டியதைப் பார்த்த சபையார் யாவரும் ஆனந்தமடைந்தார்கள். ஆனந்தத்தினால் கை கொட்டினார்கள். ஆசி மொழிகள் பலவும் கூறினார்கள். சங்கீதத்திற்குப் புதிய உலகம் தோன்றியிருக்கிறதென்று சொல்லி ஆனந்தித்தார்கள். இவைகளெல்லாம் எனக்கு ஆச்சரியமும் நூதனமுமாய்த் தோன்றின.

தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கத்தில் இவைகள் எப்படி ருசுப்படுத்தப்படுமோ என்று பார்க்க மிக ஆவலாயிருந்தேன். ஆனால் என்னால் வரக்கூடாமல் போனதைப்பற்றி மிகவும் வருத்தப்படுகிறேன். அதோடு நான் வருகிறேன் என்று இரண்டு தடவை எழுதியும் வரக்கூடாமல் அசௌக்கியம் ஏற்பட்டதைப் பற்றி மிகவும் விசனிக்கிறேன். சுருதியைப்பற்றி விசாரித்த பலர்க்கும் தங்களால் சொல்லப்பட்டபடியே விளக்கிச் சொல்லிக்கொண்டும் வருகிறேன். கூடிய சீக்கிரத்தில் அவ்விடம் வந்து முக்கியமாய் நேரில் விசாரித்து சந்தோஷப்பட விருப்பமுள்ளவனாயிருக்கிறேன். குழந்தைகளுக்கு என் ஆசீர்வாதம்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள
(ஒப்பம்.) வேங்கடரமணதாஸ்.

நான்காம் பாகம் முற்றிற்று.

புத்தகத்தோடே சேர்ந்து வரவேண்டியவை.

ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை சதுரப்பாலைகளில் வரும் சுருதிகள் இத்தனை யென்பது.

இதை வாசிக்கும் கனவான்களே!

இதுவரையும் சொல்லி வந்தவைகளில் சிலப்பதிகாரத்தின் உதவியால் தெளிவாகத் தெரிந்தவைகளையும் தெளிவாய் அர்த்தம் செய்யக்கூடியவைகளையும் பல குறிப்புகளினல் இவைகளாக இருக்கலாமென்று நிச்சயிக்கக் கூடியவைகளையும் மட்டும் இங்கு எழுதினேன். தற்கால சங்கீதத்திற்கும் அனுபவத்திற்கும் ஒத்துவராத எவ்வித அபிப்பிராயமும் இல்லை என்று காண்கிறேன். அனுபவத்திற்கு வரக்கூடியவைகள் எவைகளோ அவைகளை மாத்திரம் என்னல் கூடியவரை பூர்வ நூல்களின் ஆதாரத்துடன் சொல்லியிருக்கிறேன். அங்குச் சொல்லியிருப்பவை மிக நுட்பமாகவிருந்தாலும் அவற்றிற்குச் சொல்லியிருக்கும் விரிவான அனுபவம் யாவும் அவைகளிலிருந்து அர்த்தமாகக் கூடியவைகளை யொழிய வேறில்லை. பூர்வ தமிழ் மக்கள் வழங்கிவந்த சுருதிமுறை மிகுந்த தேர்ச்சியும் அதிக நுட்பமும் தெளிவும் உடைய தென்று நான் துணிந்து சொல்லுவேன்.

அதோடு இவைகள் எல்லாவற்றையும் நான் ஒருங்கே அறிந்தபின் இந்நூல் எழுத வில்லை. அப்போதைக்கப்போது தெய்வ கிருபையினல் தெளிவாய் விளங்கின ஒவ்வொன்றை யும் எளிதில் விளங்கும்படி பல முகமாய்ச் சொல்ல நேரிட்டது. அப்படி நான் சொல்லியிருந் தாலும் ஏற்ற சமயத்தில் கிடைத்த பூர்வ நூல்களின் ஆதாரத்தின் கருத்தும் அதுவாயிருக்கிற தென்று கண்டு மிகுந்த சந்தோஷமடைந்தேன். பூர்வநூல்களின் கருத்துகளை ஆராயும் பொழுதும் அவைகளைத் திஷ்டாந்தப்படுத்திக் காட்டும் பொழுதும் என்னோடு கலந்து சந்தோஷிக் கும் ஒருவர் இல்லாமல் வருந்துகையில் தெய்வம் தாமே கூடவிருந்து அப்போதைக்கப்போது பூர்வமாயுள்ள மேற்கோள்களைக் காணும்படி செய்ததைக்கொண்டு ஊக்கமடைந்தேன். எழுதிய வைகள் யாவும் கூடியவரை சரியாயிருக்கின்றனவென்று எழுதியபின் கிடைத்த மேற்கோள் களினல் அறிந்தேன். அவைகளில் புஸ்தகம் முடிந்தபின் சுருதிகளைப்பற்றி சுவாமி விருதை சிவஞானயோகிகள், தஞ்சாவூர் சங்கீத வித்யாமகாஜன சங்கத்தில் சொன்ன இசை மரபு வெண் பாவை இங்குச் சொல்வது யாவருக்கும் உபயோகமாயிருக்குமென்று நம்புகிறேன்.

> "ஆயத்துக் கீரா றறுநான்கு வட்டத்துக்
> கேயுங்கோ ணத்துக் கிரட்டிப்புத்—தூயவிசை
> நுண்மைக் கதிலிரட்டி நோனலது மோர்நிலைக்கிங்
> கெண்மூன்று கேள்விகொண் டேண்."

இதனல் ஒரு ஸ்தாயியில் ஆயப்பாலைக்குப் பன்னிரண்டு சுரங்களென்றும் வட்டப் பாலைக்கு இருபத்து நான்கு சுருதிகள் என்றும் திரிகோணப்பாலையில் 48 சுருதிகள் என்றும் சதுரப்பாலையில் 96 சுருதிகள் என்றும் வழங்கிவந்தார்களென்று தெளிவாக அறிகிறோம்.

இசை நுண்மை என்றதால் அதற்கு மேற்பட்டுத் தெளிவாகச் சொல்லவும் காதினால் கேட்கவும் முடியாதென்று வரையறுத்துச் சொன்னதாக நினைக்கக்கூடியதாயிருக்கிறது. இதன் முன் சுருதிகளைப்பற்றிச் சொல்லுமிடத்தில் சுருதிகள் ஒன்றுதான். சுருதிகள் இரண்டுதான். சுருதிகள் மூன்று விதம், சுருதிகள் நான்கு விதம், சுருதிகள் ஒன்பது விதம், சுருதிகள் இருபத்திரண்டு விதம், சுருதிகள் அறுபத்தாறு விதம், சுருதிகள் அனந்தந்தான் என்று சுருதிகளின் நிச்சயம் இன்னதென்று தெரியாமல் சொன்ன வார்த்தைகளும் சுருதிகள் 25, 27, 53, 42, 66 என்று சொன்னவர்களின் அனுபோகத்திற்கு வராத நிச்சயமில்லாத வார்த்தையும்போல் இல்லாமல் இது மிகத்தெளிவாகவும் அனுபோகத்திற்கு வரக்கூடியதாகவும் திட்டமாகவுமிருக்கிறது.

சுருதிகள் அனந்தந்தான் என்று சொல்லிவிட்டபின் எவர் எதைச் சொன்னாலும் அதெல்லாம் பொருந்தும் என்று அர்த்தமாகிறதே. இது சங்கேதப்பட்டவர்கள் ஒளித்து கொள்ள அடைக்கலஸ்தானம்போலிருந்ததினிமித்தம் சுருதிகளைப்பற்றி மயக்கம் உண்டாயிற்று.

ஆனால் இசை நுண்மை அதாவது இசையில் நுட்பமான அளவு ஒரு ஸ்தாயியில் $\frac{1}{22}$ என்று சொல்வதை நாம் கவனிக்கும் பொழுது காதினால் கேட்கவும் வாயினால் சொல்லவும் கூடாத ஓசை அதற்கு மேலில்லை எனத் தெளிவாக வரையறுத்துச் சொல்லியிருக்கிறார் என்று தெரிகிறது. பல ஓசையின் அலைகள் சேர்ந்து ஒரு சுருதியானாலும் $\frac{1}{22}$ ஆன இசை நுண்மைக்கு மேல் ஓசையின் அலை சொல்லவும் கேட்கவும் கூடியதல்ல என்று வீணையில், நாம் பிரத்தியட்சமாய் அறிவதே போதும் என்று நினைக்கிறேன். அதற்குக் குறைந்த சுருதி இல்லை யென்பது நிச்சயம்.

தெளிவாகச் சொல்லும் இசைத் தமிழ் நூல்கள் முன்னடியே நமக்கு கிடைக்காததனால் விரிவாக எழுத வேண்டியதாயிற்று. இசைத்தமிழ் நூல்களில் ஒன்றுகிய இசைமரபு என்னும் நூலிற் சிலபகுதிகள் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த புத்தகசாலையில் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இச்செய்யுளில் சொல்லப்படும் சுருதிக் கணக்குகளை அனுசரித்தே இதன்முன் பல பாகங்கள் சொல்லப்பட்டிருப்பதனால் அறிவாளிகளுக்கு இது போதுமென்று நினைக்கிறேன்.

2. ச ரி க ம ப த நி என்ற ஏழு சுரங்களின் பெயர் பூர்வ தமிழ்ப் பெயரே. சமஸ்கிருத பெயரல்ல என்பது.

சுரங்களைப்பற்றியும் சுருதிகளைப்பற்றியும் நான் எழுதிவரும் புத்தகத்தின் நோக்கமறியாத சிலர் தற்காலம் வழங்கிவரும் சங்கீத முறைகளை மாற்றியிருக்கிறேன் என்றும் மாற்றப்போகிறேன் என்றும் சமஸ்கிருத பாஷையில் எழுதிய சங்கீத ரத்னகாரின் அபிப்பிராயங்களை முற்றிலும் மாற்றி விட்டேன் என்றும் பல ஆக்ஷேபனை சொல்லித் தமிழில் தங்களைத் தேர்ந்தவர்களென்று சொல்லிக்கொண்டு வேண்டுமென்றே தமிழ் மொழியோடு பல அன்னிய மொழிகளைக் கலந்து தமிழைக் கெடுத்துக்கொண்டிருக்கும் தமிழ் வித்வான்கள் சிலரைக் குதர்க்கம் செய்யும்படித் தூண்டிவிட்டார்கள். அவர்கள் கேட்ட பல கேள்விகளுக்குத் தகுந்த பதில் அப்போதைக் கப்போது சொல்லியிருக்கிறேன்

அதில் ஒருவர் 'ச ரி க ம ப த நி என்ற ஏழு சுரங்களும் ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம் மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்ற சமஸ்கிருத வார்த்தைகளிலிருந்து பிறந்திருக்கின்றன. சமஸ்கிருத உச்சரிப்பின்படி ச ரி க ம ப த நி என்ற ஏழுசுரங்களும் வழங்கிவருகின்றனதாங்கள் இவைகளுக்கு தாதனமாய் வேறு பெயர்கள் கொடுத்து விட்டால் மிகவும் நன்றாயிருக்கும்' என்று சொன்னார்கள். ஷட்ஜம, ரிஷப, காந்தார, மத்திம, பஞ்சம, தைவத, நிஷாதங்களிலிருந்தே ச ரி க ம ப த நி என்ற எழுத்துக்கள் வந்திருக்க வேண்டுமென்று பலரும் எண்ணுவதினால் அவை அப்படியல்லவென்று தெளிவுறச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. 825ம் பக்கத்தில் இவைகளைப் பற்றிச் சிறிது சொல்லியிருந்தாலும் இவைகளையும் சேர்த்துப் பார்ப்பது சந்தேக நிவர்த்திக்கு ஏதுவாகுமென்று எண்ணுகிறேன்.

ச ரி க ம ப த நி என்ற ஏழு சுரங்களின் பெயர்களும் முதல் முதல் தமிழ் மொழியிலேயே வழங்கிவந்தனவென்றும் சங்கீத சாஸ்திரம் முத்தமிழில் ஒன்றாயிருந்ததென்றும் பல குறிப்புகளால் அங்கங்கே சொல்லியிருக்கிறோம். அவற்றுள்,

> "ச ரி க ம ப த நி யென் றேழெழுத்தாற் றுனம்
> வரிபரந்த கண்ணினாய் வைத்துத்—தெரிவரிய
> வேழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்குஞ்
> சூழ்முதலாஞ் சுத்தத் துரை"

என்று சிகண்டிமாமுனிவர் சொன்ன வெண்பாவைக் கவனிக்கும் பொழுது இடைச்சங்ககாலத்திலேயே ச, ரி, க, ம ப த நி என்று ஏழுசுரங்கள் சொல்லும் வழக்கமிருந்ததாகத் தெரிகிறது.

இடைச்சங்ககாலத்திலிருந்த இவருக்கு முன்னும் முதற்சங்ககாலத்தில் அகத்தியராலும் அவருக்கு முன்னிருந்த கலிவல்லோராலும் தமிழ் நாட்டிலேயே இயல் இசை நாடகமென்னும் முத்தமிழும் வழங்கிவந்தனவென்று தெளிவாய் அறியக்கூடியதாயிருக்கிறது. அக்காலத்து நூல்கள் நமக்குக் கிடைக்க வில்லை. ஆனாலும் முதற் சங்கத்தில் வழங்கிவந்த முறைப்படியே இடைச்சங்ககாலத்தும் வழங்கியிருக்கவேண்டும். அம்முறையையே சிகண்டி மாமுனிவரும் இடைச்சங்ககாலத்திலும் சொன்னார்.

சமஸ்கிருத பாஷையில் சங்கீத நூல் எழுதிய ஐந்தாம் நூற்றாண்டிலிருந்த பரதர், பதின்மூன்றும் நூற்றாண்டிலிருந்த சங்கீத ரத்னகார் போன்றவர்களுக்கு வெகுகாலத்திற்கு முற்பட்டது இம்முறையென்று அறிவோம். பூர்வமாயுள்ள தமிழ் நாட்டிற்குப் பேச்சுப்பழக்கத்திலில்லாத ஏட்டுமொழியைக் கொண்டு வந்த ஆரியர் தமிழ் நாட்டில் வழங்கும் பல கலைகளையும் தங்கள் பாஷையில் திருப்புவதற்காக அரிய வேலைகள் செய்து வந்தார்கள். அவர்களில் சங்கீத ரத்னகர் ஒருவர். அவர் தமிழ் மொழியில் வழங்கும் சங்கீதத்திற்கு நூல் எழுதுகையில் தமிழ் நூலுக்கும் சமஸ்கிருத நூலுக்கும் வித்தியாசம் தோன்றும்படி பல காரணப்பெயர்களையும் கதைகளையும் சொல்லியிருந்தாலும் அவைகள் முற்றிலும் பொருந்தாதவைகள் என்று தெளிவாக அறிகிறோம். உதாரணமாக, திருவெண்காடு (சுவேதாரணியம்,) மறைக்காடு (வேதாரணியம்,) திருவையாறு (பஞ்சநத க்ஷேத்திரம்,) குடமூக்கு (கும்பகோணம்,) திருவாவடுதுறை (கோமுத்தி க்ஷேத்திரம்,) திருவிடைமருதூர் (மத்தியார்ச்சுனம்,) புலியூர் (வியாக்கிரபுரம்) சிற்றம்பலம் (சிதம்பரம்,) காயுமானவர் (மாதர்பூதீஸ்வரர்) முதலியவை தமிழ் வார்த்தையின் நேரான மொழிபெயர்ப்பென்றும் அறிவோம். இவைகளைப்போலவே இதன் முன்னும் இராகங்களின் பெயர்களை மாற்றிவைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறோம். கருணாமிர்த சாகரம் முதல் புத்தகம்மூன்றும் பாகம் 621—625-ஆம் பக்கம் வரை காண்க.

மாற்றிய ஊர்ப் பெயர்களைக் கவனிக்கையில் அவைகள் பூர்வமாய் மிக பரிசுத்தமாக எண்ணப்பட்டனவென்றும் கடவுளருள் பெற்ற பெரியோரால் பாடல் பெற்றவையென்றும் தமிழ் மக்களால் கொண்டாடப் பட்டவையென்றும் நாம் அறிவோம். திருவையாறு என்னும் சொல் ஐந்து பரிசுத்தமான நதிகள் ஓடும் இடம் என்று பொருள் படுகிறது. இதையே பஞ்சநத க்ஷேத்திரமென்று பெயர் மாற்றி வழங்கினாலும் தற்கால தமிழ் மக்கள் வழங்கி வருகிற பெயர் பூர்வத் தமிழ் மக்கள் வழங்கிவந்த பழைய பெயரேயொழிய சமஸ்கிருதத்திலிருந்து வந்த பெயரல்ல வென்று தெளிவாக அறிவோம். அப்படியே அதில் எழுந்தருளிய தெய்வத்திற்கு ஐயாறப்பன் என்று பெயர் வழங்குகிறதே.

இசைத் தமிழில் வழங்கி வரும் ச ரி க ம ப த நி என்ற ஏழு குறிப்பெழுத்துக்களின் விபரம் இசைத்தமிழ் நூலில் விரிவாய்ச் சொல்லியிருக்கலாம். அவைகள் இப்பொழுது கிடைக்காததனால் நாம் பல விதமாய் நினைக்க ஏதுவாகிறது. சங்கீத ரத்னகார் ஷட்ஜமம், ரிஷபம், காந்தாரம் என்னும் சுரங்களுக்கு ஒரு விதமாகவும் மத்திமம் பஞ்சமம் என்னும் சுரங்களுக்கு வேறு ஒரு முறையாகவும் தைவதம் நிஷாதங்களுக்கு மற்றொரு விதமாகவும் காரணம்காட்டிப் பெயர் கற்பித்தார்.

மத்தியாய் வருவதனால் அதாவது ஆதார சட்ஜத்துக்கும் மேல் சட்ஜத்துக்கும் நடுவிலுள்ள தந்தியில் சரிபாதியில் வருவதால் மத்திமம் என்கிறார்.

ஏழு சுரங்களில் ஐந்தாவதாய் வருவதனால் பஞ்சமம் என்றார். ஆனால் அரை சுர முறைப்படி ஏழாவதாக வருகிறது. இதுபோலவே நாலாவதாகவும் ஆறாவதாகவும் முதலாகவும் கடைசியாகவும் வருவதற்கும் பெயர் கற்பித்திருந்தால் நன்றாயிருக்கும்.

இன்னும் ரிஷபத்தின் குரலை ஒத்திருப்பதனால் ரிஷபம் என்றார். மற்றைய எழுத்துக்களுக்கும் இது போல் காரணம் காட்டி யானையின் (கஜம்) குரலை ஒத்திருப்பதால் நிஷாதத்தை க என்றும், குதிரையின் (அஸ்வம்) குரலை ஒத்திருப்பதால் தைவதத்தை அ என்றும், குயில் (கோகிலம்) ஓசையை ஒத்திருப்பதால் பஞ்சமத்தை கோ என்றும், கிரவுஞ்சபட்சி

யின் ஓசையை ஒத்திருப்பதால் மத்திமத்தை கி என்றும், மயிலின் (மயூரம்) ஓசையை ஒத்திருப்பதால் ஷட்ஜமத்தை ம என்றும் சொல்லலாமே. இதுபோல்இவ்வெழுத்துக்களை முதலாகத் தொடங்கும் வார்த்தைகள் எத்தனையோ இருக்கின்றனவே.

மேலும் க ச ட த ப ற என்ற வல்லெழுத்துக்கள் மெல்லெழுத்துக்களோடும் இடை எழுத்துக்களோடும் மற்ற உயிர்மெய் எழுத்துக்களோடும் மொழிக்கு முதலிலும் நடுவிலும் ஓசை மாறுபட்டு வெவ்வேறு விதமாய் உச்சரிக்கப்படுவதை அறியாமல் ஏழு சுரங்களின் முதல் சுயமான ஸ சமஸ்கிருத எழுத்தாயிருக்கிறதனால் சமஸ்கிருதத்திலிருந்தே சுரங்கள் வந்திருக்க வேண்டுமென்றும் அதேகர் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

ஷட்ஜமம் என்பது ஆறு சுரங்களை அடக்கிக்கொண்டிருப்பதென்றும் ஆறு இடங்களிலிருந்து பிறப்பதினால் அதற்கு ஷட்ஜமம் என்று பெயர் வந்ததென்றும் ஆகையினால் சுரங்கள் சமஸ்கிருதத்திலிருந்து வந்தனவென்றும் பலர் சொல்லக்கேட்டிருக்கிறேன். சற்றுக் கூர்ந்து கவனித்தால் அப்படியல்ல வென்பது தெளிவாகத் தெரியும்.

எப்படி என்றால் ஷட்ஜமம் என்பதிலுள்ள ஷடு, ஷட்வர்க்கம், ஷடூர்மி, ஷட்ராகம், ஷஷ்டி என்னும் வார்த்தைகளில்போல ஆறு என்னும் பொருளைக் குறிக்கின்றது. ஜம் என்பது பிறக்கிறது பிறப்பிக்கிறது பிறக்கிறதற்கு இடமாயிருக்கிறது என்று அர்த்தமாம். ஷட்ஜமத்திலிருந்து ரிகமபதநி சஎன்ற ஏழு சுரம் பிறந்தால் மாத்திரம் ஒருஸ்தாயி பூரணமாகும். முதல் ஆதாரஷட்ஜமம் தாயானால் அதிலிருந்து ரிகமபதநிச என்ற ஏழு சுரங்களும் பிள்ளைகளாகப் பிறக்கும். ஏழு பிள்ளைகளிலிருந்து தாயையொத்த ச என்ற பெண்ணினால் மற்றும் ஏழு சுரங்கள் பிறக்கும். தாயைப்போல் ஒரு பெண்குழந்தை பிறக்காமல் போனால் தாரஸ்தாயியும் மந்தரஸ்தாயியுமில்லாமல் போகுமே.

மேலும் ஷட்ஜம் ஆறு இடத்திலிருந்து பிறக்கிறதென்று சொல்லுகிறார்கள். பாஷையின் எழுத்துக்கள் பலவும் ஆறு இடங்களின் உதவியினால் உச்சரிக்கப்படுகின்றனவென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஷ என்ற எழுத்து ஆறு இடத்திலிருந்து உண்டாகிறதாகச் சொல்லப்படவில்லை. அடித்தொண்டை, உண்ணாக்கு, நுனிநாக்கு என்னும் மூன்று முக்கியமான இடங்களில் இரண்டொரு அங்கங்கள் சேர்ந்து ஓசைகள் பிறக்குமேயொழிய ஆறு இடங்களிலுமிருந்தும் ஒரு எழுத்துப் பிறப்பது கூடாத காரியம்.

மேலும் ஷட்ஜம் என்ற வார்த்தையின் முதல் எழுத்துக்கும் ஸ ரி க ம என்ற சுரங்களின் முதல் எழுத்துக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. ஷ, ஸ வாக வழங்குகிறதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. ஆனால் ச என்ற தமிழ் எழுத்து ஸ வாக மெலிந்து வருகிறதற்குப் பல உதாரணம் சொல்லியிருக்கிறேன். (கருணாமிர்த சாகரம் முதல் புத்தகம் நான்காம் பாகம் 826-ம் பக்கம் காண்க.) தமிழ் வழக்கின்படி ஸ என்று வரலாமேயொழிய சமஸ்கிருத முறைப்படி அப்படி வருவதற்கு கொஞ்சமேனும் நியாயமில்லை.

ருஷபம் என்ற வார்த்தையிலிருந்து ரி என்ற மெய்யெழுத்து வருவதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. காந்தாரம் என்ற சொல்லின் முதல் எழுத்து க என்று வருவதற்கும் தைவதம் என்ற வார்த்தையின் தை என்ற முதல் எழுத்து த என்று ஆவதற்கும் ஆதாரமில்லை. இதனால் சரிகமபதநி என்ற எழுத்திற்குக் காரணம் கற்பிக்க வந்தவர் சொல்லிய காரணம் சரியானதல்ல வென்று தோன்றுகிறது.

இதோடு க, ப, த என்னும் சுரங்கள் சமஸ்கிருத எழுத்துக்களின் மூன்றும் ஓசையை யுடையவைகளாக வழக்கத்திலிருக்கின்றன. இதனால் சமஸ்கிருதத்திலிருந்தே சுரங்கள் வந்திருக்கவேண்டுமென்று யாவரும் எண்ண இடமாகிறது. ஆனால் வல்லெழுத்தின் ஓசை முன் பின் வரும் மெல்லெழுத்தால் சமஸ்கிருத எழுத்துக்களின் ஓசைபோல் உச்சரிக்கப்படுகிறதென்று இதன்முன் கருணாமிர்த சாகரம் முதல் புத்தகம் இரண்டாம் பாகம் 392-ஆம் பக்கத்தில் பல உதாரணங்களோடு சொல்லியிருக்கிறோம்.

காந்தாரம், தனக்குப் பின்வரும் ம என்ற மெல்லெழுத்தாலும் பஞ்சமம் தனக்கு முன்வரும் ம என்ற மெல்லெழுத்தாலும் தைவதம் தனக்குப் பின்வரும் ந என்ற மெல்லெழுத்தாலும் ஓசை மாறுவதையும் இதுபோல் அநேக இடங்களில் ஓசைமாறி தமிழில் வெகு வார்த்தைகள் பூர்வகாலந் தொட்டு வழங்கி வருவதையும் கவனித்தால் இச்சந்தேகமும் நீங்கிவிடும்.

3. சப்த சுரங்களைப்பற்றி மகா-ரா-ரா-ஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் அபிப்பிராயம்.

சுரங்களின் ஓசைகளைப்பற்றி நான் ஒருவாறு சொல்லியிருந்தாலும் இவைகளை ஆராய வேண்டுமென்று திருவையாறு Sanskrit College Senior Professor ஆன மகா-ரா-ரா-ஸ்ரீ நாராயண சாஸ்திரி அவர்களுக்குத் தெரிவித்து சங்கீத ரத்னாகரர் எழுதிய இரண்டு புஸ்தகத்தையும் கொடுக்க அவர்கள் அவ்வாறே ஆராய்ந்து எழுதியிருக்கும் கடிதம் அடியில் வருமாறு:—

"மகா-ரா-ரா-ஸ்ரீ ராவ் சாயப் M. ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் நன்கு ஆராய்ந்து இப்போது இயற்றிய கருணாமிர்த சாகரமெனும் சங்கீத சாஸ்திரத்தை நன்றாய் உணர்ந்து சாரங்கதேவர் செய்த சங்கீத இரத்னாகரத்தை ஆராய்ந்து பார்த்ததில் தோன்றின விளக்கத்தை உலகத்தோர்கள் அறியப் பிரசுரப் படுத்துகிறேன். அதாவது:—

சாரங்கதேவர் விவரித்த ச, ரி, க, ம, ப, த, நி என்கிற ஏழு சுரக் குறிகள் காரணப் பெயருள்ளவைகளென்பது. இடுகுறிப்பெயர் என்று மெய்ப்பித்து விளக்குகிற B. C. இலிருந்த சிகண்டிமாமுனிவர் அருளிச் செய்த இசைநூலுக்கு விரோதப்படுகின்றது. அன்றியும் ஷட்ஜ என்கிற பதத்திலிருந்து க வும் ருஷப என்கிற பதத்திலிருந்து ரி யும், காந்தார என்கிற பதத்திலிருந்து க வும் மத்திம என்கிற பதத்திலிருந்து ம வும், பஞ்சம என்கிற பதத்திலிருந்து ப வும், தைவத என்கிற பதத்திலிருந்து ந வும், நிஷாத என்கிற பதத்திலிருந்து நி யும், வந்தன என்று உரைக்கில் ஷ என்கிற சமஸ்கிருத அட்சரம் ஸ என்கிற மாறுதலை அடைவதற்கும் ந என்கிற சமஸ்கிருத உயிர் எழுத்து ரி என்று சமஸ்கிருத மெய்யெழுத்தாக மாறுகிறதற்கும் கா என்கிற தீர்க்கம் க என்று குறுகுவதற்கும், தைவத என்பதில் த என்று அகார வடிவமைந்துவருவதற்கும் யாதொரு சமஸ்கிருத வியாகரண பிரமாணம் காணமுடியாமையாலும் ஷட்ஜ முதலிய ஏழு பதங்களும் காரணச் சொற்கள் என்று காட்டுவதற்காக நிஷப, காந்தார தைவத என்கிற மூன்று பதங்களின் பொருள் ஆராய்ச்சியில் சுரங்களை சம்மந்தித்தவைகளாகவே சாரங்கதேவர் விவரிப்பதால் ஷட்ஜ மத்திம, பஞ்சம, நிஷாத என்கிற உரைகள் சுரங்களையே சம்மந்தித்ததெனக் கூறுவது பிரமமில்லாமையும் அபார்தியாயத்தையும்

ஷண்ட, ருதம், காத்ரம், மதுரம், பட்டலம், தைரியம் முதலான சமஸ்கிருத பதங்களில் முதல் அக்ஷரமாக அதிப்பிரசங்கிப்பதாலும் திராவிடர்கள் அமைத்த இடுகுறிப் பெயரை மாற்றுவதற்கெடுத்த புரட்டுபாயமென்று தீர்மானிக்கப்படுகிறது.

ச, ங, ந என்கிற ஓசைகள் தமிழ்ப் பாஷைக்குரியதல்லாவிடிலும் கிரந்தாட்சரத்தில் பழைய சாம வேத எடுகளில் ஹும் என்று எழுதியது ஹிம் என்று ஒலிப்பதுபோல் தமிழிலும் சிற்சில சந்தர்ப்பங்களில் ச, க, ந, ஜ, த, ப, ட, ப ஒலிப்பது திட்டமென்று Mr. Rao Sahib பண்டிதர் அவர்கள் ஷடி கருணாமிர்த சாகரத்தில் எடுத்து விவரித்திருப்பது மிக வியக்கத்தக்கது. மதங்கர் முதலியவர்கள் உரைத்தாலும் நியாயத்திற்கு இசையாமையால் மூட பக்தியை மாத்திரம் முன்னிட்டு இந்த இருபதாம் நூற்றாண்டின் நாகரீகத்தில் நிலை நிறுத்த முடியாது. நாரதர் முதலிய மாமுனிவர்கள் அருளிச்செய்த சமஸ்கிருத சங்கீத நூல்கள் பிற்காலத்திய வைதீக சமஸ்கிருத பண்டிதர்கள் சங்கீதத்தை துவேஷித்ததால் புலப்படாது உண்மையில்லாமையை தாக்குவதாயிற் றென்று திட்டமாய் எடுத்துரைக்கத் துணியலானேன்.

(ஒப்பம்) நாராயண சாஸ்திரிகள்.

4. சுரம் சுருதிகள் விஷயமாகப் பிரசுரித்த துண்டு பத்திரிகைகளைப் பற்றிச் சில கனவான்கள் எழுதிய அபிப்பிராயம்.

MADURA,
2-2-17.

Dear Sir,

Thanks for your kind pamphlet. Your adversary's opinion I treat with contempt of the most sovereign character. He leaves the main issue and proceeds to strike shadows. His tastes are certainly of a very low order, especially when he expressed his contempt for his audience to please whom we went all the way to Baroda. I know he is an intelligent man. Not that he can't but he won't—understand you. You can awake a really sleeping man but not a man who pretends to sleep. Do you know when the Report of the Baroda Conference will be out? Did you hear anything about it from Mr. Bhatkandi.

(Sd.) M. S. RAMASAMY IYER.

MADURA,
2-2-17.

பிரியமுள்ள ஐயா,

தாங்கள் தயவுடன் அனுப்பியிருந்த புத்தகத்திற்காக அநேக வந்தனம் சொல்லுகிறேன். தங்கள் எதிரியின் அபிப்பிராயத்தைப்பற்றி நான் மிகவும் இழிவான அபிப்பிராயங் கொள்ளுகிறேன். அவர் செய்கிறது எப்படியிருக்கிறதென்றால் பொருளை விட்டுவிட்டு நிழலைக் குத்துகிறதுபோல் இருக்கிறது. வெகு தூரமிருந்து பரோடாவில் போய்க்கூடின வித்வான்களை அவர் அற்பமாய் எண்ணினதைப் பார்க்கும்போது வெகு இழிவான காரியங்களில் அவர் பிரியப்பட்டவர் என்று தோன்றுகிறது. அவர் புத்தி சாமர்த்தியமுள்ளவர் என்று எனக்குத் தெரியும். தாங்கள் சொல்லுவதை அவர் அறியக்கூடாதவர் என்று நான் சொல்லுகிறதில்லை. அறிவதற்கு அவருக்கு மனதில்லை. உண்மையாய் நித்திரை செய்கிற ஒருவனை நாம் எழுப்பலாம், ஆனால் நித்திரை செய்வதாக நடிக்கிறவனை யார் எழுப்பக்கூடும்? பரோடா கான்பரென்சைப்பற்றிய ரிப்போர்ட் எப்போது வெளியாகுமென்று தங்களுக்குத் தெரியுமோ? அதைப்பற்றி Mr. பாத்கண்டே அவர்களிடமிருந்து ஏதாவது சமாச்சாரம் வந்ததோ?

(ஒப்பம்) **M. S.** ராமசாமி ஐயர்.

SATYA VILAS,
VIZIANAGRAM,
26th March 1917.

Dear Sir,

Many thanks for the two Pamphlets "Mr. E. Clements on Indian Music" and your remarks on his second letter. Kindly excuse me for the delay I made in acknowledging the above two books. From the very beginning I was reading with interest your replies to Mr. Clements. As I was away from here I could not write to you earlier. Day before yesterday I had a long talk with my friend Mr. Veena Venkataramana Doss, the famous Veena Player. He explained to me your theory of Srutis and I read the book with much interest. There was also another Veena Player Sriman K. Padmanabhaswamy Garu who was also a court musician in the time of the late Maharaja. He is also of opinion that your theory of Srutis is correct. Mr. Venkata Ramanadoss showed me your wire and he said that he is proceeding to you in 2 or 3 days. I am extremely happy to hear that you are a Vidwan of Vidwans in spite of your multifarious duties. On the 16th instant Vynika Sikamani Seshanna came here in connection with the marriage festivities of the Yuva Raj and I had some talk with him about the musical controversy between you and Mr. Clements. He also tells me that your system of Music is quite correct. He has much regard for you and, I think, you quite deserve it.

Mr. Venkata Ramanadoss was telling me that you have a music Conference every year at Tanjore. Will you please let me know the month in which you have it? I am glad you are a happy father of two ladies who are well accomplished in music. I was hearing of their high attainment in music. Is the report (full) of the first All Indian Music Conference published? I have also written to my friend Mr. V. N. Bhatkhande and I think he will send me a copy of it.

I request you to send me a copy of Karunamirtha Sagaram, as soon you publish to it.

If the book is published in Tamil I am sorry I am quite unable to read and if the book is published in Telugu or English or even Sanskrit, I can easily go through it.

* * * * * * * *

I dont think Mr. Clements will write any more articles after having a bitter Pill from you. Honest criticism is always desirable and praiseworthy, but criticism with spite is always abominable.

Once more thanking you for your two small Pamphlets.

With best regards,
I remain,
Yours very faithfuly,
(Sd.) K. L. NARASINGA ROW.

SHTAY VILAS,
VIJIANAGARAM.
26. March. 17.

பிரியமுள்ள ஐயா,

"இந்திய சங்கீதத்தைப்பற்றி Mr. கிளமெண்ஸுடைய அபிப்பிராயமும் அவருடைய இரண்டாவது கடிதத்திற்கு மறுப்பும்" என்ற சிறு புத்தகங்களை அனுப்பியதற்காக அநேக வந்தனம் சொல்லுகிறேன். புஸ்தகங்கள் வந்து சேர்ந்தன என்று ஒப்புக்கொள்வதில் தாமதமானதற்காக மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். கிளமெண்ட்ஸ் துரைக்குத் தாங்கள் எழுதிய மறுப்பை ஆதிமுதல் வெகு பிரியத்தோடு வாசித்தேன். நான் ஊரில் இல்லாதபடியால் இதற்கு முன் எழுதக்கூடாமற் போயிற்று. பேர்போன வீணை வித்வானுகிய என் சிநேகிதர் வேங்கடரமணதாஸ் அவர்களுடன் நேற்றைக்கு முந்தினநாள் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் தங்கள் சுருதி முறையை எனக்கு விளக்கிக் காட்டினார். நான் தங்கள் புஸ்தகத்தை பிரியத்துடன் வாசித்தேன். காலஞ்சென்ற மகாராஜாவின் காலத்தில் சமஸ்தான வித்வானுயிருந்த ஸ்ரீமான் பத்மநாபஸ்வாமிகாருவும் அப்பொழுதுகூட இருந்தார். அவரும் தங்களின் சுருதிமுறை சரியென்றே அபிப்பிராயப்படுகிறார். தாங்கள் அனுப்பின தந்தி சமாசாரத்தை வேங்கடரமணதாஸ் அவர்கள் என்னிடத்தில் காண்பித்து இரண்டொரு தினத்தில் தங்களிடம் போவதாகச்சொன்னார்கள். தங்களுக்குப் பல வேலை தொந்தரவுகளிருந்தும் சங்கீத விஷயத்தில் வித்வான்களுக்கு வித்வானுப் விளங்குகிறீர்கள் என்று கேள்விப்படுவது எனக்குச் சொல்லமுடியாத சந்தோஷத்தை உண்டாக்குகிறது. 16-ம் தேதியன்று வைணிக சிகாமணி சேஷண்ணு அவர்கள் யுவராஜாவின் கலியாண விஷயமாய் இங்கு வந்திருந்தபோது தங்களுக்கும் கிளமெண்ட்ஸ் துரைக்கும் சங்கீத விஷயமாயுள்ள தர்க்கத்தைப்பற்றி அவர்களிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தேன். அவர்களும் தங்கள் சுருதிமுறை முற்றிலும் சரியென்று என்னிடம் சொன்னார்கள். தங்களிடம் அவர்களுக்கு வெகு அபிமானம். அது தகுதியே என்று நினைக்கிறேன்.

தாங்கள் ஒவ்வொரு வருஷமும் தஞ்சையில் ஒரு கான்பரென்ஸ் கூட்டுவதாக வேங்கடரமணதாஸ் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அது நடக்கும் மாதத்தைத் தயவுசெய்து எனக்குத் தெரிவிப்பீர்களா? சங்கீதத்தில் தேர்ச்சிபெற்ற இரண்டு குமாரத்திகள் தங்களுக்கு உண்டென்று கேள்விப்பட்டுச் சந்தோஷமடைகிறேன். அவர்கள் பாண்டித்தியத்தைப்பற்றி நிரம்பக் கேள்விப்பட்டேன். ஆல் இந்திய கான்பரென்சின் முதலாவது மீட்டிங்கைப் பற்றிய ரிப்போர்ட் பிரசுரமாய்விட்டதா? என் சிநேகிதர் பாத்கண்டே அவர்களுக்கும் இதைப்பற்றி எழுதியிருக்கிறேன். அவர்கள் எனக்கு அதில் ஒரு காப்பி அனுப்புவார்கள் என்று நினைக்கிறேன்.

தங்களுடைய "கருணாமிர்த சாகரம்" வெளியானவுடன் அதில் எனக்கு ஒரு காப்பி அனுப்பும்படி பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

அது தமிழில் எழுதப்பட்டிருந்தால் என்னால் வாசிக்க முடியாது. ஆனால் தெலுங்கு அல்லது இங்கிலீஷ் அல்லது சமஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டிருந்தாலும் நான் எளிதில் வாசிக்கக்கூடும்.

* * * * * * * *

உங்களுடைய கசப்பான மாத்திரையைச் சாப்பிட்ட கிளமெண்ட்ஸ் துரை இனிமேல் எந்த வியாசமும் எழுதத் துணியமாட்டார் என்று நினைக்கிறேன். உண்மையான மறுப்பு எப்போதும் அவசியமானது. அதை நாம் வியந்துகொள்ள வேண்டியது. ஆனால் வர்மத்துடன் கூடிய மறுப்பு எப்போதும் அருவருக்கப்படத்தக்கது. தங்களுடைய இரண்டு புஸ்தகங்களுக்காக மறுபடியும் வந்தனம் அளிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்) K. L. நரசிங்க ராவ்.

M. S. RAMASWAMI AIYAR, B.A., B.L., L.T., *Vakil.*

1322, NEW STREET, MADURA.

Dear Sir,

Many thanks for your kind pamphlet. I stand in admiration that you possess such an exact and extensive erudition in matters musical. I know South India would not have come out so triumphant in the Baroda Conference, if you had not been present there. But what about the Conference? Is there no second Conference? Probably the Baroda Conference had a special aim *i.e.*, putting down Deval & Co. That over, people there have gone to sleep! Why don't you convene a similar Conference here and invite people from other parts as well? You are the properest person I think. Praying for your long life and prosperity.

I am ever yours,

2—4—1917. (Sd.) M. S. RAMASWAMI AIYAR.

1322, *New Street*,
MADURA,
2-4-1917.

M. S. RAMASAMI IYER, B.A., B.L., L.T.

பிரியமுள்ள ஐயா,

தாங்கள் அனுப்பிய சிறிய புத்தகத்திற்காகத் தங்களுக்கு அநேக வந்தனம் சொல்லுகிறேன். சங்கீத விஷயத்தில் தங்களுக்கு இருக்கும் நுட்பமும் விசாலமுமான அறிவைப்பற்றி நான் நினைக்கையில் ஆச்சரியத்தால் பிரமை கொள்ளுகிறேன். தாங்கள் பரோடா கான்பரென்சில் ஆஜராயிராதிருந்தால் தென்னிந்தியா அவ்வளவு தூரம் வெற்றியடைந்திருக்காது என்பதை அறிவேன். ஆனால் அந்தக்கான்பரென்ஸ் என்ன ஆனது? இரண்டாவது கான்பரென்ஸ் நடக்கப்போகிறதோ? ஒரு வேளை பரோடா கான்பரென்ஸ் ஒரு முக்கிய காரியத்திற்கென்று ஏற்பட்டதுபோல் தெரிகிறது. அதாவது, தேவாலயும் அவரைச் சேர்ந்தவர்களையும் ஆழத்தில் அமிழ்த்தவோ? அது நிறைவேறிவிட்டது என்று கண்டவுடன் அங்குள்ளவரெல்லாரும் உறங்கிப்போனார்கள் போல் தெரிகிறது! அதேவித கான்பரென்ஸ் இங்கு ஏற்படுத்தி இந்தியாவின் பல பாகங்களில் உள்ளவர்களைத் தாங்கள் ஏன் அதற்கு வரவழைக்கக்கூடாது? அப்படிச் செய்வதற்குத் தாங்கள் மாத்திரம் தான் தகுதியுள்ளவர்கள் என்று நான் நினைக்கின்றேன். தாங்கள் நீடூழி க்ஷேமமாய் வாழ்ந்திருக்க வேண்டுமென்பதே என் பிரார்த்தனை.

எப்போதும் தங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்) **M. S.** ராமசாமி ஐயர்.

R. CHAKRAPANI RAO B.A.,
RETD. DT. REGISTRAR AND
TANJORE, MUNICIPAL CHAIRMAN.

TANJORE,
16th, April 1917.

Dear Sir,

My best thanks have been due to you, for a long time, for having kindly sent me your replies to the criticism of Mr. Clements. I have perused the papers with great interest and pleasure.

You have made, the Science of Indian Music the study of a life-time, and have brought to bear upon it, a clear intellect, calm judgment, and above all a passionate love of the Art. No wonder the results are so valuable.

I was present at the last musical Conference in your house, some months back, and witnessed the frank and systematic manner in which the discussions were conducted. You have also been kind enough to explain to me your views, with practical illustrations—both vocal and instrumental—by your accomplished daughters. Their performance is, I need hardly say—exquisite.

I am sure that the fairness and correctness of your expositions, will eventually be acknowledged by Mr. Clements, and other controversialists, and full justice rendered to your labour of love in so difficult and agreeable a field of research.

Yours sincerely,
(Sd.) R. CHAKRAPANI RAO.

R. CHAKRAPANI RAO, B.A.,
Retired Dt. Registrar &
Tanjore, Municipal Chairman.

TANJORE,
16th April 17.

பிரியமுள்ள ஐயா,

கிளமெண்ட்ஸ் துரை யெழுதிய மறுப்புக்குத் தாங்கள் எழுதிய மறுப்பை எனக்கு அனுப்பி யதற்காகத் தங்களுக்கு உண்மையான வந்தனம் சொல்லுகிறேன். இதைப்பற்றி நான் எழுதத் தாமதித்ததா னது எனக்கு வருத்தமாயிருக்கிறது. நான் தங்களுடைய வியாசத்தை அத்தியந்த பிரீதியுடன் பார்வை யிட்டேன்.

இந்திய சங்கீத சாஸ்திரத்தை உங்கள் சீவகாலம் முழுதுமாகத் தாங்கள் ஆராய்ச்சி செய்திருக்கிறீர் கள். அது விஷயத்தில் தங்களுடைய தெளிவான புத்திகூர்மையும், வெகு சாந்தத்தோடு நியாயங்களை எடுத்துச் சொல்லும் விதமும், எல்லாவற்றிற்கும் மேலாக அந்தச் சாஸ்திரத்தில் தங்களுக்கு இருக்கும் பிரியமும் நன்றாய் வெளியாகிறது. இதனால் உண்டான பயன் மிக அபூர்வமானது என்பது ஆச்சரியப்படத்தக்கதல்ல. சில மாதங்களுக்கு முன் தங்கள் அகத்தில் கூடிய சங்கீத கான்பரென்சுக்கு நானும் வந்திருந்தேன். அப்போது தர்க்கங்கள் யாவும் யாருக்கும் புலப்படும்படி வெளிப்படையாகவும் ஒழுங்காகவும் நடத்தப்பட்டதைக் கண்ணால் பார்த்தேன். அதல்லாமல் தங்களுடைய கொள்கைகளையும் அவற்றின் ருசுக்களையும் தங்கள் குமாரத்திகளின் பாட்டு வீணை முதலியவைகளால் எனக்கு நேரிலும் விளக்கிக்காட்டினீர்கள். அந்தக் குழந்தைகள் பாடிக்காட் டினதானது இனிமையிலும் இனிமையானது என்று நான் சொல்லவேண்டிய அவசியமில்லை.

தங்களுடைய விஸ்தரிப்பானது தகுந்ததென்றும் முற்றிலும் சரியானதென்றும் எப்படியாவது கிள மெண்ட்ஸ் துரையும் மற்றும் அவரைச்சேர்ந்தவர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்றும் நான் முழு நிச்சயங்கொண் டிருக்கிறேன். அப்படிச் செய்வார்களானால் சங்கீத சாஸ்திர விஷயத்தில் தாங்கள் மனப்பூர்வமாயும் மிகப்பிரியத் தோடும் செய்து வந்த கடினமான இந்த வேலைக்கு ஒரு நியாயமான பிரதிபலன் கிடைக்குமென்பதும் நிச்சயம்.

தங்களின் உண்மையுள்ள,
(ஒப்பம்) R. சக்ரபாணி ராவ்.

The Social Reform Advocate—7th April 1917. The Srutis in Indian Music.

This book is a refutation of the position taken up by Mr. E. Clements that there are 22 Srutis in the Indian octave and is in reply to a letter from this gentleman to the Rao Sahib controverting the position assumed by the Rao Sahib. The reply sometimes oversteps the bounds of controversial dignity and is full of humorous bits which are not always graceful.

The question at issue between the disputants is as to whether there are 22 or 24 Srutis in the octave and primarily whether the octave divisions are of equal temperament or unequal and according to some natural scale.

Mr. Clements claims that the scales used are natural scales and that the system of equal temperament is quite alien to Indian music. On the other hand the Rao Sahib claims that the Indian scale is one based on equal temperament and so the octave is divided into 12 semitones, these being further sub-divided into 24 quarter tones and so on. His argument receives strong testimony from some verses on Isai Tamil in an ancient Tamil work of about the 3rd century A. D., which show that in the South at any rate the system of equal temperament was in vogue. The question is rather a difficult one to decide without the opportunity of hearing the melodies rendered according to both systems. The Rao Sahib certainly has the better of the argument, and if his dictum is true it will be much easier for Hindu music lovers to evolve a regular system which can be used by the ordinary person with a certain amount of ease.

As far as one can gather the special harmonium constructed by Mr. Clements and produced before the Baroda Conference failed entirely to give a correct interpretation of Indian *ragas* and did not commend itself to the musical experts present.

It is a great pity that the report of this Baroda Conference has not yet been published. It is to be regretted that musical questions of this sort should become matters of bitter controversy rather than matters of serious and friendly discussion.

It is hoped that others will take up this matter and try to work it out by careful experiment rather than by reference to ancient classics.

Both protagonists are to be commended for the study which they have given to Indian music; and the Rao Sahib is to be congratulated upon his careful researches into ancient classics as well as upon his scientific experiments upon the notes themselves. We hope that His Highness the Maharajah of Baroda will shortly summon another Conference on Indian music and that the question of the Srutis in present use may be settled once for all so that an ordered system may be built up.

As it is, we have to decide upon insufficient evidence for one side or the other, and in a matter which will vitally affect Indian Music in the future. If Mr. Clement's position is adopted, then Indian Music must either return to its chaotic condition or else become a kind of westernised product. If on the other hand the Rao Sahib is correct, there will be no difficulty in accurately rendering all Indian notes and in teaching Indian Music according to a thoroughly scientific system. It may be said that the practice in the South has always very largely followed the method commended by the Rao Sahib while the North has relied far more upon tradition for the production of the proper notes. This fact partly accounts for the positions taken up by the two protagonists, Mr. Clements having lived in the North and not having come into contact with Carnatic Music.

The Social Reform Advocate—7th April 1917.

இந்திய சங்கீத சுருதிகள்.

தஞ்சை ராவ் சாயப் M. ஆபிரகாம் பண்டிதர் அவர்களால் எழுதப்பட்டது.

இந்திய சங்கீத ஸ்தாயியில் 22 சுருதிகள் உண்டென்று அபிப்பிராயப் படுகிற கிளமெண்ட்ஸ் துரை யைக் கண்டித்து இது எழுதப்பட்டது. ராவ் சாயப் அவர்களின் அபிப்பிராயத்தை மறுத்து கிளமெண்ட்ஸ் துரை எழுதியதற்கு இது பதில். இந்த மறுப்பானது சில சமயங்களில் தர்க்கத்துக்குரிய ஒரு பெருமைக்கு இருக்கவேண்டிய எல்லையைக் கடந்துவிடுகிறது. அதில் சிலேடைப் பிரயோகமான துக்கடாக்கள் எராளமா யிருப்பதால் சில சமயங்களில் அவ்வளவு சுகமாயில்லை.

இரு வாதக்காரருக்கும் உள்ள விவாதம் என்னவென்றால் ஸ்தாயியில் உள்ள சுருதிகள் இருபத்தி ரண்டோ, இருபத்துநான்கோ என்பதும் அவைகள் சமபாகமுள்ளவையோ அல்லது ஒழுங்கீன இடைவெளி களாலான Natural ஸ்கேலைச் சேர்ந்தவையோ என்பதும்தான்.

கிளமெண்ட்ஸ் துரை இந்திய சங்கீதத்தில் உபயோகிக்கப்படுகிற ஸ்கேல்கள் இயற்கையில் அமைந் துள்ள Natural ஸ்கேல்கள் என்றும் சம இடைவெளிகளாலான ஸ்கேல் இந்திய சங்கீதத்திற்கு முற்றிலும் அந்நியமென்றும் அபிப்பிராயப்படுகிறார். ஆனால் மறுபட்சத்தில் ராவ் சாயப் அவர்கள் இந்திய சங்கீத ஸ்கேல் சம இடைவெளிகளுள்ளதென்றும், ஸ்தாயியில் 12 அரைச்சுரங்கள் என்றும், இன்னும் துட்பமான 24 முத லிய சுரங்கள் அதில் உண்டென்றும் சொல்லுகிறார்கள். கி. பி. 3ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஆதித்தமிழ் நூலாகிய இசைத்தமிழில் உள்ள சில சூத்திரங்களைக்கொண்டு ராவ் சாயப் அவர்கள் தன் கொள்கையைப் பல மாய் ஸ்தாபிக்கிறார்கள். இதனால் மற்ற இடங்களில் இல்லாவிட்டாலும் தென்னாட்டில் சம இடைவெளிக ளுள்ள முறை உபயோகத்திலிருந்ததாகத் தெரிகிறது. இரு முறைப்படியும் இராகங்கள் பாடப்படுவதை கேரில் சோதித்தறிந்தாலொழிய எந்தக்கட்சி சரியென்று சொல்லுவது கஷ்டம். விவாதத்தைப் பார்த்தால் ராவ் சாயப் அவர்கள் சொல்லுவதுதான் அதிக நிச்சயமான உண்மை. அவர்கள் கொள்கை சரியாயிருக்கும் பட்சத்தில் இந்திய சங்கீதத்தில் பிரியப்பட்டவர்கள் சாதாரண ஜனங்களும் எளிதில் கற்கும்படியான ஒரு முறையை அதிலிருந்து உண்டாக்குவது வெகு சுலபமாயிருக்கும்.

புத்தகத்தில் சொல்லப்படுவதைக் கவனித்தால் தன் கொள்கைக்கென்று விசேஷமாய்ச் செய்யப் பட்ட சுருதி ஹார்மோனியமானது பரோடா கான்பரென்சின் முன் கிளமெண்ட்ஸ் துரையால் அரங்கேற்றப் பட்டபோது இந்திய ராகங்களைச் சொல்வதில் முற்றிலும் தவறிப்போனதுமல்லாமல் அங்கு வந்திருந்த சங்கீத வித்வான்களால் கண்டனம் பண்ணப்பட்டது என்றும் அறிகிறோம்.

இந்த பரோடா கான்பரென்சைப்பற்றிய ரிப்போர்ட் இன்னும் பிரசுரமாகாதது பரிதாபம். சங்கீ தத்திற்குரிய விஷயங்கள் நேக விஷயமாய் தர்க்கிக்கப்படாமல் கடும் விவாதத்திற்குள்ளாவது விசனிக்கப்பட த்தக்கதே.

மற்றவர்கள் இவ்விஷயத்தைத் தாங்கி பூர்வ நூல்களின் ஆதாரத்தை அதிகமாய்ப் பாராட்டாமல் அனுபவ விஷயமாய் அவைகள் சரிதானு என்று பரீக்ஷை பார்ப்பார்கள் என்று நம்புகிறோம்.

இந்திய சங்கீதத்தில் ஆராய்ச்சிசெய்த விஷயமாக இருவரும் புகழப்படவேண்டியவர்கள். பூர்வ நூல்களே ஜாக்கிரதையாய் ஆராய்ந்த விஷயத்திலும் சுருதிகள் விஷயமாய் அவர்கள் செய்திருக்கிற சாஸ்திர ஆராய்ச்சிகளையும் கவனித்தால் நாம் ராவ் சாயப் அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். His Highness பரோடா மகாராஜா அவர்கள் சீக்கிரம் இந்திய சங்கீத ஆராய்ச்சிக்காக இன்னுமொரு கான்ப ரென்சு கூட்டுவார்களென்று நம்புகிறோம். அப்போது தற்கால பழக்கத்திலிருக்கும் சுருதிகள் இவையென்று ஒருவித முடிவு ஏற்படுமானால் சங்கீதத்திற்கு ஒரு ஒழுங்கான முறையும் ஸ்தாபிக்கப்படலாம்.

ஆனால் இப்போது காரியங்கள் எப்படி இருக்கிறதென்றால், பிற்கால இந்திய சங்கீதத்தை நிலை நிறுத்தவேண்டிய ஒரு விஷயத்தைப்பற்றிப் போதுமான ஆதாரமில்லாதிருக்க நாம் இருபக்ஷத்தைப் பற்றியும் ஏதாவது ஒரு முடிவு சொல்லவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். கிளமெண்ட்ஸ் துரை சொல்வது சரியானது என்று நாம் முடிவு சொன்னால், ஒன்று, இந்திய சங்கீதம் முற்காலத்தில் இருந்த குழப்பமான நிலைமைக்குத் திரும்பும் அல்லது இந்திய சங்கீதம் மேற்றிசை சங்கீதத்தாலானதாய்விடும். ஆனால் ராவ் சாயப் அவர்கள் சொல்லுவது சரியென்று ஒப்புக்கொண்டால் இந்திய சங்கீதத்தில் வழங்கும் எல்லா சுருதிகளையும் சரிவரப் பாடுவதில் கஷ்டமிராது. இந்திய சங்கீதத்தை முழுவதும் சாஸ்திர முறையுடன் யாவருக்கும் சொல்லியும் வைக்கலாம். தென்னாட்டார் ராவ் சாயப் அவர்கள் சொல்லுகிற முறையையே கையாடி வந்திருக்கிறார்களென்று சொல்லலாம். ஆனால் வடநாட்டாரோ சரியான சுருதி விஷயத்தில் பரம்பரையை அனுசரிக்கிறார்களேயொழிய மற்றப்படியல்ல. இருவரும் வெவ்வேறு கட்சியை எடுத்துக்கொண்டதற்கு ஒரு காரணமென்னவென்றால் கிளமெண்ட்ஸ் துரை இருப்பது வடநாடு. அவர் கர்நாடக சங்கீதத்தையே கேட்டதில்லை. ராவ் சாயப் அவர்களோ தென்னாட்டிலே பிறந்து வளர்ந்தவர்கள்.

To the Editor, The Social Reform Advocate, Madras.

ஐயா,

Mr. கிளமெண்ட்ஸ் I. C. S. துரையவர்களுக்கு எழுதிய மறுப்பின்மேல் தாங்கள் எழுதிய அபிப்பிராயத்தில் சிற்சில இடங்களில் அளவு கடந்ததென்று சொல்லியிருக்கிறீர்கள். Mr. கிளமெண்ட்ஸ் துரையவர்கள் எழுதிய தூண்டிலில் பொதிந்த மீன் இரை போன்ற வசனங்களைக் கவனித்தீர்களில்லை. எவ்விதத்திலும் Mr. கிளமெண்ட்ஸ் துரையவர்கள் சங்கீத சாஸ்திரத்தின் உண்மைகளை உணரும்படி எழுதினதேயொழிய அளவு கடந்து எழுதவில்லை. மற்றும் என் முறையைப்பற்றி சங்கீத விஷயமான நற் குறிப்புகளைப் பிரசுரஞ்செய்ததற்காக நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

இங்ஙனம்,

தஞ்சை,
1—6—17.

மு. ஆபிரகாம் பண்டிதர்.

New India, Madras 21st April, 1917.

Few Remarks on Messrs K. B. Deval's 22 Srutis and E. Clement's (I.C.S.) 24 and 25 Srutis, by Rao Sahib M. Abraham Pandither.

(The Lawley Electric Printing Press, Tanjore.)

This little pamphlet of 16 pages is intended to be a criticism on the views of Messrs. Deval and Clements regarding the number of Srutis used in Indian music. This is a much-discussed point in the theory of Indian music and we do not think that definite conclusion has been come to on it till now. It is very difficult to see how any such conclusion can be arrived at. No system of music denies the fundamental 7 notes and there we have the common basis of all kinds of music. With regard to the different Srutis employed there may and must be differences.

The pamphlet is obviously too technical to be of any use to the lay reader; but one who studies it throughly will find much food for thought. Mr. Pandither takes exception to some of the opinions of Messrs. Deval and Clements, but we do not feel sure if some of the author's statements cannot be taken exception to. The author pronounces opinions but does not seem to prove them from the standpoint of those whose views he criticises. There is one observation which is certainly true and which every musician will acknowledge as such; and that is:—"when the swarams are arranged in equal semi-tones in an octave, the change of gramam would not result in any new swaram. The same applies to the scale with 22 Srutis also. No new swaram can possibly occur in the middle in spite of the change of gramam. The general opinion is that however the Srutis might be changed for a gramam, the total number of Sruris cannot possibly more

thus 22." Change of gramam is only relative, and no intrinsic alteration can take place in the mutual relation between the different Srutis of a scale by such a change.

The tables on on pages 4, 14 and 15 are very instructive and throw a flood of light on many of the obscurities in the theory of Indian music. Our author must have taken a good deal of trouble in preparing them, and we congratulate him thereon.

One observation we would make here. After all there does not seem to be much practical use in discussing the question about the number of Srutis. There is no difference of opinion as far as the 12 primary Srutis are concerned; and as for the intermediate Srutis, each individual musician is automatically using some of them. While experts employ them consciously and make diliberate use of them in the variations of a tune, an ordinary singer unconsciously makes use of some of them. And, again, it may be asked why there should be only 22 or 24 or 25 Srutis; in fact the interval between any two consecutive Srutis can be divided into many sub-divisions and the Srutis resulting there from may be used—at least those of them which produce a pleasing effect on the hearer. A self-consistent system can he developed with any or all of these divisions and different authors in ancient India have evidently followed their own different systems though some of them approach one another to a very great extent.

R. S.

நியூ இந்தியா, 21—4—17.

Mr. தேவால் அவர்களுடைய 22 சுருதியைப்பற்றியும், Mr. கிளமெண்ட்ஸ் அவர்களுடைய 24, 25 சுருதிகளைப்பற்றியும் மகா-ரா-ரா-ஸ்ரீ ராவ் சாகேப் ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் எழுதிய சிறு புத்தகத்தைப் பற்றிய சில குறிப்புகள்.

16 பக்கங்களடங்கிய இந்தச் சிறு புத்தகமானது இந்திய சங்கீதத்தில் வழங்கி வரும் சுருதிகளைப் பற்றிய கிளமெண்ட்ஸ் தேவால் இவர்களுடைய கொள்கையைக் கண்டிப்பதற்காக எழுதப்பட்டிருக்கிறது. இந்திய சங்கீத சாஸ்திர சுருதி விஷயமானது பலராலும் பல அபிப்பிராயங்கள் சொல்லப்பெற்றதாயிருப்பதால் இதுவரையிலும் அதைப்பற்றி முடிவான அபிப்பிராயம் சொல்லப்படவில்லை. அப்படி முடிவான அபிப்பிராயம் சொல்லுவதும் இலேசல்ல. எல்லாவித முறைகளும் சப்த சுரங்களே ஒப்புக்கொள்வதால் இதையே எல்லா முறைகளுக்கும் பொதுவான ஆதாரமாகக் கொள்ளலாம். ஆனால் உபயோகிக்கப்படும் சுருதிகள் விஷயத்தில் வித்தியாசமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. அப்படி இருப்பதுவும் அவசியமே.

இந்தச் சிறு புத்தகமானது சாஸ்திர விஷயத்தைப் பற்றிச் சொல்லுவதால் சங்கீதந் தெரியாதவர்கள் அதை அறிவது கூடியகாரியமல்ல என்று தெரிகிறது. ஆனால் அதை உள்நுழைந்து படித்துப்பார்ப்பவர்கள் யோசிக்கும்படியான அநேக காரியங்களே அதில் காண்பார்கள். பண்டிதரவர்கள் கிளமெண்ட்ஸ் தேவால் இவர்களுடைய கொள்கைகளில் சில தப்பு என்று சொல்லுகிறார்கள். ஆனால் அப்படி அவர்கள் கண்டிப்பது சில விடங்களில் சரியல்ல என்று நமக்குப்படுகிறது. நூலாசிரியர் கிளமெண்ட்ஸ் தேவால் அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கண்டிக்கிறார்கள். ஆனால் அது விஷயங்கள் தப்பு என்று ருசு ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவர்கள் சொல்லுவதில் ஒரு அபிப்பிராயம் முற்றிலும் சரியென்று ஒவ்வொரு சங்கீதக்காரரும் ஒப்புக்கொள்ள வேண்டியது. அதென்ன வென்றால், ஒரு ஸ்தாயியிலுள்ள சுரங்கள் சம அளவுள்ளவைகளாய் இருக்கும்போது கிராமம் மாற்றினால் புதிதாய் ஒரு சுரமும் உண்டாகாது என்பதே. இந்த அபிப்பிராயமானது 22 சுருதி முறைக்கும் ஒத்து இருக்கிறது. கிரகம் மாற்றினபோதிலும் நடுவில் புது சுரம் உண்டாகவே முடியாது. சாதாரணமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட அபிப்பிராயம் என்னவென்றால் சுருதிகள் எந்த விதமாய் கிராமம் மாற்றினாலும் ஒரு ஸ்தாயியிலுள்ள சுருதிகள் 22 க்கு மேல் இராது என்பதே. கிராமம் மாற்றுதலானது சமயத்துக்குத்தகுந்தபடி நேரும். அப்படி மாற்றுவதினால் ஸ்தாயியின் சுரங்களுக்குள்ள தாரதம்மியம் ஒருநாளும் மாறாது.

நாலாம், பதினாலாம், பதினைந்தாம் பக்கங்களில் கொடுத்திருக்கும் அட்டவணைகள் அதிக பிரயோஜனமுள்ளவை. இந்திய சங்கீதத்திலுள்ள அதிக கருகலான பாகங்களே அவைகள் தெளிவாய் எடுத்துக் காண்பிக்கின்றன. நூலாசிரியர் இவைகளைத் தயார் செய்வதில் அதிக பிரயாசை யெடுத்திருக்க வேண்டியது. இதற்காக அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறோம்.

நாம் இங்கே சொல்லவேண்டிய காரியம் ஒன்றுண்டு. அதென்னவென்றால் சுருதிகளின் தொகை யெத்தனையென்று போர் புரிவது அதிக பிரயோசனத்தைத்தராது. 12 சுருதிகள் இருக்கிறதென்பதைப்பற்றி அநேகமாய் ஒற்றுமையான அபிப்பிராயம் இருக்கிறதாகத் தெரிகிறது. நடுவில் வரும் சுருதிகளே அவனவன் தனக்குத் தோன்றியபடி ஒரு முறையில் கட்டுப்படாமல் உபயோகித்து வருகிறான். ஆனால் சங்கீத வித்வானே அவைகளைத்தெரிந்து உபயோகிக்கிறான். சாதாரணமாய்ப் பாடுகிற ஒருவன் தன்னையறியாமலே அவற்றில் சில சுருதிகளே உபயோகிக்கிறான். மேலும் ஏன் 22 அல்லது 24 அல்லது 25 சுருதிகள் தான் ஒரு ஸ்தாயியில் உண்டென்று சொல்லவேண்டும்? அடுத்தாப்போல் உள்ள இரண்டு சுருதிகளுக்கு நடுவிலுள்ள இடைவெளியை எத்தனையோ சிறிய சமபாகங்களாக வகுத்து அவைகளில் காதுக்கு இனிமையானவைகளே உபயோகிக்கலாம் இவைகளில் எதையாவது அல்லது அத்தனையையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு தகுதியான ஒரு முறை ஸ்தாபிக்கப்படுவது கூடியதே. பூர்வ இந்தியமக்கள் தங்கள் தங்கள் முறையையே வழங்கி வந்திருக்கிறார்கள். ஆனால் அவைகளில் சிலருக்குள் ஒருவிதமான ஒற்றுமையிருந்ததாகத் தெரிகிறது.

To the Editor, New India, Madras.

ஐயா,

Mr. தேவால், Mr. கிளமெண்ட்ஸ் I. C. S. அவர்களின் சுருதி முறைகளைப்பற்றி எழுதிய புத்தகத்திற்கு R. S. என்று கையொப்பமிட்டவர் எழுதிய அபிப்பிராயத்தில் சுருதியைப்பற்றி முற்றிலும் ஒவ்வாத சில குறிப்புகளைக் கவனித்தேன். கருணாமிர்த சாகரத்தில் 1137-1140-ஆம் பக்கங்களிலும் மற்றிடங்களிலும் விபரம் சொல்லியிருக்கிறோம்.

'ஒரு ஸ்தாயியிலுள்ள சுரங்கள் சம அளவுள்ளவைகளாயிருக்கின்றனவென்று ஒவ்வொரு சங்கீதக்காரரும் முற்றிலும் சரியென்று ஒப்புக்கொண்டால் அதனால் கிரகம் மாற்றும் பொழுது நடுவில் சிறு சுரம் உண்டாக முடியாது. அவைகளுடைய தாரதம்மியம் ஒரு காலும் மாறுது' என்று சொல்வது முற்றிலும் உண்மையே. இதனால் ஒரு ஸ்தாயியில் 22 சுருதியில் கிரக மாற்றுவதனால் 25 சுருதிகளுண்டாகிறதென்று புஸ்தகம்எழுதி 25 சுருதியில் ஹார்மோனியம் செய்து பிரசுரித்த Mr. கிளமெண்ட்ஸ் அவர்களுடையமுறை முற்றிலும் சரியல்லவென்று சொல்லவேண்டுமல்லவா? இதைத்தான் தப்பென்று ருசுப்படுத்தியிருக்கிறோம். பல முகமாகக் கண்டித்துமிருக்கிறோம். இந்த ஒரே குறிப்பைக்கொண்டு Mr. கிளமெண்ட்ஸ் தேவால் அவர்களுடைய அபிப்பிராயம் யாவும்தள்ளப்பட்டன என்று அறியலாம். இதைத்தானே அவரும் எழுதுகிறார். பின்னேயேன் என்னைக் குறை கூறவேண்டும்?

'சுருதிகளின் தொகை எத்தனை யென்று போர்புரிவது அதிகப் பிரயோஜனத்தைத் தராது என்றும் ஏன் ஒரு ஸ்தாயியில் 22, 24, 25 சுருதிகள்தான் உண்டென்றும் சொல்ல வேண்டும்? அதன்பின் இரண்டு சுருதிகளுக்கு நடுவிலுள்ள இடைவெளிகளே எத்தனையோ சிறிய சம பாகங்களாக வகுத்து அவைகளே உபயோகிக்கலாம் என்றும் அவற்றை ஆதாரமாக வைத்துக் கொண்டு தகுதியான ஒரு முறை ஸ்தாபிப்பது கூடியதே என்றும்' எழுதுவது முன்னுக்குப் பின் விரோதமாயிருக்கிறது. சுருதிகளைப்பற்றிய கணக்குகளையும் நாட்ட சுருதிகள் வழங்கி வரும் கீர்த்தனைகளின் அட்டவணையையும் கவனித்திருப்பாரானால் இப்படி எழுதமாட்டார்.

மற்றும் என் முறையைப்பற்றி சங்கீத விஷயமான நற்குறிப்புகளைப் பிரசுரஞ்செய்ததற்காக நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

தஞ்சை, 1—6—17.

மு. ஆபிரகாம் பண்டிதர்.

பரோடா ஆல்-இந்திய மியூசிக் கான்பரென்ஸ் ரிப்போர்ட்.

Telegraphic Address:
"EDUCATION" BARODA"

Office of the Minister of Education,
Baroda, 9th May 1917.

To

RAO SAHIB
M. ABRAHAM PANDITHER,
Karunanithi Medical Hall,
TANJORE.

DEAR SIR,

In reply to your letter dated the 4th instant, I have to inform you that the Report on the "All India Music Conference is not yet ready. As soon as it will be out, a copy of the same will be sent to you. As a note has been kept in our office to that effect, you need not take the trouble of reminding this office in the matter.

Yours faithfully,
S. V. PENDSE,
For, Minister of Education.
Baroda State.

தந்தி விலாசம்:
"EDUCATION" BARODA"

Office of the Minister of Education,
Baroda, 9th May 1917.

To

RAO SAHIB
M. ABRAHAM PANDITHER,
Karunanithi Medical Hall,
TANJORE.

பிரியமுள்ள ஐயா,

தாங்கள் 4ம் தேதி எழுதிய கடிதத்திற்குப் பதிலாக நான் சொல்லுகிறது என்னவென்றால், ஆல் இந்தியா மியூசிக் கான்பரென்ஸ் ரிபோர்ட்டு இன்னும் தயாராகவில்லை. அது பிரகரமானவுடன் தங்களுக்கு ஒரு காப்பி அனுப்பப்படும். அது விஷயத்தைப்பற்றி ஆபீஸில் நாங்கள் குறிப்பு வைத்திருக்கிறபடியால் தாங்கள் இனிமேல் அதைப்பற்றி ஞாபகப்படுத்தும்படி இந்த ஆபீசுக்கு எழுதவேண்டிய நிமித்தமில்லை.

தங்கள் உண்மையுள்ள,
S. V. PENDSE,
For, Minister of Education.
Baroda State.

MAHARANI'S
COLLEGE FOR WOMEN
BANGALORE
LIBRARY
No.....

கர்நாடக சங்கீதம்.

The Christian Patriot, 2nd June 1917.

ஒரு ஸ்தாயியில் எத்தனை சுருதிகள் அல்லது கால் சுரங்கள் உண்டு என்ற கேள்விதான் பதில் சொல்வதற்கு அதிக கடினமான கேள்விகளில் ஒன்று—அதைவிட கடினமான கேள்வியே கிடையாது என்று நாம் சொல்லுகிறதில்லை. இது விஷயமாய் இரண்டு சங்கீதக்காரராவது ஏக அபிப்பிராயம் சொல்லுகிறதில்லை. கால் சுரங்கள் வரப்பெறுத ஐரோப்பிய சங்கீதத்தில் ஒரு ஸ்தாயியில் ஏழு ஸ்வரங்களையும் 12 அரைஸ்வரங்களையும் ஸ்தாபித்திருக்கிறார்கள். சுரங்களுக்கிடையிலுள்ள வெளிகளைச் சமமாகப் பிரித்து அவர்கள் தங்கள் மனதிலுள்ள எண்ணங்களை மற்றவர் இலேசில் கிரகிக்கும்படியான விதமாய் நொட்டேஷனில் எழுதி வைத்ததுமல்லாமல் பியானோ முதலிய வாத்தியங்களிலும் அதே விதமாய் கிலையானஸ்வரங்களை ஏற்படுத்தி சங்கீதம் யாவரும் எளிதில் கற்றுக்கொள்ளும்படியான ஒழுங்குகளையும் செய்திருக்கிறார்கள். ஆனால் நாம் இந்திய சங்கீதத்தைப்பற்றி இப்படி ஒரு ஒழுங்கு இருக்கிறதாகச் சொல்லமுடியாது. இவ்வித ஒழுங்கை ஸ்தாபிக்குமுன் ஒரு ஸ்தாயியில் எத்தனை சுருதிகள் இருக்கின்றனவென்பதை நிச்சயமாய் முடிவாய் ஸ்தாபித்தால்தான் இந்திய சங்கீதத்தை ஒழுங்கு படுத்துவதில் ஏற்படும் கஷ்டங்களில் ஒன்று நிவிர்த்தியாகும். முதலாவது சுருதி விஷயத்தைப்பற்றி எழுதினவர் சாரங்கதேவர். இவர் 13-வது நூற்றாண்டில் அநேக நரம்புகள் மீட்டிய வீணை அல்லது சோணமீற்றர் மூலமாய் ஒரு ஸ்தாயியில் 22 சிறிய இடைவெளிகள் உண்டென்றும், இடைவெளிகளுக்கு சுருதிகள் என்று பெயரென்றும் எழுதியிருக்கிறார். வட இந்தியாவில் பெரும்பாலும் வழக்கத்திலிருக்கிற இந்துஸ்தானி சங்கீதத்திற்கு ஆதாரம் இந்த சாரங்கதேவருடைய கொள்கையே. சொற்ப வருஷங்களுக்குள் தற்காலத்துள்ளவர்கள் அவருடைய அபிப்பிராயத்தை சாஸ்திர விஷயமாய் ஆராய்ச்சி செய்து அதின் தாரதம்மியங்களைக் கண்டுபிடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களுக்குள் Mr. தேவால் Mr. கிளமெண்ட்ஸ் முதலியவர்களைச் சொல்லலாம். தேவால் என்பவர் கணக்குகளின் மூலமாய் அதை ஸ்தாபிக்கப் பிரயாசப்பட்டார். Mr. கிளமெண்ட்ஸ் என்பவரும் அதேவித அபிப்பிராயத்தை ஸ்தாபிக்க முயன்றதில் 22 சுருதிகளுள்ள ஸ்கேல் தான் சாதாரணமாயுள்ளது என்றும், ஆனால் அவைகளுக்கிடையிலுள்ள இடைவெளிகள் சற்று பெரிதாயிருப்பதால் சாரங்கதேவருடைய 22 சுருதிகளுக்குமேல் ஒரு ஸ்தாயியில் 24 அல்லது 25 சுருதிகள் வரலாமென்றும் சொல்லுகிறார். ஆனால் நமக்கு அவசியமாய் வேண்டியவையெல்லாம் இந்த 22 சுருதிகளுக்குள் அடங்கினது என்று இருவரும் அபிப்பிராயப்பட்டு அதற்கேற்ற விதமாய் ஒரு சுருதி ஆர்மோனியமும் உண்டு பண்ணினார்கள். ஆனால் இது பரோடாவில் நடந்த ஆல்-இந்தியா மியூசிக் கான்பரென்சில் சரியானதல்லவென்று தள்ளப்பட்டது.

Mr. ஆபிரகாம் பண்டிதரவர்கள்—அவர்களைவிட கர்நாடக சங்கீதத்தில் பாண்டித்தியமுள்ளவர்கள் தென்னிந்தியாவில் கிடைப்பது அரிது—தேவால் கிளமெண்ட்ஸ் முதலியவர்கள் எடுத்துக்கொண்ட கஷ்டி தப்பு என்று அவர்களுடைய கொள்கைகளைக் கண்டிக்கிறார்கள். Mr. கிளமெண்ட்ஸுடைய இரண்டாவது கடிதத்திற்குப் பண்டிதரவர்கள் எழுதின மறுப்பிலும், தேவாலுடைய 22 சுருதிகளையும் கிளமெண்ட்ஸுடைய 24, அல்லது 25 சுருதிகளையும் கண்டித்து எழுதினதிலும் இவர்கள் இருவருடைய கொள்கைகளும் தென்னிந்தியாவில் ஒருநாளும் நிலைபெறுது என்று எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள். சாரங்கதேவர் சொல்லுவதற்கு மேல் இரண்டு கோட்டுகள் உண்டென்று தேவால் தன் கணக்குகளில் காண்பிப்பதால் தேவாலுடைய ஸ்கேலும் சாரங்கதேவருடைய ஸ்கேலும் ஒன்றல்ல என்றும் சாரங்கதேவருடைய ஸ்கேலில் வரும் சுரங்களைப் பெறுவதற்காக அவைகளைக் கொஞ்சம் குறைத்து அவர் சொல்லுவது கணக்கு விஷயத்தில் உதைக்கிறதென்றும் பண்டிதரவர்கள் ருசுப்படுத்தியிருக்கிறார்கள். கிளமெண்ட்ஸ் துரையும் சாரங்கதேவருடைய சுருதிகளுக்கு மேலாக இரண்டு மூன்று புது சுருதிகளைக் காதுக்கு இனிமையாயிருக்கின்றனவென்ற காரணத்திற்காகப் புதிதாய் உண்டு பண்ணுகிறதினால் அவரும் பிசகிப்போயிருக்கிறார் என்று எடுத்துக் காட்டுகிறார்கள். இப்படி ஒவ்வொரு வித்வானும் தன் இஷ்டப்பிரகாரம் சுருதிகளை உண்டுபண்ணலாம் என்றால் தானும் இரண்டு மூன்று சுரங்கள் மாத்திரமல்ல அநேகம் புது சுரங்களை உண்டுபண்ணக் கூடும் என்று பண்டிதரவர்கள் அபிப்பிராயப்படுகிறார்

கள். ஏனென்றால் சாரங்கதேவருடைய சுருதி இடைவெளிகள் கர்நாடக சங்கீதத்திற்கு ஏற்காத பெரிய இடைவெளிகளுள்ளவையாய் இருக்கின்றன. தொகையாய்ச் சொல்லவேண்டுமானால் Mr. பண்டிதரவர்கள் கிளமெண்ட்ஸ் துரைக்கு முற்றிலும் விரோதமான அபிப்பிராயத்தை ஆதாரமாகவைத்து வேலை செய்திருக்கள்.

கிளமெண்ட்ஸ் துரையுடைய ஆதார அபிப்பிராயம் என்னவென்றால் நாமாய் சரியாய் வைத்துக் கொண்ட கைகளாலான சம இடைவெளிகளுள்ள அரைச்சுரங்களாலான சங்கீதம் அருவருப்பானது. இவ்வித இடைவெளிகள் வந்து நுழைந்த காலமுதல் ஐரோப்பிய சங்கீதம் சீர் குலைந்து வருகிறது என்பதுதான். மேற்றிசை சங்கீதம் இந்த அருவருப்பைக்களைந்து முன்னேருடைய இனிமையான சம இடைவெளிகளில்லாத Natural ஸ்கேலுக்கு எப்போது திரும்பும் என்று ஆவலோடு காத்திருப்பதாகவும் கிளமெண்ட்ஸ் சொல்லுகிறார். இந்திய சங்கீதம் சம இடைவெளிகளுடையதாய் இராததால் தான் அது அதிக இனிமையுள்ளதாயிருக்கிறது என்று அவர் அபிப்பிராயப்படுகிறார். ஆனால் எதிர்க்கட்சியிலோ Mr. பண்டித ரவர்கள் ஸ்தாயியை 24 சம பாகங்களாக வகுத்ததினால் தான் கர்நாடக சங்கீதம் அத்தனை அழகும், சுத்தமும், சிறப்பும் மகிமையும் பொருந்தியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தனக்கு ஆதாரமாக அநேகமாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த தமிழ் நூல்களை மேற்கோளாகச் சொல்லி அப்போது இருந்ததுபோலவே தற்காலத்திலும் கர்நாடக சங்கீதம் இருக்கிறது என்கிறார்கள். தமிழ் வித்வான்கள் ஸ்தாயியை 48, 96 சம பாகங்களாகப்பிரித்த நுட்ப சுரங்களை உபயோகிக்கிறார்கள் என்றால் கர்நாடக சங்கீதத்தின் அருமையும் இனிமையும் விஸ்தாரமும் ஆத்மாவை நிரப்பிப்பரவசப்படுத்தத்தக்க நுட்பமும் விஸ்தாரமுமுள்ளது என்று எடுத்துச்சொல்லவும் வேண்டுமோ ? பரோடாவில் கூடியிருந்த பிரபல வித்வான்கள் Mr. பண்டிதரவர்களுடைய கல்வித்திறமை வாய்ந்த குமாரத்திகளின் சங்கீதத்தைப் புகழ்ந்து கொண்டாடினது ஆச்சரியமல்ல.

சுருதிகளைப்பற்றிய கடினமான கேள்வியைப்பற்றி அதில் தேர்ந்த புலவர்கள் சண்டைபோடும்படி நாம் விட்டுவிட்டு பண்டிதரவர்களின் பொறுமையுடன் கூடிய பிரயாசத்தைப்பற்றிப் பேசுவோம். மற்றவேலைத் தொந்தரவுகளின் மத்தியில் பொட்டரித்துப்போன ஓலை எடுகளை ஆராய்ந்து தென்னிந்திய சங்கீதத்தைப்பற்றிப் பூர்வத்தமிழ் ஞானிகள் சொன்னதைப் பண்டிதரவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் செய்த ஆராய்ச்சியானது அவர்களுடைய சரிபாகமுள்ள 24 சுருதிமுறையை ஸ்தாபிக்கிறது. இதை இவர்கள் கணக்குகளின் மூலமாய் ருசுப்படுத்தினது மல்லாமல் தன் குமாரத்திகளைக்கொண்டு வித்வான்கள் ஆச்சரியப்படும்படியாக வீணை பாட்டு முதலியவற்றிலும் ருசுப்படுத்தியுமிருக்கிறார்கள். தற்காலம் திராவிடருடைய கல்வி முதலியவை திரும்ப உயிர்ப்பிக்கப்படுகின்றன. அது விஷயத்தில் ஆரியர்கள் தென்னிந்தியாவில் பிரவேசிக்கும் முன்னதாகவே தென்னிந்தியர் தம் சொந்த நாகரீகம், கவித்திறமை, சங்கீதம், சிற்பவேலை, சித்திரமெழுதுதல் முதலிய கலைகளில் சிறந்து விளங்கினார்கள் என்று உலகத்துக்கு வெளியாக்கப்படுகிறது. இந்தச் சமயத்தில் ஆதித் தமிழரின் மேலான சங்கீதத் தேர்ச்சியை எடுத்து ஸ்தாபிக்கும்படி ஒரு இந்திய கிறிஸ்தவருக்குக்கொடுத்து வைத்ததானது மேன்மையே. ஆரியருடைய நாகரீகமானது மற்றக் கலைகளைச் சூழ்ந்து கொண்டதுபோலவே சங்கீத வித்தையும் ஆரிய உடையைத் தரித்துக்கொண்டதில் அந்த சாஸ்திரத்தில் உபயோகப்படும் வார்த்தைகள் அநேகம் மாறினபோதிலும், தமிழ்ச் சங்கீதத்தின் முக்கிய அம்சம் அல்லது உயிர் அப்படியே மாறாமல் இருந்து சமஸ்கிருத சங்கீதத்தைவிட மேலெழும்பி உயர்ந்து சங்கீதத்தில் பிரியங்கொண்ட ஆயிரமாயிரம் ஆன்மாக்களை சந்தோஷப்படுத்திக்கொண்டு வருகிறது. கர்நாடக சங்கீதத்தைப்பற்றி ஒழுங்குடன் சொல்லி விஸ்தரிக்கும் பண்டிதரவர்களுடைய கருணாமிர்த சாகரம் என்னும் நூல் எப்போது வெளியாகுமென்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இதற்கிடையில் கர்நாடக சங்கீதத்திற்கென்று அவ்வளவு சிலாக்கியமான நூலை எழுதிய பண்டிதரவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறோம். தங்கள் தகப்பனாருடைய முறையை ருசுப்படுத்துவதில் தமது மேலான திறமையைக் காண்பித்த அவர்கள் குமாரத்திகளுக்கும் வாழ்த்துதல் சொல்லுகிறோம்.

S. I.

MAHARANI'S
COLLEGE FOR WOMEN
BANGALORE
LIBRARY
No.....

(True Translation.)

முடிவுரை.

கடவுள் கிருபையால் இப்புத்தகத்தின் முடிவைக்காணப் பெற்றோம். இதைத் தொடர்ந்து கவனித்துவந்த அன்பர்களே! பூர்வத்தமிழ் மக்கள், தாம் வழங்கி வந்த இசைத் தமிழாகிய சங்கீதத்தில் மிகத் தேர்ந்தவர்களாயிருந்தார்களென்றும், சுருதி விஷயமாய் மிக மேலான பதத்தைச் சொல்லியிருக்கிறார்களென்றும், அவைகளே தற்காலம் வழக்கத்திலிருக் கின்றனவென்றும் இனிவருங்காலத்திலும் நிலைத்திருக்கக்கூடியவையென்றும் மெய்ப்பிப்பது போதும் என்பதற்கு உதவியாக, பூர்வ தமிழ் நாட்டைப்பற்றியும், தமிழ் மொழியைப்பற்றியும் தமிழ் இசையைப்பற்றியும், முத்தமிழையும் வளர்த்து வந்த பாண்டிய அரசர்களைப்பற்றியும், முச்சங்கங்களைப்பற்றியும், இசையில் தேர்ந்த புலவர்களைப்பற்றியும், சில சொல்ல வேண்டியது அவசியமாயிற்று.

அதோடு சுருதி விஷயமாய்ப் பலர் அபிப்பிராயங்களையும், சங்கீத ரத்னாகர், பாரிஜாதக் காரர் முதலியவர்களின் அபிப்பிராயங்களையும், கணித மூலமாய் விளக்கிக்காட்டி, அவைகள் தற் கால கானத்திற்குப் பொருத்தமுள்ளவையல்ல என்று சொல்லித், தமிழ் நாட்டில் பூர்வம்தொட்டு வழங்கி வந்த நாலு பாலைகளையும், நால்வகை யாழ்களையும், அவற்றில் வழங்கிவரும் கவ்வாலு ஜாதி களையும், பதினெட்டு ஜாதிப்பண்களையும் எடுத்துக்காட்டி, ச-ப முறையாய் ஒரு ஸ்தாயியில் அமையும் பன்னிரண்டு சுரங்களுக்கும், வட்டப்பாலையில் வழங்கிவரும் 24 சுருதிகளுக்கும், அதன் மேல் திரிகோணப்பாலை, சதுரப்பாலைகளில் வழங்கி வரும் 48, 96 ஆன சுருதிகளுக்கும், லாகரித முறைப்படி செண்ட்ஸ் கணக்கும், வைபரேஷன் கணக்கும், ஒரு ஸ்தாயியில் சுரம், சுருதிகள் அமையும் அளவு கணக்கும், அவ்வளவில் கிடைக்கும் ஓசையின்படி தற்கால அனுபோகத்தில் வழங்கிவரும் கீர்த்தனைகளுக்கு நாலு அட்டவணையும், கொடுக்கவேண்டியதாயிற்று.

அதோடு 1916 வருஷம் மார்ச்சு மாதம் 20-ஆம்தேதி, ஹிஸ் ஹைனஸ் கெய்க்வார் மகா ராஜா அவர்கள் கூட்டிவைத்த ஆல் இந்திய மியூசிக் கான்பரென்ஸில் அரங்கேற்றி, யாவரா லும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயத்தைப்பற்றிய கடிதப்போக்கு வரத்தும், ஆக்ஷேபனைகளும். அவைகளுக்கு மறுப்பும், இத்துடன் சேர்க்கவேண்டியதாயிற்று. ரிப்போர்ட்டு இன்னும் வர வில்லை.

1916 வருஷம் ஆகஸ்டு மாதம் 19ம் தேதி கூடிய தஞ்சை சங்கீத வித்யா மகா ஜன சங்கத்தில் பஞ்சாயத்தார் முன்னிலையில் நடந்த விஷயங்களும், பஞ்சாயத்தார் தீர்மானமும், இச் சங்கத்திற்கு கலைமை வகித்த பரோடா, திவான் சாகிப் மகா-ரா-ரா-ஸ்ரீ V. P. மாதவராவ் C.I.E. அவர்களின் முடிவான அபிப்பிராயங்களும், சேர்க்கப்பட்டிருக்கின்றன.

சுருதியைப்பற்றிச் சொல்லிவந்த பல கனவான்களும், நூலாசிரியர்களும் தமக்குத் தோன்றியபடி சொல்லியிருப்பதால், அவர்கள் மதத்தைக்கண்டித்து, பூர்வ தமிழ் மக்கள் வழங்கி வந்த இசைத் தமிழின் இலக்கணமே மிகச் சிறந்ததென்று மெய்ப்பிக்க வேண்டியதாயிற்று. சுருதிகளைப்பற்றி இனியொருக்காலும் சந்தேகம்உண்டாகாதிருக்கவும், அவைகளைத் திட்டமாயறிந்து கொள்வதற்கும், இதுவே போதுமென்று நினைக்கிறேன். தற்காலம் சங்கீதங் கற்றுக்கொள் வோருக்கு எவை அவசியமென்று தோன்றிற்றோ, அவைகளை மட்டும் இங்கு எழுதினேன். அறிவிற் சிறந்த பெரியோர், இதில் காணப்படும் குற்றங்களை மன்னித்து, குணமானவைகளை விருத்திசெய்யவேண்டுமென்று மிகவும் வணக்கமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரண்டாம் புத்தகம்.

சிறந்ததென்று யாவராலும் கொண்டாடப்படும் தென்னிந்தியாவில் வழங்கிவரும் இராகங்களைப்பற்றி, முதற்புத்தகமாக எழுதிப் பிரசுரிக்க நினைத்த நான், தஞ்சை சங்கீத வித்யா மகா ஜன சங்கத்தில் சுருதிகளைப்பற்றி உண்டான வாதத்தை முன்னிட்டு, அவைகள் சங்கீதத் திற்கு முக்கியமானவை என்றும் பலரால் பல சந்தேகம் ஏற்கக் கூடியவை என்றும், அறிந்து தென்னிந்திய சங்கீதத்தின் சுருதிகளைப்பற்றி முதல் புத்தகமாக எழுதவேண்டியதாயிற்று.

இனிவரும் இரண்டாம் புத்தகத்தில், இராகங்களும், ஒரு ஆரோகண அவரோகணத் தில் கீதம் உண்டாக்கும் முறையும், அவற்றின் ஜீவ சுரம் கண்டு பிடிக்கும் வழியும், இராக சஞ் சாரம் செய்யும் விதமும் சொல்லப்படும். இது புதிதாக ஒரு இராகம் உண்டாக்குவதற்கு உதவுவது மாத்திரமல்லாமல், பழமையாய்ப் பாடிவரும் இராகங்களில் பிழைகளைத் திருத்திக் கொள்ளவும் உதவியாக இருக்கும். சுரஞானம் வந்தவர்களுக்கு இந்நூல் மிக அருமையானது. உலகிற்கு சூரியன், சந்திரனும் அந்தகற்கு கண்ணும் போல சங்கீத வித்வான்களுக்கு இன்பம் தரத்தக்கது. அச்சில் இருக்கிறது. விரைவில் வெளிவரும். எழுவகைத் தோற்றமாய், அவை யாவற்றின் உயிராய், உயிரில் உணர்வாய், உணர்வில் அறிவாய், அறிவில் ஆனந்தமாய், ஆனந் தத்தில் கீதமாய், கீதத்தில் இலயமாய் ஆனந்த நிருத்தமிடும் எல்லாம் வல்ல பெருமானின் திருவருளை வேண்டுகிறோம்.

தஞ்சாவூர்,
1—6—1917.

MAHARANI'S
COLLEGE FOR WOMEN
BANGALORE
LIBRARY
No.....

மு. ஆபிரகாம் பண்டிதர்.

முதற் புத்தகம் முற்றிற்று.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
		பாயிரம்.	
69	9	... ...	மமுத
70	12	வச்செல்	வழிச்செல்
71	20	அச்சு	அச்ச
94	21	instrumnetal	instrumental
103	10	சுருகி;	சுருகி 1 ;
105	32	eondemns	condemns
110	26	whieh...	which
		நூல்.	
4	21	இன்னிலை	இந்நிலை
4	36	கியானம்	ஞானம்
6	10	சூட்சம	சூட்சும. மற்றைய இடங்களிலும் இவ்வாறே திருத்திக்கொள்க.
6	19	அதற்கு	அதை
6	33	சொல்ல	சொல்வது
26	19	சதாபத	சதபத
30	16	சத்திய வீரத	சத்தியவிரத
45	15	பெயர்களோ	பெயர்களே
60	29	ஊர்	ஈர்
62a	31	மைத்	மைந்
66	9	ஒச்சர்	ஒச்சர்
70	13	இடைக்	இடைச்
78	2	உயிர்	உயர்
80	29	வாணஞர்	வாணஞர்
83	34	ிறங்கி	இரங்கி
91	8	துரை	துறை
102	19	அபினிசியா	அபிசெனியா
111	9	நாரீக	நாகரீக
111	23	நாளட	நாளடை
113	36	சந்தோஷத்தைக்	சந்தோஷத்தைத்
122	20	அறை	அரை
144	19	தன்னிலேயே	தன்னிலேயே
148	9	ராஜாஸ்திரயன்	ராஜாஸ்ரயன்

MAHARANI'S
COLLEGE FOR WOMEN
BANGALORE
LIBRARY
No. 376

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
151	2	1865	1856
153	19	லில்லை	வில்லை
153	25	முறைமை	முறை
155	35	தாண்டாற்	தண்டாற்
155	38	நிவந்தக்கார்	நிவந்தக்காரர்
173	29	பரகேசரி	ராஜகேசரி
182	8	முன்னிரு	முன்னிருந்
203	34	சமஸ்கி	சமஸ் '
221	21	நடராஜர்	நடராஜூர்
225	30	1865	1856
229	33	வீணை	வீணை
229	34	கிருஷ்ணன்	தக்ஷணமூர்த்தி
236	29	வருகிறதா	வருகின்றனவா
263	33	திருவையார்	திருவையாறு
287	15	hole	whole
292	9	l	l_n
292	23	l	l_n
296	30	து	இது
298	அட்	18-0.96	18-19.26
302	3	accoustics	acoustics
307	5	$337\frac{3}{4}$	$337\frac{1}{2}$
307	9	ஓசையின்	ஒசையின்
309	அட்	s^2 s_3 r_1 r_2 r_3	s^4 r_1 r_2 r_3 r_4
370	8	இப்புறட்டுகள்	இப்புரட்டுகள்
378	35	11/88	11/18
387	19	பொருக்கும்	பொறுக்கும்
395	1	திருஷ்டாந்தரங்கள்	திருஷ்டாந்தங்கள்
396	28	எற்படுத்தி	ஏற்படுத்தி
402	23	பஞ்மத்தை	பஞ்சமத்தை
419	23	பேதமானவை	பேதமானது
446	20	99, 151	99-151
457	39	முறையே	முறையோ
461	30	·34·78	34·78
470	5	பொருக்கி	பொறுக்கி. மற்றைய இடங்களிலும் திருத்திக்கொள்க.
481	16	5-வது	6-வது
488	4	பொருத்தமுடைதென்ற ...	பொருத்தமுடையதென்ற
511	12	அதை	அது
520	4	பாஷைக்கு	பாஷையில்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
521	6	இல்லாமல்லே	இல்லாமலே
526	33	ஸ்தாயாகி	ஸ்தாயியாகி
565		ஜாதி	ஜாதி
583	5	யிருககிறது	யிருக்கிறது
589	36	தீறறினின்	தீற்றினின்
596	32	முராய்ந்துற	முய்ந்துற
612	3	இன்னின்னச்	இன்னின்ன
614	37	செல்வழி	செவ்வழி
625	24	சருக்கம்	சுருக்கம்
628	5	காண்கிறும்	காண்கிறேம்
644	32	முளிமுளிக்க	விழிவிழிக்க
703	20	கிறுத்	கிறுத்த
763	26	இன்னதென்ரு	இன்னவென்று
764	8	தாகவும் காணப்படுகிறது ...	னவாகவும் காணப்படுகின்றன
765	12	தங்கிற்றென்றும்	தங்கினவென்றும்
765	21	மாற்றப்பட்டு	மாறுட்டத்துடன்
767	6	மேட்டுமை	மேட்டிமை
775	7	விறவாக	விறகாக
776	25	அது	அவை
776	26	வருகிறதென்று	வருகின்றனவென்று
776	36	ஒடுகிறதென்று	ஒடுகின்றனவென்று
778	24	அவிவிவேக	அவிவேக
779	1	தம்	தன்
781	14	அம்சங்களும்	அம்சங்களே
782	18	கூடியதாயிருந்ததென்று ...	கூடியவைகளாயிருந்தனவெ
782	35	ஒத்திருக்கிறதென்	ஒத்திருக்கின்றனவென்
783	1	வருகிறதென்	வருகின்றனவென். மற்றைய இடங்களிலும் வரும் ஒருமை வினையைப் பன்மையாகத் திருத்துக.
843	19	5.776764	.5776764
849	24	ஆச்சரியமும்	ஆச்சரியப்
850	10	வேண்டியது	வேண்டிய
853	22	$\frac{6}{9}$	$\frac{1}{96}$
855	25	29.715104	26.715104
855	36	400.5	450
856	50	3.696969	0.696969
857	93	19.350452	16.350352
907	33	யிக்கு	யிருக்கு
912	19	... ...	வந்
931	33	then	them

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
956	3	பொருக்கும்	பொறுக்கும்
962	[illegible]	வர்களாய்	வர்களாகவும்
968	13	ஆண்டர்வர்	ஆண்டவர்
968	20	இடமெடு	இடிமேடு
975	15	பாை)ஷ	பாஷை)
983	26	நாள்	நாட்கள்
1067	13	ம்ச	சம்
1077	26	எழுவதியும்	எழுதியும்
1089	20	யிருக்கிறது	யிருக்கின்றன
1102	14	கரங்களே	சரங்களே
1134	13	சட்மத்தின்	சட்சமத்தின்

MAHARANI'S
COLLEGE FOR WOMEN
BANGALORE
LIBRARY
No. 346

MAHARANI'S
COLLEGE FOR WOMEN
BANGALORE
LIBRARY
No. 316

MAHARANI'S
COLLEGE FOR WOMEN
BANGALORE
LIBRARY
No. 316